
# இந்தியப் பொருளியல்

## மேல் நிலை முதலாம் ஆண்டு



தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

# இந்தியப் பொருளியல்

மேல் நிலை - முதலாம் ஆண்டு

தமிழ்நாட்டுப்
பாடநூல் நிறுவனம்
சென்னை

© தமிழ்நாட்டு அரசு

முதல் பதிப்பு—1981
மறு பதிப்பு — 1982

பதிப்பாசிரியர் குழுத் தலைவர் :
டாக்டர் டி. சி. மோகன்,
பேராசிரியர் & பொருளியல் துறைத் தலைவர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணாமலைநகர்.

ஆசிரியர் :
பேரா. ஜி. சிதம்பரம்,
இயக்குநர்,
மதிப்பீடு & செயல்முறை ஆராய்ச்சி இயக்ககம்,
சென்னை.

மேலாய்வாளர் :
பேரா. டி. சபாபதி,
முதல்வர்,
கந்தசாமி நாயுடு கல்லூரி,
சென்னை.

விலை : ரூ. 3-50

இந்திய அரசு சலுகை விலையில் வழங்கிய 60 ஜி. எஸ். எம். தாளில் இந்நூல் அச்சிடப்பட்டுள்ளது.

அச்சிட்டோர் :
மணி பிரிண்டர்ஸ், சென்னை-600 010

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பொருளாதார வளர்ச்சி | ... | 1 |
| 2. | விடுதலை அடைந்தபோது இந்தியாவின் பொருளாதார நிலை | ... | 21 |
| 3. | இந்தியாவில் திட்டமிடுதல் | ... | 33 |
| 4. | நாட்டு வருமானம் | ... | 60 |
| 5. | மக்கள்தொகை | ... | 91 |
| 6. | வேளாண்மை | ... | 113 |
| 7. | தொழில் வளர்ச்சி | ... | 166 |
| 8. | அயல் நாட்டு வாணிபம் | ... | 193 |
| 9. | வேலை வாய்ப்பு நிலை | ... | 225 |
| 10. | பணவியல் முறையும் வங்கிகள் அமைப்பும் | ... | 248 |
| 11. | விலை நிலவரம் | ... | 270 |
| 12. | அரசின் வரவு செலவு | ... | 283 |
| 13. | அரசுத் துறை நிறுவனங்கள் | ... | 305 |

# 1. பொருளாதார வளர்ச்சி

## பொருளாதார வளர்ச்சியின் விளக்கம்

பொருளாதார வளர்ச்சி என்றால் என்ன? எந்த அடிப்படையில் சில நாடுகளை வளர்ச்சியடைந்த நாடுகள் (developed countries) என்றும் வேறு சில நாடுகளை வளர்ந்து வரும் நாடுகள் (developing countries) என்றும் இருவகைகளாகப் பாகுபடுத்துகிறோம்? இத்தகைய அடிப்படை வினாக்களுக்கு விடை காண்பதற்கு முன் ஐக்கிய அமெரிக்கா, இந்தியா இவ்விரு நாடுகளையும் ஒப்பிட்டுப் பார்ப்போம். இந்தியாவை விட அமெரிக்கா கோதுமை, பார்லி, பால், முட்டை, இறைச்சி, ஊர்ந்து வண்டிகள், கப்பல்கள், ஆகாய விமானங்கள், போர்த்தளவாடங்கள் போன்ற பண்டங்களை அதிக அளவில் உற்பத்தி செய்கிறது. இதே போன்று அமெரிக்கா இந்தியாவை விட அதிக அளவில் சேமிக்கிறது, முதலீடும் செய்கிறது. ஒரு சராசரி அமெரிக்கருக்குக் கிடைக்கக்கூடிய வருமானம் ஒரு சராசரி இந்தியருக்குக் கிடைப்பதைவிட பன்மடங்கு உயர்ந்திருக்கிறது. எனவே, அவரால் பல பண்டங்களையும் வாங்கி நுகர முடிகிறது. இந்த அளவிற்கு ஒரு சராசரி இந்தியருக்கு வாங்கும் சக்தி இல்லை. அமெரிக்காவில் ஓர் இளைஞர் தனக்கு வேலை தேடிக்கொள்வதை ஒரு பெரும் பிரச்சினையாகக் கருத வேண்டியதில்லை. ஆனால், இந்தியாவிலோ அத்தகைய இளைஞர் பெருந்திண்டாட்டத்திற்கு உள்ளாக வேண்டும். சுருங்கக் கூறினால், பண்டங்களின் உற்பத்தி அளவு, நுகர்வின் அளவு, சேமிக்கும் தொகையின் அளவு, முதலீட்டின் அளவு இவை அனைத்தும் இந்தியாவைவிட அமெரிக்காவில் அதிக அளவில் இருக்கின்றன. மக்கள் வறுமையின் அடிமட்டத்தில் அல்லலுறும் நிலையும், வேலையில்லாமல் திண்டாடும் நிலையும் இந்தியாவில் உள்ளதைப்போன்று அமெரிக்காவில் அவ்வளவு கொடுமை விளைவிப்பனவாக இல்லை. ஆகவே, எந்த ஒரு நாட்டில் மொத்த உற்பத்தியும், தலைநபருக்கான உற்பத்தியும் அதிக அளவில் இருக்கின்றனவோ அந்த நாட்டினைப் பொருளாதாரத் துறையில் வளர்ச்சியடைந்த நாடு என்றும் (developed countries), எந்த ஒரு நாட்டில் இவ்விரண்டும் குறைந்த அளவில் உள்ளனவோ அந்நாட்டினைப் பொருளாதாரத்

துறையில் வளர்ந்து வரும் நாடென்றும் (developing countries) பொதுப்படையாக அழைக்கலாம்.

இப்பொழுது பொருளாதார வளர்ச்சி என்னும் சொற்றொடருக்கு விளக்கங் காண முயல்வோம். பொதுப்படையாக எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அமைந்த ஒரு விளக்கம் பின் வருமாறு : 'நீண்ட கால அளவில் (long period of time) ஒரு நாட்டின மெய் வருமானத்தில் (real national income) நல்ல ஏற்றத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு செயல் நிகழ்ச்சியே (process) பொருளாதார வளர்ச்சி என்பதாகும்.' இவ்விளக்கத்தில் கோடிட்டுக் காட்டப்பெற்றுள்ள சொற்களை மேலும் விளக்கிக் கூற வேண்டியது அவசியமாகிறது. பொருளாதார வளர்ச்சி என்னும் செயல் நிகழ்ச்சி ஒரு நாட்டில் தொடர்ச்சியாக பல மாற்றங்களை ஏற்படுத்துகிறது. இம்மாற்றங்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருக்கின்றன. ஆயினும், இத்தகைய மாற்றங்கள் பொதுவாக ஒரு நாட்டின் உற்பத்தி, நுகர்வு, பகிர்வு, சேமிப்பு, முதலீடு, வேலை வாய்ப்பு, வணிகம், மக்கள் தொகை போன்ற துறைகளில் நிகழ்வதைக் காணலாம். மாற்றத்தை ஏற்படுத்தும் நிகழ்ச்சி மேற்குறிப்பிட்ட எந்த ஒரு துறையில் மட்டுமே நிகழ்வதில்லை. ஒரு துறையில் நிகழும் மாற்றம் அத்துறையோடு நின்றுவிடாமல் பிற துறைகளுக்கும் பரவுகின்றது. எடுத்துக்காட்டாக, உற்பத்தித் துறையில் ஏற்படும் ஒரு மாற்றம் நுகர்வு, சேமிப்பு, முதலீடு, வேலை வாய்ப்பு போன்ற பிற பிரிவுகளிலும் மாற்றங்களை ஏற்படுத்தும். இப்பிரிவுகளில் ஏற்படும் மாற்றங்கள் மேலும் பல மாற்றங்கள் எழுவதற்குக் காரணமாக அமைகின்றன. ஏதேனும் ஒரு மூலக்காரணம் நாட்டின் பொருளாதார அமைப்பினுடைய முக்கிய ஒரு பிரிவில் மாற்றம் ஏற்படுத்துவதற்கு அடிப்படைக் காரணமாக அமைகிறது. இந்த அடிப்படை மாற்றம் மற்ற பிரிவுகளிலும் மாற்றங்களை எழச்செய்கிறது. இவ்வாறு பல பிரிவுகளிலும் ஏற்படும் மாற்றங்கள், படிப்படியாக தொடர்ந்து மேலும் பல மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. இத்தகைய மாற்றங்கள் தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கின்றன.

இவ்வாறு தொடர்ச்சியாக எழும் மாற்றங்கள் காரணமாக நாட்டின் மெய் வருமானம் (real national income) பெருக்கமடைந்தால், அந்நாட்டில் பொருளாதார வளர்ச்சி நடைபெற்று வருகிறது என்று நாம் குறிப்பிடலாம். பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டால், நாட்டின் மெய் வருமானம் உயர வேண்டும் என்று அறிகிறோம். ஆனால் நாட்டின் மெய் வருமானம் என்றால் என்ன? நாட்டு வருமானம் எதைக் குறிக்கிறது? அதனை எவ்வாறு கணக்கிடுவது? என்பவைபற்றி அத்தியாயம் 4-ல் சற்று

விரிவாகப் பயில இருக்கிறோம். இங்கு நாட்டு வருமானத்தின் உட்பொருளைச் சுருக்கமாகக் கண்டறியலாம். நாட்டில் பல பண்டங்கள் உற்பத்தியாகின்றன. அதேபோன்று பணிகளும் உற்பத்தியாகின்றன. ஒரு நாட்டில் ஓராண்டு காலத்தில் உற்பத்தியாகும் மொத்தப் பண்டங்கள், பணிகள் இவற்றின் பண மதிப்பே நாட்டு வருமானம் எனப்படுவதாகும். நாட்டு வருமானத்தை இரு வகைகளாகக் குறிப்பிடலாம். ஒன்று அன்றாட விலையின் அடிப்படையில் கணிக்கப்பெறும் நாட்டு வருமானம்; பிரிதொன்று நிலையான விலையின் அடிப்படையில் கணிக்கப்பெறும் நாட்டு வருமானம். பண்டங்கள், பணிகள் இவற்றிற்கு அப்பொழுது நிலவும் விலையின் அடிப்படையில் நாட்டின் மொத்த உற்பத்தியைக் கணக்கிட்டால் அத்தொகையை அன்றாட விலையில் கணக்கிடப் பெற்ற நாட்டு வருமானம் என்ற பெயரில் அழைக்கிறோம். ஆனால், விலைவாசி அவ்வப்போது மாறுதல் அடைகிறது என்பது யாவரும் அறிந்த ஒன்று. எனவே, நாட்டு வருமானத்தில் உண்மையான வளர்ச்சி இருக்கிறதா என்பதைக் கண்டறிய மாறி மாறி நிலவும் விலை விவரப்படி கணிப்பது பொருத்தமாக இருக்காது. நிலையான விலைகளின் அடிப்படையில் கணித்தால் தான் நாட்டு வருமானத்தை ஓராண்டுக்கும் பிரிதோர் ஆண்டுக்கும் ஒப்பிட்டுப் பார்த்து நாட்டு வருமானத்தில் இருக்கும் வளர்ச்சியைக் கண்டறிய முடியும். இவ்வாறு ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியைப்பற்றிப் பயிலும்பொழுது, மெய் நாட்டு வருமானத்தின் வளர்ச்சி முக்கிய அங்கம் வகிக்கிறது.

மூன்றாவதாக, பொருளாதார வளர்ச்சிக்கான விளக்கம் மெய் நாட்டு வருமானத்தில் ஏற்படும் உயர்வு நீண்ட கால அளவில் நிலைத்து ஏற்பட வேண்டும் என்பதனை வலியுறுத்திக் கூறுகிறது. அதாவது, நாட்டு வருமானத்தில் ஏற்படும் ஏற்றம் தொடர்ந்தும் நிலையாகவும் இருக்கவேண்டும். குறுகிய கால அளவில் ஏற்படும் மாற்றங்களைப் பொருளாதார வளர்ச்சியின் அறிகுறிகளாக எடுத்துக் கொள்ள இயலாது. குறைந்தகால அளவில் நாட்டு வருமானத்தில் ஏற்றம் இருக்கலாம்; இல்லாமலும் இருக்கலாம். ஓரளவுக்கு இறக்கம் ஏற்படக்கூட ஏது உண்டு. ஆனால், ஒரு நாட்டில் பொருளாதார வளர்ச்சி இருக்கிறது என்றால், அதன் உட்கருத்து அந்நாட்டின் மெய் வருமானத்தில் நீண்டகால அளவில் நன்றாகப் புலனாகும் வகையில் ஏற்றம் இருக்க வேண்டும் என்பதாகும். நீண்டகால அளவின் வரம்பு என்ன? ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகால அளவை நீண்ட கால அளவாகக் கொள்ளலாம் என்று பொருளியல் வல்லுநர்கள் கருதுகிறார்கள்.

நாட்டு வருமானம் உயர்ந்தால் தலா வருமானமும் (percapita income) உயருமா? உறுதியாகச் சொல்ல முடியாது. உயருமா உயராதா என்பது மக்கள் தொகைப் பெருக்கத்தைப் பொறுத்திருக்கிறது. மக்கள் தொகையில் இருக்கும் பெருக்கத்தை விட நாட்டு வருமானத்தில் இருக்கும் ஏற்றம் அதிகமாக இருந்தால் அந்நாட்டில் தலா வருமானம் உயரும். மாறாக, மக்கள் தொகை மிக உயர்ந்த விகிதத்தில் இந்தியாவில் இருப்பதைப்போலப் பெருகினால் தலா வருமானத்தில் நல்ல வளர்ச்சி இருக்காது. எனவே, ஒரு நாட்டில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட வேண்டு மென்றால், மக்கள் தொகைப் பெருக்கத்திற்கு ஈடு செய்யும் வகையில் அந்நாட்டின் வருமானம் உயர்ந்த விகிதத்தில் பெருக்கமடைய வேண்டும்.

## வளர்ந்து வரும் நாடுகளில் காணப்பெறும் இயல்புகள்

ஒரு நாட்டைப் பிறிதொரு நாட்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் கண்ணோட்டத்தில்தான் ஒரு நாடு வளர்ந்து வரும் நிலையில் இருக்கிறது என்று கூறுகிறோம். பொருளாதாரத் துறையில் வளர்ந்து வரும் நாடுகள்பற்றி ஆய்வு செய்யும் நோக்கத்துடன் ஐக்கிய நாடுகள் நிறுவனம் (U.N.O.) ஒரு வல்லுநர் குழுவை அமைத்தது. வளர்ந்து வரும் நாடுகள் என்பதற்கான துல்லியமான விளக்கத்தைக் காண்பது மிகக் கடினமான செயல் என்று அக்குழு கருதியது. ஆனால் நடைமுறைக்காக ஒரு விளக்கத்தைத் தந்தது. ஐக்கிய அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, மேற்கு ஐரோப்பிய நாடுகள் இவற்றில் நிலவும் தலா வருமானங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது எந்த நாடுகளுடைய தலா வருமானங்கள் மிகக் குறைவாக இருக்கின்றனவோ அந்நாடுகள் அனைத்தையும் பொருளாதாரத் துறையில் வளர்ந்து வரும் நாடுகள் என்று வகைப்படுத்தலாம் என்பதே அவ்விளக்கம். அமெரிக்காவில் நிலவும் தலா வருமானத்தில் இருபத்தைந்து சதவீதத்திற்கும் குறைவாகத் தலா வருமானம் உள்ள ஒருநாட்டினை வளர்ந்துவரும் நாடு என்று பொதுவாகக் கருதலாம். இங்கு மற்றொரு குறிப்பினை யும் வலியுறுத்திக் கூறவேண்டும். ஒரு நாட்டினைப் பின்தங்கிய நாடு அல்லது வளர்ந்து வரும் நாடு என்று வகைப்படுத்திக் கூறுவதால் அந்நாடு எல்லாத் துறைகளிலும் பின் தங்கிய நிலையில் இருக்கிறது என்று பொருள்கொள்ளக் கூடாது. பின் தங்கிய நிலை, பின் தங்கிய நாடு என்று அழைக்கும்போது அதனை ஒரு குறிப்பிட்ட பொருளில்தான் கூறுகிறோம். அதாவது செல்வ நிலையைமட்டுமே மனத்தில் வைத்து அவ்வாறு அழைக்கிறோம். உண்மையில், பல நாடுகள் பொருளாதார

நிலையில் பின்தங்கிய நிலையில் இருந்தாலும் நாகரிக வளர்ச்சி, கலாச்சாரம், ஆன்மீகம், மொழி, இலக்கியம் போன்ற துறைகளில் அவை முன்னேற்ற நிலையில் உள்ளன. பொருளாதாரத் துறையில் மிகவும் செழித்துள்ள மேற்கத்திய நாடுகள் பல கலாச்சாரம், ஆன்மீகம் போன்ற விஷயங்களில் கிழக்கத்திய நாடுகளை முன் மாதிரியாகக் கருதுகின்றன. இதற்கு இந்தியா ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

வளர்ந்து வரும் நாடுகளில் பல இயல்புகள் பொதுப்படையாகக் காணப்படுகின்றன. இவ்வியல்புகளில் முக்கியமானவற்றைக் கீழே விளக்கிக் கூற இருக்கிறோம். ஆனால், இவ்வியல்புகள் அனைத்தும் வளர்ந்து வரும் எல்லா நாடுகளிலும் ஒரே அளவில் நிலவும் என்று கருத முடியாது.

## குறைந்த தலா வருமானம்

வளர்ந்து வரும் நாட்டில் சாதாரணமாகக் காணப்பெறும் ஓர் அடிப்படை இயல்பு குறைந்த தலா வருமானமாகும். கீழே கொடுக்கப்பட்டுள்ள பட்டியல் 1—1-ல் வெவ்வேறு நாடுகளில் 1973ஆம் ஆண்டில் நிலவிய தலா வருமானத்தின் அளவுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

### பட்டியல் 1—1

நாடுகளில் 1973ஆம் ஆண்டின் தலா வருமானம்
(ஐக்கிய அமெரிக்க டாலரில்)

| | | |
|---|---|---|
| (அ) செழிப்பு நாடுகள் — ஆண்டு தலா வருமானம் 1000 டாலருக்கு மேல் : | | |
| ஐக்கிய அமெரிக்கா | ... | 6167 |
| மேற்கு ஜெர்மனி | ... | 5532 |
| கானடா | ... | 5409 |
| பிரான்சு | ... | 3990 |
| ஜப்பான் | ... | 3722 |
| இங்கிலாந்து | ... | 2964 |
| ருஷ்யா | ... | 2512 |
| இத்தாலி | ... | 2418 |
| போலந்து | ... | 1727 |

(ஆ) மத்திய நிலையில் உள்ள நாடுகள் — 250 டாலருக்கு மேலும் 999 டாலருக்குக் கீழும் :

| | | |
|---|---|---|
| மெக்சிகோ | ... | 759 |
| துருக்கி | ... | 553 |
| பிரேசில் | ... | 520 |
| இரான் | ... | 400 |
| தென் கொரியா | ... | 375 |

(இ) ஏழ்மை நாடுகள் — 249 டாலர் வரை :

| | | |
|---|---|---|
| பிலிப்பைன்ஸ் | ... | 233 |
| தாய்லாந்து | ... | 211 |
| எகிப்து | ... | 210 |
| சீனா | ... | 167 |
| நைஜீரியா | ... | 131 |
| இந்தியா | ... | 122 |
| பாகிஸ்தான் | ... | 94 |
| இந்தோனேசியா | ... | 87 |
| எத்தியோப்பியா | ... | 80 |
| பங்களாதேஷ் | ... | 46 |

ஆதாரம் : பன்னாட்டு நாணய நிறுவனம் (I.M.F.) வெளியிடும் 'பன்னாட்டு நிதி புள்ளி விவரங்கள்' 1974.

அமெரிக்கா, கானடா போன்ற நாடுகளில் தலா வருமானம் மிக அதிக அளவில் இருப்பதைப் பட்டியலிலிருந்து அறியலாம். இவ்விரு நாடுகளும் செல்வம் செழிக்கும் நாடுகளுள் மிகவும் செழித்த நாடுகளாகும். இடைநிலையில், மத்திய வகுப்பைச் சேர்ந்த நாடுகள் பல உள்ளன. 'அ' பிரிவைச் சேர்ந்த நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இவை பின் தங்கிய நிலையில் உள்ளன. ஆனால் 'இ' பிரிவு நாடுகளுடன் ஒப்பிட்டால் இவை வளர்ச்சியடைந்த நாடுகளாக உள்ளன. ஆண்டொன்றுக்கு 250 டாலருக்கும் கீழாக தலா வருமானத்தைக் கொண்ட நாடுகள் பொதுவாக வளர்ந்து வரும் நாடுகள் என்று அழைக்கப்படுகின்றன. ஆசியாக் கண்டம், ஆப்ரிக்காக் கண்டம், தென் அமெரிக்கா இவற்றில் உள்ள பெரும்பான்மை நாடுகளும் ஐரோப்பாவில் உள்ள சில நாடுகளும் பொருளாதாரத் துறையில் வளர்ந்து வரும் நாடுகள் வகையைச் சேர்ந்தவை. உலக மொத்த மக்கள் தொகையில் ஏறக்குறைய 60 சதவீத மக்கள் இத்தகைய வளர்ந்து வரும் நாடுகளில் வாழ்கின்றனர்.

## தலா வருமானத்தில் மிகவும் குறைந்த வளர்ச்சி

வளர்ந்து வரும் நாடுகளில் தலா வருமானங்கள் மிகவும் குறை வாக உள்ளன என்பதோடல்லாமல் இந்நாடுகளின் தலா வருமான வளர்ச்சியை வளர்ச்சியடைந்த நாடுகளின் வளர்ச்சி யுடன் ஒப்பு நோக்கும்போது மிகவும் குறைவாகவே உள்ளது. 1964ஆம் ஆண்டில் அமெரிக்காவின் தலா வருமான அளவு இந்தியாவின் தலா வருமானத்தைப்போன்று 31 மடங்கு உயர்வாக இருந்தது. கானடாவின் தலா வருமானம் இந்திய தலா வருமானத் திலும் 22 மடங்கு உயர்ந்திருந்தது. ஆனால், 1973ஆம் ஆண்டில் இந்திய தலா வருமானத்தைப் போன்று அமெரிக்க தலா வருமானம் 60 மடங்காகவும் கானடா தலா வருமானம் 44 மடங்காகவும் உயர்ந் திருந்தன. சுருங்கக் கூறினால், வளர்ச்சியடைந்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சி வேகம் வளர்ந்து வரும் நாடுகளில் இருப்பதை விட அதிகமாக இருக்கிறது. வளர்ந்து வரும் நாடு களின் தலா வருமானம் மிகக் குறைந்த அளவிலேயே வளர்ந்து வருகிறது.

## வளர்ந்து வரும் நாடுகள் கச்சாப் பொருள்களை உற்பத்தி செய்யும் நாடுகளாக உள்ளன

வளர்ந்து வரும் நாடுகளின் பொருளாதார அமைப்பு பெரும் பாலும் கச்சாப்பொருள்களையும் உணவுப் பண்டங்களையும் உற்பத்தி செய்வதாகவே இருக்கிறது. வளர்ந்து வரும் நாடுகளின் மொத்தத் தொழிலாளர்களில் பெரும்பான்மையோர் வேளாண்மை யில் ஈடுபட்டிருக்கின்றனர். இந்நாடுகளின் தேசிய வருமானத்தைப் பல கூறுகளாக்கிப் பார்த்தால் பெரும் பகுதி வேளாண்மை உற்பத்தி வழியாக வருவதைக் காணலாம். இவற்றிலிருந்து நாம் அறிவது என்னவென்றால் வளர்ந்துவரும் நாடுகளில் வேளாண்மை யும் வேளாண்மையைச் சார்ந்த பொருளாதார நடவடிக்கைகளுமே முக்கியம் வாய்ந்தவையாக இருக்கின்றன என்பதாகும். இந்நாடு களில் ஆலைத்தொழில்கள் நல்ல வளர்ச்சியுறாமல் இருக்கின்றன. இருக்கும் தொழில்களும் விவசாயப்பண்டங்களைப் பதனப்படுத்தும் தொழில்கள், விவசாயக் கருவிகளை உற்பத்தி செய்யும் தொழில் கள், துணி உற்பத்தி, சிறு தொழில்கள் இவ்வகையைச் சார்ந்தவை களாக உள்ளன. இவ்விதிக்கு விலக்காக இந்தியா போன்ற நாட்டைக் குறிப்பிடலாம். இந்தியாவில் தொழில் துறை பொது வாகவும், கனரகத் தொழில்கள், இயந்திரத் தளவாடங்களை உற்பத்தி செய்யும் தொழில்கள் குறிப்பாகவும் நல்ல நிலையில் வளர்ந்திருக்கின்றன. ஆனால், விதிவிலக்காக உள்ள இந்தியா போன்ற நாடுகளில்கூட மொத்தத் தொழிலாளர்களில் ஒரு சிறு

பான்மை. சதவீதத்தினரே ஆலைத் தொழில்களில் ஈடுபட்டிருக் கின்றனர். கடந்த 25 ஆண்டுகாலத்தில் இந்தியாவில் நல்ல தொழில் முன்னேற்றம் இருந்திருக்கிறது. இம்முன்னேற்றத்தின் வாயிலாக எதிர்கால வளர்ச்சிக்குத் தேவையான நல்ல வலுவுள்ள அடித்தளமும் அமைக்கப்பெற்றிருக்கிறது. இருப்பினும், நாட்டின் பொருளாதார நிலைமையில் விவசாயம்தான் இன்றும்கூட முக்கியப் பங்கு ஏற்று வருகிறது. வேலை வாய்ப்புக் கண்ணோட்டத்தில் பார்த்தாலும், வருமான கண்ணோட்டத்தில் அணுகினாலும் விவசாயம்தான் முக்கியத் துறையாக இருந்து வருகிறது. பட்டியல் 1 - 2 இதனை விளக்கிக் காட்டுகிறது.

## பட்டியல் 1—2

தேர்ந்தெடுத்த நாடுகளில் வேளாண்மையில் ஈடுபட்டிருக்கும் மக்கள்தொகையின் சதவீதமும், நாட்டு வருமானத்தின் மூலமும் (ஆண்டு 1970)

| நாடுகள் | விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் மக்கள் தொகை யின் சதவீதம் | நாட்டு வருமானத்தின் மூலம் | | |
|---|---|---|---|---|
| | | விவசாயம் | தொழில் | பணிகள் |
| இந்தியா | 68 | 45 | 19 | 28 |
| இங்கிலாந்து | 3 | 3 | 40 | 44 |
| ஐக்கிய அமெரிக்கா | 4 | 3 | 35 | 61 |
| ஆஸ்திரேலியா | 8 | 9 | 38 | 43 |
| கானடா | 8 | 5 | 32 | 51 |
| பிரான்சு | 14 | 6 | 48 | 43 |
| ஜப்பான் | 21 | 9 | 43 | 48 |

ஆதாரம் : 'இந்தியா பற்றிய பொருளாதாரத் தகவல்கள் அடங்கிய கைநூல் 1972.'

### குறைந்த விவசாய உற்பத்தி

வளர்ச்சியடைந்த நாடுகளையும் வளர்ந்து வரும் நாடுகளை யும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது பின்வகை நாடுகளில் சராசரியாக ஒரு ஹெக்டேர் நிலத்தின் மூலம் கிடைக்கக்கூடிய உற்பத்தி குறைவாகவே இருக்கிறது. இத்தகைய குறைந்த உற்பத்திக்குப் பல காரணங்கள் இருக்கின்றன. முதலாவதாக, சாகுபடியின் கீழ் இருக்கும் நிலம், அதனைப் பயிரிடும் பணியாட்கள் இரண்டையும் தொடர்புபடுத்திப் பார்த்தால், கிடைக்கும் வீதம் வளர்ந்துவரும் நாடுகளில் மிகக் குறைவாகவே இருக்கிறது. இந்தியாவில் சராசரி ஒரு சதுர கிலோ மீட்டர் அளவு நிலத்தை 51 நபர்கள் பயிர்

செய்கிறார்கள். ஏறக்குறைய இதே நிலைதான் ஆப்கானிஸ்தான், இலங்கை, எகிப்து, இந்தோனேசியா, பாகிஸ்தான் போன்ற பிற வளர்ந்து வரும் நாடுகளிலும் நிலவுகிறது. சராசரியில் ஒரு பணியாள் வேலை செய்யும் நிலத்தின் அளவு கானடா, ஆஸ்திரேலியா, ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளில் மிக அதிகமாக இருக்கிறது. பொதுவாக, நிலத்தின் அளவுக்கும் பணியாள் எண்ணிக்கைக்கும் உள்ள சராசரி விகிதம் அதிகமாக இருந்தால் நிலத்தின் சராசரி உற்பத்தியும் உயர்வாக இருக்கிறது என்று கருதப்படுகிறது. நிலத்தின் சராசரி உற்பத்தி வளர்ந்து வரும் நாடுகளில் குறைவாக இருப்பதற்குப் பிரிதொரு முக்கியக் காரணம், இந்நாடுகளில் நடைமுறையில் கையாளப் பெறும் விவசாய உற்பத்தி முறை திறனில்லாததாகவும் பழமையானதாக வும் இருப்பதே. பிற காரணங்கள் பின் வருமாறு: போதிய அளவு உரம் இடாமை, விஞ்ஞான முறையில் பூச்சி தடுப்பு முறையைக் கையாளாமை, உடல் உழைப்பையும், கால் நடை உழைப்பையுமே பெரும்பாலும் சார்ந்திருத்தல், மற்றும் விவசாயத் தில் மிகக் குறைந்த அளவுக்கே இயந்திரங்களைப் பயன் படுத்துதல்.

### மக்கள் தொகையின் அழுத்தம்

பொதுவாக வளர்ந்து வரும் நாடுகளில் காணப்பெறும் மற்றோர் இயல்பு மக்கள் தொகை விரைவாக வளர்வதாகும். பிறப்பு விகிதம் அதிகமாக இருப்பதும் இறப்பு விகிதம் குறைந்து வருவதுமே மக்கள் தொகை பெருக்கமடையக் காரணமாக அமைகின்றது. இந்நாடுகளில் மனித உழைப்பின் அளிப்பு (labour supply) தேவைக்கும் அதிகமாக இருக்கிறது. பெரும்பான்மையான மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கின்றனர். அதாவது, விவசாயத்தில் முறையாகத் தேவையான அளவுக்கு மேல் மக்கள் அதில் ஈடுபடு கின்றனர். சுருங்கக் கூறின் ஓர் ஆள் செய்யும் வேலையை இரண்டு ஆட்கள் செய்யும் நிலை ஏற்படுகிறது. இவ்வாறு தேவைக்கு மிகுந்த ஆட்கள் ஒரு பணியில் ஈடுபடும் நிலையை ‘மறைமுக வேலையின்மை’ (disguised unemployment) என்று பொருளியலில் குறிப்பிடுகிறார்கள். மறைமுக வேலையின்மை, வளர்ந்து வரும் நாடுகளில் காணப்படும் ஒரு சாதாரண இயல்பாகும். மக்கள் தொகையை வயதுக்கு ஏற்றாற்போல பல பிரிவுகளாகப் பாகுபாடு செய்து பார்த்தால், வளர்ந்து வரும் நாடுகளில் பெரும் சதவீதத்தினர் சிறு வயதுப் பிரிவுகளிலேயே இருக்கின்றனர். ஆசியா, ஆப்பிரிக்கா, தென் அமெரிக்க நாடுகளில் மொத்த மக்கள் தொகையில் ஏறக்குறைய 40 சதவீதத்தினர் 15 வயதுக்கும் கீழ்ப்பட்டவர்களாகவே இருக்கின் றனர். இவ்வயதினர் ஐக்கிய அமெரிக்காவில் 25 சதவீத அளவி

லும், இங்கிலாந்தில் 23 சதவீத அளவிலும்தான் இருக்கின்றனர். ஒரு சராசரி மனிதனின் ஆயுட் காலம் வளர்ந்து வரும் நாடுகளில் மிகக் குறைவாக இருக்கிறது. புதிதாகப் பிறந்த ஓர் ஆண் குழந்தை ஐக்கிய அமெரிக்காவிலும், கானடாவிலும் சராசரி 66 ஆண்டுக் காலமும், நார்வே நாட்டில் 69 ஆண்டுக் காலமும், இங்கிலாந்தில் 67 ஆண்டுகளும் வாழக்கூடும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். ஆனால், அதன் சராசரி ஆயுட்காலம் ஆசிய நாடுகள் சிலவற்றுள் 40 ஆண்டுகள், எகிப்தில் 35 ஆண்டுகள், இந்தியாவில் 48 ஆண்டுகள்தாம் என்று அறிகிறோம்.

## வளத்தையும் சாதனங்களையும் முழுமையாகப் பயன் படுத்தாத நிலை

வளர்ந்து வரும் நாடுகளில் வளமும் சாதனங்களும் தேவையான அளவுக்கு இல்லை என்று கூற முடியாது. பார்க்கப்போனால் இந்நாடுகள் பரந்த நிலங்களையும், நீர் வளத்தையும், காடுகளையும்,செம்பு, பாக்ஸைட்டு, எரி எண்ணை, இரும்பு, வெள்ளீயம், துத்தநாகம், நிலக்கரி போன்ற தாதுப் பொருள்களையும் மிகுந்த அளவில் கொண்டவையாக இருக்கின்றன. சில நாடுகளில் சாகுபடிக்கு உள்ளாக்கக் கூடிய செழுமையான நிலங்களும் இருக்கின்றன. இச்சாதனங்களில் பல பயன்படுத்தப்பெறாமலேயே இருக்கின்றன. பயன்படுத்தப் பெற்றாலும் முழுமையாகப் பயன் படுத்தப் பெறுவதில்லை. எடுத்துக்காட்டாகக் கூறவேண்டுமானால் ஐரோப்பாவில் கிடைக்கக்கூடிய நீர்ச்சக்தியில் 60 சதவீதத்திற்கும் மேல் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் தென் அமெரிக்க நாடுகளில் 3 சதவீதத்தைத்தான் பயன்படுத்துகிறார்கள். ஆசிய நாடுகளில் 13 சதவீதத்தைத்தான் பயன்படுத்துகின்றனர். உலகம் முழுவதிலும் கிடைக்கக்கூடிய நீர்மின் சக்தியில் 44 சதவீதம் ஆப்ரிக்கக் கண்டத்தில் இருப்பதாகக் கணக்கிட்டிருக்கின்றனர். ஆனால், அக்கண்டத்தில் கிடைக்கக்கூடிய மொத்த மின் சக்தியில் 1 சதவீதத்தைத்தான் உபயோகத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றனர்.

## மக்களின் தாழ்ந்த வாழ்க்கை நிலை

வளர்ந்து வரும் நாடுகளில் மக்களின் வாழ்க்கை நிலை மிகவும் தாழ்ந்து காணப்படுகிறது. இதன் காரணமாக, அம் மக்களுடைய உற்பத்தித் திறனும் மிகவும் குறைவாக இருக்கிறது. மனிதனுடைய உற்பத்தித்திறன் குறைவாக இருப்பதற்கு அவனுடைய தாழ்ந்த வாழ்க்கை நிலை ஓர் அடிப்படைக் காரணமாகும். ஐக்கிய அமெரிக்காவில் நிலவும் அளவுடன் ஒப்பிட்டால் வளர்ந்து வரும் நாடுகளில் மனித உழைப்பின்

உற்பத்தித் திறன் 20 சதவீதம்தான் இருக்கிறது என்று கணக்கிட்டிருக்கிறார்கள். சத்துணவு உண்ணாமை, உடல் நலமின்மை, எழுத்தறிவின்மை, போதிய பயிற்சியின்மை இவையே உழைப்புத்திறன் குன்றியிருப்பதற்குக் காரணமாக அமைகின்றன. வளர்ந்து வரும் நாடுகளில் மக்கள் உண்ணும் உணவுகளை ஆராய்ந்து பார்த்தால் அவற்றில் ஊட்டச் சத்து குறைவாக இருப்பதை அறியலாம். அவர்கள் போதிய அளவுக்கு உணவு உண்ணுவதில்லை என்பதோடு உண்ணும் உணவும் சத்து நிறைந்ததாக இருப்பதில்லை. அவர்களுடைய சராசரி உணவில் போதிய கலோரிகள் இருப்பதில்லை. எல்லாச் சத்துகளையும் அளிக்கக்கூடிய முறையில் சீராக இல்லை. குறிப்பாக, புரதச் சத்து மிகவும் குறைவாக இருக்கிறது. நோய்களும், போதிய அளவுக்கு மருத்துவ வசதியின்மையும் மனிதனின் உழைப்புத் திறனை மிகவும் பாதிக்கின்றன. இவையின்றி, உழைப்புத் திறன் குறைவாக இருப்பதற்குப் பிற காரணங்களும் உள்ளன. வளர்ந்து வரும் நாடுகளில் தொழிலாளர்கள் ஓரிடத்திலிருந்து பிரிதோர் இடத்திற்கு எளிதில் பெயர்ந்து செல்வதில்லை. சாதி, இனம் இவ்வடிப்படையில் சமுதாயக் கூறுகள் நிலவுவதால் பல தீங்குகள் விளைகின்றன. எல்லாப் பிரிவினருக்கும் தகுந்த பயிற்சி பெறும் வாய்ப்பு கிடைப்பதில்லை. மனித ஊக்கத்திற்கு முட்டுக்கட்டையாக சாதி சமயப் பாகுபாடுகள் அமைகின்றன. இவை அனைத்துக் காரணங்களும் உழைப்புத் திறன் வளர்ச்சி அடைவதற்குத் தடையாக இருக்கின்றன.

## பட்டியல் 1—3

**தேர்ந்தெடுத்த நாடுகளில் நிலவும் தலா நுகர்வின் அளவு**
**(ஆண்டு 1970)**

| நாடு | தானியம் | சர்க்கரை | இறைச்சி | பால் | நாளொன்றுக்குக் கலோரி | நாளொன்றுக்குப் புரதம் (கிராம்) |
|---|---|---|---|---|---|---|
| | (நாளொன்றுக்கு கிராம்) | | | | | |
| இந்தியா | 384 | 49 | 4 | 116 | 1990 | 49 |
| ஐக்கிய அமெரிக்கா | 176 | 140 | 310 | 689 | 3300 | 99 |
| இங்கிலாந்து | 200 | 136 | 209 | 592 | 3170 | 87 |
| கானடா | 183 | 138 | 253 | 662 | 3150 | 97 |
| பிரான்சு | 219 | 94 | 256 | 630 | 3270 | 103 |
| மேற்கு ஜெர்மனி | 189 | 95 | 220 | 567 | 3180 | 83 |

ஆதாரம் : 'இந்தியா பற்றிய பொருளாதாரத் தகவல்கள் அடங்கிய கைநூல் 1974.'

### மூலதனப் பற்றாக்குறை

நிலம் (Land), உழைப்பு (Labour), மூலதனம் (Capital), தொழில் முயல்வோன் (Entrepreneur) ஆகிய நான்கு பொருளாதார சாதனங்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டால்தான் எந்த ஒரு பண்டத்தையும் உற்பத்தி செய்ய முடியும். இவற்றுள் மூலதனம் மிகவும் முக்கியமாகக் கருதப்படுகிறது. வளர்ந்து வரும் நாடு களில் தொழிலாளர்கள் தேவைக்கும் அதிகமாகவே உள்ளனர். ஆனால், மூலதனத்தின் அளிப்பு மிகவும் குறைவாகவே இருக்கிறது. மூலதன அளிப்பைப் பெருக்கவேண்டுமென்றால் நாட்டில் சேமிப்பைப் பெருக்கவேண்டும். முதலீட்டையும் பெருக்க வேண்டும். ஆனால் வளர்ந்து வரும் நாடுகளில் வாழும் மக்களுடைய சராசரி வருமானம் மிகக் குறைந்த அளவில்தான் இருக்கிறது. இந்தக் குறைந்த அளவு வருமானத்திலிருந்து அவர்களால் நுகர்வு போக அதிகம் சேமிக்க முடிவதில்லை. குறைந்த அளவில் சேமிக்கப்பெறும் தொகை முழுவதும் முதலீடு செய்யப் பெறுகிறதா என்றால், அதுவும் இல்லை. சேமிப்பை முதலீடு செய்யாமல், ரொக்கமாகவோ, அல்லது நகைகளாகவோ வைத்திருக்கும் பழக்கம் இந்நாட்டு மக்களிடையே பரவலாக இருக்கிறது. இதன் விளைவாக மூலதனப் பெருக்கம் குறை வாகவே உள்ளது. வளர்ச்சியடைந்த நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மூலதான ஆக்கம் இந்தியாவில் குறைவாகவே இருக்கிறது என்பதனைப் பட்டியல் 1—4 லிருந்து அறியலாம்.

**பட்டியல் 1—4**

மொத்த மூலதன ஆக்கம் (ஆண்டு 1975)

| நாடு | நாட்டு வருமானத்தில் மூலதன ஆக்கத்தின் சதவீதம் |
|---|---|
| இந்தியா | 16 |
| ஜப்பான் | 34 |
| ஆஸ்திரேலியா | 24 |
| கானடா | 24 |
| இங்கிலாந்து | 20 |

ஆதாரம் : புள்ளி விவர ஆண்டு நூல் 1976 — ஐக்கிய நாடுகள் நிறுவன வெளியீடு.

### வளர்ச்சிக்குத் திட்டம் ஒரு கருவி

தலையிடாக் கொள்கையைக் கையாளும் பொருளாதார அமைப்பு : வளர்ச்சியடைந்த, வளர்ந்து வரும் நாடுகளுள்

பல், பொருளாதார வளர்ச்சியைப் பெருக்கும் நோக்கில் இன்று பொருளாதாரத் திட்டமிடுதலை ஒரு சிறந்த கருவியாகவும் சாதனமாகவும் கையாண்டு வருகின்றன. திட்டமிடுவது ஒரு நூதன முறையாகும். ஏனெனில் இந்நூற்றாண்டில்தான் இம் முறை வழக்கத்திற்கு வந்திருக்கிறது. பத்தொன்பதாம் நூற் றாண்டில் உலகின் ஏறக்குறைய எல்லா நாடுகளும் ஒரு குறிப்பிட்ட பொருளாதாரக் கொள்கையைக் கடைபிடித்து வந்தன. இக் கொள்கை 'தலையிடாக் கொள்கை' என்ற பெயரில் பரவலாக அழைக்கப்பெற்றது. இக்கொள்கையின் அடிப்படைத் தத்துவம் நாட்டில் நடக்கும் பொருளாதார நடவடிக்கைகளில் அரசு எவ்வளவு குறைவாகத் தலையிட வேண்டுமோ அந்த அளவு தான் தலையிட வேண்டும் என்பதாகும். நாட்டின் பொருளாதார அமைப்பு தடங்கலின்றி இயங்கவும் பொருளாதார நலன் பெருகவும் இத்தகைய தலையிடாக் கொள்கை துணையாகவும் பேருதவியாகவும் இருக்கும் என்கிற நம்பிக்கை அக்காலத்தில் பரவலாக இருந்தது. தலையிடாப் பொருளாதாரக் கொள்கை, தனியாருக்கு மிகுந்த சுதந்திரம் அளிக்க வேண்டும் என்னும் கருத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்ததாகும். நாட்டில் நடக்கும் பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளையும் ஆராய்ந்து பார்த்தால் அவைகளனைத்துக்கும் பின்னணியாகத் தனி நபர்கள் முக்கிய கருவிகளாக இருந்து இயங்கி வருகின்றனர் என்ற உண்மையை அறியலாம். தனி நபர்கள்தாம் பண்டங்களின் உற்பத்தியாளர்களாகவும், விநியோகிப்பாளர்களாகவும், நுகர்வோர் களாவும் இருக்கின்றனர். உற்பத்தியாளர்கள் என்ற முறையில் அவர்களுக்கு எவ்வெப் பண்டங்களை உற்பத்தி செய்ய வேண்டும், ஒவ்வொரு பண்டத்தையும் எந்த அளவுக்கு உற்பத்தி செய்ய வேண்டும், உற்பத்தியான பண்டங்களை எந்த விலையில் விற்க வேண்டும் என்பன போன்ற பிரச்சினைகளில் முடிவெடுக்கச் சுதந்திரம் இருக்கவேண்டும். நுகர்வோர் என்ற முறையில் அவர் களுக்கு, எந்தப் பண்டங்களை வாங்குவது, எந்த அளவுக்கு வாங்குவது, எந்த விலை கொடுத்து வாங்குவது என்பன போன்ற பிரச்சினைகளில் முடிவெடுக்க சுதந்திரம் இருக்க வேண்டும். இதே போன்று, தம்முடைய வருமானத்தில் எந்த அளவை உடனடியாகப் பண்டங்களையும் பணிகளையும் வாங்கி நுகர்வதற்குச் செலவிட வேண்டும், எந்த அளவைச் சேமிப்புக் காக ஒதுக்க வேண்டும் என்று முடிவெடுக்கத் தனி நபர்களுக்கு சுதந்திரம் இருத்தல் வேண்டும்.

எனவே, திட்டமிடும் முறையைக் கையாளாமல் தலையிடாக் கொள்கையைப் பின்பற்றி வரும் ஒரு நாட்டில் உற்பத்தி, பகிர்வு,

நுகர்வு, சேமிப்பு, முதலீடு செய்தல் போன்ற விஷயங்கள் சம்பந்தமான ஏறக்குறைய எல்லா முடிவுகளையும் தனி நபர்களே எடுக்கின்றனர். இப் பிரச்சினைகளில் அரசாங்கம் தலையிடுவது இல்லை. இவ்வாறு இயங்கும் முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில் மூன்று முக்கிய இயல்புகள் இருக்கின்றன. அவை யாவன : (1) தடையில்லா சந்தையின் விலை இயங்கு முறை, (2) தொழில் முயல்வோனுக்கு சுதந்திரம், (3) நுகர்வோர் கோலோச்சும் நிலை. நாட்டில் எப்பண்டங்கள் உற்பத்தியாக வேண்டும் என்பதை நுகர்வோர்தாம் முடிவு செய்கின்றனர். சந்தையில் எவ்வெப் பண்டங்களுக்குத் தேவை இருக்கிறதோ அப்பண்டங்கள் உற்பத்தியாகி சந்தைக்கு வருகின்றன. சந்தையில் காணப்படும் தேவை நுகர்வோர் எழுப்புவது. எனவே, நுகர்வோர் தங்கள் விருப்பங்களைத் தேவை மூலம் சந்தையில் பிரதிபலிக்க, அத் தேவைக்கு ஏற்றாற் போல் பண்டங்கள் உற்பத்தியாகின்றன. நுகர்வோர் விரும்பாத பண்டங்கள் சந்தையில் விலை போகாமல் தங்கும். இப்பண்டங்களை உண்டாக்கும் உற்பத்தியாளர்கள் நட்டத்திற்கு உள்ளாகி அப்பண்டங்களின் உற்பத்தி அளவைக் குறைப்பார்கள் அல்லது உற்பத்தியை முற்றிலுமே நிறுத்தி விடுவார்கள். நுகர்வோர் விரும்பி வாங்கும் பண்டங்களின் உற்பத்தி பெருகும்; அப் பண்டங்களுக்கு அதிக விலையும் கிடைக்கும். இது உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும். அவர்களும் அப்பண்டங்களின் உற்பத்தியைப் பெருக்குவர். இவ்வாறு இயங்கும் முறையைத்தான் நுகர்வோர் கோலோச்சு நிலை என்று கூறுகின்றனர். அதாவது நுகர்வோர் மன்னர்களுக்கு ஒப்பிடும் உயர்நிலையில் இருக்கின்றனர். நாட்டில் எவை உற்பத்தியாகவேண்டும், என்ன, எவற்றை உற்பத்தி செய்யக் கூடாது என்று இறுதிக் கட்டளையிடக்கூடிய வலிமை நுகர்வோருக்கு உண்டு. ஒருபுறம் நுகர்வோர், மற்றொரு புறம் உற்பத்தியாளர் என்றிருக்கும் இரு பிரிவினரையும் தொடர்புபடுத்துவதில் சந்தையும் விலை நிர்ணய இயங்கு முறையும் இரு முக்கிய இணைப்புகளாக இருக்கின்றன. 'அளிப்பும்' (Supply) 'தேவையும்' (Demand) ஒன்றோடொன்று மோதிக் கொண்டு செயல்பட இவ்விரு இணைப்புகளும் ஏதுவாக இருக்கின்றன. இந்நடவடிக்கைகளின் கூட்டுச் சேர்க்கையின் விளைவால் சந்தையில் பண்டங்கள், பணிகள் இவற்றின் விலைகள் நிர்ணயமாகின்றன. தொழில் முயல்வோருக்கு சுதந்திரம் என்னும் கருத்து, எந்தத் தொழிலையும் அரசாங்கத் தடை ஏதுமின்றித் தொடங்கிச் செயல்பட உற்பத்தியாளர்களுக்கு முழு சுதந்திரம் இருக்கும் என்பதை உணர்த்துகிறது. எப்பண்டங்களை உற்பத்தி செய்தால், எந்த அளவில் உற்பத்தி செய்தால் அதிக இலாபம் கிடைக்கும் என்று

அவர்கள் கருதுகிறார்களோ அதன்படி செயல்பட உற்பத்தியாளர்களுக்கு முழுச் சுதந்திரம் உண்டு. மது அருந்துவதிலும் புகை பிடிப்பதிலும் பணத்தைச் செலவிட மக்கள் நாட்டம் காட்டுகிறார்கள் என்று உற்பத்தியாளர்கள் கருதினால் அவர்கள் மது உற்பத்தியிலும் சிகரெட் உற்பத்தியிலும் முனைப்பாக ஈடுபடலாம்! இதே போன்று, புகையிலைக்கு இருக்கும் தேவை பெருக்கமடைந்தால் விவசாயிகள் தங்களுடைய நிலங்களில் உணவுத் தானியங்கள், காய்கறிகள் பயிராக்குவதற்குப் பதிலாக புகையிலை உற்பத்தி செய்ய முற்படலாம்!

## தலையிடாக் கொள்கையின் வீழ்ச்சி

தலையிடாக் கொள்கையின் செயல்முறையில் இருந்த ஆழ்ந்த நம்பிக்கை பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இந்நூற்றாண்டின் தொடக்கத்திலும் தளர ஆரம்பித்தது. சோஷியலிஸ அமைப்புக்கும் கொள்கைக்கும் வரவேற்பு கிடைக்க ஆரம்பித்தது. விஞ்ஞான ரீதியில் அமைந்த நவீன சோஷியலிசக் கொள்கைக்கு வித்திட்டவர் காரல்மாக்ஸ் என்னும் பெயருடைய மேதை. 'தாஸ் காபிடல்' என்னும் அவருடைய முக்கிய நூல் அடிப்படைக் கொள்கை சம்பந்தமான பல வினாக்களை எழுப்பியது. முதலாளித்துவ முறையில் பதிந்து கிடக்கும் குறைபாடுகளை இந்நூல் எடுத்துக் காட்டியது. 'இலாபம் ஈட்டுவதே முதலாளிகளின் ஒரே நோக்கம்; இந்நோக்கம் நிறைவேற அவர்கள் தொழிலாளர் வர்க்கத்தைச் சுரண்டுவார்கள்; இத்தகைய சுரண்டல்களின் விளைவால் நாட்டின் பெரும் பகுதி மக்கள் வறுமையிலும் வேலையில்லாத் திண்டாட்டத்திலும் உழலும் நிலை ஏற்படும்' என்று மார்க்ஸ் அவர்கள் வாதிட்டார். காலப் போக்கில் மார்க்சியக் கொள்கைக்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. தலையிடாப் பொருளாதாரக் கொள்கை வீழ்ச்சியடைந்ததற்கு இது முதற் காரணமாகும். மக்களுடைய நலத்தைப் பெருக்கவும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும் அரசாங்கங்கள் தங்கள் நாடுகளின் பொருளாதார நடவடிக்கைகளில் தலையிடத் தொடங்கின. ஆனால், தலையீட்டின் அளவு நாட்டுக்கு நாடு மாறுபட்டிருந்தது. சோஷியலிச நாடுகளில் இன்று அரசு எல்லா நடவடிக்கைகளிலும் முழுமையாகத் தலையிடுகிறது. பிற நாடுகளில் அரசுத் தலையீடு ஓரளவுக்குத்தான் இருக்கிறது.

## பொருளாதாரத் திட்டமிடுதல்

பொருளாதாரத் திட்டமிடுதல் என்னும் முறை ஒரு ருஷ்யக் கண்டுபிடிப்பாகும். 1917-ல் நடந்த ருஷ்யப் புரட்சிக்குப் பிறகு

போல்ஷ்விக்ஸ் என்போர் அந்நாட்டில் பதவிக்கு வந்தனர். கார்ல் மார்க்ஸ் அவர்களின் கருத்துகளுக்குச் செயல் வடிவம் கொடுக்க அவர்கள் முயன்றனர். அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளில் ஒன்று கொடிய வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் இவற்றை அகற்றவும், நாட்டின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கவும் ஐந்தாண்டுத் திட்டங்களை வரைந்து செயல்படுத்தியதாகும். ருஷ்யாவில் இதற்கு வியப்பூட்டும் வகையில் பலன் கிடைத்தது. ருஷ்ய நாட்டு முன்மாதிரியைக் கடைப்பிடித்து செக்கோஸ்லோவாக்கியா, ஹங்கேரி போன்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் பொருளாதாரத் திட்டங்கள் வரைந்தன. திட்டமிட்டுச் செயல்படும் முறை சோஷியலிச நாடுகளில் நல்ல விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை அறிந்த வளர்ச்சியடைந்த, வளர்ந்து வரும் நாடுகள் பலவும் அம்முறையைக் கையாளத்தொடங்கின. ருஷ்ய நாட்டு அனுபவம் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களைப் பெரிதும் கவர்ந்தது. இந்தியாவில் பொருளாதாரத் திட்டத்திற்கான நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டார். இந்தியா சுதந்திரம் அடைந்ததும், உள்ளாட்சி ஒரு பொருளாதாரத் திட்டக் குழுவை அமைத்தது. நாட்டின் பொருளாதார நிலையை மேம்படுத்த வரையறுத்த குறிக்கோள்களுடன் கூடிய ஐந்தாண்டுத் திட்டங்களை வரையும் பணியை இக்குழு மேற்கொண்டது.

## பொருளாதாரத் திட்டமிடுதல் என்றால் என்ன?

பொருளாதாரத் திட்டமிடுதல் என்றழைக்கப்படும் இப்புதிய முறையின் விளக்கம் என்ன? எந்த ஒரு மனித நடவடிக்கையையும் ஓரளவுக்குத் திட்டமிட்டே செயல்பட வேண்டியிருக்கிறது. ஒரு மாணவர் பொறி இயல் பட்டப்படிப்பை மேற்கொள்ள விரும்புகிறார் என்று வைத்துக்கொள்வோம். அவர் திட்டமிட்டுச் செயல்பட வேண்டியிருக்கிறது. அவருடைய குறிக்கோள் பொறியியல் கல்லூரி ஒன்றில் பயின்று பட்டம் பெற்று எதிர் காலத்தில் ஒரு பொறி இயல் வல்லுனராக வேண்டும் என்பது. பொறி இயல் கல்லூரியில் இடம் பெற வேண்டுமென்றால், மேல் நிலைப் பள்ளித் தேர்வில் மிக உயர்ந்த மதிப்பெண்கள் பெற வேண்டும். பாடத்திட்டத்திற்கு அப்பாற்பட்ட மேடைப் பேச்சு, எழுத்து வன்மை, நடிப்பு, விளையாட்டு போன்ற நடவடிக்கைகளில் ஈடுபாடும் தேர்ச்சியும் பெறவேண்டும். நேர்முகத் தேர்வில் நன்றாகப் பதிலளிக்கப் பொது அறிவை வளர்த்துக் கொள்ளவேண்டும். நல்ல உடற் கட்டும் உடல் நலமும் உள்ளவராகத் திகழ வேண்டும் என்றெல்லாம் அவர் நன்கு

அறிவார். இவை ஒவ்வொன்றிலும் சிறப்பும் தேர்ச்சியும் பெற வேண்டுமென்றால்அம்மாணவர் நன்றாகச் சிந்தித்துத் திட்டமிட்டுச் செயல்படத் தொடங்க வேண்டும். பள்ளிப் பாடங்களைப் பயில, பொது அறிவை வளர்த்துக்கொள்ள, விளையாட்டில் தேர்ச்சிபெற, பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் ஈடுபட, ஓய்வு எடுக்க என்று ஒவ்வொரு நடவடிக்கைக்கும் அவர் அன்றாடம் நேரம் ஒதுக்க வேண்டும். இவ்வாறு திட்டமிடுவதோடு அதனைத் தவறாமல் செயல்படுத்தவும் வேண்டும். திட்டம் சரியாக வடிக்கப் படாவிட்டாலோ அல்லது திட்டத்தின் செயற்பாட்டில் தவறு நிகழ்ந்தாலோ மாணவர் தன்னுடைய குறிக்கோளை அடைய முடியாது. இவ்வாறு ஒருவர் தன்னுடைய எதிர் காலத்திற்குத் திட்டமிடுவதும் அத்திட்டத்தைச் செயலாற்றுவதும் ஓரளவுக்கு எளிதாகும். ஆனால், ஒரு நாட்டுக்கே திட்டம் வரைந்து செயல் படுத்துவது என்பது மிகவும் கடினமான காரியமாகும்; ஒரு சிக்கலான காரியமும்கூட. ஏனெனில், ஒரு நாட்டின் பொருளா தாரப் போக்கைப் பல மாறிகள் (Variables) பாதிக்கின்றன. மேலும், அவற்றின் போக்கை மாற்றியமைப்பதும் அவ்வளவு எளிதான செயலன்று.

பொருளாதாரத் திட்டத்தைக் கீழ்க்கண்டவாறு விளக்கலாம். திட்டத்தை வரையும் பணியை மேற்கொண்டுள்ள ஓர் அதிகார பூர்வமான அமைப்பு, அடைய வேண்டிய குறிக்கோள்கள் யாவை என்பதை அறுதியிட்டு வரையறுத்து தெளிவுபடுத்த, அக்குறிக் கோள்களை எய்துவதற்கான வழிமுறைகளை வகைப்படுத்திக் கூறுவதுதான் பொருளாதாரத் திட்டம் என்பதாகும். ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குள் குறிக்கோள்களை அடைய வேண்டுமென்பதால் நாட்டின் பொருளாதாரப் போக்கைத் திசை திருப்பி, கட்டுப்பாட்டுக்குள்ளாக்கிச் செயல்பட வேண்டியது அவசியமாகிறது. நாட்டின் பொருளாதார அமைப்பு முழு வதுக்குமே திட்டமிட வேண்டியிருக்கிறது. திட்டமிடுதலை இரு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று நுண்ணியல் திட்டம் (Micro planning), மற்றொன்று பேரியல் திட்டம் (Macro planning). ஒரு நகரத்திற்கோ அல்லது நாட்டின் ஒரு குறிப்பிட்ட பகுதிக்கோ திட்டம் வரைந்தால் அவை நுண்ணியல் திட்டத்தின் வகையைச் சேரும். இதே போன்று கரும்புப் பயிரின் வளர்ச்சி, துணி உற்பத்தியைப் பெருக்குதல் இவை போன்றவற்றிற்காகத் திட்ட மிடுதலும் நுண்ணியல் திட்டத்தின் வகையையே சேரும். பொருளா தார மொத்த அமைப்பில் ஒரு குறிப்பிட்ட அங்கத்தை மட்டுமே இத்திட்டங்கள் உள்ளடக்குவதால் இத்தகையத் திட்டம் ஒரு

நுண்ணியல் திட்டம் என்றழைக்கப் பெறுகிறது. இதற்கு மாறாக நாட்டளவுக்குத் தீட்டப்படும் திட்டம் ஒரு பேரியல் திட்டமாகும். இத்தகைய திட்டம் நாட்டின் பொருளாதார அமைப்பு முழுமையையும் உள்ளடக்கிய திட்டமாகும், நாட்டளவுத் திட்டத்தில் கீழ்க்காணும் அம்சங்கள் முக்கிய அங்கம் வகிக்கின்றன:

1 நாட்டின் பொருளாதாரத்தை ஆய்வு செய்யவேண்டும் : பொருளாதாரத் திட்டத்தை வரைவதற்கு முன், முதல் கட்டமாக நாட்டில் நிலவும் பொருளாதார நிலவரங்களைக் கண்டறிய ஒரு விரிவான ஆய்வினை மேற்கொள்ளுதல் வேண்டும். நாட்டை எதிர் நோக்கி இருக்கும் பெரும் பொருளாதாரப் பிரச்சினைகள் எவை, நாட்டில் எந்த அளவிற்கு சாதனங்கள் உள்ளன. அவை எந்த அளவுக்கு பயன்படுத்தப்படுகின்றன என்பவற்றையெல்லாம் ஆய்வு செய்தல் வேண்டும். நாட்டின் தற்போதைய பொருளாதார நிலை எவ்வாறு இருக்கிறது என்பதைத் தெளிவாகக் கண்டறியாமல் எதிர்காலத்திற்கு திட்டமிடுவதும், இலக்குகளை நிர்ணயிப்பதும் முறையில்லாத செயலாகிவிடும்.

2. குறிக்கோள், இலக்குகள் நிர்ணயித்தல் : திட்டம் என்றால் அதற்கு நன்றாக வரையறுக்கப்பெற்ற, தெளிவான குறிக்கோள்களும் இலக்குகளும் இருத்தல் வேண்டும். எதை அடைய வேண்டுமென்று விரும்புகிறோமோ அதுவே திட்டத்தின் குறிக்கோளாகிறது. குறிக்கோள்களைப் பொதுப்படையாகவும் தெளிவற்ற முறையிலும் குறிப்பிடுதல் கூடாது. உற்பத்தியை மேலும் பெருக்குவது, நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மேலும் துரிதப்படுத்துவது போன்றவை குறிக்கோள்கள் போன்ற தோற்றமளித்தாலும் அவை உண்மையில் சரியான குறிக்கோள்கள் அல்ல. கணக்கிட்டு அளந்து கூறும் வகையில் குறிக்கோள்கள் இருத்தல் வேண்டும். எடுத்துக்காட்டாக, ஒரு திட்டம் நாட்டு வருமானத்தையும் தலா வருமானத்தையும் எத்துணை சதவிகிதத்தில் உயர்த்த முற்படுகிறது என்று குறிக்கோள்கள் இருத்தல் வேண்டும். உணவு தானியங்களின் உற்பத்தி எந்த அளவிலிருந்து எத்துணை அளவிற்கு உயரும் என்று குறிப்பிட வேண்டும். மேலும், குறிக்கோள்கள் நடைமுறையில் கைவரப்பெறக்கூடிய குறிக்கோள்களாகவும் இருத்தல்வேண்டும். சுருங்கக் கூறின், பேரளவில் எழுந்த, நடைமுறைக்கு ஒவ்வாத, செயல்படுத்த முடியாத குறிக்கோள்களாக இருத்தல் கூடாது. நாட்டின் சாதனங்கள், இயற்கை வளம், செயற் திறன் இவை அனைத்தையும் கருத்திற் கொண்டு நடைமுறையில் அடையக் கூடிய குறிக்கோள்களையும் அமைத்தல் வேண்டும்.

3. முதன்மைப் படுத்துதல் : தன்னை எதிர்நோக்கி நிற்கும் பொருளாதாரப் பிரச்சினைகள் அனைத்தையும் ஒரே நேரத்தில் களைய எந்த ஒரு நாட்டாலும் முடியாது. ஏனெனில், ஒரு நாட்டிற்குக் கிடைக்கக்கூடிய பொருளாதாரச் சாதனங்களுக்கு எல்லையும் வரம்பும் இருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட சாதனத்தை ஒரு குறிப்பிட்ட செயலுக்குப் பயன்படுத்தினால் அச்சாதனம் பிற செயல்களுக்குக் கிடைப்பதில்லை. எனவே, திட்டமிடும்போது முதன்மைகளை வரிசைப்படுத்த வேண்டியிருக்கிறது. எவற்றை உடனடியாக மேற்கொள்ள வேண்டும், எந்த நடவடிக்கைகள் முக்கியம் வாய்ந்தவை, எவையெல்லாம் சற்றுப் பொறுத்து மேற்கொள்ளப்படலாம் என்று வரிசைப்படுத்த வேண்டிய அவசியம் எழுகிறது. நாட்டில் கிடைக்கக்கூடிய சாதனங்களின் அடிப்படையில் குறைந்த கால அளவில் அடைய வேண்டிய குறிக்கோள்கள் எவை, நீண்ட கால அளவில் அடைய வேண்டியவை எவை என்று நன்றாகத் தீர்மானித்தல் வேண்டும். உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் திட்டங்களுக்கு முதன்மையளித்து அவ்வளவு முக்கியமில்லாத திட்டங்களைத் தள்ளிப் போடுதல் வேண்டும்.

4. திட்டத்தைச் செயலாக்குதல் : இலக்குகளை அடைவதற்கு உரிய சீரிய முயற்சிகளை மேற்கொண்டால்தான் ஒரு திட்டம் வெற்றிகரமாக இருக்கும். முயற்சி மேற்கொள்ளப்படாமலோ அல்லது முயற்சி தவறான திசையில் திருப்பப்பட்டாலோ தீட்டிய திட்டம் எழுத்து வடிவத்தில்தான் இருக்கும்; சாதனை ஒன்றுமே இருக்காது. எனவே, ஒரு திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கு வலுவான, திறன் வாய்ந்த, மேற்கொள்ளும் பணியிற் பக்தியும் பற்றுதலும் ஈடுபாடும் நிறைந்த ஒரு நிருவாக அமைப்பு அவசியமாகிறது. ஒரு திட்டத்தில் அடங்கியிருக்கும் வெவ்வேறு அங்கங்கள் எவ்வளவு கவனத்துடனும் சிரத்தையுடனும் நடைமுறையில் செயல்படுத்தப்படுகின்றன என்பதைப் பொறுத்துத்தான் ஒரு திட்டத்தின் வெற்றியும் தோல்வியும் அமையும். ருஷ்ய நாட்டில் பொருளாதாரத் திட்டம் பெரும் வெற்றி பெற்றமைக்கு அந்நாட்டின் நிருவாக அமைப்புத் திறனும், அவ்வமைப்பின் பல மட்டங்களில் பணியாற்றிய சிறந்த பயிற்சிப் பெற்ற, ஒழுக்கம் குன்றாத அரசாங்க அதிகாரிகளும் தொழிலாளர்களுமே முக்கியக் காரணங்களாகும்.

5. மக்களுடைய ஒத்துழைப்பு : ஒரு பொருளாதாரத் திடடம், மக்களுக்காக, மக்களுடைய வருவாயைப் பெருக்கி அதன் மூலம் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த

வேண்டும் என்கிற நோக்கத்தோடு வரையப்படுகிறது. எனவே, திட்டத்தின் நோக்கங்கள் யாவை, குறிக்கோள்கள் எவை என்பவற்றை மக்கள் நன்றாக அறிந்திருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் திட்டத்திற்கு ஊக்கமளித்து அத்திட்டம் வெற்றிகரமாக நிறைவேற ஒத்துழைப்பும் அளிப்பார்கள். அரசின் வளர்ச்சித் திட்டங்களில் மக்கள் அக்கறை காட்டாமல் இருக்கும் பின் தங்கிய நாடுகளில் இது மிகவும் கவனிக்கத் தக்கதாகும்.

6. திட்டம் வரைய ஒரு மைய நிறுவனம்: திட்டம் வரைய நாட்டில் ஒரு மைய நிறுவனம் இருக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது. நாடு முழுமைக்கும் ஒரு திட்ட நகல் வடிக்க அந்நிறுவனத்திற்குப் போதிய அதிகாரமும் இருத்தல் வேண்டும். ஒரு நாட்டில் ஒரே நேரத்தில் பல நிறுவனங்கள் இயங்கி வந்தால் ஒன்றோடு ஒன்று முரண்பட்டு செயல்படும் நிலை உருவாக ஏதுவாகும்.

# 2. விடுதலை அடைந்தபோது இந்தியாவின் பொருளாதார நிலை

அண்மைக் காலத்தில் வேளாண்மை, தொழில், வங்கிகளமைப்பு, அயல்நாட்டு வாணிபம் போன்ற முக்கியத் துறைகள் இந்தியாவில் எந்த அளவிற்கு முன்னேற்ற மடைந்திருக்கின்றன என்று பின்வரும் அத்தியாயங்களில் விரிவாகப் பயில இருக்கிறோம். விடுதலைக்குப் பிறகு அரசு பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்திய போது நாட்டில் எழுந்த புதிய பிரச்சினைகள் எவை என்பதையும் பின்னர் பார்க்க இருக்கிறோம். அதற்கு முன்பாக நாடு விடுதலை அடையும் தறுவாயில் அதன் பொருளாதார நிலை எவ்வாறு இருந்தது என்பதுபற்றி ஒரு தெளிவான கருத்தைப் பெற வேண்டியது அவசியமாகிறது. விடுதலையடைந்த நேரத்தில் நாட்டின் நிலை எவ்வாறு இருந்தது என்று அறிந்து கொண்டால், விடுதலைக்குப் பிறகு நாடு அடைந்த பொருளாதார முன்னேற்றத்தைச் சரியான கண்ணோட்டத்தில் மதிப்பீடு செய்ய உதவியாக இருக்கும்.

விடுதலை அடைந்தபோது நாட்டின் பொருளாதாரம் நல்ல நிலையில் இல்லை. நாட்டு வருமானமும் மிகவும் குறைவாகவே இருந்தன. எனவே, நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரமும் தாழ்ந்த நிலையிலேயே இருந்தது. நவீன பேரளவு ஆலைத் தொழில்கள் அன்று இல்லை என்றுகூடக் கூறலாம். வேளாண்மை உற்பத்தி குறைந்த அளவில் தான் இருந்தது. நாடு பெரும் பொருளாதாரப் பிரச்சினைகள் சிலவற்றை எதிர் நோக்க வேண்டியிருந்தது.

நாட்டு விடுதலையின்போது பொருளாதார நிலை இவ்வாறு கேடுற்றிருந்ததற்கு மூன்று முக்கிய காரணங்களைக் குறிப்பிடலாம்.

### 1. அந்நிய ஆட்சி

ஏறக்குறைய நூறாண்டு காலத்திற்கு மேலாக இந்தியா பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் இருந்தது என்பதை யாவரும் அறிவர். 1757ஆம் ஆண்டில் பிளாசி என்னுமிடத்தில் தொடங்கிய

பிரிட்டிஷ் முற்றுகை 1858ஆம் ஆண்டில்தான் முடிவடைந்தது. 1858ஆம் ஆண்டு முதற்கொண்டு பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவை நேரிடையாக ஆண்டு வந்தது. ஆக இந்தியா நெடுங்காலமாக ஒரு காலனி நாடாக இருந்துவந்தது. பல நாடுகளின் வரலாற்றைப் புரட்டிப்பார்த்தால் அந்நிய ஆட்சியின்கீழ் இருக்கும் எந்த ஒரு காலனி நாடும் பொருளாதாரத் துறையில் முன்னேற முடியாது என்பது தெரியவரும். இக்கூற்று இந்தியாவுக்கும் முற்றும் பொருந்தும்.

பிரிட்டிஷ் ஆட்சியால் நாட்டிற்குச் சில நன்மைகளும் விளைந்திருக்கின்றன. சில குறிப்பிட்ட துறைகளில் முன்னேற்றம் இருந்தது என்பதும் ஓரளவிற்கு உண்மைதான். இரயில்வே போக்குவரத்தையும் தபால் தந்தியையும் ஆங்கிலேயர்கள்தான் பரப்பினார்கள். நீர்ப்பாசனமும் விரிவடைந்தது. இன்றைய கல்வி முறைக்கு அவர்கள்தான் அடிக்கல் நாட்டினார்கள். பெரும் ஆலைத் தொழில்கள் பிரிட்டிஷ் ஆட்சியின்போதுதான் தொடங்கப் பெற்றன. பஞ்சாலைகளை இங்கு குறிப்பிட்டுக் கூறவேண்டும். பிரான்சு, போர்ச்சுகல், டச்சு போன்ற ஆதிக்க நாடுகளுக்கும் அந்த காலத்தில் காலனிகள் இருந்தன. இந்த ஆதிக்க நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது பிரிட்டிஷ் அரசாங்கம் தன்னுடைய காலனிகள்மீது சற்று கருணையுடன்தான் ஆட்சி செலுத்தியது என்று கூறலாம். இருந்தாலும், இந்தியா நீண்ட காலம் பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் ஓர் அடிமை நாடாக இருந்து வந்த காரணத்தால் அதனுடைய பொருளாதார முன்னேற்றம் பல வகைகளிலும் தடைபட்டிருந்தது.

தன்னை எதிர்நோக்கியிருக்கும் பொருளாதாரப் பிரச்சினைகளைப்பற்றி முடிவுகள் எடுக்க ஒரு காலனி நாட்டுக்கு சுதந்திரம் இருப்பதில்லை. பெரும்பாலும் எல்லா முடிவுகளையும் தாய் நாடே எடுக்கிறது. காலனிகள் சம்பந்தமாக முடிவுகள் எடுக்கும்போது அக்காலனிகளுடைய நலத்தைக் கருத்திற்கொண்டு ஒரு தாய் நாடு முடிவெடுக்கும் என்று கூறுவதற்கில்லை. தன்னுடைய சுயநலக் கண்ணோட்டத்தில் தாய் நாடு முடிவெடுப்பது இயற்கையே. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்திலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்திலும் இங்கிலாந்தில் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்து வந்தன. விஞ்ஞானத் துறையில் பல நூதன முறைகள் கண்டுபிடிக்கப்பட்டன. இக்கண்டுபிடிப்புகள் வாயிலாக இங்கிலாந்தின் உற்பத்தி முறைகளில் பல புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்பட்டன. தொழில் முன்னேற்றம் மிக விரைவாக இருந்தது. குறைந்த விலையில் அதிகம்

பண்டங்களையும், பல புதிய பண்டங்களையும் இங்கிலாந்து உற்பத்தி செய்யத் தொடங்கியது. இந்தச் சூழ்நிலையில், நாட்டில் உற்பத்தியாகும் பண்டங்களை விலையாக்க புதிய சந்தைகளைப் பிடிப்பதும், பெருகிவரும் தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் கச்சாப் பொருள்களை அளிக்கக்கூடிய மூலங்களைத் தேடிப்பிடிப்பதுமே இங்கிலாந்தின் கவனத்தை ஈர்க்கும் பிரச்சினைகளாக இருந்தன. இங்கிலாந்து அந்தக் காலத்தில் தலையிடா வாணிபக் கொள்கையை (free trade policy) கடைபிடித்து வந்தது. அயல் நாட்டு வாணிபத்தில் தலையிட்டு இறக்குமதியின் மீதும் ஏற்றுமதியின் மீதும் அரசாங்கம் வரிகள் விதிக்கக் கூடாது என்பதே தலையிடாக் கொள்கையின் அடிப்படை நோக்கம். இங்கிலாந்து தொழில் துறையில் நல்ல முன்னேற்றமடைந்திருந்தது. வாணிபத்தில் பிற நாடுகளுடன் போட்டியிட நல்ல திறன் கொண்டதாகவும் இருந்தது. இந்தச் சூழ்நிலையில் தலையிடாக் கொள்கை இங்கிலாந்தின் பொருளாதாரத்திற்கு நல்ல ஊக்கமளிப்பதாக இருந்தது. ஆனால், இந்தியாவிற்கும் இதே தலையிடாக் கொள்கையை பிரிட்டிஷ் அரசாங்கம் கையாண்டது. இந்தியாவோ, பொருளாதாரத் துறையில் வலிமை குன்றி இருந்தது; வாணிபத்தில் பிற நாடுகளுடன் போட்டியிடும் சக்தியும் அதற்கு இல்லை. பிரிட்டிஷ் தொழிற்சாலைகளில் குறைந்த விலையில் உற்பத்தியான பண்டங்கள் இந்தியாவின் கைத்தொழில் பண்டங்களுடன் போட்டியிடத் தொடங்கின. துணி உற்பத்தியும் கைவினைப் பொருள்களுமே அக்காலத்தில் இந்தியாவின் முக்கிய உற்பத்திப் பொருள்களாக இருந்தன. அந்நியப் பண்டங்களுடன் போட்டியிட முடியாமல் இத்தொழில்கள் நலியத் தொடங்கின. இங்கிலாந்திற்குத் தேவையான கச்சாப் பொருள்கள் இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாயின. அங்குள்ள ஆலைகள் அவற்றை செய்வினை முடிந்த பண்டங்களாக (finished goods) மாற்றி இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்தன. பிரிட்டிஷ் பண்டங்களுக்கு இந்தியா ஒரு சந்தையாக இயங்கி வந்தது. ஒரு நாடு காலனியாக இருப்பதால் அந்நாட்டிற்குப் பொருளாதாரத் துறையில் இழைக்கப் பெறும் பல தீமைகளுக்கு இந்தியா ஒரு மாதிரியாகத் திகழ்ந்தது. காலனியாக இருந்த இந்தியாவில் ஆலைத்தொழில்களைச் சரியான முறையில் வளர்த்துக்கொள்ள முடியவில்லை. இந்தியா விடுதலையடைந்தபோது இரும்பு, எஃகு, இயந்திரக் கருவிகள், போக்குவரத்துச் சாதனங்கள் இவற்றைச் சார்ந்த பெரிய தொழிற்சாலைகள் நாட்டில் இல்லை; அல்லது நாட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவிற்கு வளர்ச்சியடையவில்லை என்று கூறலாம். இவ்வாறு பின் தங்கிய நிலையில் இருந்ததற்கு இந்தியா ஒரு காலனியாக இருந்தது முக்கியக் காரணமாகும். தொழில் துறையில்

இருந்த குறைந்த அளவு முன்னேற்றம்கூட பஞ்சாலைகள், சர்க்கரை, சணல், தேயிலை போன்ற நுகர்வுப் பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழில்களாகவே இருந்தன. பிற பண்டங்களை உற்பத்தி செய்ய உதவும் உற்பத்திப் பண்ட (producers goods) ஆலைத் தொழில்கள் இந்தியாவில் அக்காலத்தில் இல்லை. இயந்திரங்களுக்கும், தளவாடங்களுக்கும், தொழில் நுணுக்க வல்லுநர்களுக்கும் இந்தியா இங்கிலாந்தையே எதிர்பார்த்து நிற்க வேண்டியிருந்தது. நாடு விடுதலை அடைந்தபோது தொழில் முன்னேற்றத்திற்கான அடித்தளம் வலுவாக அமையவில்லை. தொழில் முன்னேற்றமும் மந்தமாகவே இருந்தது.

## 2. இரண்டாம் உலகப் போர்

பார் முழுவதும் நடந்த இரண்டாம் உலகப் போரும் இந்தியப் பொருளாதாரத்தை வெகுவாகப் பாதித்தது. தாய் நாடான இங்கிலாந்து இப்போரில் நேரிடையாக ஈடுபட்டது. எனவே, காலனியாக இருந்த இந்தியாவும் அதில் ஈடுபட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. நற்பயனாக, இந்திய மண்ணில் சண்டை ஏதும் நிகழவில்லை; இருந்தாலும் அச்சு நாடுகளுக்குப் பெருத்த அளவில் பண்ட உதவி அளிக்க வேண்டிய நிலையில் இந்தியா இருந்தது. தொடக்கக் கட்டத்தில் உலகப் போர் இந்தியாவிற்குச் சிறிதளவுக்கு நன்மை செய்தது என்றே கூறவேண்டும். பிற நாடுகளுக்குப் பெருமளவில் பண்டங்களை அனுப்பி உதவி செய்ய வேண்டியிருந்ததால் உள் நாட்டு உற்பத்திக்கு ஊக்கம் கிடைத்தது. ஆனால், இந்தியப் பொருளாதாரத்திற்குப் போரினால் ஏற்பட்ட தீமைகளைப் போர் முடிந்த பிறகுதான் உணர முடிந்தது. போர் நடந்துகொண்டிருந்தபோது இந்தியத் தொழிற்சாலைகள் 24 மணி நேரமும் தொடர்ந்து வேலை செய்தன. இயந்திரங்கள், பழுது பார்க்கக்கூட நேரமின்றி ஓய்வில்லாமல் இயங்கின. இதன் விளைவாக இயந்திரங்கள் பழுதடைந்தன. பழுதடைந்த இயந்திரங்களை அகற்றிப் புதியவற்றைப் பொருத்துவது போருக்குப் பின் பெரும் பிரச்சினையாகி விட்டது. இதற்கு முன் இந்தியாவிற்குத் தேவையான இயந்திரங்கள் இங்கிலாந்திலிருந்து வந்துகொண்டிருந்தன. இங்கிலாந்தின் தொழிற்சாலைகளும் போரினால் பாதிக்கப் பெற்றிருந்ததால் இந்தியாவிற்குத் தேவையான இயந்திரங்கள் இங்கிலாந்திலிருந்து கிடைக்கவில்லை. கிடைத்தால் கூட அவற்றின் விலைகள் மிகவும் உயர்ந்திருந்தன. அவற்றை ஏற்றிக் கொண்டு வர கப்பல் போக்குவரத்தில் தட்டுப்பாடு இருந்தது. இந்தியத் தொழில்களைச் சீரமைத்துப் பழைய நிலைக்குக் கொண்டுவர பத்தாண்டு காலத்திற்கு மேல் ஆகியது.

## 3. நாட்டுப் பிரிவினை

இந்தியா, பாகிஸ்தான் என்று இரு பிரிவுகளாக ஏற்படுத்திய நாட்டுப் பிரிவினை பல புதிய சிக்கல்களை உருவாக்கியது. இச்சிக்கல்கள் நாட்டின் பொருளாதார அமைப்பைக் கேடுறச் செய்தன. இரு நாடுகளும் பெரும் பிரச்சினைகளை எதிர் நோக்க வேண்டியிருந்தன. அவற்றுள் மிக விரைவில் அவசரமாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை அகதிகள் பிரச்சினையாகும். இலட்சக் கணக்கான மக்கள் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற்கும் இந்தியாவிலிருந்து பாகிஸ்தானிற்கும் குடிபெயர்ந்து செல்ல வேண்டியிருந்தது. உலக வரலாற்றில் இது ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும். அகதிகள் குடியமர அகதி முகாம்கள் அமைத்து அவர்களுடைய உணவிற்கும் உடைக்கும் ஏற்பாடு செய்ய வேண்டியிருந்தது. மேலும் அவர்களுக்கு நிலையான வாழ்வு அளிக்க வேண்டியிருந்தது. இப்பெரும் பிரச்சினையைச் சமாளிக்க அரசாங்கம் பல நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. பிரிவினையால், இந்தியாவிற்கு முன்பு இருந்ததில் 77 சதவிகித நிலப் பரப்பு கிடைத்தது; ஆனால் மக்கள் தொகையோ முன்பிருந்த அளவில் 82 சதவிகிதமாகும்.

பிரிவினையால் ஏற்பட்ட மற்றொரு முக்கியப் பிரச்சினை கச்சாப் பொருள்கள் கிடைப்பதில் ஏற்பட்ட தட்டுப்பாடாகும். பிரிவினைக்கு முன் இருந்த சணல் ஆலைகள், பருத்தி நூல், துணி ஆலைகள், சர்க்கரை ஆலைகள், தோல் பதனிடும் தொழிற் கூடங்கள் இவற்றுள் பெரும்பான்மை இந்திய எல்லைக்குள் இருந்தன ஆனால் இவைகளுக்குத் தேவையான சணல், கச்சாப் பருத்தி, கரும்பு, தோல் முதலியவற்றின் பெரும்பகுதி உற்பத்தி பாகிஸ்தானில்தான் இருந்தது. இரு நாடுகளுக்கு மிடையே ஓர் ஒப்பந்தம் நிறைவேறியது. அதன்படி பிரிவினைக்கு முன்பு இருந்ததைப்போலவே இரு நாடுகளிடையே தொடர்ந்து வாணிபம் நடைபெற ஏற்பாடாயிற்று. ஆனால், காஷ்மீர் பிரச்சினை காரணமாக இரு நாடுகளுக்குமிடையே நிகழ்ந்த போரினால் வாணிபம் தடைப்பட்டது.

பிரிவினையால் நாட்டில் உணவுப் பற்றாக்குறையும் எழுந்தது. ஒரு காலத்தில் பர்மா இந்தியாவின் ஒரு பகுதியாக இணைந்திருந்தது. தேவையான அரிசியை அப்போது பர்மாதான் அளித்து வந்தது. பர்மா விடுதலையடைந்த தனி நாடாக ஆனதும் இந்தியாவில் அரிசிக்குப் பற்றாக் குறை ஏற்பட்டது. இந்தியா தொடர்ந்து ஒவ்வோர் ஆண்டும் அரிசியை இறக்குமதி

செய்யவேண்டியிருந்தது. ஆனால் கோதுமையைப் பொறுத்த மட்டில் இந்தியா தன்னிறைவு நிலையில் இருந்தது. கோதுமை சாகுபடியாகும் வளம் பொருந்திய நிலங்கள் அடங்கிய சிந்து, பஞ்சாப் பகுதிகள் பாகிஸ்தான் வசம் சேர்ந்து விட்டன. எனவே, பிரிவினைக்குப் பிறகு இந்தியா அரிசி மட்டுமல்லாது கோதுமையையும் வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலைக்கு உள்ளாகியது.

இவ்வாறு அந்நிய ஆட்சி, இரண்டாம் உலகப் போர், நாட்டுப் பிரிவினை இம்மூன்று நிகழ்ச்சிகளையும் பின்னணியாக வைத்துக் கொண்டு, விடுதலை அடைந்தபோது இந்தியாவின் பொருளாதார நிலை எவ்வாறு இருந்தது என்பதைக் கண்டறியலாம்.

## சமன் இல்லாத பொருளாதார நிலை

நாட்டு விடுதலையின்போது இந்தியப் பொருளாதாரம் சம நிலையில் இல்லை. வேளாண்மையே முக்கியத் தொழிலாக இருந்தது. புராதனக் கைத்தொழில்கள் அந்நியப் பண்டங்களின் போட்டியால் நலிவுற்றிருந்தன. இங்கிலாந்தின் ஆலைத் தொழில்களில் உற்பத்தியான பண்டங்கள் இறக்குமதியாகி மலிந்து கிடந்தன. ஒரு நாடு பொருளாதாரத் துறையில் முன்னேற வேண்டுமெனில் வேளாண்மை, ஆலைத்தொழில், பணிகள் ஆகிய மூன்றும் சீரான முறையில் வளர்ச்சியடைய வேண்டும். ஒன்றின் வளர்ச்சி பிறிதொன்றின் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் வகையில் எல்லாத் துறைகளிலும் முறையான வளர்ச்சியிருக்க வேண்டும். இந்தியப் பொருளாதார அமைப்பு ஒருதலைப் பட்டதாக இருந்ததால் பொதுவான வளர்ச்சி மிகவும் பாதிக்கப்பெற்றது.

## இரு பிரிவுகளைக் கொண்டிருந்தது

இந்தியப் பொருளாதார அமைப்பு ஒருதலைப் பட்டதாக இருந்தது என்பதோடல்லாமல் ஒவ்வொரு பொருளாதார நடவடிக்கையிலும் இரு பிரிவுகள் இருந்தன. ஒரு பிரிவு பழங்கால முறையில் அமைந்திருந்தது. ஆனால் இது பெரிய பிரிவாக இருந்தது. மற்றொரு பிரிவு நவீன முறையில் அமைந்திருந்தது; அளவில் சிறிதாக இருந்தது. கைத்தொழில்கள், குடிசைத் தொழில்கள், விவசாயம் இவை முதற் பிரிவில் அடங்கும். இரண்டாவது பிரிவில் ஏற்றுமதி இறக்குமதி நிறுவனங்கள், வணிக வங்கிகள், நவீன போக்குவரத்துகள், சுரங்கங்கள், தோட்டப் பயிர்கள், ஆலைத் தொழில்கள் ஆகியவை அடங்கும். நவீன முறையில் அமைந்த பிரிவு அப்பொழுதுதான் தலை காட்ட

ஆரம்பித்தது. பழங்காலத்து முறையில் அமைந்த பிரிவு பெரும்பாலும் இந்தியர் கையில் இருந்தது. நாட்டின் பெரும்பான்மையான மக்கள் இப்பிரிவையே சார்ந்து வாழ்ந்தனர். ஆனால் இவர்களை நிலம் படைத்தவர்களும் லேவாதேவிக்காரர்களும் ஏமாற்றிச்சுரண்டி வந்தனர். பெரும்பான்மை மக்களுடைய வாழ்க்கைநிலை ஏழ்மை நிலையிலிருந்தது. நவீன முறையில் அமைந்த பிரிவு முழுவதும் வெள்ளைக்காரர் கையில் இருந்தது. இப்பிரிவில் அதிக லாபம் ஈட்ட வழி இருந்தது. ஈட்டிய இலாபத்தில் பெரும்பகுதி இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்டது. கிடைத்த இலாபம் உள் நாட்டில் பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுத்தப் பெறவில்லை. நாடு பொருளாதாரத் துறையில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தது. நாட்டு விடுதலைக்குப் பிறகு பழங்காலத்து முறையில் அமைந்த பிரிவைச் சீர்திருத்திப் புதிய முறையில் அமைக்க வேண்டியது பெரும் பணியாக இருந்தது.

## மக்கள் தொகை

அக்காலத்திலும் மக்கள் தொகைப் பெருக்கம் ஒரு பிரச்சினையாகவே இருந்தது. ஆனால், 1951-க்குப் பிறகு இருந்த பெருக்கத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது நாடு விடுதலையடைந்த போது இருந்த நிலையைப் பெரும் பிரச்சினையாகக் கருத முடியாது. மக்களின் எண்ணிக்கையை முறையாகக் கணக்கிடுவதை சென்ஸஸ் என்றழைக்கிறோம். இந்தியாவில் பத்தாண்டுக்கு ஒரு முறை கணக்கெடுப்பு நடந்து வருகின்றது. 1921ஆம் ஆண்டு வரை இந்தியாவின் மக்கள் தொகை மிதமாகவே வளர்ந்து வந்தது. அதற்குப் பிறகு சற்று விரைவாக வளர்ச்சியடைந்தது.

### பட்டியல் 2—1

மக்கள் தொகையில் வயதுப் பிரிவுகள் : ஆண்டு 1951

| வயதுப் பிரிவு | மொத்த மக்கள் தொகையில் சதவிகிதப் பங்கு |
|---|---|
| 0 — 4 | 13.3 |
| 5 — 14 | 24.1 |
| 15 29 | 56.9 |
| 60-க்கு மேல் | 5.7 |

1951-ல் நாட்டின் மொத்த மக்கள் தொகை 361 மில்லியனாக இருந்தது. மக்கட்தொகை பெருக்கத்தைப்பற்றி மேலும் விரிவாக அத்தியாயம் 5-ல் படிக்க இருக்கிறோம். 1951ஆம் ஆண்டுக்குப்

பிறகு மக்கள் தொகை அச்சுறுத்தும் வகையில் பெருக்கமடைந்தது. விரைவான மக்கள் தொகைப் பெருக்கம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியைப் பெரிதும் பாதித்திருக்கிறது. 1951-ல் நாட்டில் ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 170 நபர்கள் இருந்தனர். பட்டியல் 2—1 மொத்த மக்கள் தொகையை வயதுக்கு ஏற்றார்போல வரிசைப் படுத்திக் காட்டுகிறது.

1971ஆம் ஆண்டினுடைய மக்கள் தொகையை இவ்வாறு வயதுக்கு ஏற்ப வரிசைப்படுத்தி அதனுடன் இப்பட்டியலை ஒப்பிட்டுப் பார்த்தால், இடைப்பட்ட 20 ஆண்டு காலத்தில் இளம் வயதுப் பிரிவில் உள்ளவர்களின் சதவிகிதம் மிகவும் உயர்ந்திருப்பதைக் காணலாம். 1951-ல் பிறப்பு இறப்பு விகிதங்கள் மிக உயர்வாக இருந்தன. 1000 நபர்களுக்கு இத்தனை பிறப்புகள், இறப்புகள் என்று கணக்கிடுகிறார்கள். 1951-ல் பிறப்பு விகிதம் 39.9 ஆகவும் இறப்பு விகிதம் 27.4 ஆகவும் இருந்தன. 1951-ல் நாட்டின் மக்கட்தொகையில் 82.4 சதவிகித மக்கள் நகர்ப் புறங்களிலும் வசித்தனர். நகர்ப்புற மக்களின் சதவிகிதம் அதிகமாக இருந்தால் அது பொருளாதார வளர்ச்சிக்கு ஓர் அறிகுறி என்று கருதப்படுகிறது. மக்களில் பெரும் பான்மையோர் கல்வி அறிவில்லாத தற்குறிகளாக இருந்தனர். எழுத்தறிவில்லாத நிலை இன்னும் இருக்கிறது. ஆனால், நாடு விடுதலையடைந்தபோது நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. 1951ஆம் ஆண்டின் கணக்கெடுப்புப்படி 16.67 சதவிகித மக்களே எழுத்தறிவு பெற்றவர்களாக இருந்தார்கள். கிராமங்களில் வாழ்ந்த மக்களில் 14 சதவிகித மக்களுக்குத்தான் எழுத்தறிவு இருந்தது. கல்வி பயில்வதில் பெண்கள் முனைப்பாக ஈடுபடவில்லை. மொத்தப் பெண்களில் 8.9 சதவிகிதத்தினரே எழுத்தறிவு பெற்றவர்களாக இருந்தனர்.

நாட்டின் பெரும்பான்மையான மக்கள் பயிர்த்தொழில், மீன் பிடித்தல், கால்நடைகளைப் பராமரித்தல், மர வேலை, சுரங்க வேலை போன்ற தொழில்களிலேயே ஈடுபட்டிருந்தனர். 1951-ல் ஏறக்குறைய 75 சதவிகித மக்கள் இத்தொழில்களில் ஈடுபட்டிருந்தனர். ஆலைத் தொழில், போக்குவரத்து, வங்கிகள், ஆயுள் காப்பு நிறுவனங்கள், வணிகம் இத்துறைகளில் 25 சதவிகிதத்தினர்தான் ஈடுபட்டிருந்தனர். இதிலிருந்து, பிழைப்புக்கு மக்களில் பெரும்பான்மையினர் வேளாண்மையையும் அதைச் சார்ந்த பிற நடவடிக்கைகளையுமே நம்பி இருந்தனர் என்று அறிகிறோம்.

**வேளாண்மை**

நாட்டின் மொத்த நிலப் பரப்பு 328.8 மில்லியன் ஹெக்டேர்களாகும். இதில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்குதான் அன்று சாகுபடியின் கீழிருந்தது. சாகுபடியின் கீழிருந்த நிகர நில அளவு (net area under cultiva'ion) 118.7 மில்லியன் ஹெக்டேர்கள். சாகுபடியில் இருந்த மொத்த நில அளவு (gross area under cultivation) 131.9 மில்லியன் ஹெக்டேர்கள். ஒரு குடியானவர் தன்னுடைய ஒரு ஹெக்டேர் நிலத்தில் ஓராண்டு காலத்தில்இரண்டு முறை பயிர் செய்கிறார் என்றால் அவர் சாகுபடி செய்த நிகர நிலம் 1 ஹெக்டேர், ஆனால் மொத்த நிலம் 2 ஹெக்டேர்களாகும். மொத்தம் நிகர நிலம் இவை இரண்டிற்கும் உள்ள விகிதம் உயர்வாக இருந்தால் நிலம் நன்றாகப் பயன்படுத்தப்படுகிறது என்று பொருள். வேளாண்மையில் உணவு தானியங்களின் உற்பத்தியே அன்று முக்கியப் பயிராக இருந்துவந்தது. சாகுபடியில் இருந்த மொத்த நிலமாகிய 131.9 மில்லியன் ஹெக்டேர்களில் 31 மில்லியன் ஹெக்டேர்களில் அரிசியும், 10.8 மில்லியன் ஹெக்டேர்களில் கோதுமையும், 15.5 மில்லியன் ஹெக்டேர்களில் சோளமும் பயிர் செய்யப்பட்டன. பணப் பயிர்களைப் பொறுத்த அளவில் 5.9 மில்லியன் ஹெக்டேர்களில் பருத்தியும்,. 0.5 மில்லியன் ஹெக்டேர்களில் சணலும், 1.7 மில்லியன் ஹெக்டேர்களில் கரும்பும், 4.9 மில்லியன் ஹெக்டேர்களில் வேர்க்கடலையும் பயிர் செய்யப்பட்டன. அக்காலத்தில் நீர்ப்பாசன வசதிகள் போதிய அளவுக்கு இல்லை. 22.6 மில்லியன் ஹெக்டேர் நிலப் பரப்புக்குத்தான் பாசன வசதி இருந்தது. எனவே, நிலத்தின் பெரும் பகுதி மழையையே நம்பி இருக்க வேண்டியிருந்தது. வேளாண்மை உற்பத்தி மழை அளவைப் பொறுத்திருந்தது. இயற்கை தவறிய ஆண்டுகளில் வேளாண்மை சீர்குலைந்தது. இதனால் உணவில் பற்றாக்குறையும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான பருத்தி, சணல், கரும்பு போன்ற கச்சாப் பொருள்களில் தட்டுப்பாடும் ஏற்பட்டன. நாடு விடுதலை அடைந்த பிறகு நிலைமை ஓரளவிற்கு மாறியிருக்கிறது. நாட்டில் தொடர்ந்து நிறைவேற்றப்பட்ட ஐந்தாண்டுத் திட்டங்களில் பாசனத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பெற்று பல நீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இருந்தாலும், இன்றும்கூட நாட்டின் வேளாண்மை பெருமளவிற்குப் பருவ மழையையே நம்பி இருக்கிறது.

1950-51 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த உணவு உற்பத்தி 50.8 மில்லியன் டன்கள் அளவில் இருந்தது. இதில் அரிசி 20.6 மில்லியன் டன்கள், கோதுமை 6.5 மில்லியன் டன்கள், சோளம் 5.5 மில்லியன் டன்கள். வேளாண்மையில் குடியானவர்கள்

தொடர்ந்து பழைய முறையையே கையாண்டு வந்தனர். விஞ்ஞான ரீதியில், நூதன முறையில் சாகுபடி செய்யும் பழக்கம் அப்பொழுது தான் தலைகாட்டத் தொடங்கியது. போதிய அளவிற்கு உரமிடும், குறிப்பாக இரசாயன உரமிடும், பழக்கத்தைக் குடியானவர்கள் கையாளவில்லை. நோய் தடுப்புக்கும், பூச்சிகளைக் கொல்லவும் அவர்கள் முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை. குடியானவர்கள் பழைய விதைகளையே திரும்பத் திரும்பப் பயிரிட்டு வந்தனர். இவற்றின் விளைவால், எல்லாப் பயிர்களிலும் ஒரு ஹெக்டேருக்கு சராசரியாகக் கிடைக்கக்கூடிய மகசூல் மிகவும் குறைவாகவே இருந்தது. 1950-51ஆம் ஆண்டில், உணவு தானியங்களைப் பொறுத்தவரை ஒரு ஹெக்டேருக்குக் கிடைத்த சராசரி கண்டு முதல் 522 கிலோக்கள் தான். ஒரு ஹெக்டேருக்கு சராசரி அரிசி உற்பத்தி 688 கிலோவாகவும், கோதுமை 663 கிலோவாகவும், சோளம் 353 கிலோவாகவும் இருந்தது. ஐந்தாண்டுத் திட்டங்கள் நடைமுறைக்கு வந்த பிந்தைய ஆண்டுகளில் விவசாய உற்பத்தியும், உணவு தானியங்களின் உற்பத்தியும் எந்த அளவிற்கு வளர்ச்சியடைந்தன என்று அத்தியாயம் 3-ல் படிக்க இருக்கிறோம். நாட்டில் பசுமைப் புரட்சி ஏற்பட்டிருக்கிறது என்று கூறும் அளவிற்கு பிற்காலத்தில் உணவு உற்பத்தியில் ஏற்றம் இருந்தது.

### கால்நடைகள்

நாட்டில் மக்கள் தொகை மட்டும் அதிகமாக இல்லை; கால்நடைகளின் எண்ணிக்கையும் அதிகமாகவே இருக்கிறது. எருது, பசு, எருமை, ஆடு இவை அனைத்தையும் சேர்த்துப் பார்த்தால் 1951-ல் 292 மில்லியன் எண்ணிக்கை இருந்தது. 1951-ல், உலகம் முழுவதும் இருந்த கால்நடை எண்ணிக்கையில் ஐந்தில் ஒரு பங்கு இந்தியாவில் இருந்தது; மொத்த எருமை எண்ணிக்கையில் இரண்டில் ஒரு பங்கு இந்தியாவில் இருந்தது. அதிகமாக எருமை வளர்க்கும் நாடுகளில் இந்தியா ஒரு முக்கிய நாடாக தொடர்ந்து இருந்து வருகிறது.

### நில உடமை

நில உடமையில் நாட்டில் பல முறைகள் பழக்கத்தில் இருந்தன. நில உரிமையாளர்களுக்கு இருக்கும் உரிமைகள் எவை, பொறுப்புகள் யாவை என்பவற்றை நிர்ணயிக்கும் முறையை நில உடமை முறை என்றழைக்கிறோம். விடுதலை அடைந்தபோது, நாட்டில் மூன்று வித நில உடமை முறைகள் நிலவின. அவை யாவன: (1) ரயத்வாரி முறை: இந்த முறையின்கீழ் நிலம் படைத்த குடியானவர்கள் நேரிடையாக அரசுக்கு நிலவரி செலுத்தி

வந்தார்கள். (2) மஹல்வாரி முறை அல்லது கூட்டுக்கிராம முறை : இந்த முறையில், நிலத்தின் உரிமை கிராமத்தில் எல்லோருக்கும் பொதுவாக இருந்தது. ஒவ்வொரு குடியானவரும் நில வரியைப் பொதுக் குழுவுக்கு செலுத்த பொதுக் குழு அரசுக்குச் செலுத்தி வந்தது. (3) ஜமீன்தாரி முறை : ஜமீன்தார் என்றழைக்கப்படும் ஒரு தனி நபருக்கு எல்லா நிலமும் சொந்தமாக இருந்தது. குறிப்பிட்ட நிலவரியை அவர் அரசுக்குச் செலுத்துவார்.

விடுதலையடையும் தருவாயில் நாட்டில் நிலவிய நில உடைமை முறைகளில் பல குறைபாடுகள் இருந்தன. பெருமளவு நிலம் ஒரு சில நபர்கள் வசம் இருந்தது. இவர்கள் சாகுபடியில் ஊக்கத்துடன் ஈடுபடவில்லை. நிலத்தில் அன்றாடம் உழலும் உழவனுக்குக் கிடைக்கும் கூலி மிகக் குறைவாக இருந்தது. குத்தகைதாரர்களுக்கும் விளைச்சலில் சிறிதளவு பங்கே கிடைத்தது. நாடு விடுதலையடைந்ததும் அரசு மேற்கொண்ட முக்கியப் பணிகளுள் நிலச் சீர்த்திருத்தச் சட்டங்கள் பலவற்றை செயல்படுத்தியதும் ஒன்றாகும். நிலச் சீர்த்திருத்தச் சட்டங்கள் பல நாட்டில் நிறைவேற்றப்பட்டன. ஒரு தனி நபர் அல்லது ஒரு கூட்டுக் குடும்பம் வைத்துக்கொள்ளக்கூடிய நில அளவுக்கு வரம்பு விதிக்கப்பட்டது. நில உரிமையாளர்களுடைய சுரண்டலிலிருந்து குத்தகை தாரர்களைக் காப்பாற்றும் நோக்கத்துடன் குத்தகைதாரர்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. கிராமப் புறங்களில் நலிந்த நிலையில் இருக்கும் விவசாயத் தொழிலாளர்களுடைய நலனைப் பேண விவசாயக் கூலிகள் நிர்ணயம் செய்யப்பட்டன.

## ஆலைத் தொழில்

விடுதலை அடைந்தபோது நாட்டில் பேரளவு ஆலைத் தொழில்கள் இல்லை என்றே கூறும் அளவிற்குக் குறைவாக இருந்தன. நிறைந்த சாதனங்கள், பெருத்த மக்கள் தொகை இவற்றோடு தொடர்புபடுத்திப் பார்க்கும்போது தொழில் துறை பின்தங்கிய நிலையில்தான் நாடு இருந்தது. பருத்தி ஆலைகள், சணல் ஆலைகள், நிலக்கரிச் சுரங்கங்கள், இரும்பு, எஃகு ஆலைகள், தேயிலை, சர்க்கரை இவைதான் அன்று முக்கியத் தொழில்களாக இருந்தன. குடிசைத் தொழில்களும் சிறு தொழில்களும் அதிக எண்ணிக்கையில் இருந்தன. இவற்றுள் கைத்தறி மிகவும் முக்கியமான ஒன்றாக இருந்து வருகிறது.

தொழில் உற்பத்தியில் பெரும் பங்கு நுகர்வுப் பொருள்களாகவே இருந்தன. நாட்டில் உற்பத்தியான முக்கிய நுகர்வுப்

பொருள்கள் : பருத்தித் துணி, சணல் துணி, காகிதம், சிமெண்ட், சர்க்கரை. நாட்டில் மூலதனப் பண்டங்களின் உற்பத்தி (capital goods) இல்லை என்றே கூறலாம். மின்சாரக் கருவிகள், இயந்திரங்கள், மோட்டார் வாகனங்கள், டிராக்டர்கள் இவை உள் நாட்டில் உற்பத்தியாகவில்லை. இவற்றின் உற்பத்தி அப்பொழுதுதான் தலைகாட்ட ஆரம்பித்தது. இரசாயனங்கள் சொற்ப அளவில்தான் உற்பத்தியாயிற்று.

## முதலீடும் தொழில் முயற்சியும்

தொழில்துறையிலும் வணிகத் துறையிலும் தனித்தன்மை வாய்ந்த ஒரு முறை அன்று நாட்டில் வழக்கத்தில் இருந்தது. 'நிருவாகப் பதவி முறை' (Managing Agency System) என்ற பெயரில் அம்முறை அழைக்கப்பட்டு வந்தது. தொழில் துறையிலோ அல்லது வணிகத்துறையிலோ ஒரு நிறுவனம் ஈடுபட்டிருப்பதாக வைத்துக்கொள்வோம். அந் நிறுவனத்தின் அன்றாட அலுவல்களைத் தானே நிர்வாகம் செய்யாமல் நிர்வாகப் பொறுப்பை மற்றொரு நிறுவனத்துக்கு ஒப்படைத்துவிட்டால் நிர்வாகப் பொறுப்பை மேற்கொள்ளும் நிறுவனத்திற்கு 'நிர்வாகப் பதவி' (managing agent) என்று பெயர். நிர்வாகத்தை நடத்தும் பணிக்காக நிர்வாகப் பதவிக்கு போதிய அளவுக்கு ஊதியம் அளிக்கப்பெறும்; ஈட்டும் இலாபத்தில் பங்கும் உண்டு. அன்றிருந்த நிர்வாகப் பதவிகள் பெரும்பாலும் பிரிட்டிஷ் கம்பெனிகளாகவே இருந்தன. நிருவாகப் பதவிகள் பல முறையற்ற செயல்களில் ஈடுபட்டு வந்தன. தாங்கள் பொறுப்பேற்றிருக்கும் கம்பெனிகளை சரியான முறையில் நிருவாகம் செய்வதற்குப் பதிலாக அவற்றை திருவாகப் பதவிகள் சுரண்ட ஆரம்பித்தன. நிருவாகப் பதவி முறை நாட்டில் நடைமுறையில் இருந்ததால், தொழில் வளர்ச்சியும், வணிக வளர்ச்சியும் வெகுவாகப் பாதிக்கப்பட்டன. நாடு விடுதலையடைந்ததும், நிருவாகப் பதவி முறையில் காணக்கிடந்த முறைகேடுகளைக் களைந்தெரியும் நோக்கத்துடன் பல சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

அக்காலத்தில் தொழிலில் முதலீடு செய்வது குறைவாகத் தானிருந்தது. ஆலைத் தொழில்களுக்குத் தேவைப்படும் நீண்ட காலக் கடன்களை வழங்க நிறுவனங்கள் ஏதுமில்லை. ஆனால், இன்று தொழில் முதலீடு உயர்ந்த அளவில் இருப்பதைக் காண்கிறோம். தொழிலுக்கு நிதி உதவி அளிப்பதற்காக என்று தனி நிறுவனங்கள் பல இன்று தோன்றியுள்ளன. நாட்டளவில் 'இந்தியாவின் தொழில் நிதி நிறுவனம்' (Industrial Finance Corporation of India), இந்தியாவின் தொழில் கடன் முதலீட்டு

நிறுவனம் (Industrial Credit and Investment Corporation of India), தேசிய தொழில் வளர்ச்சி நிறுவனம் (National Industrial Development Corporation) போன்ற பல அமைப்புகள் இயங்கி வருகின்றன. இதே போன்று மாநில அளவிலும் பல கழகங்களும் நிறுவனங்களும் செயல்பட்டு வருகின்றன. தொழிலைத் தொடங்க, அதனைத் தொடர்ந்து நடத்த நீண்ட காலக் கடன், குறைந்த காலக் கடன் என்று பல காலக் கெடுவில் நிதி உதவி தேவைப்படுகிறது. இவ்வாறு தேவைப்படும் கடன்களை மேற்கூறிய நிறுவனங்களும் வணிக வங்கிகளும் இன்று அளித்துவருகின்றன.

## போக்குவரத்து வசதி

நாட்டின் பரப்பளவைக் கருத்தில் கொண்டு நோக்கினால் அக்காலத்தில் போக்குவரத்து வசதி போதிய அளவிற்கு இல்லை என்று கூற வேண்டும். 100 சதுர மைல் பரப்பளவிற்கு சராசரி மூன்று மைல் நீள இருப்புப்பாதைதான் இருந்தது. சாலைகள் பெரும்பாலும் மண் சாலைகளாகவே இருந்தன. விடுதலை அடைந்தபோது நாட்டில் 95,000 மைல் நீளத்திற்குத்தான் கப்பிச் சாலைகள் இருந்தன. கப்பல் போக்குவரத்து வளர்ச்சி அடையவில்லை. இந்தியாவின் மொத்த அயல் நாட்டு வாணிபத்தில் 2 சதவிகித சரக்குகளைத்தான் இந்தியாவிற்குச் சொந்தமான கப்பல்கள் சுமந்து சென்றன. ஆனால், இன்றைய நிலையில் அயல்நாட்டு வாணிபத்தில் 50 சதவிகிதத்திற்கும் மேல் இந்தியக் கப்பல்களால் எடுத்துச் செல்லப்படுகின்றது. ஆகாயப் போக்குவரத்தும் அக்காலத்தில் மிகக் குறைந்த அளவில்தான் நடந்துவந்தது.

## அயல்நாட்டு வாணிபம்

நாடு விடுதலை அடைந்த நேரத்தில் ஏற்றுமதிப் பண்டங்கள் பெரும்பான்மையும் கச்சாப் பொருள்களாகவும் இடைநிலைப் பண்டங்களாகவும் இருந்தன. மொத்த ஏற்றுமதியில் இவ்விரு வகைப் பண்டங்களும் 75 சதவிகித அளவில் இருந்தன. செய்வினை முடிந்த பண்டங்கள் (Finished Goods) சிறிதளவுக்கே ஏற்றுமதியாயின. இந்தியாவின் மொத்த ஏற்றுமதியின் மதிப்பு 1948-49ல் ரூ. 482.5 கோடியாகும். இறக்குமதிப் பண்டங்களோ பெரும்பான்மையும் செய்வினை முடிந்த பண்டங்களாகவே இருந்தன. இறக்குமதியான பண்டங்களில் முக்கியமானவை: இயந்திரங்கள், தளவாடங்கள், உலோகங்கள், போக்குவரத்துச் சாதனங்கள், எரி எண்ணெய், இரசாயனங்கள் போன்ற மூலதனப் பண்டங்கள், மற்றும் மின்சாரக் கருவிகள், மருந்து வகைகள், காகிதம், உணவுத்

தானியங்கள் போன்ற நுகர்வுப் பண்டங்கள். இந்தியாவின் மொத்த இறக்குமதியின் மதிப்பு 1948-49ல் ரூ. 766.3 கோடியாக இருந்தது.

1948, 1951 இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் இருந்து இந்தியாவின் ஏற்றுமதி, இறக்குமதி வாணிபச் செலுத்து நிலை ஆகியவற்றை (Balance of Trade) பட்டியல்2—2ல் காணலாம்.

## பட்டியல் 2—2

### இந்தியாவின் அயல்நாட்டு வாணிபம்
### (1948 - 49 : 1950 - 51)

(கோடி ரூபாயில்)

| ஆண்டு | மொத்த இறக்குமதி | மொத்த ஏற்றுமதி | வாணிபச் செலுத்து நிலை |
|---|---|---|---|
| 1948 - 49 | 766.3 | 482.5 | 283.8 |
| 1949 - 50 | 603.9 | 514.0 | 89.9 |
| 1950 - 51 | 650.3 | 646.8 | 3.5 |

இந்தியாவின் அயல்நாட்டு வாணிபத்தை நாட்டுப் பிரிவினை பெருமளவில் பாதித்தது. பிரிவினைக்கு முன்பு கச்சா சணலைப் பொறுத்த அளவில் இந்தியா உலகச் சந்தையில் முற்றுரிமை பெற்றிருந்தது. பிரிவினையால் இந்தியா கச்சா சணலை இறக்குமதி செய்யும் நிலைக்கு உள்ளாகியது. சணல் இறக்குமதிக்குப் பாகிஸ்தானை எதிர்பார்க்க வேண்டியிருந்தது. கச்சாப் பருத்தியிலும் இதே நிலைதான். பிரிவினைக்கு முன் இந்தியா ஆண்டொன்றுக்கு 3 மில்லியன் பேல் கச்சாப் பருத்தியை ஏற்றுமதி செய்துவந்தது. பிரிவினைக்குப் பிறகு ஆண்டொன்றுக்கு 1 மில்லியன் கச்சாப் பருத்தியை இறக்குமதி செய்ய வேண்டியிருந்தது.

இந்திய அயல்நாட்டு வாணிபத்தில் பெரும் பங்கு இங்கிலாந்துடன் நடந்து வந்தது. ஏற்றுமதி, இறக்குமதி இரண்டையும் சேர்த்துப் பார்த்தால் ஏறக்குறைய இங்கிலாந்தின் பங்கு நான்கில் ஒன்றாக இருந்தது. அடுத்த இடத்தை ஐக்கிய அமெரிக்கா வகித்தது. இந்திய ஏற்றுமதியில் 15 சதவிகிதம் அமெரிக்காவுக்குச் சென்றது. மொத்த இறக்குமதியில் 17 சதவிகிதம் அமெரிக்காவிலிருந்து வந்தது. அன்றைய நிலையில், இவ்வாறு உலகில் தொழில் துறையில் நல்ல முன்னேற்றமடைந்திருந்த ஒரு சில நாடுகளே இந்தியாவின் அயல் நாட்டு வாணிபத்தை ஆக்கிரமித்துக்

கொண்டிருந்தன. ஆனால், விடுதலைக்குப் பிறகு குறிப்பாகத் திட்டகாலத்தில், இந்தியாவின் அயல்நாட்டு வாணிபத்தில் நல்ல மாற்றங்கள் இருந்தன. இன்று இந்தியா வாணிபத்தில் ஒரு சில நாடுகளையே நம்பி இருக்கும் நிலையில் இல்லை. வளர்ச்சிக் கட்டத்தில் பல நிலைகளில் இருக்கும் பல்வேறு நாடுகளுடன் அது வாணிபத் தொடர்பு கொண்டிருக்கிறது.

### நாட்டு வருமானம்

விடுதலைக்கு முன்னர் நாட்டு வருமானத்தை அரசு கணக்கிடும்முறை நடைமுறைக்கு வரவில்லை. நாடு விடுதலை அடைந்த பிறகு அரசு 'நாட்டு வருமான மதிப்பீட்டுக் குழு' ஒன்றை 1949-ல் அமைத்தது. ஆதாரபூர்வமான நாட்டு வருமான விவரங்கள் முதன் முதலாக 1948 - 49ஆம் ஆண்டுக்குக் கிடைத்தது. அன்றாட விலையிலான நாட்டு வருமானம் அந்த ஆண்டில் ரூ. 8650 கோடியாகும். தலா வருமானம் ரூ. 247 நாட்டு வருமானத்தில் ஏறக் குறைய 50 சதவிகிதம் விவசாயத் துறையிலிருந்து கிடைத்தது. இதிலிருந்து, விவசாயம்தான் அன்று முக்கியத் தொழிலாக இருந்தது என்பதை அறிகிறோம்.

#### பட்டியல் 2—3

அன்றாட விலையில் 1948-49ஆம் ஆண்டிற்கான நாட்டு வருமானம்

| துறை | வருமானம் (கோடி ரூபாயில்) | நாட்டு வருமானத்தில் சதவிகிதம் |
|---|---|---|
| 1. விவசாயம் | 4270 | 49.1 |
| 2. சுரங்கங்கள், தொழில் உற்பத்தி, குடிசைத் தொழில்கள் | 1480 | 17.1 |
| 3. வாணிகம், போக்குவரத்து, தபால்தந்தி | 1600 | 18.5 |
| 4. இதர பணிகள் | 1340 | 15.5 |

### உணவுப் பிரச்சினைகள்

விடுதலை கிடைத்த நேரத்தில் பெருமளவிற்கு உணவுப் பற்றாக்குறை இருந்தது. மக்கள்தொகை பெருக்கத்திற்கேற்ப உணவு உற்பத்தி உயரவில்லை. உணவு தானியங்களைப் பொறுத்தமட்டிலும் ஆண்டொன்றுக்குச் சராசரி 3 மில்லியன் டன் அளவிற்குப் பற்றாக்குறை இருந்தது. நகரங்களிலும் கிராமங்களிலும்

பரவலாக உணவு வினியோகத்தில் அரசு கட்டுப்பாடு விதித்து ரேஷன் முறையை அமலுக்குக் கொண்டு வந்தது. ஒவ்வோர் ஆண்டும் ஏறக்குறைய ரூ.250 கோடி மதிப்புள்ள உணவு தானியங்களை இறக்குமதி செய்ய வேண்டியிருந்தது. கடந்த காலத்தில் நாட்டில் பஞ்சம் அடிக்கடி ஏற்பட்டிருக்கிறது. உணவுப் பஞ்சத்தைத் தொடர்ந்து மாட்டுத் தீவனத்துக்கும் பஞ்சம் ஏற்படும். இதனால் கால்நடைகளுக்குப் பெருத்த சேதம் ஏற்பட்டு அதனால் வேளாண்மையும் பாதிக்கப்படும். 1943ஆம் ஆண்டில் வங்காளத்தில் ஏற்பட்ட பஞ்சம்தான் கடைசியாக இந்தியா கண்ட பஞ்சம். மொத்தத்தில், நாடு விடுதலை அடைந்த நேரத்தில் உணவுப் பற்றாக்குறை ஒரு பெரிய பிரச்சினையாக இருந்தது. உணவைப் பொறுத்த அளவில் நாடு தன்னிறைவு அடையவேண்டும் என்பதைக் குறிக்கோளாக மேற்கொண்டு அதற்கான ஆக்கப் பணிகளைப் புதிய தேசிய அரசு மேற்கொண்டது.

## விலை நிலவரம்

விடுதலை அடைந்த நேரத்தில் நாட்டில் விலையேற்றம் இருந்தது. 1960-க்குப்பிறகு நாட்டில் பெருமளவிற்கு விலையேற்றம் இருந்தது. அண்மை ஆண்டுகளில் சமாளிக்க முடியாத அளவிற்கு விலைகளில் ஏற்றம் இருந்து வருகிறது. இவற்றோடு ஒப்பிட்டுப் பார்த்தால் 1947ல் இருந்த விலையேற்றத்தை ஒரு பிரச்சினையாகக் கருத வேண்டியதில்லை என்பது உண்மையே. இருந்தாலும், இரண்டாம் உலகப் போர் முடிந்ததும் நாட்டில் விலைகள் ஏறுமுகத்தில்தான் இருந்தன என்பதைக் குறிப்பிட்டுக் கூற வேண்டியது அவசியமாகிறது. செப்டம்பர் 1945-க்கும் ஆகஸ்டு 1947-க்கும் இடையில் மொத்த விலையில் (wholesale prices) 20 சதவிகித உயர்வு இருந்தது. அப்போது நிலவிய சூழ்நிலையில் இது ஒரு பெரிய ஏற்றம்தான்.

மேலே கண்ட அனைத்தையும் தொகுத்துக் கூறினால், நாடு விடுதலையடைந்தபோது ஒரு காலனி நாட்டில் இருக்கக்கூடிய இயல்புகள் அனைத்தும் இந்தியாவில் மலிந்து கிடந்தன எனலாம். மக்களுடைய வாழ்க்கைக்கு வேளாண்மையே முக்கிய சாதனமாக இருந்தது. ஆனால், விவசாய மொத்த உற்பத்தியும், சராசரி ஒரு ஹெக்டேருக்குக் கிடைக்கக்கூடிய கண்டு முதலும் குறைந்த அளவில் தானிருந்தன. தொழில்துறையைப் பொறுத்த அளவில் நிலைமை திருப்திகரமாக இல்லை. நாட்டில் தொன்றுதொட்டு நெடுங்காலமாக நல்ல முறையில் இயங்கிவந்த குடிசைத் தொழில்கள் நலியத் தொடங்கின. ஆனால், நவீன முறையில் அமைந்த

பேரளவுத் தொழில்கள் நன்றாக வளர்ச்சியடையவில்லை. இருந்த சில ஆலைத் தொழில்களும் நுகர்வுப் பண்டங்களை உற்பத்தி செய்பவைகளாக இருந்தன. தேவையான இயந்திரங்களையும், மூலதனப் பண்டங்களையும் இறக்குமதி செய்ய இங்கிலாந்தை எதிர்பார்க்கும் நிலையில் நாடு இருந்தது. எதிர்காலத் தொழில் வளர்ச்சிக்கான அடித்தளம் சரியாக அமையவில்லை. இந்தியா கச்சாப் பொருள்களை ஏற்றுமதி செய்து செய்வினை முடிந்த பண்டங்களை இறக்குமதி செய்துகொண்டிருந்தது. உணவைப் பொறுத்தளவில் நாடு தன்னிறைவு அடையவில்லை. அடிமை நாடாக இருந்த காரணத்தால் நாட்டின் பொருளாதார நிலை வெகுவாகப் பாதிக்கப்பட்டிருந்தது. இத்துடன்கூட இரண்டாம் உலகப் போர், நாட்டுப் பிரிவினை இவ்விரு நிகழ்ச்சிகளும் நாட்டின் பொருளாதாரத்தை மேலும் கேடுறச் செய்தன. நாடு அதிக பிரச்சினைகளையும் பல புதிய பிரச்சினைகளையும் சமாளிக்க வேண்டிய நிலையில் இருந்தது.

# 3. இந்தியாவில் திட்டமிடுதல்

பொருளாதாரத் திட்டம் தீட்டுவதற்கான சீரிய முயற்சி நாட்டு விடுதலையைத் தொடர்ந்து உடனடியாக மேற்கொள்ளப்பட்டது. திட்டமிட்டுச் செயலாற்றுவதில் இந்தியாவில் இதுவே முதல் முயற்சியாகும். இந்திய அரசு 1950ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் திட்டக் குழு ஒன்றைப் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் தலைமையில் நியமித்தது. நாட்டில் கிடைக்கும் சாதனங்களை முறையாகப் பயன்படுத்தி நல்ல பலன்களை ஈட்டும்வகையில் ஒரு பொருளாதாரத் திட்டத்தைத் தீட்டும் பணியை இக்குழு மேற்கொண்டது. திட்டக்குழு இந்தியாவில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை வரைந்து கொடுத்தது. இத்திட்டம் 1951-லிருந்து 1956 வரை நிறைவேற்றப்பட்டது. இதைத் தொடர்ந்து பல ஐந்தாண்டுத் திட்டங்கள் நாட்டில் செயல்படுத்தப்பட்டன. இதுநாள் வரை ஐந்தாண்டு காலத் திட்டங்கள் ஐந்தும், ஓராண்டு காலத் திட்டங்கள் மூன்றும் செயல்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு திட்டத்தின் அளவு என்ன? திட்டங்களின் குறிக்கோள்களும் இலக்குகளும் யாவை? குறிக்கோள்களையும் இலக்குகளையும் நடைமுறையில் அடைய முடிந்ததா? திட்டங்களைச் செயல்படுத்தியபோது எழுந்த இடையூறுகளும் சிக்கல்களும் யாவை? இத்தகைய வினாக்களுக்குப் பின்வரும் பகுதியில் விடை காண முயல்வோம்.

## முதல் ஐந்தாண்டுத் திட்டம்

1951 ஏப்ரல் முதல் 1956 மார்ச்சு முடிய முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் காலமாகும். விடுதலையடைந்த நேரத்தில் இந்தியா சில முக்கியப் பிரச்சினைகளைச் சமாளிக்கவேண்டியிருந்தது என்று அத்தியாயம் 2-ல் பார்த்தோம். இரண்டாவது உலகப் போர் இந்தியப் பொருளாதார நிலையைக் கேடுறச் செய்திருந்தது. நாட்டுப் பிரிவினையால் நாட்டில் பல புதிய பொருளாதாரப் பிரச்சினைகள் கிளைத்திருந்தன. அகதிகளுக்கு மறுவாழ்வு அளித்து அவர்களைக் குடியமர்த்தும் வேலை ஒரு பெரும் பணியாக இருந்தது. உணவிலும் பிற பண்டங்களிலும் பற்றாக்குறையும் தட்டுப்பாடும் எழுவது அன்றாட வழக்கமாக இருந்தது. இம்

பின்னணியில்தான் முதல் ஐந்தாண்டுத் திட்டம் வரையப்பட்டது. எனவே, நாட்டின் பொருளாதார நிலைமையைச் சீர்திருத்தி, சமப்படுத்தி, பற்றாக்குறைகளை அகற்றி, பொருளாதாரப் போக்கை நல்ல பாதையில் திசை திருப்பும் பணிக்கு இத்திட்டம் முதலிடம் அளித்தது. திட்டத்தை வரைவதற்குத் திட்டக் குழுவிற்குக் கிடைத்த கால அவகாசம் மிகக் குறைவு. எனவே, திட்டமும் அவசரமாகத் தயாரிக்கப்பட்டது. முதல் திட்டம் ஒரு சிறிய அளவில்தான் வகுக்கப்பட்டது. இத்திட்டத்தின் மொத்த முதலீட்டுத் தொகை குறைந்த அளவில்தான் இருந்தது; திட்டத்தின் இலக்குகளும் சாதாரண அளவில்தான் இருந்தன.

## திட்டத்தின் குறிக்கோள்கள்

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கியக் குறிக்கோள்கள் பின்வருமாறு: (1) ஐந்தாண்டுக் காலத்தில் நாட்டு வருமானத்தில் 11 சதவிகித வளர்ச்சி இருக்க வேண்டும்; (2) இரண்டாம் உலகப் போர், நாட்டுப் பிரிவினை இவ்விரு நிகழ்ச்சிகளால் எழுந்த சிக்கல் களைக் களைந்து இந்தியப் பொருளாதாரத்தைச் சீரமைக்க வேண்டும்; (3) உணவு தானியங்களிலும், கச்சாப் பொருள்களி லும் (குறிப்பாகப் பருத்தி, சணல்) எழுந்துள்ள பற்றாக்குறையை நீக்க வேண்டும்; (4) விலையேற்றத்தை மட்டுப்படுத்த வேண்டும்; (5) இந்திய அரசியலமைப்புத் திட்டத்தின் முகாந்திரத்தில் கூறப்பட்டுள்ள நெறிமுறைக் கோட்பாடுகளுக்கு (Directive Principles) இணைந்த வகையில் சமூக நீதியை வளர்ப்பதற்கு நடவடிக்கைகளைத் தொடங்கவேண்டும்; (6) எதிர்காலத்தில் மேம்பாட்டுத் திட்டங்களை நல்ல முறையில் செயல்படுத்துவதற்குத் தேவையான நிருவாக அமைப்பை உருவாக்க வேண்டும்; (7) புதிய சாலைகளை அமைத்து, இரயில்வேக்களைப் புதுப்பித்து நாட்டின் போக்குவரத்தை வலுப்படுத்தவேண்டும்.

## முதலீடு

இந்தியா 'கலப்புப் பொருளாதார அமைப்பு'(Mixed Economy) வகையைச் சேர்ந்தது. அரசினர் துறை, தனியார் துறை இரண்டும் ஒரு நாட்டில் இயங்கி வந்தால் அம்முறை 'கலப்புப் பொருளாதார அமைப்பு' என்றழைக்கப்பெறுகிறது. ருஷ்யா போன்ற சோஷியலிச நாடுகளில் இதற்கு நேர்மாறான முறை வழக்கத்திலிருக்கிறது. இந் நாடுகளில் தனியார் துறைக்கு வாய்ப்பே இல்லை. எல்லாப் பொருளாதார நடவடிக்கைகளையும் அரசே நேரிடையாக மேற்கொண்டு, கட்டுப்படுத்தி, நிருவகித்து வருகிறது. இந்தியா கலப்புப் பொருளாதார அமைப்பு முறையைப்

பின்பற்றி வருவதால், அரசு எவ்வளவு முதலீடு செய்ய இருக்கிறது, தனியார்துறையில் எந்த அளவுக்கு முதலீடு எதிர்பார்க்கப் படுகிறது என்னும் விவரங்கள் ஒவ்வோர் ஐந்தாண்டு திட்டத்திலும் குறிப்பிடப்படுகின்றன.

முதல் திட்டகாலத்தில் அரசினர் துறையில் முதலீடு செய்யப் பெற்ற மொத்தத் தொகை ரூ.1960 கோடி. தனியார் துறை முதலீடு ரூ. 1800 கோடி. இரு துறைகளையும் சேர்த்து மொத்த முதலீடு ரூ.3760 கோடி. வேளாண்மை, நீர்ப்பாசனம் இவற்றின் வளர்ச்சிக்கு முதல் திட்டம் முதலிடம் அளித்தது. போக்குவரத்து, தபால் தந்தி இவ்விரண்டிற்கும் அடுத்த முக்கியத்துவம் அளிக்கப் பட்டது. அரசுத் துறையின் மொத்த முதலீடான ரூ.1960 கோடியில் 15 சதவிகிதம் வேளாண்மை வளர்ச்சி, கிராம நலம் இவற்றிற்கும், 16 சதவிகிதம் நீர்ப்பாசனத்திற்கும் (பேரளவு நீர்ப் பாசனத் திட்டங்கள், மத்திய அளவு நீர்ப்பாசனத் திட்டங்கள்), 13 சதவிகிதம் மின்சார வளர்ச்சிக்கும், 6 சதவிகிதம் தொழில் வளத்துக்கும், 27 சதவிகிதம் போக்குவரத்து, தபால்தந்தி இவற்றிற்கும், எஞ்சிய 23 சதவிகிதம் சமூக நலனிற்கும் ஒதுக்கப்பெற்றன.

## முதல் திட்டத்தின் திறனாய்வு

பொதுவாக நோக்கினால் முதல் ஐந்தாண்டுத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறியது எனக் கூறலாம். சில குறிப்பிட்ட இனங்களில் இலக்குகளைவிட சாதனையின் அளவுகள் அதிகமாகவே இருந்தன. நாட்டு வருமானத்தில் இருக்கும் வளர்ச்சியை அடிப்படையாக வைத்துத்தான் பொதுவாக நாட்டின் பொருளாதார வளர்ச்சியை எடைபோடுகிறோம். திட்ட காலத்தில் நாட்டு வருமானத்தில் 11 சதவிகித வளர்ச்சி இருக்க வேண்டும் என்று முதல் ஐந்தாண்டு திட்டம் எதிர்பார்த்தது. ஆனால், நாட்டு வருமானத்தில் 18 சதவிகித வளர்ச்சி இருந்தது. தலா வருமானம் 11 சதவிகித அளவில் வளர்ச்சியடைந்தது. உணவு தானியங்களின் உற்பத்தியில் 20 சதவிகித உயர்வு இருந்தது. கச்சாப் பருத்தி உற்பத்தியில் 45 சதவிகிதம் உயர்வு இருந்தது. 16 மில்லியன் ஏக்கர் நிலம் புதிதாகப் பாசனத்தின்கீழ் கொண்டுவரப்பட்டது. தொழில் உற்பத்தியில் ஆண்டொன்றுக்கு சராசரி 8 சதவிகிதப் பெருக்கம் இருந்தது. வேளாண்மைத் துறையில் குறிப்பிட்டுக் கூறும் வகையில் வெற்றி கிடைத்தது. இதற்கு முன் பண்டங்கள் கிடைப்பதில் இருந்த பற்றாக்குறை நீக்கப்பட்டது. இவையெல்லா வற்றையும்விட நாட்டின் விலை மட்டத்தில் ஏற்றமே இல்லை.

கூறப்போனால், இத்திட்ட காலத்தில் விலை மட்டம் இறங்குமுக மாகவே இருந்தது.

## இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம்

### அணுகு முறை

1956 ஏப்ரல் மாதம் முதல் 1961 மார்ச்சு முடிய இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் காலமாகும். முதல் திட்டம் மிகவும் வெற்றிகரமாக அமைந்துவிட்டதால், திட்டக் குழுவும் மத்திய அரசும் திட்டப் பணியில் சற்று அளவுக்குமீறிய தைரியத்துடன் செயல்படத் தொடங்கின. இரண்டாம் திட்டத்திற்குப் புதிய அணுகு முறையைக் கையாண்டன. கனரகத் தொழில்கள், ஆதாரத் தொழில்கள் இவற்றின் வளர்ச்சிக்கு முதன்மையளித்து வேளாண்மை வளர்ச்சிக்கான முக்கியத்துவத்தைச் சற்று குறைக்கலாம் என்று அவை கருதின. எனவே, எஃகு, இயந்திரக் கருவிகள், சிமெண்டு, இரசாயனப் பொருள்கள் போன்ற கனரகத் தொழில்களுக்கு இரண்டாம் திட்டத்தில் முக்கியத்துவம் அளிக்கப் பட்டது.

### குறிக்கோள்கள்

இரண்டாம் திட்டத்தின் முக்கியக் குறிக்கோள்கள் பின்வருமாறு: 1. நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரம் உயரும் வகையில் நாட்டு வருமானம் விரைவாக ஏற்றமடைய வேண்டும். திட்டத்தின் ஐந்தாண்டுக் காலத்தில் நாட்டு வருமானம் 25 சதவிகித அளவில் உயர வேண்டும் என்று திட்டம் எதிர்பார்த்தது.

2. விரைவான தொழில் வளர்ச்சி. குறிப்பாக கனரகத் தொழில்களும் ஆதாரத் தொழில்களும் நன்றாக வளர்ச்சியடைய வேண்டும். [கனரகத் தொழில்களும் ஆதாரத் தொழில்களும் 'மூலதனப் பண்டத் தொழில்கள்' (capital goods industries) என்றழைக்கப் பெறுகின்றன. நுகர்வுப் பண்டங்கள் நேரிடையான நுகர்வுக்குப் பயன்பெறுகின்றன. ஆனால், மூலதனப் பண்டங்கள் நேரிடையான நுகர்வுக்குப் பயன் பெறாமல் இதரப் பண்டங்களை உற்பத்தி செய்ய உதவியாக இருக்கின்றன.]

3. வேலை வாய்ப்பு வசதிகளைப் பெருக்க வேண்டும்.

4. நாட்டு வருமானம் சமமான முறையில் பகிர்ந்துகொள்ளப் படுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். செல்வத்திலும் வருமானத்திலும் மக்களிடையே காணப்பெறும் ஏற்றத் தாழ்வுகள் குறைக்கப்பெற வேண்டும்.

## முதலீடு

இரண்டாம் திட்டம் தீவிர முயற்சியை மேற்கொண்டது. இதனுடைய முதலீட்டுத் தொகை முதல் திட்டத்தின் அளவைப் போல இரண்டு பங்கு இருந்தது. இத்திட்டத்தின் மொத்த முதலீடு ரூ.7700 கோடி அளவில் இருந்தது. இதில் அரசுத் துறை முதலீடு ரூ. 4,600 கோடி, தனியார் துறை முதலீடு ரூ. 3,100 கோடி.

வேளாண்மை, நீர்ப்பாசனம் இவற்றிற்கு முதல் திட்டத்தின் மொத்த முதலீட்டில் 31 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருந்தது. இரண்டாம் திட்டத்தில் 20 சதவிகிதம்தான் ஒதுக்கப்பட்டது. ஆனால், தொழில்கள், கனிப் பொருள்கள் இவற்றிற்கு முதல் திட்டத்தில் 4 சதவிகித அளவில் இருந்த முதலீடு இரண்டாம் திட்டத்தில் 20 சதவிகிதமாக உயர்த்தப்பட்டது. போக்குவரத்து, தபால், தந்தி இவற்றிற்கு முதல் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட சதவிகித அளவே இரண்டாம் திட்டத்திலும் ஒதுக்கப்பட்டது.

## திட்டத்தின் செயல்திறன்

இரண்டாம் திட்டத்தை நிறைவேற்றியபோது பல சிக்கல்களும் இடர்ப்பாடுகளும் எழுந்தன. இரண்டாம் திட்ட காலத்தில் கிளைத்த இரு முக்கியப் பிரச்சினைகளை இங்குக் குறிப்பிட வேண்டும். முதல் பிரச்சினை விலைவாசியில் எழுந்த ஏற்றம். இத்திட்ட காலத்தில விலைகள் விரைவாக உயர்ந்தன. அந்நியச் செலாவணியில் எழுந்த இடர்ப்பாடு இரண்டாவது பிரச்சினை ஆகும்.

நாட்டு வருமானத்தில் எதிர்பார்த்த 25 சதவிகித வளர்ச்சிக்குப் பதிலாக 19 சதவிகித வளர்ச்சிதான் கிடைத்தது. தலா வருமானத்தில் 8 சதவிகித வளர்ச்சிதான் இருந்தது. இத்திட்ட காலத்தில் மக்கள்தொகையில் 10 சதவிகிதப் பெருக்கம் இருந்தது. தலா வருமான வளர்ச்சி மிகக் குறைந்த அளவில் இருந்ததற்கு இது முக்கிய காரணமாகும்.

வேளாண்மைத் துறையில் நல்ல முன்னேற்றம் இருந்தது. ஆனால், சில குறிப்பிட்ட இனங்களில் இலக்குகளை அடைய முடியவில்லை. 21 மில்லியன் ஹெக்டேர் நிலப்பரப்பைப் புதிதாகப் பாசனத்தின்கீழ் கொண்டுவர வேண்டும் என்பது திட்டத்தின் இலக்கு. ஆனால், சாதனை 16 மில்லியன் ஹெக்டேர்தான். இரசாயன உரங்களின் நுகர்வு மொத்தமாகத்தான் உயர்ந்தது. கரும்பு, தேயிலை இவை நீங்கலாக உணவுத் தானியங்கள், சணல்,

பருத்தி, எண்ணெய் வித்துகள் ஆகிய பிற பண்டங்களின் இலக்கு களைவிடச் சாதனை அளவு குறைவாகவே இருந்தது.

முதல் திட்ட காலத்தில் விலை மட்டம் நிலையாக இருந்தது. இதற்கு மாறாக இரண்டாம் திட்ட காலத்தில் விலை மட்டத்தில் தொடர்ந்து ஏற்றம் இருந்தது. இத்திட்ட காலத்தில் 20 சதவிகித விலையேற்றம் இருந்தது. மற்றொரு கவலையூட்டும் நடப்பு நாட்டின் மொத்த இறக்குமதியில் ஆண்டாண்டுக்குப் பெருகிவந்த ஏற்றம். ஆனால், ஏற்றுமதியோ எந்தவித மாற்றமும் இல்லாமல் நிலையாக இருந்தது. இதனால் நாட்டில் அந்நியச் செலாவணிப் பற்றாக்குறை எழுந்தது.

மொத்தத்தில் பார்த்தால் இரண்டாம் திட்டம் எதிர்பார்த்த அளவிற்குப் பலன் ஈட்டவில்லை என்றே கூறவேண்டும். இத் திட்டத்தைச் செயல்படுத்தியதன் வாயிலாக இந்தியாவில் திட்ட மிடும் முறையில் இருந்த சில அடிப்படையான குறைபாடுகளைக் காண முடிந்தது.

## மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டம்

*(1961 - 62 லிருந்து 1965 - 66 வரை)*

வேளாண்மை வளர்ச்சிக்குப் போதிய முக்கியத்துவம் அளிக்கப் பெறாவிட்டால் நாட்டின் பொதுவான பொருளாதார முன்னேற்றம் மிகவும் தடைபடும்; இது இரண்டாம் திட்டத்தைச் செயல்படுத்தி யதன் மூலம் கிடைத்த படிப்பினை. எனவே, இரண்டாம் திட்டத்தில் தொழில் வளர்ச்சிக்கு முதன்மை அளித்ததற்கு மாறாக வேளாண்மை, தொழில் இரண்டிற்கும் மூன்றாம் திட்டத்தில் ஒரு சீரான முறையில் சம பங்கு அளிக்கப்பட்டது.

### குறிக்கோள்கள்

மூன்றாம் திட்டத்தின் முக்கியக் குறிக்கோள்கள் பின்வருமாறு:

(1) நாட்டு வருமானத்தில் ஆண்டொன்றுக்குச் சராசரியாக 5 சதவிகித வளர்ச்சிக்கு மேல் இருக்க வேண்டும்.

(2) உணவு தானியங்களில் தன்னிறைவு அடைய வேண்டும்; நாட்டின் ஏற்றுமதி ஏற்றமுறும் வகையிலும், நாட்டின் தொழிற்சாலைகளுக்குத் தேவையான கச்சாப் பொருள்கள் கிடைப்பதில் தட்டுப்பாடு எழாத வகையிலும் வேளாண்மை உற்பத்தி பெருக்கமடைய வேண்டும்.

(3) நாட்டின் தொழில் முன்னேற்றத்திற்கு அடிப்படைத் தேவையான எஃகு, இரசாயனங்கள், மின் உற்பத்தி முதலிய வற்றில் நல்ல வளர்ச்சி இருக்க வேண்டும்.

(4) வேலை வாய்ப்பு வசதிகளைப் போதிய அளவிற்குப் பெருக்க வேண்டும்.

(5) மக்களிடையே வருமானத்திலும், செல்வ உடமையிலும் காணப்பெறும் ஏற்றத் தாழ்வுகள் குறைக்கப்படவேண்டும்.

## முதலீடு

இரண்டாம் திட்டத்தின் முதலீட்டைவிட மூன்றாம் திட்டத்தின் முதலீடு அதிக அளவில் இருந்தது. இத்திட்டத்தின் மொத்த முதலீடு ரூ. 11,600 கோடி. இதில் அரசுத் துறை முதலீடு ரூ. 7,500 கோடி; தனியார் துறை முதலீடு ரூ. 4,100 கோடி. அரசுத் துறையின் மொத்த முதலீடான ரூ. 7,500 கோடியில், வேளாண்மை, நீர்ப்பாசனம், மின் உற்பத்தி இவற்றிற்கு 36 சதவிகிதம் ஒதுக்கப்பட்டது. இவற்றிற்கு இரண்டாம் திட்ட ஒதுக்கீடு ·30 சதவிகிதமாகும். இரண்டாம் திட்டத்தில் போக்கு வரத்து, தபால்தந்தி இவற்றிற்கு இருந்த 28 சதவிகிதப் பங்கு மூன்றாம் திட்டத்தில் 20 சதவிகிதத்திற்குக் குறைக்கப்பட்டது. தொழில் துறைக்கு 23 சதவிகிதம் ஒதுக்கப்பட்டது. இதன் பங்கு இரண்டாம் திட்டத்திலும் ஏறக்குறைய இதே அளவில்தான் இருந்தது.

## திட்டத்தின் செயல்திறன்

மூன்றாம் திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த பலன்கள் கிடைக்க வில்லை என்றுதான் கூறவேண்டும். 1961 க்கும் 1966 க்கும் இடைப்பட்ட ஐந்தாண்டு காலத்தில் நாட்டு வருமானம் 30சதவிகித அளவிற்கு உயர வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், உண்மையில் கிடைத்த வளர்ச்சி ஆண்டொன்றுக்கு சராசரி 3 சதவிகிதத்திற்கும் குறைவாகவே இருந்தது. திட்டத்தின் கடைசி ஆண்டான 1965 - 66ல் நாட்டு வருமானம் 4 சதவிகித அளவில் வீழ்ச்சி அடைந்தது. இத்திட்ட காலத்தில் தலா வருமானம் 7 சதவிகித அளவில்தான் உயர்ந்தது.

இரண்டாம் திட்ட காலத்தின் முடிவில் நாட்டின் உணவு உற்பத்தி 82 மில்லியன் டன் அளவில் நின்றது. மூன்றாம் திட்ட காலத்தில் உணவு உற்பத்தியில் ஆண்டாண்டுக்குப் பெருத்த ஏற்ற இறக்கங்கள் இருந்தன. கடைசி ஆண்டான 1965 - 66ல்

உற்பத்தி மிகக் குறைந்த அளவான 72 மில்லியன் டன்னில் நின்றது. 1950-லிருந்து 1960 வரை வேளாண்மை உற்பத்தியில் ஆண்டொன்றுக்கு சராசரி 4 சதவிகித உயர்வு இருந்தது. ஆனால், மூன்றாம் திட்ட காலத்தில் சராசரி 2.5 சதவிகிதப் பெருக்கம்தான் இருந்தது.

தொழில் உற்பத்தியும் திருப்தியளிக்கும் வகையில் இல்லை. தொழில் உற்பத்தியில் ஆண்டொன்றுக்கு சராசரி 14 சதவிகிதப் பெருக்கம் இருக்க வேண்டுமென்பது மூன்றாம் திட்டத்தின் இலக்கு. ஆனால்; கிடைத்ததோ சராசரி 5.7 சதவிகித உயர்வுதான். எனவே, நாட்டுப் பொருளாதார அமைப்பின் முக்கியப் பிரிவுகளான வேளாண்மை, தொழில் இவற்றின் வளர்ச்சி எதிர்பார்த்ததைவிட மிகக் குறைவாகவே இருந்தது.

உற்பத்தியில் எதிர்பார்த்த பெருக்கம் கிடைக்கவில்லை என்பதோடு நாட்டில் பல பொருளாதாரச் சிக்கல்களும் எழுந்தன. அவற்றுள் இரண்டைக் குறிப்பிட்டுக் கூறவேண்டும். நாட்டில் விலைவாசிகள் கவலையூட்டும் அளவிற்கு உயரத் தொடங்கின. இரண்டாம் திட்ட காலத்திலேயே பொதுவான விலைமட்டம் ஏற்றங்கண்டது. ஆனால், மூன்றாம் திட்ட காலத்தில் அது மேலும் விரைவாக உயர்ந்தது. மூன்றாம் திட்டத்தை நிறைவேற்றும் பணிக்கு நாட்டில் இருந்த விலையேற்றம் பெருந்தடையாக இருந்தது. மொத்த விலைக் குறியீட்டு எண்கள் (Wholesale Price Index) 37 சதவிகித அளவில் உயர்ந்தன. உணவுப் பண்டங்களில் இருந்த விலையேற்றம் 40 சதவிகிதத்திற்கு மேல் இருந்தது. இரண்டாவதாக, நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் மேலும் பெருகியது. இரண்டாம் திட்டம் முடிவுறும் கட்டத்தில் வேலை யற்றோர் எண்ணிக்கை 7 மில்லியன் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை மூன்றாம் திட்ட முடிவில் 10 மில்லியனாக உயர்ந்தது.

மொத்தத்தில் பார்த்தால் மூன்றாம் திட்டம் செயல்பட்ட முறை நன்றாகவே இல்லை என்றுதான் கூற வேண்டும். திட்டம் வெற்றிகரமாக அமையாததற்குக் காரணமாக எதிர்பாராத வகை யில் எழுந்த சில நிகழ்ச்சிகளையும் இங்குக் குறிப்பிடவேண்டும். இத்திட்ட காலத்தில் நாடு இரண்டு போர்களை சமாளிக்க வேண்டி யிருந்தது. 1962ல் நடந்த சீன ஆக்கிரமிப்பினாலும் 1965ல் பாகிஸ்தானுடன் நடந்த போரினாலும் மூன்றாம் திட்டத்தைத் தங்கு தடையில்லாமல் செயல்படுத்த முடியவில்லை. போர்க் காலத்தில் தற்காப்பே நாட்டின் ஒரே குறியாக இருக்கிறது. போர்த்

தளவாடங்களின் உற்பத்திக்கு முதலிடம் அளிக்க வேண்டியிருக்கிறது. தற்காப்புச் செலவும் பெருக்கமடைகிறது. போர்க்காலத்தில் நாட்டின் பிற நடவடிக்கைகள்மீது அதிக கவனம் செலுத்தப்பட மாட்டாது என்பதோடு பொருளாதார வளர்ச்சிக்கான முதலீட்டுத் தொகையும் குறைந்துவிடும். மூன்றாம் திட்ட காலத்தில் இயற்கையும் கருணை காட்டத் தவறி விட்டது. மூன்றாம் திட்டத்தின் ஐந்தாண்டு காலத்தில் நான்கு ஆண்டுகளில் நாட்டின் ஏதாவது ஒரு பகுதியில் பருவ மழை தவறி வறட்சி ஏற்பட்டது. இதனால் வேளாண்மை பெரிதும் பாதிக்கப்பட்டது.

## ஆண்டுத் திட்டங்கள்

### (1966 - 67 லிருந்து 1968 - 69 வரை)

நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தை 1966ஆம் ஆண்டில் தொடங்க வேண்டியிருந்தது. ஆனால், சீனாவுடனும், பாகிஸ்தானுடனும் எழுந்த பகை, இதற்கு முன் நாடு காணாத வகையில் 1965 - 66ல் ஏற்பட்ட வறட்சி நிலை, கட்டுக்கடங்காமல் இருந்த விலையேற்றம் இவை மூன்றும் நான்காம் திட்டத்தை மறுபடியும் திருத்தி அமைக்க வேண்டிய சூழ்நிலையை உருவாக்கின. நான்காம் திட்டத்தைத் திருத்தியமைக்கச் சிறிது கால அவகாசம் தேவைப்பட்டது. எனவே, முழுமையான ஓர் ஐந்தாண்டுத் திட்டத்தை வரைந்து நிறைவேற்றுவதற்குப் பதிலாக, திட்ட முயற்சியைக் கைவிடாமல் ஆண்டுத் திட்டங்களை (Annual Plans) வரைந்து நிறைவேற்றலாம் என்னும் கருத்து வலுவடைந்தது. அந்த அடிப்படையில் தொடர்ந்து வந்த மூன்றாண்டு காலத்திற்கும் (1966 - 67, 1967 - 68, 1968 - 69) ஓராண்டு காலத்துக்கு ஏற்ப மூன்று திட்டங்கள் வரைந்து நிறைவேற்றப்பட்டன. இந்த மூன்றாண்டு காலத்தில் அரசுத் துறையில் மொத்தம் ரூ.6626 கோடி தொகை முதலீடு செய்யப்பட்டது. இதில் வெவ்வேறு பிரிவுகளுக்கான ஒதுக்கீடுகள் பின்வருமாறு: வேளாண்மை, சமுதாய வளர்ச்சி, கூட்டுறவு 14.6 சதவிகிதம்; நீர்ப்பாசனம் 7.1 சதவிகிதம்; மின் உற்பத்தி 18.3 சதவிகிதம்; தொழில் 24.7 சதவிகிதம்; போக்குவரத்து, தபால் தந்தி 18.4 சதவிகிதம்; சமூக நலப்பணிகள் 16.8 சதவிகிதம்.

1966 - 67ல் நாட்டின் பொருளாதார நிலை திருப்திகரமாக இல்லை. இந்த ஆண்டிலும் வறட்சிநிலை நீடித்தது. நாட்டின் மொத்த உணவு உற்பத்தி 76 மில்லியன் டன் அளவில்தான் இருந்தது. இதனால் 9 மில்லியன் டன் அளவு உணவு தானியங்களைப் பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியிருந்தது. தொழில் உற்பத்தி வளர்ச்சியின்றி மந்த நிலையில்

இருந்தது. ஆனால், 1967 - 68ல் நாடு பொருளாதாரத்துறையில் மீட்சி அடைந்தது. 1968 - 69ல் நல்ல வளர்ச்சியும் ஏற்பட்டது. பருவ மழை அனுகூலமாக இருந்தது. பொதுவாக வேளாண்மை உற்பத்தியிலும் குறிப்பாக உணவுப் பண்டங்களின் உற்பத்தியிலும் நல்ல ஏற்றம் இருந்தது. இன்னும் விரித்துக்கூறின், 1968 - 69ஆம் ஆண்டில் பொதுவான விலை மட்டத்தில் ஓரளவிற்கு இறக்கம் இருந்தது.

## நான்காம் ஐந்தாண்டுத் திட்டம்

(1969 - 70 லிருந்து 1973 - 74 வரை)

நான்காம் திட்டத்தின் அசல் 1966ஆம் ஆண்டில் வரையப் பெற்றது. ஆனால், நாட்டில் எழுந்த சில சிக்கல்கள் காரணமாக இத்திட்டத்தை மாற்றியமைக்க வேண்டியிருந்தது என்று மேலே குறிப்பிட்டோம். 1968 - 69ஆம் ஆண்டில் நாட்டின் பொருளா தாரம் நல்ல நிலையில் இருந்தது. எனவே, 1969-ல் ஒரு புதிய நான்காம் திட்டம் உருவாக்கப்பட்டது. இத்திட்டம் 1969 - 70 லிருந்து 1973 - 74 வரை நிறைவேற்றப்பட்டது.

### குறிக்கோள்கள்

நான்காம் திட்டம் இரண்டு முக்கியக் குறிக்கோள்களைக் கருத்தில் கொண்டு வரையப்பட்டது. (1) நிலையான வளர்ச்சி (growth with stability) ஆகும். விலையேற்றம், அந்நியச் செலாவணியில் பற்றாக்குறை போன்ற சிக்கல்கள் நாட்டின் பொருளாதார அமைப்பையும் அதன் இயக்கத்தையும் பெரிதும் தீங்குறச் செய்தன என்று கடந்த கால அனுபவம் உணர்த்தியது. எனவே, பொருளாதார வளர்ச்சி தேவை என்றாலும் அவ்வளர்ச்சி நாட்டின் வலுவைக் குறைக்காத வகையில் இருத்தல் வேண்டும். நிலையான வளர்ச்சியாக இருக்க வேண்டும் என்னும் கருத்துக்கு நான்காம் திட்டம் முக்கியத்துவம் அளித்தது. (2) நாளாவட்டத்தில் தன்னிறைவு நிலையை அடைய வேண்டும்; மூன்றாம் திட்ட காலத்தில் உணவு உற்பத்தி மிகக் குறைந்த மட்டத்தில் இருந்தது. இதனால் பிற நாடுகளிலிருந்து உணவுப் பொருள்களை அதிக அளவில் இறக்குமதி செய்ய வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. இறக்குமதிச் செலவு ஆண்டாண்டுக்கு உயர்ந்து கொண்டே போயிற்று; ஆனால் ஏற்றுமதியினால் கிடைத்த தொகை ஒரே அளவில் நிலையாக இருந்தது. எனவே, நான்காம் திட்டம் தன்னிறைவுக்கு, குறிப்பாக உணவு உற்பத்தியில் தன்னிறைவு நிலையை அடைவதை வலியுறுத்தியது. நான்காம் திட்டத்தின் பிற குறிக்கோள்கள் பின்வருமாறு :-

1. நாட்டு வருமானத்தில் ஆண்டொன்றுக்கு சராசரி 5.5 சதவிகித வளர்ச்சி இருக்க வேண்டும்.

2. மக்களுடைய வருமானங்களில் சமத்துவ நிலை ஏற்பட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். (வருமான ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்க வேண்டியதன் அவசியத்தை நான்காம் திட்டம் வலியுறுத்தியது.)

3. எண்ணிக்கையில் வளர்ந்துகொண்டேவரும் தொழிலாளர்களைத் தொழிலில் அமர்த்துவதற்காகக் கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் வேலை வாய்ப்புகளைப் பெருக்கவேண்டும்.

4. நிலத்தில் உழைப்பவனுடைய இன்னலைப் போக்கி அவனுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும். இந் நோக்கம் நிறைவேற நாட்டில் நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் பல நிறைவேற்றப்பெற வேண்டும்.

5. நாட்டின் பொருளாதார அமைப்பில் அரசுத் துறையின் பங்கை உயர்த்த வேண்டும்.

## முதலீடு

புதிதாக வரையப்பெற்ற நான்காம் திட்டம் ரூ. 24,882 கோடி மொத்த முதலீட்டைக் கொண்டிருந்தது. இதில் அரசுத்துறையின் பங்கு ரூ. 15,902 கோடி; தனியார் துறையின் பங்கு ரூ. 8,980 கோடியாகும். ஆனால், அரசுத்துறையில் முதலீடு செய்யப்பெற்ற தொகை ரூ. 17,779 கோடியாகும். மூன்றாம் திட்டத்திலிருந்ததை விட நான்காம் திட்டத்தில் வேளாண்மைக்காக அதிக அளவில் செலவிடப்பட்டது. நான்காம் திட்டத்தில் வேளாண்மையின் பங்கு 23 சதவிகிதமாகும். தொழில் துறையின் பங்கு மூன்றாம் திட்டத்திலிருந்ததைவிடக் குறைவாக இருந்தது. தொழிலுக்கும் கனிப் பொருள்களுக்கும் 18 சதவிகிதம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. சமூக நலப் பணிகளுக்கு 19 சதவிகிதமும், போக்குவரத்து, தபால்-தந்தி இவற்றிற்கு 20 சதவிகிதமும் ஒதுக்கப்பட்டன.

## திட்டத்தின் செயல்திறன்

நான்காம் திட்டமும் வெற்றிகரமாக அமையவில்லை என்றே கூற வேண்டும். நாட்டு வருமானத்தில் எதிர்பார்த்த வளர்ச்சி ஆண்டொன்றுக்குச் சராசரி 5.5 சதவிகிதம். ஆனால், கிடைத்ததோ 3.3 சதவிகித வளர்ச்சிதான். தலா வருமானத்தில் எதிர்பார்த்த வளர்ச்சி ஆண்டொன்றுக்கு சராசரி 3 சதவிகிதம்; கிடைத்ததோ 1.2 சதவிகிதம்தான்.

வேளாண்மை உற்பத்தியில் ஆண்டொன்றுக்குச் சராசரி 5 சதவிகிதப் பெருக்கம் இருக்கும் என்று திட்டம் எதிர்பார்த்தது. இது நிறைவேறவில்லை. இருந்தாலும், உணவு தானியங்களின் உற்பத்தி 1973 - 74ல் 104 மில்லியன் டன் அளவிற்கு உயர் வடைந்தது. உணவு தானியங்களில் இருந்த பெருக்கத்திற்கு நாடு கண்ட 'பசுமைப் புரட்சி' முக்கிய காரணமாகும். கோதுமை உற்பத் தியில் குறிப்பிடத்தக்க வகையில் பெருக்கம் இருந்தது. திட்டத்தின் தொடக்கக் கட்டத்தில் அரிசி உற்பத்தி மந்த நிலையில் இருந்தது. ஆனால் பிந்தைய ஆண்டுகளில் அது நன்றாக உயர்ந்தது.

தொழில் உற்பத்தி ஒளி குன்றிய நிலையில் இருந்தது. தொழில் உற்பத்தி ஆண்டாண்டுக்கு 8 சதவிகிதத்தில் உயரும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், சாதனை இலக்கின் அளவைவிட மிகக் குறைவாக இருந்தது. தொழில் துறையில் வளர்ச்சி விகிதம் மிகக்குறைவாகவே இருந்தது. கடைசி ஆண்டான 1973 - 74ல் தொழில் உற்பத்தி வளர்ச்சி எதிர்மறையாக அமைந்தது. தொழில் உற்பத்தி வளர்ச்சி குன்றிய நிலை இருந்ததற்குப் பல காரணங்கள் இருந்தன. அவற்றுள் முக்கிய மானவை : (1) கச்சாப் பொருள்களில் எழுந்த பற்றாக் குறை; (2) மின்சாரப் பற்றாக் குறை; (3) போக்குவரத்தில் எழுந்த இடர்ப்பாடுகள்; (4) தொழிலாளர் பிரச்சினை. ஆலைத் தொழில் களில் பின்வருபவை மிகவும் மோசமாக இயங்கிவந்தன : பருத்தி ஆலைகள், இரும்பு, எஃகு ஆலைகள், இயந்திரங்களை உற்பத்தி செய்யும் ஆலைகள்,போக்குவரத்துச் சாதனங்களை உற்பத்தி செய்யும் ஆலைகள்.

1968 - 69 ஆண்டுவாக்கில் விலைமட்டம் நிலையாக இருந்தது. ஆனால், நான்காம் திட்டம் செயல்படத் தொடங்கியதிலிருந்தே. விலை மட்டம் ஏற்றமடையத் தொடங்கியது. இத்திட்டத்தின் பிந்தைய ஆண்டுகளில் நாட்டில் பணவீக்கம் பெருத்துவிட்டது. 1969 - 70ல் 172 புள்ளிகளாக இருந்த மொத்த விலைக் குறியீட்டு எண்கள் (1961 - 62ல் 100) நான்காம் திட்டத்தின் கடைசி ஆண்டான 1973 - 74ல் 254 புள்ளிகளுக்கு உயர்ந்தன.

## ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டம்
### (1974 - 75 லிருந்து 1978 - 79 வரை)

நாட்டில் காணும் வறுமையை ஒழிக்க வேண்டும் என்பதை மையக் கருத்தாக வைத்து ஐந்தாம் திட்டம் வரையப்பட்டது. இதை ஐந்தாம் திட்டத்தின் ஒரு சிறப்பியலாகக் கூற வேண்டு. ஐந்தாம் திட்டம் 1974 ஏப்ரலில் செயலுக்கு வந்தது. ஆண்டு தொடர்ந்து ஐந்தாண்டு காலத்துக்கு அது செயல்படுத்தப்

வில்லை. ஜனதா அரசு ஐந்தாம் திட்டத்தை 1978 மார்ச்சு 31ஆம் தேதியோடு நிறுத்திவிட முடிவு செய்தது. எனவே, ஐந்தாம் திட்டம் நான்காண்டு கால அளவைத்தான் கொண்டிருந்தது.

## குறிக்கோள்கள்

ஐந்தாம் திட்டத்தின் முக்கியக் குறிக்கோள்கள் பின்வருமாறு:

1. வறுமையை அகற்ற வேண்டும். நாட்டில் பெருமளவில் மக்கள் கொடுமையான வறுமைப்பிடியில் அகப்பட்டு உழலுவதற்கு வேலையின்மை(unemployment),வேலைக்குறைவு(underemployment) இவையே அடிப்படைக் காரணங்கள் என்று கருதப்பட்டன. எனவே, பரவலாக நாட்டில் நிலவும் வேலையின்மை, வேலைக் குறைவு இவ்விரு பிரச்சினைகளுக்கும் தீர்வு காணும் முயற்சியில் ஐந்தாம் திட்டம் முனைப்பாக ஈடுபட்டது.

2. வேலை வாய்ப்புகளைப் பெருக்கவேண்டும். வேலைக்குப் பிறரை எதிர்பார்க்காமல் தாமே தொழிலைத் தொடங்கும் 'தற்பணியாளர்' (self-employment) முறையை ஊக்குவிக்க வேண்டும். வேளாண்மை, குடிசைத் தொழில், சாலைப் போக்குவரத்து, வணிகம், பிற பணிகள் இவற்றில் தற்பணிக்கு நல்ல வாய்ப்பு இருப்பதாகத் திட்டம் கருதியது.

3. ஆரம்பக் கல்வி, குடிநீர், கிராமப்புறங்களில் மருத்துவ வசதி, கிராமங்களுக்கு மின்சார வசதி அளித்தல், நிலமில்லா குடியானவருக்கு வீட்டு மனை அளித்தல் போன்ற அடிப்படைத் தேவைகளைத் பூர்த்தி செய்யக்கூடிய திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்;

4. நாட்டு வருமானத்தில் குறைந்தது 5.5 சதவிகித வளர்ச்சியைப் பெறவேண்டும்.

5. அத்தியாவசிய நுகர்வுப் பண்டங்கள் முறையான விலையில் தட்டில்லாமல் மக்களுக்குக் கிடைக்கும் வகையில் பண்டங்களைக் கொள்முதல் செய்து வினியோகிக்கும் முறையைச் செயல் படுத்த வேண்டும்.

6. ஏற்றுமதியைப் பெருக்கத் தீவிர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

## முதலீடு

ஐந்தாம் திட்டம் மொத்தம் ரூ. 55,464 கோடி முதலீடு செய்ய முடிவு செய்தது. இதில் அரசுத் துறையின் முதலீடு ரூ. 39,303

கோடி; தனியார் துறை முதலீடு ரூ. 16,161 கோடியாகும். அரசுத் துறையின் மொத்த முதலீட்டில் வெவ்வேறு பிரிவுகளுக்கு ஒதுக்கப் பட்ட தொகையைப் பட்டியல் 3 - 1ல் காணலாம்.

## பட்டியல் 3—1

ஐந்தாம் திட்டத்தின் மொத்த முதலீட்டில் வெவ்வேறு பிரிவுகளின் பங்கு

| | பிரிவு | ஒதுக்கீடு (கோடி ரூபாய்) | பங்கு (சதவிகி தத்தில்) |
|---|---|---|---|
| 1. | வேளாண்மையும் அதைச் சார்ந்த பிரிவுகளும் | 4643 | 11.8 |
| 2. | நீர்ப்பாசனம், வெள்ளக் கட்டுப்பாடு | 3434 | 8.7 |
| 3. | மின்சாரம் | 7016 | 17.9 |
| 4. | பேரளவுத் தொழில், கனிப் பொருள் கள், சிறு தொழில்கள் | 10201 | 26.0 |
| 5. | போக்குவரத்து, தபால் தந்தி | 6881 | 17.5 |
| 6. | கல்வி | 1284 | 4.4 |
| 7. | அறிவியல், தொழில் நுட்பவியல் | 768 | 2.0 |
| 8. | உடல் நலம் | 682 | 1.7 |
| 9. | குடும்ப நலம் | 497 | 1.3 |
| 10. | குடிநீர், சுகாதாரம் | 930 | 2.4 |
| 11. | வீட்டு வசதி | 1107 | 2.8 |
| 12. | சமூக நலன், தொழிலாளர் நலன் | 3289 | 8.4 |
| | | 39303 | 100.0 |

மொத்த முதலீட்டின் பெரும் பங்கு (26 சதவிகிதம்) தொழில் வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டது. வேளாண்மை, பாசனம், இரண்டிற்கும் மொத்தமாக 20.5 சதவிகிதம் ஒதுக்கப்பட்டது. போக்குவரத்து, தபால்-தந்தி இவற்றிற்கு 17.5 சதவிகிதம் ஒதுக்கப் பட்டது.

### திட்டத்தின் செயல் திறன்

ஐந்தாம் திட்டம் நல்ல முறையில் வெற்றிகரமாக அமைந்தது. நாட்டு வருமானத்திலிருக்கும் வளர்ச்சி விகிதத்தை ஓர் அளவு

கோலாக வைத்து ஒரு குறிப்பிட்ட திட்டத்தின் வெற்றி தோல்வியை எடை போடுவது வழக்கம். நாட்டு வருமானத்தில் ஆண்டு சராசரி வளர்ச்சி 5.5 சதவிகிதம் இருக்கவேண்டும் என்பது ஐந்தாம் திட்டத்தின் இலக்கு. ஆனால், பின்னர் இந்த இலக்கு 4.4 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது. 1977 - 78 வரை இருந்த நான்காண்டுக் காலத்தில் கிடைத்த சராசரி வளர்ச்சி 4 சதவிகிதமாகும். இந்தச் சாதனை இலக்கைவிடச் சிறிதளவிற்குத்தான் குறைந்திருந்தது என்பது தெளிவாகிறது. ஐந்தாம் திட்டத்தின் முதல் ஆண்டில் நாட்டு வருமானத்தில் 1 சதவிகித வளர்ச்சிதான் இருந்தது. ஆனால், பிந்தைய ஆண்டுகளில் நல்ல வளர்ச்சி ஏற்பட்டது. ஐந்தாம் திட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு தொடர்ந்து பல ஆண்டுகளில் நிலையான விலையில் மதிப்பீடு செய்யப் பெற்ற நாட்டு வருமானம் ரூ. 34,000 கோடி அளவில் ஒரே மட்டத்தில் இருந்து வந்தது. ஆனால், அது 1974 - 75ல் ரூ. 36,504 கோடிக்கும், 1975 - 76ல் ரூ. 39,849 கோடிக்கும், 1976 - 77ல் ரூ. 40,534 கோடிக்கும், 1977 - 78ல் ரூ. 43,851 கோடிக்கும் உயர்ந்தது. எனவே, நாட்டு வருமானத்தில் ஐந்தாம் திட்ட காலத்தில் நல்ல வளர்ச்சி இருந்தது எனக் கூறலாம்.

நாட்டு வருமானத்தில் நல்ல முறையில் இருந்த சீரிய வளர்ச்சிக்கு வேளாண்மை வளர்ச்சியும், தொழில் வளர்ச்சியும் முக்கிய காரணங்களாக அமைந்தன. வேளாண்மை உற்பத்தியைப் பொறுத்த அளவில் பருவ மழைக்கு ஏற்ப ஓராண்டுக்கும் பிறிதோர் ஆண்டுக்கும் உற்பத்தியில் ஏற்ற இறக்கங்கள் இருக்கத்தான் செய்தன. இருந்தாலும் மொத்தத்தில் பார்க்கும்போது வேளாண்மை செழிப்பாகவே இருந்தது. உணவு தானியங்கள் உற்பத்தியில் நல்ல முன்னேற்றம் இருந்தது. ஐந்தாம் திட்டத்தின் தொடக்கக் காலத்தில் உணவு உற்பத்தி 100 மில்லியன் டன் அளவில் நின்றது. திட்டத்தின் இலக்கு 125 மில்லியன் டன். திட்டத்தின் முடிவு ஆண்டான 1977 - 78ல் உற்பத்தி இலக்கை விஞ்சி 126 மில்லியன் டன் அளவில் நின்றது. கரும்பு, பருத்தி, சணல் ஆகிய முக்கியப் பயிர்களிலும் நல்ல ஏற்றம் இருந்தது. ஏறக்குறைய எதிர்பார்த்த இலக்குகளை அடைய முடிந்தது. எண்ணெய் வித்துகளில் மட்டும் எதிர்பார்த்த அளவிற்கு வளர்ச்சி ஏற்படவில்லை. இலக்கு 12 மில்லியன் டன்: கிடைத்தது 8.9 மில்லியன் டன்தான் (1977 - 78ல்).

தொழில்துறையைப் பொறுத்த அளவில், திட்டத்தின் தொடக்க ஆண்டுகளான 1974 - 75, 1975 - 76ல் வளர்ச்சி விகிதம் குறைவாகத்தான் இருந்தது. ஆனால் மற்ற இரு ஆண்டுகளிலும் வளர்ச்சி விகிதம் மிக அதிகமாக இருந்தது. 1974ஆம் ஆண்டில் 114.3

புள்ளிகளாக இருந்த தொழில் உற்பத்திக் குறியீட்டு எண்கள் (Index of Industrial Production) 1975-ல் 119.7 புள்ளிகளாகவும் 1976-ல் 131.4 புள்ளிகளாகவும், 1977-ல் 138.3 புள்ளிகளாகவும், 1978-ல் 147.8 புள்ளிகளாகவும் ஏற்றமடைந்தன.

ஐந்தாம் திட்டத்தின் பிரிதொரு சிறப்பு, அத்திட்ட காலத்தில் விலை மட்டம் ஏற்றமுறாமல் நிலையாக இருந்ததாகும். நான்காம் திட்டக் காலத்தின் இடையில் தோன்றிய பணவீக்கம் ஐந்தாம் திட்டத்தின் முதலாண்டு வரை தொடர்ந்து நீடித்து வந்தது. அதற்குப் பிறகு நல்ல மாற்றம் இருந்தது. ஐந்தாம் திட்ட காலத்தில் விலைகள் நிலையாக இருந்தன. ஐந்தாம் திட்ட காலத்தில் நாட்டின் அயல் நாட்டு வாணிபத்திலும் நல்ல முன்னேற்றம் இருந்தது. ஏற்றுமதியில் நல்ல வளர்ச்சி இருந்தது. 1974 - 75ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த ஏற்றுமதிகளின் மதிப்பு ரூ. 3329 கோடியாக இருந்தது. அதற்குப் பிறகு ஒவ்வோர் ஆண்டிலும் ஏற்றுமதி வளர்ந்துகொண்டே இருந்தது. 1975 - 76ல் ஏற்றுமதிகளின் மதிப்பு ரூ. 4042 கோடிக்கு உயர்ந்தது. மறுபடியும் 1976 - 77ல் 27 சதவிகித வளர்ச்சியடைந்து ரூ. 5143 கோடியை எட்டியது. 1977 - 78ல் ஏற்றுமதிகளின் மதிப்பு ரூ. 5373 கோடியான உயர் மட்டத்தை அடைந்தது.

## தமிழ் நாட்டில் திட்டப் பணி

இது வரை நாட்டளவில் வரையப் பெற்ற திட்டங்களைப் பற்றியும் அவை ஒவ்வொன்றின் அளவு என்ன, அவற்றின் குறிக்கோள்கள் யாவை, அவை எந்த அளவிற்குப் பலன்களைத் தந்தன என்பவை பற்றியும் கண்டோம். நாட்டளவில் வரையப் பெறும் ஒவ்வொரு திட்டத்திற்கும் ஏற்ப, அதன் அடிப்படைக் கருத்துகளுக்கு ஒப்ப நாட்டில் உள்ள ஒவ்வொரு மாநிலமும் திட்டம் வரைந்து செயல்படுத்தி வருகிறது. தமிழ் நாட்டில் இதுவரை ஐந்தாண்டுத் திட்டங்கள் ஐந்தும், ஓராண்டுத் திட்டங்கள் மூன்றும் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆறாவது திட்டம் நடைமுறையில் இருக்கிறது.

*

தமிழ் நாடு அரசு இருபத்தேழு ஆண்டு காலத்தில் (1951 - 52 முதற்கொண்டு 1977 - 78 முடிய) மொத்தம் ரூ. 2245.69 கோடித் தொகையை திட்டங்கள் செயல்படுத்துவதற்காகச் செலவிட்டிருக்கிறது. ஒவ்வொரு திட்டத்திற்கான செலவு, வெவ்வேறு பிரிவுகளுக்காக ஒதுக்கப்பட்ட செலவு இவ்விபரங்களைப் பட்டியல் 3-2 விளக்கிக் காட்டுகிறது.

## பட்டியல் 3 — 2

தமிழ் நாட்டில் திட்டச் செலவு (இலட்ச ரூபாயில்)

| பிரிவின் அமைப்பு | முதல் திட்டம் (1951-52 1955-56) | சதவிகிதம் | 2-ஆம் திட்டம் (1956-57 1960-61) | சதவிகிதம் | மூன்றாம் திட்டம் (1961-62 1965-66) | சதவிகிதம் | ஓராண்டுத் திட்டங்கள் (1966-67 1968-69) | சதவிகிதம் | நான்காம் திட்டம் (1969-70 1973-74) | சதவிகிதம் | ஐந்தாம் திட்டம் (1974-75 1977-78) | சதவிகிதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வேளாண்மை, அதைச் சார்ந்த பணிகள் | 957 | 11.9 | 3062 | 16.3 | 7453 | 21.5 | 6657 | 25.0 | 10375 | 18.6 | 9180 | 11.4 |
| கூட்டுறவு | 11 | 0.1 | 188 | 1.0 | 552 | 1.6 | 285 | 1.1 | 787 | 1.4 | 2621 | 3.3 |
| பாசனம், மின் உற்பத்தி | 5043 | 62.7 | 9671 | 51.5 | 15066 | 43.4 | 11680 | 43.9 | 23834 | 42.6 | 31889 | 39.6 |
| தொழில் துறை | 153 | 1.9 | 1408 | 7.5 | 2373 | 6.8 | 1656 | 6.2 | 3300 | 5.9 | 4458 | 5.5 |
| போக்குவரத்து | 270 | 3.4 | 552 | 2.9 | 1174 | 3.4 | 1044 | 3.9 | 3078 | 5.5 | 7802 | 9.7 |
| சமூக நலப் பணிகள், சமுதாய வளர்ச்சியின் பணிகள் | 1605 | 20.0 | 3796 | 20.2 | 8025 | 23.1 | 5250 | 19.7 | 14282 | 26.6 | 28786 | 29.5 |
| மற்றவை | ... | ... | 99 | 0.6 | 72 | 0.2 | 46 | 0.2 | 245 | 0.4 | 789 | 1.0 |
| | 8039 | 100.0 | 18776 | 100.0 | 34715 | 100.0 | 26613 | 100.0 | 55896 | 100.0 | 80525 | 100.0 |

ஆதாரம் : தமிழ் நாடு - ஒரு பொருளாதார ஆய்வு 1977

## திட்டங்களினால் கிடைத்த பலன்கள்

தமிழ் நாட்டில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றியதால் கிடைத்த பலன்கள் யாவை? சில முக்கியத் துறைகளை எடுத்துக் கொண்டு அவற்றில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைப் பார்ப்போம். ஒரு நாட்டில் அல்லது ஒரு பகுதியில் பொருளாதார வளர்ச்சி இருந்திருக்கிறதா என்பதைக் கண்டறிய நாட்டு வருமானம், தலா வருமானம் இவற்றில் உள்ள வளர்ச்சியைத்தான் அளவுகோலாகப் பயன்படுத்துகிறார்கள். 1950 - 51ல் முதல் திட்டம் நடைமுறைக்கு வர இருந்தது. அந்த ஆண்டின் மாநில வருமானம் (நிலையான விலையில்) ரூ. 775 கோடி. 1972 - 73ல் அது ரூ. 2907 கோடிக்கு உயர்ந்தது. 1950 - 51ல் ரூ. 257 ஆக இருந்த தலா வருமானம் (நிலையான விலையில்) 1972 - 73ல் ரூ. 358-க்கு உயர்ந்தது.

வேளாண்மையில் நல்ல மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. 1951 - 52ல் மாநிலத்தில் சாகுபடியின் கீழிருந்த மொத்த நிலப்பரப்பு 6.4 மில்லியன் ஹெக்டேர்கள் ஆகும். இது 1977 - 78ல் 7.7 மில்லியன் ஹெக்டேருக்கு உயர்ந்தது. 1951-52ல் நீர்ப்பாசன வசதி படைத்த நிலப்பரப்பு 2.5 மில்லியன் ஹெக்டேர்கள். 1977 - 78ல் இது 3.7 மில்லியன் ஹெக்டேர்களாக உயர்ந்தது. கால்வாய்கள், கிணறுகள், ஏரிகள் இவை மூன்றும் தமிழ் நாட்டில் முக்கியப் பாசனச் சாதனங்களாக இருக்கின்றன. நீர்ப்பாசன வசதி உள்ள மொத்த நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்கிற்கு மேற்கண்ட ஒவ்வொரு சாதனமும் பாசனமளிக்கிறது. மாநில அரசு நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குவதற்கு அதிக முக்கியத்துவம் அளித்து வந்திருக்கிறது. திட்ட காலத்தில் பல நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறுவப்பட்டன. மாநிலத்தில் கிடைக்கக்கூடிய நீர்வளம் முழுவதும் பயனுள்ள முறையில் இன்று செலவிடப்படுகிறது.

உணவுத் தானியங்கள் உற்பத்தியில் நல்ல முன்னேற்றம் இருந்திருக்கிறது. தானியங்கள், பருப்பு வகைகள் உட்பட மொத்த உணவு உற்பத்தி 1950 - 51ல் 3.5 மில்லியன் டன் அளவில் இருந்தது. இருபத்தேழு ஆண்டு காலத்தில் உணவுப் பொருள்களின் உற்பத்தி இரண்டு மடங்குக்கு மேல் உயர்ந்தது. 1977 - 78ல் உணவு உற்பத்தியின் அளவு 7.75 மில்லியன் டன்களாகும். உணவு உற்பத்தியிலிருந்த வளர்ச்சிக்கு இரண்டு முக்கியக் காரணங்களைக் குறிப்பிடலாம்: (1) திட்டக் காலத்தில் பாசன வசதி பெருகியதால் அதுவரை சாகுபடியின் கீழ் இல்லாத நிலங்கள் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டன. (2) இதற்குமுன் ஓர் ஆண்டில் ஒரு பயிர் விளைவிக்கப் பயன்படுத்தப்பெற்ற நிலங்களில் இப்பொழுது ஒன்றுக்கும் மேற்பட்ட

பயிர்கள் விளைகின்றன. இக்காரணங்களுடன்கூட சராசரி ஒரு ஹெக்டேர் நிலத்தில் கிடைக்கக்கூடிய விளைச்சலும் அதிகமாகப் பெருக்கமடைந்திருக்கிறது. எடுத்துக்காட்டாக, 1951 - 52ல் சராசரி ஒரு ஹெக்டேரில் கிடைத்த அரிசி உற்பத்தி 1190 கிலோ. 1977 - 78ல் இது 2050 கிலோவுக்கு உயர்ந்தது. 1951 - 52, 1977 - 78 இவ்விரு ஆண்டுகளுக்குமிடையே பல பயிர்களிலும் ஹெக்டேருக்கான சராசரி உற்பத்தி பெருகியது. சோளம் 645 கிலோவிலிருந்து 958 கிலோவிற்கும், கம்பு 493 கிலோவிலிருந்து 857 கிலோவிற்கும், கரும்பு 6500 கிலோவிலிருந்து 9666 கிலோவிற்கும், பருத்தி 148 கிலோவிலிருந்து 282 கிலோவிற்கும், மணிலாக் கொட்டை (உரிக்காதது) 102 கிலோவிலிருந்து 887 கிலோவிற்கும் உயர்ந்தன.

திட்ட காலத்தில் நல்ல வளர்ச்சியடைந்த மற்றொரு பிரிவு மின் உற்பத்தியாகும். நீர் மின்சாரம், அனல் மின்சாரம் இரண்டையும் சேர்த்துப் பார்த்தால் 1950 - 51ல் உற்பத்தியான மொத்த மின்சாரம் 632 மில்லியன் யூனிட்டுகள். 1977 - 78ஆம் ஆண்டில் மின் உற்பத்தி 5,620 மில்லியன் யூனிட்டுகளுக்கு உயர்ந்தது. மாநிலத்தில் 1950 - 51ல் 625 மில்லியன் யூனிட்டுகளாக இருந்த மின் சக்தி நுகர்வு 1973 - 74ல் 8942 மில்லியன் யூனிட்டுகளாக உயர்ந்தது. உற்பத்தி, நுகர்வு இவ்விரண்டையும் தொடர்புபடுத்திப் பார்க்கும்போது உற்பத்தியைவிட நுகர்வில் வளர்ச்சி அதிகமாக இருந்திருக்கிறது என்பதை அறியலாம். இதனால் தமிழ் நாடு மின்சாரத்திற்கு அண்டை மாநிலங்களின் உதவியை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது.

கிராமங்களுக்கு மின்சார வசதியளிப்பதில் பிற மாநிலங்களைவிட தமிழ் நாடு முன்னணியில் நிற்கிறது. ஏறக்குறைய எல்லா கிராமங்களிலும், சிற்றூர்களிலும் (Hamlets) இன்று மின்சார வசதி இருக்கிறது. 1951 - 52ல் மாநிலத்தில் மின் வசதியுடன் பம்பு செட்டுகள் மொத்தம் 14,373 இருந்தன. ஆனால் 1977 - 78ல் பம்பு செட்டுகளின் எண்ணிக்கை வியப்பூட்டும் வகையில் 8,09,606-க்கு உயர்ந்தது.

திட்ட காலத்தில் தொழிலிலும் நல்ல விரைவான முன்னேற்றம் இருந்தது. 1960-ல் 100 புள்ளிகளாக இருந்த தொழில் உற்பத்திக் குறியீட்டு எண்கள் ஒவ்வோர் ஆண்டும் வளர்ச்சியடைந்து 1973 - 74-ல் 197 புள்ளிகள் அளவில் நின்றன.

இருபத்தேழு ஆண்டு காலத்தில் பல துறைகளிலும் தமிழ் நாடு முன்னேற்றம் கண்டிருக்கிறது. இருந்தாலும் சில பிரச்சினைகள்

கவலை ஊட்டுவனவாகத் தொடர்ந்து இருந்துவருகின்றன. முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய ஒரு பிரச்சினை வேலையில்லாத் திண்டாட்டமாகும். குறிப்பாக, படித்துவேலையில்லாமல் இருக்கும் இளைஞர்கள் எண்ணிக்கையில் பெருகி வருகின்றனர். மற்றொரு முக்கியப் பிரச்சினை கிராமப்புறங்களில் காணப்படும் மக்களுடைய வறுமை. இவ்விரு பிரச்சினைகளும் தமிழ்நாட்டில் மட்டுந்தான் நிலவுகின்றன என்பது பொருளன்று. இப் பிரச்சினைகள் நாட்டளவில் இருக்கின்றன. எனவே, இவற்றிற்குத் தீர்வுகாணும் முயற்சியை நாட்டளவில் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

## சமுதாய வளர்ச்சித் திட்டம் (Community Development Programme)

கிராம வாழ்க்கையின் நலத்தைப் பெருக்க வேண்டியது மிகமிக அவசியம் என்னும் கருத்து விடுதலைக்குப் பிறகு நாட்டில் வலுப்படத் தொடங்கியது. நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 80 சதவிகிதத்தினர் வேளாண்மையும் அதைச் சார்ந்த தொழில்களையும் நம்பி கிராமங்களில் வாழ்கின்றனர். ஆனால், இவர்களுடைய வாழ்க்கைத் தரத்தைப்பற்றியோ அல்லது அவர்களுடைய நலனைப் பெருக்க வேண்டிய அவசியத்தைப்பற்றியோ நாடு சுதந்திரம் அடையும் வரை யாரும் கவலைப்படவில்லை. நல்வாழ்வுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் கிராமங்களில் இல்லை. சாலை வசதிகள் இல்லை. பல கிராமங்களில் குடிநீருக்கும் வசதி இல்லை. கல்வி பயிலக் கல்விக்கூடங்கள் இல்லை. இதனால் கிராம மக்கள் எழுத்தறிவு அற்றவர்களாகவே இருந்தனர். சுருங்கக் கூறின், கிராமங்களில் வசித்த பெரும்பான்மையான மக்கள் வறுமைப் பிடியில் சிக்குண்டு எழுத்தறிவு அற்றவர்களாக அறியாமையில் உழன்று வந்தனர்.

எனவே, நாடு விடுதலையடைந்ததும் மேற்கொள்ளப்பட்ட திட்டப் பணியில் கிராமப்புறங்களுக்கு, இன்றியமையாத வசதிகளைத் தேடித் தரும், கிராம மக்களின் நலனைப் பெருக்கும் நடவடிக்கைகளுக்கு முதன்மை அளிக்கப்பட்டது. இந் நோக்கங்கள் நிறைவேற 'சமுதாய வளர்ச்சித் திட்டம்' (community development programme) என்னும் பெயரில் ஒரு சிறப்புத் திட்டம் 1952-ல் நடைமுறைக்கு வந்தது. இத்திட்டத்தின் கீழ் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ஏதுவான முறையில் அமைந்த ஒரு சிறு பகுதி 'வட்டாரம்' என்றழைக்கப் பெறுகிறது. ஒரு வட்டாரம் 400-லிருந்து 450. சதுர கிலோ மீட்டர் பரப்பளவைக் கொண்டதாகவும், 100 கிராமங்களையும் ஓர் இலட்சம் மக்கள் தொகையை உள்ளடக்கியதாகவும் இருக்கிறது.

சமுதாய வளர்ச்சித் திட்டத்தின்படி ஒவ்வொரு வட்டாரத்திலும், வளர்ச்சிப் பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட வேண்டும். நாட்டில் இன்று 5004 வட்டாரங்கள் இருக்கின்றன. தமிழ் நாட்டின் எல்லைக்குள் 374 வட்டாரங்கள் உள்ளன. ஒவ்வொரு வட்டாரத்தில் கிடைக்கக்கூடிய நிலவள, நீர்வள, கனிவளச் சாதனங்களைப் பெருக்கி அவற்றை முழுமையாகப் பயன்படுத்தி, அதன் மூலமாக அவ்வட்டார மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்பதுதான் சமுதாய மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். சமுதாய வளர்ச்சித் திட்டத்தில் இரண்டு சிறப்பியல்புகள் இருக்கின்றன. (1) சிறு பகுதியாகிய ஒவ்வொரு வட்டாரத்திலும் அவ்வட்டாரத்தின் சூழ்நிலையையும், தேவைகளையும் கருத்திற் கொண்டு அவ்வட்டாரம் பொருளாதாரத்துறையில் முன்னேறுவதற்கு ஏதுவானமுறையில் வளர்ச்சித் திட்டம் வரையப்படுகிறது. இவ்வாறு வரையப் பெற்ற திட்டம் முனைப்பாகச் செயல்படுத்தப்படுகிறது. (2) வளர்ச்சித் திட்டத்தை வரையும் கட்டத்திலும், திட்டத்தைச் செயற்படுத்தும் கட்டத்திலும் வட்டாரத்தில் வசிக்கும் மக்கள் தீவிரமாக ஈடுபடுவதற்கு சமுதாய வளர்ச்சித் திட்டம் இடம் அளிக்கிறது.

சமுதாய வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்துவதில் இரண்டு அமைப்புகள் பங்கேற்கின்றன. கிராம வட்டத்தில் இயங்கிவரும் கிராம ஊராட்சி இவற்றுள் ஒன்று. வட்டார எல்லைக்குள் அடங்கும் ஊராட்சிகள் அனைத்தையும் ஒன்றாக இணைத்து வட்டார அளவில் இயங்கும் ஊராட்சி ஒன்றியம் இரண்டாவது அமைப்பாகும். ஒவ்வொரு வட்டாரத்திலும் வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தும் பொறுப்பை அவ்வட்டாரத்தின் ஊராட்சி ஒன்றியமும் ஊராட்சிகளும் ஏற்கின்றன. வேளாண்மை, கால்நடைப் பராமரிப்பு, கிராமத் தொழில்கள், ஆதாரக் கல்வி, சிறு பாசனங்கள், சாலைகள், உடல் நலம், குடிநீர் வசதி இவை சம்பந்தமான வளர்ச்சிப் பணிகள் சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வருகின்றன.

## ஊராட்சி ஒன்றியத்தின் அமைப்பு

ஒவ்வோர் ஒன்றியத்திலும் ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றம் இருக்கிறது. ஊராட்சித் தலைவர்கள் அனைவரும் இம்மன்றத்தில் அங்கம் வகிக்கின்றார்கள். மன்ற அங்கத்தினர்கள் ஒன்றியத் தலைவரைத் தேர்ந்தெடுக்கின்றனர். நிருவாகப் பொறுப்பை ஒன்றியத் தலைவர் மேற்கொள்கிறார். ஒன்றியத் தலைவருக்கு உதவியாக நான்கு குழுக்கள் செயல்படுகின்றன. அக்குழுக்கள் : 1. பொதுக் குழு, 2. உணவு உற்பத்திக் குழு, 3. கல்விக் குழு,

4. (வேலை) தேர்வுக் குழு. ஒன்றியத்தின் அன்றாட அலுவல்களை மேற்பார்வையிடும் பொறுப்பை வட்டார வளர்ச்சி அலுவலர் மேற்கொள்கிறார். நிருவாக அமைப்பில் ஒவ்வோர் ஒன்றியத்திலும் பல பிரிவுகள் இருக்கின்றன. இப்பிரிவுகள் அனைத்திற்கும் வட்டார வளர்ச்சி அலுவலர் மேலாளராக இருக்கிறார். வேளாண்மை, கால் நடை பராமரிப்பு, சமூக நலன், கல்வி, ஊராட்சிகள், கூட்டுறவு, பொது வேலைகள் போன்ற ஒவ்வோர் பணிக்கும் ஒவ்வொரு பிரிவு இயங்கி வருகிறது.

## ஊராட்சி ஒன்றியத்தின் நிதிச் சாதனங்கள்

ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திற்கும் மூன்று வழிகளில் நிதி கிடைக்கிறது. (1) வரி விதிப்பின் மூலம் கிடைக்கும் நிதி: ஒவ்வோர் ஒன்றியத்திற்கும் வரி விதிக்கும் உரிமை இருக்கிறது. செஸ், மேல்வரி, முத்திரை மேல் வரி, கேளிக்கை வரியின் மேல் வரி போன்ற வரிகளை ஒன்றியங்கள் விதிக்கின்றன. (2) மாநில அரசு அளிக்கும் நிதி உதவி: ஒவ்வோர் ஆண்டும் மாநில அரசு ஒன்றியங்களுக்கு நிதி மானியங்கள் அளிக்கிறது. (3) நன்கொடை: வட்டார வளர்ச்சிப் பணியில் மக்கள் தீவிரமாக ஈடுபாடு கொள்ள வேண்டுமென்பது சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படைக் கருத்தாகும். மக்கள் தரும் நன்கொடை ஒன்றியத்தின் ஒரு நிதி மூலமாகும். ஆனால், நடைமுறையில் நன்கொடை மூலம் கிடைக்கும் நிதியளவு மிகச் சொற்பமே; இல்லை என்றுகூடக் கூறலாம்.

# 4. நாட்டு வருமானம்

நாட்டு வருமானம் (National Income) என்னும் தலைப்பு பொருளியலில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். மிகவும் துல்லியமாகக் கூறவேண்டுமெனின் இதனை நாட்டின் மொத்த உற்பத்தி (Gross National Product) என்றழைக்கலாம். இதன் பொருள் என்ன? உதாரணத்திற்கு 'அ' என்ற ஒரு நாட்டை எடுத்துக்கொள்வோம். 'அ' நாட்டில் ஒரே ஒரு பண்டம் மட்டுமே அதுவும் கோதுமை மட்டுமே உற்பத்தியாகிறது என்று வைத்துக் கொள்வோம். அதாவது 'அ' நாட்டில், கிடைக்கக்கூடிய சாதனங்கள் அதனுடைய நிலம், அந்நாட்டு மக்களின் உழைப்பு, அந்நாட்டின் மூலதனம், தொழில் முயல்வோர்கள் அனைத்துமே கோதுமை உற்பத்திக்கு மட்டுந்தான் பயன்படுத்தப்பெறுகின்றன. மேலும், அந்நாடு கோதுமையைப் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில்லை என்றும், வெளிநாடுகளிலிருந்து எந்த ஒரு பொருளையும் இறக்குமதி செய்வதில்லை என்றும் அந்நாட்டின் அரசு வரி எதையும் விதிப்பதில்லை என்றும் வைத்துக் கொள்வோம். கிடைக்கும் சாதனங்கள் அனைத்தையும் பயன்படுத்தி 'அ' நாடு, ஓர் ஆண்டில் மொத்தம் ஒரு மில்லியன் டன் கோதுமையை உற்பத்தி செய்கிறது என்றும், சந்தையில் கோதுமை விலை டன் ஒன்றுக்கு ரூ. 2,000/ என்றும் வைத்துக் கொள்வோம். இப்பொழுது 'அ' நாட்டின் நாட்டு வருமானம் என்ன என்று சொல்ல முடியுமா? எளிதாகச் சொல்லலாம். நாட்டு வருமானம் 10,00,000 × ரூ. 2,000 = ரூபாய் 200 கோடியாகும். 'அ' நாட்டில் ஓராண்டு காலத்தில் உற்பத்தியான மொத்த கோதுமை அளவினுடைய பண மதிப்பைக் கணக்கிட்டுத்தான் அந்நாட்டின் வருமானம் ரூ. 200 கோடி எனக் குறிப்பிட்டோம்.

ஆனால் நடைமுறையில் பார்த்தால் எந்த ஒரு நாடும ஒரே ஒரு பண்டத்தை மட்டும் உற்பத்தி செய்வதில்லை. ஒவ்வொரு நாடும் அரிசி, கோதுமை, பழங்கள், காய்கறிகள், துணி, சைக்கிள்கள், ஊர்ந்து வண்டிகள் முதலிய பண்டங்கள், மருத்துவ சிகிச்சை, இசை, நடனம் முதலிய பணிகள் பலவற்றையும் உற்பத்தி செய்கிறது. இத்தகைய பண்டங்கள், பணிகள் தொடர்ச்சியாக உற்பத்தி செய்யப்படுகின்றன; நுகர்வும் செய்யப்

படுகின்றது. ஆகவே, ஒவ்வொரு நாட்டிலும் பண்டங்களும் பணிகளும் நீரோட்டம் போல் தொடர்ந்து கிடைத்துவருகின்றன. உற்பத்தியாகும் பண்டங்களில் சில வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. உள் நாட்டில் மக்கள் வாங்கி நுகரும் பொருள்களில் சில பிற நாடுகளிலிருந்து இறக்குமதியாகின்றன. மத்திய, மாநில, உள்ளாட்சி போன்று பல மட்டங்களில் இயங்கும் அரசாங்கங்களும் பண்டங்கள் மீதும் பணிகள் மீதும் பல வரிகளை விதிக்கின்றன. கோதுமை, பழங்கள், சைக்கிள்கள் முதலிய பண்டங்களை மக்கள் நேரிடையாக நுகர்வதற்காக வாங்குகிறார்கள். எனவே, இப் பண்டங்கள் 'நுகர்வுப் பண்டங்கள்' (Consumer Goods) என்று அழைக்கப்படுகின்றன. இவையன்றி, வேறு வகைப் பண்டங்களும் இருக்கின்றன. இவ்வகையை 'மூலதனப் பண்டங்கள்' (Capital Goods) என்றழைக்கிறோம். உதாரணமாகப் பார்த்தால், விவசாயிகள் இயந்திரங்களையும், வேளாண்மைக் கருவிகளையும், இரசாயன உரத்தையும், பூச்சிக் கொல்லிகளையும் சாகுபடியில் பயன்படுத்துகின்றனர். விவசாயிகள் இப்பண்டங்களைச் சந்தையில் வேண்டி வாங்குவது இவற்றை நேரிடையாக நுகர்வதற்காக அல்ல; பயிர் சாகுபடியில் இவற்றைப் பயன்படுத்துவதற்காகத்தான். இவ்வாறு நேரிடையாக நுகர்வுக்குப் பயன்படுத்தப்படாமல் பிற பண்டங்களின் உற்பத்திக்கு உதவும் பண்டங்கள் 'மூலதனப் பண்டங்கள்' என்று அழைக்கப்படுகின்றன. நாட்டு வருமானத்தை மதிப்பீடு செய்யும்போது இத்தகைய மூலதனப் பண்டங்களின் உற்பத்தியையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு நம்முடைய அன்றாட வாழ்க்கையைப் பார்க்கும்போது நாட்டில் பல பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவதையும், பண்டங்கள், பணிகள் பலவும் உற்பத்தியாவதையும் காண்கிறோம். 'அ' நாட்டில் நாம் கணக்கிட்டதைப்போல ஒரு நாட்டின் நாட்டு வருமானத்தை மதிப்பீடு செய்வது அவ்வளவு இலகுவான செயலன்று. நடைமுறையில் நாட்டு வருமானத்தைக் கணக்கிடுவது ஒரு கடினமான செயல். இதைக் கணக்கிடுவதில் பல முறைகளைக் கையாளலாம். இன்னும் மேல் மட்டத்தில் நீ பொருளியல் படிக்க நேரிட்டால் இம்முறைகளைப்பற்றி விரிவாக அறிந்து கொள்வாய். 'நாட்டு வருமானம்' என்னும் தலைப்பின் பொருள், விளக்கம், உட்கருத்து, அதனை மதிப்பீடு செய்யும் முறை இவை அனைத்தும் நாம் எடுத்துக்காட்டாகக் கையாண்ட 'அ' நாட்டுக்கும் பொருந்தும்; பல்வேறு பொருளாதார நடவடிக்கைகள் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பு கொண்டு இணைந்த வகையில் செயல்படும் இந்தியா போன்ற நாட்டுக்கும் பொருந்தும். சுருங்கக் கூறின், ஒரு குறிப்பிட்ட ஆண்டில் ஒரு நாட்டில்

இறுதியாக உற்பத்தியாகும் பண்டங்கள், பணிகள் இவற்றின் பண மதிப்பே நாட்டு வருமானத்திற்கான விளக்கமாகும்.

## நாட்டு வருமானம் சம்பந்தமான பிற கருத்துகள்

நாட்டு வருமானத்தைப்பற்றிப் பயிலும்போது இது சம்பந்தமான வேறு சில கருத்துகளும் நம் கவனத்துக்கு வரும். அவற்றுள் முக்கியமான சிலவற்றை இப்போது காண்போம்.

## நாட்டின் மொத்த உற்பத்தி (Gross National Product)

தனி நபர்கள், வணிக நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள், பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இதர நிறுவனங்கள் இவை அனைத்தும் மேற்கொள்ளும் பல்வேறு பொருளாதார நடவடிக்கைகள் விளைவால் ஒரு நாட்டில் ஒரு குறிப்பிட்ட ஆண்டில் உற்பத்தியாகும் பண்டங்கள், பணிகள் இவற்றின் பண மதிப்பின் அளவே 'நாட்டின் மொத்த உற்பத்தி' (Gross National Product) அல்லது 'நாட்டின் மொத்த வருமானம்' (Gross National Income) என்பதாகும்.

## நாட்டின் நிகர உற்பத்தி (Net National Product)

இயந்திரங்கள் போன்ற மூலதனக் கருவிகளைப் பயன்படுத்தும் போது அவற்றிற்குத் தேய்மானம் ஏற்படுகிறது. நாட்டு மொத்த வருமானத்தின் பண மதிப்பிலிருந்து மூலதனக் கருவிகளின் தேய்மானத்தைக் கழிவு செய்தால் கிடைக்கும் தொகையே நாட்டின் நிகர உற்பத்தி அல்லது நாட்டின் நிகர வருமானம் என்பதாகும். ஓர் உதாரணத்தோடு கூறினால் இக்கருத்து நன்கு விளங்கும். பென்சில் உற்பத்தி செய்யும் ஓர் இயந்திரக் கருவி பத்தாண்டு காலத்திற்கு உழைக்கும் என்று வைத்துக்கொள்வோம். தொடக்கத்தில் அக்கருவியின் மதிப்பு ரூ. 10,000/ என்றால், ஒவ்வோர் ஆண்டும் அதனுடைய மதிப்பில் ரூ. 1000/ குறைந்துகொண்டே போகும். இதையே தேய்மானம் என்கிறோம். இவ்வாறு நாட்டில் பயன்படுத்தப்பெறும் எல்லா மூலதனக் கருவிகளுடைய தேய்மானத்தையும் கணக்கிட்டு அதனை நாட்டின் மொத்த வருமானத்திலிருந்து கழிவு செய்தால் நாட்டின் நிகர வருமானம் கிடைக்கும். தேய்மானத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாவிட்டால் நாட்டின் மொத்த வருமானம் கிடைக்கிறது.

## அன்றாட விலைகளின் அடிப்படையில் கணக்கிடப்பெறும் நாட்டு வருமானம் (National income at current prices)

நாட்டு வருமானத்தை மதிப்பிடும்போது, பண்டங்கள், பணிகள் இவற்றை அன்றாடம் நிலவும் விலைகளின் அடிப் படையில் மதிப்பிடுகிறோம். ஆனால், விலைகள் அவ்வப்போது மாறுதலடைகின்றன. ஏறக்குறைய எல்லாப் பண்டங்களின் விலை களும் 1978ஆம் ஆண்டில் இருந்ததைவிட 1979ஆம் ஆண்டில் உயர்வாகவே இருந்தன. எனவே, அன்றாட விலையில் கணிக்கப் பெற்ற நாட்டு வருமானம் என்பது அவ்வப்போது நிலவும் விலை களில் கணிக்கப்பெற்ற ஒன்றாகும். இங்கு சற்றுக் கூர்ந்து கவனிக்க வேண்டும். 1978, 1979 இவ்விரண்டாண்டுகளிலும் உற்பத்தியான பண்டங்கள், பணிகள் இவை ஒரே அளவில் இருந்தாலும்கூட அன்றாட விலையில் நிர்ணயிக்கப்பட்ட நாட்டு வருமானம் 1978-ல் இருந்ததைவிட 1979-ல் உயர்வாக இருக்கும். 1978, 1979 இவ்விரண்டு ஆண்டுகளுக்கிடையே எந்த விகிதத்தில் விலைவாசி யில் ஏற்றமிருந்ததோ அதே அளவுக்கு நாட்டு வருமானத்திலும் உயர்வு இருக்கும். ஆகவே, நல்ல விலையேற்றம் இருக்கும் காலத்தில் நாட்டு வருமானம் (அன்றாட விலையில் நிர்ணயிக்கப் பட்ட நாட்டு வருமானம்) விரைவாக உயர்ந்து வருவதுபோல் தோன்றும். ஆனால், பண்டங்களின் உற்பத்தியில் உயர்வு இருந் தால் ஒழிய நாட்டின் உண்மை அல்லது மெய் வருமானம் ஒரே நிலையில்தான் இருக்கும்.

## நிலையான விலையில் கணிக்கப்பெறும் நாட்டு வருமானம் (National income at constant prices)

ஒரு நாட்டில் நல்ல பொருளாதார வளர்ச்சி இருக்கிறதா இல்லையா என்பதைக் கண்டறிய அந்நாட்டு வருமானத்தில் ஆண்டாண்டு தோறும் நல்ல ஏற்றமிருக்கிறதா என்று பார்க் கிறோம். ஆனால், அவ்வப்போது நிலவும் விலைகளின் அடிப் படையில் மதிப்பிடப்பட்ட நாட்டு வருமானத்தின் போக்கையும், ஏற்றத்தையும் கொண்டு பொருளாதார வளர்ச்சியை அறிய முடியாது. ஏனெனில், பண்டங்கள், பணிகள் இவற்றின் உற்பத்தி அளவில் இருக்கும் மாற்றத்துடன் விலைகளிலும் ஓராண்டிற்கும் பிரிதோர் ஆண்டிற்கும் மாற்றங்கள் ஏற்படலாம். விலை மாற்றங் களால் ஏற்படும் விளைவுகளை நீக்கிவிட்டுப் பார்ப்பதற்காக நாட்டு வருமானத்தை நிலையான விலையின் அடிப்படையில் கணக்கிடு கிறார்கள். இத்தகைய மதிப்பீடுகளைத்தான் நிலையான விலையில் கணிக்கப்பெற்ற நாட்டு வருமானம் என்றழைக்கிறோம்.

ஒரு குறிப்பிட்ட ஆண்டை அடிப்படை ஆண்டாக எடுத்துக்கொள் கிறார்கள். இப்பொழுது, இந்தியாவில் 1970 - 71ஆம் ஆண்டு அடிப்படை ஆண்டாகக் கையாளப்படுகிறது. 1970 - 71க்கும் பிறகு தொடர்ந்து வரும் ஒவ்வோர் ஆண்டிலும் நாட்டில் உற்பத்தியாகும் பண்டங்களின் மதிப்பை அடிப்படை ஆண்டான 1970-71ஆம் ஆண்டில் நிலவிய விலைகளின் அடிப்படையில் கணக்கிடு கிறார்கள். அடுத்த ஆண்டு 'விலைகள்' என்னும் தலைப்பில் 'விலைக் குறியீட்டு எண்கள்' (Price Index) என்பதுபற்றி மேலும் விரிவாகப் படிக்கும்போது இது நன்கு புலனாகும். ஒரு கால அளவில் ஏற்படும் விலை மாற்றங்களை எளிய முறையில் எடுத்துக் காட்டும் ஒரு கருவிதான் 'விலைக் குறியீட்டு எண்கள்' என்ப தாகும். அன்றாட விலைகளின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும் நாட்டு வருமானத்திலிருந்து விலைக் குறியீட்டு எண்களில் இருக்கும் ஏற்றத்திற்குத் தகுந்தாற்போல் கழிவு செய்து பார்த்தால் ஓர் ஆண்டினுடைய மெய் நாட்டு வருமானம் கிடைக்கும்.

### தலா வருமானம்

நாட்டு வருமானத்தை அந்நாட்டு மக்கள் தொகையின் எண்ணிக்கையால் வகுத்தால் அந்நாட்டின் தலா வருமானம் கிடைக்கும். தலா வருமானத்தையும் அன்றாட விலையின் அடிப்படையிலோ அல்லது நிலையான விலையின் அடிப் படையிலோ கணித்துக் கூறலாம். 1976-77ஆம் ஆண்டில் இந்தியா அன்றாட விலையிலான தலா வருமானம் ரூ. 1081 என்று குறிப்பிடுகிறோம். இந்த விவரம் எப்படிக் கிடைக்கிறது; 1976-77 ஆண்டினுடைய அன்றாட விலையிலான நாட்டு வருமானத்தை அந்த ஆண்டில் இருந்த மக்களின் எண்ணிக்கையால் வகுத்துப் பார்த்தால் ரூ. 1,081/- என்னும் தொகை கிடைக்கும். இதே போன்று, மெய் தலா வருமானத்தையும் கணக்கிடலாம்.

### நாட்டு வருமான மதிப்பீடுகளின் முக்கியத்துவம்

இவ்வத்தியாயத்தின் தொடக்கத்திலேயே, பொருளியலில் நாட்டு வருமானம் என்னும் தலைப்பு மிகவும் முக்கியம் வாய்ந்த ஒன்று என்று குறிப்பிட்டோம். அது எத்துணை முக்கியம் வாய்ந்தது?

(I) கால அளவில் பொருளாதார வளர்ச்சி இருந்திருக்கிறதா என்பதைக் கண்டறிய உதவுகிறது : ஒரு நாட்டில் பொருளாதாரத் துறையில் எந்த அளவிற்கு வளர்ச்சி இருக்கிறது என்பதைக் கணக்கிட நாட்டு வருமானமும் தலா வருமானமும் அளவுகோல்

களாகப் பயன்படுகின்றன. அதாவது, நாட்டு வருமானம்பற்றிய புள்ளி விவரங்கள் ஒரு நாட்டில் எந்த அளவிற்கு வளர்ச்சியிருக்கிறது என்பதைக் கண்டறிய உதவுகின்றன. நாட்டு வருமானம் (மெய் வருமானம்) 5 சதவிகிதத்தில் உயர்ந்துவந்தால் அந்நாட்டில் 5 சதவிகித பொருளாதார வளர்ச்சி இருக்கிறது என்று குறிப்பிடுகிறோம். ஆனால், நாட்டில் உண்மையான பொருளாதார வளர்ச்சி நிலை வேண்டுமெனில் அந்நாட்டு வருமானத்தில், மக்கள் தொகையில் இருக்கும் பெருக்கத்தைவிட ஏற்றம் இருக்கவேண்டும். ஒரு நாட்டில் மக்கள் தொகை 2 சதவிகிதத்தில் பெருக்கமடைய அந்நாட்டு வருமானமும் 2 சதவிகிதத்தில் உயர்ந்து வந்தால் அந்நாடு உண்மையில் முன்னேறவில்லை என்றுதான் கருத வேண்டும். ஒரு நாட்டில் பொருளாதார முன்னேற்றம் இருக்கிறதா? இருந்தால் அஃது எத்துணை அளவிற்கு இருக்கிறது என்று ஆராய்ந்து அறிய நாட்டு வருமானம், தலா வருமானம் சம்பந்தமான புள்ளி விவரங்கள் பேருதவி புரிகின்றன. தொடர்ச்சியாகப் பல ஆண்டுகளுக்கு நாட்டு வருமான விவரங்களைப் பட்டியலிட்டுப் பார்த்தால், எவ்வெவ்வாண்டுகளில் நல்ல பொருளாதார வளர்ச்சி இருந்தது. எந்த ஆண்டுகளில் வளர்ச்சி குன்றியிருந்தது என்பதை நாம் தெளிவாக அறியலாம்.

(2) பல நாடுகளை ஒப்பிட்டுப் பார்க்க உதவுகிறது : பல்வேறு நாடுகளினுடைய நாட்டு வருமானப் புள்ளி விவரங்களை ஆய்ந்து பார்த்தால், எந்தெந்த நாடுகளில் நல்ல பொருளாதார வளர்ச்சி இருக்கிறது. எந்நாடுகள் பின்னணியில் இருக்கின்றன என்பதை அறியலாம். இந்தியாவின் வளர்ச்சி விகிதத்தைப் பொருளாதாரத் துறையில் இந்தியாவுடன் ஒப்பிடும் நிலையில் இருக்கும் நாடுகளில் நிலவும் வளர்ச்சி விகிதத்துடனும் இந்தியாவைவிட உயர் நிலையில் இருக்கும் நாடுகளுடைய வளர்ச்சி விகிதத்துடனும் ஒப்பிட்டுப் பார்த்தால் உலகப் பொருளாதார வளர்ச்சியில் நமது நாடு எங்கு அங்கம் வகிக்கிறது என்றறியலாம். இவ்வாறு பல்வேறு நாடுகளில் நிலவும் தலா வருமானங்களின் மட்டம், அவற்றின் வளர்ச்சி விகிதங்கள் இவற்றையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

(3) பொருளாதாரத் திட்டம் வரைய உதவுகிறது : பொருளாதாரத் துறையில் வளர்ந்துவரும் ஒரு நாட்டினுடைய அடிப்படைப் பிரச்சினை அதன் குறைந்த வருமான அளவு என்றும், நாட்டு வருமானத்தைப் பெருக்கப் பொருளாதாரத் திட்டம் ஒரு கருவியாகப் பயன்படுகிறது என்றும் அத்தியாயம் 1ல் கண்டோம். நாட்டு வருமானம், தலா வருமானம் இவற்றை உயர்த்துவதே பொருளாதாரத் திட்டத்தின் முக்கியக் குறிக்கோள் என்பது எல்லோராலும்

ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்றாகும். நம் நாட்டின் ஐந்தாண்டுத் திட்டங்களில் ஒவ்வொரு திட்டத்திலும் நாட்டு வருமானம், தலா வருமானம் இவற்றிற்கான இலக்குகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்விலக்குகளை அடைய சீரிய முயற்சிகளும் மேற்கொள்ளப் படுகின்றன. நாட்டு வருமான, தலா வருமான இலக்குகள் கிட்டினவா என்பதை ஆய்ந்து அறிய ஒவ்வொரு திட்டமும் நடை முறையில் இருக்கும்போதும், நிறைவேறிய பிறகும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு, பொருளாதாரத் திட்டம் வரைவதற்கும், வரைந்த திட்டம் திறன்படச் செயல்படுகிறதா என்பதை ஆய்வு செய்வதற்கும் நாட்டு வருமானம்பற்றியப் புள்ளி விவரங்கள் மிகவும் உதவியாக இருக்கின்றன. இன்னும் கூறப் போனால், முறையான பொருளாதாரத் திட்டம் ஒன்றை வரை வதற்கு நாட்டு வருமானப் புள்ளி விவரங்கள் ஓர் அடிப்படைத் தேவையாகும்; இப்புள்ளி விவரங்களின் துணையின்றி திட்டம் சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் எந்த ஆய்வும் கணிப்பும் பயனற்றவைகளாகவே இருக்கும்.

(4) நாட்டின் அங்க அமைப்பை அறிய உதவுகிறது : நாட்டு வருமானத்தை ஒரு நீரோடைக்கு ஒப்பிட்டுக் கூறலாம். விவசாயம், தொழில் போன்ற பல துறைகளில் தொடர்ந்து நடக்கும் உற்பத்தி இந்நீரோடையில் வந்து சேருகின்றன. எனவே, நாட்டு வரு மானத்தைக் கூறுபோட்டுப் பகுத்துப் பார்த்தால், பொருளாதார அமைப்பின் வெவ்வேறு அங்கங்கள் எந்த அளவிற்குப் பங்கு செலுத்துகின்றன என்பதை அறியலாம். பொருளாதார அமைப்பின் பல்வேறு துறைகளுக்கிடையே நிலவும் தொடர்பு எத்தகைய தன்மை வாய்ந்தது என்று பொருளாதார வல்லுநர்கள் வரை யறுத்துக் கூறியிருக்கிறார்கள். பொருளாதார வளர்ச்சி வேகத்தை மேலும் விரைவுபடுத்த வேண்டுமென்றால் தற்போது நிலவும் தொடர்பை மாற்றியமைக்க வேண்டுமா, அப்படி மாற்ற வேண்டு மெனில் என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், தொடர்பினை மாற்றியமைப்பதன் மூலம் எத்தகைய பலன்களை எதிர்பார்க்கலாம் என்றும் பொருளாதார நிபுணர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். எனவே, வெவ்வேறு துறைகளுக்குமிடையே உள்ள தொடர்பு சம்பந்தமாகப் பல ஆய்வுகளை மேற்கொள்ள நாட்டு வருமானப் புள்ளி விவரங்கள் உதவியாக இருக்கின்றன.

## இந்தியாவில் நாட்டு வருமான மதிப்பீடுகள்

நாட்டு வருமானத்தை முறையான வழியில் மதிப்பீடு செய்யும் பணி நாடு விடுதலையடைந்த பிறகுதான் மேற்கொள்ளப்

பெற்றது. அதற்கு முன் நாட்டு வருமானம்பற்றி விவரங்களே இல்லை என்று கூற முடியாது. ஆனால், அவை முறையாக மதிப்பிடப் பெறவில்லை. பொருளாதார வல்லுநர்கள் சிலர் தங்களுடைய தனிப்பட்ட முயற்சியில் நாட்டு வருமானத்தைக் கணக்கிட முற்பட்டனர். இத்துறையில் தாதாபாய் நௌரோஜியை ஒரு முன்னோடியாகக் கருதலாம். 1868ஆம் ஆண்டில் இந்தியாவில் தலா வருமானம் ரூ.20 ஆக இருந்தது என்று அவர் கணக்கிட்டார். இதைத் தொடர்ந்து வேறு சிலரும் இப்பணியை மேற்கொண்டனர். அவர்களுடைய மதிப்பீடுகளைப் பட்டியல் 4—1ல் காணலாம்.

## பட்டியல் 4—1

தலா வருமான மதிப்பீடுகள் (1860 - 1940)

| மதிப்பீடு செய்தவரின் பெயர் | மதிப்பீடு செய்யப் பெற்ற ஆண்டு | தலா வருமானம் (ரூபாயில்) |
|---|---|---|
| தாதாபாய் நௌரோஜி | 1868 | 20 |
| வில்லியம் டிக்பி | 1868 | 18 |
| பின்லே ஷிர்ராஸ் | 1911 | 49 |
| பின்லே ஷிர்ராஸ் | 1922 | 116 |
| ஷாவும் கம்பட்டாவும் | 1921 | 74 |
| வாடியாவும் ஜோஷியும் | 1913-14 | 44 |
| பின்லே ஷிர்ராஸ் | 1931 | 63 |
| வி.கே.ஆர்.வி. ராவ் | 1925-29 | 84 |
| வி.கே.ஆர்.வி. ராவ் | 1931-32 | 65 |
| ஆர்.சி. தேசாய் | 1931-40 | 85 |

இம்மதிப்பீடுகளை மிகவும் துல்லியமாகக் கணிக்கப்பெற்றவை எனக் கருத முடியாது. மதிப்பீடு செய்வதில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு முறையைக் கையாண்டனர். சில துறைகளிலிருந்து கிடைக்கும் வருமானத்தை நுட்பமாக அறிந்து அளந்து காட்டுவது மிகவும் கடினமாக இருந்ததால் பெரும்பான்மையும் ஊகத்தின் அடிப்படையில்தான் இம்மதிப்பீடுகள் கணிக்கப்பெற்றன. இவற்றுள் சில மதிப்பீடுகள் உயர்ந்த மதிப்பீடுகள்; சில குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டிருந்தன. இம்மதிப்பீடுகள் அனைத்துமே அவ்வப்போது நிலவும் விலைகளின் அடிப்படையில் கணிக்கப்பெற்றவை. எனவே, இவற்றை ஒன்றோடொன்று ஒப்பிட்டுப்

பார்க்கவும் முடியாது. இம்மதிப்பீடுகளில் இவ்வாறு பல தவறுகள் காணக்கிடந்தாலும் இவை தனியார் முயற்சியால் மேற்கொள்ளப் பெற்றவை என்பதாலும் பிற்காலத்தில் மதிப்பீட்டு முறைகள் திருத்தியமைப்பதற்கு இவை முன்னோடிகளாக இருந்தன என்பதாலும் இவைகளை ஓரளவிற்குப் போற்றத்தான் வேண்டும். நாட்டு வருமானத்தை மதிப்பீடு செய்வது என்பது மாபெரும் செயலாகும். சிறந்த தேர்ச்சி பெற்ற வல்லுநர்கள் பலரையும், ஆயிரக் கணக்கான ஆய்வாளர்களையும் உள்ளடக்கிய ஒரு பெரிய நிறுவனம்தான் மதிப்பீடுகளைக் திறன்பட கணிக்க முடியும்.

## நாட்டு வருமான மதிப்பீட்டுக் குழு

நாடு விடுதலை அடைந்ததும், நாட்டு வருமானத்தைச் சரியாக மதிப்பீடு செய்வதன் அவசியத்தை உணர்ந்த இந்திய அரசு இச்செயலை மேற்கொள்வதற்காக 1949ல் 'நாட்டு வருமான மதிப்பீட்டுக் குழு' ஒன்றினை அமைத்தது. புள்ளியியலில் சிறந்த வல்லுநரான பேராசிரியர் பி.சி. மகலாநோபிஸ் இக் குழுவின் தலைவர். புகழ் வாய்ந்த பொருளியல் வல்லுநர்களான டாக்டர் காட்கில், டாக்டர் வி.கே.ஆர்.வி. ராவ் குழுவின் அங்கத் தினர்கள். நாட்டு வருமானத்தை மதிப்பீடு செய்வதற்கு இந்தியா வில் எந்த முறையைக் கையாளுவது என்பதற்காக ஒரு செயல் விளக்க முறையை இக்குழு தந்தது. 1948 - 49ஆம் ஆண்டு உள்ளிட தொடர்ந்து மூன்றாண்டு காலத்திற்கு இக்குழு நாட்டு வருமானத்தை மதிப்பிட்டது. 1950 - 51ஆம் ஆண்டு முதற் கொண்டு, ஒவ்வோர் ஆண்டிற்கும் நாட்டு வருமானத்தை மத்திய அரசின் திட்டத் துறையைச் சார்ந்த டில்லியிலிருந்து இயங்கும் மத்திய புள்ளி விவர நிறுவனம் மதிப்பீடு செய்து வருகிறது. நாட்டு வருமானத்தை மதிப்பிடும் முறையில் இந் நிறுவனம் அவ்வப்போது சில மாறுதல்களைச் செய்து வருகிறது. எனவே, 1948 - 49ஆம் ஆண்டு முதற்கொண்டு நாட்டு வருமானம்பற்றிய நம்பத் தகுந்த புள்ளி விவரங்கள் நமக்குக் கிடைத்துவருகின்றன. 1948 - 49ல் நிலவிய விலைகளின் அடிப்படையில் 196 4- 65வரை நாட்டு வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டது. பின்னர், அடிப்படை ஆண்டை 1960 - 61க்கு மாற்றி அமைத்து, அதன் அடிப்படையில் 1960 - 61 க்கும் 1972 - 73 க்கும் இடைப்பட்ட ஆண்டுகளுக்கான நாட்டு வருமானத்தை மதிப்பிட்டார்கள். மீண்டும் அடிப்படை ஆண்டை 1970 - 71 ஆக மாற்றி அமைத்தனர். இவ்வாறு நமக்கு இன்று நாட்டு வருமானம் பற்றிய விவரங்கள் மூன்று கோவை களாய்க் கிடைக்கின்றன. ஒவ்வொரு கோவையும் 1948 - 49, 1960-61, 1970 - 71 என்று வெவ்வேறு அடிப்படை ஆண்டுகளைக் கொண்டமைந்ததாகும்.

## இந்தியாவில் நாட்டு வருமானத்தின் போக்கு

அடிப்படை ஆண்டுகள் அவ்வப்போது மாற்றி அமைக்கப் பட்டுள்ளதால் நாட்டு வருமானத்தில் நீண்ட கால அளவில் இருந்த ஏற்ற இறக்கங்களை ஒப்பிட்டுக் கூறுவது சற்றுக்கடினமான செயலாகும். இருந்தாலும், நமது நாட்டு வருமானத்தில் காணப் பெறும் இயல்புகள் யாவை? நாட்டு வருமானத்தின் போக்கு எவ்வாறு இருந்திருக்கின்றது என்பவற்றைச் சுருக்கமாகவாவது அறிய முயலலாம். மெய் நாட்டு வருமானத்தில் இருந்த மாற்றங் களை ஒரு நீண்ட கால அளவில் ஆராயலாம். இத்தகைய ஆய்வுக்கு 1960-61ஆம் ஆண்டினை அடிப்படை ஆண்டாக எடுத்துக்கொள்வோம்.

## நாட்டு வருமானத்தில் உள்ள மாற்றங்கள்


1950-51, 1977-78 இவ்வாண்டுகளுக்கு இடைக் காலத்தின் அன்றாட விலை, நிலையான விலை இவ்விரண்டு விலைகளின் அடிப்படையிலும் கணிக்கப்பெற்ற இந்திய நாட்டு வருமான விவரங்கள் பட்டியல் 4—2இல் கொடுக்கப் பெற்றிருக்கின்றன.

### பட்டியல் 4—2

அன்றாட விலை, நிலையான விலை இரண்டின் அடிப்படையிலும் இந்தியாவின் நாட்டு வருமானம் (காலம் 1950 - 51 லிருந்து 1977 - 78 வரை)

| ஆண்டு | அன்றாட விலையில் நாட்டு வருமானம் | நிலையான விலையில் (1960-61) நாட்டு வருமானம் | ஆண்டு | அன்றாட விலையில் நாட்டு வருமானம் | நிலையான விலையில் (1960-61) நாட்டு வருமானம் |
|---|---|---|---|---|---|
| | (கோடி ரூபாயில்) | | | (கோடி ரூபாயில்) | |
| 1950-51 | 9530 | 9650 | 1972-73 | 38921 | 19101 |
| 1955-56 | 9980 | 11410 | 1973-74 | 49290 | 19724 |
| 1960-61 | 13279 | 13279 | 1974-75 | 58137 | 20183 |
| 1965-66 | 20636 | 15082 | 1975-76 | 60293 | 21952 |
| 1970-71 | 33946 | 18708 | 1976-77 | 62100 | 22860 |
| 1971-72 | 35756 | 19033 | 1977-78 | 73157 | 23160 |

இதே விவரங்களை வரைபடம் 4—1 விளக்கிக் காட்டுகிறது. ஆண்டாண்டிற்கு நாட்டு வருமானத்தில் இருந்த மாற்றத்தையும்




படம் 4.1 இந்தியாவில் நாட்டு வருமானத்தின் பெருக்கம் (1950-51 முதல் 1977-78 வரை)

உயர்வையும் சதவிகிதக் கணக்கில் பட்டியல் 4—3 காட்டுகிறது. பட்டியல் 4—2ல் கொடுக்கப் பெற்றுள்ள எண்களை உபயோகித்துத்தான் பட்டியல் 4—3 அமைக்கப் பெற்றிருக்கிறது. இருந்தாலும் நாட்டு வருமானத்தின் போக்கைப் பட்டியல் 4 3 லிருந்து தெளிவாக அறியலாம். இரண்டு பட்டியல்களையும் வரை படத்தையும் கருத்தூன்றிப் பாருங்கள்.

### பட்டியல் 4—3

**இந்தியாவில் நாட்டு வருமான வளர்ச்சி**

| ஆண்டு | அன்றாட விலையில் | நிலையான விலையில் (1960-61) | ஆண்டு | அன்றாட விலையில் | நிலையான விலையில் (1960-61) |
|---|---|---|---|---|---|
| 1950-51 | 100.00 | 100.00 | 1972-73 | 408.40 | 197.94 |
| 1955-56 | 104.72 | 118.24 | 1973-74 | 517.20 | 204.39 |
| 1960-61 | 139.34 | 137.61 | 1974-75 | 610.04 | 209.15 |
| 1965-66 | 216.54 | 156.29 | 1975-76 | 632.66 | 227.48 |
| 1970-71 | 356.20 | 193.87 | 1976-77 | 651.62 | 236.89 |
| 1971-72 | 375.19 | 197.23 | 1977-78 | 767.64 | 240.00 |

## இந்தியாவில் நாட்டு வருமான வளர்ச்சி

பட்டியல்கள் 4—2, 4—3 லிருந்து நாம் அறியக்கூடிய முக்கியக் குறிப்புகள் யாவை ?

1. 1950-51 ஆம் ஆண்டில் 9,530 கோடி ரூபாயாக இருந்த அன்றாட விலையிலான நாட்டு வருமானம் 1977-78 ஆம் ஆண்டில் 73,157 கோடி ரூபாய்க்கு உயர்ந்தது. 27 ஆண்டுக் காலத்தில் நாட்டு வருமானம் ஏழு பங்கு ஏற்றமடைந்தது. ஆனால், நிலையான விலையில் நாட்டு வருமானம் 9,650 கோடி ரூபாயிலிருந்து 23,160 கோடி ரூபாய்க்குத்தான் உயர்ந்தது. அதாவது இரண்டரை மடங்குதான் ஏற்றமடைந்தது.

2. அன்றாட விலையில் நாட்டு வருமானத்தில் இருந்த வளர்ச்சி விகிதத்திற்கும் நிலையான விலையின் நாட்டு வருமானத்திலிருந்த வளர்ச்சி விகிதத்திற்கும் பெரும் வேறுபாடு இருந்தது. இவ்வேறுபாட்டுக்கு நாட்டில் ஏற்பட்ட விலையேற்றமே

காரணமாகும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் செயல் படுத்தத் தொடங்கிய முதற்கொண்டு நாட்டின் விலை மட்டத்தில் பெரும் ஏற்றம் இருந்தது. அன்றாட விலையில் கணிக்கப் பெற்ற நாட்டு வருமானம் பெருமளவில் வளர்ச்சியடைந்ததற்கு இவ்விலை யேற்றமே முக்கியக் காரணமாகும்.

3. ஊன்று கவனித்தால் மற்றொரு சுவையான குறிப்பையும் காணலாம். 1950-51க்கும் 1955 - 56க்கும் இடைப்பட்ட ஆண்டு களில் நிலையான விலையில் கணிக்கப்பெற்ற நாட்டு வருமானம் அன்றாட விலையில் கணிக்கப் பெற்ற நாட்டு வருமானத்தை விட உயர்வாகவே இருந்தது. ஆனால் பிந்திய ஆண்டுகளில் இந்நிலை தலைகீழாக மாறிவிட்டது. 1950-லிருந்து ஐந்தாண்டு காலத்தில் விலை மட்டம் குறைந்துவந்தது என்பதை இதிலிருந்து அறியலாம்.

4. நாட்டின் மெய் வருமானத்தில் (அதாவது நிலையான விலையில், ஆண்டொன்றிற்குக் குறைந்தது 5 சதவிகித வளர்ச்சி இருக்க வேண்டும் என்பது நமது ஐந்தாண்டுத் திட்டங்களின் முக்கியக் குறிக்கோள். இக்குறிக்கோளை நடைமுறையில் அடைய முடிந்ததா? ஒரே ஓர் ஆண்டில் மட்டுந்தான் 1975-76ஆம் ஆண்டில் இக்குறிக்கோள் கைவரப் பெற்றது. மற்ற ஆண்டுகள் அனைத்திலும் எதிர்பார்த்ததைவிடக் கிடைத்தது குறைவே.

5. முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நாட்டின் மெய் வருமானத்தில் இருந்த சாராசரி ஆண்டு வளர்ச்சி 3.65 சதவிகித மாகும்; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கிடைத்தது 3.28 சதவிகிதம்; மூன்றாம் திட்ட காலத்தில் கிடைத்தது 2.72 சதவிகிதம்.

6. நாட்டின் மெய்வருமானத்தில் இருந்த வளர்ச்சியும் ஒரே சீராகவும் நிலையாகவும் இல்லை. அவ்வப்போது பெரும் ஏற்றத் தாழ்வுகள் இருந்தன. எடுத்துக்காட்டாக, 1972-73ஆம் ஆண்டில் 0.36 சதவிகித வளர்ச்சிதான் இருந்தது. 1975-76ஆம் ஆண்டில் 8.76 சதவிகித வளர்ச்சியிருந்தது.

## தலா வருமானம்

தலா வருமானத்தின் அளவைப் பார்த்து நாட்டில் மக்களுடைய சராசரி வாழ்க்கை நிலை எவ்வாறு இருக்கிறது என்பதை ஓரளவிற்குத் தெரிந்து கொள்ளலாம். முறையாகப் பார்த்தால், மக்களுடைய வாழ்க்கைத்தரத்தைத் தலா வருமானம்

பிரதிபலிக்கும் என்று கூற முடியாது. சில சந்தர்ப்பங்களில் அது ஒரு தவறான அளவுகோலாகக்கூட அமைய நேரிடும். ஓர் உதாரணத்தின் உதவியோடு இதற்கு விளக்கம் காணலாம். பின்வரும் உதாரணத்தைப் பாருங்கள். 'அ', 'ஆ' என்ற பெயரில் இரு கிராமங்கள் இருப்பதாக வைத்துக் கொள்வோம். ஒவ்வொரு கிராமத்திலும் 100 குடும்பங்கள் இருக்கின்றன. 100 குடும்பங்களுக்கும் கிடைக்கும் மொத்த வருமானம் ரூ. 47,500 என்று வைத்துக் கொள்வோம். ஒரு குடும்பத்தில் சராசரி 5 நபர்கள் என்றால் ஒவ்வொரு கிராமத்தில் மக்கள் தொகை 500 ஆகும். இரு கிராமங்களிலும் தலா வருமானம் ஒரே அளவில், அதாவது 47,500 ÷ 500 = 95 ஆக இருக்கின்றது. இவ்வாறு அ, ஆ என்னும் இரு கிராமங்களிலும் எல்லா வகையிலும் ஒத்த நிலையில் இருக்கின்றன. இதிலிருந்து, இரு கிராமங்களிலும் மக்களுடைய வாழ்க்கைத்தரம் ஒரே நிலையில்தான் இருக்கிறது என்ற முடிவுக்கு நாம் வர இயலாது. ஏனெனில், குடும்பங்களுக்கிடையே வருமானங்களில் இருக்கிற வேறுபாடுகள்பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. இரு கிராமங்களிலும் குடும்பங்களிடையே நிலவும் வருமானப் பகிர்வு கீழ்க்காணும் (பட்டியல்4 - 4) முறையில் இருக்கிறது என்று அனுமானம் செய்துகொள்வோம்.

## பட்டியல் 4—4

'அ', 'ஆ' என்னும் இரு கிராமங்களில் வருமானப் பகிர்வு முறை

| கிராமம் 'அ' | | | கிராமம் 'ஆ' | | |
|---|---|---|---|---|---|
| குடும்பங்களின் எண்ணிக்கை ரூ. | ஒரு குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ. | மொத்த வருமானம் ரூ. | குடும்பங்களின் எண்ணிக்கை ரூ. | ஒரு குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ. | மொத்த வருமானம் ரூ. |
| 25 | 600 | 15,000 | 15 | 1500 | 22,500 |
| 25 | 500 | 12,500 | 25 | 700 | 17,500 |
| 50 | 400 | 20,000 | 60 | 125 | 7,500 |
| 100 | | 47,500 | 100 | | 47,500 |

பட்டியல் 4 4 ஐப் பார்த்து, எந்தக் கிராமத்தில் மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்வாக இருக்கிறது என்று கூறமுடியுமா? கிராமம் 'அ' வில்தான் என்று ஐயமின்றிக் கூறலாம். ஏன்? 'அ' கிராமத்தில் ஒரு குடும்பத்திற்குக் கிடைக்கக்கூடிய குறைந்த வருமானம் ரூ. 400 ஆகும். ஆனால் 'ஆ' கிராமத்தில் ஒரு குடும்

பத்தின் குறைந்த வருமானம் ரூ. 125 தான். மேலும் 'ஆ' கிராமத்திலுள்ள பெரும்பான்மையான குடும்பங்கள், 60 சதவிகித குடும்பங்கள் இவ்வாறு குறைந்த வருமானத்தையே பெற்று வருகின்றன. சுருங்கக்கூறின் வருமானத்தில் இருக்கும் ஏற்றத் தாழ்வுகள் 'ஆ' கிராமத்தில் அதிகமாக இருக்கின்றன. ஆனால், 'அ' கிராமத்தில் குறைவாக இருக்கின்றன. எனவே 'ஆ' கிராமத்தில் வறுமையின் அழுத்தம் அதிகமாக இருக்கிறது எனலாம்.

ஆதலால், மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை அறிந்து கொள்ளத் தலா வருமானத்தை ஒரு நம்பத் தகுந்த அளவு கோலாகக் கருத முடியாது. இருந்தாலும், தலா வருமானத்தை உடனடியாகவும் இலகுவாகவும் கணித்துவிட முடிகிறது. எனவே, இது பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. இக்குறைபாடுகளைக் கருத்திற் கொண்டு கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை காண முயலலாம். நம் நாட்டில் தலா வருமானத்தின் அளவு என்ன? பல ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றியதன் விளைவாகத் தலா வருமானம் உயர்ந்திருக்கின்றதா?

இந்தியாவில் அன்றாட விலை, நிலையான விலை இரண்டின் அடிப்படையிலும் கணிக்கப்பெற்ற தலா வருமான விவரங்களைத் தொடர்ச்சியாகப் பல ஆண்டுகளுக்குப் பட்டியல் 4—5இல் காணலாம். இப்பட்டியலின் 2, 3 தலைப்புகளின்கீழ்ப் பல ஆண்டு களுக்கான தலா வருமான அளவுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 4, 5 தலைப்புகளின்கீழ் காலப்போக்கில் தலா வருமானத்திலிருந்த வளர்ச்சி, சதவிகிதக் கணக்கில் கொடுக்கப்பட்டுள்ளது. 1950-51 ஆம் ஆண்டினுடைய தலா வருமானத்தை 100 என்று எடுத்துக்கொண்டு பிந்திய ஆண்டுகளில் தலா வருமானத்தில் இருந்த வளர்ச்சி சதவிகிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஒரு நாட்டின் மெய் தலா வருமானத்தில் இருக்கும் வளர்ச்சி அந்நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு சிறந்த அறிகுறியாகும். ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் இந்தியாவில் மெய் தலைவருமானம் நல்ல முறையில் வளர்ச்சியடைந்திருக்கிறதா?

(1) இந்தியாவில் அன்றாட விலையில் அமைந்த தலா வருமானம் இருபத்தேழு ஆண்டு காலத்தில் 336 சதவிகிதம் உயர்ந்துள்ளது. ஆனால், நிலையான விலையில் அமைந்த மெய் தலா வருமானத்தை நோக்கினால் அதனுடைய ஏற்றம் மிகக் குறைவாகவே இருந்திருக்கிறது. 1950-51, 1977-78 இவ்விரு

ஆண்டுகளுக்கு இடைப்பட்ட 27 ஆண்டு காலத்தில் மெய் தலா வருமானம் 38 சதவிகிதம்தான் உயர்ந்துள்ளது.

## பட்டியல் 4—5

1950-51லிருந்து 1977-78 உட்பட்ட இடைக்காலத்தில் இந்தியாவின் தலா வருமான வளர்ச்சி

| ஆண்டு 1 | அன்றாட விலையில் 2 | நிலையான விலையில் (1960–61) 3 | அன்றாட விலையில் 4 | நிலையான விலையில் (1960–61) 5 |
|---|---|---|---|---|
| 1950-51 | 266.5 | 269.0 | 100.00 | 100.00 |
| 1955-56 | 255.0 | 267.8 | 95.68 | 99.55 |
| 1960-61 | 306.0 | 306.0 | 114.82 | 113.75 |
| 1965-66 | 425.0 | 311.0 | 159.47 | 115.61 |
| 1670-71 | 627.5 | 345.8 | 235.46 | 128.55 |
| 1671-72 | 645.4 | 343.6 | 242.18 | 127.73 |
| 1672-73 | 687.6 | 337.5 | 258.01 | 125.46 |
| 1973-74 | 849.8 | 340.1 | 318.87 | 126.43 |
| 1974-75 | 989.0 | 343.0 | 371.11 | 127.51 |
| 1975-76 | 1005.5 | 366.0 | 377.30 | 136.06 |
| 1676-77 | 1030.0 | 377.0 | 386.49 | 137.92 |
| 1977-78 | 1163.0 | 372.0 | 436.40 | 138.29 |

(2) மேற்கத்திய நாடுகளான ஐக்கிய அமெரிக்கா, கானடா, இங்கிலாந்து, பிரான்சு போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்தியாவினுடைய தலா வருமான அளவு மிகக் குறைவாக இருக்கிறது.

(3) மெய் தலா வருமானம் ஏன் மிகக் குறைந்த அளவில் வளர்ச்சியடைந்திருக்கிறது? இரண்டு காரணங்களைக் கூறலாம். நாட்டு வருமானத்தில் 1976 - 77ல் 8 சதவிகித வளர்ச்சி இருந்தது. மற்றைய ஆண்டுகளில் ஆண்டுச் சராசரி வளர்ச்சி 4 சதவிகிதத்துக்கும் குறைவாகத்தான் இருந்திருக்கிறது. நாட்டு வருமான வளர்ச்சியே இவ்வாறு குறைவாக இருக்கும்போது தலா வருமான வளர்ச்சி குறைவாக இருப்பதில் வியப்பொன்றுமில்லை. மக்கள் தொகைப் பெருக்கம் மிக அதிக அளவில் இருந்ததே இரண்டாவது முக்கியக் காரணமாகும். 1951ல் இந்தியாவின் மக்கள் தொகை 36.1 கோடியாக இருந்தது. அது 1978ல் 63.1

கோடிக்குப் பெருகியது. மக்கள் தொகையில் 75 சதவிகித வளர்ச்சி இருந்திருக்கிறது. எனவே, நாட்டு வருமானத்திலிருந்த சிறு வளர்ச்சியையும் மக்கள் தொகைப் பெருக்கம் உட்கொண்டு விட்டது. நாட்டின் தலா வருமானத்தில் நல்ல முன்னேற்றம் இருக்கவேண்டுமெனில் மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப் படுத்தவேண்டியது மிகவும் அவசியமாகிறது.

## மக்களிடையே நிலவும் வருமானப் பகிர்வு

தலா வருமானம் ஒரு சராசரிக் கணக்குதான். அதை வைத்துக்கொண்டு மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை எடை போட முடியாது என்று மேலே குறிப்பிட்டோம். நாட்டு வருமானம் மக்களிடையே எவ்வாறு பகிர்வு செய்யப்பட்டிருக்கிறது என்னும் விவரம் கிடைத்தால் வாழ்க்கைத் தரத்தைப்பற்றி ஓரளவுக்குத் தெளிவான கருத்தைப் பெறலாம். இத்தகைய பகிர்வு 'மக்களிடையே நிலவும் வருமானப் பகிர்வு' (Interpersonal income distribution) என்றழைக்கப் பெறுகிறது. வருமானம் மக்களிடையே சரிசமமாகப் பகிரப்பெறும் நிலையை எந்த ஒரு நாட்டிலும் காண முடியாது. ஒவ்வொரு நாட்டிலும், உயர்ந்த வருமானங்களை ஈட்டும் பணக்காரர்களும், அதற்கும் முற்றிலும் எதிரிடையாக மிகக் குறைந்த அளவில் வருமானங்களைப் பெறும் ஏழ்மை நிலையில் உள்ளவர்களும் இருக்கிறார்கள். நாட்டு வருமானத்தின் பெரும் பங்கு ஒரு சிறு சதவிகித மக்கள் கையில் பதுங்கிக் கிடக்க, மக்களில் பெரும்பான்மையோர் மிகக் குறைந்த வருமானங்களைப் பெற்று வந்தால் அந்நாட்டின் வருமானம் மிகவும் ஏற்றத் தாழ்வான முறையில் பகிர்வு செய்யப்பட்டிருக்கிறது என அறியலாம். இதற்கு மாறாக, உயர்ந்த வருமானம் உள்ளவர்களுக்கும், குறைந்த வருமானம் உள்ளவர்களுக்குமிடையே நிலவும் இடைவெளியும் வேறுபாடும் குறைவாக இருந்தால் அந்நாட்டில் வருமானம் ஓரளவிற்குச் சரிசமமான முறையில் பகிர்வு செய்யப்பட்டிருக்கிறது எனக் கூறலாம்.

வருமானம் இவ்வாறு பகிர்வு செய்யப்பட்டிருக்கிறது என்னும் தகவல் மிகவும் முக்கியம் வாய்ந்ததாகும். பொருளியல் ஆய்விற் பயனுள்ளதும் ஆகும். ஆனால், எவ்வாறு நாட்டு வருமானம் பகிர்வு செய்யப்படுகிறது என்பதுபற்றி நம்பத் தகுந்த, தெளிந்த புள்ளி விவரங்கள் இந்தியாவில் கிடைப்பதில்லை. டில்லியில் இருக்கும் 'தேசியப் பொருளியல் செயல்முறை ஆராய்ச்சிக் கழகம்' (National Council of Applied Economic Research) இந்தியாவில் வருமானப் பகிர்வு எவ்வாறு இருக்கிறது என்பதை ஓரளவுக்காவது தெரிந்து கொள்ளும் நோக்கத்துடன் ஒரு மாதிரி ஆய்வினை

(Sample Survey) மேற்கொண்டது. இதன்படி சில குடும்பங்களைத் தேர்ந்தெடுத்து, ஒவ்வொரு குடும்பத்திற்கும் எவ்வளவு வருமானம் வருகிறது என்னும் தகவலைத் திரட்டினார்கள். இவ்வாறு திரட்டிய புள்ளி விவரங்களை வைத்துக் கொண்டு மொத்தக் குடும்பங்களையும் வெவ்வேறு வருமான மட்டத்தில் வகைப்படுத்தினார்கள். இவ்வாய்வின் விவரங்களைப் பட்டியல் 4 - 6ல் காணலாம்.

## பட்டியல் 4—6

இந்தியக் குடும்பங்களின் வருமானப் பகிர்வு முறை (1967-68)

| ஆண்டு வருமான மட்டங்கள் ரூ | குடும்பங்களின் எண்ணிக்கை (சதவிகிதத்தில்) | மொத்த வருமானத்தில் பங்கு (சதவிகிதத்தில்) |
|---|---|---|
| ரூ. 500-க்கும்கீழ் | 4.4 | 0.5 |
| 500- 999 | 19.3 | 5.5 |
| 1000- 1999 | 33.2 | 17.5 |
| 2000- 2999 | 15.5 | 13.6 |
| 3000- 4999 | 14.4 | 20.2 |
| 5000- 7499 | 6.9 | 14.7 |
| 7500- 9999 | 3.2 | 9.9 |
| 10000-14999 | 2.2 | 9.4 |
| 15000-19999 | 0.4 | 2.6 |
| 20000-க்கு மேல் | 0.5 | 6.1 |
| எல்லாப் பிரிவுகளும் | 100.0 | 100.0 |

ஆதாரம் : தேசியப் பொருளியல் செயல்முறை ஆராய்ச்சிக் கழகம்.

நமது நாட்டில் ஏழை பணக்காரருக்கு இடையே உள்ள வருமான வேறுபாடு மிகவும் அதிகமாக இருக்கிறது என்னும் உண்மையை இப்பட்டியலிலிருந்து அறிகிறோம். இந்தியாவில் ஒரு குடும்பத்தில் சராசரி 5 நபர்கள்தான் இருக்கிறார்கள். இத்தகைய ஒரு குடும்பத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 1000 வருமானம் கிடைக்கிறதென்றால் அதை ஒரு குறைந்த வருமானமாகத்தான் கருத வேண்டும். இதற்கு நேர் எதிர்மாறாக, ஆண்டொன்றுக்கு ரூ. 20000-க்கும் மேலாக வருமானம் ஈட்டும் சில குடும்பங்களும் இருக்கின்றன. சுருங்கக்கூறின், இந்தியாவில் நாட்டு வருமானம் மிகவும் ஏற்றத்தாழ்வான முறையில் பகிர்வு செய்யப்படுவதாக

மேற்கண்ட ஆய்வு உணர்த்துகிறது. நாட்டினுடைய மொத்த வருமானத்தில் ஏறக்குறைய 30 சதவிகிதம், மொத்த மக்கள் தொகையில் 6.3 சதவீதத்தினரிடம் பதுங்கிக் கிடக்கிறது. மற்றொரு புறம் பார்த்தால் மொத்த மக்கள் தொகையில் ஏறக் குறைய 25 சதவிகிதத்தினருக்கு, நாட்டு வருமானத்தில் கிடைக்கும் பங்கு 6 சதவிகித அளவுதான். இதிலிருந்து நாட்டில் வருமானப் பகிர்வு எவ்வளவு ஏற்றத்தாழ்வுகள் கொண்டதாகத் திகழ்கிறது என்பது தெற்றெனப் புலனாகும்.

பட்டியல் 4—6ல் கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்களை வேறு வகையில் மாற்றம் செய்து பட்டியல் 4—7 அமைக்கப்பட்டிருக்கிறது. மொத்தக் குடும்பங்களைப் பதின் கூறுகளாக்கி (decile groups) நாட்டு வருமானத்தில் ஒவ்வொரு கூறுக்கும் கிடைக்கும் பங்கு என்ன என்பதை இப்பட்டியல் விளக்குகிறது.

## பட்டியல் 4—7

வருமானப் பகிர்வு (அனைத்திந்தியா) 1967 - 68

| குடும்பங்கள் பதின் கூறுகள் | வருமானத்தில் பங்கு (சதவிகிதத்தில்) |
|---|---|
| அடிமட்டத்தில் உள்ள 10 சதவிகிதக் குடும்பங்கள் | 1.80 |
| அடுத்த 10 சதவிகிதம் | 3.00 |
| அடுத்த 10 சதவிகிதம் | 3.71 |
| அடுத்த 10 சதவிகிதம் | 4.64 |
| அடுத்த 10 சதவிகிதம் | 5.78 |
| அடுத்த 10 சதவிகிதம் | 7.04 |
| அடுத்த 10 சதவிகிதம் | 8.97 |
| அடுத்த 10 சதவிகிதம் | 11.81 |
| அடுத்த 10 சதவிகிதம் | 16.76 |
| அடுத்த 10 சதவிகிதம் | 36.49 |
| 100 | 100.00 |

இப்பட்டியல் கீழ்க்காணும் முறையில் தயாரிக்கப்பட்டது. எல்லாக் குடும்பங்களும் அவை ஒவ்வொன்றின் வருமானத்திற்கு ஏற்றாற்போல ஏறு வரிசையில் வைக்கப்பட்டன. இவ்வாறு தயாரிக்கப்பட்ட பட்டியல், ஒவ்வொரு பிரிவிலும் 10 சதவிகிதக்

குடும்பங்கள் அடங்கும்படி 10 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. இவ்வாறு பிரிப்பதன் மூலம் 10 சதவிகிதக் குடும்பங்கள் அடங்கிய ஒவ்வொரு பிரிவுக்கும் நாட்டு வருமானத்தில் கிடைக்கக்கூடிய பங்கு என்ன என்பது தெரிய வரும். கீழ்மட்டத்தில் இருக்கும் 10 சதவிகிதக் குடும்பத்தினருக்கு நாட்டு வருமானத்தில் 1.80 சதவிகிதப் பங்குதான் கிடைக்கிறது என்று பட்டியலிலிருந்து அறிகிறோம். ஆனால், மேல்மட்டத்தில் இருக்கும் 10 சதவிகிதக் குடும்பத்தினர் நாட்டு வருமானத்தில் 36.49 சதவிகிதப் பங்கை அபகரித்துக் கொள் கிறார்கள். இதையே நாட்டின் மொத்த வருமானத்தில் பெரும் பங்கு ஒரு சிறு பகுதியினர் கையில் இருக்கிறது என்றும் கூறலாம். வருமானப் பகிர்வில் எவ்வளவு ஏற்றத்தாழ்வுகள் இருக்கின்றன என்று பட்டியல் உணர்த்துகிறது. அடிமட்டத்தில் குறைந்த வருமானமுள்ளவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் மொத்த மக்கள் தொகையில் சுமார் 40 சதவிகித எண்ணிக்கை கொண்டவர்கள். ஆனால், நாட்டு வருமானத்தில் இவர்களுக்குக் கிடைக்கும் பங்கு 13.15 சதவிகிதம்தான். நடுத்தர நிலையில் உள்ளவர்களுடைய வருமானம் சற்று உயர்வாக இருக்கிறது. மக்கள் தொகையில் இவர்களுடைய எண்ணிக்கை 30 சதவிகிதம். நாட்டு வருமானத்தில் இவர்களுடைய பங்கு 21.79 சதவிகிதமாகும். மேல் மட்டத்தில் உயர் வருமானமுள்ள செல்வந்தர்கள் இருக்கிறார்கள். எண்ணிக்கையில் இவர்கள் 30 சதவிகிதம் இருக்கின்றனர். ஆனால், நாட்டு வருமானத்தில் இவர்களுக்குக் கிடைக்கும் பங்கு 65.06 ஆக இருக்கிறது.

## இந்தியாவில் வறுமை

பொருளாதார வல்லுநர்கள் வறுமைப் பிரச்சினையின் மீது இன்று அதிக கவனம் செலுத்தி வருகின்றனர். அண்மை ஆண்டு களில் இந்தியாவில் இத்தலைப்பு அதிக முக்கியத்துவம் பெற் றுள்ளது. தொடர்ச்சியாக நாட்டில் பல ஐந்தாண்டுத் திட்டங்கள் வரையப்பட்டுச் செயலாற்றப்பட்டுள்ளன. பல்வேறு திட்ட மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டாலும்கூட பெரும் பான்மையான மக்கள் நாட்டின் பொருளாதார முன்னேற்றத் தினால் எவ்விதப் பலனையும் அனுபவிக்காமல் தொடர்ந்து வறுமை யிலேயே உழன்று கொண்டிருக்கின்றனர் என்னும் கருத்து வலு வடைய ஆரம்பித்தது. எனவே, வறுமைப் பிரச்சினையின்மீது இன்று எல்லோரும் அதிகக் கவனம் செலுத்துகின்றனர். வறுமையை எந்த அடிப்படையில் விளக்கிக் கூறுவது? வறுமைக் கோட்டை எந்த மட்டத்தில் வரைவது? நாட்டு மக்களில் எத்துணை சதவிகிதத்தினர் வறுமைக் கோட்டுக்குக் கீழே

உள்ளனர்? வறுமைக்கு அடிப்படைக் காரணங்கள் யாவை? வறுமையை முற்றிலும் அகற்றாவிட்டாலும் அதனை எவ்வாறு குறைப்பது? இத்தகைய வினாக்கள் திட்டக் குழு, அரசாங்கம் இவற்றின் கவனத்தைக் கவர்ந்தன. ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய ஒரு முக்கியக் குறிக்கோள் வறுமையைப் போக்குவது என்பதாகும். அது முதற்கொண்டு வறுமையை அகற்றுவதற்குத் தொடர்ந்து முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.

மேலே குறிப்பிட்டதைப்போல மக்களிடையே நாட்டு வருமானப் பகிர்வு எவ்வாறு இருக்கிறது என்பதுபற்றி உறுதியான புள்ளி விவரங்கள் இல்லை: இப்புள்ளி விவரங்கள் இல்லாமல் நாட்டில் எத்துணை சதவிகிதத்தினர் வறுமை நிலையில் இருக்கின்றனர் என்று கண்டுபிடிப்பது மிகவும் கடினம். நேரிடையான தகவல்கள் கிடைக்காத இந்த நிலையில், வறுமையை விளக்கிக் காட்ட மறைமுகமான ஒரு வழி கையாளப்படுகிறது. எந்த அடிப்படையில் ஒரு மனிதன் ஏழையாக இருக்கிறான் என்று நாம் கூற முடியும்? ஒருவருடைய நிலையை மற்றொருவருடைய நிலையோடு ஒப்பிட்டுப் பார்க்கும் கண்ணோட்டத்தில்தான் வறுமை என்னும் சொல்லைப் பயன்படுத்துகின்றோம். மாதம் ஒன்றுக்கு ரூ. 2000 ஈட்டும் 'அ' என்பவருடன் ஒப்பிட்டால் ரூ. 1000 வருவாய் பெறும் 'ஆ' என்னும் நபர் ஏழை. ஆனால், நிலையான பொருளில் 'ஆ' ஏழை என்று கூறமுடியாது. ஏனெனில், இந்தியச் சூழ்நிலையில் 1000 ரூபாய் வருமானத்தில் ஒருவர் வசதியாகக் காலங்கழிக்கலாம். ஆனால், போதிய உணவு கிடைக்க வழியில்லாமல் பட்டினியால் அல்லலுறும் 'இ' என்னும் நபரை ஓர் ஏழை என்றழைத்தால் தவறில்லை. ஆகவே, வறுமையை விளக்கப் பட்டினியை ஓர் அளவுகோலாக உபயோகிக்கலாம். ரோம் நகரத்தில் இருக்கும் உணவு மற்றும் வேளாண்மை மேம்பாட்டுக்கான நிறுவனம் (F.A.O.) ஒரு விரிவான ஆய்வை மேற்கொண்டதன் பிறகு, ஒரு மனிதன் சக்தி குன்றாமல் வாழ ஒரு நாளுக்குச் சராசரி 2,300 கலோரிகளடங்கிய உணவு உட்கொள்ள வேண்டும் என்று கணக்கிட்டது. இக்குறிப்பின் துணையோடு பார்த்தால் ஒரு நாளுக்கு 2,300 கலோரி சத்துள்ள உணவை உண்பதற்குத் தேவையான பணம் கிடைக்காத ஒருவரை ஏழையாகக் கருதலாம். கிராமப்புறங்களில் வாழும் மக்களுக்கு ஒரு நாளுக்கு தலா 2,400 கலோரிகளும், நகர்ப்புற மக்களுக்கு 2,100 கலோரிகளும் தேவை என்று இந்தியத் திட்டக் குழு கணக்கிட்டது. இந்த அளவு உணவை உட்கொள்ள ஒருவருக்கு 1960-61ல் நிலவிய விலைகளின் அடிப்படையில் குறைந்தது மாதம் ஒன்றுக்கு ரூ. 20 தேவை என்றும் திட்டக் குழு கணக்கிட்டது. 1972-73ல்

நிலவிய விலைகளின் அடிப்படையில் தலா வருமானம் மாதத்திற்கு ரூ. 40 ஆகும்.

எனவே, 1960-61இல் நிலவிய விலைகளின் அடிப்படையில் மாதம் ஒன்றுக்குத் தலா வருமானம் ரூ. 20 என்னும் மட்டத்தில் வறுமைக்கோடு வரையப்பட்டது. மாதம் ஒன்றுக்கு 20 ரூபாய்க்கும் கீழாகத் தலா வருமானம் ஈட்டும் எல்லோரும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் இருப்பதாகக் கருதப்படுகிறார்கள். இந்தியாவில் வறுமைப் பிரச்சினை ஒரு பெரும் பிரச்சினையா? இன்று நாட்டின் மொத்த மக்கள்தொகையில் ஏறக்குறைய 50 சதவிகிதத் தினர் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளனர் என்பதை அறிய உண்மையில் வருத்தமாக இருக்கிறது. 1977-78இல் கிராமப்புறங் களில் வாழும் மக்களில் 48 சதவிகிதத்தினரும் நகர்ப்புற மக்களில் 41 சதவிகிதத்தினரும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் இருந்தனர் என்று கணக்கிட்டிருக்கின்றனர்.

நாட்டில் 50 சதவிகிதத்தினர் இவ்வாறு வறுமைக் கோட்டுக்குக் கீழ் இருப்பதற்கு மூல காரணங்கள் யாவை? ஓர் அடிப்படையான கேள்வியை எடுத்துக் கொள்வோம். ஒரு மனிதன் ஏன் ஏழையாக இருக்கிறான்? அம்மனிதனுக்கு வருமானம் இல்லை அல்லது போதிய வருமானம் கிடைக்கவில்லை என்பதால் அவன் ஏழையாக இருக்கின்றான். ஒரு மனிதனுக்கு வருமானம் எவ்வாறு கிடைக்கிறது? இரண்டுவித வருமான மூலங்கள் இருக்கின்றன. (1) நிலம், வீடு, வங்கிகளில் வைப்புகள், கம்பெனிகளில் பங்கு இவை போன்ற சொத்துகளுக்கு ஒருவருக்கு உரிமை இருந்தால் வருமானத்திற்கு நிச்சயம் வழி உண்டு. (2) சொத்துகள் ஏதேனும் இல்லாவிட்டாலும் அவருக்கு ஏதேனும் ஒரு தொழிலில் தனித் திறமையாவது இருக்க வேண்டும். நாட்டில் தேவைப்படும் திறமைகளில் ஏதேனும் ஒன்று அவருக்கு இருந்தால் எளிதில் வேலை கிடைக்கும்; வருமானத்திற்கும் வழி உண்டு. எனவே, சொத்துக்கு உரியவராகவோ அல்லது திறமை படைத்தவராகவோ இருந்தால் ஒருவருக்கு வருமான வாய்ப்பு உண்டு என்று கூறலாம். மேற்கூறிய இரண்டு தகுதிகளும் இல்லாத காரணத்தால் தான் நாட்டில் பெரும்பகுதியினர் ஏழ்மை நிலையில் இருக் கின்றனர். கிராமங்களில் வாழும் மக்களில் பெரும்பான்மை யோருக்கு நிலத்தின் மூலமாகத்தான் வருவாய் கிடைக்கிறது. ஆனால், இருக்கும் நிலத்தில் பெரும்பகுதி ஒரு சிறுபான்மை எண்ணிக்கை உள்ளவர்கள் கையில்தான் இருக்கிறது. பெரும் பான்மை மக்கள் நிலமில்லாத வறியவர்களாக இருக்கிறார்கள். மேலும், மனித உழைப்புக்கு இருக்கும் தேவையைவிட அளிப்பு

அதிகமாக இருக்கிறது. திறமை படைத்தவர்களுக்குக்கூட வேலை கிடைப்பது கடினமாக இருக்கிறது. ஏனெனில், திறமை படைத்தவர்களுக்குக்கூட நாட்டில் தேவை குறைந்த அளவில் தான் இருக்கின்றது.

## மாநிலங்களிடையே தலா வருமானம்

இந்தியா பரந்த நிலப்பரப்பையும், பெருத்த மக்கள் தொகையையும் உள்ளடக்கிய ஒரு நாடு என்று நீங்கள் அறிவீர்கள். அரசியலமைப்பு முறையில் நாம் கூட்டாட்சி வழியைப் பின்பற்றுவதால் நம் நாட்டில் மைய அரசு ஒன்று நாட்டளவில் இயங்கி வருகின்றது; மாநில அளவில் மாநில அரசுகளும் இருக்கின்றன. வெவ்வேறு மாநிலங்களில் தலா வருமானம் எந்த மட்டத்தில் இருக்கின்றது என்பதைக் காணலாம். நாடு முழுவதுக்குமான தலா வருமான சராசரி (அன்றாட விலையில்) 1975-76இல் ரு. 1020 ஆக இருந்தது. இந்தச் சராசரியை அடிப்படையாக வைத்துக்கொண்டு மாநிலங்களைத் தலா வருமானத்திற்கு ஏற்றாற்போல வகைப்படுத்தலாம். மாநிலங்களைப் பின்வரும் ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கலாம்: (அ) மிகக் குறைந்த தலா வருமானம் உள்ள பிரிவு, (ஆ) குறைந்த வருமானம் உள்ள பிரிவு, (இ) நாட்டின் சராசரிக்குச் சமநிலையில் உள்ள பிரிவு, (ஈ) உயர் தலா வருமானம் உள்ள பிரிவு, (உ) மிக உயர்ந்த தலா வருமானம் உள்ள பிரிவு. எந்தெந்த மாநிலங்கள் எந்தெந்த பிரிவுகளில் உள்ளன என்பதைப் பட்டியல் 4 - 8 விளக்குகிறது.

### பட்டியல் 4—8

மாநிலங்களில் தலா வருமான மட்டம் (அன்றாட விலையில்)
(ஆண்டு 1975-76)

---

'அ' பிரிவு: தலா வருமானம் ரு. 500-க்கும் ரு. 700-க்கும் இடையில் உள்ளவை

| | | |
|---|---|---|
| 1. | பீஹார் | ரு. 661 |

'ஆ' பிரிவு: தலா வருமானம் ரு. 701-க்கும் ரு. 900-க்கும் இடையில் உள்ளவை

| | | |
|---|---|---|
| 1. | உத்தரப் பிரதேசம் | ரு. 721 |
| 2. | ஒரிஸ்ஸா | ரு. 747 |
| 3. | அஸ்ஸாம் | ரு. 776 |
| 4. | மத்தியப் பிரதேசம் | ரு. 787 |

5. மணிப்பூர் ரூ. 798
6. இராஜஸ்தான் ரூ. 850
7. ஜம்மு, காஷ்மீர் ரூ. 883
8. தமிழ் நாடு ரூ. 889

'இ' பிரிவு : தலா வருமானம் ரூ. 901-க்கும் ரூ. 1100-க்கும் இடையில் உள்ளவை

1. ஆந்திரப் பிரதேசம் ரூ. 903
2. கேரளா ரூ. 909
3. கர்நாடகம் ரூ. 1005
4. ஹிமாசலப் பிரதேசம் ரூ. 1051
5. மேற்கு வங்காளம் ரூ. 1083

'ஈ' பிரிவு : தலா வருமானம் ரூ. 1101-க்கும் ரூ. 1300-க்கும் இடையில் உள்ளவை

1. குஜராத்து ரூ. 1205
2. ஹரியானா ரூ. 1247

'உ' பிரிவு : தலா வருமானம் ரூ. 1300-க்கும் மேல் உள்ளவை :

1. மஹாராஷ்டிரா ரூ. 1376
2. பஞ்சாப் ரூ. 1597

---

## தமிழ்நாட்டில் மாநில வருமானம்

ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு மாநிலமும் அம்மாநில அளவில் உற்பத்தியாகும் வருமானத்தை மதிப்பீடு செய்கிறது. மாநில வருமானத்தை எவ்வாறு கணிப்பது என்பதற்கான விதி முறைகளை மத்திய அரசைச் சார்ந்த 'மைய புள்ளி விவர அமைப்பு' (Central Statistical Organisation) வகுத்துக் கொடுக்கிறது. எனவே, எல்லா மாநிலங்களும் ஒரே முறையைத்தான் கடைப்பிடிக்கின்றன. மாநில வருமானத்தைக் கணக்கிடும் பொறுப்பைப் தமிழ்நாட்டில் புள்ளி விவரத்துறை (Statistics Department) வகுத்து வருகிறது.

மாநில வருமானத்தில் உள்ள போக்கு : *1950-51, 1975-76* இவ்விரண்டு ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட 25 ஆண்டு காலத்தில் மாநில வருமானம் எந்த வகையில் வளர்ச்சியடைந்து வந்தது என்பதைப் பட்டியல் 4—9 காட்டுகிறது. மாநில வருமான வளர்ச்சி நிலையான விலை, அன்றாட விலை இரண்டின் அடிப்படை

யிலும் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஒவ்வோர் ஆண்டிலும் மாநில வருமானம் எந்த அளவில் இருந்தது என்பதைப் பட்டியல் 4—9 விளக்குகிறது. மாநில வருமானத்திலிருந்து சதவிகித வளர்ச்சியைப் பட்டியல் 4—10 காட்டுகிறது. 1950-51இல் இருந்த வருமான மட்டத்தை 100 ஆக எடுத்துக்கொண்டு பின்வரும் ஆண்டுகளில் ஏற்பட்ட சதவிகித மாற்றங்களை இப்பட்டியல் தெளிவாக்குகிறது.

## பட்டியல் 4—9

அன்றாட விலையில், நிலையான விலையில் (1960-61 விலையில்) தமிழ்நாட்டின் மாநில வருமானம் 1950-51 லிருந்து 1975-76 வரை

| ஆண்டு | அன்றாட விலையில் (கோடி ரூபாயில்) | நிலையான விலையில் (1960-61 விலையில்) (கோடி ரூபாயில்) |
|---|---|---|
| 1950-51 | 615.77 | 774.92 |
| 1955-56 | 769.00 | 963.54 |
| 1960-61 | 1111.85 | 1111.85 |
| 1965-66 | 1494.22 | 1174.28 |
| 1970-71 | 2404.05 | 1424.78 |
| 1971-72 | 2716.56 | 1507.5S |
| 1672-73 | 2906.92 | 1518.78 |
| 1973-74 | 3595.16 | 1566.93 |
| 1974-75 | 3805.93 | 1403.48 |
| 1975-76 | 4100.25 | 1597.86 |

## பட்டியல் 4—10

அன்றாட விலையில் நிலையான விலையில் (1960-61 விலையில்) மாநில வருமானத்திலிருந்த வளர்ச்சி (1950-51 லிருந்து 1975-76 வரை)


| | மாநில வருமான வளர்ச்சி | | | மாநில வருமான வளர்ச்சி | |
|---|---|---|---|---|---|
| ஆண்டு | அன்றாட விலையில் | நிலையான விலையில் (1960-61) | ஆண்டு | அன்றாட விலையில் | நிலையான விலையில் (1960-61) |
| 1950-51 | 100.00 | 100.00 | 1971-72 | 441.16 | 194.55 |
| 1955-56 | 124.88 | 124.34 | 1972-73 | 472.08 | 195.99 |
| 1960-61 | 180.56 | 143.48 | 1973-74 | 583.85 | 202.21 |
| 1965-66 | 242.66 | 151.54 | 1974-75 | 618.08 | 181.11 |
| 1970-71 | 390.41 | 183.86 | 1975-76 | 665.87 | 206.20 |

பட்டியல்கள் 4—9, 4—10-லிருந்து என்ன அறிகின்றோம்?

(1) அன்றாட விலையில் 1950-51ல் ரூ. 616 கோடியாக இருந்த மாநில வருமானம் 1975-76ல் ரூ. 4,100 கோடிக்கு உயர்ந்தது. இவ்விருபத்தைந்து ஆண்டுக் காலத்தில் அன்றாட விலையிலான மாநில வருமானத்தில் 565 சதவிகித வளர்ச்சி இருந்தது.

(2) ஆனால், நிலையான விலையில் 1950-51ல் ரூ. 757 கோடியாக இருந்த மாநில வருமானம் 1975-76ல் ரூ. 1,598 கோடிக்குத்தான் உயர்ந்தது. அதாவது, இருபத்தைந்து ஆண்டுக் காலத்தில் 106 சதவிகித வளர்ச்சிதான் இருந்தது.

(3) அன்றாட விலையில் அமைந்த மாநில வருமான வளர்ச்சிக்கும் நிலையான விலையிலான வருமான வளர்ச்சிக்கும் இடையே இருக்கும் பெருத்த வேறுபாட்டுக்குக் காரணம் விலை மட்டத்தில் இருந்த கட்டுக்கடங்காத ஏற்றமேயாகும்.




படம் 4 — 2. தமிழ்நாட்டில் மாநில வருமானத்தின் பெருக்கம் (1950 - 51 முதல் 1975 - 76 வரை)

(4) நாட்டு வருமானத்தில் இருந்ததைப்போல, தமிழ் நாட்டு மாநில வருமான வளர்ச்சியிலும் ஆண்டாண்டுக்கு நிறைய

வேறுபாடுகள் இருந்தன. சில ஆண்டுகளில் வருமான வளர்ச்சி கணிசமான அளவில் இருந்தது. ஆனால், மற்ற ஆண்டுகளில் வருமான வளர்ச்சி மிகக் குறைவாகவே இருந்தது.

(5) வழக்கத்திற்கு மாறாக நிலையான விலையில் அமைந்த மாநில வருமானம், 1971-75ல் இறக்கமடைந்தது. இது இதற்கு முன் ஏற்படாத ஒரு நிகழ்ச்சி. மாநிலத்தைப் பொறுத்தவரை இது கேடு விளைவித்த ஆண்டாகும். மாநிலத்தின் பெரும் பகுதியிலும் வறட்சி நிலை நிலவியது. அந்த ஆண்டில் விவசாய உற்பத்தி வெகுவாக இறக்கமடைந்தது.

## பட்டியல் 4—11

தமிழ்நாட்டில் தலா வருமானம்
(1950-51 லிருந்து 1975-76 வரை)

| ஆண்டு | அன்றாட விலையில் ரூ. | நிலையான விலையில் (1960-61) ரூ. | ஆண்டு | அன்றாட விலையில் ரூ. | நிலையான விலையில் (1960-61) ரூ. |
|---|---|---|---|---|---|
| 1950-51 | 204 | 257 | 1971-72 | 653 | 362 |
| 1955-56 | 241 | 302 | 1972-73 | 686 | 358 |
| 1960-61 | 334 | 334 | 1973-74 | 832 | 363 |
| 1965-66 | 403 | 317 | 1974-75 | 855 | 315 |
| 1970-71 | 588 | 348 | 1975-76 | 901 | 351 |

## பட்டியல் 4—12


தலா வருமான வளர்ச்சி
(1950-51 லிருந்து 1975-76 வரை)

| ஆண்டு | அன்றாட விலையில் | நிலையான விலையில் | ஆண்டு | அன்றாட விலையில் | நிலையான விலையில் |
|---|---|---|---|---|---|
| 1950-51 | 100.00 | 100.00 | 1971-72 | 320·10 | 140.86 |
| 1955-56 | 118.14 | 117.51 | 1972-73 | 336.27 | 139.30 |
| 1960-61 | 163.73 | 129.96 | 1973-74 | 407.84 | 141.25 |
| 1965-66 | 197.55 | 123.35 | 1974-75 | 419.12 | 122.57 |
| 1970-71 | 288.24 | 135.41 | 1975-76 | 441.67 | 136.58 |

## தமிழ்நாட்டில் தலா வருமானம்

தொடர்ச்சியாகப் பல ஆண்டுகளில் தமிழ்நாட்டில் தலா வருமானம் எந்த அளவில் இருந்தது என்பதனைப் பட்டியல் 4—11 காட்டுகிறது. தலா வருமானம் அன்றாட விலையிலும் நிலையான விலையிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆண்டாண்டுக்குத் தலா வருமானத்தில் இருந்த சதவிகித வளர்ச்சியைப் பட்டியல் 4—12 காட்டுகிறது. 1950-51ல் நிலவிய தலா வருமானத்தை 100 என்று எடுத்துக்கொண்டு பின்வரும் ஆண்டுகளில் அதில் இருந்த மாற்றத்தைச் சதவிகிதக் கணக்கில் பட்டியல் 4—12 காட்டுகிறது.

(1) அன்றாட விலையில் 1950-51ல் ரூ. 204 ஆக இருந்த தலா வருமானம் 1975-76ல் ரூ. 901-க்கு ஏற்றமடைந்தது என்பதைப் பட்டியல் 4—11ல் காண்கிறோம். ஆனால், நிலையான விலையில்




படம் 4 — 3. தமிழ்நாட்டில் தலா வருமான வளர்ச்சி
(1950 - 51 முதல் 1975 - 76)

பார்த்தால் வளர்ச்சி மிகக் குறைவாகவே இருந்தது. 1950-51ல் 257 ரூபாயாக இருந்த நிலையான விலையிலான தலா வருமானம் 1975-76ல் 351 ரூபாய்க்குத்தான் உயர்ந்தது.


(2) நாட்டளவில் இருந்ததைப் போன்றுதான் தலா வருமானத்தில் மாநில அளவிலும் மிகக் குறைந்த அளவே வளர்ச்சி இருந்தது என்பதை அறிகிறோம். மாநில அரசு திட்டக் காலத்தில் அதிக அளவில் முதலீடு செய்தது. பல மேம்பாட்டுத் திட்டங்களையும் நிறைவேற்றியது. இருப்பினும் மாநில தலா வருமானத்தில் பெரும் மாற்றம் ஏதும் நிகழவில்லை. அனைத்திந்தியாவைப் போன்றே இங்கும் மக்கள்தொகைப் பெருக்கமே இதற்கான அடிப்படைக் காரணமாகும். நிலையான விலையிலான மாநில வருமானம் இருபத்தைந்து ஆண்டுகளில் இரண்டு மடங்குக்கு மேல் உயர்ந்தது. ஆனால் ஏற்றமடைந்த வருமானத்தை அதிக மக்கள் பகிர்ந்து கொள்ள வேண்டியிருந்தது. மாநிலத்தில் 1951-ல் 37.1 மில்லியனாக இருந்த மக்கட்தொகை 1976-ல் 45.1 மில்லியனுக்குப பெருகியது.

## மாநில வருமானத்தில் பல துறைகளின் பங்கு

ஒரு நாட்டில் ஓராண்டு காலத்தில் உற்பத்தியாகும் பண்டங்கள், பணிகள் இவை அனைத்தினுடைய பண மதிப்புதான் நாட்டு வருமானம் என்று முன்பே விளக்கிக் கூறினோம். நாட்டு வருமானத்தை ஒரு நீரோடைக்கும் ஒப்பிட்டோம். விவசாயத் துறையின் உற்பத்தி, தொழில் துறையின் உற்பத்தி, மற்றும் வங்கிகள், ஆயுள் காப்பு கம்பெனிகள், வணிகம், போக்குவரத்து போன்ற துறைகள் ஆற்றும் பணிகள் இவை ஒவ்வொன்றின் பண மதிப்பும் ஒவ்வொரு வாய்க்கால்போல் நாட்டு வருமானம் என்னும் நீரோடையைச் சென்றடைகிறது. நாட்டில் நடைபெறும் ஒவ்வொரு பொருளாதார நடவடிக்கையும் இவ்வாறு நாட்டு வருமானத்தைக் கூட்டுகிறது. இத்தகைய பலவிதமான பொருளாதார நடவடிக்கைகளை வல்லுநர்கள் முறைப்படுத்தி மூன்று பெரும் பிரிவுகளில் அடக்கியிருக்கின்றனர். இம் மூன்று முக்கியப் பிரிவுகளும் பின்வருமாறு: (1) முதற் பகுதி (Primary Sector), (2) இரண்டாம் பகுதி (Secondary Sector), (3) சார்பு நிலைப் பகுதி (Tertiary-Sector). வேளாண்மை கால்நடை, காட்டுவளம், மீன்வளம், சுரங்கங்கள் இவைகளனைத்தும் முதற் பகுதியில் அடங்கும். உற்பத்தி செய்யும் சிறு, பெருந்தொழில்கள் அனைத்தும் இரண்டாம் பகுதியில் அடங்கும். போக்குவரத்து, வங்கிகள், நிதி நடவடிக்கைகள் போன்ற நடவடிக்கைகள் அனைத்தும் சார்பு நிலைப் பகுதியைச் சேர்ந்தவை.

பேராசிரியர் சைமன் குஸ்நெட்ஸ் என்னும் பொருளாதார மேதை ஹார்வார்டு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர். நோபல் பரிசு பெற்றவர். நாட்டு வருமானம், பொருளாதார முன்னேற்றம்

இத்தலைப்புகளில் அவர் முன்னோடியாக இருந்து சிறந்த பணி யாற்றியிருக்கிறார். அவர் தன்னுடைய முனைப்பான ஆராய்ச் சியின் மூலம் ஒரு முடிவுக்கு வந்தார். அவருடைய முடிவு பின் வருமாறு: ஒரு நாடு பொருளாதாரத் துறையில் முன்னேற்ற




படம் 4 — 4. தமிழ்நாட்டு மாநில வருமானத்தில் முப்பிரிவுகளின் பங்கு (சதவிகிதத்தில்)

மடைந்தால் அந்நாட்டு வருமானத்தில் முதல் பகுதியின் பங்கு இறக்கமடையும். முன்னேற்றத்தின் முதல் கட்டத்தில் முதல் பகுதியின் பங்கு இவ்வாறு இறக்கமடையும்போது இரண்டாம் பகுதியின் பங்கு ஏற்றமடையும். அடுத்த கட்டத்தில் சார்பு நிலைப் பகுதியின் பங்கு உயரத் தொடங்கும். இத்தகைய

மாற்றங்களை ஒரு பொருளாதார அமைப்பில் ஏற்படும் அடிப்படையான மாற்றங்களாகக் கருதலாம். நாட்டளவில் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டாலும் நாட்டின் ஒரு பகுதியில் முன்னேற்றம் ஏற்பட்டாலும் இத்தகைய அடிப்படை மாற்றங்கள் நிகழ்வது இயற்கை. இத்தகைய மாற்றங்கள் தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கின்றனவா என்று காணலாம். 1950-51க்கும் 1978-79க்கும் இடைப்பட்ட காலத்தை எடுத்துக்கொண்டு மாற்றங்களைக் காண்போம். பட்டியல் 4–13 ம், வரைபடம் 4–4ம் தமிழ்நாட்டில் ஏற்பட்ட மாற்றங்களை விளக்கிக் காட்டுகின்றன.

## பட்டியல் 4—13

தமிழ்நாட்டில் அன்றாட விலையிலான வருமானத்தில் மூன்று பிரிவுகளின் பங்கு (எண்கள் சதவிகிதக் கணக்கில் கொடுக்கப்பட்டுள்ளன)

| ஆண்டு | முதற் பகுதி | இரண்டாம் பகுதி | சார்பு நிலைப் பகுதி | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1950-51 | 53.3 | 13.7 | 33.0 | 100.0 |
| 1960-61 | 49.2 | 16.0 | 34.8 | 100.0 |
| 1977-78 | 31.4 | 32.4 | 36.3 | 100.0 |

1950-51 ல் மாநில வருமானத்தில் 53.3 சதவிகிதமாக இருந்த முதற் பகுதியின் பங்கு 1977 - 78–ல் 31 – 4 சதவிகிதத்திற்குக் குறைந்திருக்கிறது. இரண்டாம் பகுதி, சார்பு நிலைப் பகுதி இவற்றின் பங்குகள் உயர்ந்திருக்கின்றன. 1950 - 51இல் 13.7 சதவிகிதமாக இருந்த இரண்டாம் பகுதியின் பங்கு 1977 - 78இல் 32.3 சதவிகிதத்திற்கு உயர்ந்திருக்கிறது. சார்பு நிலைப் பகுதியின் பங்கும் உயர்ந்திருக்கிறது; ஆனால் குறைந்த அளவில்தான் உயர்ந்திருக்கிறது. 33 சதவிகிதத்திலிருந்து 36.3 சதவிகிதத்திற்கு உயர்ந்திருக்கிறது. இம்மாற்றங்களிலிருந்து, தமிழ்நாட்டின் பொருளாதார அமைப்பில் 27 ஆண்டுக் காலத்தில் நல்ல முறையில் அடிப்படை மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை அறியலாம்.

# 5. மக்கள்தொகை

மக்கள்தொகையை விளக்கிக் கூறும் பிரிவை 'மக்கள் மரபியல்' (Demography) என்று அழைக்கிறோம். மக்கள் மரபியலில் முனைப்பாக ஈடுபாடு கொள்ளும் நிபுணர்களை 'மக்கள் மரபியல் வல்லுநர்கள்' (Demographers) என்றழைக்கிறோம். பொருளாதார வளர்ச்சி, மக்கள்தொகைப் பெருக்கம் இவை இரண்டிற்குமிடையே உள்ள தொடர்பு என்ன என்பது பற்றி பொருளியல் வல்லுநர்களும் மக்கள் மரபியல் வல்லுநர்களும் பல ஆய்வுகளை மேற்கொண்டிருக்கிறார்கள். ஒரு நாடு பொருளாதார வளர்ச்சியில் பல்வேறு கட்டங்களைக் கடந்து செல்லும்போது, வெவ்வேறு கட்டங்களில் வெவ்வேறு வீதத்தில் அதனுடைய மக்கள்தொகைப் பெருக்கமடைகின்றது. சில நேரங்களில் மக்கள்தொகை குறைந்த வேகத்தில் பெருக்கமடைகின்றது; சில சமயங்களில் மிக விரைவான பெருக்கம் ஏற்படுகின்றது. எந்தக் காலக் கட்டத்தில் மக்கள்தொகையின் வளர்ச்சி சாதாரணமாக இருக்கும்? எப்போது அது விரைவில் பெருகும்? வெவ்வேறு கட்டங்களில் வளர்ச்சி விகிதத்தில் மாற்றங்கள் நிகழ்வதற்கு அடிப்படைக் காரணங்கள் என்ன? இத்தகைய வினாக்களுக்குப் பொருளியல் வல்லுநர்களும், மக்கள் மரபியல் வல்லுநர்களும் இன்று ஆதாரபூர்வமான விடைகள் தருகின்றார்கள்.

## மக்கள்தொகைப் பெருக்கத்தின் காரணங்கள்

ஒரு நாட்டினுடைய மக்கள்தொகையில் ஏற்றமோ அல்லது இறக்கமோ ஏற்படுவதற்கு மூன்று அடிப்படைக் காரணங்களைக் குறிப்பிடலாம். அவையாவன: 1. மக்களுடைய இறப்பு வீதம்; 2. பிறப்பு வீதம்; 3. மக்களுடைய குடிப்பெயர்ச்சி. ஓராண்டு காலத்தில் 1000 நபர்களுக்கு எத்தனை குழந்தைகள் பிறக்கின்றன என்பதைப் பிறப்பு வீதம் என்றும், எத்தனை நபர்கள் இறக்கிறார்கள் என்பதை இறப்பு வீதம் என்றும் அழைக்கின்றோம். ஓராண்டில் பிறப்பு வீதம் நிலையாக இருக்க இறப்பு வீதத்தில் இறக்கம் இருந்தால் மக்கள்தொகையில் முன்பிருந்ததைக் காட்டிலும் வளர்ச்சி அதிகமாக இருக்கும். இதற்கு எதிர்மறையான நிலை இருந்தால் மக்கள்தொகையில் வளர்ச்சி குறைவாக

இருக்கும். இறப்பு வீதம், பிறப்பு வீதம் இரண்டிலும் இறக்கம் இருக்கின்றது; ஆனால் பிறப்பு வீதத்தில் இருப்பதைவிட இறப்பு வீதத்தில் இருக்கும் இறக்கம், அதிக அளவில் இருக்கின்றது என்று வைத்துக் கொள்வோம். இந்த நிலையில் மக்கள்தொகையின் வளர்ச்சி எத்தகையதாக இருக்கும்? மக்கள்தொகையில் முன்பிருந்ததைவிட விரைவான வளர்ச்சி இருக்கும். இவ்விரு காரணிகளைப் போன்றே குடிப் பெயர்ச்சியும் ஒரு நாட்டின் மக்கள் தொகையின் அளவை பாதிக்கும். குடிப்பெயர்ச்சி உள் குடிப் பெயர்ச்சி (in migration), வெளிக் குடிப்பெயர்ச்சி (out migration) என இரு வகைகளில் நிகழலாம். ஒரு நாட்டிலிருந்து மக்கள் குடி பெயர்ந்து பிறநாடுகளில் குடி அமர்ந்தால் இது வெளிக் குடிப் பெயர்ச்சியாகும். பிற நாடுகளிலிருந்து மக்கள் இடம் பெயர்ந்து ஒரு நாட்டில் குடியமர்ந்தால், இது உள் குடிப்பெயர்ச்சியாகும். கடந்த காலத்தில் குடிப்பெயர்ச்சி சாதாரண வழக்கமாக இருந்து வந்தது. வேலை கிடைப்பதற்கும் பொருள் ஈட்டுவதற்கும் நல்ல வாய்ப்புகள் நிறைந்த நாடுகளுக்கு மக்கள் பெருமளவில் குடிப்பெயர்ந்தனர். இம்முறையில்தான் பண்டைக் காலத்தில் இந்தியர்கள் பலர் பர்மா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற வெளி நாடுகளுக்குச் சென்று அங்கேயே நிரந்தரமாகக் குடியமர்ந்தனர். ஆனால், இன்று அந்நிலை முற்றிலும் மாறிவிட்டது. பெரும்பாலும் எல்லா நாடுகளும் இன்று பிற நாடுகளிலிருந்து மக்கள்குடிப்பெயர்ந்து வருவதைத் தடை செய்கின்றன. எனவே பழங்காலத்தில் இருந்ததைப்போல இக்காலத்தில் குடிப்பெயர்ச்சி பரவலாக இல்லை. இக்காரணத்தால், மக்கள்தொகை வளர்ச்சியை பாதிப்பதில் குடிப்பெயர்ச்சியை ஒரு முக்கியக் காரணிமாக எடுத்துக் கொள்ளாமல் எஞ்சிய இறப்பு வீதம், பிறப்பு வீதம் ஆகிய இரு காரணிகளின் மீதும் நம்முடைய கவனத்தை இப்போது திருப்புவோம்.

பிறப்பு வீதமும் இறப்பு வீதமும் ஏன் அவ்வப்போது மாற்றமடைகின்றன? இவற்றில் இருக்கும் மாற்றங்களுக்கு அடிப்படைக் காரணங்கள் என்ன? பசி, பட்டினி, ஊட்டக் குறைவான உணவு, நோய்கள், கொள்ளை நோய், போதிய மருத்துவ வசதி இல்லாமை இவையே சிசு மரணம் அதிகமாக இருப்பதற்கும் வயது முதிர்ச்சியில்லாமல் பலர் இறப்பதற்கும் காரணங்களாக அமைகின்றன. மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்வாக உள்ள நோய்த் தடுப்பும் மருத்துவ வசதிகளும் போதிய அளவில் உள்ள ஒரு நாட்டில் இறப்பு வீதம் குறைவாக இருப்பதைக் காண்கிறோம். ஆனால், பிறப்பு வீதமோ மக்களுடைய மன நிலையைப் பொறுத்திருக்கிறது. திருமணமான தம்பதிகள் தங்களுக்கு அதிகக் குழந்தைகள்

வேண்டுமென்று விரும்புகிறார்களா அல்லது குறைந்த எண்ணிக்கை போதுமென்று நினைக்கிறார்களா என்பதைப் பொறுத்துத்தான் பெரும்பாலும் பிறப்பு வீதம் அமைகின்றது. சாதாரணமாக, கல்வி பயின்ற பெற்றோர்களைவிட எழுத்தறிவில்லாத பெற்றோர்களுக்கு அதிகக் குழந்தைகள் இருப்பதை அன்றாட வாழ்க்கையில் காண்கிறோம். இதேபோன்று நகர்ப்புறங்களில் வசிப்பவர்கள் தங்களுடைய குடும்ப அளவைக் கட்டுப்படுத்திக் கொள்கின்றனர். கிராமங்களில் வசிக்கும் மக்களுக்குப் பெரும்பாலும் அதிகக் குழந்தைகள் இருக்கின்றன. செல்வந்தர்களுக்கு குழந்தைகள் அதிகமிருப்பதில்லை; சிலருக்குப் பிறப்பது கூட இல்லை; ஏழ்மை நிலையில் இருப்பவர்களுக்குக் குழந்தைகள் அதிகமாக இருக்கின்றன. இவற்றிலிருந்து நாம் அறிய வருவது என்னவென்றால் பிறப்பு வீதம், இறப்பு வீதம் இவை ஒவ்வொன்றிற்கும் தனித்தன்மையான காரணங்கள் இருக்கின்றன என்பதாகும்.

## மக்கள்தொகைப் பெருக்கத்தில் பல கட்டங்கள்

### கட்டம் ஒன்று

நாட்டினுடைய மக்கள்தொகையைப் பொறுத்த அளவில் மூன்று வித வளர்ச்சிக் கட்டங்கள் இருக்கின்றன என்று பொருளியல் வல்லுநர்கள் கூறுகிறார்கள். மக்கள் வேலை வாய்ப்புக்கும் வருமானத்திற்கும் வேளாண்மையையே சார்ந்திருக்கும் நிலையில் பொருளாதாரத் துறையில் வளர்ச்சியடையாமல் பின்தங்கி நிற்கும் ஒரு நாட்டில் இறப்பு வீதம், பிறப்பு வீதம் இரண்டுமே உயர்வாக இருக்கும். இந்நிலையில் இருக்கும் நாட்டில் பெரும்பான்மையான மக்கள் ஏழ்மை நிலையில் இருப்பர்; தேவையான அளவிற்கு அவர்களுக்கு உணவு கிடைப்பதில்லை, உண்ணும் உணவும் வலுவூட்டுவதாக இருக்காது. அவர்கள் வசிக்கும் சுற்றுச் சூழல் துப்புரவற்றதாக இருக்கும், நோயும் பிணியும் பரவலாக இருக்கும். போதிய மருத்துவ வசதிகள் இருக்காது. இந்நிலையில் இருக்கும் நாட்டில் இறப்பு வீதம் உயர்வாக இருப்பது இயற்கையே. அதே நேரத்தில் பிறப்பு வீதமும் உயர்வாக இருக்கும். இதற்குக் காரணம் மக்களில் பெரும்பான்மையோர் தற்குறிகளாக இருப்பதே. கல்வியறிவில்லாமல் அறியாமையில் மூழ்கிக் கிடக்கும் அம்மக்கள் தங்களுடைய குடும்பங்களின் அளவைக் கட்டுப்படுத்தும் அவசியத்தை அறவே உணர்ந்திருக்கமாட்டார்கள். மேற்கூறிய இயல்புகளை உடைய நாட்டில் மக்கள்தொகையில் அதிக வளர்ச்சியிருக்காது. ஏனெனில், பிறப்பு வீதம் உயர்வாக இருந்தாலும் கூடவே இறப்பு வீதமும் அதிகமாக இருப்பதால் ஒன்றுக்கொன்று

ஈடுசெய்வதாக அமைந்துவிடுகின்றன. இந்நிலையில் இருக்கும் நாடு மக்கள்தொகை வளர்ச்சியில் முதல் கட்டத்தில் இருக்கின்றது எனலாம்.

## கட்டம் இரண்டு

மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள ஒரு நாட்டில் பொருளாதார முன்னேற்றம் ஏற்படுகிறது என்று வைத்துக்கொள்வோம். இத்னைத் தொடர்ந்து அந்நாட்டில் பல மாறுதல்கள் நிகழும். தொழில் சார்ந்த நடவடிக்கைகள் பரவலாக மேற்கொள்ளப்படும்; வேலை வாய்ப்புக்கான வசதிகள் பெருகும். சராசரித் தலா வருமானம் ஏற்றமடையும். மக்களுடைய வாழ்க்கைத் தரமும் உயரும். மக்களுடைய நல் வாழ்க்கையைப் பெருக்கும் நோக்கத்துடன் மருத்துவ வசதி, சுகாதார வசதி இவற்றிற்காக அரசு அதிக அளவில் முதலீடு செய்யும். இதனால் காலரா, அம்மை போன்ற கொள்ளை நோய்கள் தடுக்கப்படும். இறப்பு வீதம் உடனடியாகக் குறையத் தொடங்கும். ஆனால், பிறப்பு வீதம் உடனடியாக மாறாமல் பழைய நிலையிலேயே இருக்கும். ஏனெனில், மக்களுடைய மனப்பான்மை உடனடியாக மாறுவதில்லை. கல்வி அறிவு பரவுவதற்கு அதிக காலம் வேண்டியிருக்கிறது. மக்களுடைய மனோ நிலை மாறுவதற்கு நீண்ட காலம் பிடிக்கிறது. சுருங்கக் கூறின், பொருளாதார முன்னேற்றத்தின் தொடக்க காலத்தில் இறப்பு வீதம் உடடினயாக இறக்கமடைகிறது; ஆனால், பிறப்பு வீதம் சிறிது காலம் தாமதித்தே இறக்கமடையத் தொடங்குகிறது. இந்நிலையில் மக்கள்தொகை நாட்டில் முன்பிருந்ததை விட உயர்ந்த விகிதத்தில் பெருக்கமடைகிறது. இந்நிலையை இரண்டாவது கட்டமாகக் கருதலாம்.

## கட்டம் மூன்று

நாட்டில் பொருளாதார முன்னேற்றம் மேலும் தொடர்ந்து ஏற்பட்டு வந்தால் மக்கள்தொகை வளர்ச்சி மூன்றாம் கட்டத்தை அடைகிறது. பொருளாதாரத் துறையில் நீண்ட கால முன்னேற்றம் இருந்தால் கல்வியிலும் நல்ல வளர்ச்சி இருக்கும். மக்கள் எல்லோரும் கல்வியறிவு உடையவர்களாகத் திகழ்வர். முற்போக்குக் கருத்து அவர்களிடையே நன்கு வளர்ச்சியுறப் பெற்றிருக்கும். எல்லோருக்கும் எளிதில் வேலை கிடைக்கும் நிலை உண்டாகும். உறுதியாக வருவாய் ஈட்டலாம், அதிக அளவில் வருவாய் ஈட்டலாம் என்னும் திட நம்பிக்கை அவர்களிடையே ஏற்படும். அவர்களுடைய மனோநிலையும் மாற்றமடையும். குழந்தைகளை அதிக அளவில் பெறுவதா, குறைந்த அளவில்

பெறுவதா என்பதுபற்றி நன்றாகச் சிந்தித்து இவற்றால் எழக் கூடிய நன்மை தீமைகளைத் தாமே சீர்தூக்கிப் பார்க்கும் பக்குவ நிலையும் அவர்களுக்கு இருக்கும். பிறப்பு வீதம் வெகுவாகக் குறையத் தொடங்கும். மூன்றாம் கட்டமாகிய இந்நிலையை அடைந்த நாட்டில் மக்கள்தொகை வளர்ச்சி மிகவும் குறைந்து விடும். மொத்த மக்களின் எண்ணிக்கை ஸ்வீடன், மேற்கு ஜெர்மனி, ருஷ்யா போன்ற நாடுகளில் இன்று காணப்படுவதைப் போல குறையக்கூடச் செய்யலாம். பொருளாதார முன்னேற்றம், மக்கள் தொகை வளர்ச்சி இவ்விரண்டினிடையே தொடர்பு இருக் கிறதா? இருந்தால் அது எத்தன்மை வாய்ந்தது? என்னும் வினாக் களுக்குத் தெளிவான ஒரு விளக்கம் நமக்கு இப்பொழுது கிடைக் கின்றது. பொருளாதார முன்னேற்றம் தொடக்கக் கட்டத்தில் இருக்கும் ஒரு நாட்டில் மக்கள்தொகை மிக உயர்வாகப் பெருக்க மடையும். ஆனால், முன்னேற்றம் தொடர்ந்து நீடித்து வந்தால் சிறிது காலத்திற்குப் பிறகு மக்கள்தொகைப் பெருக்கம் தடைபடு கிறது. மக்கள்தொகை குறைந்த அளவிலேயே வளர்ச்சியுறும்.

## அலுவல் வகை அமைப்பில் (Occupational Pattern) மாற்றம்

பொருளாதார முன்னேற்றம், மக்கள்தொகை வளர்ச்சி இவ்விரண்டினிடையே மற்றொரு தொடர்பும் இருக்கிறது. நாட்டில் மக்கள் பல்வேறு அலுவல்களை மேற்கொள்கின்றனர். அவர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை மூன்று பிரிவுகளில் அடக்க லாம். அவை: 1. சிலர் வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, காடு வெட்டுதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். 2. சிலர் ஆலைத் தொழில்கள், வணிகம் போன்ற நடவடிக்கைகளை மேற் கொள்கின்றனர். 3. சிலர் வங்கிகள், போக்குவரத்து, ஆயுள் காப்பு நிறுவனங்கள், மருத்துவம், பொறி இயல் போன்ற நட வடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். முதல் பிரிவில் வரும் நடவடிக்கை களை 'முதற் பகுதி' (Primary Sector), இரண்டாம் பிரிவில் வரும் நடவடிக்கைகளை 'இரண்டாம் பகுதி' (Secondary Sector), மூன்றாம் பிரிவில் வரும் நடவடிக்கைகளைச் 'சார்பு நிலைப் பகுதி' (Tertiary Sector) என்று பொருளியலில் பாகுபாடு செய்திருக்கிறார் கள். அலுவல்களில் ஈடுபட்டிருக்கும் மக்கள் அனைவரையும் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் மேற்கூறிய மூன்று பகுதிகளில் மேற் கொண்டிருக்கும் தொழிலுக்கு ஏற்ப அவர்களை வகைப்படுத்தினால் 'மக்களுடைய அலுவல் வகைக் அமைப்பு' (Occupational Pattern of People) நமக்குக் கிடைக்கும். பொருளாதார முன்னேற்றத் திற்கும் அலுவல் வகை அமைப்பிற்கும் நெருங்கிய தொடர்பு இருக் கிறது. ஒரு நாடு பொருளாதாரத் துறையில் வளர்ச்சியடையும்

பொழுது முன் கூறிய மூன்று பகுதிகளில் ஈடுபடும் தொழிலாளர் எண்ணிக்கையின் சதவிகிதமும் மாறுதலடைகின்றது. இக் கருத்தை சற்று ஊன்றிப் படிக்க வேண்டியது அவசியமாகிறது. கோலின் கிளார்க் என்பவர் பெரும் புகழ் பெற்ற ஒரு பொருளியல் வல்லுநர். வளர்ச்சியடைந்த ஒரு நாட்டில் (Developed Country), அலுவல்களில் ஈடுபட்டுள்ள மொத்த நபர்களில் பெரும்பகுதியினர் 'சார்பு நிலைப் பகுதி'யில் இருப்பர்; ஆனால் வளர்ந்து வரும் ஒரு நாட்டில் (Developing economy) 'சார்பு நிலைப் பகுதி' யில் குறைந்த விகிதத்தினரும், 'முதற் பகுதி' யில் உயர்ந்த சதவிகிதத் தினரும் இருப்பர் என்று அவர் எடுத்துக் காட்டினார். சராசரித் தலா வருமானம் உயர்வடைந்து ஒரு நாட்டில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டால் அந்நாட்டின் 'அலுவல் வகை அமைப்பி'லும் மாற்றம் ஏற்படும் என்று கோலின் கிளார்க் அவர்கள் மேற்கொண்ட ஆய்வின் வாயிலாக அறிகிறோம். நாட்டில் பொருளாதார வளர்ச்சி நிகழும்பொழுது 'முதற் பகுதி' யில் இருக்கும் பெருக் கத்தை விட 'இரண்டாம் பகுதி', 'சார்பு நிலைப் பகுதி' இவ்விரண் டிலும் விரைவான பெருக்கம் ஏற்படுகின்றது. எனவே, சராசரித் தலா வருமானம் மிக உயர்ந்த அளவில் இருக்கும். நாடுகளில் வேலைகளில் ஈடுபட்டிருக்கும் மொத்த நபர்களில் ஒரு சிறு

## பட்டியல் 5—1

சில நாடுகளின் தலா வருமான அளவுகள், வேளாண்மையில் ஈடு பட்டிருந்தவர்களின் சதவிகிதங்கள் இவற்றை விளக்கும் பட்டியல்: (ஆண்டு 1970)

| நாடு | அன்றாட விலையில் கணிக்கப்பெற்ற தலா வருமான அளவு (ஐக்கிய அமெரிக்க டாலரில்) | வேலைகளில் ஈடுபட்டிருந்த மொத்த நபர்களில் வேளாண்மையில் ஈடுபட்டிருந்தவர்களின் சதவிகிதங்கள் |
|---|---|---|
| இந்தியா | 88 | 70 |
| ஐக்கிய அமெரிக்கா | 4274 | 4 |
| இங்கிலாந்து | 1993 | 3 |
| ஆஸ்திரேலியா | 2434 | 8 |
| கானடா | 3214 | 8 |
| மேற்கு ஜெர்மனி | 2698 | 10 |
| பிரான்சு | 2606 | 14 |

ஆதாரம்: ஐக்கிய நாடுகள் அமைப்பு வெளியிடும் 'புள்ளி விவர ஆண்டு நூல்'—1973.

சதவிகித எண்ணிக்கையில் உள்ளவர்களே வேளாண்மைத் துறையில் ஈடுபட்டிருக்கின்றனர். பட்டியல் 5—1இல் கொடுக்கப் பெற்றுள்ள விவரங்களைக் கூர்ந்து கவனித்தால் இவ்வுண்மை நன்கு புலனாகும். ஐக்கிய அமெரிக்காவில் 1970ஆம் ஆண்டில் சராசரித் தலா வருமானம் 4,274 டாலராக இருந்தது. அந்நாட்டில் வேலைகளில் ஈடுபட்டிருந்த மொத்த நபர்களின் எண்ணிக்கையில் 4 சதவிகிதத்தினரே வேளாண்மையில் ஈடுபட்டிருந்தனர். இந்தியா வில் இதற்கு நேர் எதிர்மாறான நிலையைக் காண்கின்றோம். இந்தியாவில் 1970ஆம் ஆண்டில் தலா வருமானம் 88 டாலராக இருந்தது. ஆனால், வேலைகளில் ஈடுபட்டிருந்த மொத்த நபர் களில் 70 சதவிகிதத்தினர் வேளாண்மையில் ஈடுபட்டிருந்தனர்.

## மக்கள்தொகைக் கணக்கெடுப்பு

நமது நாட்டில் பத்தாண்டுக்கு ஒரு முறை மக்கள்தொகைக் கணக்கெடுப்பை மேற்கொள்கின்றோம். இவ்வாறு கணக்கிடுவதை மக்கள்தொகைக் கணக்கெடுப்பு அல்லது மக்கள்தொகை சென்ஸஸ் என்றழைக்கிறோம்

## மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் வரலாறு

சென்ஸஸ் என்னும் ஆங்கிலச் சொல், ரோம் நாட்டில் வழக்கில் இருந்த 'சென்ஸார்' என்னும் சொல்லிலிருந்து மருவி வந்த ஒன்றாகும். சென்ஸார் என்னும் சொல் அன்று நீதிபதியைக் குறித்தது. பழங்காலத்தில் ரோம் நாட்டில் நீதிபதிகள் ஒவ்வொரு வரும் ஒரு பதிவேட்டினை வைத்திருந்தார்கள். மக்கள் ஒவ்வொரு வரும் எவ்வளவு வரி செலுத்தவேண்டும், யார் யாரைப் போர்ப் பணிக்குப் பதிவாக்கலாம் என்பன போன்ற தகவல்கள் பதிவேடு களில் பதியப்பெற்றன. காலப்போக்கில் பதிவு செய்யும் நீதி பதியின் பதவிப் பெயரைப் பதிவுசெய்யும் பணிக்கும் வழங்க லாயிற்று. மக்கள் செலுத்த வேண்டிய தீர்வைகள், வரிகள் இவற்றை முறையாகக் கணக்கிட வேண்டுமானால் மக்கள் தொகையையும் சரியாகக் கணக்கெடுக்க வேண்டும் என்னும் குறிப்பை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே கௌடில்யர் எழுதிய அர்த்த சாஸ்திரம் வலியுறுத்திக் கூறியிருக்கிறது. நாடு விடுதலை அடைவதற்கு முன்னர், பிரிட்டிஷ் ஆட்சி மக்கள் தொகைக் கணக்கெடுப்பை அவ்வப்போது மேற்கொண்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே இப்பணி மேற்கொள்ளப்பட்டது. ஆனால், வயது, மதம், சாதி, அலுவல், கல்வி நிலை, உடல் ஊனம் போன்ற பல விவரங்களையும் சேக

சிக்கும் வகையில் முறையான கணக்கெடுப்பு 1871ஆம் ஆண்டிலிருந்துதான் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பு நாடு முழுவதையும் உள்ளடக்கவில்லை. அடுத்த கணக்கெடுப்பு 1881ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. இதைத் தொடர்ந்து பத்தாண்டுக்கு ஒரு முறை கணக்கெடுக்கும் முறை நடைமுறைக்கு வந்தது. 1891, 1901, 1911, 1921, 1931, 1941, 1951, 1961, 1971 இவ்வாண்டுகளில் தொடர்ந்து கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. மக்கள்தொகைக் கணக்கெடுப்பதில் நூறாண்டுப் பணி 1971ஆம் ஆண்டில் நிறைவு பெற்றது. கணக்கெடுப்பு இவ்வாறு தொடர்ந்து நெடுங்காலமாக நடைபெற்று வருகிறது என்பதோடு கணக்கெடுக்கும் முறையில் நாடு முதிர்ந்த அனுபவமும் தேர்ச்சியும் பெற்றிருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். உலகில் சில நாடுகளில்தான் பரந்த அளவில் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுகிறது; அவற்றுள் இந்தியாவும் ஒன்று.

## மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் பயன்கள்

மக்கள்தொகையின் அளவு என்ன, அது எந்த விகிதத்தில் வளர்ச்சியடைந்து வருகின்றது, மக்கள் தொகையின் இயல்புகள் யாவை என்பவைபற்றிய புள்ளி விவரங்கள் ஒவ்வொரு நாட்டிற்கும் இன்றியமையாதனவாக இருக்கின்றன. இப்புள்ளி விவரங்கள் பல துறைகளுக்குப் பல வகையில் பயன்படுகின்றன. அண்மைக் காலத்தில் பொருளாதாரத் திட்டம் தீட்டிச் செயல்படும் முறை பரவலாகப் பல நாடுகளிலும் நிலவிவருகின்றது. இம்முயற்சியில் பல மேம்பாட்டுப் பணிகளைத் திட்டமிட்டுச் செயல்படுத்த வேண்டியிருக்கிறது. மக்கள்தொகையை அடிப்படையாகக் கொண்டுதான் உணவு, உடை, வீடுகள், கல்வி, சுகாதாரம் போன்ற பல இனங்களுக்கும் வளர்ச்சிப் பணியை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. மக்களாட்சி முறையில் அரசு இயங்குவதற்கு மக்கள்தொகைப் புள்ளி விவரங்கள் அடிப்படைத் தேவையாக இருக்கின்றன. சட்டமன்றங்களில் எத்தனை அங்கத்தினர்கள் இருத்தல் வேண்டும் என்பதை மக்கள்தொகை அளவின் அடிப்படையில்தான் முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் மக்கள்தொகை எவ்வாறு பரவி நிற்கிறது என்பதைக் கணக்கெடுத்துத்தான் பாராளுமன்ற சட்டமன்ற தொகுதிகளை நிர்ணயிக்கிறார்கள். சமுக இயலில் பல ஆராய்ச்சிகளையும், மாதிரி ஆய்வுகளையும் (Sample Surveys) மேற்கொள்ளும் நிபுணர்களுக்கு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் வாயிலாகக் கிடைக்கும் புள்ளி விவரங்கள் பேருதவி புரிகின்றன. ஒரு நாட்டின் மக்களுடைய

வாழ்க்கை நிலை, அவர்களுடைய இயல்புகள் இவை அனைத்தைப் பற்றியும் நம்பத்தகுந்த முறையில் செய்தி திரட்ட வேண்டுமென்றால் அதற்கு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் அறிக்கை ஒன்றே மூல நூலாக விளங்குகிறது.

## மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் திரட்டப்படும் தகவல்கள்

மக்கள்தொகைக் கணக்கெடுப்பை நாட்டில் வசிக்கும் மக்களுடைய எண்ணிக்கையை மட்டும் கணக்கிட்டுக் கூறும் ஓர் அறிக்கையாகக் கருதக்கூடாது. ஒவ்வொரு தனி நபருடைய சமூக நிலை, பொருளாதார நிலை சம்பந்தமான தகவல்கள் அனைத்தும் சேகரிக்கப்படுகின்றன. ஒவ்வொருவருடைய வயது, அவர் திருமணம் ஆனவரா, இல்லையா, அவர் எம்மதத்தைச் சார்ந்தவர், அவருடைய கல்வி நிலை என்ன, தாய் மொழி என்ன, எத்தொழிலில் ஈடுபட்டிருக்கிறார் போன்ற பல விவரங்களும் பதிவு செய்யப் பெறுகின்றன. விவரங்களை முறையாக, சீராகத் திரட்டுவதற்காக வினாப் பட்டியல்களைப் (Questionnaire) பயன்படுத்துகிறார்கள். புள்ளிவிவரங்களைப் பயன்படுத்துபவர்கள் எப்படி விரும்புகிறார்கள் என்றறிந்து ஒவ்வொரு கணக்கெடுப்பின்பொழுதும் வினாப்பட்டியல்களைத் தக்க முறையில் திருத்தி அமைக்கிறார்கள். ஒவ்வொரு நபரின் இடப்பெயர்ச்சி, அவர் திருமணமானவராக இருந்தால் எந்த வயதில் திருமணம் செய்துகொண்டார் போன்ற புதிய தகவல்களை 1971 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பு திரட்டியது. கீழ்க்காணும் முக்கியத் தகவல்கள் மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் வாயிலாக நமக்குக் கிடைக்கின்றன.

1. மொத்த மக்கள்தொகையில் எத்தனை பேர் நகர்ப்புறங்களில் வசிக்கின்றார்கள்; எத்தனை பேர் கிராமப்புறங்களில் வசிக்கின்றார்கள்;
2. பல வயதுப் பிரிவுகளில் மக்கள்தொகை எவ்வாறு அமைந்திருக்கிறது;
3. வெவ்வேறு மதங்களைச் சார்ந்தவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்;
4. அவரவர் தாய் மொழிக்கு ஏற்ப அமைந்த பகுப்பு;
5. அவரவர் கல்வி மட்டத்திற்கு ஏற்ப அமைந்த பகுப்பு;
6. வேலையில் ஈடுபட்டுள்ளவர்கள் எத்தனை பேர்; வேலையில்லாதவர்கள் எத்தனை பேர்;

7. வெவ்வேறு மாநிலங்களில், பகுதிகளில் மக்கள்தொகை-யின் அடர்த்தி எவ்வாறு இருக்கின்றது.

## இந்தியாவில் மக்கள்தொகையின் அளவு

உலகில் அதிக மக்கள்தொகையைக் கொண்ட நாடுகளுள் இந்தியா இரண்டாவது இடத்தை வகிக்கிறது. முதலிடத்தை சீன நாடு பெற்றிருக்கிறது. கடைசியாக மேற்கொள்ளப்பட்ட 1971-ன் கணக்கெடுப்புப்படி இந்திய மக்களின் எண்ணிக்கை 547.95 மில்லியன்கள் ஆகும். பத்தாண்டுக்கு ஒரு முறைதான் நேரிடைக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுவதால் இரண்டு சென்ஸஸ்களுக்கு இடைப்பட்ட ஒவ்வோர் ஆண்டின் மக்கள்தொகையின் அளவு கணக்கிட்டு மதிப்பிடப்படுகிறது. இடைக்காலத்தில் பிறப்பு, இறப்பு வீதங்கள் எவ்வாறு மாற்றமடைந்திருக்கும், பிற காரணிகளால் எழக்கூடிய வேறுபாடுகள் எவை என்பவற்றை கணக்கில் எடுத்துக்கொண்டு ஒவ்வோர் ஆண்டின் மக்கள்தொகையை மதிப்பிடுகிறார்கள். 1980ஆம் ஆண்டில் நாட்டின் மக்கள்தொகை 647.28 மில்லியன் இருக்கும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. நில அளவை எடுத்துக்கொண்டு நோக்கினால் உலகில் 2.4 சதவிகித அளவுதான் இந்தியாவில் இருக்கிறது. ஆனால், உலகின் மொத்த மக்கள்தொகையில் 15 சதவிகித மக்களை இந்தியா பராமரிக்க வேண்டியிருக்கிறது. ஐக்கிய அமெரிக்கா, மேற்கு-ஜெர்மனி, பிரான்சு, ஸ்பெயின், போலந்து, ஜப்பான் இந்நாடுகள் அனைத்தினுடைய மக்கள்தொகையைச் சேர்த்துப் பார்த்தால் கிடைக்கும் தொகை இந்திய மக்கள்தொகைக்குச் சமமாக இருக்கின்றது. இக்குறிப்பிலிருந்து இந்தியாவின் மக்கள்தொகை எந்த அளவில் இருக்கிறது என்று எளிதில் அறியலாம்.

## இந்தியாவில் மக்கள்தொகைப் பெருக்கம்

இந்தியாவின் மக்கள்தொகைப் பெருத்த அளவில் இருக்கிறது என்பது ஒருபுறமிருக்க அது ஆண்டாண்டுக்கு மிக விரைவாக வளர்ந்து வருகின்றது. 1961, 1971 இவ்விரண்டாண்டுகளுக்கு-மிடையே மக்கள்தொகை ஆண்டொன்றிற்கு 2.5 சதவிகிதத்தில் பெருக்கமடைந்து வந்திருக்கின்றது. இந்த விகிதத்தில் கணக்கிட்டுப் பார்த்தால் ஒவ்வோர் ஆண்டும் 13.5 மில்லியன் மக்கள் பெருகுகிறார்கள் என்பது தெளிவாகும். செக்கோஸ்லோவாக்கியா நாட்டினுடைய மொத்த மக்கள்தொகையும் நம் நாட்டில் ஓர் ஆண்டில் கூடுதலடையும் மக்கள்தொகையும் சமமாக இருக்கின்றது. ஸ்வீடன் நாட்டின் மொத்த மக்கள்தொகை 9 மில்லியன்; ஸ்விட்சர்லாந்தில் 7.5 மில்லியன்; நார்வே நாட்டில் 5 மில்லியன்.

வேறு விதமாகக் கூறினால், செக்கோஸ்லோவாக்கியா நாட்டின் மொத்த மக்கள்தொகையைப் போலவும் ஸ்வீடன் நாட்டின் மொத்த மக்கள்தொகையைப் போல் ஒன்றரை மடங்கும், ஸ்விட்ஸர்லாந்தின் மொத்தத் தொகையைப்போல் ஏறக்குறைய இரண்டு மடங்கும், நார்வேயைப் போல் இரண்டரை மடங்கும் ஒவ்வோர் ஆண்டும் இந்தியா தன்னுடைய மக்கள்தொகையுடன் கூட்டிக்கொள்கிறது எனலாம்.

1953, 1973 இவ்விரு ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் இந்திய மக்கள்தொகை 2.2 சதவிகிதத்தில் பெருக்கமடைந்தது. ஏறக்குறைய இதே வேகத்தில் மக்கள்தொகைப் பெருக்கமடையும் நாடுகள் பல உலகில் உள்ளன. மேற்குறிப்பிட்ட இருபதாண்டுக் காலத்தில் இந்தோனேசியா நாட்டில் மக்கள்தொகையும் 2.2 சதவிகிதத்தில் வளர்ச்சியடைந்தது. இதே காலக் கட்டத்தில் பிரேசில் நாட்டில் இருந்த வளர்ச்சி விகிதம் 2.9; பாகிஸ்தானில் 2.7 சதவிகிதம்; மெக்சிகோ நாட்டில் 3.2 சதவிகிதம்; பிலிப் பைன்ஸ் நாட்டில் 3.0 சதவிகிதம்; பர்மாவில் 2.1 சதவிகிதம்; ஆனால் பொருளாதாரத் துறையில் நல்ல வளர்ச்சியும் முன்னேற் றமும் அடைந்துள்ள நாடுகளில் இதே காலக் கட்டத்தில் மக்கள் தொகை வளர்ச்சி மிதமாகவே இருந்திருக்கின்றது. வளர்ச்சி

## பட்டியல் 5—2

இந்தியாவில் மக்கள்தொகைப் பெருக்கம்
(1901-லிருந்து 1971வரை)

| ஆண்டு | மொத்த மக்கள் தொகை மில்லியன்) | பத்தாண்டுக் காலத்தி லிருந்த வளர்ச்சி விகிதம் (சதவிகி தத்தில்) | மக்கள் தொகை யின் அடர்த்தி சதுர கிலோ மீட்டருக்கு நபர்கள் |
|---|---|---|---|
| 1901 | 238.40 | ... | 77 |
| 1911 | 252.09 | 5.75 | 82 |
| 1921 | 251.32 | 0.31 | 81 |
| 1931 | 278.98 | 11.00 | 90 |
| 1941 | 318.66 | 14.22 | 103 |
| 1951 | 361.09 | 13.31 | 117 |
| 1961 | 439.23 | 21.64 | 142 |
| 1971 | 547.95 | 24.80 | 178 |

ஆதாரம்: சென்ஸஸ் அறிக்கை — 1961, 1971.

விகிதம் ஐக்கிய அமெரிக்கா, ருஷ்யா இவ்விரு நாடுகளில் 1.4 சதவிகிதம்; ஜப்பானில் 1.1 சதவிகிதம்; மேற்கு ஜெர்மனியில் 1 சதவிகிதம்; இங்கிலாந்தில் 0.5 சதவிகிதம்; பிரான்சில் 1 சதவிகிதம்; சீனாவில்கூட வளர்ச்சி 1.7 சதவிகித அளவில்தான் இருந்திருக்கிறது.

1901ஆம் ஆண்டிலிருந்து இந்தியாவின் மக்கள்தொகை எவ்வாறு பெருகியிருக்கிறது என்பதனை பட்டியல் 5 - 2 லிருந்து அறியலாம்.

பட்டியலைக் கூர்ந்து நோக்கினால் 1921ஆம் ஆண்டுக்கு முன்னர் நம்முடைய மக்கள்தொகை ஏற்ற இறக்கங்களைக் கொண்டதாக இருந்தது, வளர்ச்சி வேகம் மிகக் குறைவாக இருந்தது என்றும் அறியலாம். ஆனால் 1921ஆம் ஆண்டிற்குப் பிறகு மக்கள்தொகை தொடர்ந்து ஏற்றமுறும் வகையில் இருந்திருக்கின்றது. பிறப்பு வீதம், இறப்பு வீதம் இரண்டும் ஒரு நாட்டில் மக்கள்தொகை வளர்ச்சியை நிர்ணயிக்கின்றன என்று மேலே கண்டோம். எனவே, 1921-க்குப் பிறகு மக்கள்தொகையில் இருந்த திடீர் ஏற்றத்திற்கான விளக்கத்தை பிறப்பு வீதம், இறப்பு வீதம் சம்பந்தமான புள்ளிவிவரங்களின் துணை கொண்டுதான் பார்க்கவேண்டும். இவ்விவரங்களைப் பட்டியல் 5—3-ல் காணலாம்.

## பட்டியல் 5—3

### இந்தியாவில் பிறப்பு வீதமும் இறப்பு வீதமும்

| காலம் | 1000 நபர்களுக்கு இருந்த ஆண்டுச் சராசரி பிறப்பு வீதம் | 1000 நபர்களுக்கு இருந்த ஆண்டுச் சராசரி இறப்பு வீதம் |
|---|---|---|
| 1901-1910 | 48.1 | 42.6 |
| 1911-1920 | 49.2 | 48.6 |
| 1921-1930 | 46.4 | 36.3 |
| 1931-1940 | 45.2 | 31.2 |
| 1941-1950 | 39.9 | 27.4 |
| 1951-1960 | 40.0 | 18.0 |
| 1961-1970 | 41.1 | 18.0 |
| 1976-ஆம் ஆண்டுக்கு மதிப்பீடு செய்யப்பட்டது | 34.[illegible] | 15.0 |

ஆதாரம் : சென்ஸஸ் அறிக்கை — 1971.

1921ஆம் ஆண்டிற்கு முந்தைய காலத்தில் மக்கள்தொகை கட்டுக்கடங்கி இருந்தது. பிறப்பு வீதம் உயர் மட்டத்தில் இருந்தது; ஆனால் இறப்பு வீதமும் உயர்வாகவே இருந்தது. 1921ஆம் ஆண்டிற்குப் பிறகு பிறப்பு வீதம், இறப்பு வீதம் இவ் விரண்டுமே இறக்கம் கொண்டிருந்தன என்று அறிகின்றோம். ஆனால், இறப்பு வீதத்தில் விரைவான இறக்கம் இருந்திருக் கின்றது; பிறப்பு வீதம் மொத்தமாக இறக்கமடைந்திருக்கின்றது. ஒரு நாடு பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் அடையும் பொழுது அந்நாட்டின் மக்கள்தொகையில் விரைவான வளர்ச்சி இருக்குமென்று மேலே கண்டோம். இதே நிலை நம் நாட்டில் ஏற்பட்டிருக்கிறது என்று இப்பொழுது புலனாகின்றது. இன்னும் எத்தனை ஆண்டுகளுக்கு நம்முடைய மக்கள்தொகை இவ்வாறு வளர்ச்சியடைந்துகொண்டே இருக்கும்? மக்கள்தொகையைப் பொறுத்தளவில் எப்பொழுது இந்தியா மூன்றாம் கட்டத்தை அடையும்? நம்முடைய பிறப்பு வீதம் எப்பொழுது வீழ்ச்சியுறும் என்பதைப் பொறுத்துத்தான் இருக்கிறது இவ்வினாக்களுக்கு விடை. நம்முடைய பிறப்பு வீதம் இப்பொழுது இருக்கும் நிலையி லேயே தொடர்ந்து நீடிக்கும் வரையில் நம்முடைய மக்கள் தொகைப் பிரச்சினைக்கு முடிவு காண்பது என்பது அறவே இயலாது. பிறப்பு வீதத்தை வெகுவாகக் குறைக்க வேண்டியது மிக மிக அவசியமாகின்றது.

## மக்கள்தொகையில் காணப்படும் இயல்புகள்

இந்திய மக்கள்தொகையில் காணப்படும் முக்கிய இயல்பு களை இனிக் கண்டறிவோம்.

### அடர்த்தி (Density)

ஒரு சதுர கிலோ மீட்டருக்குச் சராசரி எத்தனை நபர்கள் இருக்கிறார்கள் என்று குறிப்பிடுவதைத்தான் மக்கள்தொகையின் அடர்த்தி என்றழைக்கிறோம். இந்தியாவில் மக்கள்தொகையின் அடர்த்தி சற்று அதிகமாகவே இருக்கின்றது. 1971-ல் மேற் கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி நாட்டில் சராசரியில் ஒரு சதுர கிலோ மீட்டர் அளவில் 178 நபர்கள் இருந்தனர். இந்த அளவை பிற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கான விவரங் களைப் பட்டியல் 5—4-ல் காணலாம்.

இந்தியாவில் இருப்பதைவிட இங்கிலாந்து, ஜப்பான், மேற்கு ஜெர்மனி முதலிய நாடுகளில் மக்கள்தொகை அடர்த்தி அதிக மாகத்தான் இருக்கின்றது. இதை வைத்துக்கொண்டு நாம் மன

நிறைவு அடையக் கூடாது. ஏனெனில், அடர்த்தியான மக்கள் தொகையை ஒரு நாடு சமாளிக்க முடியுமா, முடியாதா என்பது அந்த நாட்டில் கிடைக்கக்கூடிய சாதனங்களின் அளவு, அந்த நாடு எந்த அளவிற்குத்தொழில் துறையில்முன்னேற்றம்கண்டிருக் கிறது என்பனவற்றைப் பொறுத்துத்தான் இருக்கிறது. ஜப்பான், இங்கிலாந்து, மேற்கு ஜெர்மனி இந்நாடுகள் தொழில் துறையில்

## பட்டியல் 5—4

**சில தேர்ந்தெடுத்த நாடுகளில் மக்கள்தொகை அடர்த்தி (ஆண்டு 1973)**

| நாடு | அடர்த்தி (சதுர கிலோ மீட்டருக்கு நபர்கள்) | நாடு | அடர்த்தி (சதுர கிலோ மீட்டருக்கு நபர்கள் |
|---|---|---|---|
| சீனா | 85 | இங்கிலாந்து | 233 |
| ருஷ்யா | 11 | இத்தாலி | 183 |
| ஐக்கிய அமெரிக்கா | 22 | மெக்சிகோ | 27 |
| இந்தோனேசியா | 84 | பிரான்சு | 95 |
| ஜப்பான் | 292 | பிலிப்பைன்ஸ் | 133 |
| பிரேசில் | 12 | தாய்லாந்து | 71 |
| பங்களாதேஷ் | 514 | ஸ்பெயின் | 69 |
| பாகிஸ்தான் | 83 | போலந்து | 106 |
| மேற்கு ஜெர்மனி | 243 | பர்மா | 44 |

ஆதாரம் : புள்ளி விவர மாத வெளியீடு - ஆகஸ்டு 1974.

மிகவும் செழித்திருக்கின்றன. மக்கள்தொகை அடர்த்தியாக இருந்தாலும் இந்நாடுகளால் உயர்ந்த அளவு தலா வருமானத்தைக் கொடுக்க முடிகிறது. அந்நாட்டு மக்களின் வாழ்க்கை நிலையும் செழிப்புடையதாக இருக்கிறது. ஐக்கிய அமெரிக்கா, ருஷ்யா, ஆஸ்திரேலியா, கானடா இந்நாடுகள் பொருளாதாரத் துறையில் நல்ல வளர்ச்சியடைந்த நாடுகளாக இருக்கின்றன. மேலும் இந்நாடுகள் ஒவ்வொன்றும் பரந்த நிலப்பரப்பைக் கொண்டிருக்கின்றன். இந்நாடுகளில் மக்கள்தொகை அடர்த்தியாக இல்லை.

இந்தியாவில் மக்கள்தொகை அடர்த்தியாக இருக்கிறது என்பதோடு, இந்தியாவில் உள்ள மாநிலங்களுக்கிடையே அடர்த்தியில் பெருத்த வேறுபாடுகள் உள்ளன. நாட்டளவில்

சராசரி அடர்த்தி சதுர கிலோ மீட்டர் அளவுக்கு 178 நபர்கள். இருந்தாலும் கேரள மாநிலத்தில் சதுர கிலோ மீட்டருக்கு 549 நபர்கள் இருக்கிறார்கள். இந்தியாவிலேயே மிக அடர்த்தியான மாநிலம் கேரளம்தான். இதைத் தொடர்ந்து மேற்கு வங்காளம் இரண்டாம் இடத்தை வகிக்கிறது. இங்குச் சதுர கிலோ மீட்டருக்கு 504 நபர்கள் இருக்கிறார்கள். இந்நிலைக்கு மாறாக ராஜஸ்தான் மாநிலத்தில் சதுர கிலோ மீட்டருக்கு 75 நபர்களும் மத்திய பிரதேச மாநிலத்தில் 94 நபர்களும் இருக்கின்றனர். தமிழ் நாட்டில் மக்கள்தொகை அடர்த்தியாகவே இருக்கின்றது. இங்குச் சதுர கிலோ மீட்டருக்கு 317 நபர்கள் இருக்கின்றனர்.

## வயதுப் பாகுபாடு (Age Composition)

மக்கள்தொகையில் வயதுப் பாகுபாடு பிறிதொரு முக்கிய அளவுகோலாகும். வெவ்வேறு வயதுப் பிரிவுகளில் மக்கள் தொகை எவ்வாறு அமைந்திருக்கிறது என்பதையே வயதுப் பாகுபாடு என்றழைக்கிறோம். ஒரு நாட்டின் நுகர்வு, உற்பத்தி, மூலதன ஆக்கம், வேலை நிலை போன்ற முக்கியப் பொருளாதார நடவடிக்கைகளின் அளவையும் போக்கையும் அந்நாட்டின் வயதுப் பாகுபாடு ஓரளவிற்கு நிர்ணயிக்கின்றது அல்லது பாதிக்கின்றது என்று கூறலாம். வயதுப் பாகுபாட்டை அணுகி ஆராய்ந்தால் மக்கள்தொகை எதிர் காலத்தில் எந்த அளவில் வளர்ச்சியடையக்கூடும் என்று மதிப்பிட இயலும். மொத்த மக்கள்தொகையில் ஒரு கணிசமான சதவிகிதத்தினர் இளம் வயதுப் பிரிவில் இருந்தால் அந்நாட்டில் மக்கள்தொகை இளமைப் பிராயத்தில் இருக்கிறது என்று கூறலாம். வளர்ச்சிக்கு வாய்ப்பிருக்கின்றது என்பதுதானே இளமையின் அறிகுறி. எனவே, மக்கள்தொகை இளமைப் பிராயத்தில் இருக்கிறது என்று கூறினால் வருங்காலத்தில் அது நன்றாக வளர்ச்சியடையும் (எண்ணிக்கையில்) என்றுதான் பொருள். இருபதிலிருந்து அறுபது வரையிலான வயதுப் பிரிவில் மிகக் குறைந்த சதவிகிதத்தினரே இருக்கின்றனர் என்றால் அந்நாட்டில் பிறரைச் சார்ந்து வாழும் மக்கள் (dependant) அதிக அளவில் இருக்கின்றனர் என்று ஊகிக்கலாம். வயதில் இருபதிலிருந்து அறுபதுவரை உள்ளவர்கள் உழைக்கும் திறன் படைத்தவர்கள்; தொழிலில் ஈடுபட்டு ஊதியம் ஈட்டக்கூடியவர்கள். ஆனால் இருபது வயதை எட்டாதவர்களும் அறுபதை எட்டியவர்களும் உழைத்து, ஊதியம் ஈட்டும் நிலையில் இல்லாதவர்கள். தங்கள் வாழ்க்கைக்கு அவர்கள் பிறரைத்தான் சார்ந்திருக்க வேண்டியிருக்கின்றது. இவ்வாறு, வயதுப் பாகுபாட்டை ஆராய்வதன் வாயிலாகப் பல பயனுள்ள தகவல்கள்

நமக்குக் கிடைக்கின்றன. பட்டியல் 5—5 இந்திய மக்கள் தொகையின் வயதுப் பாகுபாட்டை விளக்கிக் காட்டுகிறது. மொத்த மக்கள்தொகையின் பெருமளவு சதவிகிதத்தினர் இளம் வயதுப் பிரிவில் இருப்பதை இப்பட்டியலிலிருந்து அறியலாம். இருபது வயதுக்குக் கீழ் உள்ளவர்கள் 50.6 சதவிகித அளவில் இருக்கின்றனர்.

## பட்டியல் 5—5

இந்திய மக்கள்தொகையின் வயதுப் பாகுபாடு (ஆண்டு: 1971)

| வயதுப் பிரிவு | மொத்த மக்கள் தொகையில் சதவிகித அளவு |
|---|---|
| 0- 4 | 14.4 |
| 5- 9 | 15.0 |
| 10-14 | 12.5 |
| 15-19 | 8.7 |
| 20-29 | 15.4 |
| 30-49 | 21.9 |
| 50-59 | 6.1 |
| 60க்கு மேல் | 6.0 |

ஆதாரம் : சென்ஸஸ் அறிக்கை—1971.

### பால் விகிதம்

இந்தியாவில் பெண்களைவிட ஆண்கள் அதிக எண்ணிக்கையில் இருக்கின்றனர். 1971ஆம் ஆண்டு கணக்கெடுப்புப்படி 1000 ஆண்களுக்கு 932 பெண்களே இருக்கின்றனர். தமிழ் நாட்டில் 1000 ஆண்களுக்கு 979 பெண்கள் இருக்கின்றனர். கேரள மாநிலம் இதற்கு விதிவிலக்காக இருக்கிறது. அங்கு 1000 ஆண்களுக்கு 1016 பெண்கள் இருக்கின்றனர்.

### ஆயுட்காலம்

1961, 1971 இவ்விரு ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் ஒரு நபரின் சராசரி ஆயுட்காலம் 46.4 ஆண்டுகளாக இருந்தது என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இக்காலத்தில் ஆயுட்காலம் 47.1 ஆண்டுகள் அளவில் சற்று உயர்வாக இருந்தது. பெண்களுடைய ஆயுட்காலம் 45.6 ஆண்டுகளாக இருந்தது. இக்கால அளவுகள் மிகவும் குறைவே. ஐக்கிய அமெரிக்காவில் ஆண்களின்

சராசரி ஆயுட்காலம் 65 ஆண்டுகள்; பெண்களுக்கு 76 ஆண்டுகள். ஆனால், இந்தியாவில் ஆயுட்காலம் நாளாவட்டத்தில் உயர்ந்து வருகிறது என்று அறிகின்றோம். 1941, 1951 இவ்வாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் 31.1 ஆண்டுகளாக இருந்த சராசரி ஆயுட் காலம், 1951-க்கும் 1961-க்கும் இடையே 41.2 ஆண்டுகளாகவும், 1961-க்கும் 1971-க்கும் இடையே 46.4 ஆண்டுகளாகவும் உயர்ந்திருக்கின்றது.

பல ஐந்தாண்டுத் திட்டங்களை செயல்படுத்தியதன் வாயிலாக நாட்டில் ஓரளவிற்குப் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றது. ஆயுட்காலம் உயர்ந்து வருவதற்கு இம்முன்னேற்றம் ஒரு காரணமாக அமைகின்றது. இறப்பு விகிதம் குறைந்தால் சராசரி ஆயுட்காலம் உயர்வடைகிறது. காலரா, அம்மை போன்ற கொள்ளை நோய்கள் எந்த அளவிற்குக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன, மக்கள் எந்த அளவிற்குப் பிற நோய்களால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், மக்கள் ஊட்டச்சத்துள்ள உணவை அருந்துகிறார்களா, மக்களுடைய வாழ்க்கைத்தரம் எந்த அளவில் இருக்கின்றது என்பவற்றையெல்லாம் பொறுத்துத்தான் ஒரு நாட்டின் இறப்பு வீதம் அமைகிறது என்று இவ்வத்தியாயத்தின் முற்பகுதியில் கண்டோம். நாடு விடுதலை அடைந்த பிறகு மேற்கூறிய இனங்கள் அனைத்திலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இருந்து வருகின்றது. எனவே சராசரி ஆயுட்காலம் உயர்ந்துகொண்டே வருகின்றது.

## நகர்ப்புறங்களிலும் கிராமப்புறங்களிலும் வாழும் மக்களின் சதவிகிதங்கள்

ஒரு நாட்டில் பொருளாதார வளர்ச்சி ஏற்படும்பொழுது நகர்ப்புறங்களில் வாழும் மக்களுடைய எண்ணிக்கை அதிகமாகும்; மொத்த மக்கள்தொகையில் நகர்ப்புறங்களில் வாழும் மக்களுடைய சதவிகிதம் ஏற்றமடையும் என்று கூறலாம். பொருளாதார வளர்ச்சிக் காலத்தில் நகரங்களின் எண்ணிக்கைப் பெருகுகின்றது; ஒவ்வொரு நகரத்தின் அளவும் பெருக்கமடைகின்றது. கிராமப்புறங்களிலிருந்து மக்கள் குடிபெயர்ந்து வேலை தேடி நகர்ப்புறங்களுக்குச் செல்கிறார்கள். எனவே, நகர்ப்புற மக்களின் எண்ணிக்கை நாளா வட்டத்தில் உயர்ந்துகொண்டே போகிறது. நகர்ப்புறங்கள் வளர்ச்சியடைவதற்கு ஆலைத் தொழில் வளர்ச்சியும், போக்குவரத்தில் இருக்கும் முன்னேற்றமும் துணையாக அமைகின்றன. இந்தியாவைப் பொறுத்த அளவில் நகர்ப்புறங்களில் விரைவான வளர்ச்சி இருக்கின்றது என்று கருத முடியாது. நாட்டின்

மொத்த மக்கள்தொகையில் பெரும்பகுதியினர் இன்றும் கிராமங்களி லேயே வசித்து வருகின்றனர். 1971 ஆம் ஆண்டுக் கணக்கெடுப்புப் படி ஏறக்குறைய 80 சதவிகித மக்கள் கிராமங்களிலேயே வேளாண் மையை முக்கியத் தொழிலாக மேற்கொண்டு வாழ்ந்தனர். 1901 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த மக்கள்தொகையில் 11 சதவிகித மக்கள்தான் நகரங்களில் வாழ்ந்தனர். எழுபதாண்டுக் காலத்தில் இந்த அளவு ஓரளவிற்கு உயர்ந்திருக்கின்றது. 1921-ல் நகர்ப்புற மக்களின் அளவு 11.2 சதவிகிதமாகவும், 1941-ல் 14.1 சதவிகித மாகவும், 1961-ல் 18.1 சதவிகிதமாகவும், 1971-ல் 20 சதவிகித மாகவும் உயர்ந்தது. இந்தியாவில் நகர்ப்புற மக்களின் எண் ணிக்கை விகிதம் குறைந்த அளவிலேயே வளர்ச்சியடைந் திருக்கிறது எனலாம்.

## கல்வி நிலை

மக்களுடைய பண்பை வளர்த்திட கல்வி ஒரு சாதனமாக இருக்கின்றது. முறையான கல்வி, தரமான கல்வி பயின்ற ஒருவருடைய போக்கே தனித்தன்மை வாய்ந்ததாக இருக்கும். அவர் தான் ஏற்கும் தொழிலில் முனைப்பாக ஈடுபடுவார், அவ ருடைய உற்பத்தித் திறன் உயர்வாக இருக்கும், நாட்டிற்குப் பயன் படும் ஒரு நல்ல குடிமகனாக நடந்துகொள்வார், பிறருக்கு ஊறு செய்யாத வகையில், பிறர் நலங்கெடாத வகையில் அவர் நடந்து கொள்வார், வறுமை மட்டுமே இந்தியாவின் பெரும் பிரச்சினை என்பதன்று; எழுத்தறிவில்லாமையும் பரவலாக இருக்கிறது. கடந்த முப்பதாண்டுக் காலத்தில் நாட்டு மக்களின் கல்வி நிலை எவ் வளவோ உயர்ந்திருக்கின்றது. இருப்பினும் பெரும்பான்மையான மக்கள் இன்னும் தொடர்ந்து கல்வியறிவு அற்றவர்களாகவே இருந்து வருகின்றனர். 1971ஆம் ஆண்டின் கணக்கெடுப்புப்படி 29 சதவிகித மக்களே கல்வி அறிவு படைத்தவர்களாக இருந்தனர்; எஞ்சிய 71 சதவிகிதத்தினர் தற்குறிகளாக இருந்தனர். 95 சத விகித மக்களுக்கு மேல் படித்தவர்களாக இருக்கும் ஆஸ்திரேலியா, கானடா, இங்கிலாந்து, ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளுடன் இந்தியாவில் நிலவும் நிலைமையை ஒப்பிட்டுப் பார்த்தால் கல்வி அறிவைப் பரப்புவதில் நாம் மேற்கொள்ள வேண்டிய பணி எத் தகைமையது என்பது புலனாகும். எழுத்தறிவின்மை கிராமங்களில் தான் அதிகமாக இருக்கின்றது.

## அலுவல் வகை அமைப்பு (Occupational Pattern)

ஒரு நாட்டில் பொருளாதார முன்னேற்றம் ஏற்படும்பொழுது அந்நாட்டு மக்களின் அலுவல் வகை அமைப்பிலும் மாற்றங்கள்

ஏற்படும் என்று முன்னரே கண்டோம். இந்தியாவில் அலுவல்வகை அமைப்பில் மாற்றம் ஏற்பட்டிருக்கின்றதா? மன நிறைவு அளிக்கும் வகையில் மாற்றம் ஏற்படவில்லை என்றே கூற வேண்டும். வேலை வாய்ப்புக்கும், வருவாய்க்கும் நாட்டில் பெரும்பாலானோர் முதற் பகுதி (Primary sector) நடவடிக்கைகளிலே ஈடுபட்டிருக்கின்றனர். 1971ஆம் ஆண்டுக் கணக்கெடுப்புப்படி மக்களின் அலுவல் வகை அமைப்பு பின்வருமாறு அமைந்திருந்தது. முதற் பகுதியில் 72.1 சதவிகிதத்தினர்; இரண்டாம் பகுதியில் 11.2 சதவிகிதத்தினர்; சார்பு நிலைப் பகுதியில் (Tertiary sector) 16.7 சதவிகிதத்தினர்.

## மக்கள்தொகைப் பிரச்சினை

மக்கள்தொகையில் ஆண்டாண்டிற்கு இருக்கும் பெருக்கம் நாட்டில் ஒரு பெரும் பிரச்சினையாக இருந்து வருகிறது. நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்குப் பெருந் தடையாகவும் இருக்கிறது. நாட்டின் மொத்த மக்கள்தொகைப் பெருத்த அளவில் இருக்கிறது என்பதோடு ஆண்டாண்டுக்கு அதில் ஏற்படும் பெருக்கமும் அதிக அளவில்தான் இருக்கின்றது. நாற்பதாண்டுக் காலக் கட்டத்தில் நம்முடைய மக்கள்தொகை இரட்டிப்பாக வளர்ந்திருக்கிறது. 1931-ல் 279 மில்லியனாக இருந்த மக்கள் தொகை 1971-ல் 548 மில்லியனாகப் பெருகியிருக்கிறது. 1971 லிருந்து 2000-க்குள் மக்கள்தொகை மறுபடியும் இரட்டிக்கும் என்று மக்கள் மரபியல் வல்லுநர்கள் (Demographers) மதிப்பீடு செய்திருக்கின்றார்கள். இங்ஙனம் மக்கள்தொகைப் பெருக்கமடைவதால் நாட்டில் எழக்கூடிய விளைவுகள் யாவை? மக்கள்தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்த வேண்டுமெனில் என்னென்ன தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்?

## மக்கள்தொகை வளர்ச்சியின் விளைவுகள்

1. தலா வருமானத்தில் குறைந்த வளர்ச்சி: பல ஐந்தாண்டு திட்டங்களை வரைந்து, செயல்படுத்தியதன் வாயிலாக நாட்டிற்குக் கிடைத்த பலன்கள் அனைத்தையும் மக்கள்தொகையில் இருந்த பெருக்கம் விழுங்கிவிட்டது என்று கூறலாம். நிலையான விலையில் நிர்ணயிக்கப்பெற்ற நாட்டு வருமானம் 1960 - 61லிருந்து 1975 - 76 வரை 66 சதவிகிதத்தில் உயர்ந்தது. ஆனால் இப் பதினைந்தாண்டுக் காலத்தில் நிலையான விலையில் நிர்ணயிக்கப் பெற்ற தலா வருமானத்தில் 19 சதவிகித உயர்வு தான் இருந்தது. தலா வருமானம் ஆண்டொன்றுக்கு சராசரி 1.5 சதவிகிதமாகிய நத்தை வேகத்தில் வளர்ச்சியடைந்து வந்திருக்-

கிறது என்று அறிகிறோம். மக்கள்தொகையில் இருந்த பெருக்கமே இதற்குக் காரணமாகும். வளர்ச்சியடைந்த நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது இந்தியாவின் தலா வருமானம் மிகவும் குறைவாக இருக்கின்றது. மேலும் அது வளர்ச்சியின்றி நிலையாகவே இருக்கின்றது. இதனால் மக்களுடைய வாழ்க்கை நிலையும் தொடர்ந்து அதே மட்டத்தில் இருந்து வருகின்றது. வறுமையும் பட்டினியும் நாட்டில் இனியும் பரவலாக நிலவி வருகின்றது. மக்களுடைய சராசரி வாழ்க்கைத் தரத்தில் குறிப்பிட்டுக் கூறும் அளவிற்கு முன்னேற்றம் இருக்க வேண்டுமென்றால் மக்கள்தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்த வேண்டியது மிக அவசியமாகிறது.

2. உணவுப் பிரச்சினை : மக்கள்தொகைப் பெருகும்பொழுது, நாடு அதிக நபர்களுக்கு உணவளிக்க வேண்டிய நிலையில் இருக்கிறது. வேளாண்மை மேம்பாட்டுத் திட்டங்களும், நீர்ப்பாசனத் திட்டங்கள் பலவும் செயலாற்றப் பெற்றதன் வாயிலாக நாட்டில் உணவுத் தானியங்களின் உற்பத்தி பெருமளவிற்கு உயர்ந்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. 1956ஆம் ஆண்டில் உணவுத் தானியங்களின் உற்பத்தி 63 மில்லியன் டன் அளவில் இருந்தது. 1977ஆம் ஆண்டில் உற்பத்தி 97 மில்லியன் டன் அளவுக்கு ஏற்றமடைந்தது. 21 ஆண்டுக் காலத்தில் உற்பத்தியில் 55 சதவிகித உயர்வு இருந்தது. ஆனால் இதே காலக் கட்டத்தில் மக்கள்தொகையும் 56 சதவிகிதத்தில் வளர்ச்சியடைந்தது. இதன் விளைவால் தலா நபருக்குக் கிடைக்கக் கூடிய உணவுத் தானியங்களின் அளவில் எந்தவித மாற்றமும் இல்லாமல் போய்விட்டது. 1956-ல் சராசரி ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு கிடைத்த தானிய அளவு 431 கிராம். 1977-ல் கிடைத்த சராசரி அளவு 437 கிராம். இதையே வேறுவிதமாகக் கூற வேண்டுமென்றால், 1956-ல் நுகர்வின் அளவு எந்த மட்டத்தில் இருந்ததோ அதே மட்டத்தில் மக்களுக்குத் தொடர்ந்து உணவளிக்கத்தான் நம்முடைய கடந்த கால வேளாண்மை வளர்ச்சி பயன்பட்டிருக்கிறது எனலாம். உணவுத் தானியங்களைப் பொறுத்த அளவில் நாடு தன்னிறைவு நிலையை அடையவில்லை என்றால், உணவு உற்பத்தியில் தேவையான அளவிற்கு முன்னேற்றம் ஏற்படவில்லை என்பதன்று இதன் பொருள். மக்கள் தொகைப் பெருக்கமே இதற்கு அடிப்படைக் காரணமாகும். 1951-ல் 54 மில்லியன் டன் அளவில் இருந்த உணவுத் தானிய உற்பத்தி 1978-ல் 128 மில்லியன் டன் அளவாக உயர்ந்தது. ஆனால், மக்கள்தொகையும் 361 மில்லியனிலிருந்து 630 மில்லியனுக்கு பெருக்கமடைந்தது. உணவு உற்பத்தியில் இருந்த

வளர்ச்சி மக்கள்தொகையிலிருந்த பெருக்கத்திற்கு உணவளிக்க மட்டுமே போதுமானதாக இருந்தது.

3. வேலையின்மை : வேலையின்மை நாட்டை எதிர் நோக்கி நிற்கும் மற்றொரு பெரும் பிரச்சினை. இலட்சக் கணக்கானவர்கள் நகரங்களிலும் கிராமங்களிலும் வேலையின்றி இருக்கின்றனர். மக்கள்தொகை அதிக அளவில் தொடர்ந்து பெருக்கமடைந்து வருவதால் இப்பிரச்சினையும் நம்மிடையே தொடர்ந்து இருந்து வருகின்றது. நம்முடைய ஐந்தாண்டுத் திட்டங்கள் வேலை வாய்ப்புக்கான வசதிகளை ஓரளவிற்குப் பெருக்குகின்றன. ஆனால் வேலை இல்லாதோர் எண்ணிக்கை இதைவிட உயர்ந்த அளவில் பெருகி வழிகின்றது. இதனால் வேலையில்லாப் பிரச்சினைக்கு நம்மால் முடிவு காண இயலவில்லை. பிறப்பு வீதம் தொடர்ந்து உயர் மட்டத்திலேயே இருந்து வருவதால் இளம் வயதுப் பிரிவில் (20 வயதிற்குக் கீழ்ப்பட்டவர்கள்) உள்ளவர்களுடைய சதவிகிதம் (50.6) மிக உயர்வாக இருக்கின்றது. இதன் காரணமாக, ஒவ்வோர் ஆண்டும் இலட்சக் கணக்கான இளைஞர்கள் வாய்ப்புகளை நாடி வேலைச் சந்தையை (Labour market) அணுகுகின்றனர். ஆனால் புதிதாக வேலை தேடி வரும் அனைவருக்கும் வாய்ப்புகள் அளிக்கக்கூடிய நிலையில் நாடு இல்லை.

4. அரசுக்கு நிதிப்பளு : மக்கள்தொகை அதிக அளவில் பெருக்கமடைவதால் அரசுக்கு நிதிப்பளு ஏற்படுகிறது. கல்விக் கூடங்களின் எண்ணிக்கையை அவ்வப்போது பெருக்கவேண்டியிருக்கிறது. ஆசிரியர்களை அதிக எண்ணிக்கையில் நியமிக்க வேண்டி உள்ளது. இந்நடவடிக்கைகள் அனைத்திற்கும் அரசு அதிக அளவில் செலவை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. இதே போன்றுதான் மருத்துவ வசதி, பொது சுகாதார வசதி இவற்றையும் பெருக்க வேண்டியுள்ளது. வீட்டு வசதிகளையும் அதிகரிக்க வேண்டியிருக்கிறது. இவ்வாறு அரசினுடைய நிதி மூலத்தில் கணிசமான ஒரு பகுதியை மக்கள்தொகை வளர்ச்சியால் ஏற்படக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மட்டுமே செலவிட வேண்டியிருக்கிறது.

## மக்கள்தொகையைக் கட்டுப்படுத்துதல்

கடந்த முப்பதாண்டுக் காலத்தில் மக்கள்தொகை எந்த அளவில் பெருக்கமடைந்து வந்ததோ அதே அளவு வருங் காலத்திலும் தொடர்ந்து நீடிக்குமானால் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கவும், மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை

உயர்த்தவும் நாம் மேற்கொள்ளும் முயற்சிகள் அனைத்திற்கும் முழுமையான பலன் கிடைக்காது. மக்கள்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தியேயாக வேண்டும். எவ்வாறு கட்டுப்படுத்துவது? இறப்பு வீதத்தில் நல்ல இறக்கம் இருக்கிறது. ஆனால் பிறப்பு வீதத்தில் கணிசமான அளவுக்கு இறக்கம் இல்லை. இதுவே மக்கள்தொகைப் பெருக்கத்திற்கு அடிப்படைக் காரணமாகும். எனவே, பிறப்பு வீதத்தைக் குறைப்பதன் வாயிலாகத் தான் மக்கள்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும். 1961, 1971 அவ்விரு ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் பிறப்பு வீதத்தின் ஆண்டுச் சராசரி 1000 நபர்களுக்கு 41 பிறப்புகளாகும். மக்கள்தொகை மிதமாக வளர்ந்துவரும் எல்லா நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் இந்த வீதம் இந்தியாவில் மிக அதிகமாக இருப்பதை அறியலாம். ஐக்கிய அமெரிக்காவில் பிறப்பு வீதம் 15; இங்கிலாந்தில் 13.9; மேற்கு ஜெர்மனியில் 10.2; கானடாவில் 15.5; ஜப்பானில் 19.9. எனவே, பிறப்பு வீதத்தை மிகவும் குறைக்க வேண்டும்; இக்குறைவும் குறுகிய கால அளவில் ஏற்படவேண்டும்.

## 1. பிறப்பு வீதத்தைக் குறைத்தல்

மக்களுடைய மனோநிலையைப் பொறுத்துத்தான் சராசரி பிறப்பு வீதம் அமைகிறது. மக்களுடைய மனோநிலையை மாற்றுவதன் அவசியத்தை உணர்ந்து மத்திய அரசும், மாநில அரசுகளும் மக்கள்தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. குடும்பக் கட்டுப்பாட்டை மேற்கொள்ளுவதன் அவசியத்தையும், அதனால் பெறக்கூடிய நன்மைகளையும் மக்களிடையே பரப்பி வருகின்றன. மேடைப்பேச்சு, திரைப்படம், செய்தித்தாள்கள், பத்திரிகைகள், வானொலி போன்ற எல்லாச் சாதனங்களும் இச்செய்தியைப் பரப்புவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. குடும்பக் கட்டுப்பாடுக்காகச் சில குறிப்பிட்ட முறைகளைக் கையாள முன்வரும் ஆண், பெண்களுக்கு ஊக்கப் பணமும் அளிக்கப்படுகின்றது. இவ்வாறு பல முயற்சிகள் மேற்கொள்ளப் பெற்றாலும் போதிய பயன் கிடைக்கவில்லை என்றுதான் கூறவேண்டும்.

## 2. கல்வியைப் பரப்புதல்

நாட்டில் கல்வியை நன்குப் பரப்புவதன் மூலம் மக்கள்தொகைப் பெருக்கத்தைக் கணிசமான அளவுக்கு மட்டுப்படுத்த முடியும். பெண்கள் கல்வியைப் பொறுத்த அளவில் இதனை வலியுறுத்திக் கூற வேண்டும். சாதாரணமாக, அதிக எண்ணிக்கையில்

குழந்தைகள் பெறுவதால் எழக்கூடிய இன்னல்களையும் தீமை களையும் படித்தவர்கள் நன்றாக உணர்வார்கள். தங்களுடைய குடும்பங்களை அளவோடு வைத்துக்கொள்ள அவர்கள் தேவை யான நடவடிக்கைகளை மேற்கொள்வர். கிராமங்களில் படித்தவர் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருக்கின்றது. இதன் காரண மாகத்தான் கிராமப்புறங்களில் பிறப்பு வீதமும் உயர்ந்து காணப் படுகின்றது. இதிலுள்ள இடையூறு என்னவென்றால், கல்வியைப் பரப்புவதற்கு நீண்ட காலம் தேவைப்படுகிறது.

## 3. திருமண வயதை உயர்த்துதல்

திருமண வயதை உயர்த்துவதன் மூலமாக மக்கள்தொகைப் பெருக்கத்தை ஓரளவிற்குக் கட்டுப்படுத்தக்கூடும் பெண்களுடைய திருமண வயதிற்கும், அவர்கள் பெறக்கூடிய குழந்தைகளின் எண்ணிக்கைக்கும் இடையே உள்ள தொடர்பு பற்றி பல முனைப்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இவ்விரண்டிற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது என்று தெரிய வந்திருக்கிறது. குறைந்த வயதில் திருமணமாகும் பெண்கள் அதிகக் குழந்தைகளைப் பெறுகிறார்கள். திருமண வயது உயர உயர அவர்கள் பெறும் குழந்தைகளின் எண்ணிக்கையும் குறைந்துக்கொண்டே செல்கிறது என்று இந்தஆய்வுகள் அறிவிக் கின்றன. இளம் வயதிலேயே பெண்களுக்குத் திருமணம் செய்து வைக்கும் வழக்கம் இந்தியாவில் பரவலாக இருந்து வருகிறது. அண்மைக் காலத்தில் இந்நிலை சற்று மாறி இருக்கின்றது. 1930 வாக்கில் பெண்களுடைய சராசரித் திருமண வயது 15 ஆக இருந்தது. 1971-ல் இது 17.2 வயதாக உயர்ந்திருக்கிறது. மக்கள் தொகையில் இருக்கும் வளர்ச்சி மிதமாக இருக்கும் நாடுகளில் பெண்களுடைய சராசரித் திருமண வயது அதிகமாக இருப்பதாக அறிகிறோம். இந்தியாவில் பெண்களுடைய திருமண வயது இயற்கையாகவே உயர நெடுங்காலம் பிடிக்கும். அதுவரைக் காத்திருப்பது விரும்பத்தக்கதன்று. ஆண்களும் பெண்களும் ஒரு குறிப்பிட்ட வயதடைந்த பிறகுதான் திருமணம் செய்து கொள்ள லாம் என்று ஒரு சட்டம் இயற்றினால் நல்லது என்று கூறலாம்.

## 4. வறுமையை அகற்றுதல்

நாட்டில் நிலவும் கொடிய வறுமை ஒழிந்தாலே பெருமளவிற்கு மக்கள்தொகைப் பெருக்கம் மட்டுப்படும். பெற்றோர்களுடைய செல்வ நிலைக்கும் அவர்கள் பெறும் குழந்தைகளின் எண்ணிக் கைக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. ஏழ்மை நிலையில் உள்ளவர்கள் அதிகக் குழந்தைகளுக்குப் பெற்றோர்களாக இருப்பதைக் கண்கூடாகக் காண்கின்றோம். எனவே வறுமை,

நாட்டிலிருந்து விரைவாக ஒழிக்கப்பட்டால் மக்கள்தொகையைப் பொறுத்த அளவில் நல்ல பலன் கிடைக்கும்.

## தமிழ்நாட்டின் மக்கள்தொகை

மக்கள்தொகை மிக அடர்த்தியாக உள்ள மாநிலங்களுள் தமிழ்நாடு ஒன்று. 1971ஆம் ஆண்டின் கணக்கெடுப்புப்படி தமிழ் நாட்டின் மொத்த மக்கள்தொகை 41.2 மில்லியன். நாட்டின் மொத்த மக்கள்தொகையில் இது 7.51 சதவிகித அளவாகும். மக்கள்தொகை அளவில் இந்திய மாநிலங்களுள் தமிழ்நாடு ஏழாவது இடத்தில் இருக்கிறது. 1980-ல் தமிழ்நாட்டின் மக்கள் தொகை 47.6 மில்லியன் இருக்கும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டு மக்கள்தொகையின் இயல்புகளை பட்டியல் 5—6ல் காணலாம்.

### பட்டியல் 5—6

தமிழ்நாட்டு மக்கள்தொகையின் முக்கிய இயல்புகள்

| | 1931 | 1941 | 1951 | 1961 | 1971 |
|---|---|---|---|---|---|
| 1. மொத்த எண்ணிக்கை (மில்லியன்) | 23.47 | 26.27 | 30.12 | 33.69 | 41.20 |
| 2. பத்தாண்டுக் கால வளர்ச்சி (சதவிகிதத்தில்) | +8.52 | +11.91 | +14.66 | +11.85 | +22.30 |
| 3. படித்தவர் எண்ணிக்கை (சதவிகிதத்தில்) | 11.34 | 16.19 | 20.85 | 31.41 | 39.46 |
| 4. மக்கள்தொகை அடர்த்தி (சதுர கிலோ மீட்டருக்கு நபர்கள்) | 181 | 202 | 232 | 259 | 317 |
| 5. பால் வீதம் (1000 ஆண்களுக்கு எத்தனை பெண்கள்) | 1027 | 1011 | 1007 | 992 | 978 |

ஆதாரம் : தமிழ்நாடு - ஒரு பொருளாதார ஆய்வு—1975.

## மக்கள்தொகை வளர்ச்சி

1961, 1971 இவ்விரு ஆண்டுகளுக்கு இடைப்பட்ட பத்தாண்டுக் காலத்தில் மக்கள்தொகை 22.01 சதவிகிதத்தில் பெருக்கமடைந்தது. தமிழ்நாட்டில் இந்நாள் வரை இதுவே மிக உயர்ந்த வளர்ச்சியாகும். நாட்டளவில் இதே காலக் கட்டத்தில் 24.8 சதவிகித வளர்ச்சியிருந்தது. இதற்கு முந்தைய பத்தாண்டுக் காலத்தில் (1951-லிருந்து 1961வரை) தமிழ்நாட்டில் மக்கள் தொகையில் 11.25 சதவிகித வளர்ச்சிதான் இருந்தது. அப்படியிருக்க 1961, 1971-க்கும் இடையிலான பத்தாண்டுக் காலத்தில் ஏன் அவ்வளவு உயர்ந்த விகிதத்தில் பெருக்கம் இருந்திருக்கின்றது? 1951-க்கும் 1961-க்கும் இடைக் காலத்தில் 1000 நபர்களுக்குச் சராசரி 27.24 பிறப்புகளாக இருந்த வீதம் 1961-க்கும் 1971-க்கும் இடைப்பட்ட காலத்தில் 26.61ஆகக் குறைந்திருந்தது. ஆகவே பிறப்பு வீதத்தில் மிகக் குறைந்த அளவில்தான் இறக்கம் இருந்திருக்கிறது. ஆனால் இறப்பு வீதத்தில் கணிசமான இறக்கம் இருந்திருக்கிறது. 1951-க்கும் 1961-க்கும் இடையில் 14.35 அளவில் இருந்த இறப்பு வீதம் 1961-க்கும் 1971-க்கும் இடையில் 11.06-க்குக் குறைந்தது. இந்த அளவு இறக்கத்தினால் மாநில மக்கள் தொகையில் பத்தாண்டுக் காலத்தில் 24.80 சதவிகித வளர்ச்சி ஏற்படக்கூடுமா? உறுதியாகக் கூற முடியாது. ஆனால் உயர்ந்த் விகித வளர்ச்சிக்கு மேலும் இரண்டு காரணங்களைக் குறிப்பிடலாம். மாநிலங்களுக்கிடையே மக்கள் குடிபெயர்ந்து செல்வதில் தடையில்லை. 1961-க்கும் 1971-க்கும் இடைப்பட்ட காலத்தில் தமிழ்நாட்டிலிருந்து பிற மாநிலங்களுக்குக் குடிபெயர்ந்து சென்ற மக்களின் எண்ணிக்கையைவிடப் பிற மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு வந்த மக்களின் எண்ணிக்கை அதிக அளவில் இருந்திருக்கக்கூடும் — இது முதற்காரணம். இரண்டாவது காரணம், பர்மா, இலங்கை இவ்விரு நாடுகளிலிருந்து தமிழர்கள் அதிக எண்ணிக்கையில் தமிழ்நாடு திரும்பியது. பழங்காலத்தில் தமிழ் மக்கள் பலர் இந்நாடுகளில் குடியேறி இருந்தனர். ஆனால் அண்மைக் காலத்தில் அந்நாடுகளில் அரசுகள் இம்மக்களில் பெரும்பாலானவர்களைத் திருப்பி அனுப்ப முடிவு செய்தன. பர்மா, இலங்கை நாடுகளிலிருந்து 1960ஆம் ஆண்டு முதல் அகதிகள் தமிழ்நாட்டிற்கு வரத் தொடங்கினர். அதைத் தொடர்ந்து அகதிகள் கணிசமான எண்ணிக்கையில் வந்துகொண்டே இருந்தனர்.

## மக்கள்தொகை அடர்த்தி

தமிழ்நாட்டில் மக்கள்தொகை அடர்த்தியாக இருக்கிறது. 1971ஆம் ஆண்டின் கணக்கெடுப்புப்படி ஒரு சதுர கிலோ மீட்

ரளவில் சராசரி 317 நபர்கள் இருந்தனர். நாட்டளவுச் சராசரியை விட (167) இது இரண்டு மடங்கு, மாவட்டங்கள் ரீதியாகப் பார்த்தால் சென்னை மாவட்டத்தில் சதுர கிலோ மீட்டருக்கு 19,293 நபர்கள் இருக்கிறார்கள். சென்னை மாவட்டத்தை ஒரு விதிவிலக்காகத்தான் கருதவேண்டும். ஏனெனில், சென்னை மாநகர் முழுவதையும் அடக்கிய மாவட்டம்தான் சென்னை மாவட்டம். தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டம்தான் மிக அடர்த்தியான மாவட்டம் (726), தருமபுரி மாவட்டத்தில் அடர்த்தி மிகவும் குறைவாக (174) இருக்கிறது.

## கல்வி நிலை

கல்வி நிலையில் தமிழ்நாட்டில் அதிக முன்னேற்றம் இருந்திருக்கின்றது என்று கூறலாம். இந்தியாவிலேயே கேரள மாநிலத்தில்தான் படித்தவர்கள் எண்ணிக்கை அதிகம். தமிழ்நாடு இரண்டாம் இடத்தில் இருக்கிறது. 1971-ல் எடுத்த கணக்கெடுப்புப் படி தமிழ்நாட்டில் 39.29 சதவிகிதத்தினர் படித்தவர்களாக இருந்தனர். பெண்களில் 26.83 சதவிகித்த்தினர் படித்தவர்களாக இருந்தனர். சென்னை மாவட்டத்தில் படித்தவர் எண்ணிக்கை 62.01 சதவிகிதம். இதுதான் மாநிலத்திலேயே உயர்ந்த மட்டம். இரண்டாம் இடத்தில் கன்னியாகுமரி மாவட்டம் இருக்கிறது (58.21). படித்தவர்கள் எண்ணிக்கை மிகக் குறைவாக உள்ள மாவட்டம் தருமபுரி மாவட்டம் (23.32) ஆகும்.

## நகரங்களில் வாழும் மக்கள்தொகை

நகரங்களின் எண்ணிக்கையும் நகரங்களில் வாழும் மக்களின் எண்ணிக்கையும் தமிழ்நாட்டில் பெருகி வருகின்றன. 1961ஆம் ஆண்டில் மொத்த மக்களில் 26.39 சதவிகிதத்தினர் நகரங்களில் வசித்தனர். ஆனால் 1971-ல் இவர்களுடைய எண்ணிக்கை 30.28 சதவிகிதத்திற்கு உயர்ந்தது.

## அரிசனங்கள், பழங்குடி மக்கள்

தமிழ்நாட்டில் பழங்குடி மக்களுடைய எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருக்கிறது. மொத்த பழங்குடி மக்களின் எண்ணிக்கை 3 இலட்ச அளவில்தான் இருக்கிறது. மாநிலத்தின் மொத்த மக்கள்தொகையில் இவர்களுடைய எண்ணிக்கை 1 சதவிகிதத்திற்கும் குறைவே. சேலம், வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, தருமபுரி, செங்கற்பட்டு, கோயம்புத்தூர், நீலகிரி, திருச்சிராப்பள்ளி இம்மாவட்டங்களில் பழங்குடி மக்கள் கணிசமான எண்ணிக்கையில் இருக்கின்றனர்.

மாநில மொத்த மக்கள்தொகையில் அரிசன மக்கள் 17.76 சதவிகித அளவில் இருக்கின்றனர். மாநிலத்தின் எல்லா மாவட்டங்களிலும் அரிசன மக்கள் பரவலாக இருக்கின்றார்கள். ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் இவர்கள் 3.89 சதவிகித அளவில்தான் உள்ளனர்.

## பட்டியல் 5—7

### மாவட்ட ரீதியான மக்கள்தொகையும் அதன் முக்கிய இயல்புகளும்

| மாவட்டம் | அடர்த்தி சதுர கிலோ மீட்டருக்கு நபர்கள் | கல்வி நிலை (மாவட்ட மக்கள் தொகையில் சதவிகிதம்) | நகர மக்கள் (மாவட்ட மக்கள் தொகையில் சதவிகிதம்) | அரிசன மக்கள் (மாவட்ட மக்கள் தொகையில் சதவிகிதம்) |
|---|---|---|---|---|
| சென்னை | 19,293 | 62.01 | 100.00 | 10.49 |
| செங்கற்பட்டு | 367 | 39.73 | 34.76 | 26.28 |
| வட ஆர்க்காடு | 306 | 34.66 | 20.85 | 19.23 |
| தென் ஆர்க்காடு | 332 | 31.14 | 14.18 | 25.92 |
| தருமபுரி | 174 | 22.32 | 8.58 | 18.58 |
| சேலம் | 346 | 31.71 | 26.58 | 16.05 |
| கோயம்புத்தூர் | 279 | 38.90 | 35.59 | 15.74 |
| நீலகிரி | 194 | 47.03 | 49.24 | 18.76 |
| மதுரை | 312 | 41.51 | 33.62 | 14.93 |
| திருச்சிராப்பள்ளி | 269 | 37.51 | 22.27 | 17.94 |
| தஞ்சாவூர் | 395 | 39.66 | 20.52 | 22.10 |
| இராமநாதபுரம் | 227 | 39.74 | 26.11 | 16.07 |
| திருநெல்வேலி | 280 | 44.83 | 32.17 | 15.78 |
| கன்னியாகுமரி | 726 | 58.21 | 16.72 | 3.89 |
| தமிழ்நாடு சராசரி | 317 | 39.46 | 30.26 | 17.76 |

ஆதாரம்: ஒரு பொருளாதார ஆய்வு -1973

# 6. வேளாண்மை

## வேளாண்மையும் பொருளாதார வளர்ச்சியும்

பொருளாதாரத் துறையில் பின்தங்கிய நிலையில் இருக்கும் ஒரு நாட்டில் வேளாண்மை ஒரு முக்கியப் பிரிவாக இருக்கிறது. இத்தகைய ஒரு நாட்டின் மொத்த நாட்டு வருமானத்தில் பெரும் பகுதி வேளாண்மைப் பிரிவிலிருந்துதான் கிடைக்கிறது. நாட்டு மக்களில் பெரும் பகுதியினர் வேளாண்மையில் ஈடுபட்டிருக்கின்றனர். வேலை வாய்ப்புக்கும் மக்கள் வேளாண்மையையே நம்பி இருக்க வேண்டியிருக்கிறது. பின்தங்கிய நிலையில் இருக்கும் ஒரு நாட்டில் பொருளாதார முன்னேற்றம் ஏற்படத் தொடங்கும் பொழுது இரண்டாம் பகுதியும் (Secondary sector), சார்பு நிலைப் பகுதியும் (Tertiary sector) விரிவடையத் தொடங்குகின்றன. அவை முக்கியத்துவம் பெறவும் ஆரம்பிக்கின்றன. பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்குத் தொழில் துறையில் விரைவான முன்னேற்றம் இருக்க வேண்டுமென்பது மிக்க அவசியம் என்றாலும் கூட வேளாண்மை வளர்ச்சியின் முக்கியத்துவத்தையும் குறைத்து மதிப்பிட முடியாது. வேளாண்மை உற்பத்தியில் நல்ல முன்னேற்றம் இருந்தால்தான் நாட்டில் தொழில்களும் பிற பணிகளும் வளர்ச்சியடைய இயலும். எனவே நாட்டின் பொருளாதாரத்தில் நல்ல முன்னேற்றம் இருக்க வேண்டுமெனில் வேளாண்மை வளர்ச்சிக்கான முதலீட்டை அவ்வப்போது உயர்த்திக்கொண்டே இருக்க வேண்டியது மிக்க அவசியமாகிறது. அதிக அளவில் முதலீடு செய்ய வேண்டுமென்றால் மூலதனமும் அதிக அளவில் ஒதுக்கப்பட வேண்டும். நாட்டின் சேமிப்பு அளவு உயர்ந்தால்தான் மூலதனத்தையும் அதிக அளவில் திரட்ட முடியும். நாட்டு வருமானத்தில் 50 சதவிகித அளவிற்கு மேல் வேளாண்மையின் வழியாகத்தான் கிடைக்கிறது. ஒரு நாட்டில், வேளாண்மையைச் சார்ந்து வாழும் மக்களுடைய வருவாய் மட்டத்தை உயர்த்தினாலன்றி தேவையான அளவிற்குச் சேமிப்பைப் பெருக்க முடியாது. எனவே, வேளாண்மையும் வேளாண்மையைச் சார்ந்த மக்களுடைய நிலையையும் உயர்த்த வேண்டியதன் அவசியத்தை நன்றாக உணர முடிகிறது. ஒரு நாட்டின் பொதுவான பொருளாதார முன்னேற்றத்தில் வேளாண்மையும் பெரும் பங்கு பெறுகிறது என்பதற்கு வேறு சில காரணங்களையும் குறிப்பிடலாம்.

## பொருளாதார வளர்ச்சியில் வேளாண்மையின் பங்கு

1. 'மூலதனம்—உற்பத்தி ஆக்க வீதம்' குறைவாக இருக்கிறது : எந்த ஒரு பண்டத்தையும் உற்பத்தி செய்வதற்கு மூலதன முதலீடு அவசியமாகிறது. சில பண்டங்களைக் உற்பத்தி செய்ய வேண்டியிருக்கிறது. சில பண்டங்களைக் குறைந்த முதலீட்டின் மூலம் உற்பத்தி செய்யலாம். இவ்வாறு முதலீட்டின் அளவிற்கும் உற்பத்தியின் அளவிற்கும் இடையே இருக்கின்ற தொடர்பினைத் தான் மூலதனம் - உற்பத்தி ஆக்க வீதம் (Capital - Output ratio) என்றழைக்கிறோம். பொருளாதார வளர்ச்சியின் தொடக்கக் கட்டத்தில் உள்ள ஒரு நாட்டில் 'மூலதனம் - உற்பத்தி ஆக்க வீதம்' குறைவாக உள்ள உற்பத்தி முறைகளைக் கையாளுவது தான் சிறந்ததாகும். ஏனெனில் வளர்ச்சிக் கட்டத்தில் பின் தங்கிய நிலையில் உள்ள நாட்டில் மூலதனம் அதிக அளவில் கிடைப்பதில்லை. மூலதனம் ஒரு பற்றாக் குறையான சாதனமாக இருக்கும். எனவே, கிடைக்கக்கூடிய குறைந்த அளவு மூல தனத்தை அதிக அளவில் உற்பத்தியைக் கொடுக்கக்கூடிய முறையில் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. வேளாண்மை, ஆலைத் தொழில், போக்குவரத்து, கல்வி இந்நான்கு துறைகள் ஒவ்வொன்றிலும் அரசு ரூ. 10 கோடி மூலதனத்தை முதலீடு செய்கிறது என்று வைத்துக்கொள்வோம். ஒவ்வொரு துறையின் வாயிலாகக் கிடைக்கக்கூடிய நாட்டு வருமானம் (National Income) எதில் அதிகமாக இருக்கும்? இங்குச் சற்று உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். நாம் குறிப்பிடுவது நாட்டு வருமானத்தை, தனியா ருடைய வருமானத்தை அன்று. வேளாண்மையின் வாயிலாகக் கிடைக்கக்கூடிய வருமானம்தான் உயர்வாக இருக்கும். எனவே, பொருளாதார வளர்ச்சியில் தொடக்கக் கட்டத்தில் இருக்கும் நாட்டில் மொத்த முதலீட்டில் கணிசமான ஓர் அளவை வேளாண் மைத் துறையின் வளர்ச்சிக்கு ஒதுக்குவதன் வாயிலாக நாட்டில் மொத்த உற்பத்தியைப் பெருக்கமடையச் செய்யலாம்.

2. உற்பத்திக்குத் தேவைப்படும் காலம் குறைவு: வேளாண்மையில் முதலீடு செய்யும்பொழுது உற்பத்தியில் அதிக அளவு பெருக்கம் இருக்கின்றது என்பதோடு முதலீடு செய்யப்படும் நேரத்திற்கும் உற்பத்தி கிடைக்கும் நேரத்திற்கும் இடையே உள்ள கால இடை வெளி குறுகியதாக இருக்கிறது. இதனை 'கருக்காலம்' என்னும் பொருள்பட ஆங்கிலத்தில் (Gestation period) என்றழைக்கின்றார் கள். வேளாண்மையில் கருக்காலம் குறைவாக இருக்கிறது. எஃகு ஆலை ஒன்றைத் தொடங்க முதலீடு செய்தால் பல ஆண்டு களுக்குப் பிறகுதான் எஃகு உற்பத்தியாகி எஃகுப் பொருள்கள் சந்தைக்கு வருகின்றன. இதுவரை சாகுபடியின்கீழ் இல்லாத

ஒரு தரிசு நிலத்தைத் திருத்தி, சமனாக்கி, நீர்ப்பாய்ச்சி பயிர் விளைவிக்கும் நோக்கத்துடன் முதலீட்டை மேற்கொண்டால் ஓராண்டுக்காலம், அதிகம் போனால் ஈராண்டுக் காலத்திற்குள்ளாக உற்பத்தியைக் காணலாம். பொதுவாக, 'கருக்காலம்' நீண்டதாக இருக்கும்பொழுது வேறு சில பிரச்சினைகளும் எழுவதற்கு வாய்ப்பு உண்டு. விலையேற்றம் இவற்றுள் ஒன்றாகும். இதற்கான விளக்கத்தை ஓர் உதாரணத்தின் துணையுடன் காணலாம். முதலீடு செய்வதற்கு அரசிடம் ரூ. 100 கோடி இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். இத்தொகையை 'அ', 'ஆ' என்னும் பெயருடைய இரண்டு திட்டங்களில் ஏதேனும் ஒன்றில் முதலீடு செய்யலாம் என்றும் கருதுவோம். 'அ' என்பது டிராக்டர் உற்பத்தி செய்யக் கூடிய ஒரு தொழிற்சாலை. 'ஆ' என்பது மலைப் பகுதியிலுள்ள ஒரு மாவட்டத்தில் மேற்கொள்ள இருக்கும் மண்வளப் பாது காப்புத் திட்டம் (Soil conservation work). 'அ' திட்டத்தை செயல்படுத்தி டிராக்டர்களைச் சந்தைக்குக் கொண்டுவர ஐந்தாண்டுக் காலம் ஆகும். 'ஆ' திட்டத்தைச் செயல்படுத்தி விவசாய உற்பத்தியைப் பெருக்க இரண்டாண்டுக் காலம் ஆகும். இவ்விரண்டினுள் எத்திட்டத்தில் முதலீடு செய்தால் நாட்டின் விலை மட்டம் அதிக அளவில் பாதிக்கப்படும்? 'ஆ' திட்டத்தைவிட 'அ' திட்டத்தில் விலையேற்றத்தை ஊக்குவிக்கக்கூடிய சக்தி அதிகமாக இருக்கிறது என்று கூறலாம். இது எங்ஙனம் சாத்தியமாகிறது என்பதற்கான விளக்கத்தைக் காணலாம். அரசு ரூ. 100 கோடியை முதலீடு செய்யும்போது மக்களுடைய வருவாயும் அந்த அளவிற்குப் பெருக்கமடையும். வருவாய் உயரும்போது நுகர்வின் அளவும் உயரக்கூடும். பண்டங்களுக்கு இருக்கும் தேவையும் (Demand) பெருக்கமடையும். தேவையில் இருக்கும் ஏற்றத்திற்குத் தகுந்தாற்போல் பண்டங்களின் அளிப்பிலும் (Supply goods) ஏற்றம் இருந்தால்தான் விலைகள் ஏற்றமுறாமல் இருக்கும். 'அ' திட்டத்தை எடுத்துக் கொண்டால் பண்டங்கள் அதாவது டிராக்டர்கள், முதலீடு செய்து ஐந்தாண்டுக் கால இடைவெளிக்குப் பிறகுதான் சந்தைக்கு வரும். ஆனால் 'ஆ' திட்டத்தின் வாயிலாக வேளாண்மைப் பண்டங்கள் இரண்டாண்டுக் கால முடிவிலேயே சந்தைக்கு வரும். எனவே 'கருக்காலம்' குறைவாக உள்ள. முதலீடுகள் பொதுவாக, குறைவான அளவில் விலையேற்றத்தை உண்டுபண்ணுகின்றன என்று கூறலாம்.

3. குறைந்த அளவு அன்னியச்செலாவணி: வேளாண்மைத் துறையை வளர்ச்சியடையச் செய்யும் முயற்சிக்கு அன்னியச் செலாவணி அதிகம் தேவைப்படுவதில்லை. ஆலைத் தொழில்

களை நிறுவ வேண்டுமென்றால் இயந்திரங்கள், தளவாடங்கள், கருவிகள் முதலியவற்றை பெருமளவில் பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியிருக்கிறது. ஆனால் விவசாய மேம்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்ற அந்த அளவிற்கு இறக்குமதிகள் தேவைப்படுவதில்லை. எனவே வேளாண்மை வளர்ச்சிக்காக முதலீட்டை மேற்கொள்ளும்பொழுது அன்னியச் செலாவணி அதிகம் தேவைப்படுவதில்லை. விரைவாகத் தொழில் முன்னேற்றத்தை உண்டாக்கும் நோக்கத்துடன் முதலீட்டை மேற்கொள்ளும் பொழுது நாட்டில் இறக்குமதியின் அளவு அதிகமாகப் பெருக்கமடைகிறது. இதனால் அன்னியச் செலாவணி பற்றாக்குறை நாட்டை பல புதிய சிக்கல்களுக்குள்ளாக்கி நாட்டின் பொதுவான பொருளாதார முன்னேற்றத்தையும் தடைபடச் செய்யக் கூடும். இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும் மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும் இதே நிலை நம் நாட்டில் உருவாயிற்று.

4. வேளாண்மை வளர்ச்சி தொழில் முன்னேற்றத்தை ஊக்குவிக்கிறது : தொழில் முன்னேற்றம் ஏற்படும்பொழுது கச்சாப் பொருள்களுக்கு இருக்கும் தேவை பெருக்கமடைகிறது. கச்சாப் பொருள்களின் அளிப்பைப் பெருக்க வேண்டுமென்றால் வேளாண்மையை விரிவுபடுத்தி, மேம்படுத்த வேண்டியது அவசியமாகின்றது. வேளாண்மை, தொழில் இவை இரண்டும் ஒருங்கிணைந்து முன்னேறாவிட்டால் நாட்டின் பொருளாதார வளர்ச்சி தடைப்படக்கூடும்.

5. மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேளாண்மை வளர்ச்சி உதவுகிறது : பின்தங்கிய நாடுகள் பொருளாதாரத் துறையில் முன்னேற்றமடைய வேண்டும் என்பது அனைவராலும் ஏற்கப்படும் ஒரு கருத்தாகும். நாடு முன்னேறும்போது சாதாரணக் குடிமகனுடைய வாழ்க்கை நிலையும் உயரவேண்டும் என்பது அதைவிட முக்கியம் வாய்ந்த ஒன்றாகும். இந்தியா போன்ற நாட்டில் யாரை சாதாரணக் குடிமகன் என்றழைக்கலாம்? இரண்டு வேளை உணவுக்குக்கூடச் சரிக்கட்டிவராத வருமானத்துடன் நிலமில்லா விவசாயக் கூலியையோ அரை ஏக்கர், கால் ஏக்கர் நிலத்தை நம்பி கிராமத்தில் வாழ்க்கை நடத்தும் விவசாயியையோதான் இந்நாட்டின் குடிமகனாகக் கருத வேண்டும். நாட்டில் ஏறக்குறைய 70 சதவிகிதத்தினர் இந்த நிலையில்தான் இருக்கின்றனர். எனவே, பொருளாதார முன்னேற்றத் திட்டங்களை வரையும்போது சாதாரண குடிமகனுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்பது

முதற் குறிக்கோளாக இருத்தல் வேண்டும். வேளாண்மையில் வளர்ச்சி காணும் வாயிலாகத்தான் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும்.

மேற்கூறிய காரணங்கள் அனைத்தும் பின்தங்கிய நிலையில் இருக்கும் ஒரு நாட்டில் வேளாண்மை வளர்ச்சியின் அவசியத்தை வலியுறுத்துகின்றன. இதனால், வேளாண்மை வளர்ச்சி மட்டுமே முக்கியம் வாய்ந்தது என்றும், தொழில் வளர்ச்சியில் அவ்வளவு அக்கறை காட்ட வேண்டிய அவசியமில்லை என்கிற முடிவுக்கு நாம் வந்துவிடக்கூடாது. மேற்கூறிய விளக்கங்களிலிருந்து நாம் பெறக்கூடிய முறையான படிப்பினை, பின்தங்கிய நிலையில் உள்ள ஒரு நாடு வேளாண்மை வளர்ச்சியைப் புறக்கணித்துவிடக் கூடாது என்பதே.

## வேளாண்மையின் குறைந்து செல்லும் பங்கு

ஒரு நாட்டில் பொருளாதார முன்னேற்றம் ஏற்படும்போது, அந்நாட்டில் வேளாண்மையின் பங்கு குறைந்துகொண்டே போகும் என்னும் கூற்றை பொருளியல் வல்லுநர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்கின்றனர். வேளாண்மையின் பங்கு குறைந்து செல்லும் இந்நிலையை இரு பிரிவுகளில் கண்ணுறலாம். 1. நாட்டு வருமானத்தில் வேளாண்மைக்குக் கிடைக்கும் பங்கு; 2. மொத்த தொழிலாளர்களில் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கை.

நாடு பொருளாதாரத் துறையில் முன்னேறும்போது வேளாண்மையின் பங்கு ஏன் குறைந்து செல்கிறது? பின்தங்கிய நிலையில் இருக்கும் ஒரு நாட்டில் வேளாண்மையே முக்கியத் தொழிலாக இருக்கின்றது. நாட்டு வருமானத்தில் பெரும் சதவிகிதம் விவசாய உற்பத்தியின் வாயிலாகக் கிடைக்கிறது. தொழிலுக்கும் பெரும்பான்மையான மக்கள் வேளாண்மையிலேயே ஈடுபடுகின்றனர். நாடு முன்னேறும்போது புதிய ஆலைத் தொழில்கள் நிறுவப் படுகின்றன. முன்பிருந்த தொழில்கள் விரிவாக்கப்படுகின்றன. இத்தகைய தொழில் முன்னேற்றத்தைத் தொடர்ந்து அடுத்த கட்டத்தில் வாணிபம், போக்குவரத்து, வங்கிகள் இவை போன்ற பணிகள் நாட்டில் வளர்ச்சியடைகின்றன. வேளாண்மையை முதற் பகுதியாகவும் (Primary sector), தொழிலை இரண்டாம் பகுதியாகவும் (Secondary sector); பணிகளைச் சார்பு நிலைப் பகுதியாகவும் (Tertiary sector) பொருளியலில் பாகுபாடு செய்து அழைக்கிறோம் என்று முன்னரே கண்டோம். இரண்டாம் பகுதியும், சார்பு நிலைப் பகுதியும் நன்றாக வளர்ச்சியடையும்போது முதற்

பகுதிக்கு இருக்கும் முக்கியத்துவம் குறைந்துவிடுவது இயற்கையே. இதனால், வேளாண்மை உற்பத்தி வளர்ச்சியின்றி நிலையாக ஒரே மட்டத்தில் இருக்கும் என்பது பொருளன்று. வேளாண்மையில் வளர்ச்சி இருக்கும். ஆனால், பிற பிரிவுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது நாட்டு வருமானத்தில் வேளாண்மையின் பங்கு குறைவடையும். ஓர் எடுத்துக்காட்டாகப் பின்வரும் பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கிறது. வெவ்வேறு காலக் கட்டங்களில் ஏற்படும் மாற்றங்களைப் பார்த்தால் இக்கூற்று தெளிவாக விளங்கும்.

**வேளாண்மையின் குறைந்து செல்லும் பங்கை விளக்கும் பட்டியல்**

| | 1950 | | 1960 | | 1970 | |
|---|---|---|---|---|---|---|
| | கோடி ரூபாயில் | சதவிகிதத்தில் | கோடி ரூபாயில் | சதவிகிதத்தில் | கோடி ரூபாயில் | சதவிகிதத்தில் |
| நாட்டு வருமானம் | 1000 | 100 | 1500 | 100 | 2000 | 100 |
| வேளாண்மையின் பங்கு | 600 | 60 | 750 | 50 | 900 | 45 |
| தொழிலின் பங்கு | 300 | 30 | 400 | 33⅓ | 700 | 35 |
| பணிகளின் பங்கு | 100 | 10 | 250 | 16⅔ | 400 | 20 |

பல நாடுகளை ஒப்பிட்டுப் பார்த்தால் இக்கருத்துத் தெளிவாக விளங்கும். 1977-78ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்த நாட்டு வருமானத்தில் வேளாண்மையின் பங்கு 40 சதவிகிதமாகும். இதே ஆண்டில் இங்கிலாந்தில் மொத்த நாட்டு வருமானத்தில் வேளாண்மையின் வாயிலாகக் கிடைத்த பங்கு 3 சதவிகிதம்தான்; ஐக்கிய அமெரிக்காவில் 3.2 சதவிகிதம்; கானடாவில் 5 சதவிகிதம்; ஆஸ்திரேலியாவில் 7.6 சதவிகிதம். ஒரு நாடு எந்த அளவிற்கு பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் அடைந்திருக்கிறதோ அந்த அளவிற்கு அந்நாட்டில் வேளாண்மையின் பங்கு குறைவாக இருக்கும் என்று இதிலிருந்து அறிகின்றோம்.

## இந்தியாவில் வேளாண்மையின் பங்கு

இந்தியாவில் வேளாண்மையின் பங்கு காலப்போக்கில் குறைவடைந்திருக்கின்றதா? குறைந்திருக்கின்றது, ஆனால் கணிசமான அளவில் இல்லை. நாட்டு வருமானக் கண்ணோட்டத்தில் பார்த்தாலும் இன்றும்கூட வேளாண்மைப் பிரிவு முக்கியப் பொருளாதார நடவடிக்கையாகத் தொடர்ந்து இருந்து வருகின்றது.

## நாட்டு வருமானத்தில் பங்கு

வெவ்வேறு காலக் கட்டங்களை எடுத்துக்கொண்டு நம்முடைய நாட்டு வருமானத்தில் வேளாண்மையின் பங்கு எங்ஙனம் மாற்றம் அடைந்திருக்கின்றது என்று காண்போம். 1950-51 முதல் 1977-78 வரை பல ஆண்டுகளில் வேளாண்மையின் பங்கு எந்த அளவில் இருந்தது என்பதை பட்டியல் 6—1 விளக்குகிறது.

### பட்டியல் 6—1

அன்றாட நிலையில் அமைந்த நாட்டு வருமானத்தில் வேளாண்மையின் பங்கு

| ஆண்டு | வேளாண்மை வாயிலாகக் கிடைத்த வருமானம் | மொத்த நாட்டு வருமானம் (கோடி ரூபாயில்) | நாட்டு வருமானத்தில் வேளாண்மையின் பங்கு (சத விகிதத்தில் |
|---|---|---|---|
| 1950-51 | 4890 | 9530 | 51.30 |
| 1955-56 | 4520 | 9980 | 45.30 |
| 1960-61 | 6570 | 13279 | 49.48 |
| 1965-66 | 9523 | 20636 | 46.15 |
| 1970-71 | 16275 | 33946 | 47.94 |
| 1975-76 | 24842 | 60293 | 41.20 |
| 1977-78 | 29044 | 73157 | 89.70 |

ஆதாரம் : இயக்குநர், மத்திய புள்ளிவிவர நிறுவனம்.

ஏறக்குறைய முப்பதிரண்டுக் காலத்தில் நாட்டு வருமானத்தில் வேளாண்மையின் பங்கு 51-லிருந்து 40 சதவிகிதத்திற்குக் குறைந்திருக்கின்றது. வேளாண்மையின் பங்கு காலப்போக்கில் குறைந்திருக்கின்றது என்பது தெளிவாகிறது. ஆனால் விரைவான இறக்கம் ஏற்படவில்லை. இது எதைக்காட்டுகிறது? 'தொழிலிலும்', 'பணிகளிலும்' போதுமான அளவிற்கு நாட்டில் வளர்ச்சி இல்லை என்பதைத்தான் இந்நிலை உணர்த்துகிறது.

## வேலையில் வேளாண்மையின் பங்கு

நாட்டின் வேலை நிலையில் (Employment level) வேளாண்மையின் பங்குக் குறையவே இல்லை. மக்கள் எந்த அளவில் பல்வேறு அலுவல்களில் ஈடுபட்டிருக்கின்றனர் என்பதற்கான விவரங்களைப் பத்தாண்டுக்கு ஒரு முறை மேற்கொள்ளப் படும் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு திரட்டித் தருகின்றது.

பட்டியல் 6—2ன் 'முதற் பகுதியில்' (Primary sector) எத்தனை பேர்கள் ஈடுபட்டிருந்தனர், வேளாண்மையில் எத்தனை பேர் ஈடுபட்டிருந்தனர் என்னும் புள்ளிவிவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. எழுபது ஆண்டுக் காலத்தில் நாட்டின் மொத்தத் தொழிலாளர்களில் 'முதற் பகுதியில்' ஈடுபட்டிருந்தவர்கள், வேளாண்மையில் ஈடுபட்டிருந்தவர்கள் இவ்விரு வகையினரின் பங்குக் குறையவே இல்லை என்னும் உண்மையை இப்பட்டியலி லிருந்து அறியலாம்.

## பட்டியல் 6—2

முதற் பகுதியில் ஈடுபட்டிருந்தவர்களின் சதவிகிதப் பங்கு

| | 1901 | 1911 | 1921 | 1931 | 1951 | 1961 | 1971 |
|---|---|---|---|---|---|---|---|
| 1. குடியானவர்கள் (நிலம் படைத்தவர்கள் அல்லது குத்தகைதாரர்கள்) | 50.6 | 49.8 | 54.4 | 45.0 | 50.0 | 52.8 | 43.3 |
| 2. விவசாயக் கூலிகள் | 16.9 | 20.6 | 17.4 | 24.8 | 19.7 | 16.7 | 26.3 |
| வேளாண்மையில் ஈடுபட்டிருந்தவர்களின் மொத்த எண்ணிக்கை (1+2) | 67.5 | 70.4 | 71.8 | 69.8 | 69.7 | 69.5 | 69.6 |
| 3. கால்நடை பராமரிப்பு, காட்டு வேலை, மீன் பிடித்தல், வேட்டையாடுதல் தோட்டப் பயிர் வேலை | 4.3 | 4.5 | 4.2 | 4.9 | 2.4 | 2.8 | 2.5 |

| | 1901 | 1911 | 1921 | 1931 | 1951 | 1961 | 1971 |
|---|---|---|---|---|---|---|---|
| முதற்பகுதியில் ஈடுபட்டிருந்தவர் களின் மொத்த எண்ணிக்கை (1+2+3) | 71.8 | 74.9 | 76.0 | 74.7 | 72.1 | 72.3 | 72.1 |
| நாட்டின் மொத்தத் தொழிலா ளர்கள் | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |

ஆதாரம் : சென்ஸஸ் அறிக்கைகள்.

முதற்பகுதியில் (Primary sector) அடங்கும் நடவடிக்கை பின் வருமாறு : வேளாண்மை, கால்நடைப் பராமரிப்பு, மீன் பிடித்தல், காட்டு வேலை, தோட்டப் பயிர் வேலை முதலியன. வேளாண்மை யில் ஈடுபட்டுள்ளவர்களை இருவகையாகப் பிரிக்கலாம் : (1) நில உரிமையாளர்களாகவோ குத்தகைதாரர்களாகவோ இருப்பவர்கள், (2) நிலமில்லா விவசாயக் கூலிகள். பட்டியல் 6–2-ல் தரப் பட்டுள்ள புள்ளிவிவரங்களிலிருந்து என்ன அறிகின்றோம்?

1. நாட்டில் இருக்கும் மொத்தத் தொழிலாளர் எண்ணிக்கை யில் 70 சதவிகிதத்திற்கு மேற்பட்டவர்கள் 'முதற் பகுதியில்' ஈடுபட்டிருக்கின்றனர். பொருளாதாரத் துறையில் நல்ல முன்னேற்ற மடைந்துள்ள நாடுகளில் காணப்படும் நிலைக்கு நேர்மாறான நிலையை நம் நாட்டில் காண்கின்றோம். ஐக்கிய அமெரிக்காவில் 'முதற் பகுதியில்' ஈடுபட்டவர்களின் எண்ணிக்கை 5 சதவிகித அளவில்தான் இருக்கின்றது; இங்கிலாந்தில் 3 சதவிகிதம்; ஆஸ்திரேலியாவில் 8 சதவிகிதம்.

2. முதற் பகுதியில் ஈடுபட்டுள்ளவர்கள், வேளாண்மையில் ஈடுபட்டுள்ளவர்கள் இவ்விரு வகையினரின் பங்குகளும் குறைவு அடையவே இல்லை. 1921ஆம் ஆண்டு வரை பங்குகள் உயர்ந்து கொண்டிருந்தன. அதன் பிறகு இறங்கத் தொடங்கின; ஆனால் இறக்கம் கணிசமான அளவில் இல்லை.

3. 1951ஆம் ஆண்டிற்குப் பிறகு நாட்டின் தொழில் முன்னேற்றத்திற்காகப் பெருமளவில் முதலீடு செய்யப்பட் டிருக்கிறது. ஆனால், இதன் விளைவால், வேளாண்மையையே

முற்றிலும் சார்ந்திருக்கும் தொழிலாளர்களுடைய எண்ணிக்கையைக் குறைக்கும் அளவிற்குத் தொழில் முன்னேற்றமடைந்து வேலை வாய்ப்புகளைப் பெருக்கமடையச் செய்யவில்லை.

## இந்தியாவில் வேளாண்மை வளர்ச்சி

### வேளாண்மை வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

வேளாண்மை வளர்ச்சிக்குச் செய்யப்பட்ட முதலீட்டளவு: நாடு விடுதலை அடைந்ததைத் தொடர்ந்து, குறிப்பாகத் திட்டமிட்டு செயல்படும் முறை நாட்டில் வழக்கத்திற்கு வந்ததற்குப் பிறகு, வேளாண்மை வளர்ச்சியின் மீது மத்திய அரசும் மாநில அரசுகளும் மிக்க கவனம் செலுத்தி வந்திருக்கின்றன. ஒவ்வோர் ஐந்தாண்டுத் திட்டத்திலும் வேளாண்மை வளர்ச்சிக்காக கணிசமான அளவில் முதலீடு செய்யப்பட்டது. முதலீட்டு விவரங்களைப் பட்டியல் 6—3இல் காணலாம்.

### பட்டியல் 6—3

திட்ட காலத்தில் வேளாண்மைக்காகச் செய்யப்பட்ட முதலீடு

| | மொத்த முதலீட்டளவு | வேளாண்மை, பாசனம் இவற்றிற்கான முதலீட்டளவு | மொத்த முதலீட்டில் வேளாண்மை முதலீட்டின் சதவிகிதம் |
|---|---|---|---|
| | (கோடி ரூபாயில்) | | |
| முதல் ஐந்தாண்டுத் திட்டம் | 1960 | 601 | 30.7 |
| இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் | 4600 | 950 | 20.6 |
| மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டம் | 8573 | 1754 | 20.5 |
| ஓராண்டுத் திட்டங்கள் | 6756 | 1624 | 34.0 |
| நான்காம் ஐந்தாண்டுத் திட்டம் | 15902 | 3466 | 21.8 |
| ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டம் | 39287 | 8084 | 20.5 |

ஆதாரம்: ஐந்தாண்டுத் திட்டங்கள் சம்பந்தமான வெளியீடுகள்.

## குடியானவர்களுடைய தேவைகளும் பிரச்சினைகளும்

விவசாய உற்பத்திக்கு அடித்தளமாக நின்று உழைப்பவர்கள் குடியானவர்கள். நாட்டினுடைய மொத்த உற்பத்தியைப் பெருக்கமடையச் செய்ய வேண்டுமெனில் நிலத்தின் உற்பத்தித் திறனை, அதாவது, சராசரி ஒரு ஹெக்டேர் நிலத்திலிருந்து கிடைக்கக் கூடிய விளைச்சலை அதிகரிக்க வேண்டுமெனில் விவசாயிகளை எதிர்நோக்கி இருக்கும் பிரச்சினைகள் எவை என்று ஆராய்ந்து அறிய வேண்டும். அதேபோன்று அவர்களுடைய இன்றியமையாத தேவைகள் யாவை என்பதையும் கண்டறிய வேண்டும். இவ்வாறு ஆராய்ந்து அறிந்த பிறகு சிக்கல்களைக் களையவும் தேவைகளைப் பூர்த்தி செய்யவும். தகுந்த நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. நாடு விடுதலை அடைந்த பிறகு அரசு இம்முறையைக் கையாண்டு பல விவசாய மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. விவசாயிகளுடைய தேவைகள் என்ன, அவர்களுடைய பிரச்சினைகள் எவை என்பதை முதலில் பொதுப்படையாகக் காணலாம்.

வேளாண்மைக்குத் தண்ணீர் ஒரு முக்கிய இடு பொருள் (Input) என்பதனை வலியுறுத்திக் கூற வேண்டிய அவசியமில்லை. பாசன வசதி இல்லாமை அல்லது தேவையான அளவிற்கு நீர் கிடைக்காத நிலை குடியானவர்களை எதிர்நோக்கி நிற்கும் பிரச்சினைக்குள் முக்கியமான ஒன்றாகும். குடியானவர்களில் சிறுபான்மையினரே செல்வ நிலையில் இருக்கின்றனர். பெரும்பான்மையோர் ஏழ்மையில் உழல்கின்றனர். இவர்கள் ஒவ்வொருவரும் சாகுபடி செய்யும் நில அளவு மனை குறைவாக இருக்கின்றது. குடியானவர்களை இரு வகையாகப் பிரிக்கலாம். நில உரிமையாளர்களாகவோ அல்லது குத்தகைதாரர்களாகவோ இருப்பவர்கள் ஒரு வகையினர்; சொந்தத்தில் நிலமில்லாமல் கூலிக்கு வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் பிறிதொரு வகையினர். நிலம் படைத்தவர்கள் அனைவரும் நேரிடையாக வேளாண்மையில் ஈடுபடுவதில்லை; குத்தகைக்குப் பிறரிடம் நிலத்தை ஒப்படைக்கின்றனர். கிடைக்கும் பங்கு ஊக்கமளிப்பதாக இல்லாவிட்டால் குத்தகைதாரர்கள் முனைப்பாகச் சாகுபடியில் தங்களை ஈடுபடுத்திக்கொள்வதில்லை. இக்காரணத்தால் சராசரி ஒரு ஹெக்டேருக்குக் கிடைக்கக் கூடிய விளைச்சலும் குறைந்துவிடக்கூடும். பொதுவாக குடியானவர்கள் முறையான கல்வி கற்காதவர்கள்; எனவே அவர்கள் பழமை விரும்பிகளாக இருக்கின்றனர். சாகுபடியில் அவர்கள் 'பழைய முறைகளையே தொடர்ந்து கையாண்டு வரு

கின்றனர். நூதன முறைகளைக் கையாண்டால் உற்பத்தியில் நல்ல பெருக்கம் ஏற்பட வாய்ப்பு உண்டு. சாதாரண விதை வகைகளைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக உயர் விளைச்சல் ரக விதைகள் பயன்படுத்துவதன் வாயிலாக நல்ல மகசூலைப் பெற முடியும். நோய்களும் பூச்சிகளும் பயிர்களுக்கு நாசம் விளைவிக்கின்றன. தகுந்த அளவிற்கு உரம் இடாவிட்டால் மகசூல் குறைந்து விடுகின்றது. இவை எல்லாவற்றுடன் குடியானவர்களுக்குக் கடனுதவி தேவைப்படுகின்றது. உரிய நேரத்தில் தேவையான அளவில் குறைந்த வட்டியில் குடியானவர்களுக்கு கடன் உதவி அளிக்க வேண்டியது மிக்க அவசியமாகிறது விவசாயிகள் தங்களுடைய விளைபொருள்களை விலையாக்குவதில் பல இடையூறுகள் எழுகின்றன. குடியானவர்களுக்கும் நுகர்வோருக்கும் இடையில் உள்ளவர்கள் அதிக இலாபம் ஈட்டுகின்றனர். எனவே, தங்களுடைய விளைபொருள்களை நல்ல விலையில் விற்க அவர்களுக்குப் பல வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டியது அவசியமாகிறது. விவசாயப் பண்டங்களுக்குக் கிடைக்கும் விலை வேளாண்மையை ஊக்குவிக்கும் விதத்தில், குடியானவர்களுக்கு உற்பத்திச் செலவு போக கணிசமான அளவில் இலாபம் கிடைக்கும் வகையில் இருத்தல் வேண்டும். நல்ல விலை கிடைக்காவிட்டால் குடியானவர்களுக்குச் சாகுபடி செய்வதில் இருக்கும் ஊக்கமும் கவனமும் குறையக்கூடும். இதன் விளைவால் நாட்டின் விவசாய உற்பத்தி மந்தமடையக்கூடும்.

இவ்வாறு நம் நாட்டில் குடியானவர்கள் பல சிக்கல்களைச் சமாளிக்க வேண்டிய நிலையில் இருந்தனர். பல சிக்கல்கள் இன்றும் தொடர்ந்து இருந்துவருகின்றன. சிக்கல்களின் அளவும் தன்மையும் நாட்டின் வெவ்வேறு பகுதிகளுக்கு ஒப்ப வெவ்வேறு பயிர்களுக்கு ஏற்ப மாற்றமடையக்கூடும். அரசு கடந்த காலத்தில் மேற்கொண்டு வந்ததும், இன்று மேற்கொண்டு வருவதுமான மேம்பாட்டுத் திட்டங்கள், மேற்கூறிய பிரச்சினைகளைக் களைவதைக் குறிக்கோளாகக் கொண்டவையாகும். திட்ட காலத்தில் அரசு மேற்கொண்ட முக்கிய வேளாண்மை வளர்ச்சித் திட்டங்கள் யாவை என்றறிய முயலலாம்.

## நாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள வேளாண்மை மேம்பாட்டுத் திட்டங்கள்

1. பாசன வசதி : வேளாண்மைக்குத் தண்ணீர் இன்றியமையாத ஒன்றாகும். கரும்பு, நெல் போன்ற பயிர்களுக்கு அதிக அளவில் நீர் வேண்டியிருக்கிறது. நீர் அளிப்பும் முறையாகத்

தொடர்ந்து இருக்கவேண்டும். பிற பயிர்களுக்கு சற்றுக் குறைந்த அளவிலும், அவ்வப்போது நீர் கிடைத்தால் போதும். ஆனால், எல்லாப் பயிர்களுக்கும் நீர் ஒரு முக்கிய இடு பொருள் (Input) என்பது தெளிவே. நாட்டில் நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குவ தற்காக அரசு அதிக அளவில் முதலீடு செய்திருக்கின்றது. பாசன வசதி அளிப்பதில் வாய்க்கால்கள், ஆறுகள், குளங்கள், கிணறுகள் இம்மூன்றும் நம் நாட்டில் முக்கியச் சாதனங்களாக இருக்கின்றன. நில மட்டத்தில் வழிந்து ஓடும் நீரை மடக்கி, தேக்கி ஆறுகளும் குன்றுகளும் பாசனத்திற்கு நீரளிக்கின்றன. நிலமட்டத்திற்குக் கீழிருக்கும் நீரைக் கிணறுகள் மூலமாகப் பயன்படுத்துகின்றோம். இம்மூன்று நீர்ச் சாதனங்களையும் பெருக்குவதற்கு அரசு தீவிர முயற்சி எடுத்திருக்கின்றது. நாட்டில் பல நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. முதலீட்டு அளவு, பாசன வசதி பெறும் நில அளவு இவ்விரண்டையும் அடிப்படை யாகக் கொண்டு நீர்ப்பாசனத் திட்டங்கள் பேரளவுத் திட்டங்கள், மத்திய அளவுத் திட்டங்கள், சிற்றளவுத் திட்டங்கள் என்று நிர்ணயிக்கப்படுகின்றன. பேரளவு, மத்திய அளவுத் திட்டங்களை அரசே நேரிடையாக செயல்படுத்துகின்றது. சிற்றளவு திட்டங்களில் சிலவற்றை அரசு மேற்கொள்கிறது. சில சிறு பாசன வசதிகளைக் குடியானவர்கள் தங்களுடைய நிலங் களில் தாமே அமைத்துக் கொள்கின்றனர். அரசு குடியானவர் களுக்கு நிதி உதவியும், தொழில்நுணுக்க உதவியும் அளிக்கின்றது. கிணறு வெட்டுதல், கிணற்றை ஆழப்படுத்துதல், பம்பு செட்டுகள் அமைத்தல் போன்றவை இவ்வகையைச் சேரும். நாட்டில் நீர்ப் பாசன வசதியைப் பெருக்குவதற்காக அரசு செலவிடும் முதலீடு ஆண்டாண்டுக்குப் பெருகிக்கொண்டே இருந்திருக்கிறது. அரசு செய்த முதலீட்டின் அளவுகள்: முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 310 கோடி; இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 420 கோடி; மூன்றாம் திட்டக் காலத்தில் ரூ. 665 கோடி; நான்காம் திட்டக் காலத்தில் ரூ. 1094 கோடி; ஐந்தாம் திட்டக் காலத்தில் ரூ. 3440 கோடி. இவ்வாறு அரசு மேற்கொண்ட பல மேம்பாட்டுத் திட்டங்களின் வாயிலாகப் பாசனத்தின் கீழிருக்கும் நில அளவு குறிப்பிடும் அளவில் பெருகி இருக்கின்றது.

2. உயர் விளைச்சல் ரக விதைகள்: கடந்த காலத்தில் நாட்டில் நிலத்தினுடைய சராசரி விளைச்சல் குறைவாக இருந்த தற்குப் பல காரணங்கள் இருந்தன. குடியானவர்கள் சாதாரண ரக விதைகளையே பயன்படுத்தி வந்தது இவற்றுள் ஒரு முக்கியமான காரணமாகும். சாதாரண ரக விதைகளுக்குப் பதிலாக உயர் விளைச்சல் ரக விதைகளைப் பயன்படுத்தும்போது விளைச்சலில்

நல்ல உயர்வு இருக்கின்றது என்று விஞ்ஞான அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் அறிவிக்கின்றன. எனவே, புதிய உயர் விளைச்சல் ரக விதைகளைப் பயன்படுத்துவதால் கிடைக்கக்கூடிய பயன்களைக் குடியானவர்களிடையே நன்றாகப் பரப்ப வேண்டும் என்பதில் அரசு மிக்க அக்கறை காட்டி வருகிறது. அரசு பல வேளாண்மை ஆராய்ச்சிக் கூடங்களை அமைத்து நிருவகித்து வருகின்றது. நாட்டின் வெவ்வேறு பகுதிகளுக்கு ஏற்புடையதான புதுப் புது உயர் விளைச்சல் ரக விதைகளை உருவாக்குவதில் இவ்வாராய்ச்சிக் கூடங்கள் முனைப்பாக ஈடுபட்டு வருகின்றன. ஆராய்ச்சிக் கூடங்களிலிருந்து வெளிவரும் புது ரக விதைகள் அரசு நடத்திவரும் விவசாயப் பண்ணைகளில் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. தானியங்கள், பருப்பு வகைகள், எண்ணெய் வித்துகள், தோட்டப் பயிர்கள், காய்கறி வகைகள், பழவகைகள் என்று பல வகையான பயிர்கள் நாட்டில் விளைகின்றன. ஒவ்வொரு பயிரிலும் பல வகைகள் இருக்கின்றன. நாட்டிலுள்ள அநேகமாக எல்லாப் பயிர்களுக்கும் இன்று உயர் விளைச்சல் ரக விதைகளும் நாற்றுகளும் இருக்கின்றன. உயர் விளைச்சல் ரக அபிவிருத்தித் திட்டம் நாட்டில் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகின்றது. நாட்டில் பசுமைப் புரட்சி ஏற்பட்டிருக்கிறது என்று கூறும் அளவிற்கு இத்திட்டத்தின் மூலம் வெற்றி கிடைத்திருக்கிறது எனலாம்.

3. வேளாண்மை விரிவாக்கம்: அமோகமான விளைச்சல் கிடைக்க வேண்டுமெனில் குடியானவர்கள் உயர் விளைச்சல் ரக விதைகளைப் பயன்படுத்த வேண்டும், நூதன சாகுபடி முறைகளைக் கையாள வேண்டும். போதுமான அளவிற்கு இரசாயன உரங்கள் இட வேண்டும். சரியான பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். வேளாண்மையில் இவை ஒவ்வொன்றின் அவசியத்தையும் உணர்ந்து அரசு, இவை சம்பந்தமான ஆராய்ச்சிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது. இவ்வாராய்ச்சிகளின் வாயிலாகப் புதிய வழிமுறைகள் கண்டுபிடிக்கப்படுகின்றன. இத்தகைய ஆராய்ச்சிகளின் முடிவுகள் குடியானவர்களுக்குக் கிடைத்தல் வேண்டும்; குடியானவர்களும் அவற்றை நடைமுறையில் பயன்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் ஆராய்ச்சிக்கூடங்களிலும் அரசுப் பண்ணைகளிலும் கண்டுபிடிக்கப்படும் புதிய ரக விதைகளுக்கும் வழி முறைகளுக்கும் உண்மையான வெற்றி கிடைத்ததாகக் கருதலாம். நூதன முறைகளைக் குடியானவர்களுடைய வீடு தேடி அறிவிக்க வேண்டும். பழைய முறைகளைக் கைவிட்டு நூதன முறைகளைப் பின்பற்றுவதால் கிடைக்கக்கூடிய பயன்கள் யாவை என்பதனை அவர்கள்

கண்டறிந்து நம்பும்வகையில் செய்திகளைப் பரப்பவேண்டும். நம் நாட்டில் குடியானவர்களில் பெரும்பான்மையோர் கல்வி அறிவு இல்லாதவர்கள்; மாற்றத்தில் அதிக நாட்டம் காட்டாதவர்கள். எனவே அவர்கள் கையாளும் சாகுபடி முறைகளை மாற்றுவது என்பது அவ்வளவு எளிதான செயலன்று. புதிய ரக விதை, பயிர் பாதுகாப்பு, உரமிடுதல், நோய் தடுப்பு முறை இவை சம்பந்தமான செய்திகளைக் குடியானவர்களிடையே பரப்புவதற்காக வேளாண்மை விரிவாக்கத் திட்டம் ஒன்று நாடு முழுவதிலும் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் விரிவாக்க அலு வலர்கள் அடிக்கடி குடியானவர்களைத் தேடிச் சென்று அவர்களுக்கு நூதன சாகுபடி முறைகளைப் பயிற்றுவிக்கிறார்கள். வேளாண்மைக்காக அரசு செலவிடும் மொத்தத் தொகையில் ஒரு கணிசமான அளவு இத்தகைய விரிவாக்கச் செயலுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

4. நிலச் சீர்திருத்தங்கள் : மாநில அரசுகள் பல நிலச் சீர்திருத்தச் சட்டங்களை இயற்றி இருக்கின்றன. நேரிடையாக விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் குடியானவர்களுடைய நலனைக் காக்க வேண்டும் என்பதே இச்சட்டங்களின் ஒரே நோக்கம். இந்தியாவில் இது வரை நிறைவேற்றப்பட்டிருக்கும் நிலச் சீர்திருத்தச் சட்டங்களை இருவகையாகப் பிரிக்கலாம். (1) நில உரிமை அளவை நிர்ணயிக்கும் சட்டங்கள் இவற்றுள் ஒரு வகை யாகும். ஒரு நபர் சட்டப்படி எந்த அளவுக்கு நிலத்தை வைத்துக் கொள்ளலாம் என்று இச்சட்டங்கள் நிர்ணயிக்கின்றன. இவ்வகை சட்டங்களின் முக்கிய நோக்கம் நிலங்கள் ஒரு சிலர் கைகளிலேயே செறிந்து இருக்கக் கூடாது என்பதாகும். நாட்டில் இருக்கும் நிலங் கள் ஏற்றத் தாழ்வுக்ள் இல்லாத வகையில் குடியானவர்களிடையே மறு பங்கீடு செய்யப்பட வேண்டும். செல்வம் ஒரு சிலரிடத்தில் மட்டும் பதுங்கிக் கிடப்பதால் நாட்டில் பல பொருளாதார, சமூகத் தீங்குகள் விளைகின்றன. இதே போன்ற நிலம் ஒரு சிலர் வசமே இருக்க நேரிட்டாலும் பல தீங்குகள் எழுகின்றன. நில உடைமையில் இருக்கும் ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்கும் நோக்கத் துடன் ஏறக்குறைய எல்லா மாநில அரசுக்கும் நில உச்ச வரம்புச் சட்டங்களை இயற்றி உள்ளன. (2) இரண்டாம் வகைச் சட்டங் கள் வேளாண்மையைச் சார்ந்து நிற்கும் குடியானவர்களுடைய நலத்தைப் பெருக்குவதையும் வேளாண்மை வளர்ச்சியை ஊக்கு விப்பதையும் குறியாகக் கொண்டவை. அரசுக்கும் குடியானவர் களுக்கும் இடையே இருக்கும் ஜமீன்தார்கள், இனாம்தார்கள் போன்றவர்களை ஒழிப்பது, குத்தகைதாரர்களுடைய உரிமை களை உறுதிப்படுத்துவது, குத்தகைதாரர்களுக்கு நில உரிமை

அளிப்பது, குத்தகைதாரர்கள் கொடுக்க வேண்டிய வார அளவை சட்டப்படி நிர்ணயிப்பது, சிறு சிறு துண்டுகளாகச் சிதறிக் கிடக்கும் நிலங்களை ஒருமித்தல் (Consolidation), நிலத்தை ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் பிரிப்பதை (Prevention of Subdivision) தடை செய்தல் போன்ற சட்டங்கள் இவ்வகையின்கீழ் வரும்.

5. **விவசாயக் கடன் :** வேளாண்மை சம்பந்தமான பல்வேறு காரியங்களை நிறைவேற்ற குடியானவர்களுக்குக் கடன் உதவி தேவைப்படுகிறது. குடியானவர்களுக்குத் தேவைப்படும் கடன்களைப் பொதுவாக மூன்று தலைப்புகளில் அடக்கலாம். 1. **குறைந்த காலக் கடன் :** விதை வாங்க, உரம் வாங்க, பிற நடவடிக்கைகளை மேற்கொள்ள குடியானவர்களுக்குக் குறுகியகால அளவில் கடன் உதவி தேவைப்படுகிறது. ஓராண்டு காலத்திற்குள் குடியானவர்கள் இக்கடனைத் திருப்பிக் கொடுக்க இயலும். (2) **மத்திய காலக் கடன் :** நிலத்தைச் சமன்படுத்தி, சீராக்கி அதன் தரத்தை உயர்த்த, கால்நடைகள் வாங்க, கிணறு தோண்ட, பம்பு செட்டுகள் பொருத்த, விவசாயக் கருவிகள் வாங்க குடியானவர்களுக்குக் கடன் உதவி தேவைப்படுகின்றது. மேற்கூறிய செயல்களில் முதலீடு செய்தால் சில ஆண்டு இடைவெளிக்குப் பின்னர்தான் முழுப் பலனைக் காணமுடியும். இதற்காக வாங்கும் கடனை ஓர் ஆண்டிலிருந்து ஐந்தாண்டு காலத்திற்குள் குடியானவர்கள் திருப்பி அடைக்கக்கூடும். (3) **நீண்ட காலக் கடன் :** இருக்கும் நிலத்தில் நிலையான அபிவிருத்திகளைச் செய்வதற்கும், புதிய நிலத்தை வாங்குவதற்கும் குடியானவர்களுக்கு நீண்டகாலக் கடன் உதவி தேவைப்படுகிறது. ஐந்தாண்டு காலத்திற்கு மேலான கடனை நீண்ட காலக் கடனாகக் கருதலாம்.

விவசாய வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு நோக்கினால், விவசாயக் கடன்கள் குடியானவர்களுக்கு உரிய காலத்தில், நியாயமான வட்டியில், தேவையான அளவில் கிடைக்கவேண்டும் என்பது தெளிவாகின்றது. பழங்காலத்தில் குடியானவர்கள் தங்களுக்குத் தேவையான கடனை லேவாதேவிக்காரர்கள், பெரிய மிராசுதாரர்கள், வணிகர்கள், தரகர்கள் இவர்களிடமிருந்தே பெற்று வந்தனர். இவர்கள் மிக உயர்ந்த வட்டிக்குப் பணம் கொடுத்துக் குடியானவர்களைச் சுரண்டி வாழ்ந்தார்கள். உயர் வட்டி வசூலிப்பதுடன் கடன்பட்ட குடியானவர்களைப் பல இன்னல்களுக்கும் உள்ளாக்கி வந்தார்கள். அறியாமையிலும் வறுமையிலும் மூழ்கிக் கிடந்த குடியானவர்களை லேவா தேவிக்காரர்களுடைய கொடிய பிடியிலிருந்து விடுவிக்கும் நோக்கத்துடன் அரசு இலகுவான முறையில் குடியானவர்களுக்குக் கடனுதவி அளிக்க ஏற்பாடு

செய்திருக்கிறது. கூட்டுறவு அமைப்பு வாயிலாகவும் வணிக வங்கிகள் வாயிலாகவும் கடனுதவி அளிக்கும் முறையை நாளாவட்டத்தில் அரசு பெருக்கி வந்திருக்கிறது. இத்துறையில் கடந்த முப்பதாண்டுக் காலத்தில் நல்ல முன்னேற்றம் இருந்திருக்கிறது. இருந்தாலும், நாட்டில் குடியானவர்களுக்குத் தேவைப்படும் மொத்த கடனளவையும் இந்நிறுவனங்களால் அளிக்க முடியவில்லை. எடுத்துக்காட்டாக, 1973 - 1974 ஆம் ஆண்டில் விவசாயிகளுக்குத் தேவைப்பட்ட மொத்தக் கடன் தொகையின் (நீண்ட காலக் கடன், மத்திய காலக் கடன், குறுகிய காலக் கடன் மூன்றையும் சேர்த்து) அளவு ஏறக்குறைய ரூ. 4000 கோடி என்று மதிப்பிடப்பட்டது. ஆனால், இத்தொகையில் 40 சதவிகிதத்தைத்தான் கூட்டுறவு நிறுவனங்களாலும் வணிக வங்கிகளாலும் அளிக்க முடிந்தது. விவசாயிகளுக்குக் கடனுதவி அளிப்பதில் கூட்டுறவு நிறுவனங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. கூட்டுறவு நிறுவனங்கள் வாயிலாக அளிக்கப்பட்ட விவசாயக் கடன், ஆண்டாண்டுக்கும் பெருகி வந்திருக்கின்றது.

## பட்டியல் 6—4

கூட்டுறவு நிறுவனங்கள் அளித்த கடன் (கோடி ரூபாயில்)

| ஆண்டு | குறுகிய காலக் கடன் | மத்திய காலக் கடன் | நீண்டகாலக் கடன் | மொத்தக் கடன் |
|---|---|---|---|---|
| 1970-71 | 519.3 | 58.5 | 118.9 | 696.7 |
| 1975-76 | 918.3 | 105.1 | 136.1 | 1159.5 |

. 6 விற்பனை வசதியும் கிடங்கு வசதியும்: விவசாயப் பண்டங்களை விற்பனை செய்வதற்கும் அவற்றைச் சேமித்து வைக்கக் கிடங்குகள் அமைப்பதற்கும் அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்திருக்கின்றது. குடியானவர்கள் அனைவருக்கும் தங்களுடைய விளைபொருள்களைச் சேமித்து வைப்பதற்குத் தேவையான வசதிகள் இருப்பதில்லை. இதனால் அவர்கள் அறுவடை முடிந்த உடனே தங்களுடைய பண்டங்களை விலையாக்க வேண்டிய நிர்பந்த நிலையில் இருக்கின்றனர். குடியானவர்களுடைய இந்நிலையை வணிகர்களும் தரகர்களும் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர். வணிகர்கள் பல தவறான வழிகளை இன்றும் கடைப்பிடித்து வருகின்றனர். தவறான எடைகளையும் அளவுகளையும் வணிகர்கள் பயன்படுத்துகின்றனர். விவசாயிகள் கொண்டுவரும் பொருள்கள் சுத்தமாக இல்லை. கல்லும் மண்ணும் கலந்திருக்கின்றன

என்று கூறி அதற்காகத் தனியாகக் கிரயத்தில் பிடித்தம் செய்கின்றனர். பொருள்களின் கிரயத்தை ரொக்கமாக உடனே கொடுக்காமல் காலம் தாழ்த்திக் கொடுக்கின்றனர். இவை போன்ற இன்னும் எத்தனையோ வழிகளை விவசாயிகளுக்குப் பாதகமாக உபயோகிக்கின்றனர். அடிப்படை உற்பத்தியாளர்களான குடியானவர்களுக்கும் முடிவில் பண்டங்களை உபயோகிக்கும் நுகர்வோர்களுக்கும் இடையே பலர் தலையிட்டு, ஒவ்வொருவரும் ஒரு கணிசமான இலாபத்தை அடைகின்றனர். இவ்வாறு பல இடைத்தரகர்கள் இருப்பதால்தான் குடியானவர் ஒரு பொருளைத் தன்னுடைய களத்தில் விற்கும் விலைக்கும் சில்லரைச் சந்தையில் முடிவில் அப்பொருள் விற்கப்படும் விலைக்கும் பெருத்த வேறுபாடு இருக்கின்றது.

விவசாயிகள் விளைவிக்கும் பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்து அவர்களுக்கு உதவ வேண்டும் என்கிற நோக்கத்தோடு அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அகில இந்தியக் கிடங்குகள் நிறுவனம் என்னும் பெயரில் ஓர் அமைப்பு நாட்டளவில் இயங்கி வருகின்றது. நாட்டின் பல்வேறு முக்கிய இடங்களில் இந்நிறுவனம் விவசாயக் கிடங்குகளை அமைத்து வருகின்றது. மாநில அரசுகளும் மாநில அளவில் பல கிடங்குகளை அமைத்து நிருவகித்து வருகின்றன. ஆயிரக் கணக்கான ஊரகக் கிடங்குகள் (Rural godowns) கிராமங்களில் நிறுவப்பட்டு வருகின்றன. குறைந்த அளவில் கட்டணம் கட்டி விவசாயிகள் தங்கள் விளை பொருள்களை ஊரகக் கிடங்குகளில் சேமித்து வைக்க இவை உதவியாக இருக்கின்றன. இத்தகைய ஊரகக் கிடங்குகளைக் கூட்டுறவுத் துறை கட்டி நிறுவகித்து வருகின்றது.

விவசாயப் பண்டங்களின் விற்பனையைப் பொறுத்த அளவில், ஒவ்வொரு மாநில அரசும் 'முறைப்படுத்திய அங்காடி' (Regulated Market) முறையை செயலுக்குக் கொண்டுவந்திருக்கின்றது. நாட்டில் நூற்றுக்கணக்கான முறைப்படுத்திய அங்காடிகள் இன்று இயங்கி வருகின்றன. முறைப்படுத்திய அங்காடியின் அடிப்படை நோக்கம், வேளாண்மைப் பொருள்களின் விற்பனையில் சாதாரணமாகக் காணப்படும் முறைகேடான செயல்களைக் களைந்து விவசாயிகளுடைய நலனைப் பாதுகாக்க வேண்டும் என்பதே.

7. **வேளாண்மைப் பொருள்களின் விலை :** மேலே விவரிக்கப்பட்ட வசதிகள் அளிக்கப்படுவதுடன் வேளாண்மைப் பொருள்களுக்கு விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடிய விலையும் நியாய

மானதாக இருத்தல் வேண்டும். அவர்கள் நட்டத்திற்கு உள்ளா காமல், தொடர்ந்து ஊக்கத்துடன் விவசாயத்தில் ஈடுபாடு கொள்ளும் வகையில் இருத்தல் வேண்டும். நல்ல விலை கிடைத் தால்தான் விவசாயிகள் ஊக்கத்துடன் உழைப்பார்கள். நாட்டளவில் தெளிவான ஒரு வேளாண்மை விலைக் கொள்கையைக் கையாள வேண்டியது மிக்க அவசியமாகிறது. இல்லாவிடில் நாட்டில் வேளாண்மைத் துறை பின்னடைய நேரிடும். இதனை அறிந்து, மத்திய அரசு 'விவசாயப் பொருள் விலை நிர்ணயக் குழு' ஒன்றை நியமித்திருக்கிறது. இக்குழு பல விவசாயப் பொருள்களின் ஆக்கச் செலவுபற்றி ஆராய்ந்து முடிவு கட்டி, விவசாயிகளுடைய பிரதிநிதிகளின் கருத்துகளை நேரில் கேட்டறிந்து, நாட்டின் முக்கியப் பயிர்களுக்குக் கொள்முதல் விலை எந்த மட்டத்தில் இருக்க வேண்டுமென்று ஒவ்வோர் ஆண்டும் அரசுக்கு எடுத்துரைக்கின்றது.

## வேளாண்மையில் முன்னேற்றம்

நாட்டில் அரசு பல வேளாண்மை மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தியதன் வாயிலாகக் கடந்த முப்பதாண்டுக் காலத்தில் வேளாண்மையில் நல்ல வளர்ச்சியும் முன்னேற்றமும் இருந்திருக் கிறது. வேளாண்மையில் நல்ல வளர்ச்சி இருந்திருக்கின்றதா இல்லையா என்பதைக் கண்டறியச் சில அளவுகோல்களைச் சாதாரணமாகப் பயன்படுத்துகின்றோம். வேளாண்மையின் மொத்த உற்பத்தி, நிலத்தின் சராசரி விளைச்சல், பாசனத்தின் கீழ் இருக்கும் நில அளவு, பயிர்ச் செலவு (Crop Intensity) இவையே வளர்ச்சியின் அளவு கோல்களாகும். இந்த அளவு கோல்களைப் பயன்படுத்தி இந்தியாவில் எந்த அளவுக்கு வேளாண்மை வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதைக் கண்டறி வோம்.

## சாகுபடியின்கீழ் இருக்கும் நில அளவு

நாட்டின் மொத்த நிலப் பரப்பு 329 மில்லியன் ஹெக்டேர் களாகும். ஆனால் சாகுபடியின்கீழ் இருந்த நிலத்தின் நிகர அளவு 1976-77 ஆம் ஆண்டில் 140 மில்லியன் ஹெக்டேர்களாகும். அதாவது, மொத்த நிலப் பரப்பில் 42.6 சதவிகிதம் சாகுபடியின் கீழ் இருந்தது. மொத்த நிலப் பரப்பில் 23 சதவிகிதம் காடுகளாக இருந்தது. எஞ்சிய 34.4 சதவிகித நில அளவில் பின்வரும் இனங்கள் அடங்கின: சாகுபடிக்குத் தகுதியற்ற நிலம், விவசாயத் திற்கு அல்லாமல் பிற வகைகளில் பயன்படுத்தப்படும் நிலம், மேய்ச்சல் நிலம், தரிசு நிலம் என்பன. அண்மைக் காலத்தில் சாகுபடியின்கீழ் இருக்கும் நில அளவில் மாற்றம் இருந்திருக்

கின்றதா? ஏறக்குறைய 25 ஆண்டுக் காலத்தில் 17 சதவிகித உயர்வு இருந்திருக்கிறது. 1950-51ஆம் ஆண்டில் நாட்டில் சாகுபடியின்கீழிருந்த நிலத்தின் அளவு 119 மில்லியன் ஹெக்டேர்களாகும். அதாவது, மொத்த நிலப் பரப்பில் இது 36 சதவிகிதமாகும். 1976-77 ல் சாகுபடியின் கீழிருந்த நிலம் 140 மில்லியன் ஹெக்டேர்களாக உயர்ந்தது (மொத்த நிலப் பரப்பில் 43 சதவிகிதம்). சாகுபடி நில அளவு உயர்ந்த விகிதத்தில் வளர்ச்சியடைந்திருக்கிறது என்று கூற முடியாது. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக நிலம் சாகுபடியின்கீழ் இருந்துவரும் ஒரு பழம் பெரும் நாடான இந்தியாவில் இதற்கு மேல் சாகுபடி நில அளவைப் பெருக்குவது என்பது ஒரு கடினமான செயலே. நாட்டில் கிடைக்கும் வளமான நிலங்கள் அனைத்தும் இதுவரை உழவிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. எனவே, மேலும் அதிக அளவில் நிலத்தைச் சாகுபடியின்கீழ்க் கொண்டுவருவதற்கு ஏது இல்லை.

### முக்கியப் பயிர்கள்

நம் நாடு பரந்த நிலப் பரப்பைக் கொண்டிருக்கிறது. நாட்டின் வெவ்வேறு பகுதிகள் வெவ்வேறு தட்பவெப்ப நிலையைக் கொண்டிருக்கின்றன. எனவே, நாட்டில் பல வகையான பயிர்கள் விளைகின்றன. சாகுபடியின் கீழிருக்கும் மொத்த நிலப் பரப்பில் ஏறக்குறைய 81 சதவிகித அளவு உணவுப் பொருள்களைப் பயிராக்க உபயோகப்படுகின்றது. தானியங்கள், பருப்பு வகைகள் இவை இரண்டும் உணவுப் பொருள்கள் என்னும் தலைப்பில் அடங்குகின்றன. மொத்த நில அளவில் சுமார் கால் பங்கு நில அளவில் அரிசி உற்பத்தியாகின்றது. சோளம், கம்பு, மக்காச் சோளம், கேழ்வரகு, பார்லி முதலியன நாட்டில் விளையும் பிற உணவுத் தானியங்களாகும். பருப்பு வகைகள் 15 சதவிகித நில அளவில் விளைகின்றன. எஞ்சி இருக்கும் 19 சதவிகித நிலத்தில் பிற பயிர்கள் விளைகின்றன. அவற்றுள் முக்கியமானவை : கரும்பு; மணிலாக்கொட்டை, ஆமணக்கு போன்ற எண்ணெய் வித்துகள்; பருத்தி, சணல் போன்ற நார்ப் பயிர்கள். புகையிலை, தேயிலை, காப்பி, மிளகு, மிளகாய், உருளைக் கிழங்கு, பழங்கள், காய்கறிகள் போன்ற பயிர்களும் நாட்டில் பயிராகின்றன. ஆனால், இவை ஒவ்வொன்றும் குறிப்பிட்ட சில இடங்களில்தான் அதிகமாகப் பயிராகின்றன. நாட்டில் எல்லாப் பகுதிகளிலும் இவை பரவலாகப் பயிராவதில்லை.

### வேளாண்மை உற்பத்தியில் வளர்ச்சி

வேளாண்மை முன்னேற்றத்திற்காக அரசு பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களைத் தொடர்ந்து நிறைவேற்றி வந்திருக்கிறது

என்று கண்டோம். இவற்றின் விளைவால் நாட்டில் எந்த அளவிற்கு விவசாயப் பண்டங்களின் உற்பத்தி பெருகி இருக்கின்றது? நாட்டில் நூற்றுக்கணக்கான பயிர் வகைகள் விளைகின்றன. ஆதலால் ஒவ்வொரு பயிர் வகையிலும் எந்த அளவில் வளர்ச்சி இருந்திருக்கின்றது என்று கணக்கிட்டுக் கூற இயலும் என்றாலும் அது ஒரு நீண்ட விளக்கமாக அமையும். அதற்கு அவசியமும் இல்லை. பல பயிர்களின் மொத்த உற்பத்தியில் இருக்கும் ஏற்றத்தை எளிய முறையில் விளக்கிக் காட்டும் ஒரு முறை பொருளியலில் வழக்கில் இருந்து வருகின்றது. 'வேளாண்மை உற்பத்திக் குறியீட்டு எண்கள்' (Index of Agricultural Production) என்பதே இம்முறையாகும். டில்லியில் இருக்கும் 'பொருளாதாரப் புள்ளி விவர இயக்ககம்' நம் நாட்டில் இந்தக் குறியீட்டு எண்களைக் கணக்கிட்டு வருகின்றது. இதில் நாட்டில் விளையும் 42 முக்கியப் பயிர்கள் அடங்கி இருக்கின்றன.

## பட்டியல் 6—5

இந்தியாவில் வேளாண்மைக் குறியீட்டு எண்கள்
(அடிப்படை ஆண்டு 1961 - 62)

| பயிர் வகைகள் | 1959-60 | 1962-63 | 1965-66 | 1968-69 | 1971-72 | 1974-75 |
|---|---|---|---|---|---|---|
| 1. உணவு வகைகள் | 96.2 | 102.7 | 89.0 | 115.7 | 132.0 | 125.6 |
| 2. எண்ணெய் வித்துகள் | 94.7 | 108.7 | 98.0 | 105.7 | 131.0 | 127.9 |
| 3. நார் வகைகள் | 82.3 | 115.4 | 98.8 | 97.5 | 133.8 | 130.1 |
| 4. தோட்டப் பயிர்கள் | 98.1 | 103.9 | 112.8 | 126.3 | 138.3 | 159.8 |
| 5. வாசனைப் பொருள்கள் | 96.5 | 109.8 | 102.4 | 110.8 | 131.2 | 124.5 |
| 6. காய்கறிகள், பழங்கள் | 101.6 | 114.8 | 133.0 | 144.7 | 154.6 | 175.7 |
| 7. இதர சில்லரைப் பயிர்கள் | 90.7 | 93.0 | 115.6 | 118.9 | 113.4 | 132.6 |
| எல்லாப் பயிர்களையும் சேர்த்து | 94.3 | 101.5 | 95.8 | 114.8 | 130.9 | 129.3 |

ஆதாரம் : இந்தியாவில் வேளாண்மை நிலவரம் - 1975

அரிசி அதிக நில அளவில் பயிராகின்றது. அரிசியின் உற்பத்தி அளவும் அதிகமாக இருக்கின்றது. காய்கறி குறைந்த நில அளவில் பயிராகின்றது. அதன் உற்பத்தி அளவும் குறைவாக இருக்கின்றது. எனவே ஒவ்வொரு பயிரின் முக்கியத்துவமும் மாறுபட்டதாக இருக்கின்றது.

எனவே, குறியீட்டு எண்களைக் கணக்கிடும்போது ஒவ்வொரு பயிருக்கும் அதனுடைய முக்கியத்துவத்திற்குத் தகுந்தாற்போல ஒரு 'நிறை' (weight) அளிக்கப்படுகின்றது. இவ்வாறு அமைந்த குறியீட்டு எண்களை 'நிறையிட்ட குறியீட்டு எண்கள்' (Weighted Index Numbers) என்றழைக்கிறோம். இவ்வாறு குறியீட்டு எண்களைத் தொடர்ச்சியாகப் பல ஆண்டுகளுக்கு அமைத்துப் பார்த்தால் நாட்டில் வேளாண்மை உற்பத்தியில் இருக்கும் ஏற்ற இறக்கங்களை எளிதில் அறியலாம். இந்தியாவில் சில குறிப்பிட்ட ஆண்டுகளில் வேளாண்மைக் குறியீட்டு எண்கள் எந்த மட்டத்தில் இருந்தன என்பதைப் பட்டியல் 6—5 விளக்குகிறது.

1959 - 60, 1974 - 75 இவ்விரு ஆண்டுகளுக்கு இடைப்பட்ட பதினைந்து ஆண்டுக் காலத்தில் வேளாண்மை உற்பத்தியில் நாடு கண்ட முன்னேற்றம் என்ன என்பதைப் பட்டியல் 6—5 விளக்கிக் காட்டுகிறது. பதினைந்து ஆண்டு காலக் கட்டத்தில் நாட்டின் மொத்த விவசாய உற்பத்தியில் 38 சதவிகிதப் பெருக்கம் இருந்ததை அறிகின்றோம். உற்பத்தியில் ஆண்டொன்றுக்கு சராசரி 2½ சதவிகித வளர்ச்சி இருந்திருக்கின்றது. நாட்டில் மக்கள் தொகைப் பெருக்கம் அடையாமல் இருந்திருந்தால் இந்த 2½ சதவிகித வளர்ச்சியைத் திருப்திகரமான வளர்ச்சி என்றழைக்கலாம். ஆனால், நம்முடைய மக்கள் தொகையும் ஆண்டொன்றிற்கு 2½ சதவிகித அளவில் பெருகி வருகின்றது. எனவே, விவசாய உற்பத்தியில் இதுவரை இருந்த வளர்ச்சி கணிசமான அளவில் இல்லை என்றுதான் கூறவேண்டும்.

எல்லாப் பயிர்களையும் ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் ஆண்டு சராசரி வளர்ச்சி 2½ சதவிகித அளவில் இருந்திருக்கின்றது. சில குறிப்பிட்ட பயிர்வகைகளை எடுத்துக்கொண்டு பார்த்தால் வளர்ச்சி விகிதம் அதிகமாக இருந்திருப்பதைக் காணலாம். நார்ப் பயிர்களில் சராசரி 4 சதவிகித வளர்ச்சி இருந்திருக்கிறது; தோட்டப் பயிர்களில் வளர்ச்சி 4 சதவிகிதத்திற்கும் மேலாக இருந்திருக்கிறது; காய்கறிகள், பழங்கள் இவற்றில் 5 சதவிகித வளர்ச்சி இருந்திருக்கிறது.

## உற்பத்தித் திறன் (Productivity)

விவசாய முன்னேற்றத்தை உற்பத்தித் திறனில் இருக்கும் வளர்ச்சியின் வாயிலாகக் கணக்கிடலாம். விவசாய உற்பத்தித் திறனை இரு வழிகளில் மதிப்பிடலாம். ஒன்று நிலத்தின் உற்பத்தித் திறனாகும். ஒரு ஹெக்டேர் நில அளவிலிருந்து கிடைக்கும் சராசரி விளைச்சல் அளவை நில உற்பத்தித் திறன் என்றழைக்கலாம். பிறிதொன்று, நிலத்தில் வேலை செய்யும் ஒரு தொழிலாளி சராசரியில் எந்த அளவிற்கு உற்பத்தி செய்கிறார் என்பது. இதனை விவசாயத் தொழிலாளி உற்பத்தித்திறன் என்றழைக்கலாம். விவசாயத் தொழிலாளி உற்பத்தித் திறன் பற்றிய விவரங்கள் இந்தியாவில் சேகரிக்கப்படுவதில்லை. எனவே, இந்தியாவில் நில உற்பத்தித் திறன் எவ்வாறு மாற்ற மடைந்திருக்கிறது என்பதைக் கண்டறியலாம். கடந்த முப்ப தாண்டுக் காலத்தில் சில முக்கியப் பயிர்களில் எந்த அளவிற்கு நில உற்பத்தித் திறன் மாற்றமடைந்திருக்கின்றது என்பதனைப் பட்டியல் 6—6 விளக்கிக் காட்டுகிறது.

### பட்டியல் 6—6

ஒரு ஹெக்டேர் உற்பத்தியின் அளவு (கிலோ கிராமில்)

| பயிர் | 1951 | 1961 | 1971 | 1978 |
|---|---|---|---|---|
| அரிசி | 668 | 1013 | 1073 | 2009 |
| கோதுமை | 663 | 851 | 1209 | 1480 |
| மக்காச்சோளம் | 547 | 926 | 968 | 1076 |
| பார்லி | 764 | 879 | 982 | 1155 |
| மணிலாக் கொட்டை | 775 | 745 | 720 | 969 |

ஆதாரம் : இந்தியாவில் வேளாண்மை நிலவரம் - 1975

திட்ட காலத்தில் இந்தியாவில் நில உற்பத்தித் திறன் பெருமளவிற்கு உயர்ந்திருக்கிறது என்பது பட்டியல் 6—6 லிருந்து தெளிவாகும். உணவு தானியங்களைப் பொறுத்த அளவில் உற்பத்தித் திறன் வியப்பூட்டும் அளவிற்கு உயர்ந்திருக்கிறது என்று கூறலாம். ஆயினும், பிற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது இந்தியாவில் உற்பத்தித் திறன் இனியும் குறைவாகத்தான் இருக்கிறது என்று அறிகின்றோம். இதற்கான விளக்கத்தைப் பட்டியல் 6—7ல் காணலாம்.

## பட்டியல் 6—7

**சில குறிப்பிட்ட பயிர்களில் நில உற்பத்தித் திறன் (ஆண்டு 1979)**
**(கிலோ கிராமில்)**

| நாடு | அரிசி | கோதுமை | மக்காச் சோளம் | பார்லி | மணிலாக் கொட்டை | புகையிலை | சணல் |
|---|---|---|---|---|---|---|---|
| இந்தியா | 1725 | 1574 | 833 | 1155 | 806 | 989 | 1160 |
| ருஷ்யா | 3941 | 1450 | 2289 | த.இ | த.இ | 2000 | த.இ |
| ஐக்கிய அமெரிக்கா | 5142 | 2301 | 6865 | 2723 | 2963 | 2394 | த.இ |
| இந்தோனிசியா | 3005 | த.இ | த.இ | த.இ | 1430 | த.இ | த.இ |
| சீனா | 3714 | 1522 | 2786 | 1327 | 1114 | 1366 | 3817 |
| பங்களாதேஷ் | 1955 | த.இ | த.இ | த.இ | த.இ | த.இ | 1478 |
| ஜப்பான் | 6240 | த.இ | த.இ | த.இ | த.இ | 2713 | த.இ |
| தாய்லாந்து | 2108 | த.இ | த.இ | த.இ | த.இ | த.இ | 1308 |
| பர்மா | 1863 | த.இ | த.இ | த.இ | 798 | த.இ | த.இ |
| பிரேசில் | 1413 | த.இ | 1461 | த.இ | 1638 | 1288 | 1059 |
| பாகிஸ்தான் | 2250 | 1475 | த.இ | த.இ | த.இ | த.இ | த.இ |
| பிரான்சு | த.இ | 4775 | 5103 | 3991 | த.இ | த.இ | த.இ |
| கானடா | த.இ | 1690 | த.இ | 2272 | த.இ | 2358 | த.இ |
| ஜெர்மனி (மேற்கு) | த.இ | 4952 | த.இ | 4115 | த.இ | த.இ | த.இ |

(த. இ : தகவல் இல்லை)

ஆதாரம் : மாதந்திரப் புள்ளிவிவர வெளியீடு, ஜனவரி 1980.

### பாசன வசதி படைத்த நில அளவு

ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றியதன் வாயிலாக நாட்டில் பாசன வசதிகள் பரவலாக்கப்பட்டுள்ளன. பாசனத்தின் கீழ் இருக்கும் நில அளவு 60 சதவிகிதத்தில் உயர்ந்திருக்கின்றது. 1950 - 51 ஆம் ஆண்டில் பாசன வசதியுடன் இருந்த நிலத்தின் அளவு 21 மில்லியன் ஹெக்டேர்களாகும். 1972 - 73 ஆண்டு வாக்கில் இந்த அளவு 32 மில்லியன் ஹெக்டேர்களாக உயர்ந்தது.

## பயிர்ச் செறிவு (Crop Intensity)

தண்ணீர் போன்ற வசதிகள் அனைத்தும் கிடைத்து, குடியானவரும் அக்கறை காட்டினால் ஒரு நிலத்தில் ஓராண்டு காலத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட பயிர்களை விளைவிக்கலாம். சாகுபடியின்கீழ் இருக்கும் நிகர நில அளவு, மொத்த நில அளவு இவ்விரண்டுக்குமிடையே உள்ள விகிதத்தைத்தான் 'பயிர்ச் செறிவு' என்னும் சிறப்புச் சொற்றொடரில் அழைக்கின்றோம். எடுத்துக்காட்டாக, 100 ஏக்கர் நில அளவில் ஓராண்டில் இரண்டு பயிர்களை விளைவித்தால், சாகுபடியின்கீழ் இருக்கும் நிகர நில அளவு 100 ஏக்கர், சாகுபடி செய்யப்பட்ட மொத்த அளவு 200 ஏக்கர். பயிர்ச் செறிவு 200. பயிர்ச் செறிவில் ஏற்படும் மாற்றங்கள் ஒரு நாட்டினுடைய விவசாய முன்னேற்றத்தை எடுத்துக் காட்டும் முக்கிய அறிகுறிகளாகும். நல்ல தரமுள்ள நிலங்களைச் சாகுபடியின்கீழ்க் கொண்டுவருவதற்கு நம் நாட்டில் இனி அதிக வாய்ப்பு இல்லை. இந்த நிலையில் பயிர்ச் செறிவை உயர்த்துவதன் வாயிலாகவும், நில உற்பத்தித் திறனை அதிகரிப்பதன் வாயிலாகவும்தான் நம் நாட்டில் வேளாண்மை வளர்ச்சியை மேலும் பெருக்கிட முடியும். நம் நாட்டில் பயிர்ச் செறிவு உயர்ந்திருப்பதைப் பார்க்கின்றோம். ஆனால், ஏற்றம் கணிசமான அளவிற்கு ஏற்படவில்லை. 1950 - 51ல் பயிர்ச் செறிவு 111.12 மட்டத்தில் இருந்தது. அது 1960 - 61ல் 114.11க்கும், 1969 - 70ல் 118.10க்கும், 1976 - 77ல 119.14க்கும் உயர்ந்தது.

## பசுமைப் புரட்சி

அண்மை ஆண்டுகளில் நம் நாட்டில் விவசாய உற்பத்தியில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. இம்முன்னேற்றத்தைப் 'பசுமைப் புரட்சி' என்ற பெயரிட்டு அழைக்கின்றோம். விவசாய முன்னேற்றத்தை ஏன் புரட்சி என்றழைக்கவேண்டும்? தொடர்ச்சியாக நடைபெறும் ஒரு நிகழ்ச்சியை முன்னேற்றம் என்கிறோம். திடீரென ஏற்படும் ஒரு நிகழ்ச்சியை அல்லது மாற்றத்தைப் புரட்சி என்றழைக்கின்றோம். குறிப்பிட்ட சிறு கால அளவில் உற்பத்தித் திறன் திடீரென்று உயர்வடைந்து அதன் விளைவால் நாட்டின் மொத்த உற்பத்தியில் ஏற்பட்ட பெருமளவு பெருக்கத்தைத்தான் 'பசுமைப் புரட்சி' என்றழைக்கின்றோம். சாகுபடியில் நவீன முறைகள் கையாளப்பட்டதே உற்பத்தித் திறனில் எழுந்த திடீர் மாற்றத்திற்குக் காரணமாகும். கீழ்க்காணும் செயல்களில் நவீன முறைகள் கையாளப்பட்டன : (1) வீரிய உயர் விளைச்சல் ரகங்களைப் பயிர் செய்தல்; (2) இரசாயன உரங்களை அதிக

அளவில் இடல்; (3) பயிரைத் தாக்கும் நோய்களையும் பூச்சிகளையும் கட்டுப்படுத்த தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்; (4) நவீன விவசாயக் கருவிகளைப் பயன்படுத்துதல்; (5) உறுதியான வகையில் போதுமான அளவிற்கு நீர் அளித்து, நீரை நல்ல முறையில் மேலாண்மை செய்தல். இவ்வாறு வேளாண்மை உற்பத்தியுடன் நேரிடைத் தொடர்புள்ள பல்வேறு செயல்களிலும் ஒரே நேரத்தில் முயற்சிகளை முனைப்பாக மேற்கொண்டு, அதன் விளைவால் குறைந்த கால அளவில் பசுமைப் புரட்சி விவசாய உற்பத்தியைத் திகைக்க வைக்கும் அளவிற்கு ஏற்றமடையச் செய்திருக்கின்றது.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் முடிவுக்கு வர இருந்த நேரத்தில் உணவுப் பொருள்களில் நாட்டில் பெரும் பற்றாக்குறை எழுந்தது. பற்றாக்குறையை நிரப்ப வெளி நாடுகளிலிருந்து அதிக அளவில் ஒவ்வோர் ஆண்டும் உணவை இறக்குமதி செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இறக்குமதியில் எழுந்த ஏற்றம் நாட்டில் அந்நியச் செலாவணி நிலையை மிகவும் கேடுறச் செய்தது. இப்பின்னணியில் நாட்டில் விவசாய உற்பத்தியை உடனடியாகப் பெருக்க வேண்டியதன் அவசியம் உணரப்பட்டது. எனவே, மூன்றாம் திட்டத்தில் ஒரு புதிய விவசாய மேம்பாட்டுத் திட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. இத்திட்டம் 'தீவிர வேளாண்மை மாவட்டத் திட்டம்' (Intensive Agricultural District Programme-I.A.D.P.) என்ற பெயரில் அழைக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டம் 'தீவிர சாகுபடித் திட்டம்' என்னும் சுருக்கமான பெயரிலும் அழைக்கப்படுகின்றது. இத்திட்டத்திற்கு இரண்டு முக்கிய குறிக்கோள்கள் இருந்தன. அவை : (1) நாட்டில் எழுந்துள்ள பற்றாக்குறையைச் சமாளிக்க உணவு உற்பத்தியை உடனடியாகப் பெருக்க வேண்டும்; (2) உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தேவையான செயல்முறைகள் அனைத்தையும் விவசாயிகளுக்கு விளக்கிக் காட்ட வேண்டும் என்பதாகும்.

தொடக்கத்தில் சில மாவட்டங்களில்தான் இத்திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. மாநிலம் ஒவ்வொன்றிலும் ஒரு மாவட்டம் இத்திட்டத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. தமிழ் நாட்டில் இத்திட்டம் தஞ்சாவூர் மாவட்டத்தில் இன்னும் நடைமுறையில் இருந்துவருகின்றது. முதல் கட்டத்தில் இத்திட்டம் அமோக வெற்றி அடைந்தது. எனவே, மேலும் பதினைந்து மாவட்டங்களில் இத்திட்டம் விஸ்தரிக்கப்பட்டது. 1974 - 75ல் இத்திட்டத்தைச் செயல்படுத்தக் கூடுதலாகப் பதினைந்து மாவட்

டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. உயர்விளைச்சல் ரகங்களை நடைமுறையில் பயன்படுத்துவதில் விவசாயிகள் நல்ல ஊக்கம் காட்டினார்கள். உயர் விளைச்சல் ரகங்கள் இன்று நாடெங்கிலும் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன.

'இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம்' (Indian Council of Agricultural Research) நாட்டில் பல இடங்களில் ஆராய்ச்சிக் கூடங்களை அமைந்திருக்கின்றது. இந்த ஆராய்ச்சிக் கூடங்கள் புதிய புதிய விதை ரகங்களைக் கண்டுபிடித்துத் தருகின்றன. இந்த ஆராய்ச்சிக் கூடங்கள் வெளிக் கொணர்ந்த புதிய ரகங்கள் உணவு உற்பத்தியில் அற்புதங்களை நிகழ்த்தியிருக்கின்றன.

கோதுமையில் புகழ் வாய்ந்த ரகங்கள் : லெர்மா ரோஜா, சோனாரா, கல்யாண், பி.வி. 18; நெல்லைப் பொறுத்த அளவில் : ஏடிடி 27, ஏடிடி 31, தாய்சுங் 1, தாய்சுங் 64, தாய்வான் 3, ஐ.ஆர். 20, ஐ.ஆர். 8; கம்பு தானியத்தில் ஹெச்.பி. 1, ஹெச்.பி. 3; சோளத்தில் விஜய், சி.எஸ்.ஹெச். 1; கரும்பில் சி.ஓ. 1108, சி.ஓ. 67, மங்க்பல் 145; பருத்தியில் வரலட்சுமி பருத்தி, ஜே-34. புதிய ரக விதைகள் விளைச்சலை 50 சதவிகிதத்திற்கு மேலாக உயர்த்தியிருக்கின்றன. புது ரகங்களைக் கண்டுபிடித்து வெளிக் கொணர்ந்ததற்கான பெருமை இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகத்திற்கும், நாட்டில் உள்ள பல வேளாண்மைப் பல்கலைக் கழகங்களுக்கும் உரித்ததாகும். லூதியானா (பஞ்சாப்), பண்டநகர் (உத்திரப்பிரதேசம்), கோயம்புத்தூர் (தமிழ் நாடு) இவ்விடங்களில் உள்ள வேளாண்மைப் பல்கலைக் கழகங்களின் பணியை இங்குக் குறிப்பிட்டுக் கூறவேண்டும்.

### பசுமைப் புரட்சியின் விளைவுகள்

பசுமைப் புரட்சி விவசாய உற்பத்தியை மெச்சத் தகுந்த வகையில் பெருக்கியிருக்கிறது. கோதுமை விளைச்சலில் கிடைத்த பலன் மிகவும் வெற்றிகரமாக இருந்திருக்கின்றது. நெற்பயிரைப் பொறுத்த அளவில் உடனடியாகப் பலன் கிட்டவில்லை. ஆனால், சிறு கால தாமதத்திற்குப் பிறகு நல்ல பலன் கிடைத்தது. கரும்பு, கம்பு, சோளம் ஆகிய பயிர்களிலும் நல்ல ஏற்றம் இருந்தது. 1964-65-ல் 13 மில்லியன் டன்னளவில் இருந்த கோதுமை உற்பத்தி 1977 - 78-ல் 31 மில்லியன் டன்னுக்கு உயர்ந்தது. இக்கால கட்டத்தில் சோள உற்பத்தியில் 27 சதவிகிதம் பெருக்கம் இருந்தது. அரிசி உற்பத்தி '973 - 74-ல் 44 மில்லியன் டன் அளவிற்கும் 1977-78-ல் 53 மில்லியன் டன் அளவிற்கும் உயர்ந்தது.

ஒரு ஹெக்டேருக்குக் கிடைத்த சராசரி விளைச்சலில் இருந்த ஏற்றத்தைப் பட்டியல் 6—8-ல் காணலாம்.

### பட்டியல் 6—8

பசுமைப் புரட்சியின் விளைவுகள்
(ஹெக்டேருக்கு கிலோகிராம்)

| பயிர் | 1960 - 61 | 1973 - 74 | 1977 - 78 |
|---|---|---|---|
| அரிசி | 1013 | 1151 | 1317 |
| ஜோவர் சோளம்) | 533 | 644 | 726 |
| பாஜ்ரா (கம்பு) | 286 | 540 | 475 |
| மக்காச் சோளம் | 926 | 965 | 1112 |
| கோதுமை | 851 | 1171 | 1478 |

**உணவில் தன்னிறைவு நிலை**

கடந்த காலத்தில் உணவுப் பற்றாக்குறை நாட்டில் பெரும் பிரச்சினையாக இருந்து வந்தது. இன்று பிரச்சினை அவ்வளவு கடுமையாக இல்லை என்றாலும்கூட அது முழுவதும் தீர்க்கப்பட்டு விட்டது என்று துணிந்து கூறமுடியாது. நாட்டில் பஞ்சம் ஏற்படுவது நம் நாடு விடுதலை அடைவதற்கு முன்னர் சாதாரண வழக்கமாக இருந்துவந்தது. உணவு தானியங்களில் அவ்வப்போது ஓரளவுக்குத் தட்டுப்பாடுகள் ஏற்பட்டாலும் பழங்காலத்தில் இருந்ததைப் போன்று கொடிய பஞ்சங்கள் இன்று நாட்டில் நிகழ்வது இல்லை. நாட்டுப் பிரிவினைக்கு முனனர் அரிசியைப் பெருமளவில் இறக்குமதி செய்ய வேண்டியிருந்தது. நாட்டினுடைய உணவு நிலையைப் பிரிவினை மேலும் கேடுறச் செய்தது. பிரிவினையால் மக்கள்தொகை எண்ணிக்கையில் 82 சதவிகிதம் இந்தியாவின் பக்கம் வர நேர்ந்தது. ஆனால், நில அளவைப் பொறுத்தமட்டில் இது 75 சதவிகிதமாக அமைந்தது. மேலும், கோதுமையைப் பயிரிடும் வளம் பொருந்திய மேற்கு பஞ்சாப், சிந்து பகுதிகள் பாக்கிஸ்தான் வசம் போய்ச்சேர்ந்தன. இவற்றின் விளைவால் அதற்கு முன்னர் அரிசியை மட்டும் இறக்குமதி செய்து வந்த இந்தியா பிரிவினைக்குப் பிறகு கோதுமையையும் இறக்குமதி செய்யவேண்டிய நிலைக்கு உள்ளாகியது. உணவுக்காகப் பிற நாடுகளை எதிர்நோக்கி நிற்கும் நிலையைத் தவிர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நாட்டு விடுதலைக்குப் பிறகு இந்திய அரசு மேற்கொள்ளத் தலைப்பட்டது. உணவில் நாடு தன்னிறைவு அடையவேண்டும் என்பதை முதல் ஐந்தாண்டுத் திட்டம் ஒரு முக்கியக் குறிக்கோளாக மேற்கொண்டது.

தன்னிறைவு எய்துவதில் கடந்த முப்பதாண்டுக் காலத்தில் நாடு பெருமளவிற்கு வெற்றி கண்டிருக்கின்றது என்று கூறலாம். உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் நாடு கண்ட பசுமைப் புரட்சி பெருந்துணை புரிந்திருக்கின்றது. இருந்தாலும், உணவைப் பொறுத்த அளவில் இனி இறக்குமதி செய்யவேண்டிய அவசியமே யில்லை என்று கூறும் அளவிற்கு நாட்டில் உற்பத்திப் பெருக்கம் முன்னேற்றமடையவில்லை. நாட்டில் விவசாய உற்பத்தி பெரிதும் பருவ மழையையே நம்பி இருக்கிறது. ஓர் ஆண்டில் பருவ மழை தவறினால் உள்நாட்டுத் தேவையைப் பூர்த்திசெய்யும் அளவிற்கு உணவு உற்பத்தி இருப்பதில்லை. நாட்டில் ஆண்டாண்டுக்கு பெருகி வரும் மக்கள்தொகையும் உணவு நிலைமையை மிகவும் பாதிக்கிறது. நாட்டில் உணவு உற்பத்தி விரைவில் பெருகியிருக் கிறது. ஆனால், மக்கள்தொகைப் பெருக்கத்தினால் ஏற்பட் டிருக்கும் கூடுதலான தேவையைச் சமாளிக்கும் அளவிற்கு உற்பத்தியில் பெருக்கமில்லை.

உள்நாட்டு உற்பத்தியில் இருந்த ஏற்ற இறக்கங்களுக்குத் தகுந்தாற்போல் ஒவ்வோர் ஆண்டிலும் உணவு இறக்குமதியின் அளவும் மாறுபட்டிருந்தது. சில ஆண்டுகளில் மிக உயர்ந்த

### பட்டியல் 6—9

உணவு இறக்குமதியின் அளவு

| ஆண்டு | இறக்குமதி (மில்லியன் டன்) | ஆண்டு | இறக்குமதி (மில்லியன் டன்) |
|---|---|---|---|
| 1956 | 1.4 | 1969 | 3.9 |
| 1961 | 3.5 | 1970 | 3.6 |
| 1962 | 3.6 | 1971 | 2.1 |
| 1963 | 4.6 | 1972 | 0.5 |
| 1964 | 6.3 | 1973 | 3.6 |
| 1965 | 7.5 | 1974 | 4.9 |
| 1966 | 10.4 | 1975 | 7.4 |
| 1967 | 8.7 | 1977 | 6.4 |
| 1968 | 5.7 | 1978 | 4.0 |

ஆதாரம் : மத்திய அரசின் பொருளாதார ஆய்வறிக்கை.

அளவிற்கு உணவு இறக்குமதி செய்யவேண்டியிருந்தது. 1966-ல் 10.4 மில்லியன் டன், 1967-ல் 8.7 மில்லியன் டன், 1975-ல் 7.5 மில்லியன் டன் அளவில் உணவு இறக்குமதி செய்யவேண்டி யிருந்தது. சில ஆண்டுகளில் உணவு குறைந்த அளவில்தான் இறக்குமதியாயிற்று. 1956-ல் 1.4 மில்லியன் டன், 1972-ல் 0.5

மில்லியன் டன் அளவில்தான் இறக்குமதி இருந்தது 1977ஆம் ஆண்டிலிருந்து நாட்டில் உணவு நிலையில் நல்ல முன்னேற்றம் இருந்து வருகிறது. இவ்வாண்டுகளில் விவசாயத் துறையில் நல்ல முன்னேற்றம் இருந்து வருகின்றது. 1977-ல் உணவு தானியங்கள் ஏதும் இறக்குமதி செய்யப்படவில்லை. 1978 ல் நாட்டின் உணவு உற்பத்தியில் நுகர்வு போகச் சிறிதளவு மிகுதியும் இருந்தது; 1 மில்லியன் டன் அளவில் உணவு தானியங்களை ஏற்றுமதியும் செய்ய முடிந்தது. ஒவ்வோர் ஆண்டிலும் நாட்டின் உணவு இறக்குமதியின் அளவை, பட்டியல் 6—9-ல் காணலாம்.

## நில உடைமை அளவுகளின் அமைப்பு (Land Holding Patten)

நம் நாட்டில் நிலப்பரப்பு பரவலாக இருக்கிறது. மக்கள் தொகையும் அதிக எண்ணிக்கையில் இருக்கின்றது. எனவே, சாகுபடி செய்ய தலா நபருக்குக் கிடைக்கும் நில அளவு மிகக் குறைவாக இருக்கின்றது. நாட்டில் பெரும்பான்மையான மக்கள் வேலைக்கும், வருவாய்க்கும் விவசாயத்தையே சார்ந்திருக்கின்றனர். விவசாயிகளுக்கு நிலம்தான் முக்கியச் சொத்தாக இருக்கிறது.

வேளாண்மையில் ஈடுபடும் அனைவருக்கும் நிலம் சொந்தமாக இல்லை. நில உடைமை சிலருக்குத்தான் இருக்கின்றது. சிலர் பிறரிடமிருந்து குத்தகைக்கும் வாரத்திற்கும் நிலத்தைப் பெற்றுப் பயிர் செய்து வாழ்க்கை நடத்துகின்றனர். பெரும்பான்மையினர் உழவுத் தொழிலில் ஈடுபடும் விவசாயத் தொழிலாளர்களாக இருக்கின்றனர். நாட்டில் நிலவும் நில உடைமை முறையை நன்கு அணுகிப் பார்த்தால் பெருமளவு நிலம் எண்ணிக்கையில் குறைந்த ஒரு சிலர் கைவசம்தான் இருந்துவருகின்றது என்பது புலனாகும். நாட்டு வருமானப் பகிர்வில் பெருத்த ஏற்றத்தாழ்வுகள் இருக்கின்றன என்று அத்தியாயம் 4-ல் கண்டோம். மொத்த நாட்டு வருமானத்தில் உயர்ந்த சதவிகிதம், எண்ணிக்கையில் மிகக் குறைந்த சதவிகிதமாக உள்ள ஒருசிலர் கையில் இருக்க, எண்ணிக்கையில் பெரும் சதவிகிதமுள்ள மக்களுக்குக் குறைந்த சதவிகித அளவில்தான் வருமானம் கிடைக்கிறது. இதே நிலையை நில உடமை அமைப்பிலும் காண்கின்றோம். பட்டியல் 6—10 நில உடைமை முறை அமைப்பை விளக்கிக் காட்டுகிறது.

நாட்டில் நில உடைமை உள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 1970-71ல் 70.5 மில்லியன் ஆகும். சாகுபடியின்கீழ் இருந்த மொத்த நில அளவு 162 மில்லியன் ஹெக்டேர்களாகும். மொத்த

## பட்டியல் 6—10

**இந்தியாவில் நில உடைமை முறை அமைப்பு (1970 - 71ல்)**

| நில உடைமை அளவின் பிரிவுகள் | நிலம் படைத்தவரின் எண்ணிக்கை (ஆயிரத்தில்) | நிலம் படைத்தவரின் மொத்த எண்ணிக்கையில் சதவிகிதம் | நில அளவு (1000 ஹெக்டேர்களில்) | மொத்த நில அளவில் சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 ஹெக்டேருக்குக் குறைவானவை | 35,682 | 50.62 | 14,545 | 8.97 |
| 1-லிருந்து 2 ஹெக்டேர் வரை | 13,432 | 19.06 | 19,282 | 11.89 |
| 2-லிருந்து 4 ஹெக்டேர்கள் வரை | 10,681 | 15.15 | 29,999 | 18.51 |
| 4-லிருந்து 10 ஹெக்டேர்கள் வரை | 7,932 | 11.25 | 48,234 | 29.75 |
| 10 ஹெக்டேர்களுக்கு மேல் | 2,766 | 3.92 | 50,064 | 30.88 |
| மொத்தம் : | 70,493 | 100.00 | 1,62,124 | 100.00 |

ஆதாரம் : விவசாயக் கணக்கெடுப்பு 1970 - 71.

நில உடைமைகளின் 51 சதவிகித எண்ணிக்கை மிகச் சிறு உடைமைகளாக இருந்தன. இவ்வுடைமைகள் ஒவ்வொன்றின் அளவு 1 ஹெக்டேர் அளவுக்கும் குறைவாக இருந்தது. ஆனால், இச்சிறு நில உடைமையாளர்கள் மொத்த நில அளவில் 9 சதவிகித அளவைத்தான் சாகுபடி செய்து வந்தனர். அதாவது, சாகுபடியின் கீழிருந்த மொத்த நிலத்தில் 9 சதவிகித அளவைத்தான் 51 சதவிகித விவசாயிகள் பயிர் செய்துவந்தனர்.

மற்றொரு புறம் பார்த்தால் 10 ஹெக்டேர்களுக்கு அதிகமான அளவைக் கொண்ட நில உடைமைகளும் இருந்தன என்பதை அறிகின்றோம். இவ்வாறு பெரிய அளவில் நிலம் படைத்தவர்களின் எண்ணிக்கை 4 சதவிகிதம்தான் இருந்தது. எண்ணிக்கையில் இவர்கள் சிறுபான்மையினராக இருந்தாலும், இவர்கள் வசம் இருந்த நில அளவு மொத்த நில அளவில் 31 சதவிகிதம் ஆகும். நாட்டின் நில உடைமைகளில் பெருத்த ஏற்றத்தாழ்வுகள் இருந்து வருகின்றன என்னும் உண்மையை இவ்விவரங்களிலிருந்து அறிகின்றோம்.

## தமிழ் நாட்டில் வேளாண்மை வளர்ச்சி

### நிலப் பயன்பாட்டு முறை (Land Utili ation Pattern)

தமிழ் நாட்டின் மொத்த நிலப்பரப்பு என்ன? அந்நிலப் பரப்பு எவ்வழிகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது? தமிழ் நாட்டு எல்லைக்குள் மொத்தம் 13 மில்லியன் ஹெக்டேர் நிலப் பரப்பு இருக்கின்றது. இந்நிலப் பரப்பு பல வழிகளில் பயன்படுத் தப்படுகின்றது. நிலத்தை அதன் பயன்பாட்டுக்கு ஏற்றாற்போல ஒன்பது தலைப்புகளில் பிரித்துக் காட்டுவது இன்று வழக்கில் இருந்து வருகிறது. தலைப்புகள் பின்வருமாறு: (1) காடுகள்; (2) சாகுபடிக்குத் தகுதியற்ற வறண்ட நிலம்; (3) வேளாண்மை இல்லாத பிற செயல்களுக்குப் பயன்படுத்தப்படும் நிலம்; (4) நிரந் தரத் தரிசு நிலம்; (5) மேய்ச்சல் நிலம்; (6) தோப்புகள்; (7) தற்காலிகத் தரிசு நிலம்; (8) இதரத் தரிசு நிலம்; (9) சாகு படியின் கீழுள்ள நிகர நிலம். 1977 - 78ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் நிலப் பயன்பாட்டு முறை கீழ்க் காணும் வகையில் அமைந்திருந்தது.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | காடுகள் | ... | 16.0 | சதவிகிதம் |
| 2. | சாகுபடிக்குத் தகுதியற்ற வறண்ட நிலம் | ... | 4.7 | ,, |
| 3. | வேளாண்மை இல்லாத பிற பணிகளுக்குப் பயன் படுத்தப்படும் நிலம் | ... | 13.0 | ,, |
| 4. | நிரந்தரத் தரிசு நிலம் | ... | 2.7 | ,, |
| 5. | மேய்ச்சல் நிலம் | ... | 1.4 | ,, |
| 6. | தோப்புகள் | ... | 2.8 | ,, |
| 7. | தற்காலிகத் தரிசு நிலம் | ... | 11.0 | ,, |
| 8. | இதரத் தரிசு நிலம் | | | |
| 9. | சாகுபடியின் கீழ் உள்ள நிகர நிலம் | ... | 48.4 | ,, |
| | | | 100.0 | ,, |

தமிழ் நாட்டில் பல வகையான பயிர்கள் விளைகின்றன. இம்மா நிலத்தில் விளையும் பயிர்களை இரண்டு பெரும் பிரிவு

களுக்குள் அடக்கலாம். அவை: (1) உணவுப் பயிர்கள்; (2) உணவு வகையைச் சேராத பயிர்கள். சாகுபடியின் கீழிருக்கும் மொத்த நில அளவில் (Gross area under cultivation) ஏறக்குறைய 77 சதவிகித நிலம் உணவுப் பண்டங்களை உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படுகின்றது. தானியங்கள், பருப்புவகைகள் இவை இரண்டும் உணவுப் பண்டங்கள் என்னும் பிரிவில் அடங்குகின்றன. மாநிலத்தில் விளையும் தானியங்களில் மிகவும் முக்கியமானது நெல். குறிப்பிடத்தக்க பிற தானியங்கள் சோளம், கம்பு, கேழ்வரகு ஆகும். சாகுபடியின் கீழிருக்கும் மொத்த நில அளவில் 7.5 சதவிகித நிலத்தில் பருப்பு வகைகள் சாகுபடி செய்யப்படுகின்றன. எண்ணெய் வித்துகளைப் பொறுத்தமட்டில் மணிலாக்கொட்டை பெருமளவில் பயிர் செய்யப்படுகின்றது. இந்தியாவில் மிகுந்த அளவில் மணிலாக் கொட்டை உற்பத்தி செய்யும் மாநிலங்களில் தமிழ் நாடு முக்கிய அங்கம் வகித்து வருகி றது. மொத்த நிலத்தில் ஏறக்குறைய 12 சதவிகித அளவில் மணிலாக் கொட்டை பயிர் செய்யப்படுகிறது. சுமார் 3 லட்சம் ஹெக்டேர் நிலப்பரப்பில் பருத்தி சாகுபடி செய்யப்படுகின்றது.

## தமிழ் நாட்டில் வேளாண்மை வளர்ச்சி

கடந்த முப்பதாண்டு காலத்தில் தமிழ் நாடு வேளாண்மையில் நல்ல முன்னேற்றம் கண்டிருக்கின்றது. வெவ்வேறு ஆண்டுகளில் வேளாண்மையின் வாயிலாக மாநில வருமானத்திற்கு (State Income) கிடைத்த தொகைளை ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம் வேளாண்மையில் இருந்த வளர்ச்சியை எளிதில் அறியலாம். விவசாயப் பண்டங்களின் மொத்த உற்பத்தியில் நல்ல ஏற்றம் இருந்தால் அதனை வேளாண்மை வளர்ச்சிக்கு ஓர் அறிகுறியாகக் கருதலாம். வேளாண்மைப் பண்டங்களின் உற்பத்தி பெருக்க மடைந்தால் மாநில வருமானத்திலும் வளர்ச்சி இருக்கும். உற்பத்தியாகும் விவசாயப் பண்டங்களின் பணமதிப்பையே நாம் வேளாண்மை வாயிலாக மாநில வருமானத்திற்குக் கிடைத்த தொகை என்க் கருதுகின்றோம். அன்றாட விலையில் மதிப்பீடு செய்து பார்த்தால் விவசாய உற்பத்தியின் அளவு 1950 - 51-ல் ரூ. 320 கோடியாக இருந்தது. 1977 - 78-ல் இது ரூ. 1397 கோடிக்கு உயர்ந்தது. வேளாண்மையில் இருந்த வளர்ச்சிக்கு இது நல்ல அறிகுறி அல்லவா?

உற்பத்தியில் இருந்த மாற்றத்தின் அடிப்படையில் வளர்ச்சியைக் கணக்கிடுவது சரியான முறையென்றாலும், வளர்ச்சியைப்பற்றி மேலும் தெளிவான கருத்தைப் பெற வேண்டுமென்றால் இன்னும் சில இனங்களில் இருந்த மாற்றங்களையும் கவனித்தல் வேண்டும். விவசாயத்தில் நல்ல முன்னேற்றம்

இருந்திருக்கிறது என்றால் பயிர் வகையில் (Cropping pattern) மாற்றம் இருந்திருக்க வேண்டும். நில உற்பத்தித் திறன் உயர்ந்திருக்கவேண்டும். கூடுதலான நிலம் பாசனத்தின்கீழ் கொண்டு வரப்பட்டிருக்கவேண்டும். சாகுபடியின் கீழிருக்கும் நிகர நில அளவு (Net area under cultivation) பெருகி இருக்க வேண்டும். பயிர்ச் செறிவு (Crop Intensity) உயர்ந்திருக்க வேண்டும். இவ்வாறு பல இனங்களில் மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றனவா இல்லையா என்று ஆராய்ந்து பார்த்தால் வேளாண்மையிலிருந்த உண்மை வளர்ச்சியைக் கண்டறியக்கூடும். இவ்வினங்களில் தமிழ்நாட்டில் எந்த அளவிற்கு மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதைக் கண்டறியும் முயற்சியில் ஈடுபடலாம்.

## வேளாண்மை உற்பத்தி

தமிழ்நாட்டில் கடந்த முப்பதாண்டுக் காலத்தில் வேளாண்மை உற்பத்தி பெருமளவிற்கு உயர்ந்திருக்கின்றது. உணவுப் பண்டங்களைப் பொறுத்தமட்டில் உற்பத்திப் பெருக்கம் குறிப்பிட்டுக் கூறும் வகையில் இருந்திருக்கின்றது. 1950 - 51-ல் மாநிலத்தில் அரிசி உற்பத்தியின் அளவு 2.1 மில்லியன் டன் ஆகும். அடுத்து வந்த இருபத்தேழு ஆண்டுகளில் அரிசி உற்பத்தி இரண்டு மடங்குக்கு மேல் உயர்ந்து 1977 - 78-ல் 5.7 மில்லியன் டன் மட்டத்தில் நின்றது. 1950-51, 1977-78 இவ்விரு ஆண்டுகளுக்கிடையே சோள உற்பத்தி 0.46 மில்லியன் டன்னிலிருந்து 0.71 மில்லியன் டன்னுக்கு உயர்ந்தது. கம்பு உற்பத்தி 0.27 மில்லியன் டன்னிலிருந்து 0.37 மில்லியன் டன்னுக்கு உயர்ந்தது. கேழ்வரகு உற்பத்தியில் சிறிதளவு ஏற்றமே (0.3 மில்லியன் டன்னிலிருந்து 0.4 மில்லியன் டன்னுக்கு) இருந்தது. பருப்பு வகை உற்பத்தி 0.87 லட்சம் டன்னிலிருந்து 2 லட்சம் டன்னுக்கு உயர்வு அடைந்தது. கரும்பு உற்பத்தியில் வியப்பூட்டும் அளவுக்கு முன்னேற்றம் இருந்தது. 1951 - 52-ல் மொத்தக் கரும்பு உற்பத்தி (வெல்ல அளவின் அடிப்படையில்) 3.3 லட்சம் டன்களாகும். 1977 - 78-ல் உற்பத்தி 1.7 மில்லியன் டன்னுக்கு உயர்ந்தது. பருத்தி உற்பத்தி 3 லட்சம் பேல்களிலிருந்து 5.4 லட்சம் பேல்களுக்கு உயர்ந்தது. மணிலாக் கொட்டை உற்பத்தி 7.6 லட்சம் டன்னிலிருந்து 1.2 மில்லியன் டன்னுக்கு ஏற்றமடைந்தது.

### பயிர் வகை (Cropping Pattern)

1960 - 61, 1977 - 78 இவ்விரு ஆண்டுகளுக்கும் இடையே தமிழ்நாட்டில் பயிர் வகையில் இருந்த மாற்றங்களைப் பட்டியல் 6 - 11 விளக்கிக் காட்டுகிறது.

## பட்டியல் 6—11

**தமிழ் நாட்டில் பயிர் வகை (நில அளவு 1000 ஹெக்டேர்களில்)**

| பயிர் | 1960 - 61 நில அளவு | 1960 - 61 சதவிகிதம் | 1977 - 78 நில அளவு | 1977 - 78 சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1. உணவுப் பொருள்கள் | | | | |
| தானியங்கள் | | | | |
| நெல் | 2518 | 34.4 | 2782 | 35.8 |
| சோளம் | 774 | 10.6 | 751 | 9.7 |
| கம்பு | 489 | 6.7 | 437 | 5.6 |
| கேழ்வரகு | 364 | 5.0 | 291 | 3.7 |
| மற்ற தானியங்கள் | 530 | 7.2 | 460 | 5.9 |
| மொத்த தானியங்கள் | 4675 | 63.9 | 4721 | 60.8 |
| பருப்பு வகைகள் | 426 | 5.8 | 582 | 7.5 |
| மொத்த உணவுப் பொருள்கள் (தானியங்கள் + பருப்பு வகைகள்) | 5101 | 69.7 | 5303 | 68.3 |
| வாசனைத் திரவியங்கள் | 126 | 1.7 | 167 | 2 1 |
| கரும்பு, பிற இனிப்புக் கிழங்குகள் | 104 | 1.4 | 190 | 2 4 |
| பழங்கள், காய்கறிகள் | 187 | 2.6 | 293 | 3 8 |
| மொத்த உணவுப் பண்டங்கள் | 5523 | 75.4 | 5953 | 76.6 |
| 2. உணவு வகை சேராத பண்டங்கள் | | | | |
| பருத்தி | 396 | 5.4 | 325 | 4.2 |
| மணிலாக்கொட்டை | 871 | 11.9 | 926 | 11.9 |
| எள் | 128 | 1.7 | 162 | 2.1 |
| தேங்காய் | 58 | 0.8 | 96 | 1.2 |
| பிற பண்டங்கள் | 348 | 4.8 | 306 | 4.0 |
| மொத்த (உணவு வகை சேராத பண்டங்கள்) | 1798 | 24.6 | 1815 | 23.4 |
| 1+2 மொத்தம் | 7321 | 100.0 | 7768 | 100.0 |

ஆதாரம் : தமிழ்நாடு—ஒரு பொருளாதார ஆய்வு—1978

6—11 பட்டியலிலிருந்து என்ன அறிகின்றோம் ?

(1) 1960 - 61, 1977 - 78 இவ்விரு ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்தில் பயிர் வகையில் கணிசமான மாற்றம் இல்லை.

(2) உணவுப் பொருள்கள் பயிர் செய்யப்பட்ட நிலத்தின் அளவு ஓரளவிற்கு உயர்ந்திருக்கின்றது. 1960 - 61ல் பயிர் செய்யப் பட்ட மொத்த நிலத்தில் 75.4 சதவிகித நிலம் உணவுப் பொருள்கள் சாகுபடி செய்யப் பயன்படுத்தப்பட்டது. இதன் அளவு 1977 - 78ல் 76.6 சதவிகிதத்திற்கு உயர்ந்திருந்தது.

(3) உணவுப் பொருள்கள் பிரிவினுக்குள் சில சிறு மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. நெல் சாகுபடியான நில அளவு உயர்ந்தி ருந்தது. அந்த அளவுக்கு சோளம், கரும்பு, கேழ்வரகு போன்ற தானியங்கள் சாகுபடி செய்யப்பட்ட நில அளவு குறைந்திருந்தது. பழங்கள், காய் கறிகள், வாசனைத் திரவியங்கள், கரும்பு முதலிய பயிர்கள் சாகுபடி செய்யப்பட்ட நில அளவு ஓரளவிற்கு உயர்ந்திருந்தது.

(4) உணவு வகை சேராத பண்டங்கள் சாகுபடி செய்யப் பட்ட நில அளவு இறக்கம் கண்டிருந்தது. பருத்தி சாகுபடி செய்யப் பட்ட நில அளவு குறைந்திருந்தது. மணிலா சாகுபடி செய்யப் பட்ட நில அளவு மாற்றம் இல்லாமல் பழைய நிலையிலேயே இருந்தது. எள், தேங்காய் சாகுபடி செய்யப்பட்ட நிலத்தின் அளவு உயர்ந்திருந்தது.

## நில உற்பத்தித் திறன்

நில உற்பத்தித் திறனில் உயர்வு இருந்தால், அதனை வேளாண்மை வளர்ச்சிக்கு ஓர் அறிகுறியாகக் கருதலாம். ஒரு ஹெக்டேர் நில அளவில் சராசரி பயிர் உற்பத்தி எந்த அளவுக்கு இருக்கின்றது என்பதை நில உற்பத்தித் திறன் அறிவிக்கின்றது. தமிழ்நாட்டில் நில உற்பத்தித் திறன் நல்ல அளவுக்கு உயர்ந்திருக் கின்றது. தமிழ்நாட்டில் விளையும் சில முக்கியப் பயிர்களை எடுத்துக் கொண்டு அவை ஒவ்வொன்றிலும் சராசரி உற்பத்தி 1951, 1978 இவ்விரு ஆண்டுகளுக்கிடையே எவ்வாறு உயர்ந்திருக் கின்றது என்பதைக் காணலாம். 1951 - 52ல் ஒரு ஹெக்டேர் நிலத்திலிருந்து கிடைத்த சராசரி அரிசி உற்பத்தி 1190 கிலோ வாகும். இது 1977 - 78ல் 2050 கிலோவாக உயர்ந்தது. அரிசியில் இருந்ததைப் போன்றே பிற பயிர்களிலும் சராசரி உற்பத்தி

அளவில் நல்ல வளர்ச்சி இருந்தது என்னும் உண்மையைப் பட்டியல் 6—12-லிருந்து காணலாம்.

## பட்டியல் 6—12

முக்கியப் பயிர்களின் சராசரி உற்பத்தி
(1 ஹெக்டேர் நில அளவில்)

| பயிர் | 1951 - 52 | 1977 - 78 |
|---|---|---|
| அரிசி | 1190 கிலோ | 2050 கிலோ |
| சோளம் | 645 ,, | 958 ,, |
| கம்பு | 493 ,, | 857 ,, |
| கேழ்வரகு | 916 ,, | 1411 ,, |
| கடலைப் பருப்பு | 395 ,, | 588 ,, |
| துவரம் பருப்பு | 349 ,, | 466 ,, |
| கரும்பு (வெல்லம்) | 6500 ,, | 9866 ,, |
| பருத்தி | 148 ,, | 282 ,, |
| மணிலா (உடைக்காதவை) | 1002 ,, | 1242 ,, |
| எள் | 290 ,, | 337 ,, |

### பயிர்ச் செறிவு (Crop-Intensity)

வேளாண்மை வளர்ச்சியைக் கணக்கிட பயன்படுத்தப்படும் மற்றொரு முக்கியமான அளவுகோல் பயிர்ச் செறிவில் இருக்கும் ஏற்றம். சாகுபடியாகும் மொத்த நில அளவிற்கும் (Gross Area) நிகர நில அளவிற்கும் (Net Area) இடையே உள்ள விகிதத்தைத் தான் பயிர்ச் செறிவு என்றழைக்கின்றோம். ஒரு குறிப்பிட்ட ஆண்டில் ஒரு கிராமத்தில் 200 ஹெக்டேர் நில அளவில் பயிர் விளைவிக்கப்படுகின்றது என்று வைத்துக்கொள்வோம். இதில் 100 ஹெக்டேர் நிலத்தில் இரண்டு பயிர்கள் விளைவிக்கப்பட்ட தாகவும் எஞ்சிய 100 ஹெக்டேரில் ஒரு பயிர் மட்டுமே விளைவிக்கப் பட்டதாகவும் கருதுவோம். அந்த ஆண்டில் சாகுபடி செய்யப் பட்ட மொத்த நிலம் 300 ஹெக்டேர்கள்; நிகர நிலம் 200 ஹெக்டேர்கள் ஆகும். இந்த உதாரணத்தில் பயிர்ச் செறிவு 150 ஆகும். சாகுபடி செய்யப்பட்ட மொத்த நில அளவை நிகர நில அளவின் சதவிகிதமாகக் கணக்கிட்டுக் கூறினால் அந்த விகிதம் பயிர்ச் செறிவைக் குறிக்கின்றது.

தமிழ்நாட்டில் நில அளவு குறைவாக இருக்கின்றது. இதன் காரணமாகத்தான் நம் மாநிலத்தில் மக்கள்தொகையடர்த்தி

(Population Density) அதிகமாக இருக்கின்றது. சாகுபடிக்குத் தகுதிபடைத்த நல்ல நிலங்கள் அனைத்தையும் இதுவரை உழவின்கீழ் கொண்டுவந்துவிட்டோம். நிலங்களைப் புதிதாகச் சாகுபடியின்கீழ் கொண்டுவருவதற்கு இனி வாய்ப்பு அதிகமில்லை. எனவே, விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கான ஒரே வழி பயிர்ச் செறிவை உயர்த்துவதுதான். கடந்த முப்பதாண்டுக் காலத்தில் பயிர்ச் செறிவு தமிழ்நாட்டில் ஓரளவிற்கு உயர்ந்திருக்கின்றது. 1951 - 52-ல் சாகுபடி செய்யப்பட்ட நிகர நில அளவு 5.4 மில்லியன் ஹெக்டேர்களாகும். சாகுபடி செய்யப்பட்ட மொத்த நில அளவு 6.4 மில்லியன் ஹெக்டேர்கள். எனவே, அன்று பயிர்ச் செறிவு 117 ஆக இருந்தது. 1977-78-ல் சாகுபடி செய்யப்பட்ட நிகர நிலம் 6.3 மில்லியன் ஹெக்டேர்கள்; மொத்த நிலம் 7.8 மில்லியன் ஹெக்டேர்கள். இந்த ஆண்டில் பயிர்ச் செறிவு 123 ஆகும்.

## பாசன வளர்ச்சி

பயிர் வளர்ப்பதற்குப் பாசனவசதி இன்றியமையாத ஒன்றாகும். பாசன வசதியில் இருக்கும் முன்னேற்றத்திற்கு ஏற்றாற்போலத் தான் நாட்டளவிலும், மாநில அளவிலும் விவசாயத்தில் வளர்ச்சி இருக்க முடியும். தமிழ்நாட்டில் கடந்த முப்பதாண்டுக் காலத்தில் நீர்ப்பாசனத்தில் நல்ல முன்னேற்றம் இருந்திருக்கின்றது. ஆறுகள், குளங்கள், கிணறுகள் இம்மூன்றும் நீரளிக்கும் முக்கிய சாதனங்களாக இருக்கின்றன. தமிழ்நாட்டில் இம்மூன்று சாதனங்களும் சம முக்கியத்துவம் வாய்ந்தனவாக இருக்கின்றன. நீர்ப் பாசன வசதி படைத்த மொத்த நிலத்தில், ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கிற்கு ஒவ்வொரு சாதனமும் நீர் அளித்துவருகின்றது. பாசன வசதியைப் பெருக்குவதில் தமிழ்நாடு அரசு தீவிர முயற்சி எடுத்து வந்திருக்கின்றது. பல பாசன மேம்பாட்டுத் திட்டங்கள் செயல் படுத்தப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டு எல்லைக்குள் கிடைக்கக் கூடிய நீர் முழுவதையும் பாசனத்திற்குப் பயன்படுத்தும் நிலையில் இன்று இருக்கின்றோம்.

அரசு மேற்கொண்டுள்ள சீரிய முயற்சிகளின் வாயிலாகப் பாசனத்தின்கீழ் இருக்கும் நில அளவில் நல்ல பெருக்கம் இருந்திருக்கின்றது. 1951 - 52-ல் பாசனத்தின் கீழிருந்த மொத்த நில அளவு 2 மில்லியன் ஹெக்டேர்களாகும். அதாவது அந்த ஆண்டில் சாகுபடியின் கீழிருந்த நில அளவில் 37 சதவிகித நிலம் நீர்ப் பாசன வசதி படைத்ததாக இருந்தது. பாசனத்தின்கீழிருக்கும் நிலம் 1977 - 78-ல் 2.8 மில்லியன் ஹெக்டேர்களுக்கு உயர்ந்தது. சாகுபடியின் கீழிருந்த நிலத்தில் இதன் அளவு 47 சதவிகிதமாகும்.

# 7. தொழில் வளர்ச்சி

## பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தத் தொழில் முன்னேற்றம் அவசியம்

பின்தங்கிய நிலையில் இருக்கும் ஒரு நாடு பொருளாதாரத் துறையில் முன்னேற்றமடைய வேண்டுமெனில் அந்நாட்டில் தொழில் வளர்ச்சி ஏற்படவேண்டும். ஒரு நாட்டில் நிலவும் தலா வருமான அளவை அடிப்படையாகக் கொண்டுதான் அந்நாடு பொருளாதார வளர்ச்சியில் எக்கட்டத்தில் இருக்கின்றது என்று அறிகின்றோம். தலா வருமானம் உயர்ந்த அளவில் உள்ள நாடுகளை வளர்ச்சியடைந்த நாடுகள் என்றும், மிகக் குறைவாக உள்ள நாடுகளைப் பின்தங்கிய நாடுகள் அல்லது வளர்ந்துவரும் நாடுகள் என்றும் அழைக்கின்றோம். வளர்ச்சியடைந்த நாடுகளுள் ஒன்றான ஐக்கிய அமெரிக்காவை எடுத்துக்கொண்டு பார்ப்போம். 1971-ல் அமெரிக்காவின் தலா வருமானம் 4573 டாலர். மிக உயர்ந்த அளவில் தலா வருமானத்தைக் கொண்ட நாடுகளுள் அமெரிக்கா ஒன்றாகும். அமெரிக்காவின் நாட்டு வருமானத்தைப் பல கூறுகளாக்திப் பகுப்பாய்வு செய்து பார்த்தால் வெவ்வேறு பிரிவுகள் செலுத்திய பங்கு எவ்வளவு என்று அறியலாம். அமெரிக்காவின் மொத்த நாட்டு வருமானத்தில் மூன்று சதவிகிதம் தான் வேளாண்மைப் பிரிவிலிருந்து கிடைக்கின்றது. கட்டட வேலைகள் 5 சதவிகிதத்தை அளிக்கின்றன. ஆலைத் தொழில்களிலிருந்து கிடைப்பது 31 சதவிகிதம் ஆகும். எஞ்சிய 61 சதவிகிதமும் பணிகள் வாயிலாகக் கிடைக்கின்றது. இப்பொழுது இந்தியாவை எடுத்துக் கொண்டு பார்ப்போம். இந்தியா ஒரு பின்தங்கிய நாடாகக் கருதப்படுகின்றது. அதனுடைய தலா வருமானம் மிகக் குறைந்த அளவிலேயே இருந்துவருகின்றது. 1971-ல் நம் நாட்டின் தலா வருமானம் 88 டாலர். இந்த ஆண்டின் நம்முடைய நாட்டு வருமானத்தைப் பகுப்பாய்வு செய்து பார்த்தால், மொத்த வருமானத்தில் 45 சதவிகித அளவு வேளாண்மைப் பிரிவிலிருந்து வந்திருக்கின்றது என்று அறிகின்றோம். கட்டட வேலைகள் 4 சதவிகிதத்தை அளித்தன. ஆலைத் தொழிலிலிருந்து 15 சதவிகிதம் கிடைத்தது. 28 சதவிகிதம் பணிகளிலிருந்து கிடைத்தது.

மேலும் இரண்டு நாடுகளை எடுத்துக் கொண்டு பார்ப்போம். ஒரு நாட்டை வளர்ச்சியடைந்த நாடுகள் பிரிவிலிருந்தும் மற்றொரு நாட்டைப் பின்தங்கிய நாடுகள் பிரிவிலிருந்தும் எடுத்துக் கொள்வோம். 1971-ல் கானடாவின் தலா வருமானம் 3769 டாலர். கானடாவின் நாட்டு வருமானத்தைப் பாகுபாடு செய்துபார்த்தால் வெவ்வேறு பிரிவுகளின் பங்குகள் பின் வரும் விகிதங்களில் இருந்தன என்பது புலனாகின்றது. வேளாண்மை 4 சதவிகிதம்; கட்டட வேலைகள் 6 சதவிகிதம்; ஆலைத் தொழில் 27 சதவிகிதம்; பணிகள் 51 சதவிகிதம். பிலிப்பைன்ஸ் நாடு பின்தங்கிய நிலையில் இருக்கின்றது. 1971ல் அந்நாட்டினுடைய தலா வருமானம் 246 டாலர். அந்நாட்டில் வெவ்வேறு பிரிவுகளின் பங்குகள் பின்வரும் விகிதங்களில் இருந்தன: வேளாண்மை 29 சதவிகிதம்; கட்டட வேலைகள் 2 சதவிகிதம்; ஆலைத் தொழில் 18 சதவிகிதம்; பணிகள் 31 சதவிகிதம்.

மேலே கொடுக்கப்பட்டுள்ள புள்ளிவிவரங்களிலிருந்து என்ன அறிகின்றோம்? வளர்ச்சியடைந்த நாடுகளின் நாட்டு வருமானத்தில் தொழில் துறையிலிருந்து கிடைக்கும் பங்கு உயர்ந்த அளவில் இருக்கின்றது. இதற்கு நேர் மாறான நிலை தலா வருமானம் குறைந்த அளவில் உள்ள பின்தங்கிய நாடுகளில் நிலவுகின்றது. பின்தங்கிய நாடுகளுடைய நாட்டு வருமானத்தில் வேளாண்மையின் பங்கு உயர்ந்த விகிதத்திலும் தொழில் துறையின் பங்கு குறைந்தவிகிதத்திலும்இருக்கின்றன. இவற்றிலிருந்து நாம் அறிவது என்னவென்றால் வளர்ச்சியடைந்த நாடுகளில் தொழில் துறை நன்கு முன்னேறி இருக்கின்றது என்பதாகும். மாறாக பின்தங்கிய நாடுகளில் மொத்த உற்பத்தியின் பெரும் பங்கு வேளாண்மைப் பண்டங்களாகவே இருக்கின்றது. எனவே, பொருளாதாரத் துறையில் விரைவான வளர்ச்சியை விழையும் நாடுகள் விரைவான தொழில் முன்னேற்றம் ஏற்படுவதற்கான வழி முறைகளைக் கையாளவேண்டும். இக்கூற்றுக்கு விலக்காகச் சில நாடுகளும் இருக்கின்றன. இந்நாடுகளில், தலா வருமான அளவு உயர்ந்திருந்தாலும் தொழில் முன்னேற்றம் அடையவில்லை. இத்தகைய நாடுகளில் இயற்கை வளங்களும், சாதனங்களும் நிரம்பக் கிடைக்கின்றன. இந்நாடுகளுக்கு ஏற்றுமதிகளின் மூலம் நல்ல வருவாய் வருகின்றது. பெட்ரோலியப் பொருள்களை மிகுந்த அளவில் உற்பத்தி செய்யும் அரபு நாடுகளும் வெனிசூலா நாடும் இவ்வகையைச் சேர்ந்தவையாகும். மலேசியா நாட்டில் தலா வருமானம் உயர்வாக இருக்கின்றது என்றால், அந்நாடு தொழில் துறையில் பெரிதும் முன்னேறியிருக்கின்றது என்பது பொருளன்று. உலகின் எல்லா நாடுகளாலும் வேண்டப்படும் ரப்பர், வெள்ளீயம்

இவ்விரண்டு பண்டங்களையும் மலேசியா பெருமளவில் உற்பத்தி செய்து பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதால் அதன் தலா வருமானம் உயர்வாக இருக்கின்றது. இவை போன்ற விதிவிலக்காக ஒரு சில நாடுகளே இன்று உலகில் உள்ளன. எனவே ஒரு நாட்டின் மொத்த வருமானத்தில் தொழில் துறையின் பங்கிற்கும் அந்நாட்டின் தலா வருமான அளவிற்கும் நேரிடைத் தொடர்பு இருக்கின்றது என்று பொதுவாகக் கூறலாம். பங்கு உயர்வாக உள்ள நாடுகளில் தலா வருமான அளவும் உயர்வாக இருக்கும். பங்கு குறைவாக உள்ள நாடுகளில் தலா வருமானமும் குறைவாகவே இருக்கும்.

தொழில் முன்னேற்றம் ஏற்படும்போது தலா வருமானத்தில் வளர்ச்சி இருக்கின்றது. இது எவ்வாறு ஏற்படுகின்றது என்பதற்கான விளக்கத்தைக் காணலாம்.

பின்தங்கிய நிலையில் இருக்கும் ஒரு நாட்டில் பெரும்பான்மையோர் நிலத்தை நம்பியே வாழ்க்கை நடத்துகின்றனர். சாகுபடி செய்ய முறையாகத் தேவைப்படும் எண்ணிக்கையைவிட அதிக அளவில் மக்கள் விவசாயத்தைச் சார்ந்திருப்பர். ஏனெனில் மிகுதியான மக்களுக்குப் புகலிடம் வேறு கிடையாது. இந்நிலையில் மக்கள்தொகையின் அளவும் பெருக்கமடைந்தால் மேலும் பல பேர் உழவுத் தொழிலையே சென்றடைவர். உழவுத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களின் எண்ணிக்கை இவ்வாறு உயர்ந்துகொண்டே போவதால் வேளாண்மை உற்பத்தியில் பெருக்கம் இருக்குமா? இருப்பதற்கு வாய்ப்பு அதிகமில்லை. ஏனெனில், எந்த ஒரு நாட்டிலும் நிலம் ஒரு குறிப்பிட்ட அளவிற்குத் தான் வேளாண்மைக்குப் பயனுள்ளதாக இருக்கிறது. குறிப்பிட்ட நில அளவில் வேலை செய்வோர்களுடைய எண்ணிக்கை மட்டும் உயர்ந்து கொண்டே போவதால் அதே அளவில் உற்பத்தியும் பெருகிக் கொண்டே போகாது. பொருளியலில் ‘குறைந்து செல் விளைவு விதி’ (Law of Diminishing Returns) என்ற பெயரில் அழைக்கப்படும் விதி செயல்படத் தொடங்குகின்றது. நாட்டின் மொத்த உற்பத்தியில் இருக்கும் வளர்ச்சி விகிதத்தைவிட மக்கள் தொகையில் இருக்கும் வளர்ச்சி விகிதம் உயர்வாக இருந்தால் மக்களுடைய தலா வருமானம் குறைந்த மட்டத்தில் இருக்கும். குறைந்த அளவு வருவாய் ஈட்டும் இம்மக்கள், தங்களுடைய வருவாய் அனைத்தையும் உணவுப் பொருள்கள், இதர இன்றியமையாதப் பண்டங்கள் இவற்றை வாங்குவதற்கே செலவிடுவர். அவர்களால் எதையும் சேமித்து வைக்க முடிவதில்லை.

ஒரு நாட்டில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட வேண்டுமெனில் அந்நாட்டில் முதலீட்டின் அளவை உயர்வடையச் செய்ய வேண்டும்; முதலீட்டை உயர்த்துவதற்குச் சேமிப்பின் அளவை உயர்த்த வேண்டும். ஆனால் வேளாண்மை முக்கியத் தொழிலாக இருக்கும் ஒரு நாட்டில், மக்களுடைய வருவாய் மட்டம் குறைவாக இருக்கின்றது; சேமிப்பின் அளவும் குறைவாக இருக்கின்றது; எனவே, முதலீட்டின் அளவும் குறைவாகவே இருக்கின்றது.

இவ்வாறு குறைந்த வருமானம், குறைந்த சேமிப்பு, குறைந்த மூதலீடு, குறைந்த வளர்ச்சி என்று ஒன்றுக்கொன்று காரணமாய் அமைந்துள்ள சுழலில் சிக்குண்டு நிற்கும் ஒரு நாடு, அச்சுழலி லிருந்து விடுபட்டு முன்னேற வேண்டுமென்றால் அந்நாடு மேற் கொள்ளக்கூடிய ஒரே வழி தொழில்துறையை வளர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுவதே யாகும்.

பின்தங்கிய நிலையில் இருக்கும் ஒரு நாட்டில் உண்மையில் தேவையான எண்ணிக்கைக்கு மேலானவர்கள் வேளாண்மையைச் சார்ந்து இருக்கின்றனர். இவ்வாறு மிகுதியாக இருப்பவர்களை வேளாண்மையிலிருந்து பிரித்து அப்புறப்படுத்துவதால் வேளாண்மை உற்பத்தி எவ்விதத்திலும் பாதிக்கப்படமாட்டாது. வேளாண்மையில் மிகுதியாக இருப்பவர்களைத் தொழில்துறைக்குத் திருப்பி அவர்களுடைய உழைப்பின் வாயிலாகத் தொழில் உற்பத்தி யைப் பெருக்கினால் நாட்டு வருமானம் விரைவில் உயர்வடையும். ஒரு பெருந் தொழிலை ஆரம்பித்தால் அதன் தொடர்பாகப் பல்வேறு சிறு தொழில்களும் தொடங்கப்படுகின்றன. இவ்வாறு பல ஆலைகளும் தொழில் கூடங்களும் நிறுவப்பட்டுத் தொழில் முன்னேற்றம் ஏற்படும்பொழுது வருமானத்திலும் நல்ல பெருக்கம் ஏற்படுகிறது; வேலை வாய்ப்புகளும் அதிகரிக்கின்றன.

சேமிக்கும் சக்தி விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்களைவிட தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அதிகமாக இருக்கின்றது. ஆலைத் தொழில்கள் பரவலாக்கப்படும்போது தொழிலைச் சார்ந்தவர்களிடம் மூலதனப் பெருக்கம் ஏற்படுகின்றது. இவ்வாறு கிடைக்கும் மூலதனப் பெருக்கம் மேற்கொண்டு முதலீடு செய்வ தற்கு உதவியாக இருக்கின்றது.

### தொழில் வளர்ச்சிக் கட்டங்கள்

உலகின் பல நாடுகளுடைய பொருளாதார வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால், தொழில் முன்னேற்றம் மூன்று கட்டங்களில்

திகழ்ந்திருக்கின்றது என்று தெரிய வருகின்றது. முதற் கட்டத்தில் நாட்டில் கிடைக்கும் மூலப் பொருள்களைப் பயன்படுத்தி மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் தொழில்களே பெரும்பாலும் முக்கியத்துவம் பெற்றவைகளாக இருக்கின்றன. இக்கட்டத்தில் தானிய அரவை நிலையங்கள், எண்ணெய் தயார் செய்யும் நிலையங்கள், தோல் பதனிடுதல், நூல் நூற்றல், நெய்தல் இவற்றைச் சார்ந்த தொழில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இரண்டாவது கட்டத்தில் சற்று மேம்பட்ட நுகர்வுப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்கள் முக்கியம் வாய்ந்தவைகளாக இருக்கின்றன. உயர்ந்த வகை உணவுப் பண்டங்கள், பல வகையான திண்பண்டங்கள், மிதியடிகள், பல வகையான உலோகப் பொருள்கள், துணி, மனைத் துணைப் பொருள்கள் (Furniture), எழுதுபொருள்கள், காகிதம் போன்ற பண்டங்கள் இக்கட்டத்தில் அதிக அளவில் உற்பத்தியாகின்றன. முன்னேற்றமடைந்த மூன்றாம் கட்டத்தில் இயந்திரங்கள், தளவாடங்கள், தொழில் கருவிகள் போன்ற மூலதனப் பண்டங்களை (Capital goods) உற்பத்தி செய்யும் தொழில்கள் விரிவடைகின்றன. முதல் இரண்டு கட்டங்களிலும் பெரும்பான்மையும் நுகர்வுப் பொருள்களே உற்பத்தியாகின்றன. ஆனால், மூன்றாம் கட்டத்தில் நுகர்வுப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கு உதவும் மூலதனப் பண்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது.

இயற்கையான முறையில் தொழில் வளம் ஏற்படும்போது ஒன்றையொன்று தொடர்ந்து மேற்கூறிய மூன்று கட்டங்களில் தொழில் முன்னேற்றம் நிகழ்கின்றது. இந்நிகழ்ச்சி உலகில் பல நாடுகளில் ஏற்பட்ட தொழில் முன்னேற்ற முறையாகும். ஆனால், இம்முறைக்கு விதிவிலக்கான நாடுகளும் உள்ளன. பொருளாதார முன்னேற்றத்தை விரைவில் அடைய வேண்டும் என்னும் நோக்கத்தோடு திட்டமிட்டுச் செயல்படும் முறையைக் கையாளும் நாடுகளில் தொழில் வளர்ச்சி இம்மூன்று கட்டங்களையும் கடந்து வருவதில்லை. நுகர்வுப் பொருள்கள், மூலதனப் பண்டங்கள் இவ்விரண்டையும் ஒரே நேரத்தில் வளர்க்கும் கொள்கையை ருஷ்யா கடைப்பிடித்தது. இதைப் போன்றே, இந்தியாவும் நுகர்வுப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்கள் நன்றாக வலுவடைந்த பிறகு மூலதனப் பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழில்களைத் தொடங்கிக் கொள்ளலாம் என்று நீண்ட காலம் காத்திருக்கவில்லை. மூலதனப் பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழில்களைப் பெருக்குவதற்கு இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திலேயே முதலிடம் அளிக்கப்பட்டது. நுகர்வுப் பொருள்கள், மூலதனப் பண்டங்கள் இரண்டினையும் ஒன்றோடொன்று

இணைந்த முறையில் ஒரே நேரத்தில் பெருக்கமடையச் செய்யும் கொள்கை நம் நாட்டில் கையாளப்பட்டது. இதன் விளைவால் தொழில் வளர்ச்சிக்கான அடித்தளம் நாட்டில் மிகக் குறுகிய கால அளவில் அமைக்கப்பட்டது.

## திட்ட காலத்தில் இந்தியாவின் தொழில் முன்னேற்றம்

நாட்டில் விரைவாக தொழில் வளர்ச்சி ஏற்படுத்த வேண்டும் என்னும் குறிக்கோளுக்கு நமது ஐந்தாண்டு திட்டங்கள் அதிக முக்கியத்துவம் அளித்து வருகின்றன. தொழில் வளர்ச்சிக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு செயல்பட்ட நேரத்தில் நாடு எண்ணற்ற பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது. தொழில் துறையில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் பலவற்றை நடைமுறையில் சாதிக்க முடியவில்லை. சில குறிப்பிட்ட ஆண்டுகளில் தொழில் வளர்ச்சி மந்தமாகவே இருந்திருக்கின்றது. இத்தகைய இடர்பாடுகள் பல இருந்தாலும், கடந்த முப்பதாண்டுக் காலத்தில் நாட்டில் பாராட்டக்கூடிய வகையில் தொழில் முன்னேற்றம் இருந்திருக்கின்றது என்று கூற வேண்டும். 1950ஆம் ஆண்டுவாக்கில் நூற்பு ஆலைகள், நெசவாலைகள், சர்க்கரை ஆலைகள், தேயிலை தொழிற்கூடங்கள் போன்ற நுகர்வுப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்கள் மட்டுமே நாட்டில் இயங்கி வந்தன. ஆனால், இன்று பல வகையான பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழில்கள் நாட்டில் செயல்பட்டு வருவதைக் காண்கின்றோம். தொழில் அமைப்பு முறையில் பெருத்த மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. விடுதலை அடைந்த நேரத்தில் இடை உற்பத்திப் பொருள்கள் (Intermediate goods), மூலதனப் பண்டங்கள் (Capital goods) இவற்றை உற்பத்தி செய்யும் தொழில்கள் நாட்டில் அறவே இல்லை என்று கூறலாம். ஆனால், இவை இரண்டும் இன்று நாட்டில் தொழில் அமைப்பில் முக்கிய அங்கம் வகிக்கின்றன. முப்பதாண்டுகளுக்கு முன்னர் இயந்திரங்களும் தளவாடங்களும் முற்றிலும் பிற நாடுகளிலிருந்தே இறக்குமதி செய்யப்பட்டு வந்தன. ஆனால், இன்று நாட்டில் ஏற்றுமதிப் பட்டியலில் இயந்திரங்களும், தொழிற் கருவிகளும், மின்சாரப் பொருள்களும் முக்கியப் பண்டங்களாக இருக்கின்றன. ஒவ்வொரு திட்டக் காலத்திலும் தொழில் வளர்ச்சிக்காக என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எந்த அளவிற்குத் தொழிலில் வளர்ச்சி இருந்திருக்கின்றது என்பதற்கான சுருக்கமான விளக்கத்தைப் பின் வரும் பகுதியில் காணலாம்.

## முதல் திட்டம்

முதல் ஐந்தாண்டுத் திட்டம் தொழில்துறைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கவில்லை. எதிர் காலத் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான மின் சக்தி போன்ற இனங்களைப் பெருக்கும் பணியை முதல் திட்டம் மேற்கொண்டது. அப்பொழுதிருந்த தொழில்களுடைய முழு உற்பத்திச் சக்தியையும் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை முதல் திட்டம் வலியுறுத்தியது. முதல் திட்டத்தின் மொத்த முதலீட்டளவு ரூ. 1960 கோடியாகும். இதில் 6 சதவிகிதமாகிய ரூ. 117 கோடிதான் தொழில் முன்னேற்றத்திற்காக ஒதுக்கப்பட்டது. முதல் திட்டத்தில் தொழில் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை என்றாலும் இத்திட்ட காலத்தில் நல்ல தொழில் வளர்ச்சி இருந்தது. தொழில் உற்பத்தி ஆண்டொன்றுக்கு சராசரி 7 சதவிகிதத்தில் வளர்ச்சி அடைந்தது. இத்திட்ட காலத்தில் நிறுவப்பட்ட முக்கியத் தொழில்கள் சிந்திரி உர ஆலை, சித்தரஞ்சன் இரயில்வே எஞ்சின் தொழிற்கூடம், இந்தியன் டெலிபோன் இண்டஸ்ட்ரீஸ், ஒருங்கிணைந்த இரயில் பெட்டித் தொழிற்சாலை (Integral Coach Factory) என்பனவாம்.

## இரண்டாம் திட்டம்

இரண்டாம் திட்டத்தில் தொழில் துறை முன்னேற்றத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. நாட்டில் விரைவான தொழில் முன்னேற்றம் ஏற்படுத்த வேண்டும்; அதிலும் குறிப்பாக அடிப்படைத் தொழில்கள், கன்ரகத் தொழில்கள் இவற்றில் நல்ல வளர்ச்சி இருக்கவேண்டும் என்பது இத்திட்டத்தினுடைய ஒரு முக்கியக் குறிக்கோளாகும். இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு : (1) இரும்பு எஃகு உற்பத்திச் சாலைகள், இயந்திரங்களையும் தளவாடங்களையும் உற்பத்தி செய்யும் தொழில்கள் இவற்றைப் பெருக்கமடையச் செய்யவேண்டும்; (2) அலுமினியம், சிமெண்டு, இரசாயன உரம் இத்தொழில்களில் இருக்கும் உற்பத்திச் சக்தியைப் பெருக்க வேண்டும்; (3) சணல், பருத்தி, சர்க்கரை ஆலைகளைப் புதுப்பிக்கவேண்டும்; (4) பிற தொழில்களில் இருக்கும் உற்பத்திச் சக்தியை (capacity utilisation) முழுமையாகப் பயன்படுத்த வேண்டும்.

ஒரிஸ்ஸா மாநிலத்தில் ரூர்க்கேலா எஃகு ஆலை, மத்தியப் பிரதேசத்தில் பிலாய் எஃகு ஆலை, மேற்கு வங்காளத்தில் துர்க்காப்பூர் எஃகு ஆலை ஆகிய இம்மூன்று பெரிய ஆலைகளும் இரண்டாம் திட்ட காலத்தில்தான் நிறுவப்பட்டன. இவை

மூன்றும் அரசுத் துறையின்கீழ் நிறுவப்பட்டன. நாட்டில் எஃகு உற்பத்தியைப் பெருக்க பெரும் எஃகு ஆலைகளை அமைப்பதற்கு எடுத்துக் கொண்ட முயற்சியை இரண்டாம் திட்டத்தில் ஒரு சிறப்பியலாகக் கருதலாம்.

தொழில் முன்னேற்றத்திற்கான முதலீட்டளவு இரண்டாம் திட்டத்தில் மிகவும் உயர்த்தப்பட்டது. இத்திட்டத்தின் மொத்த அரசுத் துறை முதலீடு ரூ. 4600 கோடியாகும். இதில் ரூ. 1075 கோடி தொழில் முன்னேற்றத்திற்காக ஒதுக்கப்பட்டது. சதவிகிதக் கணக்கில் பார்த்தால் 24 சதவிகிதம் தொழில் வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டது. முதல் திட்டத்தில் 6 சதவிகிதமே தொழில் வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டது.

இத்திட்ட காலத்தில் நாட்டில் நல்ல தொழில் முன்னேற்றம் இருந்தது. தொழில் உற்பத்தியில் ஆண்டொன்றுக்கு சராசரி 9 சதவிகித ஏற்றம் இருந்தது. இரும்பு, எஃகுப் பண்டங்களின் உற்பத்தி 85 சதவிகித அளவில் ஏற்றமடைந்தது. இயந்திரங்களை உற்பத்தி செய்யும் தொழில்களில் நல்ல வளர்ச்சி இருந்தது. சணல், பருத்தி, சர்க்கரை இவ்வாலைத் தொழில்களை புதுப்பிக்கும் முயற்சியில் நல்ல முன்னேற்றம் இருந்தது. இதுவரை உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படாத பல இயந்திரக் கருவிகளும், டிராக்டர், மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் போன்ற வாகனங்களும் முதன் முறையாக நாட்டில் தயார் செய்யப்பட்டன.

## மூன்றாம் திட்டம்

நாட்டின் அடிப்படைத் தொழில்களை மேலும் பெருக்கமடையச் செய்யவேண்டும்; அரசுத் துறையின் கீழுள்ள தொழில்களைப் பரவலாக்க வேண்டும்; இவ்விரு நோக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டு மூன்றாம் திட்டம் வரையப்பட்டது. இத்திட்டக் காலத்தில் எஃகு, இரசாயனங்கள், எரிபொருள், மின்சாரம் இவை போன்ற அடிப்படைத் தொழில்களைப் பெருக்க வேண்டும் என்பதுதான் முக்கியக் குறிக்கோளாகும். நாட்டிற்குத் தேவைப்படும் மூலதனப் பண்டங்களைப் பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் நிலை மாறி அவற்றின் உற்பத்தியில் நாடு தன்னிறைவு அடையவேண்டும் என்பது மூன்றாம் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

மூன்றாம் திட்ட காலத்தில் அரசுத் துறையின்கீழ் முதலீடு செய்யப்பட்ட மொத்தத் தொகையின் அளவு ரூ. 8577 கோடியாகும். இதில் 23 சதவிகிதம், அதாவது ரூ. 1937 கோடி,

நாட்டின் தொழில் முன்னேற்றத்திற்காகச் செலவிடப்பட்டது. நாட்டின் தொழில் உற்பத்தியில் (ஐந்தாண்டுகளுக்கு) மொத்தம் 70 சதவிகித உயர்வு இருக்குமென்று மூன்றாம் திட்டம் எதிர்பார்த்தது.

ஆனால், மூன்றாம் திட்ட காலத்தில் தொழில்துறை செயல் பட்ட விதம் எதிர்பார்த்ததைவிட மிகவும் மோசமாக இருந்தது. தொழில் உற்பத்தியில் எதிர்பார்த்த 70 சதவிகிதப் பெருக்கத் திற்குப் பதிலாக 35 சதவிகித வளர்ச்சிதான் கிடைத்தது. மூலதனப் பண்டங்கள், தொழில் அடிப்படைப் பொருள்கள் இவற்றில் சுமாரான அளவில்தான் உற்பத்திப் பெருக்கம் இருந்தது. மூன்றாம் திட்டத்தில இலக்குகளைவிட குறைந்த அளவில்தான் சாதனை இருந்தது. துணி, பருத்தி போன்ற நுகர்வுப் பொருள் களில் உற்பத்திப் பெருக்கம் மிகக்குறைவாக இருந்தது. இதே போன்று இரசாயன உரங்களின் உற்பத்தி திட்டமிட்ட அளவை விட மிகக் குறைவாக இருந்தது. எஃகு உற்பத்தியைப் பொறுத்த அளவில் திட்டத்தில் மேற்கொண்ட இலக்கில் 60 சதவிகிதத்தைத் தான் சாதிக்க முடிந்தது. தொழில் உற்பத்தியில், குறிப்பாக துணி, சர்க்கரை, மண்ணெண்ணெய், மருந்து வகைகள், காகிதம் போன்ற நுகர்வுப் பொருள்களில் எதிர்பார்த்த அளவிற்கு உற்பத்திப் பெருக்கம் கிடைக்காததால் நாட்டில் விலை மட்டம் ஏற்றமடையத் தொடங்கியது. மொத்தத்தில் பார்த்தால், மூன்றாம் திட்ட காலத்தில் தொழில் துறையின் செயற்பாடு மன நிறைவு அளிப்பதாக இல்லை.

### நான்காம் திட்டம்

தொழில் துறையைப் பொறுத்த மட்டில் நான்காம் திட்டத்தின் குறிக்கோள்கள்: (1) இதற்கு முன்னர் தொடங்கப்பட்ட சில தொழில்களில் முதலீடு முற்றுப் பெறவில்லை, அவ்வாறு இருக்கும் குறையை நிரப்ப வேண்டும்; (2) உள் நாட்டுத் தேவையில் ஏற்பட்டிருக்கும் பெருக்கத்தை சமாளிக்கும் அளவிற்கு தொழில் உற்பத்தி வளர்ச்சியடைய வேண்டும்; (3) இறக்குமதியாகும் பண்டங்களை உள் நாட்டிலேயே உற்பத்தி செய்யக்கூடிய தொழில் கள், ஏற்றுமதியைப் பெருக்கக்கூடிய தொழில்கள் இவற்றை ஊக்கு விக்க வேண்டும்.

நான்காம் திட்டத்தில் முதலீடு செய்யப்பட்ட மொத்தத் தொகையானது ரூ. 15770 கோடியில் ரூ. 3107 கோடி தொழில் வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டது. திட்டத்தின் மொத்த முதலீட்டில் தொழிலுக்கான முதலீடு 20 சதவிகிதமாகும். தொழிலுக்கான

மொத்த முதலீட்டில் ஏறக்குறைய 75 சதவிகிதம் இரும்பு, எஃகு, பிற உலோகங்கள், இரசாயன உரங்கள், பெட்ரோலியம், இரசாயனப் பொருள்கள், நிலக்கரி போன்ற அடிப்படைத் தேவையான தொழில்களில் செலவிடப்பட்டது. இத்திட்ட காலத்தில் தொழில் உற்பத்தியில் ஆண்டு சராசரி 8 சதவிகித வளர்ச்சி இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

நான்காம் திட்ட காலத்தில் தொழில்துறையின் செயற்பாடு மிகவும் மோசமாக இருந்தது என்று கூற வேண்டும். தொழில் உற்பத்தியில் ஆண்டு சராசரி 5 சதவிகித வளர்ச்சிதான் இருந்தது. எதிர்பார்த்த 8 சதவிகித வளர்ச்சியைவிட இது மிகவும் குறைவானது என்பது தெளிவாகும். இத்திட்ட காலத்தில் தொழில் வளர்ச்சி மந்தமாக இருந்தமைக்குப் பல காரணங்கள் இருந்தன. அவற்றுள் முக்கியமானவை பின்வருமாறு :

1. எஃகு, இரசாயன உரங்கள் போன்ற அடிப்படைத் தேவையான தொழில்களில் பல சிக்கல்கள் எழுந்தன. இதன் விளைவால் உற்பத்தி அளவு மிகக் குறைவாகவே இருந்தது.

2. தொழிலாளர் வேலை நிறுத்தம் பரவலாக இருந்தது. இதனால் தொழில் உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டது.

3. உலோக உற்பத்தி, குறிப்பாக எஃகு உற்பத்தி மிகக் குறைந்த அளவில் இருந்தது. எனவே இவ்வுலோகங்கள் கிடைப்பருமைப் பண்டங்களாக இருந்தன. உலோகங்களை அதிக அளவில் பயன்படுத்தும் பொறியியல் தொழில் (Engineering Industries) இதனால் மிகவும் கேடுற்றன.

4. பருவ நிலை திருப்திகரமாக இல்லாததால் விவசாய உற்பத்தி மிகவும் கேடுற்றிருந்தது. இதன் விளைவால், கச்சாப் பொருள்கள் உற்பத்தி வளர்ச்சி குன்றியிருந்தது. எனவே, விவசாய உற்பத்தியை சார்ந்து இருக்கும் நூற்பு நெசவு ஆலைகள், சர்க்கரை போன்ற தொழில்கள் மிகவும் பாதிக்கப்பட்டன.

5. நாட்டின் பல பகுதிகளில் மின்சாரப் பற்றாக்குறை காணப்பட்டது. தொழில் உற்பத்தி இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டது.

## ஐந்தாம் திட்டம்

ஐந்தாம் திட்டத்தின் முக்கியக் குறிக்கோள்கள் பின்வருமாறு :

1. அடிப்படைத் தொழில்களில் விரைவான வளர்ச்சி இருத்தல் வேண்டும். இந்நோக்கம் நிறைவேற எஃகு, பிற உலோகங்கள்,

இரசாயன உரங்கள், நிலக்கரி, இயந்திர உற்பத்தி இவற்றிற்கு முதன்மை அளித்தல் வேண்டும்.

2. ஏற்றுமதியைப் பெருக்க உதவும் தொழில்களை வளர்ச்சியடையச் செய்யவேண்டும்;

3. துணி, எண்ணெய், சர்க்கரை, மருந்து வகைகள், சைக்கிள்கள் போன்ற சாதாரண மக்களுக்குத் தேவைப்படும் பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழில்களைப் பரவலாக்க வேண்டும்.

4. சிறு தொழில்களை ஊக்குவித்து வளர்க்க வேண்டும்.

ஐந்தாம் திட்ட காலத்தில் தொழில் துறைக்காக மொத்தம் ரூ. 10,200 கோடி செலவிடப்பட்டது. அரசுத் துறையின்கீழ் ஐந்தாம் திட்ட காலத்தில் முதலீடு செய்யப்பட்ட மொத்தத் தொகையில் தொழில் முதலீட்டளவு 26 சதவிகிதமாகும்.

இத்திட்ட காலத்தில் தொழில் உற்பத்தியில் ஆண்டு சராசரி 8 சதவிகித வளர்ச்சி இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், நடைமுறையில் கிடைத்த வளர்ச்சி 5.3 சதவிகிதமே.

## திட்ட காலத்தில் தொழில் வளர்ச்சி — ஒட்டு மொத்தமான மதிப்பீடு

நாடு விடுதலை அடைந்தது முதற்கொண்டே தொழில் வளர்ச்சியின் அவசியத்தை அரசு வலியுறுத்திக்கொண்டு வந்திருக்கின்றது. ஒவ்வோர் ஐந்தாண்டுத் திட்டத்திலும் தொழில் சம்மந்தமான குறிக்கோள்கள் எவை, குறிக்கோள்களை எந்த அளவிற்கு நாம் அடைய முடிந்தது என்பதற்கான விளக்கத்தை இதன் முற்பகுதியில் கண்டோம். ஒவ்வொரு திட்டத்திலும் மேற்கொள்ளப்பட்ட இலக்குகள் அனைத்தையும் சாதிக்க முடியவில்லை என்பது உண்மைதான். இருந்தாலும், கடந்த முப்பதாண்டுக் காலத்தில் திட்டமிட்டுச் செயல்பட்டதன் வாயிலாக நாட்டில் கணிசமான அளவிற்குத் தொழில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றது என்னும் உண்மையை மறுக்கமுடியாது. தொழில்களில் (பேரளவுத் தொழில்கள், மத்திய அளவுத் தொழில்கள், சிறு தொழில்கள் மூன்றும் உள்ளிட) ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கையும் பெருக்கமடைந்திருக்கின்றது.

நாடு விடுதலை அடையும் தருவாயில் விரல் விட்டு எண்ணக்கூடிய நிலையில்தான் தொழில்கள் இருந்தன. இருந்த சில

தொழில்களும் கல்கத்தா, பம்பாய், சென்னை போன்ற பெரு நகர்ப் பகுதிகளிலேயே குவிந்து கிடந்தன. இந்நிலைக்கு நேர் மாறாக இன்று தொழில்கள் நாடெங்கிலும் விரிந்து பரவிக் கிடப்பதைக் காண்கின்றோம். நாட்டிலுள்ள மாநிலங்கள், யூனியன் பகுதிகள் ஒவ்வொன்றிலும் இன்று பல தொழில்கள் நிறுவப்பட்டிருக்கின்றன.

நாட்டின் தொழில் அமைப்பிலும் (Structure of Industries) நல்ல மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று கூற வேண்டும். 1950 ஆம் ஆண்டுவாக்கில் அடிப்படைத் தொழில்களும், மூலதனப் பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழில்களும் இல்லை என்று கூறும் அளவிற்கு எண்ணிக்கையில் குறைவாக இருந்தன. அன்று இருந்த தொழில்கள் நுகர்வுப் பொருள்கள் அல்லது இடை உற்பத்திப் பொருள்கள் (Intermediate goods) இவற்றை உற்பத்தி செய்யும் தொழில்களாகவே இருந்தன. இந்த நிலை இன்று தலை கீழாக மாற்றமடைந்திருக்கின்றது. இன்று நாட்டின் தொழிற் படத்தில் மூலதனப் பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழில்கள், அடிப்படைத் தொழில்கள் இவை முக்கிய அங்கம் வகிக்கின்றன.

1950ஆம் ஆண்டுவாக்கில், நாட்டின் மொத்த ஏற்றுமதியில் பெருமளவு கச்சாப் பொருள்களாகவே இருந்தன. நாட்டிற்குத் தேவைப்பட்ட இயந்திரங்களும் தொழிற் கருவிகளும் பிற நாடுகளிலிருந்து இறக்குமதியாகி வந்தன. ஆனால், நம்முடைய அயல் நாட்டு வாணிபத்தின் தன்மை இன்று முற்றிலும் மாற்றமடைந்திருக்கின்றது. இயந்திரங்களுக்கும் தொழிற் கருவிகளுக்கும் நாம் இன்று பிற நாடுகளையே நம்பி இருக்க வேண்டிய நிலையில் இல்லை. திட்ட காலத்தில் மூலதனப் பண்டத் தொழிற்சாலைகள் பல நிறுவப்பட்டன. மூலதனப் பண்டங்களுக்கு இருக்கும் உள்நாட்டுத் தேவையை இத் தொழில்கள் அளித்து வருகின்றன. இயந்திரங்களும் போக்குவரத்து சாதனங்களும் இன்று ஏற்றுமதியாகிவருகின்றன. நாட்டு ஏற்றுமதியில் இப்பண்டங்கள் ஒரு கணிசமான அளவில் இருக்கின்றன. ரூ. 500 மதிப்புள்ள பலவகை இயந்திரங்கள், நுண் கருவிகள், போக்குவரத்து சாதனங்கள் 1976 - 77ல் நாட்டிலிருந்து ஏற்றுமதியாகின. முப்பதாண்டுகளுக்கு முன்னர் இத்தகைய பண்டங்கள் அனைத்தும் நாட்டில் இறக்குமதியாகி வந்தன. இதிலிருந்து நாட்டில் தொழில் முன்னேற்றம் நல்ல முறையில் இருந்திருக்கின்றது என்பதோடு செய்வினை முடிந்த பண்டங்களைப் பொறுத்த அளவில் நாடு ஓரளவிற்குத் தன்னிறைவு அடைந்திருக்கின்றது என்பதும் விளங்கும். கனரக இயந்திரங்களன்றி செய்வினைமுடிந்த

பண்டங்கள் பலவும் பெருமளவில் இன்று நாட்டிலிருந்து ஏற்றுமதியாகி வருகின்றன. இன்று நாட்டிலிருந்து ஏற்றுமதியாகும் செய்வினை முடிந்த பண்டங்களில் தோல், துணிகள், நூல், சணல் பண்டங்கள், இரும்பு, எஃகுப் பொருள்கள் முதலியன முக்கியமானவையாகும்.

நாடு விடுதலை அடைந்த நேரத்தில் பொறியியல் வல்லுநர்களுக்கும் தொழில் நிபுணர்களுக்கும் நாம் வெளி நாட்டவரையே நம்பி இருந்தோம். ஆனால், கடந்த இருபதாண்டு காலத்தில் தொழிலில் தனித் திறமையும் தேர்ச்சியும் பெற பலர் உள்நாட்டில் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கின்றனர். சிறந்த பயிற்சி பெற்ற இந்தியர்கள் தொழில் சம்பந்தமாக எழக்கூடிய சிக்கல்கள் அனைத்தையும் தாமே சமாளிக்கக்கூடிய நிலையில் இருக்கின்றனர்.

எனவே, ஒட்டு மொத்தமாக நோக்கும்போது நாட்டில் நல்ல தொழில் வளர்ச்சி இருந்திருக்கிறது என்பது தெளிவாகின்றது. அடுத்து வரும் பகுதியில் ஒவ்வொரு தனிப்பட்ட வகை தொழிலையும் எடுத்துக் கொண்டு அவை ஒவ்வொன்றிலும் உற்பத்தி எந்த அளவிற்குப் பெருகியிருக்கின்றது என்று காணலாம். தொழில்கள் சாதாரண வழக்கில் நான்கு முக்கிய தலைப்புகளில் பாகுபாடு செய்யப்படுகின்றன. அவையாவன: 1. அடிப்படைத் தேவையான பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழில்கள்; 2. மூலதனப் பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழில்கள்; 3. இடை உற்பத்திப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்கள்; 4. நுகர்வுப் பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழில்கள்.

## 1. அடிப்படைத் தேவையான பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழில்கள்

இத்தலைப்பின்கீழ் நிலக்கரி, சிமெண்டு, செய்வினை முடிந்த எஃகு, மின்சாரம் இவை வருகின்றன. தொழில் உற்பத்திக்கும் தொழில் வளர்ச்சிக்கும் இப்பண்டங்கள் இன்றியமையாதனவாக இருப்பதால் இவற்றை அடிப்படைத் தேவைப் பண்டங்கள் என்றழைக்கின்றோம். 1955ஆம் ஆண்டில் நாட்டினுடைய மொத்த உற்பத்தி 40 மில்லியன் டன்னாகும். நிலக்கரி உற்பத்தி 2½ மடங்கு பெருகி 1977-ல் 104 மில்லியன் டன்னளவை எட்டியது. 1955-ல் 4.6 மில்லியன் டன்னளவில் இருந்த சிமெண்ட் உற்பத்தி 1977-ல் 9 மில்லியன் டன்னுக்கு உயர்ந்தது. 1955-ல் 1.3 மில்லியன் டன்னளவில் இந்த எஃகு உற்பத்தி 1977-ல் 6.8 மில்லியன் டன்னுக்குப் பெருகியது. இதே கால கட்டத்தில் மின்சார

உற்பத்தி 8468 மில்லியன் கி.வா.ம. (kwh)-லிருந்து 90879 மில்லியன் கி.வா.ம. (kwh)-க்குப் பெருக்கமடைந்தது.

## 2. மூலதனப் பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழில்கள்

இத்தலைப்பின்கீழ் டீசல் என்ஜின்கள், இரயில் சரக்குப் பெட்டிகள், போக்குவரத்து வண்டிகள், மின்சார மோட்டார்கள், மின்னாற்றல் மாற்றிகள் (Electric transformers), இயந்திரக் கருவிகள் இவை வருகின்றன. 1955, 1977 இவ்விரு ஆண்டுகளுக்கிடையே டீசல் என்ஜின்களின் உற்பத்தி 14110 எண்ணிக்கையிலிருந்து 134500-க்கு உயர்ந்தது. மோட்டார் வண்டிகளின் உற்பத்தி 23,088லிருந்து 84,185-க்குப் பெருகியது. மின்சார மோட்டார்களின் உற்பத்தி 30 மடங்காகவும் மின்னாற்றல் மாற்றிகளின் உற்பத்தி 15 மடங்காகவும், இயந்திரக் கருவிகளின் உற்பத்தி 20 மடங்காகவும் ஏற்றமடைந்தன.

## 3. இடை உற்பத்திப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்கள்

இத்தலைப்பின்கீழ் பருத்தி நூல், சணல் பண்டங்கள், டயர்கள், பெட்ரோலியம் ஆகியவை வருகின்றன. பருத்தி நூல் உற்பத்தியில் 50 சதவிகித வளர்ச்சி இருந்தது. சணல் பண்டங்களின் உற்பத்தியில் எந்தவித ஏற்றமும் இல்லை. டயர்களின் உற்பத்தி 6 மடங்காக உயர்ந்தது. சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலிய உற்பத்தியில் 7 மடங்கு ஏற்றம் இருந்தது.

## 4. நுகர்வுப் பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழில்கள்

சர்க்கரை, தேயிலை, தாவர எண்ணெய், பருத்தித் துணி, காகிதம் இவைகள் நாட்டிலுள்ள முக்கியத் தொழில்களாகும். சர்க்கரை உற்பத்தி 1.7 மில்லியன் டன்னிலிருந்து 4.6 மில்லியன் டன்னுக்கு உயர்ந்தது. தேயிலை உற்பத்தி இரண்டு மடங்காக உயர்ந்தது. தாவர எண்ணெய் உற்பத்தி இரண்டு மடங்குக்கு மேலாக உயர்ந்தது. பருத்தித் துணி உற்பத்தியில் கணிசமான அளவுக்குப் பெருக்கம் இல்லை. காகித உற்பத்தி ஏறக்குறைய 5 மடங்காக உயர்ந்தது.

## பேரளவுத் தொழில்கள்

பழங்காலத்தில் கைத்தொழில், குடிசைத் தொழில் வாயிலாகத் தான் பண்டங்கள் உற்பத்தி ஆகிவந்தன. இன்று காணப்பெறும் ஆலைத் தொழில்கள் அக்காலத்தில் இல்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக் காலத்தில்தான் தொழிற் கூடங்கள்

அமைத்துப் பண்டங்களை உற்பத்தி செய்யும் முறை வழக்கத்திற்கு வந்தது. ஆனால், பேரளவுத் தொழில்களில் வளர்ச்சி அதிகமாக இல்லை. மிக அண்மைக் காலம் வரை நாட்டின் குறிப்பிட்ட சில பெருநகர்ப் பகுதிகளில் மட்டும்தான் பேரளவுத் தொழில்கள் அமைந்திருந்தன. மேலும், விடுதலைக்கு முன்னர் நாட்டில் இருந்த பேரளவுத் தொழில்களில் பெரும்பான்மையும் ஆங்கிலேயர் வசம் இருந்தன. விடுதலைக்குப் பிறகு பேரளவுத்தொழில்களில் நல்ல முன்னேற்றம் இருந்து வருகின்றது. நாட்டில் விரைவான தொழில் வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்பது இந்திய அரசின் தலையாய குறிக்கோளாக இருந்து வருகின்றது. அரசின் நேர் பார்வையின்கீழ்ப் பல தொழில்கள் தொடங்கப்பட்டு நிறுவகிக்கப்பட்டு வருகின்றன. தனியார் துவங்கும் தொழில்களுக்கு அரசு பல உதவிகளையும் அளித்து வருகின்றது.

நாட்டில் உள்ள பேரளவுத் தொழில்களுள் முக்கியமான சிலவற்றின் வளர்ச்சியை இப்பொழுது கண்டறிய முயலலாம். இரும்பு, எஃகு, பருத்தி ஆலைகள், சணல் ஆலைகள், சர்க்கரை ஆலைகள், சிமெண்டு ஆலைகள் ஆகிய ஐந்து பேரளவுத்தொழில்களை எடுத்துக் கொள்வோம். நாட்டின் தொழில் துறையில் இவ்வைந்து தொழில்களும் முக்கிய அங்கம் வகிக்கின்றன. இரும்பு, எஃகு, சிமெண்டு போன்ற முக்கிய மூலதனப் பண்டங்களும் துணி, சர்க்கரை போன்ற நுகர்வுப் பண்டங்களும் இப்பிரிவின்கண் அடங்குகின்றன. மேற்கூறிய ஐந்து தொழில்களைப்பற்றிச் சற்று விரிவாக அறிந்து கொள்வதன் வாயிலாக நாட்டின் தொழில் வளர்ச்சியைப்பற்றி ஓரளவிற்குத் தெளிவான கருத்தைப் பெறலாம்.

## இரும்பு எஃகுத் தொழில்

தாதுப் பொருளிலிருந்து இரும்பை உருக்கி வார்ப்பெடுக்கும் முறை நாட்டில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகப் பழக்கத்தில் இருந்து வருகின்றது. கிரேக்க வீரன் அலெக்சாண்டர் இந்தியப் படையெடுப்புக்குப் பின் திரும்பிச் செல்லும்போது 30 பவுண்டு எடையுள்ள உயர் ரக இரும்புக் கட்டியை போரஸ் மன்னனிடமிருந்து வெகுமதியாகப் பெற்றுச் சென்றான் என்று வரலாறு குறிப்பிடுகிறது. டில்லியிலுள்ள குதுப்மினார் இரும்புத் தூண் வல்லுநர்கள் பலரை வியக்கச் செய்கின்றது. 65-லிருந்து 70 சதவிகிதம் வரை இரும்பு உள்ள தாது வகைகள் இந்தியாவில் ஏராளமாகக் கிடைக்கின்றன.

இரும்பும் எஃகும் தொழில் வளர்ச்சிக்குத் தேவைப்படும் இன்றியமையாத பண்டங்களாகும். எனவே இரும்பு, எஃகுத்

தொழில் அடிப்படைத் தேவையான ஒரு தொழில். மின்சார இயந்திரங்கள், போக்குவரத்து வாகனங்கள், தொழில் உற்பத்திக் கருவிகள், தளவாடங்கள் இவை அனைத்திற்கும் இரும்பும் எஃகும் அடிப்படைப் பண்டங்களாக இருக்கின்றன. எனவே, நாட்டில் பயன்படுத்தப்படும் எஃகின் அளவைக் கொண்டு அந்நாடு எந்த அளவிற்குத் தொழில்துறையில் முன்னேற்றமடைந்திருக்கின்றது என்று கூறலாம். உலகில் மிக அதிக அளவில் எஃகைப் பயன் படுத்தும் நாடு ஐக்கிய அமெரிக்காவாகும். அமெரிக்கா ஓர் ஆண்டில் 115 மில்லியன் டன்னளவு எஃகைப் பயன்படுத்தி வருகின்றது. நம் நாடு விடுதலை அடைந்ததன் பிறகு எஃகு உற்பத்தியில் நல்ல வளர்ச்சி இருந்திருக்கின்றது. இருந்தாலும், சராசரிக் கணக்கில் ஒரு தலா நபருக்குப் பயன்படுத்தப்படும் எஃகு நம் நாட்டில் 11 கிலோதான். தலா நபருக்கான எஃகு உபயோகம் (ஆண்டொன்றுக்கு) அமெரிக்காவில் 685 கிலோ, ருஷ்யாவில் 428 கிலோ; ஸ்வீடனில் 625 கிலோ, மேற்கு ஜெர்மனியில் 595 கிலோ, ஜப்பானில் 494 கிலோ என்றறியும்போது நம் நாட்டில் தலா நபருக்கான உபயோகம் எத்துணை குறைவாக இருக் கின்றது என்பது தெளிவாகின்றது.

இரும்பு, எஃகு தொழிலின் முக்கியத்துவத்தை நன்றாக உணர்ந்து அதனை வளர்ப்பதற்காகத் திட்ட காலத்தில் இந்திய அரசு தீவிர முயற்சிகளை மேற்கொண்டது. நாட்டில் நான்கு பெரிய எஃகுத் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன. இந்நாள் வரை நாட்டின் இரும்பு எஃகு தொழிலில் மொத்தம் 3000 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. இத்தொழில் ஏறக்குறைய இரண்டரை இலட்சம் பேர்களுக்கு நேரிடையாக வேலையளித்து வருகின்றது.

## இரும்பு எஃகுத் தொழிலின் தோற்றமும் வளர்ச்சியும்

பேரளவுத் தொழிலாக இரும்பு எஃகு உற்பத்தி செய்யும் முறை பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் தலை காட்டியது. ஆனால், ஜாம்ஷெட்பூரில் 1906-ல் டாடா இரும்பு எஃகு ஆலை நிறுவப்பட்டதன் பிறகு முறையான வளர்ச்சி அடைந்தது. இந்த ஆலை 1911-ல் வார்ப்பு இரும்பையும் 1930-ல் எஃகையும் உற்பத்தி செய்யத் தொடங்கியது. நாட்டில் இரும்பு எஃகு ஆலைகள் அமைப்பதில் டாடா நிறுவனத்தார் முன்னோடியாக இருந்தனர். இதைத் தொடர்ந்து மேலும் இரண்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1918-ல் அஸன்சால் என்னுமிடத்தில் தனியார் துறையில் ஓர் ஆலை நிறுவப்பட்டது. பிற்காலத்தில் இது,

இந்தியன் இரும்பு எஃகு கம்பெனி என்னும் பெயரில் அழைக்கப் பட்டது. மூன்றாவது ஆலை கர்நாடக அரசால் 1923ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது. இன்று இந்த ஆலை விஸ்வேஸ்வரய்யா இரும்பு எஃகு தொழிற்சாலை என்றழைக்கப் படுகின்றது. ஆக, விடுதலை அடைவதற்கு முன்னர் நாட்டில் மொத்தம் மூன்று இரும்பு எஃகு ஆலைகள், இரண்டு தனியார் துறையிலும் ஒன்று அரசினர் துறையிலும் இருந்தன.

## திட்ட காலத்தில் இரும்பு எஃகு தொழில் வளர்ச்சி

இரும்பு எஃகு தொழிலின் அவசியத்தை நன்றாக உணர்ந் திருந்த இந்திய அரசு, திட்ட காலத்தில் இரும்பு எஃகு தொழில் விரிவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி வந்திருக்கின்றது. எஃகு உற்பத்தி அவ்வப்போது பெருகிவந்தால் தான் நாட்டில் பொதுவான தொழில் வளர்ச்சியும் தடையில்லாமல் இருக்கும் என்னும் கருத்துக்கு இந்தியப் பொருளாதார திட்டங் களில் முதலிடம் அளிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் இத் தொழிலை மேலும் வளர்ப்பதற்கான வழிமுறைகள் கையாளப் பட்டன.

விரிவாக்கும் பணி இரண்டு கட்டங்களில் படிப்படியாக மேற் கொள்ளப்பட்டது. புதிய ஆலைகளை அமைப்பதற்குப் பதிலாக, முன்னமே இயங்கி வரும் ஆலைகளை மேலும் விரிவுபடுத்தும் பணி முதற்கட்டமாக மேற்கொள்ளப்பட்டது. டாடா இரும்பு எஃகு ஆலை, இந்தியன் இரும்பு எஃகு கம்பெனி, விஸ்வேஸ்வரய்யா இரும்பு எஃகு ஆலை மூன்றும் விரிவாக்கும் பணியை மேற் கொண்டன. இம்மூன்று ஆலைகளின் விரிவாக்கத் திட்டங்களுக்கும் இந்திய அரசு நிதி உதவி அளித்தது; உலக வங்கியிலிருந்து நிதியுதவி கிடைப்பதற்கும் வழி வகுத்துத் தந்தது. அணுகு முறை இரண்டாம் கட்டத்தில் மாறுபட்டிருந்தது. இக்கட்டத்தில், பேரளவில் இயங்கக்கூடிய புதிய எஃகு ஆலைகள் அரசுத் துறையின் கீழ் நேரிடையாகத் தொடங்கப்பட்டன. திட்ட காலத்தில் நான்கு பேரளவுத் தொழில்கள் நாட்டில் நிறுவப்பட்டன. இவை ஒவ்வொன்றிற்கான சிறு விளக்கத்தைக் கீழே காணலாம்.

ரூர்க்கேலா ஆலை : நாட்டு விடுதலைக்குப் பிறகு அரசுத் துறையின்கீழ் நிறுவப்பட்ட முதல் இரும்பு எஃகு ஆலை ஒரிஸ்ஸா மாநிலத்தில் ரூர்க்கேலா என்னுமிடத்தில் அமைக்கப்பட்டது. இவ்வாலை ஜெர்மனி நாட்டின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டது.

இதற்கான அடிப்படை வேலைகள் 1954ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டன. இந்த ஆலை 1961-லிருந்து எஃகு பாளங்களையும், செய்வினை முடிந்த எஃகு பொருள்களையும் உற்பத்தி செய்து வருகின்றது. தொடக்க காலத்தில் இவ்வாலையின் உற்பத்திச் சக்தி ஆண்டொன்றுக்கு 1.2 மில்லியன் டன்னாகும். 1969 - 70-ல் உற்பத்திச் சக்தி மேலும் விரிவாக்கப்பட்டது.

பிலாய் ஆலை : இந்த ஆலை 1955-ல் மத்தியப் பிரதேசத்தில் உள்ள பிலாய் என்னுமிடத்தில் நிறுவப்பட்டது. ருஷ்ய நாட்டின் உதவியுடன் இந்த ஆலை நிறுவப்பட்டது. இரயில் தண்டவாளங்கள், பட்டை வார்ப்புகள் (Bars), கனரக அமைப்புகள் (Heavy Structurals) போன்ற சில குறிப்பிட்ட பண்டங்களை உற்பத்தி செய்வதில் இந்த ஆலை முனைப்பாக ஈடுபட்டு வருகின்றது. எஃகை வார்த்து உருக்குவதில் இங்கு தானியங்கும் நூதனமுறை கையாளப்படுகின்றது. தொடக்க காலத்தில் இவ்வாலையில் உற்பத்திச் சக்தி 2.5 மில்லியன் டன்னாக இருந்தது. 1976ஆம் ஆண்டில் இது 4 மில்லியன் டன்னாக விரிவாக்கப்பட்டது.

துர்க்காபூர் ஆலை : மேற்கு வங்காளத்தில் துர்க்காபூர் என்னுமிடத்தில் மூன்றாவது ஆலை பிரிட்டிஷாரின் உதவியுடன் நிறுவப்பட்டது. 1.6 மில்லியன் டன் எஃகு உற்பத்தி செய்யக்கூடிய இந்த ஆலை 1959-லிருந்து செயல்படத் தொடங்கியது.

பொகாரோ ஆலை : ருஷ்ய உதவியுடன் நான்காவது ஆலை அரசுத் துறையின்கீழ் பொகாரோ என்னுமிடத்தில் நிறுவப்பட்டது. 1972-லிருந்து எஃகு உற்பத்தி இவ்வாலையில் தொடங்கியது.

திட்டகாலத்தில் அரசுத் துறையின்கீழ் நிறுவப்பட்ட நான்கு ஆலைகளும் மொத்தத்தில் 5.8 மில்லியன் டன் எஃகை உற்பத்தி செய்யக்கூடும். இந்த நான்கு பேரளவுத் தொழில்களுடன்கூட சிற்றளவுத் தொழில்கள் மூன்றைத் தொடங்க இந்திய அரசு முடிவெடுத்திருக்கின்றது. இவற்றுள் ஒன்று தமிழ்நாட்டில் சேலத்திலும், ஒன்று ஆந்திரப் பிரதேசத்தில் விசாகப்பட்டினத்திலும், ஒன்று கர்நாடக மாநிலத்தில் விஜயநகரிலும் நிறுவப்பட்டுள்ளன. இவ்வாறு முன்னமே இருந்த ஆலைகளை விரிவாக்கியதன் வாயிலாகவும் புதிய ஆலைகளை நிறுவியதன் வாயிலாகவும் நாட்டில் இரும்பு, எஃகு உற்பத்தி அண்மை ஆண்டு

களில் பெருமளவுக்கு உயர்ந்திருக்கின்றது. நாட்டில் எஃகு உற்பத்தியில் இருந்த வளர்ச்சியைப் பட்டியல் 7—1-ல் காணலாம்.

### பட்டியல் 7—1

திட்ட காலத்தில் இரும்பு எஃகு உற்பத்தியின் வளர்ச்சி

| | 1950-51 | 1960-61 | 1965-66 | 1969-70 | 1973-74 | 1976-77 |
|---|---|---|---|---|---|---|
| வார்ப்பு இரும்பு (இலட்சம் டன்) | 16.9 | 43.1 | 70.9 | 73.9 | 70.0 | 100.1 |
| எஃகு (இலட்சம் டன்) | 14.7 | 34.2 | 65.3 | 64.3 | 57.6 | 86.6 |
| செய்வினை முடிந்த எஃகு (இலட்சம் டன்) | 10.4 | 23.9 | 45.1 | 48.0 | 44.8 | 68.8 |

ஆதாரம் : இந்தியா—ஆண்டு நூல் 1976.

### எஃகு மேற்பார்வைக்குத் தனி நிறுவனம் (The Steel Authority of India—S A I L)

அரசுத் துறையின்கீழ் தொடங்கப்பட்ட எஃகு ஆலைகளின் காலவாக்கில் பல பிரச்சினைகள் தோன்றத் தொடங்கின. இவ்வாலைகள் இலாபகரமாக இயங்கவில்லை. ஒவ்வோர் ஆண்டும் நட்டம் ஏற்பட்டுக் கொண்டே வந்தது. ஒவ்வோர் ஆலையிலும் உற்பத்தியின் அளவும் குறையத் தொடங்கியது. ஒவ்வோர் ஆண்டிற்கும் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளைவிட உற்பத்தி அளவுகள் குறைவாக இருந்தன. ஒவ்வோர் ஆண்டும் 300 கோடி ரூபாய்க்கு மேல் பெறுமானமுள்ள எஃகை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியிருந்தது. எஃகு ஆலைகளில் தொழிலாளர் கிளர்ச்சிகளும், வேலை நிறுத்தங்களும் சாதாரண வழக்கமாகி விட்டன. ஆலைகளில் இயந்திரங்கள் அடிக்கடி பழுதடைந்ததால் உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டது. எஃகு ஆலைகளுக்கு அடிப்படைத் தேவையான நிலக்கரி கிடைப்பதில் தட்டுப்பாடுகள் எழுந்தன. தேவையான அளவிற்கு ஒழுங்கான முறையில் நிலக்கரி கிடைக்கவில்லை.

நாட்டின் எஃகுத் தொழிற்சாலைகளில் இவ்வாறு பல பிரச்சினைகள் உருவெடுத்தன. மொத்த எஃகு உற்பத்தியும் இவற்றால் பெரிதும் பாதிக்கப்பட்டது. இப்பிரச்சினைகளைக் களைந்து எஃகுத் தொழிற்சாலைகளை நல்ல முறையில் செயல்

படச் செய்யும் நோக்கத்துடன் தனி நிறுவனம் ஒன்று 1973ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இப்புதிய நிறுவனத்தின் முக்கிய நோக்கங்கள் : (1) தனியார் துறை, அரசுத் துறை இரண்டின் கீழுள்ள எஃகுத் தொழிற்சாலைகளை இணக்கமான முறையில் இயங்கவைத்து அவற்றின் உற்பத்தியை ஒருமுகப்படுத்துதல்; (2) எஃகு உற்பத்தியைப் பெருக்குதல்; உற்பத்தித் திறனை உயர்வடையச் செய்தல்; (3) எல்லோருக்கும் கிடைக்கும் வழியில் எஃகு வினியோகத்தை முறைப்படுத்துதல்; (4) நாட்டின் எஃகு இறக்குமதியை நாளாவட்டத்தில் குறைத்தல். இத்தனி நிறுவனம் செயல்படத் தொடங்கியதிலிருந்து நாட்டின் இரும்பு எஃகு தொழில் திறம்படச் செயல்பட ஆரம்பித்தது. எல்லா ஆலைகளிலும் எஃகு உற்பத்தி பெருக்கமடைந்தது. ஒவ்வோர் ஆலையிலும் மிகவும் கீழ்மட்டத்தில் இருந்த உற்பத்தி அளவு உயரத் தொடங்கியது. இதற்கு முன் பெரும் நட்டத்திற்கு உள்ளாகியிருந்த இவ்வாலைகளின் நிதி நிலை சீரடையத் தொடங்கியது. இந்நிறுவனம் செயல்படத் தொடங்கியதிலிருந்து நாட்டின் எஃகு ஏற்றுமதியும் பெருக்கமடையத் தொடங்கியது.

## பருத்தி ஆலைத் தொழில்

இன்று நாட்டில் உள்ள பேரளவுத் தொழில்களுள் பருத்தி ஆலைத்தொழில் மிகப்பெரியதான ஒன்றாகும். பருத்தித் துணியைப் பெருமளவில் உற்பத்தி செய்யும் உலக நாடுகளுள் ஜப்பானுக்கு அடுத்தபடியாக இந்தியா இரண்டாவது இடத்தை வகிக்கின்றது. உலக மொத்தத் துணி ஏற்றுமதியில் இந்தியாவின் பங்கு 16 சதவிகிதமாகும். பருத்தி ஆலைகளை நூற்பு ஆலைகள், நெசவு ஆலைகள் என்று வகைப்படுத்தலாம். நாட்டில் இன்று 700-க்கும் மேற்பட்ட பருத்தி ஆலைகள் இருக்கின்றன. இவற்றுள் 400 ஆலைகள் நூற்பு ஆலைகள் ஆகும். எஞ்சியவை நூற்றல், நெய்தல் இரண்டையும் மேற்கொள்கின்றன. இன்று நாட்டில் ஆண்டொன்றிற்கு 8000 மில்லியன் மீட்டர் துணி உற்பத்தியாகின்றது. மக்களுக்கு வேலை அளிப்பதிலும் பருத்தி ஆலைகள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. ஏறக்குறைய 10 இலட்சம் பேர்களுக்கு இத்தொழில் நேரிடையாக வேலை அளிக்கின்றது. நாட்டின் அனைத்து ஆலைத் தொழில்களில் ஈடுபட்டிருக்கும் மொத்தத் தொழிலாளர் எண்ணிக்கையில் 20 சதவிகிதத்தினர் பருத்தி ஆலைகளில் மட்டும் இருக்கின்றனர். நூற்பு, நெசவு ஆலைகள் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் காணக் கிடந்தாலும், அவற்றில் பெரும் சதவிகிதம் மகாராஷ்டிரம், குஜராத்து, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் மிகவும் நெருக்கமாக இருக்கின்றன. பம்பாய்,

அகமதாபாத், ஷோலாப்பூர், கான்பூர், நாகபுரி, இந்தூர், மதுரை, கோயம்புத்தூர் முதலிய நகரங்கள் நாட்டில் துணி உற்பத்தியில் முக்கிய இடங்களாகத் திகழ்கின்றன. ஆண்டொன்றுக்குச் சராசரி 100 கோடி ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள துணிப் பண்டங்கள் நாட்டிலிருந்து ஏற்றுமதியாகி வருகின்றன.

பருத்தி ஆலைத் தொழில் ஒரு பெருந்தொழில் என்பதுடன்கூட அது நாட்டில் ஒரு பழந்தொழிலாகவும் இருந்து வருகின்றது. சுமார் 150 ஆண்டுகட்கு முன்னர் இத்தொழில் தொடங்கப்பட்டு வளர்ச்சி அடைந்து வந்திருக்கின்றது. நாட்டின் முதல் பருத்தி ஆலை 1830 ஆம் ஆண்டில் கல்கத்தாவிற்கு அருகில் நிறுவப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இத்தொழில் பல இன்னல்களுக்கு உட்பட்டிருந்தது. அதனால் பருத்தி ஆலைத் தொழிலில் முறையான வளர்ச்சி இல்லை. அக்காலத்தில் பருத்தி ஆலைத் தொழில் நன்றாக வளர்ச்சியுறாமல் இருந்ததற்கு ஆங்கிலேய ஆட்சி கையாண்ட கொள்கையே முக்கியக் காரணமாகும். துணி இறக்குமதி நாட்டில் தங்குதடையின்றி அனுமதிக்கப்பட்டது. இறக்குமதியின்மீது எவ்விதத் தீர்வையும் விதிக்கப்படவில்லை. ஆனால், இளமைப் பருவத்திலிருந்த இந்தியப் பருத்தி ஆலைத் தொழிலுக்கு இறக்குமதியான பண்டங்களுடன் போட்டியிடும் திறன் இல்லை. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து நிலைமை சற்று மேம்பாடடையத் தொடங்கியது. முதல் உலகப்போர் இத்தொழிலை ஊக்குவிப்பதாக அமைந்தது. பல புதிய ஆலைகள் நாட்டில் நிறுவப்பட்டன. 1927ஆம் ஆண்டில் முதன் முறையாகப் பருத்தி ஆலைத் தொழிலுக்குக் காப்பு அளிக்க முடிவு செய்யப்பட்டது. நாட்டில் இறக்குமதியான துணிப்பண்டங்கள் மீது தொழிற்காப்புத் தீர்வைகள் (Protective duties) விதிக்கப்பட்டன. இவ்வாறு அளிக்கப்பட்ட தொழிற்காப்பு இந்தியப் பருத்தி ஆலைத் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பதாக இருந்தது. இரண்டாம் உலகப் போர் இத்தொழில் மேலும் வளர்ச்சியடைவதற்கு வழி வகை செய்தது. துணி வாணிபத்தில் நெடுங்காலமாக ஜப்பான் இந்தியாவின் போட்டி நாடாக இருந்து வந்தது. ஜப்பான் இரண்டாம் உலகப் போரில் நேரிடையாக ஈடுபட்டிருந்ததால், அதற்கு முன்னர் ஜப்பானிலிருந்து துணி இறக்குமதி செய்துவந்த நாடுகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. இந்நாடுகளின் தேவைகளைப் பூர்த்திசெய்ய இந்தியா முனைந்தது. துணித் தேவையில் இருந்த பெருக்கம் இந்தியப் பருத்தி ஆலைத் தொழிலை மேலும் ஊக்குவித்தது. பருத்தி ஆலைத் தொழில் நல்ல முறையில்

வளர்ச்சியடைந்தது. போர் முடிந்த பிறகும்கூட இந்தியத் துணிகளுக்கு வெளிநாடுகளில் தேவை அதிக அளவில் இருந்தது.

நாடு விடுதலை அடைந்த பிறகு, நம்முடைய அரசு பருத்தி ஆலைத் தொழில் மேலும் வளர்ச்சியுறுவதில் அதிக கவனம் செலுத்தி வருகின்றது. 1950-51, 1977-78 இவ்விரு ஆண்டுகளுக்கிடையே நாட்டில் துணி உற்பத்தியின் அளவு இரட்டிப்பாக உயர்ந்தது. 1977-78ஆம் ஆண்டில் மொத்தம் 8435 மில்லியன் மீட்டர் துணி நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டது எனக் கணக்கிடப்பட்டது. இருந்தாலும், நாட்டில் பருத்தி ஆலைத் தொழிலின் வளர்ச்சி சிறப்பாக இருந்தது என்று கூற முடியாது. இத்தொழில் மேலும் சிறப்புற வளர்ச்சியுறாமல் இருப்பதற்குப் பல காரணங்கள் இருந்தன. நாட்டுப் பிரிவினையால் இத்தொழிலில் பல சிக்கல்கள் எழுந்தன. பருத்தி சாகுபடியான பெரும் நிலப்பரப்பு பாகிஸ்தான் வசம் போய்ச் சேர்ந்தது. எனவே, இந்தியாவில் தேவையான அளவிற்குக் கச்சாப்பருத்தி கிடைக்கவில்லை. இன்னும்கூடப் பருத்தி ஆலைத் தொழில் பல பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றது.

## பருத்தி ஆலைத் தொழில் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

(1) கச்சாப் பருத்தியில் பற்றாக்குறை : பருத்தி ஆலைத் தொழிலை எதிர்நோக்கி நிற்கும் பிரச்சினைகளுள் முதன்மையானது கச்சாப் பருத்தி அளிப்பில் இருக்கும் பற்றாக்குறையே. உலக நாடுகளுள் இந்தியா அதிக நிலப்பரப்பில் பருத்தி சாகுபடி செய்யும் நாடாக இருந்து வருகின்றது. உலக நாடுகள் அனைத்திலும் பருத்தி சாகுபடிக்காகப் பயன்படுத்தப்படும் நில அளவில் ஏறக்குறைய கால் பங்கு நிலம் இந்தியாவில் இருக்கின்றது. ஆனால், உலகின் மொத்த பருத்தி உற்பத்தியில் 10 சதவிகித அளவுதான் இந்தியாவில் உற்பத்தியாகின்றது. சராசரி ஒரு ஹெக்டேர் நிலத்தில் கிடைக்கக்கூடிய பருத்தி உற்பத்தி மிகக் குறைவாக இருக்கின்றது. எனவே, இந்தியா பெருமளவில் கச்சாப் பருத்தியை இறக்குமதி செய்யவேண்டியிருக்கின்றது. இதனால் நாட்டின் அன்னியச் செலாவணி நிலையும் பாதிக்கப்படுகின்றது.

(2) கச்சாப் பருத்தியில் இருக்கும் விலையேற்றம் : பருத்திக்கு இருக்கும் தேவையின் அளவிற்கேற்ப நாட்டில் அளிப்பு இல்லாமையால் பருத்தியின் விலை உயர்வாக இருக்கின்றது. பருத்தித் துணியின் ஆக்கச் செலவில் ஏறக்குறைய 35 சதவிகிதம் கச்சாப்

பருத்தியின் கிரயமாக இருக்கின்றது. பருத்தி விலை உயர்வாக இருப்பதால் துணி உற்பத்திச் செலவும் உயர்வாக இருக்கின்றது. உள்நாட்டில் உற்பத்திச் செலவு அதிகமாக இருப்பதால் உலகச் சந்தையில் இந்திய ஆலைகளால் போட்டியிட முடிவதில்லை.

(3) பிற நாடுகளுடைய போட்டி : உலகச் சந்தையில் இந்திய துணி ஏற்றுமதிக்குக் கடுமையான போட்டி இருந்து வருகின்றது. ஜப்பான், பாகிஸ்தான், மேற்கு ஜெர்மனி, இத்தாலி, ஸ்பெயின், நெதர்லர்ந்து ஆகிய நாடுகள் இந்தியாவின் முக்கிய போட்டி நாடுகளாக இருக்கின்றன.

(4) ஆலைகளைப் புதுப்பிக்கும் பிரச்சினை : நாட்டின் பருத்தி ஆலைகளில் இயங்கும் இயந்திரங்கள் பழமையானவை களாகவும், பழுதுபட்டவையாகவும் இருக்கின்றன. தொடர்ந்து இது பல்லாண்டுகளாக ஒரு பெரும் பிரச்சினையாக இருந்து வருகின்றது. இயந்திரங்களைப் புதுப்பிக்க வேண்டியிருக்கின்றது. உற்பத்தித் திறனைப் பெருக்கி, உற்பத்திச் செலவைக் குறைக்க வேண்டுமானால் ஆலைகளையும் புதுப்பிக்கவேண்டியிருக்கின்றது. பெரும்பான்மையான ஆலைகளில் கையாளப்படும் தொழில் நுட்பங்கள் திறன் படைத்தவையாக இல்லை.

(5) நலங்குன்றிய ஆலைகள் (Sick Mills) : உற்பத்தித் திறன் குறைவாக இருப்பதாலும், உற்பத்திச் செலவு அதிகமாக இருப்ப தாலும் சுமார் 121 பருத்தி ஆலைகள் இன்று நலங்குன்றிய நிலையில் நட்டத்தில் இயங்கி வருகின்றன.

(6) மின்சாரப் பற்றாக்குறை : பருத்தி ஆலைத் தொழில் நாட்டில் நன்கு வளர்ச்சியுறாமல் இருப்பதற்கு நிலக்கரி, மின்சாரம் இவற்றில் எழும் பற்றாக்குறையும் ஒரு முக்கியக் காரணமாகும். நிலக்கரியும் தட்டுபாடில்லாமல் கிடைப்பதில்லை. நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் அவ்வப்போது மின்சார வெட்டு நடை முறையில் இருப்பதால் உற்பத்தி பெருமளவில் பாதிக்கப் படுகின்றது.

## சணல் தொழில்

நம் நாட்டில் சணல் தொழில் ஒரு முக்கியப் பேரளவுத் தொழிலாக இருந்து வருகின்றது. சணல் பண்டங்களின் ஏற்றுமதி மூலம் நாடு அதிக அளவில் அன்னியச் செலாவணியை ஈட்டி வருவதால் இத்தொழில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றது.

ஆனால் நாட்டு விடுதலைக்குப் பின்னர் இத்தொழிலில் நல்ல முன்னேற்றம் இல்லை. இத்தொழில் இன்னும் பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கின்றது. இன்று நாட்டில் ஏறக்குறைய 100 சணல் ஆலைகள் இருக்கின்றன; இவற்றில் பெரும்பான்மை மேற்கு வங்காளத்தில் இருக்கின்றன. சணல் ஆலைகள் சுமார் மூன்று இலட்சம் பேர்களுக்கு வேலை அளித்து வருகின்றன. இதைத் தவிர, சுமார் நான்கு மில்லியன் குடும்பங்கள் சணல் பயிரிடுவதில் ஈடுபட்டு வருகின்றன.

சணல் ஆலைத் தொழில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடங்கப்பட்டது. விசைக் கருவிகள் பொருந்திய முதல் சணல் ஆலை 1859ஆம் ஆண்டில் சாரம்பூர் என்னுமிடத்தில் நிறுவப் பட்டது. அதைத் தொடர்ந்து பத்தொன்பதாம் நூற்றாண்டில் இத்தொழில் நல்லமுறையில் வளர்ச்சியடைந்தது. புதிய ஆலைகள் பல துவக்கப்பட்டன. முதல் உலகப் போரும் இரண்டாம் உலகப் போரும் இத்தொழிலுக்கு நல்ல ஊக்கம் அளித்தன. ஆலைகளின் எண்ணிக்கையும் காலப்போக்கில் பெருகிவந்தது. நாடு பிரிவினை அடைந்தபோது மொத்தம் 106 ஆலைகள் இருந்தன.

பிரிவினைக்கு முன்னர் உலகில் சணல் உற்பத்தி செய்யும் ஒரே நாடாக இந்தியா இருந்து வந்தது. அன்றைய நிலையில் அன்னியச் செலாவணி ஈட்டுவதில் சணல் ஒரு முக்கியப் பண்டமாக இருந்தது. நாட்டின் மொத்த அன்னியச் செலாவணி ஈட்டுத் தொகையில் 25 சதவிகிதத்திற்குமேல் சணல் ஏற்றுமதியின் மூலம் கிடைத்து வந்தது. 1947ஆம் ஆண்டில் நடந்த நாட்டுப் பிரிவினை இத்தொழிலுக்கு மிகுந்த கேடு விளைவித்தது. பிரிவினையால் கச்சாச் சணல் கிடைப்பதில் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது. பிரிவினைக்கு முன்னர் சணல் பயிராகி வந்த மொத்த நிலப்பரப்பில் 70 சதவிகித அளவு இன்று பங்களாதேஷ் நாட்டின் வசம் இருக்கின்றது. கச்சாச் சணல் கிடைப்பதில் அன்று எழுந்த பற்றாக்குறை இன்றும்கூட நிறைவு செய்யப்படவில்லை. இதன் விளைவால் 1951, 1977 இவ்விரு ஆண்டுகளுக்கிடையே சணல் உற்பத்தியில் எந்தவித முன்னேற்றமும் இல்லை. சணல் ஏற்றுமதி இறங்கிக்கொண்டே வந்திருக்கின்றது. அண்மை ஆண்டுகளில், சராசரி ஆண்டொன்றுக்கு 125 கோடி ரூபாய் மதிப்புள்ள சணல் பண்டங்கள்தாம் ஏற்றுமதியாகி வருகின்றன. நாட்டுப் பிரிவினைக்கு முந்திய காலத்தில் நாட்டின் மொத்த ஏற்றுமதியில் 25 சதவிகித அளவில் இருந்த சணல் ஏற்றுமதி 1977-78ஆம் ஆண்டில் 2.2 சதவிகித அளவிற்குக் குறைந்துவிட்டது.

## சணல் ஆலைத் தொழில் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

பருத்தி ஆலைத் தொழிலைப் போலவே, சணல் ஆலைத் தொழிலும் பல இன்னல்களையும் இடர்ப்பாடுகளையும் எதிர் நோக்க வேண்டியிருக்கின்றது.

**கச்சாச் சணல் பற்றாக்குறை :** கச்சாச் சணல் பற்றாக்குறை ஒரு பெரும் பிரச்சினையாக இருந்துவருகின்றது. நாட்டில் 1951 ஆம் ஆண்டில் உற்பத்தியான மொத்த கச்சாச் சணல் உற்பத்தியின் அளவு 3 மில்லியன் பேல்களாகும். நாட்டில் அன்று இருந்த சணல் ஆலைகளின் மொத்தத் தேவையில் இது 40 சதவிகிதத்தைத் தான் பூர்த்தி செய்ய முடிந்தது. நாட்டில் கச்சாச் சணல் உற்பத்தியைப் பெருக்குவதற்காக அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்திருக்கின்றது. ஆனால், இருபத்தைந்து ஆண்டு காலத்திற்குப் பிறகும்கூடக் கச்சாச் சணல் உற்பத்தி 7 மில்லியன் பேல் அளவில்தான் இருக்கின்றது. கடந்த காலத்தில் சணல் மேற்கு வங்காளத்தில் மட்டுமே பயிராகி வந்தது. கச்சாச் சணலில் ஏற்பட்ட தட்டுப்பாட்டைத் தொடர்ந்து அஸ்ஸாம், பீஹார் மாநிலங் களில் சணல் பயிரை பரப்பும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. அண்மை ஆண்டுகளில் உத்தரப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம் இம்மாநிலங்களிலும் சணல் பயிர் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட மேம்பாட்டு நடவடிக் கைகளின் விளைவால் 1951-ல் 5.7 இலட்சம் ஹெக்டேர்களாக இருந்த சணல் பயிரின் கீழ் இருந்த நில அளவு 1976-77-ல் 11 இலட்சம் ஹெக்டேர்களாக உயர்ந்தது. நில அளவில் கணிசமான ஏற்றம் இருந்தாலும்கூட, சராசரி ஒரு ஹெக்டேரில் கிடைக்கக் கூடிய விளைச்சலில் நல்ல பெருக்கம் இல்லை.

**ஏற்றுமதியில் வீழ்ச்சி:** உலக சணல் சந்தையில் ஒரு காலத்தில் இந்தியா முற்றுரிமை பெற்றிருந்தது. இந்நிலை இன்று முற்றிலும் மாறிவிட்டது. நாட்டில் முதல் திட்டம் நிறைவேறிய காலத்தில் உலகின் மொத்த சணல் ஏற்றுமதியில் 80 சதவிகித அளவு இந்தியா விலிருந்து ஏற்றுமதியாயிற்று. அண்மை ஆண்டுகளில் இந்தியா வின் பங்கு 50 சதவிகிதத்திற்குக் குறைந்துவிட்டது.

**பதிலிகளின் (Substitutes) போட்டி:** ஒரு காலத்தில் சணல் பண்ட ஏற்றுமதியில் முற்றுரிமை பெற்றிருந்த இந்தியா காலப் போக்கில் அத் தனிச் சிறப்பிடத்தை இழந்துவிட்டது. இவ்விழப் பிற்கு இரண்டு காரணங்களைக் கூறலாம். பங்களாதேஷ், பிலிப் பைன்ஸ், பாகிஸ்தான், பிரேசில் இந்நாடுகள் சணல் உற்பத்தியில் முனைப்பாக ஈடுபட்டு சணல் பண்டங்களை ஏற்றுமதி செய்து

வருகின்றன. எனவே, இந்நாடுகள் இந்தியாவிற்கு போட்டி நாடுகளாக எழுந்துள்ளன. இது முதற் காரணமாகும். இரண்டாவதாக, சணலுக்குப் பதில் வேறு பொருள்கள் பழக்கத்திற்கு வந்திருக்கின்றன. பதிலிகளின் போட்டியும் கடுமையாக இருக்கின்றது. சணல் பைகளை உபயோகிப்பதற்குப் பதிலாகக் காகிதப் பைகள், பாலிதீன் பைகள் இன்று பயன்படுத்தப்படுகின்றன.

ஆலைகள் புதுப்பிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றன: பருத்தி ஆலைகளைப் போலவே, நாட்டில் சணல் ஆலைகளும் பழமையானவைகளாக இருக்கின்றன. இவை நீண்ட காலமாக ஓய்வின்றி உழைத்து வருகின்றன. ஆலை இயந்திரங்களில் பெரும்பான்மையும் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. இதன் விளைவால், ஆலைகளின் உற்பத்தித் திறன் மிகவும் குறைந்து விட்டது. உற்பத்திச் செலவும் உயர்ந்துவிட்டது.

## சர்க்கரை ஆலைத் தொழில்

நாட்டில் இயங்கிவரும் பேரளவுத் தொழில்களுள் சர்க்கரை ஆலைத் தொழில் முக்கியம் வாய்ந்த ஒன்றாகும். பருத்தி ஆலைத் தொழிலுக்கு அடுத்தபடியான பெருந் தொழிலாக இது இருந்து வருகின்றது. இத்தொழிலின் மொத்த முதலீட்டுத் தொகை 700 கோடி ரூபாய்க்கும் மேலாக இருக்கின்றது. சர்க்கரை ஆலைகளில் மொத்தம் 3 இலட்சம் தொழிலாளர்கள் வேலையில் இருக்கின்றனர். ஆலைகளில் நேரிடையாக வேலைக்கு இருப்பவர்களன்றி பல இலட்சக் கணக்கானவர்கள் கரும்பு சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். நாட்டில் இன்று ஏறக்குறைய 25 இலட்சம் கரும்பு சாகுபடியாளர்கள் இருக்கின்றனர். கரும்பு ஆலைகளின் வளர்ச்சியை சார்ந்தே இவர்களுடைய நல்வாழ்வும் அமையும். இன்று நாட்டில் 300-க்கும் மேற்பட்ட கரும்பு ஆலைகள் இருக்கின்றன.

கரும்பு ஆலைத் தொழில் இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் தான் நிறுவப்பட்டது. 1932ஆம் ஆண்டு முதற்கொண்டுதான் இத்தொழில் முறையான வளர்ச்சியடையத் தொடங்கியது. 1932ஆம் ஆண்டுக்கு முன்னர் சர்க்கரை நாட்டில் இறக்குமதியாகி வந்தது. அரசாங்கம் இறக்குமதியின்மீது எவ்விதத் தடையும் விதிக்கவில்லை; தீர்வைகளும் விதிக்கப்படவில்லை. வெளி நாடுகளின் போட்டி இருந்து வந்ததால் உள்நாட்டில் சர்க்கரை ஆலைத் தொழில் வளர்ச்சியடைய முடியவில்லை. 1932ஆம் ஆண்டில் சர்க்கரை ஆலைகளுக்குத் தொழிற்காப்பு (Protection) அளிக்கப்பட்டது. இறக்குமதியாகும் சர்க்கரையின் மீது அரசு தடைகளை விதித்தது. இதனால் சர்க்கரை ஆலைகளுக்கு

நல்ல ஊக்கம் கிடைத்தது. இறக்குமதியின் மீது தீர்வைகள் விதிக்கப்பட்டதால், பல புதிய சர்க்கரை ஆலைகள் நாட்டில் நிறுவப்பட்டன. சர்க்கரை உற்பத்தியில் நல்ல ஏற்றமும் இருந்தது. 1936-37ல் சர்க்கரையில் நாடு தன்னிறைவு நிலையை அடைந்தது. அதற்குப் பின்னர் எழுந்த இரண்டாம் உலகப் போர் சர்க்கரைத் தொழிலுக்கு நல்ல ஊக்கமளித்தது.

திட்ட காலத்தில் நாட்டின் சர்க்கரை உற்பத்தியில் நல்ல முன்னேற்றம் இருந்தது. 1950 - 51ல் நாட்டில் மொத்தம் 138 சர்க்கரை ஆலைகள் இருந்தன. ஆலைகளின் எண்ணிக்கை 1976 - 77ல் 292-க்கு உயர்ந்தது. இதைத் தொடர்ந்து சர்க்கரை உற்பத்தியிலும் நல்ல பெருக்கம் இருந்தது. 1950 - 51ல் மொத்த சர்க்கரை உற்பத்தி 1.1 மில்லியன் டன் அளவில் இருந்தது. 1977 - 78ல் உற்பத்தி அளவு 6.3 மில்லியன் டன்னுக்கு உயர்ந்தது.

கடந்த காலத்தில் சர்க்கரை ஆலைகள் சில குறிப்பிட்ட மா நிலங்களில் செறிந்து இருந்தன. 1936 - 37ல் நாட்டின் மொத்த சர்க்கரை உற்பத்தியில் ஏறக்குறைய 85 சதவிகிதம் உத்தரப் பிரதேசம், பீஹார் இரு மாநிலங்களிலிருந்து கிடைத்தது. ஆனால் பிந்திய ஆண்டுகளில் பிற மாநிலங்களிலும் சர்க்கரை ஆலைகள் தொடங்கப்பட்டன. மகாராஷ்டிரம், தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம் இம்மாநிலங்களில் இன்று சர்க்கரை கணிசமான அளவில் உற்பத்தியாகின்றது.

நம் நாட்டின் சர்க்கரை ஆலைத் தொழிலில் ஒரு சிறப்பியல்பைக் காணலாம். சர்க்கரை ஆலைத் தொழிலில் கூட்டுறவுத் துறை அதிக ஈடுபாடு கொண்டுள்ளது. இன்று பல ஆலைகள் கூட்டுறவு அடிப்படையில் இயங்கிவருகின்றன. இன்று நாட்டில் உற்பத்தியாகும் மொத்த சர்க்கரையில் ஏறத்தாழ 40 சதவிகித அளவு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலிருந்து கிடைக்கின்றது.

தமிழ்நாட்டில் இருபது சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. நாட்டின் மொத்த சர்க்கரை உற்பத்தியில் கணிசமான அளவு தமிழ்நாட்டிலிருந்து கிடைக்கின்றது. 1973-74ல் மொத்த உற்பத்தியில் 11 சதவிகிதம் தமிழ்நாட்டிலிருந்து கிடைத்தது. ஆனால் காலப்போக்கில் தமிழ்நாட்டின் பங்குக் குறைந்துவிட்டது. 1976 - 77ல் மொத்த உற்பத்தியில் 6.6 சதவிகித அளவுதான் தமிழ்நாட்டிலிருந்து கிடைத்தது. மேலும், கரும்பிலிருந்து கிடைக்கக் கூடிய சர்க்கரையின் விகிதமும் தமிழ்நாட்டில் உயர்வாக இல்லை. 1976 - 77ல் கிடைத்த சராசரி விகிதம் 8.43 ஆகும்.

## சர்க்கரை ஆலைத் தொழில் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

சர்க்கரை ஆலைத் தொழிலிலும் சில பிரச்சினைகள் இருக்கின்றன. சுத்திகரிக்கப்பட்ட சர்க்கரை செய்ய ஆலைகள் கரும்பைப் பயன்படுத்துகின்றன. நாட்டு வெல்லம் தயார் செய்யவும் கரும்பு பயன்படுத்தப்படுகின்றது. வெல்லம் விலை உயர்வாக இருந்தால், தாங்கள் விளைவித்த கரும்பை விவசாயிகள் வெல்ல உற்பத்திக்கு அதிக அளவில் திருப்பிவிடுகின்றனர். இதனால் சர்க்கரை ஆலைகளுக்குத் தேவையான அளவிற்குக் கரும்பு கிடைப்பதில்லை. சர்க்கரை ஆலைகளுக்கு நிலையாகத் தொடர்ந்து கரும்பு கிடைப்பதில் உறுதியான நிலை இல்லை.

நம் நாட்டில் சராசரி ஒரு ஹெக்டேருக்குக் கிடைக்கும் கரும்பின் அளவு குறைவாக இருக்கின்றது. சராசரி ஒரு ஹெக்டேர் நில அளவில் 42 டன் கரும்பு கிடைக்கிறது என்று கணக்கிட்டிருக்கின்றனர். பிற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது இந்த விளைச்சல் மிகக் குறைவாக இருக்கின்றது என்று கூற வேண்டும்.

நம் நாட்டில் கரும்பிலிருந்து கிடைக்கும் சர்க்கரை அளவும் குறைவாக இருக்கின்றது. சராசரி அளவு 10 சதவிகிதம்தான் இருக்கின்றது. அதாவது, 100 டன் கரும்பைப் பிழிந்தால் 10 டன் சர்க்கரை கிடைக்கின்றது. பிற நாடுகளில் இந்த அளவு அதிகமாக இருக்கின்றது.

## சிமெண்டு தொழில்

கட்டட வேலைகளுக்குச் சிமெண்டு அதிக அளவில் தேவைப் படுகின்றது. நம் நாட்டில் திட்ட காலத்தில் கட்டட வேலைகள் அதிக அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே சிமெண்டுக்கு இருக்கும் தேவையும் பெருக்கமடைந்து வருகின்றது. இருந்தாலும், நம் நாட்டில் தலா நபருக்குச் சிமெண்டு நுகர்வு இன்னும் மிகக் குறைவாகவே இருக்கின்றது. ஆண்டொன்றுக்குத் தலா நபர் நுகர்வு 26 கிலோ என்று கணக்கிட்டிருக்கின்றனர். பொருளாதாரத் துறையில் நல்ல வளர்ச்சியடைந்துள்ள நாடுகளில் தலா நபர் நுகர்வு உயர்வாக இருக்கின்றது. தலா நபர் நுகர்வு ஐக்கிய அமெரிக்காவில் 342 கிலோ; ஜப்பானில் 365 கிலோ; இங்கிலாந்தில் 305 கிலோ; மேற்கு ஜெர்மனியில் 563 கிலோ; ஸ்விட்சர்லாந்தில் 715 கிலோவாக உள்ளது.

நாட்டில் உள்ள சிமெண்டு தொழிற்சாலைகளில் மொத்தம் ஓர் இலட்சம் தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். இத்

தொழிலில் முதலீடு செய்யப்பட்டுள்ள மொத்தத் தொகை ரூ. 300 கோடியாகும்.

திட்ட காலத்தில் நாட்டின் சிமெண்டு தொழிலில் நல்ல முன்னேற்றம் இருந்திருக்கின்றது. நாட்டின் மொத்த சிமெண்டு உற்பத்தி 1950 - 51ல் 2.7 மில்லியன் டன்னாக இருந்தது. உற்பத்தி 1977 - 78ல் 19 மில்லியன் டன்னுக்கு உயர்ந்தது. ஆனால் தேவையின் பெருக்கம் இதைவிட அதிகமாக இருந்திருக்கின்றது. எனவே, நாட்டில் எப்பொழுதும் சிமெண்டுக்குப் பற்றாக்குறை எழுந்த வண்ணம் இருக்கிறது. பற்றாக்குறையை நிறைவு செய்ய அயல் நாடுகளிலிருந்து சிமெண்டு இறக்குமதியாகின்றது. 1977 - 78ஆம் ஆண்டில் சிமெண்டுக்கு இருந்த தேவையின் அளவு 22 மில்லியன் டன்னாகும்; ஆனால் உள்நாட்டு உற்பத்தி 19 மில்லியன் டன் அளவில் தான் இருந்தது.

தமிழ்நாட்டில் இன்று ஏழு சிமெண்டு தொழிற்சாலைகள் இருக்கின்றன. அவற்றுள் ஆறு தனியார் துறையிலும்; ஒன்று அரசுத் துறையின்கீழும் செயல்பட்டு வருகின்றன. நாட்டில் இருக்கும் அனைத்து சிமெண்டு தொழிற்சாலைகளும் முழுமையாக வேலை செய்தால் மொத்தம் 26 மில்லியன் டன் சிமெண்டை உற்பத்தி செய்யலாம். இந்த மொத்த உற்பத்திச் சக்தியில் 14 சதவிகிதம் தமிழ்நாட்டில் இருக்கின்றது. 1977-ல் தமிழ்நாட்டில் 3.2 மில்லியன் டன் சிமெண்டு உற்பத்தி செய்யப்பட்டது.

சிமெண்டு தொழிற்சாலைகள் குறிப்பிட்ட இடங்களில் மட்டும் செறிந்து இல்லாமல் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பரவலாக இருக்கின்றன. சுண்ணாம்புக்கல், களிமண், களிக்கல் இவை மூன்றும் சிமெண்டு தயாரிப்பதற்கு மூலப்பொருள்களாகப் பயன் படுத்தப்படுகின்றன. இம்மூலப்பொருள்கள் பளுவாக இருப் பதால் இவற்றை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குத் தூக்கிச் செல்வதற்கு அதிகச் செலவு ஆகின்றது. மேலும், இவற்றை வெகு தொலைவில் உள்ள இடங்களுக்கு எடுத்துச் செல்லும்போது இவை எடையை இழக்கின்றன. நாட்டின் பல பாகங்களிலும் சுண்ணாம்புக் கற்கள் போதிய அளவில் கிடைக் கின்றன. இக்காரணங்களால் சிமெண்டு தொழிற்சாலைகள் மூலப் பொருள்கள் கிடைக்கும் இடத்திற்கு அருகாமையிலேயே நிறுவப் படுகின்றன.

நாட்டில் சிமெண்டுக்கு இருக்கும் தேவை பெருக்கமடைந்து கொண்டே இருக்கின்றது. இதனால், சிமெண்டு அளிப்பில் பெருமளவிற்குப் பற்றாக்குறை இருந்து வருகின்றது. இந்நிலை

யிலும்கூடச் சிமெண்டு தொழிற்சாலைகள் முழுச் சக்தியையும் பயன்படுத்தும் அளவிற்குச் செயல்படுவதில்லை. இருக்கும் சக்தியில் பயன்படுத்தப்படும் அளவு சாதாரணமாக 90 சதவிகிதத்திற்கும் குறைவாகத்தான் இருக்கின்றது. இதற்குப் பின்வரும் காரணங்களைக் குறிப்பிடலாம் : (1) மின்சாரத் தடை; (2) நிலக்கரி வழங்கலில் பற்றாக்குறை; (3) போக்குவரத்து வசதியின்மை.

## சிறு தொழில்கள்

### சிறு தொழிலின் விளக்கம்

சிறு தொழிலுக்கான விளக்கம் என்ன? பேரளவுத் தொழில்கள், சிறு தொழில்கள் இவ்விரண்டையும் எந்த அடிப்படையில் வேறுபடுத்துவது? சிறு தொழிலுக்குப் பல விளக்கங்கள் உள்ளன. தளவாடங்கள், இயந்திரங்கள் இவற்றின் முதலீட்டளவு ரூ. 10 இலட்சத்திற்கு மேற்படாமல் இருந்தால் அத்தொழிலை சிறு தொழில் வகையில் சேர்க்கலாம் என்பது இன்று வழக்கத்தில் உள்ள விளக்கமாகும். முதலீட்டளவு ரூ. 10 இலட்சத்திலிருந்து 15 இலட்சம் வரை இருந்தால் அத்தொழில் துணைத் தொழில் (Ancillary Industry) வகையில் சேர்க்கப்படுகின்றது. முதலீட்டளவு ரூ. 10 இலட்சத்திற்கும் 25 இலட்சத்திற்கும் இடையில் இருந்தால் அத்தொழில் நடுத்தரத் தொழில் (Medium Industry) என்று அழைக்கப்படுகின்றது. மூலதன முதலீட்டளவு ரூ. 25 இலட்சத்திற்கும் மேலாக இருந்தால் அத்தொழில் ஒரு பேரளவுத் தொழிலாகக் கருதப்படுகின்றது.

சிறு தொழில்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒரு வகையானது தொழிற் கூடங்களில் அமைந்த சிறு தொழில்களாகும். பிறிதொரு வகை குடிசைத் தொழில்களாகும். குடிசைத் தொழிலில், பண்ட உற்பத்தி உடலுழைப்பின் துணையுடன் நடைபெறுகின்றது. இயந்திரங்கள் பயன்படுத்தப்படுவதில்லை. அப்படிப் பயன்படுத்தப்பட்டாலும் அவை மிகக் குறைந்த அளவில் தான் பயன்படுத்தப்படும். தொழிற்கூடம் ஒன்றைத் தனியாக அமைக்காமல் குடியிருக்கும் வீடுகளில் பண்ட உற்பத்தி நடக்கும். குடிசைத் தொழில் உற்பத்தியில் மூலப் பொருள்கள் தொலைவிலிருந்து வருவதில்லை. உள்ளூரில் அல்லது அருகாமையில் இருக்கும் இடங்களில் கிடைக்கும் மூலப்பொருள்களே பெரும்பாலும் உற்பத்தியில் பயன்படுத்தப்படுகின்றன. கைத்தொழில் பண்டங்களும் பெரும்பாலும் உள்ளூரிலேயே விலையாகின்றன. குடும்பத்தில் உள்ளவர்களுடைய உழைப்பின் மூலமாகவே பெரும்பாலும் குடிசைத் தொழில் பண்டங்கள் உற்பத்தியாகின்றன.

கூலி கொடுத்துத் தொழிலாளர்களை அமர்த்திக் கொள்ளும் முறை குடிசைத் தொழிலில் அதிகமாக இருப்பதில்லை. ஆனால் சிறு தொழில்கள் கைத் தொழில்களிலிருந்து பல வழிகளிலும் வேறுபட்டிருக்கின்றன. ஆலைத் தொழில் சிற்றளவில் இருந்தால் அதனை சிறு தொழில் என்றழைக்கின்றோம். அளவில் சிறியதாக இருக்கின்றது என்பதைத் தவிர மற்ற இனங்களில் உற்பத்தி முறையில் பேரளவுத் தொழிலுக்கும் சிறு தொழிலுக்கும் அதிக வேற்றுமை இல்லை. தொழிலில் இயந்திரங்கள் பயன்படுத்தப் படுகின்றன. மின்சாரம் பயன்படுத்தப்படுகின்றது. வேலை செய்வோர் கூலி பெறும் தொழிலாளர்களாக இருக்கின்றனர்.

## சிறு தொழில்கள் வளர்ச்சிக்கு அரசு நடவடிக்கைகள்

நம் நாட்டில் சிறு தொழில்களுக்கு முக்கிய இடமளிக்கப்பட்டிருக்கிறது. நாட்டில் சிறு தொழில்களை வளர்க்க மத்திய அரசும் மாநில அரசுகளும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. சிறு தொழில்களுக்கு நிதி உதவி அளிப்பதற்கென்று தனி நிறுவனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சிறு தொழில்களுக்குத் தனிச் சலுகைகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. குறிப்பிட்ட சில பொருள்களைச் சிறு தொழில்களுக்காக அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இப்பொருள்களைச் சிறு தொழில்கள் மட்டுமே உற்பத்தி செய்யலாம். இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பொருள்களின் எண்ணிக்கையை அவ்வப்போது அரசு உயர்த்திக் கொண்டு வந்திருக்கின்றது. இன்று 800 பொருள்கள் இவ்வாறு சிறு தொழில்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றன. சிறு தொழில்களை வளர்ப்பதால் நாட்டிற்குப் பல நன்மைகள் கிடைக்கின்றன. இக்காரணத்தினால்தான் அரசு சிறு தொழில் வளர்ச்சிக்குப் பெருமளவிற்கு ஊக்கமளித்து வருகின்றது. சிறு தொழில்களுக்கு இருக்கும் தனிச் சிறப்புகளைக் கீழே காணலாம்.

## சிறு தொழில்களின் தனிச் சிறப்புகள்

(1) வேலைப் பெருக்கம்: பேரளவுத் தொழில்களுடன் ஒப்பிட்டு நோக்கும்போது சிறு தொழில்கள் அதிக அளவில் வேலை வாய்ப்பு அளிக்கின்றன. பொருளியலில் நுணுக்கமாகக் கூறினால், தொழிலாளர்—முதலீட்டு விகிதம் (Labour—investment ratio) சிறு தொழில்களில் உயர்வாக இருக்கின்றது. ஒரு குறிப்பிட்ட அளவு முதலீட்டில் எத்தனை நபர்களுக்கு வேலை கிடைக்கும் என்னும் கருத்தைத்தான் தொழிலாளர்—முதலீட்டு விகிதம் என்றழைக்கின்றோம். ஒரு குறிப்பிட்ட சிறு தொழிலைத் தொடங்க மொத்தம் ரூ. 5 இலட்சம் முதலீடு செய்ய வேண்டும் என்று

வைத்துக் கொள்வோம். இத்தொழில் செயல்படத் தொடங்கியதும் 50 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்ளும் என்றும் வைத்துக் கொள்வோம். இந்த எடுத்துக்காட்டில் தொழிலாளர்—முதலீட்டு விகிதம் 1:10000 ஆகும். சிறு தொழில்களில் தொழிலாளர்—முதலீட்டு விகிதம் பொதுவாக உயர்வாக இருக்கும் என்று கருதப்படுகின்றது. எனவே வேலையில்லாத் திண்டாட்டம் பெரும் பிரச்சினையாக உள்ள நம் நாட்டில் அதிக வேலை வாய்ப்பு அளிக்கும் சிறு தொழில்கள் விரும்பத்தக்கதாகும். சிறு தொழில்களை ஊக்கமளித்து வளர்ப்பதன் வாயிலாக நாட்டின் வேலையில்லாப் பிரச்சினைக்கு ஓரளவிற்கு வழிவகுக்கலாம்.

(2) குறைந்த மூலதன, முதலீட்டளவு : நம் நாட்டில் மூலதனத்தின் அளிப்பு (Supply of Capital) குறைவாக இருக்கின்றது. ஆனால் தேவை அதிகமாக இருக்கின்றது. பேரளவுத் தொழில்களை நிறுவ வேண்டுமென்றால் மூலதனம் அதிக அளவில் தேவைப்படுகின்றது. ஆனால் சிறு தொழில்களைத் தொடங்குவதற்குக் குறைந்த அளவு முதலீடுதான் தேவைப்படுகின்றது. எனவே, மூலதன ஆக்கம் குறைவாக உள்ள நம் நாட்டில் பேரளவுத் தொழில்களைவிடச் சிறு தொழில்கள் விரும்பத் தக்கவையாக இருக்கின்றன.

(3) பயிற்சி இல்லாதவர்களுக்கு வேலை வாய்ப்பு : பேரளவுத் தொழில்களில் நல்ல தொழில் நுட்பம் படைத்தவர்களும் நல்ல தொழிற் பயிற்சி உள்ளவர்களும் தேவைப்படுகின்றனர். நல்ல திறமையும், தொழில் நுட்ப அறிவும் படைத்தவர்கள் ஒரு குறிப்பிட்ட அளவுக்குத்தான் நாட்டில் கிடைக்கின்றனர். அதே சமயத்தில் பயிற்சியும் தனித் திறமையும் இல்லாதவர்கள் நாட்டில் எண்ணிக்கையற்ற அளவில் கிடைக்கின்றனர். இவ்வகையைச் சேர்ந்தவர்களிடையேதான் நாம் வேலையின்மையையும் (Un-employment) வேலைக் குறைவையும் (Under employment) அதிக அளவில் காண்கின்றோம். சிறு தொழில்களில் பயிற்சி இல்லாதவர்கள்கூட வேலைக்கு அமர வாய்ப்பு உண்டு. எனவே சிறு தொழில்களை வளர்ப்பதன் வாயிலாகத் திறமை குறைந்த, போதிய பயிற்சி பெறாத நபர்களுக்கும் வேலை வாய்ப்பைப் பெருக்கலாம்.

(4) அன்னியச் செலாவணித் தேவை குறைவு : சிறு தொழில்கள் உள்நாட்டில் உற்பத்தியாகும் இயந்திரங்கள், தளவாடங்கள், தொழிற்கருவிகள் இவற்றையே பெரும்பாலும் பயன்படுத்துகின்றன. இறக்குமதிப் பண்டங்களை சிறு தொழில்கள் அதிகம் எதிர்பார்ப்பதில்லை. பேரளவுத் தொழில்களுக்கு நுட்பம் நிறைந்த இயந்திரங்களும் கருவிகளும் தேவைப்படுகின்றன.

இவற்றுள் பெரும்பான்மையானவை அயல் நாடுகளிலிருந்து இறக்குமதியாகின்றன. இவற்றை உள் நாட்டிலேயே உற்பத்தி செய்யும் அளவிற்கு இன்னும் தொழில் வளர்ச்சி ஏற்படவில்லை. எனவே, சில தொழில்கள் வளர்ச்சியடைவதால் அன்னியச் செலாவணிக்கு இருக்கும் தேவை பெருக்கமடைவதில்லை.

(5) பேரளவுத் தொழில்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது சிறு தொழில்களின் கருக்காலம் (gestation period) குறைவாக இருப்பதைக் கண்ணுறலாம். ஒரு தொழிலில் முதலீடு செய்யும் நேரத்திற்கும் அம்முதலீட்டின் வாயிலாகப் பண்ட உற்பத்தி நிகழும் நேரத்திற்கும் இடையே உள்ள காலத்தைத்தான் கருக்காலம் என்றழைக்கிறோம். முதலீடு செய்த சிறு கால இடைவெளிக்குப்பிறகு சிறு தொழில்களில் பண்டங்கள் உற்பத்தி யாகி சந்தைக்கு வருகின்றன. பேரளவுத் தொழில்களில் பண்டங்கள் ஆலைகளிலிருந்து வெளிவர வெகு காலம் காத்திருக்க வேண்டும். இக்காரணத்தால் சிறு தொழில்களில் முதலீடு செய்யும் போது நாட்டில் பணவீக்கம் அதிகமாக ஏற்படுவதில்லை.

(6) தொழிற் செறிவு குறைவு: தொழில்கள் நாட்டின் குறிப்பிட்ட பகுதிகளில் மட்டும் நிறைந்து இருந்தால் அந்நிலையை தொழில் செறிவுற்றிருக்கின்றது என்று கூறலாம். இதற்கு மாறாகத் தொழில்கள் நாடெங்கிலும் பரவிக்கிடந்தால் தொழில்கள் பரந்து இருக்கின்றன என்று கூறலாம். பல காரணங்களால் பேரளவுத் தொழில்கள் சில குறிப்பிட்ட இடங்களில் மட்டும் செறிந்திருக் கின்றன. நம் நாட்டில் பேரளவுத் தொழில்கள் பம்பாய், கல்கத்தா, சென்னை போன்ற பெருநகர் பகுதிகளிலேயே அதிகமாக இருக்கின்றன. சிறு தொழில்களைப் பொறுத்தவரையில் அவற்றை எல்லா இடங்களிலும் தொடங்கலாம். தொழில் வளர்ச்சி நாட்டிற்கும் மக்களுக்கும் நன்மை பயக்க வேண்டுமெனில் தொழில்கள் எல்லாப் பகுதிகளிலும் பரவலாக அமைந்திட வேண்டும். இக்கண்ணோட்டத்தில் நோக்கினால் நாட்டின் எல்லா இடங்களிலும் சிறு தொழில்களை அமைக்க வாய்ப்பு இருக்கின்றது.

(7) செல்வப் பகிர்வுக்கு வாய்ப்பு: நாட்டின் வருமானப் பகிர்வில் (Distribution of Income) பெருத்த ஏற்றத்தாழ்வுகள் இருக்கின்றன என்று அத்தியாயம் 4-ல் பயின்றோம். வருமானத்தைப் போலவே, செல்வமும் (wealth) ஏற்றத்தாழ்வான முறையில் பங்கீடு செய்யப்பட்டிருக்கிறது. செல்வத்தின் பெரும் பகுதி ஒருசிலர் கைவசம் சிக்குண்டு கிடக்கிறது. இந்நிலையை மாற்றி செல்வம் எல்லோருக்கும் கிடைக்கும் வகையில் பங்கீடு செய்யப்பட வேண்டும் என்பது நம்முடைய அரசின் முக்கியக்

குறிக்கோளாகும். இக்குறிக்கோள் நிறைவேறுவதற்குச் சிறு தொழில்கள் ஏற்புடையவையாக இருக்கின்றன.

முடிவாக, பேரளவுத் தொழில்கள் பெருகும்போது அதனுடன் இணைந்து கிளைக்கும் சில சமுகப் பிரச்சினைகள் சிறு தொழில் களை வளர்க்கும்போது எழுவதில்லை. பேரளவுத் தொழில்கள் சுற்றுச் சூழலை கேடுறச் செய்கின்றன. புகை போக்கிகள் காற்றை அசுத்தப்படுத்துகின்றன. கழிவுநீர், குடிநீரைப் பாழ் படுத்துகின்றது. பேரளவுத் தொழில்களைச் சுற்றிலும் அருவருக்கத் தக்க வகையில் நெருக்கமாகக், குடிசைகள் அமைந்திருப்பதை நாம் காண்கிறோம். இப்பகுதிகளில் சுகாதார வசதிகள் அறவே இருப்பதில்லை. சிறு தொழில்கள் சுற்றுச் சூழலை இந்த அளவிற்கு பாழ்படுத்துவதில்லை.

## சிறு தொழில்களின் வளர்ச்சி

திட்டக் காலத்தில் நாட்டில் சிறு தொழில்களில் நல்ல வளர்ச்சி இருந்து வந்திருக்கின்றது. 1972ஆம் ஆண்டில் மொத்தம் 3,18,000 சிறு தொழில்கள் இருந்தன. சிறு தொழில்கள் இன்று நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் இருக்கின்றன. ஆனால் சில மாநிலங்களில் அவை அதிக அளவில் இருக்கின்றன. நாட்டில் இருக்கும் மொத்த சிறு தொழில்களில் 60 சதவிகிதம் மஹாராஷ்டிரம், தமிழ்நாடு, மேற்கு வங்காளம், உத்தரப் பிரதேசம், பஞ்சாப், குஜராத் மாநிலங்களில் செறிந்து இருக்கின்றன. சிறு தொழில்கள் வாயிலாக உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களின் மதிப்பு 1972ஆம் ஆண்டில் ரூ. 4200 கோடி அளவில் இருந்தது. சிறு தொழில்களில் முதலீடு செய்யப்பெற்றிருந்த மொத்தத் தொகை அந்த ஆண்டில் ரூ. 500 கோடியாகும். நாட்டில் ஏற்றுமதியிலும் சிறு தொழில்கள் முக்கிய அங்கம் வகிக்கின்றன. 1972-ல் ரூ. 160 கோடி பெறுமானமுள்ள சிறு தொழில்கள் தயாரித்த பண்டங்கள் நாட்டிலிருந்து ஏற்றுமதியாயின. ஏற்றுமதிப் பண்டங்களில் தயாரிக்கப்பட்ட ஆடைகள், பதப்படுத்தி டப்பாக் களில் அடைக்கப்பட்ட மீன், உணவுப் பண்டங்கள், தோல் பண்டங்கள் முக்கியமானவையாகும். நம் நாட்டில் சிறு தொழில்கள் உற்பத்தி செய்யும் பண்டங்களை இறக்குமதி செய்யும் முக்கியமான நாடுகள் ஐக்கிய அமெரிக்கா, இங்கிலாந்து, ருஷ்யா, ஜப்பான் ஆகும்.

## தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி

கடந்த முப்பதாண்டுக் காலத்தில் தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு சிறப்பான வகையில் முன்னேற்றம் கண்டிருக்கிறது.

அடிப்படைத் தேவையான பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழில்கள் (Basic Goods Industries), மூலதனப் பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழில்கள் (Capital Goods Industries), இடை உற்பத்திப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்கள் (Intermediate Goods Industries), நுகர்வுப் பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழில்கள் (Consumer Goods Industries) ஆகிய நான்கு முக்கியப் பிரிவுகள் ஒவ்வொன்றிலும் நல்ல முன்னேற்றம் இருந்திருக்கின்றது. குறிப்பிட்ட சில அளவுகோல்களைக் கையாண்டு அவற்றின் அடிப்படையில் நம் மாநிலத்தில் எந்த அளவிற்குத் தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கின்றது என்பதனை அறிய முனைவோம். நாம் உபயோகிக்க இருக்கும் அளவுகோல்கள் : (1) மாநில வருமானத்தில் (State Income) தொழில் உற்பத்தியின் பங்கு; (2) தொழில் உற்பத்திக் குறியீட்டு எண்கள்; (3) தொழிற் கூடங்களின் எண்ணிக்கை; (4) தொழிற்கூடங்களின் வேலையில் இருப்பவர்களுடைய எண்ணிக்கை. பொதுவாக இந்நான்கு அளவுகோல்களைப் பயன்படுத்தித்தான் ஒரு நாட்டின் அல்லது ஒரு நாட்டுப் பகுதியின் தொழில் வளர்ச்சியை மதிப்பீடு செய்கின்றனர்.

### 1. மாநில வருமானத்தில் தொழில் உற்பத்தியின் பங்கு

நாட்டு வருமானம், மாநில வருமானம் இவற்றிற்கான தெள்ளிய விளக்கத்தை அத்தியாயம் 4-ல் பயின்றோம். நாட்டு மாநில வருமானம் ஒரு நீரோடைபோல் தொடர்ந்து ஓடிக் கொண்டிருக்கின்றது; நாட்டின் மாநிலத்தின் உற்பத்திப் பிரிவுகள் வேளாண்மை, தொழில் பலவும் பல வாய்க்கால்களைப் போன்று நீரோடையில் வந்து கலக்கின்றன. ஒரு நாட்டில் தொழில் வளர்ச்சி ஏற்பட்டால், அந்நாட்டின் நாட்டு வருமானத்தில் தொழில் உற்பத்தியின் பங்கு ஆண்டாண்டுக்கு உயர்ந்து கொண்டே செல்லும் என்று இவ்வத்தியாயத்தின் முற்பகுதியில் படித்தோம். இக்குறிப்பைக் கருத்திற்கொண்டு நம் மாநிலத்தை அணுகிப் பார்க்கும்போது மாநில வருமானத்தில் தொழில் உற்பத்தியின் பங்கு 1950-51, 1977-78 இவ்விரண்டிற்கிடைப்பட்ட காலத்தில் கணிசமான அளவில் உயர்ந்துகொண்டு வந்திருக்கின்றது என்று அறிகின்றோம். 1950-51-ல் அன்றாட விலையிலான மாநில வருமானம் ரூ. 616 கோடி அளவில் இருந்தது. தொழில் உற்பத்தியின் மதிப்பு ரூ. 75 கோடியாகும். அதாவது, மாநில வருமானத்தில் 12 சதவிகிதம் தொழில் உற்பத்தியின் வாயிலாகக் கிடைத்தது. 1977-78ஆம் ஆண்டில் தொழில் உற்பத்தியின் மதிப்பு 25 சதவிகித அளவுக்கு உயர்ந்தது. 1950-

51-ல் ரூ. 75 கோடியாக இருந்த தொழில் உற்பத்தி 1977-78-ல் ரூ. 1171 கோடிக்கு உயர்ந்தது.

### பட்டியல் 7—2

மாநில வருமானத்தில் (அன்றாட விலையில்) தொழில் உற்பத்தியின் பங்கு

| ஆண்டு | தொழில் உற்பத்தியின் மதிப்பு | மாநில மொத்த வருமானம் (கோடி ரூபாயில்) | மாநில வருமானத்தில் தொழில் உற்பத்தியின் பங்கு (சதவிகிதத்தில்) |
|---|---|---|---|
| 1950-51 | 75.11 | 615.77 | 12.20 |
| 1955-56 | 115.96 | 769.00 | 15.07 |
| 1960-61 | 174.72 | 1111.85 | 15.71 |
| 1965-66 | 306.28 | 1494.22 | 20.49 |
| 1970-71 | 527.25 | 2404.05 | 21.93 |
| 1975-76 | 904.46 | 3697.86 | 24.46 |
| 1977-78 | 1171.21 | 4692.00 | 24.96 |

## 2. தொழில் உற்பத்திக் குறியீட்டு எண்கள்

தொழில் உற்பத்தியில் இருக்கும் வளர்ச்சியைத் தொழில் உற்பத்திக் குறியீட்டு எண்கள் சதவிகிதக் காலத்தில் கணித்துக் கொடுக்கின்றன. நம் மாநிலத்தில் தொழில் உற்பத்தியில் நீண்ட கால அளவில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களைத் தொழில் உற்பத்திக் குறியீட்டு எண்களின் துணையுடன் அறிய முயலலாம். தமிழ்நாட்டு

### பட்டியல் 7—3

தொழில் உற்பத்திக் குறியீட்டு எண்கள்—தமிழ்நாடு (அடிப்படை ஆண்டு 1960 = 100)

| ஆண்டு | குறியீட்டு எண்கள் |
|---|---|
| 1960 | 100.0 |
| 1965 | 148.6 |
| 1970 | 182.5 |
| 1975 | 196.6 |
| 1977 | 216.6 |

அரசின் புள்ளி விவரத் துறை தொழில் உற்பத்திக் குறியீட்டு எண்களைத் தயாரித்து வருகின்றது. சுமார் 17 ஆண்டு காலத்தில் தமிழ்நாட்டின் தொழில் உற்பத்தி இரண்டு மடங்காகப் பெருகி இருக்கின்றது. 1960-ல் 100 புள்ளியாக இருந்த தொழில் உற்பத்திக் குறியீட்டு எண்கள் 1977-ல் 216.6 புள்ளியாக உயர்ந்தன. தொழில் உற்பத்தியில் இருந்த மாற்றங்களைப் பட்டியல் 7—3-ல் காணலாம்.

## 3. தொழிற்கூடங்களின் எண்ணிக்கை

தொழிற்கூடங்களின் எண்ணிக்கையில் இருக்கும் பெருக்கத்தை அடிப்படையாகக் கொண்டு தொழில் வளர்ச்சியை கணிக்கலாம். 1960-ல் 5884 பதிவு செய்யப்பட்ட தொழிற்கூடங்கள் இருந்தன. 1977-ல் தொழிற்கூடங்களின் எண்ணிக்கை 8508 ஆக உயர்ந்தது.

## 4. தொழிலாளர் எண்ணிக்கை

மொத்த தொழிலாளர்களின் எண்ணிக்கையில் இருக்கும் வளர்ச்சி தொழில் வளர்ச்சிக்கு ஓர் அறிகுறியாகும். தமிழ்நாட்டில் 1960-ல் 2,86,176 தொழிலாளர்கள் இருந்தனர். தொழிலாளர் எண்ணிக்கை 1977-ல் 5,23,233 ஆக உயர்ந்தது.

### பட்டியல் 7—4

**தமிழ்நாட்டில் தொழிற்கூடங்கள், தொழிலாளர்கள் எண்ணிக்கை**

| ஆண்டு | பதிவு செய்யப்பட்ட தொழிற்கூடங்கள் | தொழிலாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1960 | 5,884 | 2,86,176 |
| 1965 | 6,840 | 3,68,967 |
| 1970 | 6,344 | 4,32,488 |
| 1975 | 7,370 | 4,84,420 |
| 1977 | 8,508 | 5,23,233 |

தமிழ்நாட்டின் முக்கியத் தொழில்கள் சிலவற்றையும் அவை ஒவ்வொன்றும் எந்த அளவிற்கு வளர்ச்சியுற்றிருக்கின்றன என்றும் இனிக் காணலாம். தமிழ்நாட்டில் உள்ள முக்கியத் தொழில்கள் பருத்தி ஆலைகள், சர்க்கரை ஆலைகள், சிமெண்டு ஆலைகள், வாகன உற்பத்தி ஆலைகள், இரசாயன உர ஆலைகள், கனிப்பொருள்கள் உற்பத்தி, கைத்தறி முதலியனவாகும்.

### பருத்தி ஆலைத் தொழில்

பருத்தி ஆலைத் தொழில் தமிழ்நாட்டின் பழமையான ஒன்றாகும். இது இன்று ஒரு பெருந்தொழிலாகவும் இருக்கின்றது. தமிழ்நாட்டில் மொத்த தொழில் உற்பத்தியில் துணி, நூல் இவற்றின் பங்கு 51 சதவிகித அளவில் இருக்கின்றது. மாநிலத்தில் இன்று 180 நூற்பு, நெசவு ஆலைகள் இருக்கின்றன. நாட்டளவில் இருக்கும் மொத்த ஆலைகளில் மூன்றில் ஒரு பங்கு தமிழ்நாட்டில் இருக்கின்றன. பருத்தி ஆலைகளில் முதலீடு செய்யப்பட்டுள்ள மூலதனத் தொகை 100 கோடிக்கும் மேலாக இருக்கின்றது. இத்தொழில் மொத்தம் ஒரு இலட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கின்றது. பருத்தி ஆலைகள் அதிக அளவில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் இருக்கின்றன. இங்கு மொத்தம் 81 ஆலைகள் இருக்கின்றன. மஹாராஷ்டிரத்திற்கு அடுத்தபடியாகத் தமிழ் நாட்டில்தான் அதிகக் கதிர்கள் (spindlage) இருக்கின்றன. நாட்டில் உற்பத்தியாகும் மொத்த நூல் அளவில் 20 சதவிகிதம் தமிழ்நாட்டில் உற்பத்தியாகின்றது. 1978-ல் தமிழ்நாட்டில் 155 மில்லியன் மீட்டர் துணி உற்பத்தியாயிற்று. இந்த ஆண்டில் உற்பத்தியான நூல் அளவு 198 மில்லியன் கிலோவாகும்.

### சர்க்கரை ஆலைத் தொழில்

ஆலைகளில் சர்க்கரை தயாரிக்கும் முறை அண்மைக் காலத்தில்தான் தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டது என்றாலும் அது நன்றாக வளர்ச்சியடைந்திருக்கின்றது. மாநிலத்தில் மொத்தம் 20 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. இவை அனைத்தும் நாளொன்றுக்கு 40,100 டன் கரும்பைப் பிழியும் சக்தி படைத்தவை. இந்த ஆலைகளில் முதலீடு செய்யப்பட்டுள்ள மூலதனத் தொகை ரூ. 60 கோடியாகும். இவ்வாலைகள் சுமார் 14,000 தொழிலாளர்களுக்கு வேலை அளித்து இருக்கின்றன. கரும்புப் பயிர் சாகுபடி செய்வதில் 10 இலட்சம் மக்கள் ஈடுபட்டிருக் கின்றனர். சர்க்கரையைப் பொறுத்த அளவில் தமிழ்நாடு தன்னிறைவு நிலையை அடைந்திருக்கின்றது. தமிழ்நாட்டில் உள்ள சர்க்கரை ஆலைகள் 1977-78-ல் 5 இலட்சம் டன் சர்க்கரையை உற்பத்தி செய்தன.

### சிமெண்டு தொழில்

தமிழ்நாட்டில் மொத்தம் ஏழு சிமெண்டு ஆலைகள் இருக்கின்றன. அவற்றுள் ஒன்று அரசுத் துறையின்கீழும் எஞ்சியவை தனியார் நிருவாகத்தின்கீழும் இயங்கிவருகின்றன. இந்திய நாட்டின் மொத்த சிமெண்டு உற்பத்தியில் ஆறில் ஒரு

பங்கு தமிழ் நாட்டில் உற்பத்தியாகின்றது. சராசரியாக ஆண்டொன்றுக்கு 3 மி. டன் சிமெண்டு தமிழ்நாட்டில் உற்பத்தி யாகின்றது.

### வாகனத் தொழில்

வாகனங்கள் தயார் செய்வதிலும், வாகனங்களுக்குத் தேவை யான கருவிகளையும் பாகங்களையும் உற்பத்தி செய்வதிலும் தமிழ் நாட்டிற்கு சிறப்பான இடம் இருக்கின்றது. மஹாராஷ்டிரத் திற்கு அடுத்தபடியாகத் தமிழ் நாடு இத்துறையில் சிறப்பான முன் னேற்றமடைந்திருக்கின்றது. இத்தொழிலில் முதலீடு செய்யப் பட்ட மொத்த மூலதனத் தொகை ரூ.43 கோடியாகும். இத் தொழிலில் ஏறக்குறைய 30,000 தொழிலாளர்கள் ஈடுபட்டிருக் கின்றனர்.

### இரசாயன உரம்

தமிழ் நாட்டில் ஒன்பது இரசாயன உரச் சாலைகள் இருக் கின்றன. இவற்றுள் ஆறு தனியார் நிருவாகத்திலும், இரண்டு அரசுத் துறையின்கீழும், ஒன்று தனியார்-அரசு இரண்டும் இணைந்த மேற்பார்வையின்கீழும் இருக்கின்றன. உர உற்பத்திச் சாலைகளன்றி, தமிழ் நாட்டில் 76 இரசாயனக் கலப்புக் கூடங்கள் (Mixing units) இயங்கி வருகின்றன. ஆண்டொன்றுக்கு 6 இலட்சம் டன் இரசாயன உரம் தமிழ் நாட்டிலிருந்து உற்பத்தியா கின்றது.

### கனிப் பொருள்கள் உற்பத்தி

கிடைக்கும் அளவையும் பொருள்களின் மதிப்பையும் கருத் திற் கொண்டு நோக்கினால் தமிழ் நாட்டில் கிடைக்கும் முக்கியக் கனிப் பொருள்கள், பழுப்பு நிலக்கரி, சுண்ணாம்புக்கல், மேக்ன சைட், களிக்கல், பாக்சைட் முதலியனவாகும். நெய்வேலி நிலக்கரி நிறுவனம் அமைக்கப்படுவதற்கு முன்னர் தமிழ் நாட்டில் கனிப் பொருள்களின் உற்பத்தி அதிக அளவில் இல்லை. 1961ஆம் ஆண்டில் நாட்டில் உற்பத்தியான மொத்த கனிப் பொருள்களில் 2 சதவிகிதத்திற்கும் குறைந்த அளவில்தான் தமிழ் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டது. நம் மாநிலத்தில் கனிப் பொருள்கள் அதிக அளவில் கிடைப்பதில்லை. நெய்வேலி நிலக்கரிக் கார்ப்பரேஷன் செயல்படத் தொடங்கியதிலிருந்து மாநிலத்தின் கனிப் பொருள் உற்பத்தி ஓரளவிற்குப் பெருகி இருக் கின்றது. இன்று நாட்டின் மொத்த கனிப்பொருள் உற்பத்தியில் 3.5 சதவிகித அளவு தமிழ் நாட்டிலிருந்து கிடைக்கின்றது.

## கைத்தறித் தொழில்

பல்வேறு சிறு தொழில்களுள் தமிழ்நாட்டில் கைத்தறித் தொழில் மிகவும் முக்கியம் வாய்ந்த ஒன்றாகும். தமிழ்நாட்டில் மொத்தம் 5.5 இலட்சம் தறிகள் இருக்கின்றன. 10 இலட்சம் நெசவாளர்கள் இருக்கின்றனர். ஏறக்குறைய 30 இலட்சம் மக்கள் கைத்தறியை நம்பி வாழ்க்கை நடத்தி வருகின்றனர். ஆண்டொன்றுக்கு ரூ. 150 கோடி மதிப்புள்ள 600 மில்லியன் மீட்டர் கைத்தறித் துணி உற்பத்தியாகின்றது. நாட்டில் உற்பத்தியாகும் மொத்தக் கைத்தறித் துணியில் கால் பங்கு தமிழ்நாட்டில் உற்பத்தியாகின்றது. தமிழ்நாட்டில் செயல்பட்டுவரும் மொத்தக் கைத்தறிகளில் 40 சதவிகிதம் கூட்டுறவு முறையின்கீழ் அமைந்திருக்கின்றன.

மொத்தத்தில் தமிழ்நாட்டில் நல்ல தொழில் முன்னேற்றம் இருந்திருக்கின்றது என்று அறிகின்றோம். தமிழ்நாட்டில் தொழில் அமைப்பு முறையும் (Industrial Structure) அண்மை ஆண்டுகளில் பெருமளவிற்கு மாற்றமடைந்திருக்கின்றது. இன்று நம் மாநிலத்தில் பல வகையான தொழில்கள் பரவலானமுறையில் வளர்ந்திருக்கின்றன. விவசாயத்தைச் சார்ந்த தொழில்கள் (Agro-based industries), இரசாயனத் தொழில்கள், கனிப் பொருள்களைச் சார்ந்த தொழில்கள் (mineral-based industries), அடிப்படை உலோகத் தொழில்கள், பொறியியல் நுட்பத் தொழில்கள் (Engineering industries) என்று தொழில்களைப் பல வகையாகப் பாகுபடுத்தலாம். தமிழ்நாட்டில் இருபது ஆண்டுகளுக்கு முன்பு இருந்த, இப்பொழுது இருக்கின்ற தொழில்களை மேற்கண்டவாறு பாகுபாடு செய்து பார்த்தால் தொழில் அமைப்பு முறையில் சிறப்பான மாற்றம் இருந்திருக்கின்றது என்று அறிகின்றோம். கடந்த காலத்தில் தமிழ்நாட்டில் இருந்த தொழில்கள் பெரும்பான்மையும், பருத்தி நூற்பு, நெசவு, சர்க்கரை, தோல் போன்ற விவசாயத்தைச் சார்ந்த தொழில்களாகவே இருந்தன. கடந்த 20 ஆண்டுகளில் இரசாயனம், அடிப்படை உலோகம், கனிப் பொருள்கள், பொறியியல் நுட்பத் தொழில்கள் விரைவாக வளர்ச்சியடைந்திருக்கின்றன. இத்துறைகளைச் சார்ந்த தொழில்களில் விவசாயத்தைச் சார்ந்த தொழில்களைவிட வளர்ச்சி வேகம் அதிகமாக இருந்திருக்கின்றது. இதன் விளைவால் தமிழ்நாட்டின் தொழில் அமைப்பு முறை இன்று பரவலாக அமைந்திருக்கின்றது.

## தொழில் வளர்ச்சிக்கு அரசின் உதவி

தொழிலை வளர்க்கத் தமிழ்நாடு அரசு பல மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்திருக்கின்றது. தொழில்

வளர்ச்சியுறச் சில அடிப்படை உதவிகள் தேவைப்படுகின்றன. மின் வசதி இருக்க வேண்டும். தேவையான அளவுக்கு நீர் கிடைக்க வேண்டும். பண்டங்களை எடுத்துச் செல்ல நல்ல சாலை வசதிகள் இருக்கவேண்டும். போக்குவரத்துக்கு வாகன வசதிகளும் இருக்க வேண்டும். இத்தகைய அடிப்படைத் தேவைகளைத் தேவையான அளவிற்குச் செய்து கொடுப்பதில் அரசு மிக்க கவனம் செலுத்தி வந்திருக்கின்றது. இத்துடன்கூட மாநிலத்தின் பின்தங்கிய பகுதிகளாகக் கருதப்படும் இடங்களில் தொழில்களை அமைப்பவர்களுக்கு அரசு ஊக்கம் அளித்து வருகின்றது. பொருளாதாரத் துறையில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கும் பகுதிகளை, மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்து அப்பகுதிகளில் மாவட்டங்களில் தொடங்கப்படும் தொழில்களுக்கு அரசு பல சலுகைகளை அளிக்கின்றது. தனியார் துவங்கும் தொழில்களுக்கு இவ்வாறு ஊக்கமளிப்பதுடன் அரசு நேரிடையாகவே பல தொழில்களை அமைத்து நிருவகித்து வருகின்றது. மாநிலத்தின் தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்தும் நோக்கத்துடன் அரசு பல தனி நிறுவனங்களையும் அமைத்திருக்கின்றது. இந்நிறுவனங்கள் தொழில் வளர்ச்சிக்காகப் பல உதவிகளைச் செய்துவருகின்றன. இவற்றுள் முக்கியமானவை தனி நிறுவனங்கள், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், சிறு தொழில் வளர்ச்சிக் கழகம், தமிழ் நாடு சிறு தொழில் கழகம், தமிழ்நாடு தொழில் அமைப்புக் கழகம் முதலியனவாகும். இவை ஒவ்வொன்றைப்பற்றியும் சுருக்கமாக அறிய முயலலாம்.

## தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம்

இக்கழகம் 1965ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. தமிழ்நாட்டில் புதிய தொழில்களை அமைத்து அவற்றை வளர்க்க வேண்டும் என்பது இக்கழகத்தின் முக்கிய நோக்கமாகும். அரசுத்துறையின் கீழ் தொழில்களை அமைக்க நேரும்போது பல பணிகளையும் மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது. இப்பணிகள் செம்மையான முறையில் நிறைவேற இக்கழகம் உதவியளிக்கின்றது.

## தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்

இக்கழகம் ஒரு நிதி உதவி அளிக்கும் கழகமாகும். மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்தும் நோக்கத்துடன் இக் கழகம் 1949-ல் தொடங்கப்பெற்றது. தொழில் அமைக்க முன் வருபவர்களுக்கு இக்கழகம் கடனுதவி அளிக்கின்றது.

## சிறு தொழில் வளர்ச்சிக் கழகம்

இக்கழகம் 1970ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. மாநிலத்தில் இருக்கும் சிறு தொழில்களுக்கு இக்கழகம் பலவிதமான உதவிகளை அளித்து வருகின்றது. சிறு தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருள்கள் கிடைப்பதற்கு இக்கழகம் வழிவகை செய்து கொடுக்கின்றது. சிறு தொழில்களுக்கு இக்கழகம் இயந்திரங்களைத் தவணை முறையில் வினியோகம் செய்கின்றது. புதிதாகத் தொழில் தொடங்குபவர்களுக்குத் தொழில்நுட்ப ஆலோசனை கூறுகிறது. சிறு தொழில்கள் தங்கள் பண்டங்களை நல்ல முறையில் விலையாக்குவதற்கு இக்கழகம் உதவி புரிகின்றது.

## தமிழ்நாடு சிறு தொழில் கழகம்

இக்கழகம் பல சிறு தொழில்களை நேரிடையாக நிருவகித்து வருகின்றது. இக்கழகத்தின் நிருவாக நேர்பார்வையில் 58 சிறு தொழில்கள் இருக்கின்றன.

## தமிழ் நாடு தொழில் அமைப்புக் கழகம்

இக்கழகம் 1971ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. பேரளவு, மத்தியளவுத் தொழில்களைத் தனியார் துறையில் தொடங்குவதற்கு இக்கழகம் உதவி அளித்து வருகின்றது. தொழில் அமைக்க முன்வருபவர்களுக்கு இக்கழகம் ஆலோசனையும் அளித்து வருகின்றது.

# 8. அயல் நாட்டு வாணிபம்

## உள் நாட்டு வாணிபம், அயல் நாட்டு வாணிபம் இவை இரண்டிற்குமிடையே நிலவும் வேறுபாடுகள்

பண்டங்கள் உள் நாட்டில் தங்கு தடையின்றிச் செல்லுகின்றன : ஒரு நாட்டினுடைய எல்லைக்குள் நடைபெறும் பண்ட வாணிபத்தை உள் நாட்டு வாணிபம் என்றழைக்கின்றோம். இரு நாடுகளிடையே அல்லது பல நாடுகளிடையே நடைபெறும் வாணிபத்தை அயல் நாட்டு வாணிபம் அல்லது பன்னாட்டு வாணிபம் என்ற பெயரிட்டழைக்கின்றோம். அயல் நாட்டு வாணிபம் உள் நாட்டு வாணிபத்திலிருந்து பல வகைகளில் மாறுபட்டு இருக்கின்றது. உள் நாட்டு எல்லைக்குள் பண்டங்கள் ஓரிடத்திலிருந்து பிறிதோர் இடத்துக்குச் செல்வதில் தடை ஏதுமில்லை. ஹிமாசலப் பிரதேசத்தில் உள்ள கூலு பள்ளத்தாக்கு சென்னை மாநகரத்திலிருந்து ஆயிரம் மைலுக்கும் அப்பால் இருக்கின்றது. சுவை மிக்க, தரத்தில் உயர்ந்த கூலு ஆப்பிள்கள் சென்னைக்குத் தடையின்றிக் கொண்டுவரப்பட்டு விலையாக்கப்படுகின்றன. இலங்கைக்கும் மதுரைக்கும் இடையிலுள்ள தூரம் நூறு மைல் அளவில்தான் இருக்கும். ஆனால், கைத்தறித் துணியை வாணிப நோக்குடன் மதுரையிலிருந்து இலங்கைக்கு அவ்வளவு எளிதான முறையில் எடுத்துச் செல்ல இயலாது. ஒரு நாட்டிலிருந்து பிறிதொரு நாட்டிற்குப் பண்டங்களை எடுத்துச் செல்வதில் பல தடைகள் இருப்பதே இதற்குக் காரணமாகும். பண்டங்கள் மட்டுமில்லாமல் உற்பத்திக் காரணிகள் (Factors of Production) என்று பொருளியலில் அழைக்கப்படும் நிலம் (Land), உழைப்பு (Labour), மூலதனம் (Capital), தொழில் முயல்வோன் (Entrepreneur) இவைகளும் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குச் செல்வதில் பல தடைகள் விதிக்கப்படுகின்றன. வங்காள மாநிலத்தைச் (மேற்கு வங்காளம்) சேர்ந்த ஒருவர் சென்னைக்கு வந்து, முதலீடு செய்து கார் உறுப்புகளை விற்பனை செய்யும் கடை ஒன்றைத் தொடங்கலாம். தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒரு பொறியாளர் கல்கத்தாவில் இருக்கும் ஒரு நிறுவனத்தில் பணியை மேற்கொள்ளலாம். மூலதனம் வங்காளத்திலிருந்து சென்னைக்கு வருவதற்கோ அல்லது உழைப்பு சென்னையிலிருந்து கல்கத்தாவிற்குப் பெயர்ந்து

செல்வதற்கோ தடை ஏதுமில்லை. ஆனால், ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த ஒருவர் இந்தியாவில் முதலீடு செய்து தொழில் ஒன்றைத் தொடங்குவது அவ்வளவு எளிதான செயலன்று. இதைப்போன்றே ஓர் இந்தியர் ஆஸ்திரேலியாவிற்குக் குடிபெயர்ந்து சென்று அங்கு ஒரு பணியை எளிதில் ஏற்றுக்கொள்ள முடியாது. மூலதனமும் உழைப்பும் ஒரு நாட்டிலிருந்து இடம் பெயர்ந்து செல்வதில் அரசாங்கம் பல தடைகள் விதிக்கின்றன. ஒரு நாட்டிற்குள் மூலதனமும் உழைப்பும் நுழையும்போதும் அரசாங்கம் தடைகளை விதிக்கின்றன.

உள் நாட்டு வாணிபத்தில் ஒரு நாணயம் மட்டுமே பயன்படுத்தப் படுகின்றது : உள் நாட்டு வாணிபத்தில் ஒரு நாணயம் மட்டுமே பயன்படுத்துகின்றோம். சென்னையில் உள்ள ஒரு துணி வியாபாரி கைத்தறித் துணிகளைக் கல்கத்தாவில் உள்ள ஒரு வணிகருக்கு அனுப்பிவைத்தால், அதனுடைய கிரயத்தைக் கல்கத்தா வியாபாரி ரூபாயில் அனுப்ப அத்தொகையைச் சென்னை வியாபாரியும் ஏற்றுக் கொள்வார். சென்னை வியாபாரி ஐக்கிய அமெரிக்காவிற்குக் கைத்தறித் துணிகளை அனுப்புகின்றார் என்று வைத்துக் கொள்வோம். இந்த பேரத்தில் இரண்டு நாணயங்களை ஈடுபடுத்த வேண்டியிருக்கின்றது. ஏற்றுமதி செய்த சென்னை வியாபாரிக்குக் கிரயம் ரூபாயில் கிடைக்க வேண்டும். அமெரிக்க இறக்குமதியாளரால் கிரயத்தை அமெரிக்க டாலரில் தான் செலுத்த இயலும். அமெரிக்க டாலர்களை இந்திய ரூபாயில் மாற்றிக் கொடுத்தால்தான் இந்த பேரம் முடிவுறும். ஒரு நாணயத்தைப் பிறிதொரு நாணயமாக மாற்றும்பொழுது சில இடையூறுகள் எழுகின்றன. எனவே, ஒவ்வொரு நாட்டிலும் நாணய மாற்றுக்காகத் தனி ஏற்பாடுகள் செய்ய வேண்டி இருக்கின்றது. உள் நாட்டு வாணிபத்தில் இத்தகைய சிக்கல்கள் எழுவதே இல்லை. எனவே, உள் நாட்டு வாணிபத்திற்கும் அயல் நாட்டு வாணிபத்திற்கும் சில முக்கிய வேறுபாடுகள் உள்ளன என்பது இவற்றிலிருந்து தெளிவாகின்றது.

## பொருளாதார வளர்ச்சியில் அயல் நாட்டு வாணிபத்தின் பங்கு

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் அந்நாட்டின் அயல் நாட்டு வாணிபத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியைக் கணக்கிடுவதற்கு நாட்டு வருமானம், தலா வருமானம், மக்களின் வாழ்க்கைத் தரம், வேலை நிலை இவை அளவுகோல்களாகப்

பயன்படுத்தப்படுகின்றன என்று இந்நூலின் முற்பகுதியில் கண்டோம். இவை ஒவ்வொன்றும் அயல் நாட்டு வாணிபத்தால் பாதிக்கப்படுகின்றன. எனவே, நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும் அயல் நாட்டு வாணிபம் பாதிக்கின்றது.

1. நாட்டு மக்களால் நுகரப்படும் அனைத்துப் பண்டங்களும் உள் நாட்டிலேயே உற்பத்தியாவதில்லை. சில பண்டங்களை உள் நாட்டில் உற்பத்தி செய்ய முடிவதில்லை. அப்படியே உற்பத்தி செய்ய முடிந்தாலும் உற்பத்திச் செலவு வேறு சில நாடுகளில் இருப்பதைவிட உயர்வாக இருக்கக்கூடும். இவ்வாறு உள் நாட்டில் உற்பத்தி செய்ய முடியாத, அல்லது குறைந்த செலவில் உற்பத்தி செய்ய முடியாத பண்டங்களை ஒரு நாடு அயல் நாட்டு வாணிபத்தின் வாயிலாகத் தருவித்துக் கொள்கின்றது. எடுத்துக் காட்டாக உள்நாட்டில் உற்பத்தி செய்ய முடியாத சில இரசாயனப் பொருள்களை நாம் பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்கின்றோம். இதே போன்று, நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு இன்றியமையாத சில இயந்திரங்களையும் தொழிற் கருவிகளையும் அயல் நாடுகளிலிருந்து தருவிக்கின்றோம். இங்கிலாந்து தேயிலையை இந்தியாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் இறக்குமதி செய்து வருகின்றது. தனக்குத் தேவையான தேயிலையை இங்கிலாந்து உற்பத்தி செய்யக்கூடும் என்றாலும், உள் நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய தேயிலையின் விலை மிக அதிகமாக இருக்கும். தேயிலை உற்பத்தியில் இந்தியா, இலங்கை இந்நாடுகளுக்கு இயற்கையாகச் சில அனுகூலங்கள் அமைந்திருப்பதால் இந்நாடுகளில் தேயிலை உற்பத்திக் கிரயம் இங்கிலாந்தில் பயிராகக்கூடிய தேயிலையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிகக் குறைவாக இருக்கின்றது.

2. சில குறிப்பிட்ட பண்டங்களை உற்பத்தி செய்வதில் ஒவ்வொரு நாட்டிற்கும் சில அனுகூலங்கள் இருக்கின்றன. மோட்டார் கார்கள், எலக்டிரானிக்ஸ் பொருள்கள் இவற்றை உற்பத்தி செய்வதில் ஜப்பானுக்குத் தனித்திறமை இருக்கின்றது. கைக் கடிகாரங்கள் தயார் செய்வதில் ஸ்விட்சர்லாந்திற்குத் தனித் திறமை இருக்கின்றது. சணற் பண்டங்கள், கைத்தறித் துணிகள், ஆடைகள், கைவினைப் பண்டங்கள் இவற்றை இந்தியாவால் குறைந்த செலவில் உற்பத்தி செய்ய முடிகின்றது. ரப்பர், வெள்ளீயம் போன்ற பண்டங்களை உற்பத்தி செய்வதில் மலேசியாவிற்கும், காப்பிக்கொட்டை உற்பத்தி செய்வதில் பிரேசில் நாட்டிற்கும், பெட்ரோலியம் உற்பத்தி செய்வதில் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் தனித்திறமை இருக்கின்றது. இயற்கைச்

சாதனங்கள் அதிக அளவில் கிடைப்பதாலோ அல்லது பண்டங்களை உற்பத்தி செய்வதில் அந்நாட்டு மக்கள் தனித் திறமை படைத்தவர்களாக இருப்பதாலோதான் சில குறிப்பிட்ட பண்டங்களைக் குறிப்பிட்ட சில நாடுகள் குறைந்த செலவில் உற்பத்தி செய்ய முடிகின்றது. சில நாடுகள் சில பண்டங்களைத் தொடர்ந்து பல்லாண்டு காலம் உற்பத்தி செய்து வந்தால் அப்பண்ட உற்பத்தியில் அந்நாடுகளுக்கும் அந்நாட்டு மக்களுக்கும் தனிச் சிறப்பும் தனித் திறனும் நாளாவட்டத்தில் கிடைக்கின்றன. ஒரு பண்டத்தின் உற்பத்தியில் தொடர்ந்து முனைப்பாக ஈடுபடுவதால் உற்பத்திச் செலவு காலப்போக்கில் குறைவடைகிறது; தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் தொழிற் திறனும் அதிகமாகின்றது. எனவே, குறிப்பிட்ட சில பண்டங்களை உற்பத்தி செய்வதில் ஒவ்வொரு நாட்டிற்கும் சில அனுகூலங்கள் இருக்கின்றன. அனுகூலங்கள் இயற்கையாகவே அமைந்தவையாக இருக்கலாம். அல்லது தாமே முனைந்து தேடிக்கொண்டவையாக வும் இருக்கலாம். இவ்வாறு அனுகூலங்கள் அமைந்த துறைகளில் பிற நாடுகளில் இருப்பதைவிட குறைந்த உற்பத்திச் செலவில் ஒரு நாடு பண்டங்களை உற்பத்தி செய்ய முடியும். ஒவ்வொரு நாடும் தனக்கிருக்கும் சாதன வசதிகளையும் தனித்திறமையை யும் பயன்படுத்திப் பண்டங்களை உற்பத்தி செய்து அவ்வாறு உற்பத்தியான பண்டங்களைப் பிற நாடுகளுடன் அயல் நாட்டு வாணிபத்தின்மூலம் பகிர்ந்துகொள்கின்றன.

3. ஒரு நாட்டில் பருவ மழை தவறுவதாலோ அல்லது வேறு சில காரணங்களாலோ உணவுப் பற்றாக்குறையும் பஞ்சமும் ஏற்படும்போது அயல் நாட்டு வாணிபம் அந்நாட்டிற்குத் துணையாக இருக்கின்றது. அயல் நாடுகளிலிருந்து அந்நாடு உணவு தானியங்களை இறக்குமதி செய்து கொள்ளக்கூடும். 1960 ஆம் ஆண்டுவாக்கில் இந்தியா பெருமளவிற்கு உணவு தானியங்களை அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்தது. பி. எல். 480 (P. L. 480) என்னும் சட்டத்தின்கீழ் அமெரிக்கா இவ்வுதவியை அளித்துவந்தது.

4. நாடுகளிடையே வாணிபம் நடைபெறவில்லை என்று ஊகித்துக்கொள்வோம். இதனால் ஏற்படும் பொருளாதார விளைவுகள் யாவை? சில குறிப்பிட்ட பண்டங்களைச் சில நாடுகளால் உற்பத்தி செய்யவே முடியாது. சில பண்டங்களின் பற்றாக்குறை ஏற்படும். சில பண்டங்கள் உள் நாட்டு நுகர்வுக்கும் மிஞ்சி அதிக அளவில் உற்பத்தியாகக்கூடும். உள் நாட்டுத் தேவைக்கும் உள் நாட்டு உற்பத்திக்கும் ஏற்றாற்போல ஒவ்வொரு

நாட்டிலும் பண்டங்களின் விலைகள் நிர்ணயிக்கப்படும். சில பண்டங்களின் விலை மிக உயர்வாக இருக்கும். சில பண்டங்களின் விலை மிகக் குறைவாக இருக்கும். அயல் நாட்டு வாணிபம் இந் நிலையை முற்றிலும் மாற்றிவிடுகின்றது. ஒரு நாட்டில் பற்றாக் குறையாக உள்ள பண்டங்கள் பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. அதாவது, உள்நாட்டு உற்பத்தி + இறக்குமதி இரண்டும் சேர்ந்து உள்நாட்டுத் தேவையைச் சமாளிக்கின்றன. அதேபோன்று உள் நாட்டு நுகர்வுக்கு மிகுதியாக உற்பத்தியாகும் பண்டங்கள் அயல் நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. அதாவது உள்நாட்டு உற்பத்தி, உள்நாட்டு நுகர்வு + ஏற்றுமதி ஆகிய இரண்டு வழிகளில் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறு பண்டங்கள் பல நாடுகளிடையே பகிர்ந்துகொள்ளப்படுவதால் பண்டங்களின் விலை மட்டும் மாறுதலடைகின்றது. பண்டங்களின் விலை மட்டம் எல்லா நாடுகளிலும் ஏறக்குறைய ஒரே மட்டத்தில் நிலவ அயல் நாட்டு வாணிபம் வகை செய்கின்றது. சுருங்கக்கூறின் அயல் நாட்டு வாணிபம் இல்லாத நிலையில் ஒரு பண்டத்தின் விலையில் பல நாடுகளிடையே இருக்கும் பெருத்த ஏற்றத் தாழ்வுகள் அயல் நாட்டு வாணிபம் நிலவும்போது எழமாட்டா.

5. தொழில் துறையில் நல்ல முன்னேற்றமடைந்துள்ள சில நாடுகளில் மூலப் பொருள்களும் கச்சாப் பொருள்களும் உற்பத்தியாகாமல் இருக்கலாம். அப்படியே உற்பத்தியானாலும் தேவையான அளவிற்கு உற்பத்தியாகாமல் இருக்கலாம். தொழில் துறையில் பின்தங்கிய நிலையில் இருக்கும் நாடுகளில் மூலப் பொருள்களும் கச்சாப் பொருள்களும் அதிக அளவில் உற்பத்தியாகக்கூடும். பின்தங்கிய நாடுகள் மிகுதியாக உள்ள மூலப் பொருள்களை முன்னேற்றமடைந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அந்நாடுகளிலிருந்து தங்களுக்குத் தேவையான மூலதனப் பண்டங்களையும், இயந்திரங்களையும், உள்நாட்டில் உற்பத்தியாகாத நுகர்வுப் பொருள்களையும் இறக்குமதி செய்துகொள்வதற்கு அயல் நாட்டு வாணிபம் பெரிதும் உதவுகின்றது.

## வளர்ந்துவரும் நாடுகளுக்கு (Developing Countries) அயல் நாட்டு வாணிபத்தின்மூலம் கிடைக்கும் பயன்கள்

அயல் நாட்டு வாணிபம் பரவலாக எல்லா நாடுகளுக்கும் நன்மை பயக்கின்றது. குறிப்பாக வளர்ந்துவரும் நாடுகளுக்கு அயல் நாட்டு வாணிபம் மிகவும் முக்கியம் வாய்ந்ததாக இருக்கின்றது. பொருளாதாரத் துறையில் வளர்ந்துவரும் நாடுகள் தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்த முயலுகின்றன. ஆனால்,

ஒரு நாட்டில் தொழில் விரைவாக வளரவேண்டுமென்றால் அந்நாட்டிற்கு அடிப்படைத் தேவையான சில பண்டங்கள் தேவைப்படுகின்றன. குறிப்பாக இயந்திரங்கள், தொழிற்கருவிகள், தளவாடங்கள் இன்றியமையாதனவாகின்றன. வளரும் நிலையில் இருக்கும் ஒரு நாட்டால் இத்தகைய பண்டங்களை உற்பத்தி செய்ய முடியாது. எனவே, இப்பண்டங்களை அயல் நாடுகளி லிருந்து இறக்குமதி செய்ய வேண்டியிருக்கின்றது. இப்பண்டங்களை அதிக அளவில் இறக்குமதி செய்யும்போது இறக்குமதிச் செலவும் உயர்கின்றது. ஏற்றுமதியைப் பெருக்குவதன் வாயிலாகத்தான் உயர்ந்துவரும் இறக்குமதிச் செலவை நாளடைவில் சமாளிக்க இயலும். ஏற்றுமதியில் நெகிழ்ச்சி இல்லாமல் பழைய மட்டத் திலேயே இருக்க நேரிட்டால் நாட்டில் அந்நியச் செலாவணிப் பிரச்சினை தலைதூக்கத் தொடங்கும். எனவே, வளர்ந்துவரும் நாடுகள் தங்களுடைய ஏற்றுமதிகளைப் பெருக்கிக்கொள்ள சீரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். வளர்ந்துவரும் நாடுகளைப் பொறுத்தமட்டில் அயல் நாட்டு வாணிபம் அதிக நன்மை பயக்கின்றது என்றாலும் அயல் நாட்டு வாணிபத்தைத் தகுந்த முறையில் திட்டமிட்டுக் கையாளத் தவறினால் நாட்டில் புதிய சிக்கல்கள் எழுவதற்கும் வாய்ப்பு உண்டு.

## விடுதலைக்கு முன்னர் இந்தியாவின் அயல் நாட்டு வாணிபம்

விடுதலைக்கு முன்னர் இந்தியாவின் அயல் நாட்டு வாணிபம் ஒரு காலனி நாட்டின் வாணிபத் தன்மையைக் கொண்டிருந்தது. நாட்டிலிருந்து ஏற்றுமதியாகி வந்த பொருள்கள் பெரும் பான்மையும் மூலப் பொருள்களாவும், தோட்டப் பயிர்ப் பொருள் களாகவும் இருந்தன. இறக்குமதியில் செய்வினை முடிந்த பண்டங்களே ஏராளமாக இருந்தன. இந்தியாவின் அயல் நாட்டு வாணிபத்தில் இங்கிலாந்து மட்டுமே முக்கிய நாடாக இருந்து வந்தது. விடுதலைக்கு முந்தைய ஆண்டுகளில் இந்தியாவின் மொத்த ஏற்றுமதி, இறக்குமதி இவை எந்த அளவில் இருந்தன என்று பட்டியல் 8—1 விளக்குகின்றது.

(1) விடுதலைக்கு முன்னர் இந்தியாவின் அயல் நாட்டு வாணிபம் அளவிலும் மதிப்பிலும் குறைவாக இருந்தது என்னும் உண்மையை பட்டியலிலிருந்து அறிகின்றோம். மொத்த ஏற்றுமதி களின் மதிப்பும் இறக்குமதிகளின் மதிப்பும் குறைந்த அளவில் தான் இருந்தன. திட்ட காலத்தில் நாட்டின் ஏற்றுமதியும் இறக்குமதியும் பெருமளவில் பெருக்கமடைந்தன என்று இவ்வத்தியாயத்தின் பிற்பகுதியில் காண இருக்கின்றோம்.

## பட்டியல் 8—1

**விடுதலைக்கு முன்னர் இந்தியாவின் அயல் நாட்டு வாணிபம்**
(கோடி ரூபாயில்)

| ஆண்டு | ஏற்றுமதிகளின் மதிப்பு | இறக்குமதிகளின் மதிப்பு | வாணிப நிலை |
|---|---|---|---|
| 1938-39 | 169 | 152 | +17 |
| 1945-46 | 266 | 245 | +21 |
| 1946-47 | 319 | 288 | +31 |
| 1947-48 | 403 | 389 | +14 |

**ஆதாரம் :** *இந்தியாவின் மைய வங்கி வெளியிடும் நிதி நிலை, பணவியல் பற்றிய அறிக்கை.*

(2) விடுதலைக்கு முந்தைய ஆண்டுகளில் இந்தியாவில் 'வாணிப நிலை' (Balance of Trade) சாதகமாகவே இருந்திருக்கின்றது. ஏற்றுமதிகளின் பண மதிப்பிற்கும் இறக்குமதிகளின் மதிப்பிற்கும் உள்ள வேறுபாட்டை 'வாணிப நிலை' என்ற பெயரில் அழைக்கின்றோம். ஓராண்டில் ஏற்றுமதி மதிப்பு இறக்குமதி மதிப்பைவிட அதிகமாக இருந்தால் வாணிப நிலை சாதகமாக இருக்கின்றது என்று குறிப்பிடுகின்றோம். இறக்குமதி மதிப்பு ஏற்றுமதி மதிப்பைவிட ஓராண்டில் அதிகமாக இருந்தால் வாணிப நிலை பாதகமாக இருக்கின்றது என்று கூறுகின்றோம்

### விடுதலைக்குப் பின்னர் இந்தியாவின் அயல் நாட்டு வாணிபம்

நாட்டின் விடுதலைக்குப் பின்னர், தொழில் வளர்ச்சியையும் பொருளாதார முன்னேற்றத்தையும் விரைவுபடுத்த வேண்டும் என்று நம் தலைவர்கள் விரும்பினர். இந்நோக்கங்களை நிறைவேற்ற ஐந்தாண்டுத் திட்டங்களை வரைந்து செயல்படுத்தினர். இவற்றின் விளைவால் நம்முடைய அயல் நாட்டு வாணிபத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அயல் நாட்டு வாணிபத்தின் அளவு மிகவும் பெருக்கமடைந்திருக்கின்றது. நாடு பொருளாதாரத் துறையில் வளர்ச்சியுறும்போது அதனுடைய அயல் நாட்டு வாணிபமும் வளர்ச்சியடைகின்றது. வாணிபப் பண்டங்களின் கலவையிலும் (composition of trade) மாற்றங்கள் ஏற்படுகின்றன. அதாவது ஏற்றுமதி, இறக்குமதிப் பண்டங்களில் மாற்றங்கள் எழுகின்றன. இதே போன்று வாணிபத் தொடர்பு உள்ள நாடுகளிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. பின்தங்கிய நிலையில்

இருக்கும் ஒரு நாட்டில் ஏற்றுமதிப் பண்டங்கள் மூலப் பொருள்களாகவே இருக்கின்றன; இறக்குமதிப் பண்டங்கள் செய்வினை முடிந்த பண்டங்களாக இருக்கின்றன. அத்தகைய ஒரு நாடு முன்னேற்றமடையும்போது அதனுடைய வாணிபப் பண்டங்களின் கலவையில் மாற்றம் ஏற்படுகின்றது. பொருளாதார முன்னேற்றத்தின் விளைவால் அந்நாடு செய்வினை முடிந்த பண்டங்களை ஏற்றுமதி செய்து மூலப் பொருள்களை இறக்குமதி செய்யும் நிலையை அடையக்கூடும். முன்னேற்றத்தின் விளைவால் அந்நாடு பல புதிய நாடுகளுடன் வாணிபத் தொடர்பு கொள்ளக் கூடும். நம் நாட்டில் இத்தகைய மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றனவா என்று இனி காண்போம்.

## திட்ட காலத்தில் வாணிப நிலை

ஏற்றுமதி, இறக்குமதி இவற்றில் திட்ட காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் யாவை? இந்தியாவின் வாணிப நிலை எங்ஙனம் இருந்திருக்கின்றது என்னும் குறிப்புகளைப் பட்டியல் 8—2 விளக்கிக் காட்டுகிறது.


### பட்டியல் 8—2

விடுதலைக்குப் பின்னர் இந்தியாவின் அயல் நாட்டு வாணிபம்
(கோடி ரூபாயில்)

| ஆண்டு | இறக்குமதிகளின் மதிப்பு | ஏற்றுமதிகளின் மதிப்பு | வாணிப நிலை (+ அல்லது —)* |
|---|---|---|---|
| 1951 - 52 | 962 | 730 | —232 |
| 1956 - 57 | 1102 | 635 | —467 |
| 1961 - 62 | 1006 | 668 | —338 |
| 1966 - 67 | 1992 | 1086 | —906 |
| 1971 - 72 | 1824 | 1607 | —217 |
| 1972 - 73 | 1796 | 1960 | +164 |
| 1976 - 77 | 5074 | 5146 | +72 |
| 1977 - 78 | 6025 | 5404 | —621 |
| 1978 - 79 | 6811 | 5725 | —1086 |

*+ சாதக நிலை; — பாதக நிலை

ஆதாரம் : இந்திய மைய வங்கியின் மாத வெளியீடுகள்.




படம் 8—1. நாட்டு விடுதலைக்குப்பின் இந்தியாவின் அயல் நாட்டு வாணிப நிலையின் போக்கு

பட்டியல் 8—2-லிருந்தும் படம் 8—1-லிருந்தும் அறியக்கூடிய முக்கியக் குறிப்புகள் யாவை ?

1. நாட்டு விடுதலைக்கு முந்தைய ஆண்டுகளில் அயல் நாட்டு வாணிபம் அளவில் குறைவாக இருந்தது என்று இவ்வத்தியாயத்தின் முற்பகுதியில் கண்டோம். ஏற்றுமதி குறைந்த அளவில் இருந்தது. இறக்குமதியும் குறைந்த அளவில் தான் இருந்தது. ஆனால் நாட்டு விடுதலைக்குப் பின்னர் அயல் நாட்டு வாணிபம் எந்த அளவிற்குப் பெருகியிருக்கின்றது என்பதனை மேற்கண்ட பட்டியலில் காணலாம். நாட்டில் நிறைவேற்றப்பட்ட பொருளாதார திட்டங்கள் இயந்திரங்களையும் தொழிற் கருவிகளையும் பெருமளவில் இறக்குமதி செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தின. இறக்குமதிகளில் இருந்த பெருக்கத்தைச் சமாளிக்க ஏற்றுமதிகளையும் பெருக்க வேண்டியிருந்தது.

2. 1976 - 77ஆம் ஆண்டிலிருந்து இறக்குமதி, ஏற்றுமதி இரண்டிலும் திடீர் ஏற்றம் இருந்திருக்கிறது. இதற்கான காரணம் என்ன? பெட்ரோலியத்தை ஏற்றுமதி செய்யும் நாடுகள் பெட்ரோலியத்தின் விலையை திடீரென்று உயர்த்தின. இந்தியா, அதிக அளவில் பெட்ரோலியத்தை இறக்குமதி செய்வதால் இறக்குமதிச் செலவு உயர்ந்தது. பெட்ரோலியம் ஓர் அடிப்படைத் தேவையான பண்டம். இதனுடைய விலையேற்றத்தால் உலகெங்கிலும் பணவீக்கம் ஏற்பட்டது. இந்தியா ஏற்றுமதி செய்யும் பண்டங்களின் விலைகளும் ஏற்றமடைத்தன. எனவே, இந்திய ஏற்றுமதிகளின் மதிப்பும் ஏற்றமடைந்தது.

3. மற்றொரு முக்கியக் குறிப்பையும் பட்டியல் 8—2-ல் கண்ணுறலாம். விடுதலைக்கு முன்னர் இந்தியாவின் அயல் நாட்டு வாணிப நிலை சாதகமாகவே இருந்து வந்தது. ஆனால், விடுதலைக்குப் பின்னர் ஓரிரு ஆண்டுகள் நீங்கலாக மற்ற எல்லா ஆண்டுகளிலும் வாணிப நிலை பாதகமாகவே இருந்து வந்திருக்கின்றது. முதன்முதலாக 1972 - 73ல்தான் பாதக நிலை மாறி சாதக நிலை ஏற்பட்டது. சாதக நிலை இருந்த மற்றோர் ஆண்டு 1976 - 77 ஆகும்.

4. முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் வாணிப நிலையில் இருந்த பற்றாக்குறை குறைந்த அளவில்தான் இருந்தது. இரண்டாம் திட்டம் செயல்படத் தொடங்கியதிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் பற்றாக்குறையின் அளவு பெருகிக்கொண்டே

வந்தது. 1966 - 67ல் பற்றாக்குறை ரூ. 906 கோடி அளவில் இருந்தது. ஆனால், 1967 - 68லிருந்து நிலைமையில் ஓரளவிற்கு அபிவிருத்தி இருந்திருக்கின்றது; பற்றாக்குறையின் அளவு இறக்கமடைந்தது. இத்திருப்பத்திற்குக் காரணம் என்ன? வாணிப நிலையில் இருந்த அபிவிருத்திக்கு நாணய மதிப்பு குறைக்கப் பட்டதே (Devaluation) முக்கிய காரணமாகும். 1966ஆம் ஆண்டு ஜூன் மாதம் இந்திய ரூபாயின் மதிப்பு 36.5 சதவிகிதம் குறைக்கப் பட்டது. நாணய மதிப்புக் குறைப்பு என்றால் என்ன? எந்தச் சூழ்நிலையில் இக் கருவி கையாளப்படுகின்றது? இதன் விளைவுகள் யாவை ?

ஒரு நாணயத்தின் வெளிநாட்டு மதிப்பைக் குறைப்பதைத் தான் 'நாணய மதிப்புக் குறைப்பு' (Devaluation) என்று பொருளியலில் அழைக்கப்படுகின்றது. இக்கருத்தைச் சற்று ஊன்றிக் கவனிக்க வேண்டும். வெளி நாட்டு மதிப்புதான் குறைக்கப்படுகின்றது. உள் நாட்டில் நாணய மதிப்பு பழைய மட்டத்திலேயே இருக்கும். எடுத்துக்காட்டாக, ஓர் அமெரிக்க டாலருக்கு எட்டு ரூபாய் சமன் என்றிருப்பதை ஒரு டாலருக்குப் பத்து ரூபாய் சமன் என்று மாற்றியமைத்தால் இந்திய ரூபாயின் வெளி நாட்டு மதிப்பு 25 சதவிகிதம் குறைந்திருக்கின்றது என்று பொருளாகும். எனவே, 1966-ல் இந்திய ரூபாயின் வெளி மதிப்பு குறைக்கப்பட்டதால் அயல் நாட்டு நாணயங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்திய ரூபாயின் மதிப்பு மலிந்துவிட்டது. நாணய மதிப்புக் குறைவின் வாயிலாக எவ்வாறு அயல் நாட்டு வாணிப நிலை அபிவிருத்தியடையும்?

நமது ரூபாயின் வெளி மதிப்பைக் குறைக்கும்போது நம் நாட்டில் இறக்குமதியாகும் பண்டங்களின் மதிப்பு உயர்வடைகின்றது. ஆனால், அயல் நாடுகளில் நம் நாட்டுப் பண்டங்களின் மதிப்பு மலிவடைகின்றது. இறக்குமதிப் பண்டங்களின் மதிப்பு உயர்ந்தால் அவற்றிலிருக்கும் தேவையும் குறைந்து அவற்றின் இறக்குமதி அளவும் குறையும். அயல்நாடுகளில் நம் பண்டங்களின் விலை மலிவடைவதால் அவற்றிற்கு இருக்கும் தேவை முன்பு இருந்ததைவிட பெருக்கமடையும். எனவே, பிற நாடுகள் நம் பண்டங்களை அதிக அளவில் வேண்டி விரும்பும். இவ்வாறு ஏற்றுமதி பெருக்கமடைய, இறக்குமதி குறைய வாணிப நிலையில் இருக்கும் பற்றாக்குறையின் (Trade Deficit) அளவு வெகுவாகக் குறையும்.

(5) ஆனால், 1973 - 74ஆம் ஆண்டிலிருந்து வாணிப நிலையில் இருந்த பற்றாக்குறை மறுபடியும் உயரத் தொடங்கி

யதைப் பட்டியலில் காணலாம். இதற்குக் காரணம் என்ன? இவ்விளைவுக்கு இரண்டு காரணங்களைக் குறிப்பிடலாம். நாணய மதிப்புக் குறைப்பை ஒரு கருவியாகப் பயன்படுத்தும்போது அதனால் வாணிப நிலையில் நல்ல முன்னேற்றம் இருக்கும் என்றாலும் அந்த முன்னேற்றம் ஒரு சில ஆண்டுகளுக்குத்தான் இருக்கும். சில ஆண்டுகளுக்குப் பிறகு பழைய நிலை மீண்டும் தலை தூக்கத் தொடங்கிவிடும். எனவே, நாணய மதிப்புக் குறைப்பை ஒரு நிரந்தரப் பலன் தரும் சாதனமாகக் கருத இயலாது. இது முதற் காரணமாகும். பெட்ரோல் பொருள்களின் விலையை பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகள் மறுபடியும் ஒரு முறை உயர்த்தின. இதன் விளைவால் நமது இறக்குமதிகளின் மதிப்பும் 1977 - 78லிருந்து ஏற்றமடையத் தொடங்கியது. இது இரண்டாவது காரணமாகும். நமது அயல் நாட்டு வாணிப நிலை தொடர்ந்து பற்றாக் குறையுள்ளதாக இருந்து வருகின்றது. இன்றும்கூட இது ஒரு பெரிய பொருளாதாரப் பிரச்சினையாக நிலவுகின்றது.

## அயல் நாட்டு வாணிபப் பண்டங்களின் கலவை
## (Composition of Foreign Trade)

பொதுவாக, தன்னால் குறைந்த விலையில் உற்பத்தி செய்யக்கூடிய பண்டங்களை ஒரு நாடு பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றது. அதே போன்று, தன்னால் உற்பத்தி செய்ய முடியாத அல்லது குறைந்த விலையில் உற்பத்தி செய்ய இயலாத பண்டங்களை அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து கொள்கின்றது. இறக்குமதியாகும் பண்டங்கள் எவை, ஏற்றுமதி யாகும் பண்டங்கள் எவை என்பவற்றை வாணிபக் கலவையிலி ருந்து அறிகின்றோம். எல்லா நாடுகளிலும் வாணிபக் கலவை ஒரே தன்மையுடையதாக இருக்காது. வாணிபக் கலவை ஒவ்வொரு நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சி நிலைக்கு ஏற்றாற்போல நாட்டுக்கு நாடு மாறுபட்டதாக இருக்கும். தொழிற் துறையில் நல்ல முன்னேற்றமடைந்துள்ள ஒரு நாட்டின் ஏற்றுமதிகள் பெரும்பான்மையும் செய்வினை முடிந்த பண்டங்களைக் கொண்டதாக இருக்கும். நல்ல முன்னேற்றமடையாத ஒரு நாட்டின் ஏற்றுமதி பெரும்பான்மையும் மூலப் பொருள்களைக் கொண்டதாக இருக்கும். மேலும் ஒரே நாட்டிலும்கூட வாணிபக் கலவை வெவ்வேறு காலங்களில் மாறுதல் அடையக்கூடும். எனவே, ஒரு நாட்டினுடைய வாணிபம் கலவைத் தன்மை வாய்ந்ததாக இருக்கின்றது என்பதை வைத்துக் கொண்டு பொருளாதாரத் துறையில் அந்நாடு எந்நிலையில் இருக்கின்றது என்று ஓரளவிற்கு நாம் தெளிவாகக் கூறலாம்.

## இந்திய ஏற்றுமதிகளின் கலவை

பல வகையான பண்டங்கள் இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகின்றன. ஏற்றுமதியாகும் பண்டங்களை அப்பண்டங்களின் இயல்புகளுக்கு ஏற்றாற்போல சில குறிப்பிட்ட தலைப்புகளின் கீழ்க் கொடுக்கும் வழக்கம் நடைமுறையில் இருந்துவருகின்றது. நம் நாட்டில் கையாளப்படும் தலைப்புகள் பின்வருமாறு: (1) உணவுப் பண்டங்கள், (2) புகையிலை, (3) மூலப் பொருள்கள், (4) செய்வினை முடிந்த பண்டங்கள், (5) இயந்திரங்கள், போக்குவரத்துச் சாதனங்கள்.

(1) உணவுப் பண்டங்கள்: நம் நாட்டில் மொத்த ஏற்றுமதியில் சற்றேறக்குறைய 28 சதவிகிதம் உணவுப் பண்டங்களாக இருக்கின்றன. மீன், முந்திரி, காப்பி, தேயிலை, எண்ணெய் பிண்ணாக்கு வகைகள், சர்க்கரை இவை ஏற்றுமதியாகும் முக்கிய உணவுப் பண்டங்களாகும்.

(2) புகையிலை: மொத்த ஏற்றுமதியில் செய்வினை முடியாத புகையிலை ஏற்றுமதி, 2-லிருந்து 3 சதவிகித அளவில் இருக்கின்றது.

(3) மூலப் பொருள்கள்: பல வகையான மூலப் பொருள்கள் நம் நாட்டிலிருந்து ஏற்றுமதியாகின்றன. ஆனால் முக்கியமானவை இரும்புத் தாது, இரசாயனப் பொருள்கள், எண்ணெய், கச்சாப் பருத்தி முதலியனவாகும். மொத்த ஏற்றுமதியில் மூலப் பொருள்கள் ஏற்றுமதி 17 சதவிகித அளவில் இருக்கின்றது.

(4) செய்வினை முடிந்த பண்டங்கள்: மொத்த ஏற்றுமதியில் செய்வினை முடிந்த பண்டங்களின் அளவு கணிசமாக இருக்கின்றது. 1976 - 77ல் இப்பண்டங்கள் 45 சதவிகித அளவில் இருந்தன. ஏற்றுமதியாகும் செய்வினை முடிந்த பண்டங்களுள் பருத்தித் துணி வகைகள், இரும்பு எஃகு, தோல், தோல் சாமான்கள், சணற் பண்டங்கள், விலை உயர்ந்த கற்கள் முதலியன முக்கியமானவைகளாம்.

(5) இயந்திரங்கள், போக்குவரத்துச் சாதனங்கள்: விடுதலை அடையும் தருவாயில் நம் நாடு இயந்திரங்களையும் போக்குவரத்துச் சாதனங்களையும் ஏற்றுமதி செய்யும் நிலையில் இல்லை. ஆனால், அண்மைக்கால ஏற்றுமதிப் பட்டியலில் இத்தகைய பண்டங்கள் முக்கியம் வாய்ந்தவைகளாக இருந்துவருகின்றன. 1976 - 77ஆம் ஆண்டில் ரூ. 300 கோடி மதிப்புடைய இயந்திரங்களும் போக்குவரத்துச் சாதனங்களும் ஏற்றுமதியாயின. நாட்டின் மொத்த ஏற்றுமதியில் இது 6 சதவிகித அளவாகும்.

## ஏற்றுமதிப் பண்டங்களின் கலவையில் இருக்கும் மாற்றங்கள்

பொருளாதார வளர்ச்சியின் காரணமாக நமது ஏற்றுமதிப் பண்டங்களின் கலவை மாற்றமடைந்திருக்கின்றதா? மாற்ற மடைந்திருக்கின்றது என்று தான் கூற வேண்டும். கடந்த காலத்தில் ஏற்பட்டுள்ள தொழில் முன்னேற்றம் நாட்டின் ஏற்று மதிப் பண்டங்களின் கலவையில் கணிசமான மாற்றத்தை உண்டாக்கியிருக்கின்றது. 1970 - 71, 1976 - 77 இவ்விரு ஆண்டு களுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஏற்றுமதிப் பண்டங்களின் கலவை எவ்வாறு மாற்றமடைந்தது என்பதைப் பட்டியல் 8—8 விளக்கிக் காட்டுகின்றது. நாட்டிலிருந்து ஏற்றுமதியான முக்கிய மான ஏற்றுமதிப் பண்டங்கள் அனைத்தும் இப்பட்டியலில் அடங்கி யிருக்கின்றன.

பட்டியல் 8—8-லிருந்து கீழ்க் காணும் குறிப்புகளை அறியலாம்:

(1) இந்திய ஏற்றுமதியில் மூலப் பொருள்களுக்கு இருக்கும் பங்கு நாளாவட்டத்தில் குறைந்துகொண்டே வந்திருக்கின்றது. மூலப்பொருள்களின் பங்கு 1970-71-ல் 21.2 சதவிகித அளவில் இருந்தது. 1976 - 77-ல் இது 17.8 சதவிகிதமாகக் குறைந்து விட்டது. நாட்டில் தொழில் முன்னேற்றம் ஏற்பட்டிருந்ததால், கிடைக்கும் மூலப் பொருள்களில் பெருமளவை உள் நாட்டுத் தொழிற்சாலைகளே பயன்படுத்திக்கொள்ளத் தொடங்கின.

(2) இந்திய ஏற்றுமதியில் செய்வினை முடிந்த பண்டங் களுக்கு இருக்கும் பங்கு உயர்ந்துகொண்டே வந்திருக்கின்றது. 1970 - 71-ல் 42.4 சதவிகிதமாக இருந்த இப்பண்டங்களின் பங்கு 1976 - 77-ல் 45.1 சதவிகிதத்திற்கு உயர்ந்தது. இப்பண்ட ஏற்றுமதியில் இருந்த பெருக்கம் நாட்டில் இருந்த தொழில் முன் னேற்றத்தைப் பிரதிபலிப்பதாகத்தான் கருதவேண்டும்.

(3) இயந்திரங்கள், போக்குவரத்துச் சாதனங்கள் இவற்றின் பங்கு 1970 - 71-ல் 5.7 சதவிகிதத்திலிருந்து 1976 - 77-ல் 6.6 சதவிகிதத்திற்கு உயர்ந்தது. இதனையும் தொழில் வளர்ச்சி யின் அறிகுறியாகக் கருத வேண்டும். 1960-லிருந்து நாட்டில் நல்ல தொழில் வளர்ச்சி இருந்திருக்கின்றது. இதனால், பல வகை யான இயந்திரச் சாமான்கள் விலையாகும் பன்னாட்டுச் சந்தை யில், இந்தியாவும் பிற நாடுகளுடன் போட்டியிட்டு முன்னேற முடிந்தது.

## பட்டியல் 8—3

### இந்திய ஏற்றுமதிப் பண்டங்களின் கலவை

| ஏற்றுமதிப் பண்டங்களின் பிரிவு | 1970 - 71 | | 1972 - 73 | | 1973 - 74 | | 1974 - 75 | | 1975 - 76 | | 1976 - 77 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கோடி ரூபாயில் | சத விகிதத்தில் | கோடி ரூபாயில் | சத விகிதத்தில் | கோடி ரூபாயில் | சத விகிதத்தில் | கோடி ரூபாயில் | சத விகிதத்தில் | கோடி ரூபாயில் | சத விகிதத்தில் | கோடி ரூபாயில் | சத விகிதத்தில் |
| 1. உணவுப் பொருள்கள் | 413 | 28.4 | 530 | 28.7 | 679 | 29.1 | 1019 | 33.1 | 1253 | 33.8 | 1268 | 28.2 |
| 2. புகையிலை | 33 | 2.3 | 64 | 3.5 | 71 | 3.0 | 82 | 2.7 | 99 | 2.7 | 103 | 2.3 |
| 3. மூலப் பொருள்கள் | 308 | 21.2 | 352 | 19.0 | 467 | 20.0 | 590 | 19.2 | 709 | 19.1 | 798 | 17.8 |
| 4. செய்வினை முடிந்த பண்டங்கள் | 616 | 42.4 | 816 | 44.1 | 1001 | 42.8 | 1169 | 38.0 | 1389 | 37.4 | 2022 | 45.1 |
| 5. இயந்திரங்கள், போக்குவரத்துச் சாதனங்கள் | 83 | 5.7 | 87 | 4.7 | 118 | 5.1 | 216 | 7.0 | 260 | 7.0 | 298 | 6.6 |
| 6. மொத்தம் (1லிருந்து 5 வரை) | 1453 | 100.0 | 1849 | 100.0 | 2336 | 100.0 | 3076 | 100.0 | 3710 | 100.0 | 4489 | 100.0 |
| 7. இந்தியாவின் மொத்த ஏற்றுமதிகள் | 1535 | | 1971 | | 2523 | | 3331 | | 4043 | | 5146 | |

## இறக்குமதிப் பண்டங்களின் கலவை

இந்தியாவில் இறக்குமதியாகும் பண்டங்களை ஐந்து முக்கிய தலைப்புகளின்கீழ் பாகுபடுத்தி இறக்குமதிப் பண்டங்களின் கலவையில் இருந்த மாற்றங்களை ஆய்ந்து அறியலாம்.

1. உணவுப் பொருள்கள்: இத்தலைப்பில் கோதுமை இறக்குமதி முக்கிய அங்கம் வகித்து வருகின்றது. மொத்த இறக்குமதியில் உணவுப் பொருள்களின் பங்கு ஒரு நிலையாக இல்லை. உள் நாட்டு உணவு உற்பத்தி அளவிற்கு ஏற்றாற் போல், உணவு இறக்குமதியின் அளவும் ஆண்டுதோறும் பெருத்த வேறுபாடு கொண்டிருந்தது. எடுத்துக்காட்டாக, 1972 - 73-ல் நாட்டின் மொத்த இறக்குமதியில் உணவு இறக்குமதியின் பங்கு 8.7 சத விகித அளவில்தான் இருந்தது. ஆனால், 1975 - 76-ல் இப் பங்கு 27.2 சதவிகித அளவில் இருந்தது.

2. புகையிலை: செய்வினை முடியாத புகையிலை இந்தியா வில் இறக்குமதியாவதில்லை.

3. மூலப் பொருள்கள் : இந்திய இறக்குமதிகளுள் இது ஒரு முக்கியப் பிரிவாகும். 1976 - 77-ல் மொத்த இறக்குமதியில் மூலப் பொருள்களின் இறக்குமதி 46.5 சதவிகித அளவில் இருந்தது. பெட்ரோலியப் பண்டங்களின் இறக்குமதி மிகவும் முக்கியம் வாய்ந்த ஒன்றாக இருக்கின்றது. நாட்டின் மொத்த இறக்குமதியில் பெட் ரோலியப் பண்டங்களின் இறக்குமதி ஏறக்குறைய 25 சதவிகித அளவில் இருக்கின்றது. பெட்ரோலியப் பண்டங்களின் விலை அவ்வப்போது ஏற்றமடைந்து வருவதால் இதற்காகும் இறக்கு மதிச் செலவும் ஆண்டாண்டிற்கு உயர்ந்துகொண்டே வருகின்றது. இறக்குமதியாகும் பிற முக்கிய பண்டங்கள் : கச்சாப் பருத்தி, கம்பள நூல், தாவர எண்ணெய், கொழுப்பு, இரசாயனப் பொருள் கள் முதலியனவாகும்.

4. செய்வினை முடிந்த பொருள்கள் : இந்தியாவின் மொத்த இறக்குமதியில் இப்பிரிவின் இறக்குமதி 15 சதவிகித அளவில் இருக்கின்றது. இரும்பு, எஃகு, இதர உலோகங்கள், காகிதம், முதலியன இப்பிரிவின்கீழ் வரும் முக்கிய இறக்குமதிப் பண்டங் களாகும்.

5. இயந்திரங்கள், போக்குவரத்துச் சாதனங்கள் : நாட்டின் மொத்த இறக்குமதியில் இப்பிரிவின் பங்கு 20 சதவிகித அளவில் இருக்கின்றது.

## இறக்குமதிப் பண்டங்களின் கலவையில் உள்ள மாற்றங்கள்

நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார முன்னேற்றத்தில், குறிப்பாக, தொழில் வளர்ச்சியின் விளைவால் இறக்குமதிப் பண்டங்களின் கலவையில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றனவா என்று இனி காண்போம். பல ஆண்டுகளில் இருந்த இறக்குமதிப் பண்டங்களின் கலவையின் தன்மையைப் பட்டியல் 8—4 விளக்கிக் காட்டுகின்றது.

பட்டியல் 8—4-லிருந்து கீழ்க்காணும் குறிப்புகளை அறியலாம்:

1. இந்திய இறக்குமதியில் மூலப் பொருள்களின் பங்கு விரைவாகப் பெருகிக் கொண்டே வந்திருக்கின்றது. மொத்த இறக்குமதியில் மூலப் பொருள்களின் இறக்குமதிப் பங்கு 1970-71-ல் 35.1 சதவிகித அளவில் இருந்தது; 1976-77-ல் இதன் பங்கு 46.5 சதவிகிதத்திற்கு உயர்ந்தது. நாட்டில் தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருந்ததால் பிற நாடுகளிலிருந்து இறக்குமதியான மூலப் பொருள்களின் அளவு பெருகிக்கொண்டே வந்திருக்கின்றது.

2. செய்வினை முடிந்த பண்டங்களின் இறக்குமதி குறைந்து கொண்டே வந்திருக்கின்றது. நாட்டின் மொத்த இறக்குமதியில் இப்பிரிவின் பங்கு 1970-71-ல் 23.5 சதவிகிதமாக இருந்தது. ஆனால் 1976-77-ல் இதன் பங்கு 14.6 சதவிகிதத்திற்குக் குறைந்து விட்டது. செய்வினை முடிந்த பண்டங்களைப் பொறுத்தமட்டில் நாடு ஏறக்குறைய தன்னிறைவு நிலையை எய்துவிட்டது என்று கூறவேண்டும்.

3. இயந்திரங்கள், போக்குவரத்துச் சாதனங்கள் அடங்கிய பிரிவின் பங்கும் குறைந்துகொண்டே வந்திருக்கின்றது. 1970-71-ல் 24.5 சதவிகிதமாக இருந்த இப்பிரிவின் பங்கு 1976-77-ல் 19.6 சதவிகிதமாகக் குறைந்துவிட்டது. இயந்திர வகைகள் பலவும் உள் நாட்டிலேயே உற்பத்தியாகின்றன; இவற்றிற்காக அயல் நாடுகளை எதிர்பார்த்து இருக்கவேண்டிய நிலை மாறி விட்டது என்னும் உண்மை இதிலிருந்து தெளிவாகின்றது.

## அயல்நாட்டுச் செலுத்து நிலை (Balance of Payments)

இதற்கு முந்தையப் பகுதியில், நாம் இந்தியாவின் அயல் நாட்டு வாணிப நிலையைப்பற்றி (Balance of Trade) பயின்றோம். இப்பொழுது, இந்தியாவின் அயல்நாட்டுச் செலுத்து நிலையைப் பற்றி (Balance of Payments) சுருக்கமாக அறிய முயலுவோம். ஒரு நாட்டின் ஓர் ஆண்டு காலத்திற்கான மொத்த இறக்குமதி மதிப்பு, மொத்த ஏற்றுமதி மதிப்பு இவை இரண்டிற்கும் உள்ள

## பட்டியல் 8—4

### இறக்குமதிப் பண்டங்களின் கலவை

| இறக்குமதிப் பண்டங்களின் பிரிவு | 1970-71 | | 1972-73 | | 1973-74 | | 1974-75 | | 1975-76 | | 1976-77 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கோடி ரூபாயில் | சதவிகிதத்தில் | கோடி ரூபாயில் | சதவிகிதத்தில் | கோடி ரூபாயில் | சதவிகிதத்தில் | கோடி ரூபாயில் | சதவிகிதத்தில் | கோடி ரூபாயில் | சதவிகிதத்தில் | கோடி ரூபாயில் | சதவிகிதத்தில் |
| 1. உணவுப் பொருள்கள் | 272 | 16.9 | 160 | 8.7 | 547 | 18.6 | 856 | 19.0 | 1430 | 27.2 | 965 | 19.3 |
| 2. மூலப் பொருள்கள் | 566 | 35.1 | 678 | 36.5 | 1167 | 39.6 | 2143 | 47.5 | 2216 | 42.1 | 2324 | 46.5 |
| 3. செய்வினை முடிந்த பண்டங்கள் | 378 | 23.5 | 487 | 26.2 | 581 | 19.7 | 818 | 18.1 | 676 | 12.9 | 733 | 14.6 |
| 4. இயந்திரங்கள் போக்குவரத்துச் சாதனங்கள் | 395 | 24.5 | 532 | 28.6 | 652 | 22.1 | 696 | 15.4 | 935 | 17.8 | 979 | 19.6 |
| 5. மொத்தம் (1லிருந்து 4 வரை) | 1611 | 100.0 | 1857 | 100.0 | 2947 | 100.0 | 4513 | 100.0 | 5257 | 100.0 | 5001 | 100.0 |
| 6. இந்தியாவின் மொத்த இறக்குமதி | 1634 | ... | 1867 | ... | 2955 | ... | 4520 | ... | 5265 | ... | 5074 | ... |

ஆதாரம்: ரிசர்வு வங்கியின் நாணயம், நிதி இவைப் பற்றிய அறிக்கை.

வேறுபாட்டை 'அயல் நாட்டு வாணிப நிலை' என்னும் சிறப்புப் பெயரில் அழைக்கின்றோம். 'அயல் நாட்டுச் செலுத்து நிலை' (Balance of Payments) என்பது எதைக் குறிக்கின்றது? அயல் நாட்டு வாணிப நிலையைப்பற்றிப் பயிலும்பொழுது கண்ணுக்குப் புலனாகும் இறக்குமதி (Visible Imports), புலனாகும் ஏற்றுமதி (Visible Exports) இவ்விரு இனங்களை மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்கின்றோம். 1 மில்லியன் டன் எஃகை நாடு இறக்குமதி செய்தால், இது ஒரு புலனாகும் இறக்குமதியாகும். இத்தகைய பண்டங்களை நாம் கண்ணால் காணமுடியும்; அவற்றிற்கு உருவம் இருக்கின்றது. எனவே, இவற்றைப் புலனாகும் பண்டங்கள் என்றழைக்கின்றோம். இதே போன்று, இந்தியா 100 கோடி ரூபாய் பெறுமானமுள்ள கைத்தறித் துணிகளை அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால், இதனைப் புலனாகும் ஏற்றுமதி யாகக் கருதலாம். எனவே, பண்டங்கள் உருவில் இருக்கும் இறக்குமதிகள், ஏற்றுமதிகள் அனைத்தும் புலனாகும் வணிகப் பண்டங்களாகக் கருதப்படுகின்றன. பிற நாடுகளிலிருந்து நாம் இறக்குமதி செய்யும் ஒவ்வொரு பண்டத்திற்கான கிரயத்தை அந்நாடுகளுக்கு நாம் செலுத்தவேண்டியிருக்கின்றது. இதே போன்று, நாம் ஏற்றுமதி செய்யும் ஒவ்வொரு பண்டத்திற்கான கிரயத்தை பிற நாடுகளிலிருந்து பெறுகின்றோம். எனவே, ஒவ்வொரு நாடும் இறக்குமதிக் கிரயத்தைச் செலுத்த வேண்டி யிருக்கின்றது; அதே சமயத்தில் ஏற்றுமதிக் கிரயத்தையும் பெறுகின்றது.

புலனாகும் இறக்குமதிகள், ஏற்றுமதிகள் வகையில் அடங்காத வேறு சில இனங்கள் இருக்கின்றன. இவ்வினங்களில் நடைபெறும் நடவடிக்கைகளிலும் அந்நியச் செலாவணியை ஈடுபடுத்த வேண்டி யிருக்கின்றது. இத்தகைய ஒவ்வொரு நடவடிக்கைக்கும் அந்நியச் செலாவணியைச் செலுத்த வேண்டியிருக்கின்றது; அல்லது பெற வேண்டியிருக்கின்றது. இத்தகைய இனங்களைப் (கண்ணுக்கு) புலனாகா வாணிபம் (Invisible Trade) என்ற பெயரில் அழைக் கின்றோம். அமெரிக்கத் தம்பதி இருவர் பல இடங்களைச் சுற்றிப் பார்க்கும் எண்ணத்துடன் இந்தியாவிற்கு வருகின்றனர் என்று உதாரணத்திற்கு எடுத்துக் கொள்வோம். இவர்கள் இரண்டு மாத காலம் இந்தியாவில் தங்கியிருந்து மொத்தம் 5000 டாலர் செலவு செய்கின்றனர். இந்நடவடிக்கையின் வாயிலாக இந்தியாவிற்கு 5000 டாலர் அந்நியச் செலாவணி கிடைக்கின்றது. அந்நியச் செலாவணி ஈட்டுவதைப் பொறுத்த அளவில் மேற்கண்ட நடவடிக்கைக்கும், இந்தியா 5000 டாலர் மதிப்புள்ள பண்டங்களை அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்வதற்கும் என்ன வேற்றுமை

இருக்கின்றது? வேற்றுமை ஏதும் இல்லை. ஆனால், இந்தியா விற்கு உல்லாசப் பயணிகள் வாயிலாகக் கிடைத்த 5000 டாலர் வரவினத்தை ஒரு புலனாகா ஏற்றுமதியாகக் (Invisible Exports) கருதுகின்றோம். மற்றோர் உதாரணத்தை எடுத்துக்கொள்வோம். இந்திய மருத்துவர் ஒருவர் மாநாடு ஒன்றில் கலந்து கொள் வதற்காக லண்டன் நகருக்குச் செல்கின்றார். லண்டனுக்குச் செல்வதற்கும் இந்தியாவிற்குத் திரும்பி வருவதற்கும் அவர் பி.ஓ.ஏ.சி. (B.O.A.C.) கம்பெனியின் விமானத்தைப் பயன் படுத்தினார் என்று வைத்துக் கொள்வோம். பி. ஓ. ஏ. சி. இங்கிலாந்து நாட்டுக்குச் சொந்தமான ஒரு நிறுவனமாகும். மருத்துவர் பி.ஓ.ஏ.சி. நிறுவனத்திற்குச் செலுத்தும் விமானக் கட்டணம் அந்நியச் செலாவணியைப் பொறுத்த அளவில் இங்கிலாந்திற்கு ஒரு வரவினம்; இந்தியாவிற்குச் செலவினம். இங்கிலாந்திலிருந்து இந்தியா ஒரு பண்டத்தை இறக்குமதி செய்வதற்கும் இந்திய மருத்துவர் பி.ஓ.ஏ.சி. விமானத்தைப் பயன் படுத்துவதற்கும் வேறுபாடு இல்லை. உல்லாசப் பயணச் செலவு, விமானக் கட்டணம் நாம் எடுத்துக் கொண்ட உதாரணங்கள். இவை போன்று இன்னும் எத்தனையோ இனங்கள் இருக்கின்றன. இத்தகைய புலனாகா இறக்குமதி, ஏற்றுமதி நடவடிக்கைகளின் மூலமாக அந்நியச் செலாவணி செலுத்துதல், பெறுதல் இரண்டும் எழுகின்றன. இத்தகைய இனங்கள் உருவமற்ற, கண்ணுக்குப் புலனாகாத நிலையில் இருப்பதால் இவற்றைப் புலனாகா இனங்கள் என்றழைக்கின்றோம்.

மேற்கண்ட விளக்கங்களின் சுருக்கத்தைப் பின்வருமாறு கூறலாம். ஒரு நாட்டின் அயல் நாட்டு வாணிப நிலையைப் பற்றி ஆராயும்பொழுது புலனாகும் வாணிபத்தை மட்டுமே கருத்தில் எடுத்துக் கொள்கின்றோம். புலனாகாத வாணிப இனங்களும் இருக்கின்றன. அயல் நாட்டுச் செலுத்து நிலையைப் பற்றிப் பயிலும்பொழுது புலனாகும், புலனாகா இவ்விரு வகை வாணிப இனங்களையும் கவனத்தில் கொள்கின்றோம். எனவே, அயல் நாட்டுச் செலுத்து நிலையின் விளக்கத்தைப் பின்வருமாறு அமைக்கலாம்: ஒரு நாட்டினுடைய அனைத்து அயல் நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளின் ஐந்தொகைக் குறிப்பே (Balance sheet) அந்நாட்டின் அந்நியச் செலாவணி செலுத்துநிலையாகும்.

## அந்நியச் செலாவணி செலுத்துநிலையில் மிகுதியும் பற்றாக்குறையும்

ஒரு நாட்டின் மொத்த இறக்குமதி மதிப்பு (புலனாகும் இறக்குமதி), மொத்த ஏற்றுமதி மதிப்பைவிட (புலனாகும்

ஏற்றுமதி) உயர்வாக இருந்தால் அந்நாட்டின் அயல் நாட்டு வாணிப நிலை பாதகமாக இருக்கின்றது என்று கூறுகின்றோம். ஏற்றுமதியின் மதிப்பு இறக்குமதியின் மதிப்பைவிட உயர்வாக இருந்தால் அயல் நாட்டு வாணிபநிலை சாதகமாக இருக்கின்றது என்று கருதுகிறோம். அயல் நாட்டுச் செலுத்து நிலையைப்பற்றிப் பயிலும்போது, 'சாதகம்', 'பாதகம்' என்னும் அடைமொழி களுக்குப் பதிலாக முறையே 'பற்றாக்குறை' (deficit), 'மிகுதி' (surplus) என்னும் சொற்களைப் பயன்படுத்துகின்றோம். ஒரு நாட்டின் பொருளாதார வெளி நடவடிக்கைகள் (External Economic Transactions) அனைத்தையும் கருத்திற்கொண்டு நோக்கும் பொழுது அந்நாடு அயல் நாடுகளுக்குச் செலுத்த வேண்டியதை விட அயல் நாடுகளிலிருந்து பெறவேண்டிய தொகை அதிகமாக இருக்க நேரிட்டால் அந்நாட்டின் அயல் நாட்டுச் செலுத்து நிலை மிகுதியாக இருக்கின்றது என்று குறிப்பிடுகின்றோம். இதற்கு நேர் மாறாக, ஒரு குறிப்பிட்ட ஆண்டில் ஒரு நாடு பிற நாடுகளுக்குச் செலுத்த வேண்டிய மொத்தத் தொகை அந்நாட்டிற்குக் கிடைக்க வேண்டிய தொகையைவிட உயர்வாக இருந்தால் அந்நாட்டின் அந்நியச் செலுத்து நிலை பற்றாக்குறையாக இருக்கின்றது என்று கூறுகின்றோம். ஒரு நாட்டின் அயல் நாட்டுச் செலுத்து நிலை பற்றாக்குறையாக இருப்பது ஒரு பொருளாதாரப் பிரச்சினையாகும். ஓரிரு ஆண்டுகளில் மட்டுமே பற்றாக்குறை இருந்தால் அதனை ஒரு பிரச்சினையாகக் கருதத் தேவை யில்லை. ஏனெனில் அந்நாட்டின் வசம் அந்நியச் செலாவணி இருப்பு கணிசமான அளவில் இருந்தால், தற்காலிகமாக எழும் பற்றாக்குறைகளை எளிதில் சமாளித்துவிடலாம். ஆனால், ஒரு நாட்டில் பற்றாக்குறை தொடர்ந்து பல ஆண்டுகளுக்கு நீடிக்க நேரிட்டால் அத்தகைய நிரந்தரப் பற்றாக்குறையை ஒரு பெரும் பொருளாதாரப் பிரச்சினையாகத்தான் கருதவேண்டும்.

கைவசம் இருக்கும் அந்நியச் செலாவணி இருப்பு சில ஆண்டு களில் தீர்ந்துவிடும். இருப்பைச் செலவழித்த பிறகு அந்நாடு பிற நாடுகளிலிருந்து கடன் தொகையைப் பெற்றால்தான் தொடர்ந்து வரும் ஆண்டுகளின் பற்றாக்குறையைச் சமாளிக்க இயலும். அயல் நாட்டுச் செலுத்துநிலை தொடர்ந்து பற்றாக்குறையாக உள்ள ஒரு நாட்டிற்குப் பிற நாடுகள் கடனுதவி அளிக்கத் தயங்கும் நிலை கூட ஏற்படலாம். எனவே, அயல் நாட்டுச் செலுத்து நிலையில் நிலையான பற்றாக்குறைகள் எழாத வண்ணம் நாட்டில் பொருளாதார விவகாரங்களை நிருவகிக்க வேண்டியது மிக்க அவசியமாகின்றது.

## இந்தியாவின் அயல்நாட்டுச் செலுத்துநிலை

திட்ட காலத்தில் இந்தியாவின் அயல் நாட்டுச் செலுத்து நிலையில் பல பெரும் சிக்கல்கள் எழுந்தன. 1951 - 52-ல் நாட்டில் திட்டமிட்டுச் செயல்படும் முறை தொடங்கியதிலிருந்தே அயல்நாட்டுச் செலுத்து நிலையில் ஒவ்வோர் ஆண்டும் பற்றாக் குறை எழ ஆரம்பித்தது.

அயல் நாட்டுச் செலுத்து நிலையில் பல வகையான மாற்றங் கள் இருந்தன. ஒவ்வொரு கால கட்டத்தில் ஒரு வகையான மாற்றம் ஏற்பட்டது. மாற்றத்தின் இயல்பு வேறுபட்டதாக இருந்த தால் திட்ட காலத்தை மூன்று உட்பிரிவுகளுக்குள்ளாக்கி ஒவ்வொரு பிரிவையும் தனியாக எடுத்துக்கொண்டு ஆராய்ந்தால் பயில்வதற்கு எளிதாகவும் பயனுள்ளதாகவும் இருக்கும். இக் கண்ணோட்டத்தில் நோக்கும்பொழுது திட்ட காலத்தை (1) 1951 - 52 லிருந்து 1955 - 56 வரை; (2) 1956 - 57 லிருந்து 1972 - 73 வரை; (3) 1973 - 74-க்குப் பிந்தைய ஆண்டுகள் என்று மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

### (1) 1951-52 லிருந்து 1955-56 வரை

இக்கால கட்டத்தில் முதல் ஐந்தாண்டுத் திட்டம் நிறை வேற்றப்பட்டது. இவ்வாண்டுகளில் பொதுவாக அயல் நாட்டுச் செலுத்து நிலை திருப்தியளிக்கும் வகையில் இருந்தது. அயல் நாட்டுச் செலுத்துநிலையில் மிகுதி இருந்தது. முதல் ஆண்டான 1951 - 52-ல் ரூ. 162 கோடிக்குப் பற்றாக்குறை இருந்தது. ஆனால், அதைத் தொடர்ந்து வந்த ஆண்டுகளில் செலுத்து நிலையில் மிகுதி இருந்தது. இவ்வாறு அயல் நாட்டுச் செலுத்து நிலை மன நிறைவு அளிப்பதாக இருந்ததற்குப் பின்வரும் காரணங்களைக் குறிப்பிடலாம். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாய வளர்ச் சிக்கு முதலிடம் அளிக்கப்பட்டிருந்தது. எனவே, மூலதனப் பண் டங்களையும் இயந்திரங்களையும் அதிக அளவில் இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை. மொத்த இறக்குமதி யின் அளவும் நிலையாக ஒரே மட்டத்தில் இருந்தது. எனவே, அயல்நாட்டுச் செலுத்து நிலையில் சிக்கல்கள் ஏதும் எழவில்லை.

### (2) 1956-57 லிருந்து 1972-73 வரை

இக்கால கட்டத்தில் பல புதிய சிக்கல்கள் எழுந்தன. அயல்நாட்டுச் செலுத்துநிலை கட்டுக்கடங்காத நிலையில் இருந் தது. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கப்பட்டது முதற்கொண்டு செலுத்துநிலையில் தலைகீழ் மாற்றம் ஏற்பட்டது.

1956 - 57ஆம் ஆண்டு முதற்கொண்டு ஒவ்வோர் ஆண்டிலும் அயல் நாட்டுச் செலுத்து நிலையில் பற்றாக்குறை எழ ஆரம்பித்தது. பற்றாக்குறையின் அளவும் ஆண்டாண்டிற்குப் பெருகிக் கொண்டே வந்தது. இரண்டாம் திட்ட காலத்தில் (1956 - 57—1960-61) எழுந்த ஆண்டுச் சராசரிப் பற்றாக்குறை ரூ. 330 கோடியாகும். மூன்றாம் திட்ட காலத்தில் பற்றாக்குறையின் அளவு இதைவிட உயர்ந்த மட்டத்தில் இருந்தது. மூன்றாம் திட்ட காலத்தில் ஆண்டுச் சராசரிப் பற்றாக்குறை ரூ. 395 கோடியாகும். அதற்குப்பின் வந்த ஆண்டுகளில் பற்றாக்குறையின் அளவு மேலும் பெருக்கமடைந்து வந்தது. 1967 - 68-ல் பற்றாக்குறை உச்சகட்டமாகிய ரூ. 806 கோடியை எட்டியது. இவ்வாண்டுக்குப் பிறகும் செலுத்து நிலை பற்றாக்குறையுள்ளதாக இருந்தது; ஆனால், பற்றாக்குறையின் அளவு சற்றுக் குறைந்திருந்தது. பற்றாக்குறையின் அளவு ஆண்டொன்றுக்கு ரூ. 200 கோடியி லிருந்து ரூ. 400 கோடி வரை இருந்தது. இவ்வாறு, 1956 - 57 லிருந்து 1972 - 73 வரை அயல் நாட்டுச் செலுத்து நிலை இந்தியா வுக்குப் பெரும் பிரச்சினையாக இருந்தது.

எக்காரணங்களால் இத்தகைய சிக்கல் நாட்டில் எழுந்தது?

1. அயல் நாட்டுச் செலுத்து நிலையில் எழுந்த இன்னல் களுக்கு, நாட்டின் இறக்குமதிகளில் இருந்த விரைவான பெருக்கம் ஒரு முக்கியக் காரணமாகும். இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கியதிலிருந்து நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு முதன்மை அளிக்கப்பட்டு வந்தது. கனரகத் தொழில்களையும், அடிப்படைத் தேவையான தொழில்களையும் விரைவில் வளர்க்க நாடு முயன்றது. இத்தொழில்களுக்குத் தேவைப்பட்ட இயந்திரங்களையும் தளவாடங்களையும் அயல்நாடுகளிலிருந்து அதிக அளவில் நாடு இறக்குமதி செய்ய வேண்டியிருந்தது. எனவே, இறக்குமதிகளில் அளவு கடந்த ஏற்றம் இருந்ததால் அயல்நாட்டுச் செலுத்துநிலை கேடுற்றது.

2. நாட்டின் விவசாயத் துறையில் முன்னேற்றம் இருந்தது என்பது உண்மையென்றாலும்கூட இத்துறையில் வளர்ச்சி வேகம் நன்றாக இல்லை என்றுதான் கூறவேண்டும். நாட்டின் மக்கள் தொகை விரைவாகப் பெருக்கமடைந்தது. இதனால் உணவுப் பொருள்களுக்கு இருந்த தேவையும் விரைவாக உயர்வடைந்தது. மேலும், நாட்டில் ஏற்பட்ட தொழில் வளர்ச்சி கச்சாப் பொருள் களுக்கு இருந்த தேவையைப் பெருக்கியது. உணவுப் பொருள்கள், கச்சாப் பொருள்கள் இவற்றின் தேவையில் இருந்த பெருக்கத் திற்கு ஏற்றாற்போல் நாட்டின் விவசாய உற்பத்தி பெருக்கமடைய

வில்லை. எனவே, உணவுப் பொருள்களையும், கச்சாப் பொருள் களையும் அதிக அளவில் நாடு இறக்குமதி செய்ய வேண்டி யிருந்தது. இதன் காரணமாக அயல் நாட்டுச் செலுத்து நிலை தீங்குற்றது.

3. நாடு இதுவரை நிறைவேற்றிய ஐந்தாண்டுத் திட்டங் களைப்பற்றி அத்தியாயம் 3-ல் படித்தோம். தொடர்ந்து நிறை வேற்றப்பட்ட ஒவ்வொரு திட்டமும் முதலீட்டு அளவில் பெரியதாக இருந்தது. மொத்த முதலீட்டளவு பல்லாயிரம் கோடி அளவில் இருந்திருக்கின்றது. ஆனால் திட்டங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதி வசதி உள் நாட்டில் இல்லை. அயல் நாட்டு மூலதனம் தேவைப்பட்டது. நம் நாடு பல அயல் நாடுகளி லிருந்தும், பன்னாட்டு நிதி நிறுவனங்களிலிருந்தும் பெருமளவில் நிதி உதவியைப் பெற்றது. அயல்நாடுகளிலிருந்து மூலதனத்தைப் பெறும்பொழுது அதற்காகும் வட்டித் தொகையை ஒவ்வோர் ஆண்டும் செலுத்த வேண்டியிருக்கின்றது. காலக்கெடு முடிவுற்றால் கடன் தொகையைத் திருப்பிக் கொடுக்க வேண்டியிருக்கின்றது, இவ்வாறு வட்டியைச் செலுத்துவதையும், கெடு முடிந்ததும் கடன்களைத் திருப்பிக் கொடுப்பதையும் 'கடன் பணி' (Debt Servicing) என்று பொருளியலில் அழைக்கிறார்கள். இந்தியாவிற்குக் கடன் பணியின் பளு காலப்போக்கில் அதிகமாயிற்று. 1961-62-ல் நாட்டின் கடன் பணிக்கான செலவு (அயல் நாட்டுக் கடன்) ரூ. 91 கோடியாகும். காலப்போக்கில் இது 1966 - 67-ல் ரூ. 272 கோடி எனவும், 1972 - 73-ல் ரூ. 479 கோடி எனவும் உயர்ந்தது. கடன் பணியின் பளு எவ்வளவு சுமையானது என்பதைக் கடன் பணிக்கான செலவை ஏற்றுமதிகளின் மூலம் ஈட்டிய அந்நியச் செலாவணியின் அளவோடு ஒப்பிட்டுப் பார்த்தால் நன்றாகப் புலனாகும். 1972 - 73ஆம் ஆண்டில் புலனாகும் ஏற்றுமதிகளின் வாயிலாக நம் நாடு மொத்தம் ரூ. 1895 கோடி ஈட்டியது. அந்த ஆண்டில் கடன் பணிக்கான செலவு ரூ. 479 கோடியாகும். அதாவது, மொத்த ஏற்றுமதிகளின்மூலம் நாடு ஈட்டும் தொகையில் ஏறக்குறைய நான்கில் ஒரு பங்கைக் கடன் பணி செய்வதற்காகப் பிற நாடுகளுக்குச் செலுத்தவேண்டியிருக்கின்றது. கடன் பணியின் சுமை ஒவ்வோர் ஆண்டும் பெருகிக்கொண்டே வந்ததால் அயல் நாட்டுச் செலுத்துநிலை பல இன்னல்களுக்கு உட்பட வேண்டி யிருந்தது.

4. முடிவாக மற்றொரு முக்கிய காரணத்தையும் குறிப் பிடுதல் வேண்டும். இறக்குமதிகளுக்கு இருந்த தேவை நாளா வட்டத்தில் பெருகிக்கொண்டே வந்திருக்கின்றது. ஆனால்,

ஏற்றுமதிகளில் நல்ல வளர்ச்சி இல்லை. எனவே, இறக்குமதிகளின் மீது இந்திய அரசு பல தடைகளை விதித்தது. தடைகள் விதிக்கப் பட்டும்கூட இறக்குமதிகள் பெருகிக் கொண்டே வந்தன. ஏற்றுமதிகளை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் ஏற்றுமதியாளர் களுக்கு அரசு பல சலுகைகளை அளித்து வந்தது. இருப்பினும், இறக்குமதிகளில் இருந்த அளவிற்கு ஏற்றுமதிகள் பெருக்கமடைய வில்லை.

## (3) 1973-74-க்குப் பிந்தைய ஆண்டுகள்

1973-74ஆம் ஆண்டுக்குப் பின்னர் நாட்டில் அயல் நாட்டுச் செலுத்து நிலையில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. பல ஆண்டுகளுக்குப் பிறகு முதன் முறையாக 1973-74-ல் அயல் நாட்டுச் செலுத்து நிலையில் மிகுதி கிடைத்தது. மிகுதியின் அளவு கணிசமாக (ரூ. 1301 கோடி) இருந்தது. அடுத்த ஆண்டான 1974-75-ல் மறுபடியும் பற்றாக்குறை எழுந்தது. அந்த ஆண்டில் ரூ 644 கோடி பற்றாக்குறை இருந்தது. ஆனால், அதற்குப் பிந்தைய ஆண்டுகளில் மிகுதி கிடைத்தது. 1975 - 76-ல் ரூ. 294 கோடி மிகுதியும், 1976 - 77-ல் ரூ. 1526 கோடி மிகுதியும், 1977 - 78-ல் ரூ. 1735 கோடி மிகுதியும் கிடைத்தன. இவ்வாறு, 1972 - 73-க்கு முன்பு இருந்த நிரந்தரப் பற்றாக்குறை நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. 1973 - 74ஆம் ஆண்டிலிருந்து அயல் நாட்டுச் செலுத்து நிலை வசதியாகவும் மன நிறைவு அளிக்கும் வகையிலும் இருந்து வருகின்றது.

1973 - 74ஆம் ஆண்டிற்குப் பிறகு இருக்கும் முன்னேற்றத் திற்குக் காரணங்கள் யாவை?

1. ஏற்றுமதிகளில் இருக்கும் வளர்ச்சியை முதற் காரண மாகக் குறிப்பிட வேண்டும். 1972 - 73ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த ஏற்றுமதிகளின் மதிப்பு ரூ. 1895 கோடியாகும். அதற்குப் பிறகு நாட்டின் ஏற்றுமதிகளில் நல்ல முன்னேற்றம் இருந்திருக் கின்றது. ஏற்றுமதி மதிப்புகளின் மதிப்பு 1974 - 75-ல் ரூ. 3180 கோடிக்கும், 1975 - 76-ல் ரூ. 5434 கோடிக்கும் ஏற்றமடைந்தது. 1973 - 74-க்குப் பிந்தைய ஒவ்வோர் ஆண்டிலும் மொத்த ஏற்று மதிகளின் மதிப்பு இறக்குமதிகளின் மதிப்பைவிட உயர்வாக இருந்திருக்கின்றது. 1973 - 74-க்கு முந்தைய ஆண்டுகள் ஒவ்வொன்றிலும் இதற்கு நேர்மாறான நிலை இருந்துவந்தது.

2. அயல் நாடுகளில் வாழும் இந்தியர்கள் தாய் நாட்டிற்கு அனுப்பி வைக்கும் தொகையில் இருந்த வளர்ச்சியை இரண் டாவது முக்கியக் காரணமாகக் குறிப்பிட வேண்டும். அண்மை

ஆண்டுகளில் இந்தியர்கள் பெரும் எண்ணிக்கையில் வெளி நாடுகளுக்குச் சென்று, குறிப்பாக மத்தியக் கிழக்கு நாடுகளில் வேலையில் அமர்ந்திருக்கின்றனர். இவர்களுடைய எண்ணிக்கை ஆண்டாண்டிற்கு உயர்ந்துகொண்டே வந்தது. இவர்கள் ஒவ்வோர் ஆண்டும் தங்களுடைய உறவினர்களுக்குப் பெருமளவில் பணம் அனுப்பி வருகின்றனர். இந்தியர்கள் பலர் அயல் நாடுகளில் வேலையேற்று இருப்பதன் வாயிலாக இந்தியாவுக்குக் கணிசமான அளவில் அந்நியச் செலாவணி கிடைத்து வருகின்றது. 1971-72ஆம் ஆண்டில் இவ்வழியில் ஈட்டிய மொத்தத் தொகை ரூ. 175 கோடியாகும். ஆனால், 1977-78-ல் இத்தொகை ரூ. 1030 கோடிக்கு உயர்ந்தது. அயல்நாடுகளில் வாழும் இந்தியர்கள் அனுப்பும் அந்நியச் செலாவணி நாட்டின் அயல் நாட்டுச் செலுத்து நிலையைப் பெருமளவிற்கு மேன்மையுறச் செய்திருக்கின்றது.

## அந்நியச் செலாவணி இருப்பு (Foreign Exchange Reserve)

ஒவ்வொரு நாடும் போதிய அளவிற்கு அந்நியச் செலாவணி இருப்பு வைத்திருக்க வேண்டியது அவசியமாகிறது. பொருளாதாரத் துறையில் நல்ல நிலையிலும், பன்னாட்டுப் பொருளாதார விவகாரங்களில் நல்ல வலுவுள்ள நிலையிலும் இருந்து, அயல் நாட்டுச் செலுத்துநிலையில் தொடர்ந்து மிகுதியைப் பெற்றுவரும் ஒரு நாட்டினால் மிக உயர்ந்த அளவில் அந்நியச் செலாவணி இருப்பு வைத்திருக்க இயலும். ஆனால், தொடர்ந்து பற்றாக்குறை ஏழக்கூடிய அயல்நாட்டுச் செலுத்து நிலையைக்கொண்ட ஒரு நாட்டின் இருப்பு மிகக் குறைந்த அளவில்தான் இருக்கக்கூடும். நம் நாட்டின் அந்நியச் செலாவணி இருப்பு மூன்று உருவங்களில் இருக்கின்றன: (1) ஐக்கிய அமெரிக்க டாலர், இங்கிலாந்தின் பவுண்டு, கானடாவின் டாலர், ஜப்பானிய யென் போன்ற பிற நாடுகளுடைய நாணயங்களில் இருக்கும் அந்நியச் செலாவணி ஒரு வகை; (2) பன்னாட்டு நிதி நடவடிக்கைகளில் தடையின்றி ஏற்றுக்கொள்ளப்படுகின்ற பொன் மற்றொரு வகை; (3) எஸ்.டி.ஆர். (S.D.R.'s) என்றழைக்கப்படும் பன்னாட்டுச் செலாவணி பிறிதொரு வகையாகும். ஐ.எம்.எப். (I.M.F.) என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் பன்னாட்டு நாணய நிறுவனத்தில் அங்கத்தினர்களாக உள்ள எல்லா நாடுகளுக்கும் இருக்கும் தனி உரிமை எஸ்.டி.ஆர். என்றழைக்கப்படுகின்றது.

## இந்தியாவின் அந்நியச் செலாவணி இருப்பு

கடந்த ஆண்டுகளில் இந்தியாவின் அந்நியச் செலாவணி இருப்பு மிகக் குறைந்த அளவில் இருந்துவந்தது. 1955ஆம்

ஆண்டிலிருந்து 1975ஆம் ஆண்டுவரை நம் நாட்டில் அந்நியச் செலாவணிக்குப் பெரும் தட்டுப்பாடு இருந்தது. எனவே, அந்நியச் செலாவணி இருப்பும் மிகக் குறைந்த அளவில்தான் இருந்தது. ஆனால், 1975ஆம் ஆண்டிலிருந்து நிலைமையில் ஓரளவிற்கு முன்னேற்றம் இருந்துவருகின்றது. 1973-74ஆம் ஆண்டிலிருந்து அயல்நாட்டுச் செலுத்து நிலையில் நல்ல முன்னேற்றம் இருந்தது என்று இதற்கு முந்தைய பகுதியில் படித்தோம். இதைத் தொடர்ந்து நாட்டின் அந்நியச் செலாவணி இருப்பு நிலையிலும் நல்ல முன்னேற்றம் இருந்திருக்கின்றது. நாட்டின் அந்நியச் செலாவணி இருப்பு நிலையைப் பட்டியல் 8—5 விளக்கிக் காட்டுகின்றது.

## பட்டியல் 8—5

இந்தியாவின் அந்நியச் செலாவணி இருப்பு

| ஆண்டு | எஸ். டி. ஆர். (மில்லியன் எஸ். டி. ஆர்.-ல்) | பொன் | அந்நியச் செலாவணி |
|---|---|---|---|
| | | மில்லியன் ரூபாயில் | |
| 1971 | 148.9 | 1825.3 | 4381.2 |
| 1974 | 244.9 | 1825.3 | 5807.8 |
| 1975 | 234.9 | 1825.3 | 6105.0 |
| 1976 | 202.8 | 1825.3 | 14917.9 |
| 1977 | 187.4 | 1878.0 | 28629.9 |
| 1978 | 161.6 | 1930.9 | 44997.5 |
| 1979 | 364.9 | 2159.0 | 52198.6 |

ஆதாரம்: ரிசர்வு வங்கி வெளியிடும் நாணய, நிதி நிலையைப் பற்றிய அறிக்கை—1979 - 80

# 9. வேலை வாய்ப்பு நிலை

வேலை (Employment), வேலையின்மை (Unemployment) என்னும் சொற்களைப் பொருளியலில் கலைச் சொற்களாகப் (Terms) பயன்படுத்துகின்றோம். சாதாரண வழக்கில் வேலையின்மை என்னும் சொல்லைத் தனிநபர்கள் வேலையில் லாமல் இருக்கும் நிலையை உணர்த்துவதற்குத்தான் கையாளு கின்றோம். ஆனால், பொருளியலில் நிலம் (Land), மனித உழைப்பு (Labour), மூலதனம் (Capital), தொழில் முயல்வோன் (Entrepreneur) ஆகிய நான்கு உற்பத்திக் காரணிகளைத் (Factors of Production) தொடர்புபடுத்தி வேலையின்மை என்னும் சொல்லைப் பயன்படுத்துகின்றோம். நிலம் பயன் படுத்தப்படாமல் இருக்கநேரிட்டால் அந்நிலையையும் வேலை யின்மை என்றுதான் அழைக்கின்றோம். எனவே வேலையின்மை என்பது மனித உழைப்புக்கு வேலை கிடைக்காத நிலையை மட்டுமே உணர்த்தும் என்று கருதக் கூடாது. இருந்தாலும், மக்கள் வேலையில்லாமல் இருப்பதற்கும் பிற காரணிகள் வேலையில்லாமல் இருப்பதற்கும் வேறுபாடு இருக்கின்றது. மக்கள் வேலையில்லாமல் இருப்பதால் பல சமுதாயப் பிரச்சினைகள் எழுகின்றன. நிலமும் மூலதனமும் வேலையில்லாமல் இருக்க நேரிட்டால் அவை கிளர்ச்சி செய்வதில்லை; அவை பட்டினி யாலும் பசியாலும் வாடுவதில்லை. இக்காரணத்தால், வேலை யின்மைபற்றி எழுதும்பொழுதும் பேசும்பொழுதும் மக்களுடைய வேலையின்மையை மட்டுமே கருத்தில் கொள்வது சாதாரண வழக்கமாகிவிட்டது. இவ்வழக்கத்தின்படி மக்களுடைய வேலை நிலை, அவர்களுடைய வேலையின்மை இவைபற்றி இவ்வத்தியா யத்தில் பயில்வோம். பிற காரணிகள் தொடர்பான வேலை யின்மைபற்றி விளக்கமாக நீங்கள் கல்லூரி மட்டத்தில் பயில இருக்கிறீர்கள்.

### தன் விரும்பா வேலையின்மை (Involuntary Unemployment)

ஒரு பெண் மனையியலில் பட்ட மேற்படிப்பு வரை பயின் றிருக்கிறாள். ஒரு வேலையில் அமர்ந்து பணி செய்து பணம் ஈட்டுவதில் அவளுக்கு நாட்டம் இல்லை. இல்லாளாக இருந்து

அன்றாட வீட்டு வேலைகளைக் கவனித்து, கணவன் குழந்தைகள் மீது அன்பு செலுத்தி அவர்களுக்கு உறுதுணையாகப் பணி செய்வதை அவள் பெரிதும் விரும்புகின்றாள். நல்ல வசதி படைத்த ஒரு நிலக்கிழாருடைய மகன் கல்லூரியில் பயின்று பட்டம் பெற்றிருக்கிறான். வேலை தேட அவன் விரும்பவில்லை. தன்னுடைய தந்தையின் சொத்துகளிலிருந்து கிடைக்கும் வருமானத்தை வைத்துக்கொண்டு வாழ விரும்புகின்றான். ஆன்மீகத் துறையில் ஈடுபாடுள்ள ஒரு மத குரு கல்வியில் தேர்ச்சி பெற்றவர், தனித்திறமையும் படைத்தவர்; ஆனால் குறிப்பிட்ட ஓர் இடத்தில் இருந்து வேலை எதனையும் மேற்கொள்ள விருப்பமில்லாதவர். வருவாய் ஈட்டவும் அவர் விரும்பவில்லை. குடும்பத் தலைவி, நிலக் கிழாருடைய மகன், மதகுரு இம்மூவரும் வேலையில்லாமல் இருக்கின்றார்கள் என்று கூறுவது பொருத்தமுடையதா? அவ்வாறு கூற முடியாது. ஏனெனில், இம்மூவருக்கும் வேலையில் அமர்வதில் நாட்டமில்லை. வேலையில்லாமல் இருப்பதையே அவர்கள் விரும்புகின்றனர். தாமே விரும்பி அவர்கள் வேலையில்லாமல் இருக்கின்றனர். இந்நிலையைத் 'தன்விருப்ப வேலையின்மை' (Voluntary unemployment) என்ற பெயரில் அழைக்கலாம். ஆனால், பொருளியலில் வேலையின்மை என்று குறிப்பிடும் பொழுது அச்சொல் தன் விரும்பா வேலையின்மை (Involuntary unemployment) மட்டுமே குறிக்கும். அன்றாட வழக்கில் நிலவும் கூலியைப் பெற்று அல்லது அதைவிடக் குறைந்த அளவுக்குக்கூட கூலியை பெற்றுக் கொண்டு வேலையை மேற்கொள்ள முன் வருபவர்களுக்கு வேலை கிடைக்காத நிலையைத்தான் 'தன் விரும்பா வேலையின்மை' என்னும் சொற்றொடர் குறிப்பிடுகின்றது.

## வளர்ச்சியடைந்த நாடுகளில் நிலவும் வேலையின்மை

வளர்ச்சியடைந்த நாடுகளிலும் வேலையின்மை என்ற நிலை எழுகின்றது. இந்தியா போன்ற பின்தங்கிய நாடுகளிலும் வேலையின்மை நிலவுகின்றது. ஆனால், வேலையின்மை இவ்விரு நாடுகளிடையே மாறுபட்ட தன்மையுடையதாக இருக்கின்றது. வளர்ச்சியடைந்த நாடுகளில் நிலவும் வேலையின்மை தற்காலிக இயல்புடையதாகும். சில வகை மாற்றங்கள் நாட்டில் ஏற்படுவதன் விளைவால் இத்தகைய தற்காலிக வேலையின்மை எழுகின்றது. இக்கருத்தைச் சற்று விரிவாக விளக்கலாம். எந்த ஒரு குறிப்பிட்ட நேரத்திலும் வளர்ச்சியடைந்த நாடுகளில் சிலர் வேலையின்றி இருக்க நேரிடும். இவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்பதன்று இதற்குக் காரணம். இதற்கு வேறு பல காரணங்கள்

இருக்கின்றன. இந்நாடுகளில் தொழிலாளர்கள் ஒரு தொழிலி லிருந்து பிறிதொரு தொழிலுக்கு மாறிச் செல்வது சாதாரண வழக்கம். பழைய தொழிலை விட்டுப் புதிய தொழிலில் வேலை ஏற்பதற்குச் சில நாள்கள் தேவைப்படும். இந்நாள்களில் அவர்கள் வேலையில்லாமல் இருக்க நேரிடும். இயந்திரங்களைப் பழுது பார்த்து, பழைய கருவிகளை அகற்றிவிட்டுப் புதிய கருவிகளைப் பொருத்துவதற்காகச் சில நாள்களுக்குத் தொழிற்கூடங்கள் மூடிக் கிடக்கும். இந்நாள்களில் தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருப்பார்கள். மேலை நாடுகளில் தொழில்நுட்ப இயல் அவ்வப் போது மாற்றமடைந்து வருகின்றது. உற்பத்தி முறையும் மாறிக் கொண்டே வருகின்றது. நூதன இயந்திரங்களை முதன் முறை யாகப் பயன்படுத்துவதன் விளைவால் சிலர் வேலையிழக்க நேரிடும். மேற்கூறிய காரணங்களால் வேலை இழந்து நிற்கும் தொழிலாளர்களுக்கு மீண்டும் எளிதில் வேலை கிடைக்கும். எனவே, இவர்களை நிரந்தரமாக வேலையில்லாமல் இருக்கின்ற னர் என்று கருத முடியாது. ஆக, வளர்ச்சியடைந்த நாடுகளில் காணப்படும் வேலையின்மை தற்காலிகத் தன்மையுடையதாகும். சோஷியலிச நாடுகளை எடுத்துக் கொண்டால் அங்கு வேலை யின்மை ஒரு பெரும் பிரச்சினையாக இருப்பதில்லை.

## பின்தங்கிய நாடுகளில் நிலவும் வேலையின்மை

இந்தியா போன்ற பின்தங்கிய நிலையில் இருக்கும் நாடு களில் வேலையின்மை ஒரு கொடுமை விளைவிக்கக்கூடிய, நிரந் தரப் பிரச்சினையாக இருக்கின்றது. இந்நாடுகளில் தொழிலாளர் களின் அளிப்பிற்கும் தேவைக்கும் இடையே நிரந்தர வேறுபாடு இருந்துவருகின்றது. தேவை குறைவாகவும் அளிப்பு மிக அதிக மாகவும் இருக்கின்றது. இக்காரணத்தால் மொத்த மக்களில் பெரும் பான்மையோர் வேலையின்றி இருக்கின்றனர். உழைக்கும் சக்தி படைத்து, உழைக்க முன் வரும் அனைவருக்கும் வேலை அளிக்கும் நிலையில் நாட்டுப் பொருளாதாரம் திறன் படைத்ததாக இல்லை. இவ்வகையைச் சேர்ந்த நிரந்தர வேலையின்மை ஒரு பொருளாதாரப் பிரச்சினையாக மட்டும் நின்றுவிடுவதில்லை. அது ஒரு சமுதாயப் பிரச்சினையாக உருவெடுக்கின்றது. வேலை யேற்க முன்வரும் அனைவருக்கும் வேலையளித்து அவர்களுடைய முழு உழைப்பைப் பயன்படுத்தினால் நாட்டில் உற்பத்தி பெருகும். எனவே, நாட்டில் வேலையின்மை நிலவினால், மனித சக்தி வீணடிக்கப்படுகின்றது என்றுதான் பொருள். மேலும் வேலை யில்லாத் திண்டாட்டத்தினால் பல சமூகச் சிக்கல்களும் கிளைக் கின்றன. வேலையில்லாமல் இருப்பவர்கள் வாழ்க்கையில்

வெறுப்புற்று நல்வழியிலிருந்து திசை மாறி, சமூக விரோதச் செயல்களில் ஈடுபடத் தொடங்குகின்றனர். எண்ணிக்கையற்றவர்கள் ஏழ்மையில் அவதியுறுவதற்கு வேலையின்மையே முக்கியக் காரணமாகும். வேலையின்மை இவ்வாறு ஒரு கொடிய பிரச்சினையாக இருப்பதால் இதற்குப் பரிகாரம் காண அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இருப்பினும், பிரச்சினை நீங்கியபாடில்லை. வேலையின்மையை அறவே நீக்குவது என்பது நம் நாட்டில் அவ்வளவு எளிதான செயலன்று.

## கிராமப்புறங்களில் நிலவும் வேலையின்மை

கிராமப்புறங்களில் வேளாண்மை, கால்நடைகளைப் பராமரித்தல், காட்டில் மரம் வெட்டுதல், மீன் பிடித்தல் இவைகளே முக்கிய வேலை வாய்ப்புச் சாதனங்களாக இருக்கின்றன. நூல் நூற்றல், துணி நெய்தல், தச்சு வேலை, கருமான் வேலை போன்ற குடிசைத் தொழில்கள் ஓரளவிற்கு வேலை வாய்ப்பு அளிக்கின்றன. ஆனால், பயிர்த் தொழில்தான் முக்கியத் தொழிலாக இருந்து வருகின்றது. விவசாயத்திற்குக் கிடைக்கும் நில அளவு குறைவாக இருக்கின்றது. எனவே, கிராம மக்கள் அனைவருக்கும் வேளாண்மை மூலம் வேலை வாய்ப்பு கிடைப்பதில்லை. கிராமப் புறங்களில் வேலையின்மை நிலவுவதற்கு இதுவே முக்கியக் காரணமாகும். இப்பகுதிகளில் நிலவும் வேலையின்மையை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்: (1) பருவகால வேலையின்மை (Seasonal unemployment); (2) வேலைக் குறைவு (Under employmemt) அல்லது உருமாறிய வேலையின்மை (Disguised unemployment). எண்ணிக்கையில் அடங்காத மக்கள் வேலை வாய்ப்புக்குப் பயிர்த் தொழிலையே நம்பி இருக்கின்றனர். ஆனால், பயிர்த் தொழில் எல்லாக் காலங்களிலும் மேற்கொள்ளப்படுவதில்லை. சில மாதங்களில் சாகுபடி வேலைகள் முனைப்பாக நடக்கும். சில மாதங்களில் மந்தமாக இருக்கும். நெற்பயிரைச் சாகுபடி செய்யும் பொழுது நாற்று நடுதல், நெல் அறுவடை போன்ற வேலைகள் மும்முரமாக நடக்கும் காலங்களில் கிராம மக்கள் அனைவரும் வேலையில் ஈடுபட்டிருப்பதைக் காண்கின்றோம். மற்ற நேரங்களில் வயல் வேலைக்கு அந்த அளவிற்குத் தேவை இருப்பதில்லை. இந்நேரங்களில் இருக்கும் வேலையின்மையைப் பருவகால வேலையின்மைக்கு உதாரணமாகக் கூறலாம். பருவகால வேலையின்மை நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் ஒரே காலத்தில் நிலவும் என்று கூறமுடியாது. வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு காலத்தில் பருவகால வேலையின்மை நிலவக்கூடும். விளையும் பயிர் வகைகள், நீர்ப்பாசன வசதிகள், பயிர்ச்செறிவு

போன்ற இயல்புகளுக்கு ஏற்றாற்போல பருவகால வேலையின்மை வெவ்வேறு பகுதிகளில் மாறுபட்டிருக்கும்.

'வேலைக் குறைவு' அல்லது 'உருமாறிய வேலையின்மை' பருவகால வேலையின்மையிலிருந்து மாறுபட்ட தன்மையுடைய தாகும். இதற்கான விளக்கத்தை ஓர் உதாரணத்தின் துணை கொண்டு காணலாம். ஓர் ஏக்கர் நிலத்தை ஓராண்டு காலத்திற்கு சீரிய முறையில் பயிர் செய்வதற்கு நான்கு ஆள்களின் உழைப்பு தேவைப்படுகின்றது. அந்நிலத்திற்கு உரிமையாளரான குடும்பத் தில் மொத்தம்—தந்தை, தாய், வயதுவந்த நான்கு மைந்தர்கள்— ஆறு நபர்கள் இருக்கின்றனர். இந்த நிலையில் குடும்பத்திலுள்ள நால்வருக்குத்தான் நிலத்தில் முழு வேலை இருக்கும். சொந்த நிலத்தில் பயிர்த் தொழிலில் ஈடுபட்டிருக்கும் நால்வர் போக எஞ்சிய இருவருக்கு வேறு இடத்தில் வேலை கிடைக்காவிட்டால் அவ்விருவரும் சொந்த நிலத்திலேயே வேலை செய்யவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாவர். நான்கு ஆள்கள் செய்யவேண்டிய வேலையை இப்பொழுது ஆறு ஆள்கள் செய்வார்கள். குடும்பத்தில் உள்ள ஆறு நபர்களும் வேலையில் ஈடுபட்டிருப்பதைப் போன்று தோன்றும். இஃது ஒரு தோற்றமே. ஏனெனில், உண்மையில் பார்க்கப்போனால் நான்கு ஆள்களுக்கு மட்டுமே முழுமையான வேலை இருக்கும். இந்த ஓர் ஏக்கர் நிலச் சாகுபடியிலிருந்து இரண்டு ஆள்களை அகற்றிவிட்டால் கிடைக்கக்கூடிய விளைச் சலில் எவ்வித மாற்றமும் இருக்காது. இத்தகைய ஒரு நிலையைத் தான் 'வேலைக் குறைவு' அல்லது 'உருமாறிய வேலையின்மை' என்ற பெயரில் அழைக்கின்றோம். நாம் எடுத்துக் கொண்ட உதாரணத்தில் ஆறு ஆள்களும் குறைந்த வேலை செய்கின்றனர்; எனவே, இங்கு வேலைக் குறைவு நிலை இருக்கின்றது. ஆறு ஆள்களும் வேலையில் இருப்பதைப் போன்ற தோற்றமளிக் கின்றனர். ஆனால், அவர்களிடையே வேலையின்மை நிலவு கின்றது. அதாவது வேலையின்மை உருமாறி இருக்கின்றது என்று கூறலாம். கிடைக்கும் நிலம் குறைந்த அளவில் இருக்க அந்நிலத்தை நம்பி வாழும் மக்கள் அதிக எண்ணிக்கையில் இருக்கும் இக்காரணத்தால் கிராமப்புறங்களில் 'வேலைக் குறைவு' பரவலாக நிலவுகின்றது.

## நகர்ப்புறங்களில் வேலையின்மை

நகர்ப்புறங்களில் வேலையின்மை பரவலாகக் காணப் படுகின்றது. ஆனால், இப்பகுதிகளில் நிலவும் வேலையின்மை, கிராமப்புறங்களில் காணப்படும் பருவ கால வேலையின்மை, உருமாறிய வேலையின்மை இவற்றிலிருந்து மாறுபட்ட தன்மை

வாய்ந்ததாய் இருக்கின்றது. நகரங்களின் எண்ணிக்கையும், நகர்ப்புறப் பகுதிகளின் அளவும் பெருகிக்கொண்டே வருகின்றன. கிராம மக்கள் பலர் வேலை தேடி நகர்ப்புறங்களுக்குத் தொடர்ந்து குடிபெயர்ந்து சென்று கொண்டே இருக்கின்றனர். இவ்வாறு நிலையாகக் குடிபெயர்ந்து செல்பவர்கள் அல்லாமல், கிராமங்களில் பயிர் வேலை அதிகமாக இல்லாதபொழுது அருகில் உள்ள நகரங்களுக்கு வேலை நாடிச் சென்றுவிட்டு மறுபடியும் பயிர் வேலை தொடங்கியதும் கிராமத்திற்குத் திரும்பும் மக்களும் கணிசமான எண்ணிக்கையில் இருக்கின்றனர்: இவர்கள் அனைவருக்கும் வேலை அளிக்கக்கூடிய வகையில் நாட்டில் தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கின்றது என்று கூறமுடியாது. மற்றுமொரு பிரச்சினையையும் இங்கு கவனிக்கவேண்டும். படித்துவிட்டு வேலையில்லாமல் இருப்பவர்களுடைய எண்ணிக்கை நகர்ப்புறங்களில் அதிகமாக இருக்கின்றது. நாடு விடுதலை அடைந்த பிறகு கல்வி வசதி பரவலாக்கப்பட்டிருக்கிறது. பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றின் எண்ணிக்கை பெருகியிருக்கின்றது. மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பம் போன்ற தொழில் சார்ந்த படிப்பை மேற்கொண்டவர்கள் வேலைக்கு அமர்வதில் அவ்வளவு இடர்ப்பாடுகள் இல்லை. ஆனால், வெறும் பட்டதாரிகளாக இருப்பவர்களுக்கு வேலை கிடைப்பது வெகு கடினமாக இருக்கின்றது.

## வேலை வாய்ப்புபற்றிய தகவல்கள்

நாட்டை எதிர்நோக்கி நிற்கும் பல முக்கியப் பிரச்சினைகளுள் வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு பெரும் பிரச்சினையாக இருந்து வருகின்றது. வேலையின்மைப் பிரச்சினை நாட்டில் நிலவுவதை நாமெல்லோரும் நன்றாக அறிவோம். ஆனால், நாட்டில் மொத்தம் எத்துணை பேர் வேலையில்லாமல் இருக்கின்றனர் என்பதைப்பற்றி நாம் துல்லியமாக அறியமுடிவதில்லை. வேலையின்மையின் அளவு என்ன என்பதை நாம் தெளிவாகக் கூறக்கூடிய நிலையில் இல்லை. வேலையின்மைபற்றிய நம்பத்தகுந்த புள்ளி விவரங்கள் தேவையான அளவுக்குக் கிடைப்பதில்லை என்பது முதற் காரணமாகும். மேலும், வேலையின்மை பற்றிய அடிப்படை விளக்கங்கள் கொடுப்பதிலும் பல இடையூறுகள் எழுகின்றன. ‘உழைப்பு’ (Labour) என்னும் சொல்லைப் பொதுப்படையாகவும் பரவலாகவும் பயன்படுத்துகின்றோம். ஆனால், எல்லா உழைப்பும் ஒரே சீரானதன்று; உழைப்பின் தன்மையில் வேறுபாடுகள் இருக்கின்றன. நரம்பியல் அறுவை சிகிச்சையாளர் ஒருவர் ஆற்றும் பணியை உழைப்பு என்கின்றோம். பொறியியற் கல்லூரிப் பேராசிரியர் ஒருவர் ஆற்றும் பணியையும் உழைப்பு

என்று குறிப்பிடுகின்றோம். அலுவலகம் ஒன்றில் எழுத்தர் செய்யும் வேலையையும் உழைப்பு என்றழைக்கின்றோம். வீதியைக் கூட்டும் தொழிலாளருடைய துப்புறவுப் பணியையும் உழைப்பு என்றே குறிப்பிடுகின்றோம். மிக உயர்ந்த திறன் படைத்த உழைப்பு (Highly Skilled Labour), திறன் படைத்த உழைப்பு (Skilled Labour), அரைகுறையான திறன் படைத்த உழைப்பு (Semi Skilled Lobour), திறன் இல்லாத உழைப்பு என்று உழைப்பைப் பல வகையாகப் பாகுபடுத்தலாம். பெண்கள் மேற் கொள்ளும் உழைப்பு, சிறார்கள் மேற்கொள்ளும் உழைப்பு என்று தனித்தனிப் பிரிவுகளும் இருக்கின்றன. மேலும் வேலையின்மை யில் பருவ கால வேலையின்மை, உருமாறிய வேலையின்மை என்று இயல்பில் மாறுபட்ட பலவகையான வேலையின்மைகள் இருக்கின்றன. இவ்வாறு இருக்கும் ஒவ்வொரு பிரிவையும் துல்லிய மாக விளக்கிக் கூறுவது ஒரு கடினமான செயலாக இருக்கின்றது. ஒவ்வொரு வகை உழைப்பையும் வேலையின்மையையும் அளந்து கூறுவது என்பதும் கடினமான செயலாகத் திகழ்கின்றது. நாட்டின் வெவ்வேறு கூறுகள் ஒவ்வொன்றிலும் எத்துணை பேர்கள் வேலையில் ஈடுபட்டு உழைத்துவருகின்றனர் என்பதுபற்றிப் புள்ளி விவரங்களை இன்று பல அமைப்புகள் திரட்டி அளித்து வருகின்றன. மக்கள் கணக்கெடுப்புத் துறை, மத்திய புள்ளி விவர அமைப்பு (Central Statistical Organisation), தேசிய மாதிரி ஆய்வு (National Sample Survey), வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி அளிக்கும் இயக்குநர் அலுவலகம் இவை முக்கியமான அமைப்புகளாகும். இவை அனைத்தும் அரசுத் துறை அமைப்பு களாகும். இவ்வாறு பல அமைப்புகள் நடைமுறையில் இயங்கி வந்தாலும் கூட, நாட்டில் நிலவும் வேலையின்மையின் அளவு என்ன என்பதை நாம் துல்லியமாக அறிந்துகொள்ள முடிவ தில்லை. வேலை வாய்ப்பு, வேலையின்மைபற்றிய தகவல்களை அளிக்கக்கூடிய ஆதாரங்களைப்பற்றி ஓரளவுக்கு அறிந்திருக்க வேண்டியது மிக்க அவசியமாகும்.

## மக்கள்தொகைக் கணக்கெடுப்பு அறிக்கை அல்லது சென்சஸ் அறிக்கை

நாட்டில் நிலவும் வேலை வாய்ப்பு நிலையைப்பற்றிப் பத்தாண்டுக்கொரு முறை வெளிவரும் சென்சஸ் அறிக்கை பல தகவல்களை வெளியிடுகின்றது. நாட்டின் மொத்த மக்கள் தொகையை சென்சஸ் அறிக்கை வேலையில் இருப்போர், வேலையில் இல்லாதோர் என்று இரு பெரும் பிரிவுகளாகப் பிரித்துக் கொடுக்கின்றது. வேலையில் இருப்பவர்களை அவரவர் மேற்

கொள்ளும் தொழிலுக்கு ஏற்ப வேளாண்மை, கால்நடைகளைப் பராமரித்தல், தொழில் உற்பத்தி, கட்டட வேலை, வணிகம், போக்குவரத்து போன்ற ஒன்பது தலைப்புகளின்கீழ் பாகுபடுத்தித் தருகின்றது. இவ்வாறு, வேலை வாய்ப்பு நிலையைப்பற்றிய விவரங்களைச் சேகரித்து அளிப்பதில் சென்சஸ் அறிக்கை ஒரு முக்கிய ஆதாரமாக இருந்து வருகின்றது. ஆனால், சென்சஸ் அறிக்கையின்மூலம் கிடைக்கும் தகவல்கள் பத்தாண்டுக்கு ஒரு முறைதான் கிடைக்கின்றன. சென்சஸ் அறிக்கையின் வாயிலாகக் கிடைக்கும் புள்ளிவிவரங்களைப் பயன்படுத்தி நாட்டில் மொத்தம் எத்துணை பேர்கள் வேலையில்லாமல் இருக்கின்றனர் என்னும் கருத்தை ஓரளவிற்குத் தெளிவாக அறியலாம். நாட்டின் மொத்த மக்கள்தொகையிலிருந்து சிறார்கள், மூப்படைந்தவர்கள், வேலை தேடிப் போகாத பெண்கள், தாமே விரும்பி வேலைக்குப் போகாதவர்கள் போன்ற பிரிவினர்களைக் கழித்தால் வேலையேற்க முன் வருபவர்களுடைய எண்ணிக்கை கிடைக்கும். வேலையில் இருப்போர்களுடைய மொத்த எண்ணிக்கை என்ன என்னும் விவரத்தை சென்சஸ் அறிக்கையிலிருந்து அறியலாம். எனவே, வேலையின் அளிப்பு (Supply of Labour) வேலைக்கு இருக்கும் தேவை (Demand for Labour) இரண்டைப்பற்றியும் நம்மால் ஓரளவிற்குத் தெளிவான கருத்தைப் பெறமுடிகின்றது. தேவை, அளிப்பு இரண்டையும் தொடர்புபடுத்திப் பார்த்தால் வேலையின்மையின் அளவு என்ன என்பதை நாம் கண்டறிய இயலும்.

### வேலை அங்காடித் தகவல் (Employment Market Information)

மத்திய அரசைச் சேர்ந்த டில்லியிலிருந்து இயங்கி வரும் வேலை வாய்ப்பு, மற்றும் பயிற்சியளிக்கும் இயக்குநர் அலுவலகம் சில குறிப்பிட்ட முக்கியத் தொழில்களில் வேலைக்கு இருப்பவர்களின் எண்ணிக்கையைச் சேகரித்துக் கொடுக்கின்றது. இப்புள்ளி விவரங்கள் வேலை அங்காடித் தகவல் என்றழைக்கப்படுகின்றது. ஆனால், சில குறிப்பிட்ட வேலைப் பிரிவுகளுக்கு மட்டுமே இத்தகவல் கிடைக்கின்றது. வேலை நிறுவனங்கள் தொழிற்கூடமாகவோ, கழனியாகவோ, வாணிகக் கடையாகவோ அல்லது வங்கியாகவோ இருக்கக்கூடும். சில வகை வேலைகள் நிரந்தரமானவை; காப்பு உடையவை; நியாயமான கூலி கொடுப்பவை. இத்தகைய வேலைகளுக்குச் சட்ட ரீதியான பாதுகாப்பு உண்டு. ஆனால், சில வகை வேலைகள் உறுதியில்லாதவை; நிரந்தரமற்றவை; கிடைக்கும் கூலியும் குறைவாக இருக்கும். இவ்வேலைகளுக்குச் சட்ட ரீதியான பாதுகாப்பு கிடையாது. முன் வகை வேலை நிறுவனங்கள் 'முறையாக அமைந்த பிரிவு' (Organised

Sector) என்றும் பின் வகை வேலை நிறுவனங்கள் 'முறையாக அமையாத பிரிவு' (Unorganised Sector) என்றும் அழைக்கப் படுகின்றன. அரசுத் துறை அலுவலகம் ஒன்றினை முறை யாக அமைந்த பிரிவின் வகையில் சேர்க்கலாம். அன் றாடக் கூலிக்கு வேலைக்கு ஆள்களை நியமித்துக் கொள்ளும் கழனி வேலையை முறையாக அமையாத பிரிவின்கண் சேர்க்கலாம். முறையாக அமைந்த பிரிவின் புள்ளி விவரங்களை மட்டுமே வேலை அங்காடித் தகவல் அறிவிக்கின்றது. அரசுத் துறை அலுவலகங்கள் அனைத்தும், தனியார் துறையில் 10 நபர்களுக்கு மேல் வேலை செய்யும் நிறுவனங்கள் அனைத்தும் இதில் அடங்குகின்றன. முறையாக அமைந்த பிரிவைப்பற்றிக் கிடைக்கும் தகவல்கள் மிகவும் முக்கியம் வாய்ந்தவையாகும். இப்பிரிவில் வேலை செய்பவர்களுக்கு நல்ல பாதுகாப்பு இருக்கின்றது. நல்ல கூலி கிடைக்கின்றது. அவர்களுடைய வேலையும் நிரந்தர மானவை. இப்பிரிவில் எத்துணை பேர் வேலை செய்கின்றனர். இப்பிரிவில் உள்ளவர்களின் எண்ணிக்கையில் ஏற்றம் இருக் கின்றதா என்னும் தகவல்கள் பயனுள்ளவையாகும். நாட்டில் பொருளாதார வளர்ச்சி ஏற்படும்பொழுது இப்பிரிவின்கீழ் வேலை செய்வோரின் எண்ணிக்கையும் பெருக்கமடைகின்றது.

## வேலை வாய்ப்பகப் புள்ளி விவரங்கள் (Employment Exchange Statistics)

ஒவ்வொரு மாநிலத்திலும் பல வேலை வாய்ப்பகங்கள் (Employment Exchange) இயங்கி வருகின்றன. வேலை தேடும் நபர்கள் இவற்றுள் ஏதேனுமொன்றில் தங்களுடைய பெயர்களைப் பதிவு செய்துகொள்ளலாம். அலுவலகங்கள் அல்லது தொழிற் கூடங்களில் வேலைக்குக் காலி இடம் ஏற்படும் பொழுது இடங்களை நிரப்ப அத்தகைய நிறுவன உரிமையாளர்கள் வேலை வாய்ப்பகங்களை நாடுகின்றனர். வேலை வாய்ப்பகங்கள் தேவையான தகுதி படைத்தவர்களின் பெயர்களை அனுப்பி வைக்கின்றன. ஓராண்டில் எத்துணை நபர்கள் வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்து கொண்டனர்; அவர்களில் எத்துணை பேருக்கு வேலை கிடைத்தது; எத்துணை நபர் களுடைய பெயர்கள் அடுத்த ஆண்டு பதிவு செய்துகொள்வோர் களுடைய பெயர்ப் பட்டியலுடன் சேர்க்கப்பட்டன என்பன போன்ற புள்ளி விவரங்களை வேலை வாய்ப்பகங்கள் சேகரித்து அளிக்கின்றன. இப்புள்ளி விவரங்களை முறையாக அலசி ஆராய்ந்து பார்த்தால் நாட்டின் வேலை வாய்ப்பு நிலை எவ்வாறு இருக்கின்றது என்பது தெளிவாகும்.

## இந்தியாவில் வேலை வாய்ப்பு நிலை

இந்திய அரசின் திட்டக் குழு ஒவ்வோர் ஐந்தாண்டுத் திட்டத்தைத் தயார் செய்யும் பொழுதும் நாட்டில் நிலவும் வேலையின்மையின் அளவைக் கணக்கிடுகின்றது. இவ்வாறு திட்டக் குழு கணக்கிடும் மதிப்பீடுகள் வேலையின்மைப் பிரச்சினையின் தன்மையையும் இயல்பையும் ஓரளவிற்கு நாம் அறிந்துகொள்வதற்கு உதவியாக இருக்கின்றன. பட்டியல் 9—1-ல்

### பட்டியல் 9—1

**இந்தியாவில் வேலையின்மையின் அளவு**
(எண்ணிக்கை மில்லியனில்)

| | முதல் திட்டம் | இரண்டாம் திட்டம் | மூன்றாம் திட்டம் | மூன்று ஆண்டுத் திட்டங்கள் |
|---|---|---|---|---|
| 1. திட்டத் தொடக்கத்தில் இருந்த மொத்தத் தொழிலாளர் எண்ணிக்கை | 185.2 | 197.0 | 215.0 | 220.0 |
| 2. திட்டத் தொடக்கத்தில் இருந்த மொத்தத் தொழிலாளர் எண்ணிக்கையில் வேலையில்லாமல் இருந்தவர்களின் எண்ணிக்கை | 3.3 | 5.3 | 7.1 | 9.6 |
| 3. திட்ட காலத்தில் தொழிலாளர் எண்ணிக்கையில் இருந்த பெருக்கம் | 9.0 | 11.8 | 17.0 | 14.0 |
| 4. வேலையில்லாதவர்களின் மொத்த எண்ணிக்கை (2 + 3) | 12.3 | 17.1 | 24.1 | 23.6 |
| 5. திட்ட காலத்தில் ஏற்படுத்தப்பட்ட வேலைகள் | 7.0 | 10.0 | 14.5 | 1.4 |
| 6. திட்ட முடிவு ஆண்டில் வேலையில்லாமல் இருந்தவர்களின் எண்ணிக்கை (4 – 5) | 5.3 | 7.1 | 9.6 | 22.2 |
| 7. மொத்தத் தொழிலாளர் எண்ணிக்கையில் வேலை இல்லாதவர்களின் சதவிகிதம் | 2.9 | 3.6 | 4.5 | 9.6 |

கொடுக்கப்பட்டிருக்கும் புள்ளி விவரங்களைச் சற்றுக் கருத்தூன்றிக் கவனியுங்கள்.

1972ஆம் ஆண்டில் நாட்டின் மொத்தத் தொழிலாளர்களின் எண்ணிக்கையில் வேலையில்லாதவர்களுடைய எண்ணிக்கை 11 சதவிகித அளவில் இருந்தது என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதே ஆண்டில் மொத்தத் தொழிலாளர்களில் வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை போலந்து நாட்டில் 0.6 சதவிகித அளவில் தான் இருந்தது. இதே போன்று பிற நாடுகளிலும் குறைந்த சதவிகித அளவில்தான் வேலையின்மை நிலவியது. வேலையின்மை மேற்கு ஜெர்மெனியில் 0.9 சதவிகிதம், ஜப்பானில் 1.3 சதவிகிதம், ஆஸ்திரேலியாவில் 2 சதவிகிதம், இஸ்ரேலில் 2.9 சதவிகிதம். இந்தியாவில் ஏறக்குறைய 40 சதவிகித தொழிலாளர்கள் குறைந்த வேலை செய்து வருகின்றனர். இவ்வாறு நிலவும் வேலைக் குறைவை (Underemployment) கருத்தில் எடுத்துக் கொண்டு பார்த்தால் வேலையின்மை 11 சதவிகித அளவில் இருக்கின்றது என்று கூறுவது தவறாகும்; வேலையின்மையின் அளவு மிக அதிகமாக இருக்கும். 15 வயதிற்கு மேலும் 55 வயதிற்குக் கீழும் உள்ள மொத்த நபர்களில் 50 சதவிகிதத்தினர் வேலையில்லாமல் இருப்பார்கள் என்று கணக்கிடலாம்.

பட்டியல் 9—1-லிருந்து கீழ்க்காணும் குறிப்புகளையும் அறிகின்றோம்:

1. நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் ஒவ்வோர் ஆண்டிலும் வலுத்துக் கொண்டே வந்திருக்கின்றது. 1951-ல் வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை 3.5 மில்லியன் என்று கணக்கிடப்பட்டது. 1972-ல் இவர்களுடைய தொகை 11 மில்லியனாக உயர்ந்தது. வேலையின்மைப் பிரச்சினை நாளடைவில் வலுத்துக் கொண்டே வந்திருக்கின்றது என்று இதிலிருந்து அறிகின்றோம்.

2. நாட்டில் மக்கள் தொகை பெருக்கமடைந்து வந்த காரணத்தால் வேலை தேடுவோரின் எண்ணிக்கையும் ஆண்டாண்டிற்குப் பெருகிக் கொண்டே வந்திருக்கின்றது. ஒவ்வோர் ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும் இவர்களுடைய எண்ணிக்கை உயர்ந்து கொண்டே வந்தது. முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் வேலை தேடுவோரின் எண்ணிக்கையில் இருந்த பெருக்கம் 9 மில்லியன் அளவில் இருந்தது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பெருக்கத்தின் அளவு 11.8

மில்லியனாகவும், மூன்றாம் திட்ட காலத்தில் 17 மில்லியனாகவும் உயர்ந்தது.

3. ஒவ்வோர் ஐந்தாண்டுத் திட்டமும் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தந்தன என்பது உண்மையே. ஆனால், புதிதாக உருவாக்கப்பட்ட வேலை வாய்ப்புகள் போதிய அளவிற்கு இல்லை. உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டு பார்த்தால், முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மொத்தம் 7 மில்லியன் நபர்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப் பட்டன. இவ்வைந்தாண்டு காலத்தில் வேலை தேடுவோரின் எண்ணிக்கையில் இருந்த பெருக்கம் மட்டுமே 9 மில்லியன் அளவில் இருந்தது. எனவே புதிதாக வேலை தேடி வருவோர்கள் அனைவருக்கும் வேலை அளிக்க முடியவில்லை. இந்நிலையில் நாட்டில் வேலையில்லாமல் இருப்போரின் மொத்த எண்ணிக்கை ஒவ்வோர் ஆண்டும் பெருகிக்கொண்டே வந்திருக்கின்றது.

## படித்தவர்களிடையே வேலையின்மை

படித்தவர்களிடையே வேலையின்மை எம்மட்டத்தில் இருந்திருக்கின்றது என்பதை இனி காண்போம். இது சம்பந்தமான புள்ளிவிவரங்களைப் பட்டியல் 9—2-ல் காணலாம். கல்வி பயின்று

### பட்டியல் 9—2

**இந்தியாவில் படித்தவர்களிடையே வேலையின்மை**
(எண்ணிக்கை மில்லியனில்)

| ஆண்டு | மெட்ரிகுலேஷன் தேறியவர்கள் | கல்லூரியில் பயின்றவர்கள் | பட்டதாரிகளும் மேற் படிப்பு பட்டம் பெற்றவர்களும் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1961 | 0.46 | 0.071 | 0.056 | 0.587 |
| 1966 | 0.62 | 0.20 | 0.094 | 0.914 |
| 1971 | 1.30 | 0.61 | 0.40 | 2.31 |
| 1972 | 1.75 | 0.93 | 0.60 | 3.28 |
| 1976 | 2.83 | 1.26 | 1.02 | 5.11 |

வேலை இல்லாதிருந்தவர்களுடைய எண்ணிக்கை 1961ஆம் ஆண்டில் ஏறக்குறைய 6 இலட்சம் அளவில் இருந்தது. 1976ஆம் ஆண்டில் இவர்களுடைய எண்ணிக்கை 51 இலட்சமாகப் பெருக்கமடைந்திருந்தது.

நாட்டில் வேலை இல்லாப் பிரச்சினை எந்த அளவில் இருக்கின்றது என்பதனை இதிலிருந்து தெளிவாக அறிகின்றோம். வேலை வாய்ப்பகங்களிலிருந்து கிடைக்கும் புள்ளி விவரங்களும் இவ்வுண்மையை வலியுறுத்தும் வகையில் இருக்கின்றன. ஒவ்வோர் ஆண்டிலும் எத்துணை நபர்கள் வேலை வாய்ப்பகங்களில் தங்களுடைய பெயர்களைப் பதிவு செய்துகொண்டார்கள், அந்த ஆண்டில் வேலை வாய்ப்பகங்கள் எத்துணை பேர்களை வேலைக்கு அமர்த்தின என்னும் புள்ளி விவரங்களைப் பட்டியல் 9 - 3-ல் காணலாம்.

## பட்டியல் 9—3

**வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்துகொண்டவர்களின் எண்ணிக்கையும், வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களின் அளவும்**
(எண்ணிக்கை ஆயிரத்தில்)

| ஆண்டு | பதிவு செய்து கொண்டவர்களுடைய எண்ணிக்கை | வேலையில் அமர்த்தப்பட்டவர்களுடைய எண்ணிக்கை | பதிவு செய்து கொண்டவர்களில் வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களுடைய அளவு (சதவிகிதத்தில்) |
|---|---|---|---|
| 1961 | 3230 | 404 | 12.5 |
| 1965 | 3958 | 570 | 14.4 |
| 1966 | 3871 | 507 | 13.1 |
| 1971 | 5130 | 507 | 9.9 |
| 1973 | 6145 | 519 | 8.4 |
| 1974 | 5176 | 397 | 7.7 |
| 1975 | 5443 | 404 | 7.4 |
| 1976 | 5619 | 497 | 8.8 |

ஒவ்வோர் ஆண்டிலும் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் வேலை வாய்ப்பகங்களில் தங்களுடைய பெயர்களைப் பதிவு செய்து கொள்கின்றனர். அவர்களில் 10 சதவிகிதத்தினருக்கே வேலை கிடைக்கின்றது. மேற்கண்ட பட்டியலில் மேலும் ஒரு சுவையான தகவலை அறிகின்றோம். பதிவு செய்துகொண்டவர்

களுடைய எண்ணிக்கை ஒவ்வோர் ஆண்டும் பெருகிக்கொண்டே வந்திருக்கின்றது. 1961-ல் 3.2 இலட்சமாக இருந்த எண்ணிக்கை 1976-ல் 5.6 இலட்சமாகப் பெருகியது. ஆனால், வேலையில் அமர்த்தப்பட்டவர்களுடைய எண்ணிக்கை ஏறக்குறைய நிலையாகவே இருந்திருக்கின்றது. காலப்போக்கில் வேலையில் அமர்த்தப்பட்டவர்களுடைய எண்ணிக்கையில் இறக்கம் ஏற்பட்டிருக்கின்றது என்றுகூடக் கூறலாம்.

## வேலையின்மைக்குக் காரணங்கள்

ஆக, கிடைக்கும் புள்ளி விவரங்கள் அனைத்தும் நாட்டில் வேலையில்லாப் பிரச்சினை காலப்போக்கில் மேலும் சிக்கலடைந்து வருகின்றது என்னும் உண்மையைத் தெளிவுபடுத்திக் காட்டுகின்றன. இத்தகைய ஒரு நிலை உருவாவதற்கான அடிப்படைக் காரணங்கள் யாவை? மேலெழுந்த வாரியாகப் பிரச்சினையை அணுகிப் பார்த்தால் உண்மை நன்கு புலனாகாது. ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் அடிப்படைக் காரணத்தை அறியக்கூடும். ஒரு நாட்டில் வேலை வாய்ப்பு நிலை உயர்ந்த மட்டத்தில் இருக்குமா அல்லது குறைந்த மட்டத்தில் இருக்குமா என்பது அந்நாட்டின் 'உழைப்பை ஈர்க்கும் சக்தியைப்' (Labour absorptive capacity)பொறுத்திருக்கின்றது என்று கூறலாம். இக்கருத்தைச் சற்று விளக்கிக் கூறவேண்டியது அவசியமாகின்றது. ஒவ்வொரு பொருளாதார நடவடிக்கையையும் நிறைவேற்றுவதற்கு உழைப்பு தேவைப்படுகின்றது. அஃதாவது, ஒவ்வொரு பொருளாதார நடவடிக்கையும் ஓரளவிற்கு உழைப்பை ஈர்க்கின்றது. நாட்டின் அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளையும் கருத்திற் கொண்டு பார்க்கும்போது நாட்டினுடைய உழைப்பை ஈர்க்கும் சக்தி புலனாகின்றது. உழைப்பை ஈர்க்கும் சக்தி அதிகமாக இருக்க நேரிட்டால் வேலையில்லாப் பிரச்சினை அவ்வளவு கொடுமை வாய்ந்ததாக இருக்காது. மக்கள்தொகைப் பெருகிக் கொண்டே வர, உழைப்பை ஈர்க்கும் சக்தி குறைந்த அளவில் இருக்க நேரிட்டால் வேலையில்லாத் திண்டாட்டம் பேருருவம் கொள்ளத் தொடங்கும். எனவே, ஒரு நாட்டின் வேலையின்மையின் அளவை நிர்ணயிப்பதில் அந்நாட்டின் உழைப்பை ஈர்க்கும் சக்தி ஒரு முக்கியக் காரணியாக இருக்கின்றது. இச்சக்தி எவற்றைச் சார்ந்திருக்கின்றது? பல காரணங்களைக் குறிப்பிட்டுக் கூறலாம். நாட்டில் எந்த அளவிற்குப் பொருளாதார சாதனங்கள் கிடைக்கின்றன, கிடைக்கும் சாதனங்கள் எந்த அளவிற்குப் பயன்படுத்தப்படுகின்றன, சாதனங்களைப் பயன்படுத்துவதற்கு எம்முறை கையாளப்படுகின்றது. நாட்டின் பொருளாதார

நிலையை மேம்படுத்துவதற்காக எத்தன்மையான திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன, தீட்டிய திட்டங்கள் சரிவர நடைமுறையில் நிறைவேற்றப்படுகின்றனவா என்பன போன்ற காரணங்களைப் பொறுத்துத்தான் ஒரு நாட்டினுடைய உழைப்பை ஈர்க்கும் சக்தி அமையும். நம்முடைய நாட்டில் உழைப்பை ஈர்க்கும் சக்தி கணிசமான அளவிற்குப் பெருகவில்லை என்றுதான் கூறவேண்டும். ஆனால், மக்கள்தொகையோ பெருமளவிற்குப் பெருகிக்கொண்டே வந்திருக்கின்றது.

மக்கள் தொகைப் பெருக்கத்தால் ஒவ்வோர் ஆண்டும் 13.5 மில்லியன் மக்களை நம்முடன் சேர்த்துக் கொண்டே இருக்கின்றோம். இந்த அளவிற்கு நாட்டில் வேலை வாய்ப்புகளையும் பெருக்குவது இயலாத காரியமாக இருக்கின்றது. மேலும், நம் நாட்டில் இளம் வயதில் இருப்பவர்களுடைய எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கின்றது. எடுத்துக்காட்டாக, 15 வயதிலிருந்து 29 வயது வரை உள்ள இளைஞர்கள் நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 24.1 சதவிகித அளவில் இருக்கின்றனர். இந்த வயதுப் பிரிவினர்தான் வேலை தேடும் நிலையில் அதிகமாக இருக்கின்றனர். நம்முடைய பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் புதிய வேலை வாய்ப்புகளை அளித்து வருகின்றன. இருந்தாலும், தேவையான அளவிற்கு வேலை வாய்ப்புகள் பெருகவில்லை என்றுதான் கூற வேண்டும்.

நமது நாட்டின் வேளாண்மைத் துறையால், பெருகி வரும் மக்கள் தொகையில் ஒரு சிறு அளவிற்குத்தான் வேலை அளிக்க முடிகின்றது. இன்னும் கூறப்போனால், தேவைக்கும் அதிகமானவர்கள் இன்று வேளாண்மையில் ஈடுபட்டிருக்கின்றனர். எனவே, வேலையின்மைக்குத் தீர்வு காண வேண்டுமென்றால், இரண்டாம் பகுதியிலும் (Secondary Sector), சார்பு நிலைப் பகுதியிலும் (Tertiary Sector) நல்ல வளர்ச்சியிருக்க வேண்டும். ஆனால்,மக்கள் தொகையில் இருக்கும் வளர்ச்சிக்கு ஏற்ப இப் பிரிவுகளில் வளர்ச்சி இல்லை.

நமது நாட்டில் பல்கலைக்கழகங்களும், கல்லூரிகளும், பள்ளிகளும் ஆயிரக்கணக்கில் இருக்கின்றன. இவற்றின் வாயிலாக ஒவ்வோர் ஆண்டும் இலட்சக்கணக்கான மாணவர்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றனர். படித்து வேலையில்லாமல் இருப்பவர்களுடைய எண்ணிக்கை பெருகி வருவதற்கு இது ஒரு முக்கியக் காரணமாகும். நம்முடைய கல்விக் கூடங்கள் குறிப்பிட்ட வேலைகளுக்கு மாணவர்களைப் பயிற்றுவிக்கும் வகையில் அமைய

வில்லை. கல்விக் கூடங்களில் பெரும்பான்மையானவை இளைஞர்களுக்குப் பொதுப்படையான கல்வியளிப்பனவாக இருக்கின்றன. இக் காரணத்தால் கல்விக் கூடங்களிலிருந்து வெளியேறும் இளைஞர்கள் உடனடியாகவும் நேரிடையாகவும் உற்பத்தித் துறைகளில் ஈடுபடக்கூடிய நிலையில் இருப்பதில்லை. எனவே, கல்வி பயின்று வேலையில்லாமல் இருப்பவர்களுடைய எண்ணிக்கை ஒவ்வோர் ஆண்டும் பெருகிக்கொண்டே வருகின்றது.

## வேலையின்மைப் பிரச்சினையைப் போக்க வழிமுறைகள்

நாட்டை எதிர்நோக்கி நிற்கும் பல்வேறு பொருளாதாரப் பிரச்சினைகளுள் வேலையில்லாப் பிரச்சினை கொடுமை வாய்ந்த ஒன்றாகத் திகழ்கின்றது. மிகவும் சிக்கல் வாய்ந்ததாகவும் இருக்கின்றது. இப்பிரச்சினைக்கு எளிதில் முடிவு காணவும் இயலவில்லை. எனவே, இப்பிரச்சினையை நன்கு ஆய்ந்தறிந்து அணுக வேண்டியிருக்கின்றது. பொருளாதாரத் திட்டங்களை உருவாக்கும் பொழுது அவை புதிய வேலை வாய்ப்புகளை அளிக்கக்கூடியனவா என்று பார்க்க வேண்டியிருக்கின்றது. அதே நேரத்தில் இத்திட்டங்கள் நாட்டில் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கக்கூடிய வகையில் அமைந்திருக்கின்றனவா என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கின்றது. இவ்வாறு பல முக்கிய அம்சங்களைக் கருத்தில் எடுத்துக்கொண்டு திட்டங்களை வரைய வேண்டியிருக்கின்றது.

**தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்த வேண்டும்:** நாட்டில் 'உழைப்பை ஈர்க்கும் சக்தி' (Labour absorptive Capacity) இன்று குறைந்த மட்டத்தில் இருக்கின்றது. இச்சக்தியை உயர்த்த வேண்டும். வேளாண்மையைப் பெருக்குவதன் வாயிலாக இச்சக்தியை உயர்த்துவதற்கு அதிக வாய்ப்பில்லை. இதற்கான விளக்கத்தை முன்னர் தெளிவாகக் கண்டோம். உழைப்பை ஈர்க்கும் சக்தி உயர வேண்டுமெனில் தொழில் துறை மிகவும் விரைவாக வளர்ச்சியடைய வேண்டும். தொழில் துறை வளர்ச்சியின் மூலமாகத்தான் நம் நாட்டில் வேலை வாய்ப்புகளைப் பெருக்க இயலும்.

**தொழிற் கூடங்களில் முழு உற்பத்திச் சக்தியையும் பயன்படுத்த வேண்டும்:** புதிய தொழிற்சாலைகள் பலவற்றை நிறுவுவதன் மூலம் புதிய வேலை வாய்ப்புகளை உண்டாக்க முடியும். அதே நேரத்தில் இருக்கும் தொழிற் கூடங்கள், தொழிற் சாலைகள், இவற்றின் முழு உற்பத்திச் சக்தியும் நடைமுறையில் பயன்படுத்தப்படுகின்றதா என்பதையும் கவனிக்க வேண்டும்.

இவ்வாறு செய்வதன் வாயிலாக வேலை நிலையை (Employment level) உயர்த்தமுடியும். ஓர் எஃகு ஆலை ஓராண்டில் 100 டன் எஃகை உற்பத்தி செய்யக்கூடுமென்று வைத்துக்கொள்வோம். ஆனால், மின்சாரத் தட்டுப்பாட்டினாலோ அல்லது நிலக்கரி கிடைக்காத காரணத்தினாலோ அல்லது வேறு எந்த ஒரு காரணத்தினாலோ அத்தொழிற்சாலை ஓராண்டில் 50 டன் எஃகைத்தான் உற்பத்தி செய்கின்றது என்றால் அத்தொழிலின் 'சக்திப் பயன்பாடு' (Capacity utilisation) 50 சதவிகித அளவில் தான் இருக்கின்றது என்று குறிப்பிடுகின்றோம். நம் நாட்டில் 'தொழிற் சக்திப் பயன்பாடு' (Industrial capacity utilisation) குறைந்த அளவில் இருப்பதைக் காண்கின்றோம். மூலதனப் பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழில்களில் சக்திப் பயன்பாடு 60 சதவிகித அளவில்தான் இருக்கின்றது. நுகர்வுப் பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழில்களில் நிலைமை சற்று திருப்திகர மாக இருக்கின்றது. இத்தொழில்களில் சக்திப் பயன்பாடு 80 சதவிகித அளவில் இருக்கின்றது. இது சம்மந்தமான மற்றொரு குறிப்பையும் உணர்த்த வேண்டியது அவசியமாகின்றது. நாட்டில் சக்திப் பயன்பாடு குறைந்த அளவில் இருக்கின்றது என்ப தோடல்லாமல் அது குறைந்துகொண்டும் வருகின்றது. இப்போக்கு கவலையூட்டுவதாக இருக்கின்றது. சக்திப் பயன்பாட்டை உயர்த்துவதன் வாயிலாக நாட்டில் வேலை வாய்ப்புகளையும் கணிசமான அளவுக்குப் பெருக்க முடியும்.

## கிராமப்புறங்களில் தொழில் வளர்ச்சி

கிராமப்புறங்களில் வேலையின்மையும், வேலைக் குறைவும் (Under employment) பரவலாக இருக்கின்றன என்று இவ் வத்தியாயத்தின் முற்பகுதியில் கண்டோம். கைத்தொழில்களை யும், சிறு தொழில்களையும் கிராமப்புறங்களில் வளர்ச்சியடையச் செய்வதன் மூலம் இப்பிரச்சினைக்கு நல்ல தீர்வு காண முடியும். விவசாயப் பண்டங்கள் பலவற்றைப் பதனப்படுத்த வேண்டி யிருக்கின்றது. இவ்வாறு பதனிடும் தொழில்கள் பெரும்பான்மை யும் இன்று நகர்ப்புறங்களிலேயே அமைந்திருக்கின்றன. இப் பண்டங்கள் உற்பத்தியாகும் கிராமப்புறங்களிலோ அல்லது அவற்றிற்கு அருகாமையில் உள்ள ஊர்களிலோ பதனிடும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டால் கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க ஏது உண்டாகும். பழங்கள், காய்கறிகள் இவற்றைப் பதனிடும் தொழில்களை கிராமப் புறங் களில் தொடங்கலாம். குடிசைத் தொழில்கள், கைவினைப் பொருள்களைச் சார்ந்த தொழில்கள் இவற்றைக் கிராமங்களில்

மேலும் விரிவாக்க முயற்சி எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். கிராமப்புறங்களில் காணப்படும் வேலையின்மையை இத் தொழில்களை வளர்ப்பதன்மூலம் குறைக்கலாம்.

## கல்விமுறை

நம்முடைய கல்விமுறையும் கல்விக் கொள்கையும் மாற்றமடைய வேண்டும். இன்று நாட்டில் நிலவும் கல்விமுறையில் பொதுக் கல்விக்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகின்றது. பட்டம் பெற்றுக் கல்விக் கூடங்களிலிருந்து வெளிவரும் இளைஞர்கள் எந்த ஒரு தொழிலிலும் தனிச் சிறப்பும் பயிற்சியும் பெறாமல் வெளி வருவதால் உடனடியாக அவர்கள் எந்தத் தொழில்களிலும் அமர முடிவதில்லை. பொருளாதாரம், வரலாறு போன்ற பிரிவுகளில் பட்ட மேற்படிப்பு பயில ஒருவர் மொத்தம் 17 ஆண்டுகள் செலவழிக்க வேண்டியிருக்கின்றது. இவ்வாறு பல ஆண்டுகள் பயின்று வெளிவரும் மாணவர்களுக்கு உடனடியாக வேலை கிடைப்பதில்லை. ஆனால், பத்தாண்டுக் காலம் பள்ளியில் பயின்று, தொழிற் பயிற்சிக் கூடம் ஒன்றில் இரண்டாண்டுகள் பயின்று வெளிவரும் ஓர் இளைஞர் அதிக சிரமமின்றி உடனடியாக வேலை தேடிக் கொள்ள முடிகின்றது. இந்நிலையில் மேலும் மேலும் கலைக் கல்லூரிகளை வளர்த்துக்கொண்டே இருப்பதை ஒரு சிறந்த கொள்கையாகக் கருத முடியாது.

## மக்கள்தொகைக் கட்டுப்பாடு

நாட்டில் நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு நிலையான தீர்வு காண வேண்டுமெனில் நம்முடைய மக்கள்தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்தியாகவேண்டும். அண்மைக் காலத்தில் வளர்நது வரும் வேகத்தில் மக்கள் தொகை இனியும் தொடர்ந்து பெருகி வர நேரிட்டால் தொழில் முன்னேற்றத்தை உண்டாக்கி அதன் வாயிலாக வேலையின்மைப் பிரச்சினையைக் குறைக்கும் நோக்கத்துடன் நாம் மேற்கொள்ளும் திட்டங்கள் கோரிய பயனைக் கொடுக்கமாட்டா. எனவே, மக்கள் தொகை பெருக்கத்தைத் தடுக்க வேண்டியது மிக்க அவசியமாகின்றது.

# தமிழ்நாட்டில் வேலை நிலை

## பொதுவான நிலை

நாட்டளவில் இருப்பதைப் போன்றே தமிழ்நாட்டிலும் வேலையின்மை ஒரு பெரும் பிரச்சினையாக இருந்து வருகின்றது. குறிப்பாக, படித்து வேலை இல்லாமல் இருப்பவர்களின்

எண்ணிக்கையைப் பார்க்கும்பொழுது நிலைமை மேலும் கவலை யூட்டுவதாக இருக்கின்றது. தமிழ்நாட்டில் அண்மைக் காலத்தில் குறிப்பாகக் கடந்த இருபதாண்டு காலத்தில் உயர்நிலைக் கல்வி நல்ல வளர்ச்சியுற்றிருக்கின்றது. படித்த இளைஞர்கள் இலட்சக் கணக்கில் ஒவ்வோர் ஆண்டும் வெளி வந்து கொண்டிருக் கின்றனர். ஆனால், இவர்கள் அனைவருடைய பணியைப் பயன் படுத்திக் கொள்ளும் அளவிற்கு வேலை வாய்ப்புகள் பெருக்க மடையவில்லை. பொதுப்படையாகக் கூற வேண்டுமென்றால் தமிழ்நாட்டில் வேலையில்லாப் பிரச்சினை அதிக அளவில் இருக்கின்றது. வேலையின்மையின் அளவு ஒவ்வொரு மாநிலத்தி லும் எம் மட்டத்தில் இருக்கின்றது என்பதைக் கண்டறிய 'தேசீய மாதிரி ஆய்வு' (National Sample Survey) ஓர் ஆய்வினை மேற்கொண்டது. நாடு முழுவதிலும் வேலையில்லாதிருப்போரின் மொத்த எண்ணிக்கையில் 74 சதவிகிதத்தினர் ஆந்திரப் பிரதேசம், பீஹார், கேரளம், மஹாராஷ்டிரம், தமிழ்நாடு, உத்திரப்பிரதேசம், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் இருக்கின்றனர் என்று இவ்வாய்வின் மூலம் தெரிய வந்தது. நாட்டில் வேலையில்லாதிருப்போரின் மொத்த எண்ணிக்கையில் 12 சதவிகிதத்தினர் தமிழ்நாட்டில் இருக்கின்றனர்.

பத்தாண்டுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்படும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு வேலை நிலை சம்மந்தமான சில முக்கியத் தகவல்களை வெளியிடுகின்றது. 1971ஆம் ஆண்டின் சென்சஸ்படி தமிழ்நாட்டில் வேலையில் ஈடுபட்டிருந்தவர் களுடைய மொத்த எண்ணிக்கை 15.07 மில்லியனாகும். அதாவது தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 36.37 சதவிகிதத் தினர் வேலையில் ஈடுபட்டிருந்தனர். வேலைகளில் ஈடுபட்டிருந்த வர்களின் மொத்த எண்ணிக்கையில் 60 சதவிகிதத்தினர் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தனர். எஞ்சிய 40 சதவிகிதத்தினர் தொழில் உற்பத்தி, குடிசைத் தொழில், கட்டட வேலை, வணிகம் போன்ற பிற துறைகளில் ஈடுபட்டிருந்தனர். 1971ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகை 41.1 மில்லியனாகும். ஆனால், இவர்கள் எல்லோரும் வேலையில் ஈடுபட்டிருக்க வில்லை. மொத்த மக்கள்தொகையிலிருந்து பதினைந்து வயதிற்குக் குறைந்த சிறார்களையும், அறுபது வயதிற்கு மேற் பட்ட வயோதிகர்களையும் கழித்து விட்டுப் பார்த்தால் 57 சதவிகிதத்தினரே எஞ்சி நிற்கின்றனர். மேலும், பெண்கள் அனைவரும் வேலை தேடிச் செல்வதில்லை. உயர் சாதியைச் சேர்ந்த பெண்கள், நிதி வசதி படைத்த குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் ஆகிய இவர்கள் சாதாரணமாக உடலுழைப்பு

வேலைக்குச் செல்வதில்லை. இவ்வகையினரையும் நீக்கிவிட்டுப் பார்த்தால் ஏறக்குறைய 45 சதவிகிதத்தினரே எஞ்சி நிற்பர். 1971ஆம் ஆண்டு சென்சஸ்படி மொத்த மக்கள் தொகையில் 36.37 சதவிகிதத்தினர்தாம் வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். இக்கணக்கின் அடிப்படையில் பார்த்தால் தேவைக்கும் அளிப்பிற்கும் அதிக வேறுபாடு இல்லை என்று தோன்றும். மொத்த மக்கள்தொகையில் வேலை தேடுவோரின் அளவு 45 சதவிகிதம்; வேலைகளில் ஈடுபட்டிருப்பவர்களின் அளவு 36.37 சதவிகிதம் ஆனால், உண்மையில் பார்க்கப்போனால் நிலைமை வேறு விதமாக இருப்பதைக் காணலாம். ஏனெனில், சென்சஸ் கொடுக்கும் எண்ணிக்கையான 15.07 மில்லியன் பேர்களும் முழுமையாக வேலையில் ஈடுபட்டிருக்கவில்லை. இவர்களில் பெரும்பான்மையினர் மிகக் குறைந்த கூலியைப் பெற்றுவந்தனர். இவர்களுக்குத் தொடர்ந்து வேலை கிடைக்கவில்லை. ஆண்டில் பல நாள்களுக்கு இவர்கள் வேலையில்லாமல் இருந்தனர். எனவே, தமிழ் நாட்டில் வேலையின்மை பெரிதும் 'உருமாறிய வேலையின்மை'யின் (Disguised unemployment) இயல்பைக் கொண்டிருப்பதாகக் கூறலாம்.

### முறையாக அமைந்த பிரிவில் வேலை நிலை (Employment in the organised sector)

முறையாக அமைந்த பிரிவில் பணி ஏற்றிருக்கும் தொழிலாளர்களுடைய எண்ணிக்கையை அடிப்படையாக வைத்துக் கொண்டு ஒரு நாட்டின் அல்லது ஒரு பகுதியின் பொருளாதார நிலையை ஓரளவிற்கு ஊகிக்கலாம் என்று இவ்வத்தியாயத்தின் தொடக்கத்தில் குறிப்பிட்டோம். இப்பிரிவில் ஈடுபட்டுள்ளவர்கள் தொடர்ந்து நிலையான தொழிலாளர்களாகப் பணியாற்றுகின்றனர். இவர்களுக்கு நல்ல ஊதியமும் கிடைக்கின்றது. இப்பிரிவில் உருமாறிய வேலையின்மைக்கோ (Disguised unemployment) அல்லது வேலை குன்றவுக்கோ (Under employment) வாய்ப்புகள் இல்லை. எனவே, வேலை நிலையைப் பொறுத்த அளவில் இப்பிரிவை முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் கருதவேண்டும்.

நாட்டின் முறையாக அமைந்த பிரிவில் ஈடுபட்டுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கையில் 8 சதவிகிதத்தினர் தமிழ் நாட்டில் இருக்கின்றனர். தென் மாநிலங்களான ஆந்திரப் பிரதேசம், தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம் ஆகிய நான்கு மாநிலங்களிலும் இப்பிரிவைச் சேர்ந்த 35 சதவிகிதத்தினர் இருக்கின்றனர். தமிழ் நாட்டில் முறையாக அமைந்த பிரிவில் எத்துணை பேர்

ஈடுபட்டிருக்கின்றனர் என்னும் புள்ளி விவரங்களைப் பட்டியல் 9—4 விளக்கிக் காட்டுகின்றது.

## பட்டியல் 9—4

தமிழ் நாட்டில் முறையாக அமைந்த பிரிவில் ஈடுபட்டுள்ளவர்கள்

| ஆண்டு | ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | முந்தைய ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது சதவிகித வளர்ச்சி |
|---|---|---|
| 1969 | 14.70 | 1.39 |
| 1970 | 15.12 | 2.86 |
| 1971 | 15.41 | 1.91 |
| 1972 | 15.74 | 2.15 |
| 1973 | 16.30 | 3.56 |
| 1974 | 16.29 | 0.10 |
| 1975 | 16.56 | 1.65 |
| 1976 | 16.62 | 0.36 |
| 1977 | 16.80 | 1.08 |
| 1978 | 17.23 | 2.56 |

மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது தமிழ் நாட்டில் முறையாக அமைந்த பிரிவில் பணி ஏற்றுள்ளவர்களின் எண்ணிக்கை உயர்ந்த அளவில் இருக்கின்றது. ஆனால், இவர்களுடைய எண்ணிக்கையில் ஆண்டாண்டிற்கு இருக்கும் வளர்ச்சி தெம்பூட்டுவதாக இல்லை. சராசரிக் கணக்கில் பார்த்தால் ஆண்டொன்றுக்கு 2 சதவிகித வளர்ச்சிதான் இருந்திருக்கின்றது. அனைத்து அரசு அலுவலகங்கள், வங்கிகள், ஆயுள் காப்புக் கம்பெனிகள், வணிக நிறுவனங்கள், தொழிற் கூடங்கள், இவையனைத்தையும் உள்ளடக்கிய ஒன்றுதான் முறையாக அமைந்த பிரிவு என்பதாகும். இப்பிரிவில் ஒவ்வோர் ஆண்டும் தமிழ் நாட்டில் ஏறக்குறைய 50 ஆயிரம் வேலைகள் உருவாக்கப் படுகின்றன. சில குறிப்பிட்ட ஆண்டுகளில் அந்த அளவிற்குப் புதிய வேலைகள் உருவாக்கப்படவில்லை. 1973ஆம் ஆண்டிலிருந்து வளர்ச்சி விகிதம் குறைந்துகொண்டே வந்திருக்கின்றது என்பதைப் பட்டியலில் காணலாம்.

## படித்தவர்களிடையே வேலையின்மை

வேலை கிடைக்காதவர்கள் பற்றிய, குறிப்பாகப் படித்து வேலை கிடைக்காதவர்கள்பற்றிய புள்ளி விவரங்களை வேலை வாய்ப்பகங்கள் சேகரித்து வருகின்றன. வேலையில்லாத் திண்டாட்டம் எங்ஙனம் காலவாக்கில் வளர்ந்து வருகின்றது என்னும் உண்மையைப் பட்டியல்கள் 9—5, 9—6-லிருந்து அறியலாம். இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்துகொண்டிருந்தவர்களின் எண்ணிக்கை 1.32 இலட்சமாகும். மூன்றாம் திட்டத்தின் இறுதியில் இது 2.02 இலட்சமாக உயர்ந்தது. 1969ஆம் ஆண்டில் இது மேலும் உயர்ந்து 2.77 இலட்சமாக இருந்தது. வேலையில்லாமல் பதிவு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை மேலும் வளர்ந்து கொண்டே இருந்தது. நான்காம் திட்டத்தின் இறுதியில் 5.94 இலட்சமாகவும், 1978-ல் 9.37 இலட்சமாகவும் பெருக்கெடுத்தது. படித்தவர்களிடையே வேலையின்மை என்பது எல்லா மாநிலங்களிலும்

### பட்டியல் 9—5

**வேலை வாய்ப்பு நிறுவனங்களின் புள்ளி விவரங்கள் (ஆயிரத்தில்)**

| இனம் | 1964 | 1968 | 1972 | 1975 | 1978 |
|---|---|---|---|---|---|
| 1. நடப்பு ஆண்டில் பதிவு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை | 294.8 | 328.1 | 421.5 | 411.5 | 399.8 |
| 2. நடப்பு ஆண்டில் வேலையில் அமர்த்தப் பட்டவர்கள் | 53.2 | 40.5 | 43.8 | 33.0 | 25.0 |
| 3. ஆண்டு முடிவில் பதவியில் இருந்தவர்களின் மொத்த எண்ணிக்கை | 174.7 | 233.6 | 466.8 | 654.6 | 937.4 |
| 4. பதிவு செய்து கொண்டவர்களில் வேலையில் அமர்த்தப் பட்டவர்களின் சதவிகிதம் | 18.05 | 12.34 | 10.39 | 8.02 | 6.3 |

## பட்டியல் 9—6

வேலை தேடுவோரின் கல்வி மட்டம்

| கல்வி மட்டம் | 1968 | 1972 | 1975 | 1978 |
|---|---|---|---|---|
| 1. எஸ்.எஸ்.எல்.சி யும் அதற்கு இணையானதும் | 96,130 | 160,830 | 254,784 | 324,081 |
| 2. புகுமுக வகுப்பு, பட்டப்படிப்பு முடிவுபெறாத நிலை | 9,947 | 21,492 | 41,306 | 68,168 |
| 3. பட்டப்படிப்பு | 8,777 | 29,924 | 58,676 | 86,632 |
| 4. பட்ட மேற்படிப்பு | 710 | 4,081 | 5,380 | 9,187 |
| 5. மொத்தம் (1-லிருந்து 4 வரை) | 115,564 | 215,327 | 360,146 | 488,068 |

காணப்படும் நிலைதான். இருப்பினும், பிற மாநிலங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது தமிழ் நாட்டில் இந்நிலை மேலும் சீர்கெட்டிருக்கின்றது என்று கூறவேண்டும். தென் மாநிலங்கள் நான்கிலும் பதிவு செய்திருப்போரின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு தமிழ் நாட்டில் இருக்கின்றனர்.

படித்தவர்களிடையே வேலையின்மை தமிழ் நாட்டில் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. வேலை நாடி வேலை வாய்ப்பகங்களில் தங்களுடைய பெயரைப் பதிவு செய்துகொள்பவர்களில் படித்தவர்களின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டிருக்கின்றது. 1969ஆம் ஆண்டில் மொத்தம் பதிவு செய்துகொண்டவர்களில் எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்தவர்களினுடைய எண்ணிக்கை 34.8 சதவிகிதமாக இருந்தது. 1977ஆம் ஆண்டில் இவர்களுடைய எண்ணிக்கை 55.9 சதவிகிதமாக உயர்ந்துவிட்டது. மெட்ரிகுலேஷன் வரை படித்தவர்கள், கலைக் கல்லூரிகளில் பயின்று பட்டம் அல்லது முதுநிலைப் பட்டம் பெற்றவர்கள் இவர்களிடையே வேலையின்மை அதிகமாக இருக்கின்றது. படித்து வேலையில்லாமல் இருப்பவர்களில் ஏறக்குறைய 94 சதவிகிதத்தினர் இப்பிரிவினராக இருக்கின்றனர்.

# 10. பணவியல் முறையும் வங்கிகள் அமைப்பும்

## (Monetary and Banking System)

### பணவியல் முறை

நம்முடைய அன்றாட வாழ்க்கையில் பணம் முக்கிய அங்கம் வகிக்கின்றது. பணத்தில் செலாவணிப் பணம் (Currency Money), வங்கிப் பணம் (Bank Money) என இரு வகைகள் இருக்கின்றன. நாட்டில் புழக்கத்தில் இருக்கும் ஐந்து ரூபாய், பத்து ரூபாய், நூறு ரூபாய் போன்ற காகிதச் செலாவணியும், ஒரு ரூபாய், 50 பைசா, 25 பைசா, 10 பைசா போன்ற உலோக நாணயங்களும் செலாவணிப் பணத்தின் வகையைச் சேரும். உலோக நாணயங்கள் குறைந்த அளவில்தான் புழக்கத்தில் இருக்கின்றன. நம் நாட்டில் பண்டங்களின் விலை, கடன் தொகை, கூலி போன்ற அனைத்தையும் ரூபாய்க் கணக்கில் குறிப்பிடுகின்றோம். இவ்வகையில் ரூபாய் நம் நாட்டில் கணக்கீட்டுப் பணமாகப் (Money of Accounts) பயன்படுகின்றது. இங்கிலாந்தில் ஸ்டெர்லிங்கும், ஐக்கிய அமெரிக்காவில் டாலரும், ஜப்பானில் யென்னும் கணக்கீட்டுப் பணமாகும். நம் நாட்டில் காகிதச் செலாவணியை அச்சிட்டு வெளியிடும் முழு உரிமையும் ரிசர்வு வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ரிசர்வு வங்கி இரண்டு ரூபாய் முதல் நூறு ரூபாய் வரை மதிப்புள்ள காகிதச் செலாவணியை வெளியிட்டு வருகின்றது. ஒரு ரூபாய் நோட்டு, ஒரு ரூபாய் நாணயம், சில்லரைக் காசுகள் இவற்றை மத்திய அரசு நேரிடையாக வெளியிட்டு வருகின்றது.

### செலாவணிப் பணம் (Currency Money)

ரிசர்வு வங்கி வெளியிடும் எல்லாக் காகிதச் செலாவணியிலும் ஓர் உறுதிமொழி அச்சிடப்பட்டிருப்பதைக் காணலாம். காகிதச் செலாவணியில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை வேண்டும்போது ரிசர்வு வங்கி உலோக நாணயங்களாக மாற்றிக்கொடுக்க முன்வரும் என்பதே அவ்வுறுதி மொழியாகும். செலாவணியை வெளியிடும் ரிசர்வு வங்கி அளிக்கும் உறுதிமொழியின் அடிப்படையில்தான் மக்கள் யாவரும் காகிதச் செலாவணியைத் தடையின்றி ஏற்க முன்வருகின்றனர்.

காகிதச் செலாவணியை வெளியிடும் முறையில் பல நாடுகள் பல முறைகளைக் கையாண்டு வருகின்றன. இந்தியாவில் தற்பொழுது ரிசர்வு வங்கி கையாண்டு வரும் முறைக்கு 'குறைந்த அளவு காப்புத் திட்டம்' (Minimum Reserve System) என்று பெயர். ரிசர்வு வங்கியின் இயங்கு முறையை, ரிசர்வு வங்கிச் சட்டம் வரையறுத்துக் கூறுகிறது. இச்சட்டத்தின்படி ரிசர்வு வங்கி ஒரு குறிப்பிட்ட அளவிற்கு இருப்புகளை (assets) வைத்திருக்க வேண்டியிருக்கிறது. ரிசர்வு வங்கி வெளியிடும் செலாவணிக்குக் காப்பாக இந்த இருப்புகள் இருக்கின்றன. அன்னியச் செலாவணி வைப்புகள் (Foreign Exchange Reserve) பொற்காசுகள், தங்கம், இந்திய அரசின் கடன் ஆவணங்கள் (Government of India Securities) ஆகியவற்றை ரிசர்வு வங்கி இருப்புகளாக வைத்திருக்கின்றது. தங்கம் ஒரு விலையுயர்ந்த உலோகமாகும். உலகெங்கிலும் அதற்கு மதிப்பு இருக்கின்றது. எந்த நாட்டிலும் அதை விலையாக்க முடியும். நாட்டின் அயல் நாட்டு வாணிபத்தின் வாயிலாகவும், பன்னாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலமாகவும் ரிசர்வு வங்கிக்கு அன்னியச் செலாவணி கிடைக்கின்றது. மத்திய அரசு கடன் ஆவணங்களைச் சந்தையில் விற்று அதன் மூலம் வேண்டிய நிதியைத் திரட்டிக் கொள்கின்றது. ரிசர்வு வங்கியும் மத்திய அரசின் கடன் ஆவணங்களில் முதலீடு செய்கின்றது. இன்று நடைமுறையில் இருக்கும் விதிப்படி ரிசர்வு வங்கி குறைந்தது 200 கோடி ரூபாய் மதிப்புள்ள இருப்புகளை வைத்திருக்க வேண்டும். இத்தொகையில் 114 கோடி ரூபாய் மதிப்புள்ள இருப்புகளைத் தங்கமாக வைத்திருக்கவேண்டும். எஞ்சிய தொகையைக் கடன் ஆவணங்கள் உருவத்தில் வைத்திருக்கலாம்.

1970-71ஆம் ஆண்டில் நாட்டில் புழக்கத்தில் இருந்த மொத்தக் காகிதச் செலாவணியின் அளவு ரூ. 4169 கோடியாகும். இவையன்றி ரூபாய் நாணயமாகவும், சில்லரைக் காசாகவும் 384 கோடி ரூபாய் மதிப்புள்ள பணம் புழக்கத்தில் இருந்தது. 1970-71-ல் புழக்கத்தில் இருந்த மொத்தப் பணம் 4553 கோடி ரூபாயாகும். இத்தொகை 1977 - 78-ல் ரூ. 9152 கோடியாக உயர்ந்தது. இதில் ரூ. 8559 கோடி ரிசர்வு வங்கி வெளியிட்ட காகிதச் செலாவணியாகவும் ரூ. 593 கோடி மத்திய அரசு வெளியிட்ட நாணயமாகவும் இருந்தது.

## வங்கிப் பணம்

ஒரு நாட்டில் புழக்கத்திலிருக்கும் பணத்தின் அளவைப் பணத்தின் அளிப்பு (Money Supply) என்றும் குறிப்பிடலாம்.

பண அளிப்பில் ஒரு பங்கு செலாவணிப் பணம் (currency money) உருவில் இருக்கின்றது. மற்றொரு பங்கு வங்கிப் பண உருவில் இருக்கின்றது. வணிக வங்கிகள் (Commercial Banks) வசம் இருக்கும் வைப்புகள்தான் (Deposits) வங்கிப் பணமாகக் கருதப் படுகின்றன. தனி நபர்களும் நிறுவனங்களும் வங்கிகளிடம் பணத்தை வைப்புகளாக வைத்திருக்கின்றன. வைப்புகளைச் செலுத்தியவர்கள் வேண்டும்பொழுது திருப்பிக் கொடுக்க வங்கிகள் முன்வருகின்றன. வங்கிகள் வைப்புகளை இரண்டு வழிகளில் உண்டாக்குகின்றன. தனி நபர்களும் நிறுவனங்களும் தங்களுக்குத் தேவையானபொழுது எடுத்துக்கொள்ளும் நோக்கத்துடன் வங்கிகளில் பணத்தை வைப்புகளாக வைத்திருக்கின்றனர். வைப்புகளை உருவாக்குவதில் இது ஒரு வகையாகும். மற்றொரு வகையிலும் வங்கிகள் வைப்புகளை உற்பத்தி செய்கின்றன. மக்களிடமிருந்து பணத்தைப் பெற்றுக் கொள்வதைப் போன்று வங்கிகள் மக்களுக்கும் நிறுவனங்களுக்கும் பணத்தைக் கடனாகக் கொடுக்கின்றன. விவசாயம், வணிகம், தொழில் இவற்றை மேற்கொள்ள வங்கிகள் கடனுதவி அளிக்கின்றன. வணிக வங்கி ஒருவருக்குக் கடன் தர இசைந்து ஒப்பளிப்பு வழங்கியதும் அத்தொகையை உடனடியாகக் கடன் கோரியவருக்குக் கொடுப்பதில்லை. கடன் கோரியவர் பெயரில் ஒரு கணக்கைத் தொடங்கி அந்தக் கணக்கில் கடன் தொகை வரவு வைக்கப்படுகின்றது. கடன் வாங்கியவர் தன்னுடைய தேவைக்கு ஏற்றாற்போல அவ்வப்போது தன்னுடைய கணக்கிலிருந்து பணத்தைப் பெற்றுக் கொள்கிறார். இவ்வாறு வணிக வங்கி வழங்கும் கடன் ஒவ்வொன் றிற்கும் எதிராக அக்கடன் தொகை அளவிற்கு வைப்பு (Deposits) ஒன்று உருவாகின்றது என்பதை அறியலாம்.

## பண அளிப்பில் இருக்கும் வளர்ச்சி

நம் நாட்டில் பண அளிப்பில் (Money Supply) எந்த அளவிற்குப் பெருக்கம் இருந்திருக்கின்றது என்பதைப் பட்டியல் 10—1-லிருந்து அறியலாம்.

அண்மை ஆண்டுகளில் பண அளிப்பு நாட்டில் விரைவாக வளர்ச்சியடைந்திருக்கின்றது. கடந்த காலத்தில் வங்கிப் பணம் செலாவணிப் பணத்தைவிட அளவில் குறைவாக இருந்தது. ஆனால், அண்மை ஆண்டுகளில் அது செலாவணிப் பணத்தின் அளவைவிட அதிகமாக இருக்கின்றது. இதிலிருந்து வங்கிப் பணம் எந்த அளவிற்கு வளர்ச்சியுற்றிருக்கின்றது என்பதை அறியலாம். வங்கிகள் வழங்கும் கடன்களுக்கு இருக்கும் தேவை பெருகிக்

கொண்டு வருவதைத்தான் இந்நிலை உணர்த்துகின்றது. சாதாரணமாகப் பொருளாதாரத்துறையில் வளர்ச்சியடைந்துவரும் ஒரு நாட்டில் வங்கிகள் வழங்கும் கடனுக்கு நல்ல தேவை இருக்கும் என்று கூறலாம்.

## பட்டியல் 10—1

இந்தியாவில் பண அளிப்பு
(கோடி ரூபாயில்)

| பண வகை | 1961 மார்ச்சு 31 ஆம் தேதியில் | 1971 மார்ச்சு 31 ஆம் தேதியில் | 1978 மார்ச்சு 31ஆம் தேதியில் |
|---|---|---|---|
| செலாவணிப் பணம் | 2098 | 4367 | 8631 |
| வங்கிப் பணம் | 771 | 2954 | 9752 |
| மொத்தப் பண அளிப்பு | 2869 | 7321 | 18383 |

ஆதாரம்: ரிசர்வு வங்கியின், செலாவணி மற்றும் நிதி நிலைபற்றிய அறிக்கைகள் 1973-74, 1978-79.

### பண அளிப்பின் அளவைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியம்

பொருளாதாரத் துறையில் வளர்ச்சியடைந்து வரும் ஒரு நாட்டில் பணத்தின் அளிப்பும் பெருக்கமடைய வேண்டும் என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு கருத்தாகும். அதே நேரத்தில், பண அளிப்பில் தேவைக்கு மீறிய பெருக்கம் இருக்க நேரிட்டால் அது நாட்டின் பொருளாதாரத்திற்குத் தீங்கு விளைவிக்கக்கூடும் என்னும் உண்மையையும் இங்கு வலியுறுத்திக் கூற வேண்டியது அவசியமாகின்றது. பண அளிப்பு பெருகுவதைத் தொடர்ந்து நாட்டின் உற்பத்தியிலும் பெருக்கம் இருத்தல் வேண்டும். பண்டங்கள், பணிகள் இவற்றின் உற்பத்தி பெருக்கமடைய வேண்டும். எனவே, ரிசர்வு வங்கி வெளியிடும் காகிதச் செலாவணியையும், வணிக வங்கிகள் தோற்றுவிக்கும் வங்கிப் பணத்தையும் நாட்டில் பண்ட உற்பத்தி நிலைக்கு ஏற்றாற்போலக் கட்டுப்படுத்தி வெளியிட வேண்டும். பண்டங்களில் உற்பத்தி அளவில் மாற்றம் இல்லா நிலையில் பணப் புழக்கத்தில் மட்டும் பெருக்கம் ஏற்பட நேரிட்டால் விலைவாசிகள் உயரத் தொடங்கும்.

### வங்கிகளின் அமைப்பு

நம் நாட்டில் இயங்கிவரும் வங்கிகளை ஒழுங்குபடுத்திய முறையில் அமைந்த வங்கிகள் (Organised Banks), ஒழுங்கு

படுத்தாத முறையில் அமைந்த வங்கிகள் (Unorganised Banks) என்று இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். எல்லா வணிக வங்கிகளும் ஒழுங்குப்படுத்திய முறையில் அமைந்த வங்கிகளாகும். வணிக வங்கிகளை இரண்டு வகைப்படுத்தலாம். ஷெட்யூல்டு வங்கிகள் (Scheduled Banks) இவற்றுள் ஒரு வகையாகும். ஷெட்யூலில் இல்லாத வங்கிகள் (Non-scheduled Banks) இரண்டாவது வகையைச் சேரும். ரிசர்வு வங்கியினுடைய ஷெட்யூலில் இருக்கும் வங்கிகள் அனைத்தையும் ஷெட்யூல்டு வங்கிகள் என்றழைக்கிறோம். ஷெட்யூல்டு வங்கிகளுக்கு ரிசர்வு வங்கியிட மிருந்து சில சலுகைகள் கிடைக்கின்றன. அதே நேரத்தில் அவை ரிசர்வு வங்கியினுடைய கட்டுப்பாட்டிற்கும் நிபந்தனைகளுக்கும் அடங்கிச் செயல்படவேண்டி இருக்கின்றது. ஒவ்வொரு ஷெட்யூல்டு வங்கியும் ரிசர்வு வங்கியின் வசம் ஒரு குறிப்பிட்ட தொகையை வைப்பாக (Deposits) வைத்திருக்க வேண்டும். ஒழுங்குபடுத்திய முறையில் அமைந்த பிரிவின் கீழிருக்கும் எல்லா வங்கிகளும் ரிசர்வு வங்கியின் நேரிடைக் கட்டுப்பாட்டிற்கு உள்ளவைகளாகும்.

வணிக வங்கிகள் அன்றி சுதேசி வங்கிகள் (Indigenous Banks) இன்றும் தொடர்ந்து நாட்டில் இயங்கி வருகின்றன. சுதேசி வங்கிகள் ஒழுங்குபடுத்திய மைுறயில் அமையாத பிரிவின்கண் அடங்கும். வணிக வங்கிகளைப் போன்று ஒரு மைய நிறு வனத்தின் (ரிசர்வு வங்கி) கட்டுப்பாட்டிற்கு உட்படாமல் இருப் பதால் இப்பிரிவை ஒழுங்குபடுத்திய முறையில் அமையாத வங்கிகள் என்றழைக்கின்றோம்.

## சுதேசி வங்கிகள் (Indigenous Banks)

நாம் இன்று நாட்டில் காணும் வங்கிகளின் அமைப்பு உள் நாட்டிலேயே தோன்றிய ஒன்றன்று. இங்கிலாந்து போன்ற மேற்கத்திய நாடுகளில் தோன்றி வளர்ந்த வங்கிகளின் அமைப்பை இந்தியாவும் கையாளத் தொடங்கியது. இதனால், இதற்கு முன்னர் இந்தியாவில் வங்கிகள் இயங்கவில்லை என்று கூற முடியாது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் ஆங்கிலேயர்கள் இந்தியாவில் நவீன வங்கி முறையை அறிமுகப்படுத்தினர். இதற்கு வெகு காலத்திற்கு முன்பே இந்தியாவில் லேவாதேவிக்காரர்கள் இயங்கி வந்தனர். ஷ்ராப்கள், மகஜன்கள், சேட்டுகள், செட்டியார்கள் என்னும் வகுப்பைச் சேர்ந்தவர்கள் லேவாதேவித் தொழிலை நடத்தி வந்தார்கள். சமீப காலம் வரையில் நாட்டில் சுதேசி வங்கிகள் என்றழைக்கப் படும் லேவாதேவிக்காரர்கள் முக்கிய அங்கம் வகித்து வந்தனர்.

லேவாதேவிக்காரர்களைக் கடன் வேண்டுவோர் எளிதில் அணுக முடிகின்றது. எந்தத் தொகையையும் அவர்கள் கடனாகக் கொடுக்க முன் வருகின்றனர். எந்தப் பொருளையும் அவர்கள் கடனுக்கு ஈடாக ஏற்றுக் கொள்ளுகின்றனர். இத்தகைய சலுகைகள் இருப்பதால் கடன் வாங்குவோர் லேவாதேவிக்காரர் களை நாடுகின்றனர். உடனடியாகக் காலதாமதமின்றி அவர்கள் கடன் தொகையைப் பெறவும் முடிகின்றது. சுதேசி வங்கிகளில் இருக்கும் பெருங் குறைபாடு கடன் வாங்குவோர் உயர்ந்த வட்டி செலுத்த வேண்டியிருக்கும் என்பதாகும். வணிக வங்கிகள் விதிக்கும் வட்டியைவிட சுதேசி வங்கிகள் (லேவா தேவிக்காரர்கள்) வசூலிக்கும் வட்டி மிகவும் உயர்வாக இருக்கின் றது. வணிக வங்கிகள் இந்திய ரிசர்வு வங்கியின் நேரடிக் கட்டுப் பாட்டின்கீழ் இயங்கி வருகின்றன என்று மேலே கண்டோம். ஆனால், சுதேசி வங்கிகள் ரிசர்வு வங்கியின் கட்டுப்பாட்டின்கீழ் வருவதில்லை. வணிக வங்கிகள் நிர்ணயிக்கும் விதிகளை நிறை வேற்ற முடியாத அல்லது அவை ஏற்றுக்கொள்ளக்கூடிய ஈட்டுப் பொருள்களை அடமானம் வைக்கக்கூடிய நிலையில் இல்லாத சிறு வியாபாரிகள், சிறு விவசாயிகள், நெசவுத் தொழிலாளர்கள், கைவினைஞர்கள், சிறு தொழில் உரிமையாளர்கள் தங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள லேவாதேவிக்காரர் களையே நாடுகின்றனர்.

## வணிக வங்கிகள்

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் வணிக வங்கிகள் முக்கியப் பங்கேற்கின்றன. விவசாய உற்பத்தி, தொழில் உற்பத்தி வணிகம் இவை செவ்வனே நடக்க வேண்டுமென்றால் கடன் வசதி எளிய முறையிலும் பரவலாகவும் கிடைக்க வேண்டும். வங்கிகள் கடன் அளிப்பதன்மூலம் தொழிலில் ஈடு பட்டுள்ளவர்களுக்குத் தேவையான மூலதனம் கிடைக்க வழி பிறக்கின்றது. தங்களுடைய நுகர்வுக்காகச் செலவிடும் தொகை போக எஞ்சி நிற்கும் மிகுதிப் பணத்தை மக்களிடமிருந்து சேகரித் துத் திரட்டி அத்தொகையைக் கடன் தொகையாக உற்பத்தித் துறையில் ஈடுபடுபவர்களுக்கு வங்கிகள் அளிக்கின்றன. வங்கி களில் பணத்தை வைத்திருப்பதால் பணத்திற்கு ஆபத்து ஏதும் நேராமல் இருக்கின்றது. மேலும் வங்கிகளில் வைக்கப்படும் பணத்திற்கு வட்டியும் கிடைக்கின்றது. இக்காரணங்களால் பணத்தைச் சேமித்து வங்கிக் கணக்கில் வைக்க மக்கள் ஊக்கு விக்கப்படுகின்றனர்.

## வணிக வங்கிகளின் பணிகள்

வணிக வங்கிகளின் முக்கியப் பணிகள் பின்வருமாறு :

(1) வங்கிகள் மக்களிடமிருந்து வைப்புகளை ஏற்றுக் கொள்கின்றன : தனியார்களிடமிருந்தும் நிறுவனங்களிடமிருந்தும் பணத்தை ஏற்றுக் கொண்டு அப்பணத்தை அவர்கள் கணக்கில் வைப்புகளாக நிருவகித்து வருவது வங்கிகள் ஆற்றும் பணிகளுள் முக்கியம் வாய்ந்த ஒன்றாகும். மிகுதியாகப் பணம் உள்ளவர்கள் அத்தகைய மிகுதிப் பணத்தை எதிர் காலத்தில் பயனுள்ள முறையில் செலவிட விரும்பினால் இடைக் காலத்தில் அதை வங்கிகளில் போட்டு வைக்கின்றனர். அவர்களுடைய பணத்திற்கு வங்கிகள் பாதுகாப்பளிப்பதுடன் வட்டியும் கொடுக்கின்றன. வைப்பு வைத்திருப்பவர்களுக்கு வங்கிகள் வேறு சில வசதிகளையும் செய்து தருகின்றன. வைப்பு வைத்திருப்பவர்கள் தங்கள் கணக்கிலிருந்து வேறொருவர் கணக்கிற்கோ அல்லது வேறோர் இடத்திற்கோ பணத்தை மாற்றுவதற்கு வங்கிகள் காசோலை (cheque) வசதி அளிக்கின்றன.

வைப்புக் கணக்கில் இருக்கும் தொகைக்கு வங்கிகள் வட்டி கொடுக்கின்றன. வைப்புகள் மூலம் கிடைக்கும் தொகையை வைத்துக்கொண்டுதான் வங்கிகள் பிறருக்குக் கடன் அளிக்கின்றன. வங்கிகளில் செலுத்தப்படும் வைப்புகள் வங்கிகளிலேயே வைத்திருக்கப்படுவதில்லை. பல்வேறு அலுவல்களையும் செயல்களையும் நிறைவேற்றத் தேவைப்படும் பணத்திற்காக வங்கிகளின் உதவியை நாடி நிற்கும் நபர்களுக்கு வங்கிகள் கடன்களை அளிக்கின்றன. மக்களிடமிருந்து ஏற்கப்படும் வைப்புகளுக்கு என்ன வட்டி கொடுக்கவேண்டும், பிறருக்குக் கடன்களை அளிக்கும்போது வங்கிகள் என்ன வட்டி விதிக்கலாம் என்பவை ரிசர்வு வங்கியால் நிர்ணயிக்கப்படுகின்றன. வணிக வங்கிகள் அனுசரிக்க வேண்டிய வட்டி விகிதங்களை ரிசர்வு வங்கி அவ்வப்போது மாற்றி அமைக்கின்றது. வங்கிகள் ஏற்கும் வைப்புகளில் பல வகைகள் இருக்கின்றன. அவற்றுள் முக்கியமானவற்றை இப்பொழுது பார்ப்போம்.

(அ) நடப்புக் கணக்கு (Current Account) : அடிக்கடி பணத்தை வங்கியிலிருந்து எடுக்க விரும்புபவர்கள் நடப்புக் கணக்கை வைத்துக் கொள்கின்றனர். வியாபாரிகளுக்கும் தொழில் அதிபர்களுக்கும் அடிக்கடி பிறர் பணம் செலுத்துவார்கள். அதேபோன்று இவர்களும் பிறருக்கு அடிக்கடிப் பணம் கொடுக்க வேண்டிவரும். இத்தகையவர்கள் தங்களுடைய வைப்புகளை நடப்புக் கணக்காக வைத்திருப்பார்கள். சாதாரணமாக நடப்புக்

கணக்கில் இருக்கும் பணத்திற்கு வங்கிகள் வட்டிப் பணம் கொடுப்பதில்லை.

(ஆ) காலக்கெடு வைப்பு (Fixed Deposit) : குறிப்பிட்ட ஒரு காலத்திற்குப் பணத்தைத் திரும்ப எடுக்காமல் வைத்திருக்க முன் வருபவர்கள் வங்கிகளில் காலக்கெடு வைப்புக் கணக்கைத் தொடங்குகின்றனர். இத்தகைய வைப்புகளுக்கு வங்கிகள் வட்டி கொடுக்கின்றன. வட்டி வீதம் வைப்பின் காலக்கெடுவிற்கு ஏற்றாற் போல மாறுபடுகின்றது.

(இ) சேமிப்புக் கணக்கு (Savings Account) : சமூக அமைப் பின் மத்திய நிலையில் உள்ளவர்களுக்கும் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கும் சேமிப்புக் கணக்கு ஏற்புடையதாக இருக் கின்றது. இப்பிரிவுகளைச் சேர்ந்த பெரும்பாலானவர்களால் சிறு தொகையைத்தான் சேமித்து வைக்க முடிகின்றது. சேமித்த சிறு தொகையையும் இவர்களால் காலக்கெடு வைப்பில் வைத்திருக்க முடிவதில்லை. உடனடிக் காரியங்களைச் சமாளிக்க இவர்களுக்குப் பணம் எப்போதும் தேவைப்படலாம். வணிக வங்கிகள் இவர்களுக்கு சேமிப்புக் கணக்கு வசதியை அளிக்கின்றன. மிகக் குறைந்த அளவான ஐந்து ரூபாய் பணத்துடன் ஒருவர் சேமிப்புக் கணக்கைத் தொடங்கலாம். சேமிப்புக் கணக்கில் இருக்கும் பணத்திற்கு வங்கி வட்டி கொடுக்கின்றது. ஆனால், வட்டி வீதம் காலக்கெடு வைப் பிற்குக் கிடைப்பதைவிடக் குறைவாக இருக்கின்றது.

(ஈ) தொடர் வைப்பு (Recurring Deposit) : தொடர் வைப்புக் கணக்கை வைத்திருப்பவர் ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்திக்கொண்டு வரவேண்டும். இவ்வாறு ஒரு குறிப்பிட்ட காலத்திற்குச் செலுத்தி வரவேண்டும். கால அளவு அதிகமாக இருந்தால் வட்டித் தொகையும் கூடுதலாகக் கிடைக்கும். சிறுகச்சிறுகச் செலுத்தி முடிவில் ஒரு பெருந்தொகையைப் பெற விரும்புவோருக்குத் தொடர் வைப்புக் கணக்கு வசதியாக இருக்கின்றது. காலக்கெடு முடிந்த பிறகு செலுத்திய மொத்தப் பணத்துடன் வட்டித் தொகையையும் சேர்த்து வங்கி கொடுக்கின்றது.

(2) வங்கிகள் வாடிக்கையாளர்களுக்குக் கடன்களை அளிக் கின்றன : வணிக வங்கி ஆற்றும் இரண்டாவது முக்கியப் பணி வாடிக்கைக்காரர்களுக்குக் கடன் அளிப்பதாகும். தொழிலிலும் வணிகத்திலும் ஈடுபட்டுள்ளவர்களுக்குக் கடனுதவி தேவைப் படுகின்றது. இவ்வாறு தேவைப்படும் கடனை வணிக வங்கிகள் அளித்துவருகின்றன. இவ்வாறு வழங்கப்படும் கடன்களைத்தான் வங்கிப் பணம் என்றழைக்கின்றோம். நாட்டில் புழக்கத்தில்

இருக்கும் மொத்தப் பண அளிப்பில் வங்கிப் பணம் பெருமளவில் இருக்கின்றது என்று இவ்வத்தியாயத்தின் முற்பகுதியில் கண்டோம். வங்கிகள் அளிக்கும் கடன்கள் இவ்வளவு முக்கியம் வாய்ந்தவைகளாக இருப்பதால், வணிக வங்கிகள் எந்த அளவிற்குக் கடன் அளிக்கலாம் என்பதை ரிசர்வு வங்கி அவ்வப் போது நிர்ணயிக்கின்றது.

வணிக வங்கிகளிடம் இருக்கும் வைப்புகள் பெரும்பாலும் குறுகிய கால வைப்புகளாக இருக்கின்றன. எனவே, வங்கிகளும் சாதாரணமாகக் குறுகிய காலத்திற்கே கடன்களை அளிக்கின்றன.

(3) வங்கிகள் உண்டியல்களைக் கழிவுசெய்து வாங்குகின்றன (Discounting of Bills): உள் நாட்டு, அயல் நாட்டு வாணிப உண்டியல்களை (Trade Bills) வணிக வங்கிகள் கழிவு செய்து வாங்குவதற்கு முன்வருகின்றன. வணிக வங்கிகள் ஆற்றும் பணிகளுள் இதுவும் ஒரு முக்கியமான பணியாகும். வாணிப உண்டியலுக்கு ஒரு குறிப்பிட்ட காலக்கெடு இருக்கின்றது. சாதாரணமாகக் காலக்கெடு மூன்றுமாத அளவில் இருக்கும். அதாவது வாணிப உண்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பணத்தைக் கொடுக்கவேண்டியவர் உண்டியல் பத்திரத்தில் கையெழுத்திடும் தேதிக்கும் அவர் முடிவில் பணத்தைச் செலுத்தும் தேதிக்கும் மூன்று மாத கால இடைவெளி இருக்கும். ஓர் உதாரணத்தின் துணையோடு விளக்கினால் இக்கருத்து தெளிவாக விளங்கும். 'அ' என்னும் பெயருடைய ஒரு வியாபாரி 'ஆ' என்னும் பெயருடைய மற்றொரு வியாபாரிக்குப் பண்டங்களை அனுப்பி வைக்கின்றார். பண்டங்களின் கிரயத்தை உடனடியாகக் கொடுக்கும் நிலையில் 'ஆ' இல்லை; ஆனால், சிறு கால அவகாசத்திற்குப் பிறகு செலுத்த இசைகின்றார். இத்தகைய ஒரு பேரத்தைக் கடன் பேரம் என்றழைக்கலாம். 'ஆ' கொடுக்க வேண்டிய தொகைக்கு உண்டியல் ஒன்றை 'அ' தயாரிப்பார். 'ஆ' அதில் கையெழுத்திட்டுத் தன்னுடைய இசைவைத் தெரிவிப் பார். எந்தத் தேதியில் உண்டியல் தயாரிக்கப்பட்டது, எந்தத் தேதியில் அந்த உண்டியலின் காலக்கெடு முடிவடைகின்றது என்னும் விவரங்கள் உண்டியலில் குறிக்கப்பட்டிருக்கும். இந்த பேரத்தில் பண்டங்களை விற்ற 'அ' என்பவர் தனக்குரிய தொகையைப் பெறுவதற்கு உண்டியலின் காலக்கெடு நாள் வரை காத்திருக்க வேண்டும். இவ்வாறு காத்திருப்பதற்குப் பதிலாக 'அ' என்பவர் ஒரு வணிக வங்கியை அணுகி உண்டியலைக் கொடுத்துவிட்டுப் பணத்தை உடனடியாகப் பெற்றுக்கொள்ள லாம். உண்டியலைப் பெற்றுக்கொண்டு வணிக வங்கி பணத்தைக் கொடுக்கும் இந்நடவடிக்கை 'கழிவு செய்தல்' (Discounting).

என்னும் பெயரில் அழைக்கப்படுகின்றது. உண்டியலில் குறிப்பிட்டுள்ள தொகையில் ஒரு சிறு தொகையைக் கழிவு செய்துவிட்டு எஞ்சிய தொகையை வங்கி 'அ' வுக்கு அளிக்கும். இவ்வாறு கழிவு செய்து வாங்கிய உண்டியலை வங்கி அதனுடைய காலக்கெடு முடியும் நாள் வரை வைத்திருந்துவிட்டுக் கெடு முடிந்ததும் 'ஆ' என்பவரிடமிருந்து முழுத் தொகையையும் வசூலிக்கும். உண்டியல்களைக் கழிவு செய்வதன் மூலம் வணிக வங்கிகள் கணிசமான அளவிற்கு வருவாய் ஈட்டுகின்றன.

(4) வங்கிகள் ஆற்றும் இதரப் பணிகள் : வணிக வங்கிகள் வேறு பல பணிகளையும் ஆற்றுகின்றன. இப்பணிகளை இரு பிரிவுகளுக்குள்ளாக்கலாம்: (அ) பதிலிப் பணிகள் (Agency Services); (ஆ) பொதுப் பணிகள் (General Utility Services).

வணிக வங்கிகள் பின்வரும் பதிலிப் பணிகளைத் தங்களுடைய வாடிக்கையாளர்களுக்குப் புரிகின்றன: 1. வாடிக்கையாளர்கள் சார்பில் அவர்களுக்குச் சேரவேண்டிய தொகைகளை வங்கிகள் வசூலிக்கின்றன. வங்கியில் கணக்கு வைத்திருக்கும் ஒருவர் பல கம்பெனிகளில் பங்கு (share) வைத்திருக்கலாம், அல்லது கம்பெனிகளுக்கோ அல்லது இதர நிறுவனங்களுக்கோ கடனாகப் பணம் கொடுத்திருக்கலாம். இவ்வாறு முதலீடு செய்யப்பட்டுள்ள தொகைக்கு வட்டியும் ஊதியப் பங்கும் (Dividend) ஒவ்வோர் ஆண்டும் கிடைக்கும். இவ்வாறு வாடிக்கையாளருக்குக் கிடைக்க வேண்டிய தொகையை உரிய காலத்தில் வசூலித்து அத் தொகையை அவருடைய கணக்கில் சேர்க்கும் பணியை வங்கிகள் மேற்கொள்கின்றன. (2) வாடிக்கையாளர்கள் விரும்பினால் அவர்களுடைய மாதாந்திர சம்பளத் தொகையை அல்லது ஓய்வூதியத் தொகையை மாதா மாதம் வங்கி வசூலித்து அவரவருக்கு உரிய கணக்கில் சேர்த்துவிடும். (3) வாடிக்கையாளர்கள் தங்களுடைய சார்பில் குறிப்பிட்ட தேதிகளில், குறிப்பிட்ட இனங்களுக்காக, குறிப்பிட்ட நிறுவனங்களுக்குப் பணத்தைச் செலுத்தும்படி வங்கிகளுக்குக் கட்டளை பிறப்பிக்கலாம். வீட்டுவாடகை, ஆயுள்காப்புத் தவணை போன்றவைகளை வங்கிகள் பொறுப்பில் விட்டுவிடலாம். (4) வாடிக்கையாளர்கள் சார்பில் வங்கிகள் 'பங்குகளை' (Shares) வாங்கவும் விற்கவும் முன் வருகின்றன. (5) வாடிக்கையாளரின் டிரஸ்டியாக இருந்து அவருடைய சொத்துகளை விற்கும், நிருவகிக்கும் பணியை வங்கிகள் மேற்கொள்கின்றன. இவ்வாறு மேற்கொள்ளும் ஒவ்வொரு பணிக்காகவும் வணிக வங்கி வாடிக்கையாளர்களிடமிருந்து ஒரு தொகையை வசூலிக்கின்றது.

வங்கிகள் புரியும் பொதுப் பணிகள் பின்வருமாறு :

(1) விலை உயர்ந்த பொருள்களையும் ஆவணங்களையும் (Documents) பாதுகாப்புக்காக வங்கிகளில் வைத்திருக்கலாம். வங்கிகளில் பாதுகாப்புப் பெட்டகங்கள் இருக்கின்றன. வாடிக்கையாளர் ஒரு பெட்டகத்தை வாடகைக்கு எடுத்துக்கொண்டு தான் விரும்பும் பொருள்களை அப்பெட்டகத்தில் பாதுகாப்புக்காக வைத்திருக்கலாம். (2) பணத்தை ஓரிடத்திலிருந்து பிறிதோர் இடத்திற்குப் 'பண வரைவு' (Bank Draft) மூலம் வங்கி மாற்றிக் கொடுக்கிறது.

## வணிக வங்கிகளின் வளர்ச்சி

நெடுங்காலமாக வணிக வங்கிகள் நாட்டின் பெருநகர்களிலும் நகரங்களிலும் மட்டுமே அமைந்து இயங்கிவந்தன. இதேபோன்று அவை ஆற்றிவந்த பணிகளைப் பார்த்தாலும் கடந்த காலத்தில் அவை தொழில், வணிகம் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளில் மட்டுமே அக்கரை காட்டி வந்தன. நாட்டின் பெரும் பகுதி, குறிப்பாகக் கிராமப்புறங்கள் வங்கி வசதியே இல்லாமல் இருந்தன.

நாட்டில் திட்டமிட்டு பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும்முறை நடைமுறைக்கு வந்த பிறகு வங்கிகள் ஆற்றும் பணிகளுக்கு இருக்கும் தேவை பெருகத் தொடங்கியது. குறிப்பாக, அதற்கு முன் வங்கி வசதி போதிய அளவிற்கு இல்லாத பகுதிகளில் தேவை மிக அதிகமாக இருந்தது. இதைத் தொடர்ந்து வங்கிகளுக்கும் அதிக அளவில் நிதி தேவைப்பட்டது. வங்கிகள் அளிக்கும் கடன்களுக்குத் தேவை பெருகிக்கொண்டு வந்தது. வாடிக்கையாளர்களுடைய வைப்புகள் மூலமாக மட்டும் இத் தேவையைச் சமாளிக்க முடியவில்லை. வணிக வங்கிகள் நிதி உதவிக்காக ரிசர்வு வங்கியை அணுக வேண்டியிருந்தது. ரிசர்வு வங்கியின் ஷெட்யூல்டில் இணைவதால் கிடைக்கக்கூடிய அனுகூலங்களை வணிக வங்கிகள் உணரத் தொடங்கின. 1966 ஆம் ஆண்டில் மொத்தம் 100 வணிக வங்கிகள் நாட்டில் இயங்கி வந்தன. அவற்றுள் 27 வங்கிகள் மட்டுமே ஷெட்யூல்டில் அடங்காத வங்கிகளாக இருந்தன. ஆனால், 1956ஆம் ஆண்டில் இருந்த மொத்த 423 வணிக வங்கிகளுள் 334 வங்கிகள் ஷெட்யூல்டில் அடங்காத வங்கிகளாக இருந்தன. இவ்வாறு நாட்டில் இருக்கும் வணிக வங்கிகளுள் பெரும்பான்மையானவை நாளாவட்டத்தில் ரிசர்வு வங்கியின் கட்டுப்பாட்டின்கீழ் வரத் தொடங்கின. காலப்போக்கில் ஷெட்யூல்டில் அடங்காத வங்கிகளின் எண்ணிக்கை மிகச் சொற்பமாகிவிட்டது. நாட்டில் திட்டமிட்ட

வழியில் வங்கிகளை வளர்ச்சியடையச் செய்வதற்கு இப்போக்கு பெருந்துணையாக இருந்தது என்று கூறவேண்டும்.

1956, 1966 இவ்விரு ஆண்டுகளுக்கிடையே இருந்த வங்கிகள் வளர்ச்சியைப் பட்டியல் 10—2 விளக்கிக் காட்டுகின்றது.

## பட்டியல் 10—2

இந்தியாவில் வங்கிகள் வளர்ச்சி

| தொடர் எண் | இனங்கள் | ஆண்டு 1956 | ஆண்டு 1966 |
|---|---|---|---|
| 1. | வங்கிகளின் எண்ணிக்கை | 423 | 100 |
| | (அ) ஷெட்யூல்டு வங்கிகள் | 89 | 73 |
| | (ஆ) ஷெட்யூல்டில் அடங்காத வங்கிகள் | 334 | 27 |
| 2. | இந்தியாவில் உள்ள கிளை வங்கிகளின் எண்ணிக்கை* | 4067 | 6593 |
| 3. | ஒரு கிளை வங்கிக்கு சராசரி மக்கள் தொகை | 98000 | 76000 |

* வணிக வங்கிகளுக்கு அயல் நாடுகளிலும் கிளைகள் உள்ளன.

ஆதாரம்: வங்கிகள் சம்பந்தமான புள்ளிவிவரப் பட்டியல்கள்; 1969 ரிசர்வு வங்கி வெளியீடு.

வணிக வங்கிகள் நாட்டின் பல பகுதிகளிலும் புதிய கிளைகளைத் திறந்தன. இருப்பினும், அவை பணியாற்றும் முறையில் சில குறைபாடுகள் காணப்பட்டன. வங்கிகள் பரவலாக்கப்பட்டபொழுது நகர்ப்புறங்களில் மட்டுமே கிளைகள் திறக்கப்பட்டன. கிராமப்புறங்கள் புறக்கணிக்கப்பட்டன. நம்முடைய நாட்டில் பெரும்பான்மையான மக்கள் இனியும் தொடர்ந்து கிராமங்களிலேயே வாழ்ந்து வருகின்றனர். உணவுப் பண்டங்கள், தொழிற் சாலைகளுக்குத் தேவையான கச்சாப் பொருள்கள் இவையனைத்தும் கிராமங்களில்தான் உற்பத்தியாகின்றன. எனவே, நாட்டு முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளும் முயற்சிகளில் கிராமங்களின் நலனைப் புறக்கணிக்கக் கூடாது. கிராம நலனைப் பெருக்கவேண்டுமென்றால், வேளாண்மை, கால் நடையைப் பராமரித்தல், கோழி வளர்த்தல், குடிசைத் தொழில்கள் போன்றவற்றிற்கு நல்ல ஊக்கம் அளிக்கவேண்டும். இத்துறைகளில் ஈடுபட்டவர்களுக்கு நிதி உதவி தேவைப்படுகின்றது. கிராமங்களில் கடனுதவி அளிக்கும் பணியைக் கூட்டுறவு முறையில்

அமைந்த வங்கிகள் மேற்கொண்டிருந்தன. ஆனால், கிராமங்களில் தேவைப்பட்ட மொத்தக் கடன் தொகையில் ஒரு சிறு அளவைத் தான் இவ்வங்கிகளால் அளிக்க முடிந்தது. எனவே, விவசாயத் திற்கும், இதர கிராமத் தொழில்களுக்கும் வணிக வங்கிகள் பெருமளவில் கடன் அளிக்க முன்வர வேண்டும் என்று மத்திய அரசும் ரிசர்வு வங்கியும் உணரத் தொடங்கின. இந்நோக்கம் கைகூடவேண்டுமெனில் வணிக வங்கிகள் கிராமப்புறங்களில் கிளைகளைத் திறக்க வேண்டும். மேலும், வணிக வங்கிகள் ஆலைத் தொழில்களுக்குக் கடனுதவி அளித்துவந்தது என்றாலும் பேரளவுத் தொழில்கள் மட்டுமே வணிக வங்கிகளால் பய னடைந்து வந்தன. சிறு தொழில்கள் வங்கிகளால் புறக்கணிக்கப் பட்டன. வணிக வங்கிகளின் செயல்முறையில் காணப்பட்ட மற்றொரு குறைபாடு வங்கிகளின் வளர்ச்சி நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் ஒரே சீராக இல்லை. நாட்டின் சில பகுதிகளில் வங்கி வசதி போதிய அளவிற்கு இல்லாமல் பின்தங்கிய நிலையிலேயே இருந்தது. இவ்வாறு, வங்கிகளின் வளர்ச்சி நாட்டில் முறையாக அமையவில்லை. வணிக வங்கிகள் தனியார் வசம் இருப்பதாலும், வங்கிகளின் உரிமையாளர்கள் பெருந் தொழில் அதிபர்களாகவும் பெரு வணிகர்களாக இருப்பதாலும் அவர்கள் தங்களுடைய சொந்த நலனை வளர்த்துக் கொள்வதிலேயே அக்கறை காட்டு கிறார்களேயன்றி நாட்டு முன்னேற்றத்தைப்பற்றிக் கவலைப் படுவதில்லை என்னும் கருத்து நாட்டில் வலுப்பெறத் தொடங்கியது. நிறைந்த எண்ணிக்கையில் இருக்கும் சிறு விவசாயிகள், சிறு உற்பத்தியாளர்கள், கைவினைஞர்கள், சிறு வியாபாரிகள் இவர்கள் வங்கிகளிடமிருந்து உதவி பெற முடியாத நிலையில் இருந்தனர்.

எனவே, நாட்டில் வங்கிகள் இயங்கும் முறையை இந்திய அரசு ஆய்வு செய்த பிறகு, 14 முக்கிய வணிக வங்கிகளை 1969 ஜூலைத் திங்களில் நாட்டுடமையாக்க முடிவு செய்தது. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் ஒவ்வொன்றிற்கும் ரூ. 50 கோடிக்கும் மேலான வைப்புகள் இருந்தன.

தேசியமயமாக்கப்பட்ட பிறகு வங்கிகளின் வளர்ச்சி : தேசிய மயமாக்கப்பட்டதைத் தொடர்ந்து வந்த ஆண்டுகளில் வங்கி களின் செயல்முறையில் நல்ல மாற்றமிருந்தது. நாட்டில் இயங்கி வந்த வணிக வங்கிகளின் எண்ணிக்கை நாளாவட்டத்தில் குறைந்து 1972ஆம் ஆண்டில் அது 83 ஆக இருந்தது. 1975ஆம் ஆண்டுவரை வங்கிகளின் எண்ணிக்கையைப் பொறுத்த அளவில் எவ்வித மாற்றமும் இல்லை. அதன் பிறகு எண்ணிக்கை வளர்ந்து

1978-ல் மொத்தம் 128 வங்கிகள் இருந்தன. ஷெட்யூலில் அடங்காத வங்கிகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்துவிட்டன. 1975-ல் 9 ஆக இருந்த இவற்றின் எண்ணிக்கை 1978-ல் 6 ஆகக் குறைந்துவிட்டது. வணிக வங்கிகள் புதிய கிளைகளைத் திறக்கும் விஷயத்தில் தனிக் கவனம் செலுத்தப்பட்டது. 1969 ஆம் ஆண்டில் மொத்தம் 8262 கிளைகள் நாட்டில் இருந்தன. ஒவ்வோர் ஆண்டும் கிளைகளின் எண்ணிக்கை வளர்ச்சியடைந்து 1978-ல் 28,016 அளவை எட்டின. 1970ஆம் ஆண்டுவரையில் கிராமப்புறங்களில் இருந்த கிளைகளின் எண்ணிக்கை நகர்ப்புறங்களில் இருந்தவற்றைவிடக் குறைவாக இருந்தது. கிராமப்புறங்களில் வங்கி வசதிகளைப் பரவலாக்க வேண்டும் என்னும் கொள்கையை மத்திய அரசு தீவிரமாகக் கடைப்பிடித்து வந்ததால் 1971ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்நிலை மாற்றம் அடையத் தொடங்கியது. எல்லாப் பகுதிகளிலும் புதிய கிளைகள் திறக்கப்பட்டு வந்தாலும் கிராமப்புறங்களில் அதிகமான கிளைகள் திறக்கப்படலாயின. விரைவாகக் கிளைகள் திறக்கப்பட்டதன் வாயிலாக வங்கி வளர்ச்சி குறிப்பிட்டுக் கூறும் வகையில் இருந்தது. சராசரியில் ஒரு வங்கிப் பணி புரியும் நபர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறையத் தொடங்கியது. 1969 ஆம் ஆண்டில் சராசரி 64,000 பேர்களுக்கு ஒரு வங்கிக் கிளை இருந்தது. 1978ஆம் ஆண்டில் எண்ணிக்கை 2,3000-க்குக் குறைந்துவிட்டது.

நாட்டின் பல்வேறு பிரிவுகளின் முன்னேற்றத்திற்கு மூலதன முதலீடு தேவைப்படுகின்றது; இவ்வாறு தேவைப்படும் மூலதனத்தில் ஒரு கணிசமான அளவை வங்கிகளின் மூலம் பெறலாம். எனவே, சேமிப்பைத் திரட்டும் பணியில் வங்கிகளை முனைப்பாக ஈடுபடச் செய்ய வேண்டுமென்பது வங்கிகளைத் தேசியமயமாக்குவதற்கு ஒரு முக்கிய நோக்கமாக இருந்தது. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் கிராமங்களிலிருந்து வைப்புகளைத் திரட்டுவதில் முக்கியக் கவனம் செலுத்துமாறு கோரப்பட்டன. கடந்த பத்தாண்டு காலத்தில் வணிக வங்கிகளின் வைப்பு நிலையில் நல்ல முன்னேற்றம் இருந்திருக்கின்றது. 1969-ல் ஷெட்யூல்டு வணிக வங்கிகள் அனைத்துமாக ரூ. 4,646 கோடி வைப்புகளைத் திரட்டின. 1978-ல் திரட்டப்பட்ட வைப்புகளின் அளவு 23,313 கோடியாகும்.

தேசியமயமாக்கப்பட்ட பிறகு வங்கிகள் அளித்த கடன் தொகையில் நல்ல வளர்ச்சி இருந்திருக்கின்றது. 1969-ல் ஷெட்யூல்டு வணிக வங்கிகள் அனைத்தும் மொத்தமாக அளித்த கடன்

தொகை ரூ. 3,599 கோடியாகும். 1978-ல் இத்தொகை ரூ.15,694 கோடியாக உயர்ந்தது. கடன் அளிப்பதில், இதுவரை புறக்கணிக்கப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்குத் தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று வங்கிகள் கோரப்பட்டன. கடந்த காலத்தில் புறக்கணிக்கப்பட்ட பிரிவுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் நோக்கத்துடன் 'முதன்மைப் பிரிவுகள்' (Priority Sector) என்று அழைக்கப்படும் பிரிவு தோன்றலாயிற்று. விவசாயம், சிறு தொழில்கள், சில்லரை வியாபாரம் இத்துறைகளைச் சேர்ந்தவர்களும் தற்பணியாளர்களும் (Self-employed) முதன்மைப் பிரிவைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். முதன்மைப் பிரிவுகளுக்கு வணிக வங்கிகள் 1969 ஆம் ஆண்டில் அளித்த மொத்தக் கடன் தொகை ரூ.504 கோடியாகும். 1978 ஆம் ஆண்டில் இத் தொகை ரூபாய் 4,491 கோடியாக உயர்ந்தது.

## பட்டியல் 10—3

### இந்தியாவில் வங்கிகளின் வளர்ச்சி

| இனங்கள் | ஆண்டு | |
|---|---|---|
| | 1969 | 1978 |
| 1. வணிக வங்கிகளின் எண்ணிக்கை | 89 | 128 |
| (அ) ஷெட்யூல்டு வங்கிகள் | 73 | 122 |
| (ஆ) ஷெட்யூல்டில் அடங்காத வங்கிகள் | 16 | 6 |
| 2. இந்தியாவில் உள்ள வங்கிக் கிளைகள் | 8262 | 28016 |
| (அ) கிராமப்புறங்களில் இருந்த கிளைகள் | 1833 | 11806 |
| (ஆ) நகர்ப்புறங்களில் இருந்த கிளைகள் | 6429 | 16210 |
| 3. ஒரு கிளை பணிபுரியும் மக்களின் எண்ணிக்கை | 64000 | 23000 |
| 4. ஷெட்யூல்டு வங்கிகளின் மொத்த வைப்புகள் (கோடி ரூபாயில்) | 4646 | 23313 |
| 5. ஷெட்யூல்டு வங்கிகள் அளித்த மொத்தக் கடன் தொகை (கோடி ரூபாயில்) | 3599 | 15694 |
| 6. முதன்மைப் பிரிவுகளுக்கு (Priority Sector) ஷெட்யூல்டு வங்கிகள் அளித்த கடன் தொகை (கோடி ரூபாயில்) | 504 | 4491 |

ஆதாரம்: அடிப்படைப் புள்ளி விவரங்கள்; ரிசர்வு வங்கி வெளியீடு, மார்ச்சு 1980.

இவ்வாறு 1970ஆம் ஆண்டிலிருந்து வங்கிகள் அமைப்பில் மெச்சத் தகுந்த அளவிற்கு முன்னேற்றம் இருந்திருக்கின்றது. வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டதே இதற்கு முக்கியக் காரணமாகும். வணிக வங்கிகள் 1969-ல் தேசியமயமாக்கப்படுவதற்கு முன்னரே பாரத ஸ்டேட் பாங்கு அரசுடைமையில் இருந்தது. இவ்வங்கியின் வளர்ச்சியும் நாட்டின் பொதுவான வங்கி வளர்ச்சிக்கு ஒரு காரணமாக இருந்தது. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் பங்கும் சிறப்பாக இருந்தது. வங்கிகளைத் தேசியமயமாக்கியதால் கிடைத்த நலன்களைக் கருத்திற்கொண்டு மத்திய அரசு 1980ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ஆம் தேதி மேலும் ஆறு வணிக வங்கிகளை நாட்டுடமையாக்கியது. இவற்றையும் சேர்த்து இன்று 20 வங்கிகள் மத்திய அரசுத் துறையின்கீழ் இயங்கி வருகின்றன.

தேசிய மயமாக்கப்பட்ட பிறகு வங்கிகளில் இருந்த வளர்ச்சியைப் பட்டியல் 10—3 விளக்கிக் காட்டுகின்றது. தேசிய மயமாக்கப்படும் தருவாயில் இருந்த நிலையையும் பத்தாண்டுகளுக்குப் பிறகு இருந்த அதன் நிலையையும் பட்டியலிலிருந்து அறியலாம்.

## இந்திய ரிசர்வு வங்கி

ஒவ்வொரு நாட்டிலும் ஒரு மைய பாங்கு (Central Bank) இயங்கி வருகின்றது. ரிசர்வு வங்கி நம் நாட்டின் மையவங்கியாகும். இது 1935 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதி நிறுவப்பட்டது. இது மத்திய அரசுக்குச் சொந்தமானது. நாட்டின் பணவியல் முறை, வங்கிகள் அமைப்பு இரண்டையும் ரிசர்வு பாங்கு கட்டுப்படுத்திவருகின்றது.

## ரிசர்வு வங்கியின் பணிகள்

ரிசர்வு வங்கி மேற்கொள்ளும் முக்கியப் பணிகள் பின் வருமாறு :

(1) ரிசர்வு வங்கி காகிதச் செலாவணியை வெளியிடுகின்றது : நம் நாட்டில் புழக்கத்தில் இருக்கும் பணத்தில் ரிசர்வு வங்கியால் வெளியிடப்படும் காகிதச் செலாவணியும் மத்திய அரசால் வெளியிடப்படும் ஒரு ரூபாய் நோட்டு, ஒரு ரூபாய் நாணயம், பிற சில்லரை நாணயங்கள் இவைகளும் அடங்கியிருக்கின்றன. மத்திய அரசு வெளியிடும் நோட்டுகளும், நாணயங்களும் மிகச் சிறிய அளவில்தான் இருக்கின்றன. காகிதச் செலாவணிகளை

வெளியிடுவதற்கு என்று தனியாக, வெளியீட்டுத் துறை (Issue Department) என்னும் பெயரில் ஒரு துறை ரிசர்வு வங்கியில் இயங்கி வருகின்றது. ரிசர்வு வங்கியில் இருக்கும் மற்றொரு முக்கியத் துறை 'வங்கித் துறை' (Banking Department) ஆகும். இத்துறை நாட்டில் இயங்கிவரும் வணிக வங்கிகளுடன் நேரிடைத் தொடர்பு கொண்டிருக்கின்றது. புதிய செலாவணிகள் வங்கித் துறையின் வாயிலாகத்தான் புழக்கத்திற்கு வருகின்றன. அதே போன்று புழக்கத்திலிருக்கும் செலாவணிகளை ரிசர்வு வங்கி திரும்பப் பெற விரும்பினால் வங்கித் துறையின் வாயிலாகத் தான் அச்செலாவணிகள் திரும்பப் பெறப்படுகின்றன.

பெங்களூர், பம்பாய், கல்கத்தா, ஹைதராபாத், சென்னை, புது டில்லி போன்ற முக்கிய நகரங்களில் ரிசர்வு வங்கி செலாவணிப் பெட்டிகளை (currency chests) வைத்திருக்கின்றது. பாரத ஸ்டேட் வங்கியினுடைய (State Bank of India) கிளைகளிலும் அரசுக் கருவூலங்களிலும் செலாவணிப் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. இச்செலாவணிப் பெட்டிகளில் புதிய நோட்டுகளும் நாணயங்களும் போதிய அளவுக்கு வைக்கப்பட்டிருக்கும். நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் நாணயத் தட்டுப்பாடு எழாமல் இருப்பதற்கு இச்செலாவணிப் பெட்டிகள் உதவுகின்றன. வணிக வங்கிகள் செலாவணிப் பெட்டிகளிலிருந்து புதிய நோட்டுகளையும், நாணயங் களையும் பெற்றுக் கொள்ளலாம். அதே போன்று, புழக்கத்தில் செலாவணி அதிகமாக இருக்க நேரிட்டால், நோட்டுகளையும், நாணயங்களையும் வங்கிகள் செலாவணிப் பெட்டியில் செலுத்தலாம். செலாவணிப் பெட்டிகளில் போதிய அளவிற்கு நோட்டுகளும் நாணயங்களும் இருப்பதற்காக ரிசர்வு வங்கியின் செலாவணி வெளியீட்டுத் துறை அவ்வப்போது கண்காணித்து வருகின்றது.

காகிதச் செலாவணியை வெளியிடுவதில் ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு முறையைப் பின்பற்றி வருகின்றது. நம் நாட்டில் ரிசர்வு வங்கி கடைப்பிடித்துவரும் முறைக்கு 'குறைந்த அளவு காப்புத் திட்டம்' (Minimum Reserve System) என்று பெயர். இத்திட்டத் தின் அடிப்படைக் கருத்திற்கான விளக்கத்தை இவ்வத்தியா யத்தின் முற்பகுதியில் கண்டோம்.

(2) ரிசர்வு வங்கி பாங்குப் பணத்தின் அளவை மட்டுப்படுத்து கின்றது: வணிக வங்கிகள் தங்களுடைய வாடிக்கையாளர் களுக்குக் கடன் அளிப்பதன் வாயிலாகப் பணத்தை (வங்கிப் பணத்தை) உற்பத்தி செய்கின்றன என்றும் நாட்டில் புழக்கத்தில்

இருக்கும் மொத்தப் பண அளவில் இவ்வாறு வங்கிகள் உற்பத்தி செய்யும் வங்கிப் பணம் பெருமளவில் இருக்கின்றது என்றும் இதற்கு முன்னர் பயின்றோம். அண்மை ஆண்டுகளில் வங்கிப் பணத்தின் அளவு செலாவணிப் பணத்தின் அளவைவிட அதிகமாக இருக்கின்றது. நாட்டில் பணத்தின் அளிப்பு மிக அதிகமாக இருக்க நேரிட்டால் பல இன்னல்களும் இடையூறுகளும் எழும் என்று மேலே குறிப்பிட்டிருந்தோம். நாட்டில் பண்ட உற்பத்தியும் பிற பொருளாதார, நிதி நடவடிக்கைகளும் எந்நிலையில் இருக்கின்றன என்பதை ரிசர்வு வங்கி தொடர்ந்து கவனித்துக் கொண்டே வருகின்றது. அவ்வப்போது நிலவும் சூழ்நிலைக்குத் தக்கவாறு பண அளிப்பையும் ரிசர்வு வங்கி மட்டுப்படுத்திவருகின்றது. பண அளிப்பில் இரு பிரிவுகள் இருக்கின்றன. ஒரு பிரிவு ரிசர்வு வங்கி நேரிடையாக வெளியிடும் நோட்டுகள், பிறிதொன்று வங்கிகள் கடனளிப்பதன் மூலம் உற்பத்தி செய்யும் வங்கிப் பணம். ரிசர்வு வங்கி தான் நேரிடையாக வெளியிடும் செலாவணியை மட்டுப் படுத்துவதில் சிக்கல் ஏதுமில்லை. ஆனால், வங்கிப் பணத்தில் அளிப்பைக் கட்டுப்படுத்த ரிசர்வு வங்கி பல கருவிகளைப் பயன் படுத்துகின்றது. இவ்வாறு பயன்படுத்தப்படும் கருவிகளுள் முக்கியமானவை : (அ) வங்கி வட்டியை (Bank Rate) மாற்றம் செய்தல்; (ஆ) காப்பு விகிதத்தை (Reserve Ratio) மாற்றம் செய்தல்; (இ) வெளிச் சந்தை நடவடிக்கைகளை (Open Market Operations) மேற்கொள்ளுதல் முதலியனவாகும்.

(அ) வங்கி வட்டி : ரிசர்வு வங்கி வணிக வங்கிகளுக்குக் கடன் அளிக்கும்பொழுது என்ன வட்டி விதிக்கின்றதோ அந்த வட்டி விகிதத்தைத்தான் 'வங்கி வட்டி' என்றழைக்கின்றனர். வங்கி வட்டி உயர்த்தப்பட்டால் ரிசர்வு வங்கியிலிருந்து வணிக வங்கிகள் பெறக்கூடிய கடன்கள் கிராக்கியாகிவிடும். இதைத் தொடர்ந்து வணிக வங்கிகளும் தாங்கள் அளிக்கும் கடன்கள்மீதும் உயர்ந்த வட்டியை விதிக்கத்தொடங்கும். எனவே, கடன் எழுப்புவதற்கான செலவு நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் உயர்வடையும். ஒரு பண்டத்தின் விலை உயர்வதால் எங்ஙனம் அப்பண்டத்திற்கு இருக்கும் தேவை வீழ்ச்சியடைகின்றதோ அதைப்போன்றே கடன் செலவு உயர்வதால் நாட்டில் கடனுக்கு இருக்கும் தேவையும் குறையும். வணிக வங்கிகள் கடன் அளிப்பதைக் குறைக்க வேண்டும் என்று ரிசர்வு வங்கி விரும்பினால் அது வங்கி வட்டியை உயர்த்தும். ரிசர்வு வங்கி, வங்கி வட்டியைக் குறைத்தால், வணிக வங்கிகளும் தாங்கள் விதிக்கும் வட்டி விகிதத்தையும் குறைக்கும். இதனால் கடன் செலவு குறைவதால் கடனுக்கு இருக்கும் தேவை பெருகும். இவ்வாறு ரிசர்வு வங்கி நாட்டின் பொருளாதார, நிதி

நடவடிக்கைகளுக்கு ஏற்றாற்போல வங்கி வட்டியை மாற்றி அமைப்பதன் வாயிலாக மொத்தப் பண அளிப்பையும் கட்டுப் படுத்த முடிகின்றது.

(ஆ) காப்பு விகிதத்தை மாற்றம் செய்தல் : வங்கிகளும் பணத்தை உற்பத்தி செய்கின்றன. அவை அதிக அளவில் கடன் அளித்தால் அதிகப் பணம் உற்பத்தியாகின்றது. குறைந்த அளவில் கடன் அளித்தால் பணம் குறைவாக உற்பத்தியாகின்றது. வணிக வங்கிகளுக்கு இருக்கும் கடன் உற்பத்தி செய்யும் சக்தியைப் பெருக்கவும் குறைக்கவும் ரிசர்வு வங்கியால் முடியும். கடன் கொடுப்பதற்கு வணிக வங்கிக்கு எங்கிருந்து பணம் கிடைக்கின்றது? மக்களிடமிருந்து வைப்புகளாகப் பெற்ற தொகையி லிருந்தும் தன்னிடம் உள்ள ரொக்க நிலுவையிலிருந்தும்தான் வங்கி கடன் அளிக்கின்றது. வணிக வங்கி எப்பொழுதும் ரொக்க நிலுவை வைத்துக் கொண்டே இருக்கும். ரொக்க நிலுவையை அதிக அளவில் வைத்திருந்தால் அதிலிருந்து எவ்வித வருமான மும் கிடைக்காது. எனவே, வணிக வங்கி ரிசர்வு வங்கியிடம் ரொக்கத்தை நிலுவையாக வைத்திருக்கின்றது. வங்கிகளை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின்கீழ் (Banking Regulation Act) ஒவ்வொரு வணிக வங்கியும் ஒரு குறிப்பிட்ட தொகையை ரிசர்வு வங்கியின் வசம் நிலுவையாக வைத்திருக்க வேண்டும் என்னும் நியதி வழக்கத்தில் இருக்கின்றது. ரிசர்வு வங்கியிடம் வணிக வங்கிகள் வைத்திருக்கவேண்டிய ரொக்க நிலுவையின் அளவை அவ்வப்போது ரிசர்வு வங்கி நிர்ணயிக்கின்றது. இந்த ரொக்க நிலுவையின் அளவைத்தான் 'காப்பு விகிதம்' (Reserve Ratio) என்றழைக்கின்றனர். ரிசர்வு வங்கி வேண்டும்பொழுது இந்தக் காப்பு விகிதத்தை மாற்றி நிர்ணயிக்கலாம். காப்பு விகிதத்தை ரிசர்வு வங்கி மாற்றும்பொழுது எத்தகைய விளைவுகள் ஏற்படும்? வணிக வங்கியின் மொத்த வைப்புத் தொகையில் 10 சத விகிதத்தை ரிசர்வு வங்கியிடம் காப்புத் தொகையாக வைத்திருக்க வேண்டும் என்று வைத்துக்கொள்வோம். காப்பு விகிதத்தை 10 சதவிகிதத்திலிருந்து 15 சதவிகிதத்திற்கு ரிசர்வு வங்கி உயர்த்தி னால் வணிக வங்கி தான் அளிக்கும் கடன் தொகையையும் சுருக்கிக்கொள்ள வேண்டும். அப்படிச் சுருக்கிக்கொண்டால்தான் வணிக வங்கியால் உயர்ந்த காப்பு விகிதமான 15 சதவிகிதத்தில் ரிசர்வு வங்கியிடம் நிலுவை வைத்திருக்க முடியும். காப்பு விகிதத்தைக் குறைக்கும்பொழுது இதற்கு நேர்மாறான விளை வுகள் ஏற்படும்.

(இ) வெளிச் சந்தை நடவடிக்கைகள் (Open Market Operations): அரசு ஆவணங்களை (Government Securities) ரிசர்வு வங்கி

வாங்குவதையும் விற்பனை செய்வதையும் வெளிச் சந்தை நடவடிக்கைகள் என்று குறிப்பிடுவது வழக்கத்தில் இருக்கின்றது. அரசு நிதி திரட்டுவதற்காக ஆவணங்களை வெளியிடுகின்றது. ஆவணம் என்பது ஒரு கடன் உறுதிச் சீட்டாகும். ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள தொகையையும் அத்துடன் வட்டிப் பணத்தையும் சேர்த்துக் குறிப்பிட்ட காலக்கெடு முடிந்ததும் கொடுக்க முன் வருவதாக அரசு உறுதிமொழி அளிக்கின்றது. வணிக வங்கிகள் சாதாரணமாக அரசு ஆவணங்களில் முதலீடு செய்கின்றன. அரசு ஆவணங்களை வணிக வங்கிகள் முழுவதும் நம்பத் தகுந்த ஒரு முதலீடாகக் கருதுகின்றன. ரிசர்வு வங்கி வணிக வங்கியிட மிருந்து ஆவணங்களை வாங்குவதன் மூலமாகவும் விற்பதன் வாயிலாகவும் நாட்டின் பண அளிப்பைக் கட்டுப்படுத்துகின்றது. ரிசர்வு வங்கி வணிக வங்கிகளிடமிருந்து ஆவணங்களை வாங்கும் பொழுது வணிக வங்கிகள்வசம் இருக்கும் ரொக்கத்தொகை பெருக்க மடைகின்றது. இத்தொகையை வணிக வங்கிகள் வாடிக்கைக் காரர்களுக்குக் கடன் அளிக்க முன்வருகின்றன. இந்நடவடிக்கை யால் நாட்டில் பண அளிப்பு பெருகும். இதற்கு நேர்மாறாக ரிசர்வு வங்கி வணிக வங்கிகளுக்கு ஆவணங்களை விற்கும் பொழுது வணிக வங்கிகள் வசம் இருக்கும் ரொக்கத் தொகை குறைவடையும். இதைத் தொடர்ந்து வணிக வங்கிகளுக்குத் தாங்கள் அளிக்கும் கடன் தொகையைச் சுருக்கிக் கொள்ள வேண்டிய நிர்பந்தம் உண்டாகும்.

(3) ரிசர்வு வங்கி அரசுக்குப் பணி செய்யும் ஒரு வங்கி : தனி நபர்களுடைய வங்கி நடவடிக்கைகளை ரிசர்வு வங்கி ஏற்ப தில்லை. மத்திய அரசு, மாநில அரசுகள் இவற்றின் வங்கி நடவடிக்கைகளை ரிசர்வு வங்கி மேற்கொள்கின்றது. அரசினுடைய பணத்துறை, பாங்குத் துறை, நிதித் துறை இவற்றின் நடவடிக்கைகளை ரிசர்வு வங்கி மேற்கொண்டு நடத்துகின்றது. பணத் துறைக்கும் அரசின் நிதித் துறை நடவடிக்கைகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. அரசு வரிவிதித்து வருவாய் ஈட்டுவதோடு பெருந்தொகையைக் கடன்கள் மூலமாகவும் எழுப்பு கின்றது. அரசாங்கம் இவ்வாறு பெருமளவில் நடத்தும் நிதி நடவடிக்கைகள் சரியானபடி சீர்படுத்தி ஒழுங்குபடுத்தப் பெறாவிட்டால் பணச் சந்தையில் நெருக்கடியும் சிக்கல்களும் தோன்ற ஏதுவாகும். எவ்வழியை, எக்காலத்தில் மேற் கொண்டால் இவ்விளைவுகளைத் தவிர்க்கலாம் என்று ரிசர்வு வங்கி மத்திய அரசுக்கு யோசனை கூறுகின்றது. அரசின் பண வரவு செலவு நடவடிக்கைகள் அனைத்தையும் ரிசர்வு வங்கிதான் நடத்துகின்றது. அரசின் வைப்புகளை (Deposits) ரிசர்வு வங்கி

தான் வைத்திருக்கின்றது. அரசு ஆவணங்களை ரிசர்வு வங்கி மூலமாகத்தான் விற்பனை செய்கின்றது. அரசின் கடன் சம்மந்த மான எல்லா நடவடிக்கைகளையும் ரிசர்வு வங்கிதான் மேற் கொண்டு நடத்துகின்றது. மேலும், அவசரத் தேவைகளை அரசாங்கம் சமாளிப்பதற்கு உதவியாக ரிசர்வு வங்கி கடனுதவியும் அளிக்கின்றது.

(4) ரிசர்வு வங்கி, வங்கிகளுக்கு ஒரு வங்கியாக இயங்கு கின்றது: ஒரு நாட்டில் திருத்தமான முறையில் வங்கித் தொழிலை வளர்க்கும் பொறுப்பு மைய வங்கியைச் சார்ந்தது. இப்பணியை ரிசர்வு வங்கி நம் நாட்டில் மேற்கொண்டிருக்கின்றது. ஏனைய வங்கிகளைக் கட்டி ஆளும் தலைமைப் பதவி ரிசர்வு வங்கியிடம் இருக்கின்றது. ஆனால், அதிகாரத்தைச் செலுத்தும் தலைவனாக மட்டும் அது இருப்பதில்லை. வணிக வங்கிகளுக்கு ஓர் உற்ற நண்பனாகவும் இருக்கின்றது. வணிக வங்கிகள் பணத்தை (இதனை வங்கிப் பணம் என்றழைக்கின்றோம்) உற்பத்தி செய்கின்றன என்று கண்டோம். வங்கிப் பண உற்பத்தி அளவோடு இல்லாவிட்டால் பல சிக்கல்கள் தோன்றும். வணிக வங்கிகளின் பண உற்பத்தியை ரிசர்வு வங்கி மட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்துகின்றது. ரிசர்வு வங்கி தன்னுடைய பொறுப்பைத் திறம்பட நிறைவேற்றுவதற்காக அதற்குச் சில உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. நாட்டில் உள்ள ஒவ்வொரு வணிக வங்கி யும் ரிசர்வு வங்கியிடம் ஒரு குறிப்பிட்ட தொகையை இருப்பாக வைத்திருக்க வேண்டியிருக்கின்றது. ஒரு வணிக வங்கி தன்னுடைய பொறுப்புகளை (Liabilities) சமாளிக்க முடியாத நெருக்கடி நிலைக்குள்ளாக நேரிட்டால், அது ரிசர்வு வங்கியின் உதவியை நாடுகின்றது. ரிசர்வு வங்கியும் நியாயமான உதவி களைச் செய்துவருகின்றது.

(5) நாட்டின் அந்நியச் செலாவணி இருப்பு ரிசர்வு வங்கியிடம் இருக்கின்றது: பணத்தின் அயல் நாட்டு மதிப்பைப் (External Value) பேணும் பொறுப்பும் ரிசர்வு வங்கியைச் சேர்ந்ததே. ரிசர்வு வங்கி தன்னுடைய நடவடிக்கைகளின் மூலமாக மட்டும் பணத்தின் அயல் நாட்டு மதிப்பை நிலையாக்க முடியாது. நாட்டில் நிலவும் பொருளாதார நிலை, அரசாங்கக் கொள்கை இவை யாவும் பண மதிப்பை பாதிக்கின்றன. இருந்தாலும், பண மதிப்பைப் பேணுவதற்கு ரிசர்வு வங்கி உறுதுணையாக இருக் கின்றது. அந்நியச் செலாவணி தட்டுப்பாடான நிலையில் உள்ள நம் நாட்டில் அந்நியச் செலாவணி நடவடிக்கைகளை அரசு கட்டுப்படுத்த வேண்டியிருக்கின்றது. இதற்கு அந்நியச்

செலாவணிக் கட்டுப்பாடு (Exchange control) என்று பெயர். அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடு ரிசர்வு வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது.

(6) ரிசர்வு வங்கி பொருளாதார மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்கின்றது: நாட்டின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்காக ரிசர்வு வங்கி சில பொறுப்புகளை மேற்கொண்டிருக்கின்றது. விவசாயம், தொழில் இத்துறைகள் நாட்டின் பொருளாதாரத்தில் முக்கியப் பங்கு பெறுகின்றன. எனவே, இத்துறைகளை வளர்ப்பதற்காக ரிசர்வு வங்கி சில நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றது. இத்துறைகளுக்குத் தேவையான அளவிற்குக் கடனுதவி அளிக்கும் நோக்கத்துடன் சிறப்பு நிறுவனங்கள் சிலவற்றை ரிசர்வு வங்கி துவக்கியிருக்கின்றது. இப்பணிகள் வங்கிப் பணிகளாக இல்லாவிட்டாலும் நாட்டின் நலனையும் முன்னேற்றத்தையும் கருத்திற் கொண்டு ரிசர்வு வங்கி இப்பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

# 11. விலை நிலவரம்

## பணவீக்கம் என்றால் என்ன?

விலை மட்டம் தொடர்ந்து உயர்ந்துகொண்டே செல்லும் நிலையைப் பணவீக்கம் என்றழைக்கலாம். இன்னும் சற்று விளக்கிக் கூறினால் நாட்டில் பணவீக்கம் இருக்கும்பொழுது எல்லாப் பண்டங்களின், பணிகளின் விலைகளும் தொடர்ந்து ஏற்றமடைந்து கொண்டே இருக்கும். உலகின் வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு காலகட்டங்களில் பணவீக்கப் பிரச்சினை எழுந்திருக்கிறது. உலகளவிலும்கூட பணவீக்கம் ஏற்பட்டிருக்கின்றது. நாட்டில் பணவீக்கம் ஏற்படும்பொழுது நுகர்வுப் பண்டங்கள், பணிகள் இவற்றின் விலைகள் உயர்வதோடு மட்டுமல்லாமல் உற்பத்திக் காரணிகளுக்குக் கிடைக்கும் ஊதியங்களான கூலி (Wage), வாரம் (Rent), வட்டி (Interest), இலாபம் (Profit) இவையும் ஏற்றமடைகின்றன.

## சமுதாயத்தின் பல்வேறு பகுதியினரைப் பணவீக்கம் எவ்வாறு பாதிக்கின்றது?

பணவீக்க நேரத்தில் பண்டங்கள், பணிகள் இவை அனைத்தின் விலைகளும் ஏற்றமடையும். ஆனால், விலையேற்றம் எல்லாப் பண்டங்களிலும் பணிகளிலும் ஒரே விகிதத்தில் இருக்காது. சில பண்டங்களில் விலையேற்றம் மிக அதிகமாக இருக்கலாம்; வேறு சில பண்டங்களில் ஏற்றம் சற்று குறைந்த அளவில் இருக்கலாம். விலையேற்றம் இவ்வாறு வேறுபட்டிருப்பதன் விளைவால் மக்களில் வெவ்வேறு பகுதியினர் வெவ்வேறு வகையில் பாதிக்கப்படுகின்றனர். பொதுப்படையாகக் கூற வேண்டுமெனில் விலையேற்ற காலத்தில் நிலையான வருமானம் பெற்றுவருபவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். நிலையான வருமானம் உள்ளவர்கள் யார்? யாருடைய வருமானங்கள் மாற்றமடையாமல் ஒரே மட்டத்தில் நிலையாக இருக்கின்றனவோ அவர்களை நிலையான வருமானம் உள்ளவர்கள் என்றழைக்கலாம். ஊதியத்திற்கு உழைப்பவர்கள் அனைவரும் நிலையான வருமானம் உள்ளவர்கள். ஓய்வூதியம் பெற்று வருபவர்கள் நிலையான வருமானம் உள்ளவர்கள். பண வாரம், வீட்டு வாடகை

இவற்றின் மூலம் வாழ்க்கை நடத்துபவர்களும் இவ்வகையைச் சேர்ந்தவரே.

உதாரணத்திற்கு, மூதாட்டி ஒருவரை எடுத்துக்கொள்வோம். தொழிற்சாலை ஒன்றில் வேலை பார்த்து வந்த அவருடைய கணவர் 1975ஆம் ஆண்டில் இறந்ததும் இவருக்குத் தொழிற் சாலை பணிக்கொடையாக (Gratuity) ரூ. 30,000 தொகை வழங்கப்பட்டது. கிடைத்த பணம் முழுவதையும் அவ்வம்மையார் ஒரு வணிக வங்கியில் காலக்கெடு வைப்புக் (Fixed Deposit) கணக்கில் போட்டு வைக்கிறார். இவருக்கு வேறு வருமானத்திற்கு வழியில்லை. வங்கியிலிருந்து கிடைக்கும் வட்டிப் பணத்தையே நம்பி இருக்கிறார். 10 சதவிகித வட்டிக் கணக்கில் வங்கி இவருக்கு மாதம் ஒன்றுக்கு 250 ரூபாய் பணம் கொடுக்கின்றது. 1975-ல் பணத்தின் மதிப்பு சற்று உயர்வாக இருந்ததால் இவருக்குக் கிடைத்துவந்த 250 ரூபாய் மாத வருமானத்தில் வாழ்க்கை நடத்துவது அவ்வளவு கடினமாக இல்லை. ஆனால், 1975 ஆம் ஆண்டிற்கும் 1980ஆம் ஆண்டிற்கும் இடையில் விலைவாசி வெகுவாக உயர்ந்துவிட்டது. எனவே, இன்று அவ்வம்மையாரால் நிலையாகக் கிடைக்கும் 250 ரூபாய் மாத வருமானத்தில் வாழ்க்கை நடத்துவது மிகவும் சிரமமான காரியமாகிவிட்டது. இந்த நிலையில் இவர் தன்னுடைய கணக்கில் வங்கியில் இருக்கும் ரூ. 30,000/- தொகையைத் திரும்ப எடுக்கின்றார் என்று வைத்துக் கொள்வோம். 1975ஆம் ஆண்டில் இருந்த அளவுக்கு இன்று அந்த ரூ. 30,000/- தொகைக்கு வாங்கும் சக்தி (Purchasing Power) இருக்கும் என்று கூறமுடியுமா ? இத்தொகையின் வாங்கும் சக்தி 1980-ல் மிகவும் குறைந்திருக்கும். எனவே, அவ்வம்மையார் இரண்டு காரணங்களால் வருந்த வேண்டியிருக்கிறது. அவருக்குக் கிடைக்கும் வருமானத்தின் வாங்கும் சக்தி காலப்போக்கில் குறைந்துகொண்டே செல்கிறது என்பதோடல்லாமல் அவருக் கிருக்கும் சொத்தின் மதிப்பும் குறைந்துகொண்டே வருகின்றது.

பணிக்கொண்டயாகக் கிடைத்த தொகையை வங்கியில் சேமித்து வைப்பதற்குப் பதிலாக அந்தத் தொகையில் வீடு ஒன்றை 1975-ல் அம்மையார் வாங்கினார் என்று வைத்துக் கொள்வோம். இந்த வீட்டிலிருந்து மாதம் ரூ. 250 வாடகை கிடைக்கின்றது. சிறிது காலத்திற்கு வாடகைப் பணமும் நிலை யாகவே இருக்கும். ஆனால், சில ஆண்டுகளுக்குப் பிறகாவது அவர் வாடகையை உயர்த்த முடியும். வாடகைப் பணத்தை உயர்த்தினாலும் விலைவாசியில் இருக்கும் ஏற்றத்தின் அளவிற்கு வாடகை ஏற்றமடையாது. ஆனால், அவருடைய வீட்டின்

மதிப்பு 1975-ல் இருந்ததைப்போல ரூ. 30,000/- மட்டத்திலேயே நிற்காது. நாட்டில் பண வீக்கம் ஏற்பட்டிருந்த காரணத்தால் வீட்டின் மதிப்பும் பெரிதும் உயர்ந்திருக்கும். எனவே, அம்மையாருக்கு வங்கியில் வைப்பாக வைப்பதைவிட, வீடு ஒன்றின்மீது முதலீடு செய்வதன்மூலம் ஏற்படும் இழப்பு குறைவாகவே இருக்கும் என்று கூறலாம்.

அலுவலகங்களிலும், தொழிற்சாலைகளிலும், கழனிகளிலும் வேலைசெய்து கூலி ஈட்டுபவர்களுடைய நிலையை ஆராய்வோம். இவர்களுக்குக் கிடைக்கக்கூடிய கூலியின் அளவு நிலையாகவே இருப்பதால் விலையேற்ற காலத்தில் இவர்கள் மிகுந்த அவதிக்குள்ளாவார்கள். இவர்கள் ஈட்டும் கூலிகளின் உண்மையான மதிப்பும் குறைந்துவிடுகின்றது. தங்களுக்குக் கொடுக்கப்படும் கூலியை உயர்த்த வேண்டும் என்று கூறி இவர்கள் போராட்டத்தில் ஈடுபடுவார்கள். வேலை நிறுத்தமும் செய்வார்கள். இறுதியில் வெற்றி பெற்றால் கூலிகளை ஓரளவிற்கு உயர்த்த முதலாளிகள் ஒப்புக்கொள்வார்கள். இதில் விநோதம் என்னவென்றால், கடுமையான போராட்டத்திற்குப் பிறகு இவர்களுக்குக் கூலி உயர்வு கிடைப்பதற்குள் விலைமட்டம் மேலும் உயர்ந்துவிடும். எனவே, இவர்கள் உயர்ந்த கூலியை வைத்துக்கொண்டு முன்னர் இவர்கள் வாங்கி நுகர்ந்த பண்டங்களை அதே அளவிற்கு வாங்க முடியாத நிலையில் இருப்பார்கள். மீண்டும் கூலி உயர்வு கோரி இவர்கள் போராட்டம் நடத்துவார்கள். இதற்கிடையில் விலை மட்டம் தொடர்ந்து ஏறிக்கொண்டே இருக்கும். இவ்வாறு விலை ஏற்றம், போராட்டம், கூலி உயர்வு, விலையேற்றம் என்று ஒன்றையொன்று தொடர்ந்து செல்லும் நிலை பணவீக்க காலத்தில் தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கும்.

வாணிபத்தில் ஈடுபட்டுள்ளவர்களுடைய நிலை எவ்வாறிருக்கும்? பணவீக்க காலத்தில் இவ்வகுப்பினரே கொடுத்து வைத்தவர்கள், அதிர்ஷ்டக்காரர்கள் என்று அழைக்க வேண்டும். விலையேற்றம் இருக்கும் நேரத்தில் வியாபாரமும் சுறுசுறுப்பாக நடக்கும். வியாபாரிகள் பண்டங்களை வாங்கி மறுபடியும் விற்பனை செய்கின்றனர். வாங்குவதற்கும் விற்பதற்கும் உள்ள இடைவெளியில் பண்டங்களின் விலை ஏற்றமடையும். இதன் விளைவால் வியாபாரிகள் நல்ல இலாபம் ஈட்டுகிறார்கள். வியாபாரச் செலவும்—கடை வாடகை, ஆட்கூலி, சரக்குத் தூக்குக் கூலி போன்ற இனங்களுக்காகும் செலவு — உயரக்கூடும்; இருந்தாலும் விலையேற்றத்தின் அளவிற்குச் செலவு உயராது.

இக்காரணங்களால், வியாபாரத்தில் கிடைக்கும் இலாபம் பண வீக்க காலத்தில் மிக அதிகமாக இருக்கும் என்று கூறலாம்.

பணவீக்க காலத்தில் சில வகுப்பினர், குறிப்பாக நிலையான வருமானம் உள்ளவர்கள், பெரும் இன்னல்களுக்கு இடர்ப்பட நேரிடும் என்பது உண்மையென்றாலும்கூட விலை மட்டம் மெல்ல உயர்ந்தால் அது நாட்டுப் பொருளாதாரத்திற்கு ஓரளவிற்கு நன்மை பயக்கும் என்று கூறலாம். விலைவாசி ஏற்றமடையும் காலத்தில் பொருளாதார நடவடிக்கைகள் விறுவிறுப்புடன் நடப்பதைக் காணலாம். வேலை மட்டம் உயர்வாக இருக்கும்; பண்டங்களின் உற்பத்தி அளவும் உயர்வாக இருக்கும்; மூலதன முதலீடும் அதிக அளவில் இருக்கும்.

## பணவீக்கமும் பொருளாதார வளர்ச்சியும்

ஒரு நாட்டில் பொருளாதார வளர்ச்சி ஏற்படும் காலத்தில் விலையேற்றத்தைத் தவிர்க்க முடிவதில்லை. பொருளாதார வளர்ச்சி விலையேற்றத்திற்கு ஒரு காரணமாக அமைகின்றது என்றுகூடக் கூறலாம். வளர்ந்துவரும் ஒரு நாட்டில் பண்டங் களின் விலைகள் ஓரளவிற்கு ஏற்றமடைவது இயற்கையே. இந்நிலை சிறிது விரும்பத் தக்கது என்றும் கூறலாம். ஏனெனில், விலையேற்றம் மூலதன முதலீட்டை ஊக்குவிப்பதாக அமை கின்றது. பொருளாதார வளர்ச்சி ஏற்பட வேண்டுமெனில் முதலீட்டின் அளவைப் பெருக்கவேண்டும் என்று நாம் அறிவோம்.

விலை மட்டத்தில் குறைந்த அளவில் ஏற்றம் இருப்பதைச் சாதாரணமாக அனைவரும் ஏற்றுக்கொள்வர். ஆனால், ஆங்கிலத்தில் 'Galloping Inflation' என்றழைக்கப்படும் மிக விரைவான விலையேற்றம் விரும்பத்தக்கதன்று. இத்தகைய பாய்ந்தோடும் பணவீக்கம் ஏற்படும்பொழுது விலைகள் கட்டுக் கடங்காமல் ஏறிக்கொண்டே செல்லும். இவ்வகையைச் சேர்ந்த பணவீக்கம் மக்களுக்குப் பல இன்னல்களை விளைவிக்கின்றன என்பதோடல்லாமல் நாம் விரும்பும் பொருளாதார வளர்ச்சியையும் கிடைக்க ஒட்டாமல் தடுத்துவிடுகின்றது. கட்டுக்கடங்காத விலையேற்றம் ஏற்பட்டால் பொருளாதார வளர்ச்சி தடைப்பட்டு நாட்டில் குழப்ப நிலை தோன்ற ஏதுவாகும்.

ஒரு நாட்டில் பொருளாதார வளர்ச்சி தோன்றத் தொடங்கி யதும் விலை மட்டம் ஏற்றமடைவதற்குக் காரணம் என்ன? பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த அதிக அளவில் மூலதன முதலீடு செய்யப்படுகின்றது. இவ்வாறு முதலீடு செய்யப்படும் காலத்திற்கும் இம் முதலீட்டின் விளைவால் பண்டங்களின்

உற்பத்தி பெருக்கமடையும் கட்டத்திற்கும் இடையே அதிக கால இடைவெளி இருக்கின்றது. இந்த இடைவெளிக் காலத்தில் பண்டங்களின் விலைகள் ஏற்றமடையச் செய்கின்றன. இக் கருத்தைச் சற்று விரிவாக விளக்கலாம். பொருளாதார வளர்ச்சியுடன் மூலதன முதலீடு இணைந்து செல்கின்றது என்னும் உண்மையை நாம் தெளிவாக அறிவோம். முதலீட்டளவை உயர்த்திய உடனே ஏற்படக்கூடிய விளைவுகள் யாவை? முதலீடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து உடனடியாகச் சிலருடைய வருமானம் உயரத் தொடங்கும். குறைந்த அளவில் வருமானம் ஈட்டிவந்த மக்கள் இப்பொழுது சற்று அதிக அளவில் வருமானம் பெறுவார்கள். மக்களுடைய வருமானம் உயர்வதால் அவர்கள் அதிக அளவில் பண்டங்களையும் பணிகளையும் நுகர்வதற்காக வாங்கத் தொடங்குவார்கள். இதன் விளைவால் நாட்டில் பண்டங்களுக்கும் பணிகளுக்கும் இருக்கும் தேவை பெருக்கமடைகின்றது. பண்டங்கள், பணிகள் இவற்றின் உற்பத்தி அளவும் தேவையில் இருக்கும் ஏற்றத்திற்கு இணையாகப் பெருக்கமடையாதா? பெருக்கமடையலாம். ஆனால், பொதுவாக புதிதாக மேற்கொள்ளப்பட்ட முதலீட்டின் விளைவால் பண்டங்கள், பணிகள் இவற்றின் உற்பத்தி நீண்டகால இடைவெளிக்குப் பின்னர்தான் பெருக்கமடையக்கூடும். சுருங்கக்கூறின், தேவை (Demand), அளிப்பு (Supply) இவை இரண்டுமே விலை மட்டத்தை நிர்ணயிக்கின்றன. பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த முதலீட்டை மேற்கொள்ளும்பொழுது தேவையின் அளவும் அளிப்பின் அளவும் மாற்றமடைகின்றது. ஆனால், தேவையின் அளவும் உடனடியாக மாற்றமடைகின்றது. அளிப்பின் அளவோ கால தாமதத்திற்குப் பிறகே மாற்றமடைகின்றது. இக்கால இடைவெளியில் விலைகள் ஏற்றமடைகின்றன.

ஒரு பேரளவு நீர்த் திட்டம் கட்டும் வளர்ச்சிப் பணியை எடுத்துக்காட்டாகக் கொள்வோம். இந்நீர்த் திட்டத்தைக் கட்டி முடிக்க ரூ. 100 கோடி முதலீடு செய்ய வேண்டும். ஏழாண்டு காலத்தில் திட்டத்தைப் பூர்த்தி செய்தால் 15 ஆயிரம் மில்லியன் கன அடி தண்ணீர் கிடைக்கும். இந்த அளவு தண்ணீரைக் கொண்டு 36,000 ஹெக்டேர் நில அளவிற்குப் பாசன வசதி அளிக்கலாம்; ஒரு இலட்சம் டன் உணவு தானியங்களைக் கூடுதலாக உற்பத்தி செய்யலாம். நீர்த் திட்ட வேலையை 1980-ல் தொடங்கி ஏழாண்டு காலத்தில் முடிக்கலாம். நீர்த் திட்டத்திற்கான முதலீடு தொடங்கியதும் அப்பகுதியில் இருக்கும் மக்களுடைய வருமானத்தில் பெருக்கம் ஏற்படும். ஒப்பந்தங்களை மேற்கொள்ளும் காண்டிராக்டர்கள், மேற்பார்வை செய்யும்

பொறியாளர்கள், நீர்த்திட்டத்திற்காக நிலங்களை விற்ற நிலச் சொந்தக்காரர்கள், வேலை மேற்கொள்ளும் பல்லாயிரக்கணக்கான கட்டடத் தொழிலாளர்கள் இவர்கள் அனைவருக்கும் ஏழாண்டு காலத்தில் அதிக வருமானம் கிடைக்கும். இதையே வேறு விதமாகச் சொன்னால் நீர்த் திட்டம் அமைக்கப்படும் பகுதியில் ஏழாண்டு காலத்தில் 100 கோடி ரூபாய் புழக்கத்திற்கு வரும். வருமானம் உயர்ந்தால், பண்ட நுகர்வின் அளவும் உயரும்; பண்டங்களுக்கு இருக்கும் தேவையும் பெருக்கமடையும். இவ்வாறு புதிதாக ஏற்பட்டிருக்கும் தேவையை எங்ஙனம் சமாளிப்பது? உணவு தானியங்களின் உற்பத்தியைப் பெருக்குவதன்மூலமாகத் தான் புதிதாக எழுந்துள்ள தேவையைச் சமாளிக்க முடியும். 1987ஆம் ஆண்டில் நீர்த் திட்ட வேலை நிறைவுபெற்ற பிறகு தான் உணவு தானிய உற்பத்தி பெருக்கமடையும். ஆனால் 1980, 1987 இவ்விரு ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் அப்பகுதியில் வருமானமும் தேவையும் பெருக்கமடையும்; பண்ட உற்பத்தியில் எந்தப் பெருக்கமும் இருக்காது. இவ்வாறு தேவைக்கும் அளிப்பிற்கும் இடையே வேறுபாடு ஏற்படுவதால் விலைமட்டம் ஏற்றமடையும்.

நாட்டளவை எடுத்துக்கொண்டு பார்த்தால், பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த நீர்த்திட்டங்கள், மின்சாரத் திட்டங்கள், புதிய தொழிற்சாலைகள், இருக்கும் தொழிற் சாலைகளை விரிவு படுத்துதல், சாலைகளை அமைத்தல், மருத்துவமனைகள், பள்ளிக் கூடங்கள் இவற்றை அமைத்தல் போன்ற பல்வேறு மேம்பாட்டுப் பணிகளுக்காக முதலீடு பெருமளவில் மேற்கொள்ளப்படுகின்றது. இவற்றுள் ஒவ்வொரு திட்டமும் நிறைவேறப் பல ஆண்டுகள் ஆகின்றன. திட்டங்கள் நிறைவுபெற்ற பிறகுதான் பண்டங்கள், பணிகள் இவற்றின் உற்பத்தி வெளிவரத் தொடங்கும் எனவே, தேவையில் எழக்கூடிய மாற்றத்திற்கும் அளிப்பில் ஏற்படக்கூடிய மாற்றத்திற்கும் கால இடைவெளி இருப்பதைத் தவிர்க்க முடிவ தில்லை. இதன் விளைவால் விலையேற்றம் ஏற்படுகின்றது. விலையேற்றம் ஏற்படுவதற்கு இதுமட்டுமே காரணம் என்று கூற முடியாது. வேறு பல காரணங்களாலும் விலையேற்றம் ஏற்படலாம். நீங்கள் தொடர்ந்து பொருளியலை மேல் வகுப்புகளில் பயில நேரிட்டால் விலையேற்றத்திற்கான பிற காரணங்களைப் பற்றி விரிவாகப் படிப்பீர்கள்.

### விலைக் குறியீட்டு எண்கள் (Price Indices)

விலையேற்ற காலத்தில் பண்டங்களின் விலைகள் உயரும் பொழுது எல்லாப் பண்டங்களின் விலைகளும் ஒரே அளவில்

உயர்வதில்லை என்று இவ்வத்தியாயத்தின் முற்பகுதியில் கண்டோம். அப்படியானால், இரு கால கட்டங்களுக்கிடையே விலை மட்டத்தில் எந்த அளவிற்கு மாற்றம் இருந்திருக்கின்றது என்பதை எவ்வாறு கண்டறிவது? 1970ஆம் ஆண்டோடு ஒப்பிட்டுப்பார்க்கும்பொழுது 1980ஆம் ஆண்டில் அரிசி விலை 40 சதவிகிதத்திலும், துணிவிலை 50 சதவிகிதத்திலும், எண்ணெய் விலை 60 சதவிகிதத்திலும், கார் விலை 100 சதவிகிதத்திலும் உயர்ந்திருக்கிறது என்று கணக்கிட்டுக் கூறுவதா? கூடாது. ஒவ்வொரு பண்டத்தில் இருந்த விலை மாற்றத்தைக் குறிப்பிடுவதென்றால் அது ஒரு முடிவு இல்லாத செயலாகிவிடும் மேலும், அப்படி விவரித்துக் கூறுவதால் விலை மட்டத்தில் இருந்த பொதுவான மாற்றத்தை நம்மால் தெளிவாக அறிவிக்க இயலாது. விலை மாற்றத்தை இவ்வாறு விளக்கினால் கேட்பவர் குழப்படைவர். இத்தகைய இடர்ப்பாடுகள் எழாத வகையில் விலை மாற்றத்தை அறிவிப்பதற்காக விலைக் குறியீட்டு எண்கள் (Index number of prices) என்னும் பெயரில் ஒரு யுக்தி நடைமுறையில் கையாளப்படுகின்றது. இரு கால கட்டங்களுக்கிடையே ஏற்பட்டுள்ள சராசரி விலை மாற்றத்தை விலைக் குறியீட்டு எண் அறிவிக்கின்றது. 1970-க்கும் 1980-க்கும் இடையே ஒவ்வொரு பண்டத்தின் விலையும் எந்தச் சதவிகிதத்தில் உயர்ந்திருக்கின்றது என்று விவரிப்பதைவிட இவ்விரு ஆண்டுகளுக்குமிடையே விலை மட்டம் 40 சதவிகித அளவில் உயர்ந்திருக்கின்றது என்று கூறினால் விலை நிலவரத்தைப்பற்றி நாம் ஒரு தெளிவான கருத்தைப் பெறமுடிகின்றது.

## இந்தியாவில் கணிக்கப்படும் விலைக் குறியீட்டு எண்கள்

எல்லோரும் எல்லாப் பண்டங்களையும் ஒரே அளவில் வாங்கி நுகர்வதில்லை. அவரவர் வருவாய்க்கு ஏற்றாற் போலவும் அவரவருடைய விருப்பத்திற்குத் தக்கவாறும் பண்டங்களை மக்கள் வாங்குகின்றனர். கார் விலை உயர்ந்தால் அது கழனியில் வேலை செய்யும் தொழிலாளியைப் பாதிப்பதில்லை. விமானப் பயணத்திற்கான கட்டணம் உயர்ந்தால் ஆலைத் தொழிலாளர் நேரிடையாகப் பாதிக்கப்படுவதில்லை. ஆனால், உணவு தானியங்கள், பருப்பு வகைகள், மிளகாய், எண்ணெய் இவற்றிலுள்ள விலை மாற்றம் விவசாயத் தொழிலாளர்களையும், ஆலைத் தொழிலாளர்களையும் பாதிக்கின்றது. வாழ்க்கைக்கு இன்றியமையாத இத்தகைய பண்டங்களின் விலைகள் தொழிலாளர் வகுப்பினரை நேரிடையாகப் பாதிக்கின்றன. எனவே, சமூகத்தின் வெவ்வேறு வகுப்பினர் வெவ்வேறு பண்டங்களில் இருக்கும் விலை மாற்றத்தால்

பாதிக்கப்படுகின்றனர் என்னும் உண்மை தெளிவாகின்றது. இக் காரணத்தால் வெவ்வேறு வகையான விலைக் குறியீட்டு எண்களை கணிக்க வேண்டியது அவசியமாகின்றது.

இந்தியாவில் வெவ்வேறு வகையான விலைக் குறியீட்டு எண்கள் தயாரிக்கப்படுகின்றன. சில குறியீட்டு எண்கள் நாட்டளவில் தயாரிக்கப்படுகின்றன. சில குறியீட்டு எண்கள் மாநில அளவில் கணிக்கப்படுகின்றன. நம் நாட்டில் வழக்கத்திலிருக்கும் சில முக்கியக் குறியீட்டு எண்கள் யாவை என்று அறிய முயலலாம்.

## மொத்த விலைக் குறியீட்டு எண்

மொத்த விலைக் குறியீட்டு எண்ணை மத்திய அரசின், தொழில் வளர்ச்சித் துறையின் பொருளாதார ஆலோசகர் தயாரித்து அளித்து வருகின்றார். இக்குறியீட்டு எண் ஒவ்வொரு வாரமும் வெளியிடப்படுகின்றது. 1970 - 71-ஐ அடிப்படை ஆண்டாகக் கொண்டு இக்குறியீட்டு எண் தயாரிக்கப்படுகின்றது. நாட்டில் முக்கிய மொத்த விலைச் சந்தைகளாகக் கருதப்படும் இடங்களிலிருந்து பண்டங்களின் மொத்த விலைகள் சேகரிக்கப்படுகின்றன. இக்குறியீட்டு எண்ணைத் தயாரிப்பதற்கு மொத்தம் 360 பண்டங்களின் விலைகள் சேகரிக்கப்படுகின்றன. வசதி கருதி இந்த 360 பண்டங்கள் மூன்று தலைப்புகளின்கீழ் அடக்கப்படுகின்றன. அத்தலைப்புகள் பின்வருமாறு : (1) முதற்பிரிவுப் பண்டங்கள் (Primary Articles); (2) எரிபொருள், மின் சக்தி, வெளிச்சம்; (3) செய்வினை முடிந்த பண்டங்கள்.

தமிழ்நாடு அரசின் புள்ளிவிவரத் துறையும் மாநில அளவில் ஒரு மொத்த விலைக் குறியீட்டு எண்ணைத் தயாரித்து வெளியிட்டு வருகின்றது. 1970 - 71-ஐ அடிப்படை ஆண்டாகக் கொண்ட இக்குறியீட்டு எண் வாரந்தோறும் வெளியிடப்படுகின்றது. இக்குறியீட்டு எண்ணைத் தயாரிப்பதற்காக 177 பண்டங்களின் விலைகள் சேகரிக்கப்படுகின்றன. விலை விவரம் 100 இடங்களிலிருந்து (எல்லா மாவட்டங்களும் அடங்கிய) திரட்டப்படுகின்றன. தொழில் சம்பந்தமான பண்டங்களின் விலைகள் மாநிலத்தில் இயங்கிவரும் பெருந்தொழில் நிறுவனங்களிடமிருந்து நேரடியாகப் பெறப்படுகின்றன.

## நுகர்வோர் விலைக் குறியீட்டு எண் (Consumer Price Index)

சண்டிகார் நகரத்தில் இருக்கும் தொழிலாளர் செயலகம் (Labour Bureau) இக்குறியீட்டு எண்ணைத் தயாரித்து அளித்து வருகின்றது. ஆலைத் தொழிலாளர்களால் சாதாரணமாக வாங்கி

நுகரப்படும் பண்டங்கள் இக் குறியீட்டு எண்ணில் அடங்குகின்றன. இக் குறியீட்டு எண்ணில் அடங்கும் பண்ட வகைகளுள் முக்கியமானவை: உணவு, எரிபொருள், ஒளி, வீட்டு வசதி, உடை முதலியன. நாட்டில் ஐம்பது முக்கிய நகரங்களைத் தேர்ந்தெடுத்து அந் நகரங்களில் நிலவும் விலை விவரங்களைத் திரட்டி இக் குறியீட்டு எண்ணைக் கணிக்கின்றனர். தமிழ் நாட்டில் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், கூனூர் ஆகிய நகரங்கள் இக் கணிப்பில் அடங்கியிருக்கின்றன. இக் குறியீட்டு எண்ணுக்கு அடிப்படை ஆண்டு 1960 - 61 ஆகும்.

## தமிழ் நாட்டின் கிராம விலைக் குறியீட்டு எண் (Rural Price Index Number for Tamil Nadu)

கிராமப் புறங்களில் வசிக்கும் மக்கள் அன்றாடம் நுகரும் பொருள்களுக்கும் நகர்ப்புறங்களில் வாழும் மக்கள் வாங்கி நுகரும் பொருள்களுக்கும் நிறைய வேறுபாடு இருக்கின்றது. இரு சாரா ருக்கும் பொதுப்படையாக அமைந்த சில பண்டங்களை எடுத்துக் கொண்டாலும் அப் பண்டங்களின் விலை நிலவரம் இரு பகுதி களிலும் ஒரே வகையாக இருப்பதில்லை. இக் காரணங்களால் நகர்ப்புறங்களில் நிலவும் விலைகளின் அடிப்படையில் தயாரிக்கப் படும் 'நுகர்வோர் விலைக் குறியீட்டு எண்' கிராமப்புறங்களில் நிலவும் விலை விவரத்தைப் பிரதிபலிப்பதாக இல்லை. எனவே, கிராமங்களில் வாழும் மக்கள் விரும்பி வாங்கும் பண்டங்களின் விலைகள் எவ்வாறு கிராமப்புறங்களில் மாறுதலடைகின்றன என்பதை அறியும் நோக்கத்தோடு 'கிராம விலைக் குறியீட்டு எண்' ஒன்றினைத் தமிழக அரசின் புள்ளிவிவரத் துறை தயாரித்து வருகின்றது. இக் குறியீட்டு எண்ணின் அடிப்படை ஆண்டு 1970 - 71 ஆகும். தமிழ் நாட்டில் சென்னை மாவட்டம் நீங்கலாக ஏனைய மாவட்டங்கள் அனைத்தும் இவ்வியலில் அடங்குகின்றன. மொத்தம் 65 பண்டங்களின் விலைகள் இக்குறியீட்டு எண்ணைத் தயாரிப்பதற்காகத் திரட்டப்படுகின்றன. 63 பண்டங்களையும் நான்கு தலைப்புகளில் அடக்குகின்றனர். அத் தலைப்பு களாவன : உணவு, எரி பொருள், ஒளி, ஆடை முதலியனவாகும்.

## இந்தியாவில் விலைகளின் போக்கு

ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் நெடு நாள்களாகவே விலை கள் நம் நாட்டில் ஏறுமுகத்திலேயே இருந்துவருகின்றன என்பது தெளிவாகும். 1948 - 49-லிருந்து 1978 - 79 வரையிலான முப்ப தாண்டுக் காலத்தில் பண்டங்களின் மொத்த விலைகளில் 330 சதவிகித ஏற்றம் இருந்திருக்கின்றது. ஆனால், விலையேற்றத்தின்

வேகம் எல்லா ஆண்டுகளிலும் ஒரே நிலையுடையதாக இல்லை. சில குறிப்பிட்ட ஆண்டுகளில் விலை மட்டம் மாற்றம் ஏதுமில்லாமல் ஏறக்குறைய ஒரே நிலையில் இருந்தது. ஓரிரு ஆண்டுகளில் விலை மட்டத்தில் இறக்கம்கூட இருந்திருக்கின்றது. சில ஆண்டுகளில் குறைந்த அளவில் விலையேற்றம் இருந்திருக்கின்றது. ஆனால், வேறு சில ஆண்டுகளில் விலையேற்றம் மிக அதிகமான அளவில் இருந்தது. கட்டுக்கடங்காதிருந்த இவ் விலையேற்றம் அரசுக்கும், பொருளாதாரத் திட்டம் வகுப்போருக்கும் பெருத்த கவலையூட்டுவதாக இருந்தது. மக்களும் அதிக இன்னல்களுக்கு உள்ளாயினர்.

## விலை மட்டம் நிரந்தரமாக இருந்த காலம்

1951 - 52-லிருந்து 1955 - 56 வரையிலான காலத்தில் நாட்டில் நிரந்தரமான விலை மட்டம் நிலவியது. இக் காலத்தில் தான் இந்தியாவின் முதல் ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேற்றப் பட்டது. இன்னும் கூறப்போனால், இக் காலத்தில் விலைவாசிகள் இறங்குமுகமாக இருந்தது என்பதையும் குறிப்பிட வேண்டும். 1951 - 52-ல் நிலவிய விலைமட்டத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது 1955 - 56-ல் விலைகள் 18 சதவிகிதம் குறைவாக இருந்தன.

## விலையேற்றம் குறைவாக இருந்த காலம்

1956 - 57ஆம் ஆண்டு முதல் 1964 - 65 ஆம் ஆண்டு வரை விலைகளில் ஏற்றம் இருந்தாலும், ஏற்றம் மிகக் குறைந்த அளவில் தான் இருந்தது. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் செயல்படத் தொடங்கியதிலிருந்தே விலைகள் ஏற்றமடையத் தொடங்கின. ஆனால், விலையேற்றம் சாதாரண அளவில்தான் இருந்தது. சராசரிக் கணக்கில் பார்த்தால் ஆண்டொன்றுக்கு 7 சதவிகித ஏற்றம் இருந்தது.

## கட்டுக்கடங்காத விலையேற்றம் இருந்த காலம்

1964 - 65ஆம் ஆண்டைத் தொடர்ந்து வந்த பத்தாண்டுகளில் நாட்டில் விலைகள் கட்டுக்கடங்காத வகையில் ஏற்றமடைந்துவந்தன. 1965 - 66-லிருந்து 1974 - 75 வரை விலை மட்டம் 140 சதவிகிதத்தில் உயர்ந்தது. ஆண்டுச் சராசரி விலையேற்றம் 14 சதவிகித அளவில் இருந்தது.

## இரண்டாம் முறையாக நிரந்தர விலைமட்டம்

நாட்டில் இதற்கு முந்தைய ஆண்டுகளில் தொடர்ந்து உயர்ந்து வந்த விலைவாசிகள் 1975 - 76ஆம் ஆண்டில்

நிலையாக நின்றன. 1975 - 76-லிருந்து 1978 - 79 வரை இரண்டாம் முறையாக விலை மட்டம் நிரந்தரமாக இருந்தது. இம் மூன்றாண்டு காலத்தில் நாட்டில் மொத்தம் 6.5 சதவிகித விலையேற்றமே இருந்தது. அதாவது, ஆண்டொன்றுக்கு விலை யேற்றம் சராசரி 2 சதவிகிதத்திற்கும் குறைவாகவே இருந்தது.

ஆனால், அண்மை ஆண்டுகளில் விலையேற்றம் கட்டுக் கடங்காத நிலையிலும் அச்சுறுத்தும் வகையிலும் இருக்கின்றது. 1979 - 80 ஆம் ஆண்டில் மட்டும் மொத்த விலையில் 16 சதவிகித உயர்வு இருந்திருக்கின்றது.

## பணவீக்கத்தை எங்ஙனம் கட்டுப்படுத்துவது?

சமீப காலத்தில் நாட்டில் நாம் கண்ணுறும் பணவீக்கத்திற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. மேலும் இன்று பணவீக்கம் உலக நாடுகள் அனைத்திலும் காணப்படும் ஒரு நிகழ்ச்சியாக இருந்து வருகின்றது. இந்தியாவை மட்டும் பாதிக்கச் செய்யும் ஒரு பிரச்சினையாக அது இல்லை. பன்னாட்டு நிகழ்ச்சிகள் பலவும் பணவீக்கத்திற்குக் காரணமாக அமைகின்றன. எடுத்துக் காட்டாக, பெட்ரோலியப் பண்டங்களின் விலைகளை அவற்றை ஏற்றுமதி செய்யும் நாடுகள் அடிக்கடி உயர்த்திவருவதால் நாட்டில் ஓரளவிற்கு விலையேற்றம் ஏற்பட்டுவருகின்றது. உள் நாட்டிலும் பல காரணங்கள் விலையேற்றத்திற்குத் துணை புரிவதாக இருக்கின்றன. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமெனில் நாம் சில முக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

பண்டங்களுக்கு இருக்கும் தேவை பண்டங்களின் அளிப்பை விட அதிகமாக இருப்பதே விலைகள் ஏற்றமடைவதற்குக் காரண மாகும். தேவை, அளிப்பு இவையிரண்டும் சமனற்ற நிலையில் (Disequilibrium) இருந்தால் விலைகள் மாற்றமடைகின்றன. மக்கள்தொகை விரைவாக வளர்ச்சியடைந்துவருவதும் விலை யேற்றத்திற்கு ஒரு முக்கிய காரணமாக அமைகின்றது. மக்கள் தொகை விரைவாக வளர்ந்து வருகிறதென்றால் அதைத் தொடர்ந்து உணவுப் பண்டங்களுக்கும் பிற பண்டங்களுக்கும் இருக்கும் தேவையும் பெருக்கமடையும் என்றுதான் பொருள். எனவே, மக்கள்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தினா லன்றிப் பணவீக்கம் உட்பட பல பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு முடிவு காண்பது என்பது அவ்வளவு எளிதான செயலன்று.

## அரசின் செலவினங்களைக் கட்டுப்படுத்துதல்

அரசின் செலவு கடந்த முப்பதாண்டு காலத்தில் தொடர்ந்து உயர்ந்துகொண்டே வந்திருக்கின்றது. இதுபற்றி மேலும் விரிவாக

அத்தியாயம் 12-ல் பயில இருக்கிறீர்கள். அரசு அதிக அளவில் செலவை மேற்கொண்டு வருவதால் பணப்புழக்கம் மக்களிடையே அதிகரிக்கின்றது. இதனால் பண்டங்களுக்கும் பணிகளுக்கும் இருக்கும் தேவை பெருக்கமடைகின்றது. தேவை பெருகும் பொழுது அதனுடன் பண்டங்களின் உற்பத்தியும் பெருக்கமடைந்தாலன்றி விலைவாசிகள் இறங்கா. எனவே, உற்பத்தியாக்காச் செலவை (Unproductive expenditure) எந்த அளவிற்குக் குறைக்க இயலுமோ அந்த அளவிற்குக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

## பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம்

அரசினுடைய வரவு செலவுத் திட்டத்தில் செலவைவிட வரவு அதிகமாக இருந்தால் அதனை மிகுதி வரவு செலவுத் திட்டம் என்றழைக்கின்றோம். இதற்கு மாறாக வரவைவிட செலவு அதிகமாக இருந்தால் அது ஒரு பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம் எனப்படும். அரசினுடைய செலவினங்கள் அவ்வப்போது பெருகிக்கொண்டே வருவதால் இந்தியாவில் பெரும்பாலும் பற்றாக்குறை வரவு செலவுத் திட்டங்களே தயாரிக்கப்படுகின்றன. பொதுவாக, பற்றாக்குறை வரவுசெலவுத் திட்டங்கள் நாட்டில் பணவீக்கத்தை உண்டாக்குகின்றன. நாட்டில் பண அளிப்பு (Money supply) அதிகமாக இருப்பதற்கு ஒரு முக்கிய காரணம் அரசின் பற்றாக் குறை வரவு செலவுத் திட்டங்களாகும். நாட்டில் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமெனில் பற்றாக் குறை வரவு செலவுத் திட்டம் வரையும் வழக்கத்தைக் கைவிட வேண்டும். அறவே நிறுத்த முடியாது என்றாலும் பற்றாக்குறையின் அளவையாவது குறைத்தல் வேண்டும்.

## பண அளிப்பில் (Money Supply) இருக்கும் பெருக்கம்

நாட்டில் பண அளிப்பு பெருகிக்கொண்டே வந்திருக்கின்றது. இன்றைய கட்டுக்கடங்காத விலையேற்றத்திற்கு இது ஒரு முக்கியக் காரணமாகும். நாட்டின் மொத்தப் பண அளிப்பில் (1) செலாவணிப் பணம் (காகித நோட்டுகள், நாணயங்கள்), (2) வங்கிப் பணம் என்று இரு பிரிவுகள் அடங்கியிருக்கின்றன என்று அத்தியாயம் 10-ல் படித்திருப்பீர்கள். 1950 - 51ஆம் ஆண்டில் நாட்டில் புழக்கத்திலிருந்த மொத்தப் பண அளவு 2,020 கோடி ரூபாயாகும். 1978 - 79ஆம் ஆண்டில் இத்தொகை 20,600 கோடி ரூபாயாகப் பெருகிவிட்டது. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தவேண்டுமெனில் பணப்புழக்கத்தையும் குறைத்தல் வேண்டும்.

**கறுப்புப் பணம்**

நாட்டில் அதிக அளவில் கறுப்புப் பணம் புழக்கத்தில் இருந்து வருகின்றது. வருமான வரி ஏய்ப்பவர்களும் கறுப்புச் சந்தையில் பண்டங்களை விற்பனை செய்யும் வணிகர்களும் கறுப்புப் பணம் உருவாவதற்குக் காரணமாக அமைகின்றனர். வருமான வரி செலுத்தாமல் வைத்திருக்கும் பணத்தைக் கறுப்புப் பணம் என்று அழைக்கின்றோம். கறுப்புப் பணத்தில் பெருமளவை வணிகர்கள் உணவு தானியங்களையும் பிற பண்டங்களையும் வாங்கிப் பதுக்கி வைப்பதற்குப் பயன்படுத்துகின்றனர். பண்டங்கள் இவ்வாறு பதுக்கி வைக்கப்படுவதால் அவற்றின் விலை ஏற்றமடைகின்றது. எனவே, கறுப்புப் பணத்தைக் கட்டுப்படுத்தத் தீவிர முயற்சிகளை மேற்கொள்வதன் வாயிலாக ஓரளவிற்குப் பணவீக்கத்திற்கும் முடிவு காணலாம்.

**பண்டங்கள், பணிகள் இவற்றின் அளிப்பில் பற்றாக்குறை**

அரசின் செலவினங்களில் ஏற்றம், பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம், பண அளிப்பில் பெருக்கம், கறுப்புப் பணம் இவை அனைத்தும் நாட்டில் பண்டங்களுக்கும் பணிகளுக்கும் இருக்கும் தேவையைப் பெருக்கமடையச் செய்வதற்குக் காரணங்களாக அமைகின்றன. தேவையில் இருக்கும் பெருக்கத்திற்கு ஏற்றாற்போலப் பண்டங்களின் அளிப்பிலும் ஏற்றம் இருந்தால் விலையேற்றம் ஏற்படவேண்டிய அவசியமில்லை. ஆனால், நம் நாட்டில் பண்டங்கள், பணிகள் இவற்றின் உற்பத்தியில் சிறந்த முன்னேற்றம் இருப்பதில்லை. குறிப்பாக, உணவு தானியங்களைப் பொறுத்த அளவில் உற்பத்தி ஆண்டாண்டிற்கு மாறுந்தன்மையுடையதாக இருக்கின்றது. இதைப் போன்றே செய்வினை முடிந்த பண்டங்களின் உற்பத்தியிலும் நல்ல பெருக்கம் இல்லை. இந்நிலையில் பல பண்டங்களுக்குத் தட்டுப்பாடு எழுவது இயற்கையே. பண்டங்கள் கிடைப்பதில் தட்டுப்பாடு ஏற்பட்டால் அவற்றின் விலைகளும் ஏற்றமடைகின்றன. எனவே, பண்டங்களின் உற்பத்தியைப் பெருக்கமடையச் செய்தால்தான் நாட்டில் விலையேற்றத்தைத் தடுத்து நிறுத்தமுடியும்.

# 12. அரசின் வரவு செலவு

## தனியார் வரவு செலவிற்கும் அரசின் வரவு செலவிற்கும் உள்ள வேறுபாடுகள்

அரசிற்குப் பல மூலங்களிலிருந்து வருவாய் கிடைக்கின்றது. அதேபோன்று அது பல இனங்கள்மீதும் செலவு செய்கின்றது. இந் நிலையில் குடும்பம், தனியார் வணிக நிறுவனங்கள் ஆகியவற்றின் நிதி நடவடிக்கைகளுக்கும் அரசின் நிதி நடவடிக்கைகளுக்கும் வேறுபாடுகள் ஏதுமில்லை. ஆனால், வேறு பல இனங்களில் அரசுக்கும் அவைகளுக்கும் அதிக வேறுபாடுகள் இருப்பதை அறியலாம். முக்கியமான வேறுபாடுகளை இனி காண்போம்.

(1) ஒரு குடும்பத்தை எடுத்துக் கொண்டால், அது கிடைக்கும் வருவாய்க்கு ஏற்ப தன்னுடைய செலவினங்களைத் திட்டமிடுகின்றது. ஆனால், அரசாங்கமோ வரும் ஆண்டிற்குத் தேவைப்படும் செலவின் அளவை முதலில் நிர்ணயித்துக் கொண்டு அச் செலவை மேற்கொள்ளத் தேவைப்படும் வருவாயைத் திரட்டும் முயற்சியில் ஈடுபடுகின்றது என்று கூறப் படுகின்றது. இக் கூற்று ஓரளவுக்குத்தான் பொருந்தும். வரிகள் (Taxes), கட்டணங்கள் (Rates), இலாபங்கள் (Profits) இவற்றின் மூலமாக அரசாங்கத்திற்கு வருவாய் கிடைக்கின்றது. இவ்வாறு வழக்கமாய்க் கிடைக்கும் வருவாய் போதவில்லையென்றால் அரசு கடனை எழுப்புகின்றது. ஒரு குடும்பத்தை எடுத்துக் கொண் டாலும் இதே நிலையைத்தான் காண்கின்றோம். குடும்பச் செலவைச் சமாளிக்க வருவாய் போதவில்லையென்றால் அக் குடும்பமும் கடன் வாங்கக்கூடும். அரசு கடன் வாங்குவது இன்று சாதாரண வழக்கமாகிவிட்டது. ஆனால், குடும்பங்கள் கடன் வாங்குவதை அவ்வளவு நல்ல அறிகுறியாக யாரும் கருதுவ தில்லை. மேலும் தனியார் கடன் வாங்குவதற்கு வரம்பு இருக்கின்றது. அரசுக்கோ வரம்பேயில்லை. எந்த அளவிற்கும் அது கடனை எழுப்ப முடியும். அரசு உள் நாட்டில் கடன் எழுப்பலாம். அயல் நாடுகளிலும் கடன் எழுப்பலாம்.

(2) அரசு, தனியார் நிறுவனம், குடும்பம் இவற்றை எடுத்துக்கொண்டு பார்த்தால் அவை மேற்கொள்ளும் செலவின்

நோக்கம் ஒன்றுக்கொன்று மாறுபட்டதாக இருப்பதைக் காணலாம். தனியார் நிறுவனம் ஒன்றை உதாரணத்திற்கு எடுத்துக் கொள்வோம். அந் நிறுவனம் கச்சாப் பொருள்கள், பண்டங்கள், வாடகை, கூலி, விற்பனையாக்குதல், விளம்பரம் போன்ற இனங்களில் செலவு செய்கின்றது. பண்டங்களை உற்பத்தி செய்து விலையாக்கி நல்ல வருவாய் ஈட்டலாம் என்னும் நம்பிக்கையில் தான் இவ்வினங்களில் செலவை மேற்கொள்கின்றது. எனவே, நிறுவனத்தின் அடிப்படை நோக்கம் இலாபம் ஈட்ட வேண்டு மென்பதே. ஒரு குடும்பமும் இவ்வாறே வீட்டு வாடகை, ஆடை, உணவு, பொழுதுபோக்கு, கல்வி, மருத்துவம் போன்ற பல இனங்களில் செலவு செய்கின்றது. குடும்பத்தின் அடிப்படை நோக்கம் தன்னுடைய விருப்பங்களைத் திருப்தி செய்துகொள்ள வேண்டும் என்பதாகும். அரசு செலவை மேற்கொள்ளும்பொழுது அதன் அடிப்படை நோக்கம் மக்களுடைய நல்வாழ்க்கையைப் பெருக்க வேண்டுமென்பதாகும். செலவு செய்வதன் மூலம் வருவாய் ஈட்ட வேண்டும் என்கிற எண்ணத்திலோ அல்லது ஒரு குடும்பத்தைப் போன்று பண்டங்களையும் பணிகளையும் வாங்கி நுகர்வதன் வாயிலாகத் திருப்தி பெற வேண்டும் என்கிற நோக்கத்திலோ அரசு செலவு செய்வதில்லை. அரசு மேற்கொள்ளும் செலவின் காரணமாக நாட்டு வருமானம் (National Income) வளர்ச்சியடையலாம். ஆனால், நாட்டு வருமானத்தில் இருக்கும் பெருக்கத்தை அரசு எடுத்துக்கொள்வதில்லை.

(3) வருவாய் திரட்டும் முறையில் அரசுக்கும், பிற அமைப்பு களுக்கும் (தனியார் நிறுவனம், குடும்பம் போன்றவை) வேறுபாடு இருக்கின்றது. அரசுக்குக் கிடைக்கும் மொத்த வருவாயில் பெரும் பகுதி வரி விதிப்பின் மூலம் கிடைக்கின்றது. வணிக நிறுவனத் திற்கும் தனியாருக்கும் வரி விதிக்கும் உரிமை கிடையாது. வரி என்பது கட்டாயமாக விதிக்கப்படும் ஒரு தீர்வையாகும். இத் தீர்வையை அரசாங்கம் மட்டுமே விதிக்க இயலும். அதாவது, அரசாங்கம் பல வரிகளை விதித்து அவற்றைச் செலுத்துமாறு மக்களைக் கட்டாயப்படுத்தலாம். ஆனால், தனியார் நிறுவனங் களும் குடும்பங்களும் தங்களுக்குக் கட்டணம் செலுத்துமாறு பிறரைக் கட்டாயப்படுத்த முடியாது.

### வரவு செலவுத் திட்டம்

ஒவ்வோர் ஆண்டும் அரசு ஓர் 'ஆண்டு நிதி அறிக்கையை' (Annual Financial Statement) தயாரிக்கின்றது. அவ்வாண்டில் வருவாய் எவ்வளவு இருக்கும்? என்னென்ன மூலங்களிலிருந்து எவ்வளவு வருவாய் கிடைக்கும்? அரசு எந்த அளவிற்குச் செலவை

மேற்கொள்ள இருக்கின்றது? செலவினங்கள் யாவை? இவை போன்ற வினாக்களுக்கு நிதி அறிக்கையில் தெளிவான விளக்கங்கள் இருக்கும். இத்தகைய ஆண்டு நிதி அறிக்கையைத்தான் சாதாரணமாக வரவு செலவுத் திட்டம் என்றழைக்கின்றோம். வரவு செலவுத் திட்டத்தைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்லான 'பட்ஜெட்' பிரெஞ்சு மொழியில் 'பௌகெட்' என்னும் சொல்லிலிருந்து பிறந்ததாகும். 'சிறு கைப் பை' என்பதே இச்சொல்லிற்குப் பொருளாகும். பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக நிதி அறிக்கையை ஒரு சிறு கைப் பையினுள் வைத்து நிதி அமைச்சர் எடுத்துச்செல்வது பழங் காலத்தில் மேற்கத்திய நாடுகளில் வழக்கமாக இருந்துவந்தது. காலப்போக்கில் கைப் பையின் பெயரே நிதி அறிக்கைக்கும் வழங்கலாயிற்று. இந்தியா கூட்டாட்சி (Federal Government) முறையைச் சேர்ந்ததாகும். இந்தியாவில் இரண்டு மட்டங்களில் அரசுகள் இயங்கி வருகின்றன. ஒன்று மத்திய அரசு; மற்றது மாநில அரசாகும். இவ்விரு மட்டங்களில் இயங்கிவரும் ஒவ்வோர் அரசும் ஆண்டுதோறும் வரவு செலவுத் திட்டம் ஒன்றைத் தயாரித்துத் தருகின்றது. மத்திய அரசினுடைய வரவு செலவுத் திட்டத்தை மத்திய நிதி அமைச்சர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கின்றார். இதேபோன்று ஒவ்வொரு மாநில நிதி அமைச்சரும் மாநில அரசினுடைய வரவு செலவுத் திட்டத்தைச் சட்ட சபையில் சமர்ப்பிக்கின்றார். வரவு செலவுத் திட்டம் ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி மாதக் கடைசியிலோ அல்லது மார்ச்சு மாதத் தொடக்கத்திலோ சமர்ப்பிக்கப்படுகின்றது. முறையே சட்டசபையும் பாராளுமன்றமும் ஒப்புதல் அளித்த பிறகுதான் மாநில அரசும் மத்திய அரசும் வரும் ஆண்டில் செலவை மேற்கொள்ளக்கூடும். இதே போன்று புதிய வரிகள் விதிக்க வேண்டுமென்றாலும் அல்லது நடைமுறையில் இருக்கும் வரிகளில் ஏதேனும் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டுமென்றாலும் அவற்றிற்கு மாநில அரசாக இருந்தால் சட்டசபையின் அனுமதியையும், மத்திய அரசாக இருந்தால் பாராளுமன்றத்தின் அனுமதியையும் பெறவேண்டும்.

### வருவாய் வரவு-செலவுத் திட்டம் (Revenue Budget)

நம் நாட்டில் வரவு-செலவுத் திட்டத்தில் இருபெரும் பிரிவுகள் இருக்கின்றன. அவையாவன : வருவாய் வரவு-செலவுத் திட்டம் (Revenue Budget); மூலதன வரவு-செலவுத் திட்டம் (Capital Budget). அரசின் சில செலவினங்கள் மீண்டும் மீண்டும் நிகழும் தன்மையுடையவையாகும். இதேபோன்று சில வரவினங்களும் தொடர்ந்து வரும் இயல்புடையவையாகும். இவ்வாறு

தொடர்ந்துவரும் இனங்கள் வருவாய் வரவு - செலவுத் திட்டத்தில் அடங்குகின்றன. வருவாய் வரவு செலவுத் திட்டத்தின்கீழ் காணப்படும் வரவினங்கள் பின்வருமாறு: வரி விதிப்பின் வாயி லாகக் கிடைக்கும் வருவாய், மானியத் தொகை, அரசுத் துறை நிறுவனங்கள் ஈட்டிய இலாபம் முதலியனவாகும். செலவினங்கள் பின்வருமாறு: அரசுத் துறைகளுக்காகும் செலவு, அரசுக் கடன் தொகைக்குக் கொடுக்க வேண்டிய வட்டிப் பணம் முதலியன வாகும்.

## மூலதன வரவு செலவுத் திட்டம் (Capital Budget)

சில வகைச் செலவுகளை அரசு மேற்கொள்வதன் மூலம் அரசுக்கு நிலையான சொத்துகள் உரிமையாகக்கூடும். இதே போன்று சில வரவினங்கள் மூலதன இயல்பைக் கொண்டதாக இருக்கக்கூடும். இத்தன்மை வாய்ந்த வரவினங்களும் செல வினங்களும் மூலதன வரவு - செலவுத் திட்டத்தில் அடங்கு கின்றன. அரசு அன்றாட ஆட்சி நிருவாகத்தை நடத்தி வருவதுடன்கூட வேறு சில பணிகளையும் மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது. தொழிற் சாலைகளுக்கும், விவசாயி களுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அரசு நிதி உதவி அளிக்க வேண்டியிருக்கின்றது. நாட்டில் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக நீர்ப் பாசனத் திட்டங்கள், மின்சாரத் திட்டங்கள், சாலை அமைத்தல் போன்றவற்றில் முதலீடு செய்ய வேண்டியிருக்கின்றது. இவ்வினங்களின்மீது மேற்கொள்ளப்படும் செலவு மூலதனச் செலவு எனப்படுகின்றது. வருவாய் வரவு - செலவுத் திட்டத்தில் உபரி ஏதேனும் இருந்தால் அத் தொகை மூலதனச் செலவிற்காகப் பயன்படுத்தப்படுகின்றது. ஆனால், நடைமுறையில் அதிக உபரி கிடைப்பதில்லை. எனவே, மூலதனச் செலவைச் சமாளிக்க அரசு கடனை எழுப்புகின்றது.

## மத்திய அரசின் வரவும் செலவும்

திட்டமிட்டுச் செயல்படும் வழக்கம் நடைமுறைக்கு வந்ததற் குப் பிறகு மத்திய அரசின் வரவுத் தொகையும் செலவுத் தொகை யும் பெருமளவிற்குப் பெருக்கமடைந்திருக்கின்றன.

### வரவில் வளர்ச்சி

மத்திய அரசின் வரவு குறிப்பிட்ட சில ஆண்டுகளில் எந்த அளவில் இருந்தது என்பதைப் பட்டியல் 12—1 விளக்கிக் காட்டு கின்றது.

## பட்டியல் 12—1

மத்திய அரசின் மொத்த வருவாய் (கோடி ரூபாயில்)

| இனம் | 1950-51 | 1960-61 | 1970-71 | 1978-79 |
|---|---|---|---|---|
| 1. வருவாய்க் கணக்கு : | | | | |
| (அ) வரி விதிப்பு மூலம் கிடைத்த வருவாய் | 357.0 | 730.2 | 2451.0 | 8007.3 |
| (ஆ) வரி அல்லாத இனங்கள் மூலம் கிடைத்த வருவாய் | 48.9 | 147.3 | 891.0 | 2805.1 |
| (இ) மொத்த வருவாய் (அ + ஆ) | 405.9 | 877.5 | 3342.0 | 10812.4 |
| 2. மூலதனக் கணக்கு : | | | | |
| (அ) உள் நாட்டுக் கடன்கள் | ... | 524.7 | 1340.0 | 3579.4 |
| (ஆ) அயல் நாட்டுக் கடன்கள் | ... | 505.1 | 526.0 | 1233.4 |
| (இ) பழைய கடன் வசூலிப்பு | ... | 126.0 | 658.0 | 2386.0 |
| (ஈ) மொத்த மூலதன வருவாய் (அ + ஆ + இ) | 104.5 | 1155.8 | 2524.0 | 7198.8 |
| 3. மொத்த வருவாய் (1இ + 2ஈ) | 510.4 | 2033.3 | 5866.0 | 18011.2 |

ஆதாரம் : செலாவணி நிலை, மற்றும் நிதி நிலை அறிக்கை — ரிசர்வு வங்கி வெளியீடு : 1970-71, 1973-74, 1977-78.

வரவினங்களைப் பிரித்து வருவாய்க் கணக்கின்கீழும் மூலதனக் கணக்கின்கீழும் தனித்தனியாகக் காட்டப்பட்டுள்ளன. 1950 - 51ஆம் ஆண்டில் கிடைத்த மொத்த வருவாய் ரூ. 510·4 கோடி அளவில்தான் இருந்தது. ஆனால், 1978 - 79ஆம் ஆண்டில் இத்தொகை ரூ. 18011.2 கோடியாக உயர்ந்துவிட்டது. அதாவது, மத்திய அரசின் மொத்த வரவு இவ்விரு ஆண்டுகளுக் கிடையே 35 மடங்கு உயர்ந்துவிட்டது, அரசின் வரவு இந்த

அளவிற்கு பெருக்கமடைந்ததற்குத் துணையாக இருந்த காரணங்கள் யாவை? ஐந்தாண்டுத் திட்டங்களின்கீழ் அரசு பல மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. இப்பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு அரசுக்கு அதிக அளவில் நிதி தேவைப்பட்டது. எனவே, மத்திய அரசு நிதி திரட்டுவதில் தீவிர முயற்சிகளை மேற் கொண்டது. வரி விதிப்பைப் பொறுத்த அளவில் மத்திய அரசு பல புதிய வரிகளை விதித்ததோடு வரி விகிதங்களையும் உயர்த்தியது. இதற்கு முன்னர் வரி விதிப்பில் அடங்காத பல பண்டங்களின்மீது வரிகள் விதிக்கப்பட்டன. நாட்டு வருமானத்தில் வளர்ச்சி இருந்ததைத் தொடர்ந்து வரி விதிப்பின்மூலம் அரசுக்குக் கிடைத்த வருவாயும் வளர்ச்சியடைந்தது. இக் காரணங்களால் வரி விதிப்பின் மூலம் 1950 - 51-ல் கிடைத்த மொத்த வருவாயான ரூ.357 கோடி 1978 - 79-ல் ரூ. 8,007 கோடியாக உயர்ந்தது. வரி விதிப்பு இல்லாத இனங்கள் மூலம் கிடைத்த வருவாயிலும் நல்ல பெருக்கம் இருந்தது. வரி விதிப்பின் மூலம் கிடைக்கும் வருவாய், வரி விதிப்பு அல்லாத இனங்கள் மூலம் கிடைக்கும் வருவாய் இவ்விரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது வரி விதிப்பு அல்லாத இனங்கள் மூலம் கிடைக்கும் வருவாய் மிகக் குறைவாய் இருக்கின்றது. உதாரணமாக, 1950 - 51 ஆம் ஆண்டில் வரி விதிப்பின் மூலம் கிடைத்த வருவாயில் 14 சதவிகித அளவுதான் வரி விதிப்பு அல்லாத இனங்கள்மூலம் கிடைத்தது. ஆனால், 1978 - 79 ஆம் ஆண்டில் அது 35 சதவிகித அளவிற்கு உயர்ந்துவிட்டது.

அண்மை ஆண்டுகளில் மூலதனக் கணக்கு மிகவும் முக்கியத்துவம் பெற்று வருகின்றது என்னும் உண்மையைப் பட்டியல் 12—1-ல் கண்ணுறலாம். வளர்ச்சிப் பணிகளுக்கு ஆகும் செலவு உயர்ந்துகொண்டே வந்திருக்கின்றது; இவ்வாறு வளர்ந்துவரும் செலவை மத்திய அரசு கடன் எழுப்புவதன்மூலம் சமாளித்து வருகின்றது என்பது இதிலிருந்து தெளிவாகின்றது. மத்திய அரசு உள் நாட்டிலும் வெளி நாட்டிலும் கடன்களை எழுப்பி வருகின்றது. மூலதனக் கணக்கின்கீழ் கிடைத்த வரவு 1950 - 51-ல் அரசின் மொத்த வரவில் 20 சதவிகித அளவில்தான் இருந்தது. ஆனால், 1978 - 79-ல் இது 40 சதவிகித அளவிற்கு உயர்ந்துவிட்டது.

## செலவில் இருந்த வளர்ச்சி

மத்திய அரசினுடைய செலவும் பெருமளவிற்கு உயர்ந்துவிட்டது. செலவில் இருந்த வளர்ச்சியைப் பட்டியல் 12—2-ல் காணலாம்.

## பட்டியல் 12—2

மத்திய அரசின் மொத்தச் செலவு (கோடி ரூபாயில்)

| இனம் | 1950-51 | 1960-61 | 1970-71 | 1978-79 |
|---|---|---|---|---|
| 1. வருவாய்க் கணக்கு | | | | |
| (அ) வளர்ச்சி சம்பந்தமான செலவு | ... | 284.7 | 872.0 | 4525.0 |
| (ஆ) வளர்ச்சி சம்பந்தப் படாத செலவு | ... | 641.5 | 2307.0 | 6433.1 |
| (இ) வருவாய்க் கணக்கில் மொத்தச் செலவு (அ + ஆ) | 346.6 | 826.2 | 3179.0 | 10958.1 |
| 2. மூலதனக் கணக்கு | | | | |
| (அ) மூலதனச் செலவு | ... | 405.5 | 941.0 | 2820.5 |
| (i) வளர்ச்சி சம்பந்தமான செலவு | ... | 269.9 | 605.0 | 2257.2 |
| (ii) வளர்ச்சி சம்பந்தமில்லாத செலவு | ... | 135.6 | 336.0 | 563.3 |
| (ஆ) பழங் கடனைத் திருப்பிக் கொடுத்தல் | ... | 126.9 | 478.0 | 580.3 |
| (இ) கடன் வழங்குதல் | ... | 496.9 | 1553.0 | 5189.5 |
| (ஈ) மூலதனக் கணக்கில் மொத்தச் செலவு (அ · ஆ + இ) | 182.6 | 1029.3 | 2972.0 | 8590.3 |
| 3. மொத்தச் செலவு (1இ + 2ஈ) | 529.2 | 1855.5 | 6151.0 | 19548.4 |

ஆதாரம் : செலாவணி நிலை மற்றும் நிதி நிலை அறிக்கை —ரிசர்வு வங்கி வெளியீடு; 1970 - 71, 1973 - 74, 1977 - 78.

அரசின் செலவு உயர்ந்துகொண்டே வந்திருப்பதைப் பட்டியல் 12—2-ல் காணலாம். இதற்கான காரணத்தையும் நாம் எளிதில் உணரலாம். நாடு விடுதலை அடைவதற்கு முன்னர் அரசு குறிப்பிட்ட சில பணிகளை மட்டுமே நிறைவேற்றி வந்தது. இப்பணிகள் பெரும்பாலும் அன்றாட நிருவாகத்தைச் சார்ந்தவையாகவே இருந்தன. அயல் நாட்டு ஆக்கிரமிப்பிலிருந்து நாட்டைக்

காத்தல், உள் நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுதல் இவை இரண்டுமே ஓர் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய முக்கியப் பொறுப்புகள் என்னும் கருத்து அக்காலத்தில் வலுப்பெற்றிருந்தது. மக்களுடைய நல்வாழ்க்கையைப் பேணி வளர்ப்பதில் இன்றிருப்பதைப்போன்று அன்று அவ்வளவு கவனம் செலுத்தப்படவில்லை. மக்களின் நலனைப் பெருக்கும் பணி இன்று அரசின் பணிகளுள் முக்கியம் வாய்ந்ததாகவும் முதன்மையானதாகவும் கருதப்படுகின்றது. மக்களுடைய தேவைகளையும் பிரச்சினைகளையும் நன்றாக உணர்ந்து தேவைகளைப் பூர்த்தி செய்யவும் பிரச்சினைகளைக் களையவும் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது. கல்வி வசதிகளைப் பரப்ப வேண்டியிருக்கின்றது. மக்களுக்கு வீட்டு வசதிகளைச் செய்து கொடுப்பதில் அதிகக் கவனம் செலுத்த வேண்டியிருக்கின்றது. வேலையில்லாத் திண்டாட்டத்திற்குப் பரிகாரம் தேடவேண்டியிருக்கின்றது. கிராம வளர்ச்சிக்கு முதலிடம் அளிக்க வேண்டியிருக்கின்றது. மருத்துவ வசதிகள், போக்குவரத்து வசதிகள், குடிநீர் வசதி இவற்றை மேன்மேலும் வளர்த்துக்கொண்டே இருக்க வேண்டியது அவசியமாகின்றது. நாட்டில் தொழில் உற்பத்தியும் விவசாய உற்பத்தியும் பெருக்கமடைவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது. இப்பணிகள் அனைத்தையும் திறம்பட மேற்கொள்வதற்கு அரசுக்கு அதிக அளவில் நிதி தேவைப்படுகின்றது. 1950 - 51-ல் ரூ. 529 கோடி அளவில் இருந்த மத்திய அரசின் மொத்தச் செலவு 1978 - 79-ல் ரூ. 19,548 கோடியாக உயர்ந்ததற்கு இவையே முக்கியக் காரணங்களாகும்.

## மத்திய அரசின் வருவாய் மூலங்கள்

மத்திய அரசின் செலவு வருடந்தோறும் பெருகிக் கொண்டே வந்திருக்கின்றது. இவ்வாறு பெருகிவரும் செலவைச் சமாளிக்க அரசு போதிய நிதியையும் திரட்ட வேண்டியுள்ளது. பல மூலங்களிலிருந்து அரசு நிதி திரட்டி வருகின்றது. மத்திய அரசின் வருவாய் மூலங்கள் எவை என்று அறிய முற்படுவோம்.

வரவு செலவுத் திட்டத்தில் வருவாய்க் கணக்கு, மூலதனக் கணக்கு என்று இரு பிரிவுகள் இருப்பதாக இதற்கு முன்னர் படித்தோம். வருவாய்க் கணக்கில் கிடைக்கும் பணம் 'வருவாய் வரவுகள்' (Revenue Receipts) என்றும் மூலதனக் கணக்கில் கிடைக்கும் பணம் 'மூலதன வரவுகள்' (Capital Receipts) என்றும் அழைக்கப்படுகின்றன.

**வருவாய் வரவுகள்** (Revenue Receipts)

வருவாய் வரவுகளில் இரண்டு இனங்கள் இருக்கின்றன. அவையாவன: (1) வரிகள் மூலம் கிடைக்கும் நிதி (Tax Revenue), (2) வரி அல்லாத இனங்கள் மூலம் கிடைக்கும் நிதி (Non-Tax Revenue).

**வரிகள் மூலம் கிடைக்கும் நிதி** (Tax Revenue)

அரசுக்குக் கிடைக்கும் மொத்த வருவாயில் பெருமளவு வரிகள் மூலம் கிடைக்கின்றது. வருமான வரி, கூட்டாண்மை வரி (Corporate Tax), மரண வரி, செல்வ வரி, நன்கொடை வரி (Gift Tax), சுங்க வரி, ஆயத் தீர்வை முதலியன மத்திய அரசு விதிக்கும் முக்கிய வரிகளாகும். 1978 - 79-ல் வரிகள் மூலம் கிடைத்த வருவாயின் விவரங்களைக் கீழே காணலாம் :

| | (கோடி ரூபாயில்) |
|---|---|
| வருமான வரி | 1247 |
| கூட்டாண்மை வரி | 1530 |
| மரண வரி | 11 |
| செல்வ வரி | 60 |
| நன்கொடை வரி | 6 |
| சுங்க வரி | 2389 |
| ஆயத் தீர்வை | 6008 |

இவ்வரிகள் மூலம் கிடைக்கும் வருவாய் முழுவதையும் மத்தி அரசு தன்னுடைய செலவுக்காகப் பயன்படுத்த முடியாது ஏனெனில், இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி மத்திய அரசு மாநில அரசுகளுடன் நிதியைப் பகிர்ந்துகொள்ள வேண்டியிருக்கின்றது. வருமான வரி, ஆயத் தீர்வைகள் மூலம் மத்திய அரசு திரட்டும் நிதியில் ஒரு பங்கை அது மாநில அரசுகளுக்குப் பகிர்ந்து கொடுக்க வேண்டியிருக்கின்றது.

**வரிகள் அல்லாத இனங்களிலிருந்து கிடைக்கும் நிதி** (Non-Tax Revenue)

வரிகள் அல்லாத இனங்கள் சிலவற்றிலிருந்து மத்திய அரசுக்கு வருவாய் கிடைத்து வருகின்றது. மாநில அரசுகளுக்கும், வேறு பல நிறுவனங்களுக்கும் மத்திய அரசு கடன் உதவி அளித்து வருகின்றது. கடனாளிகள் ஆண்டுதோறும் மத்திய அரசிற்கு வட்டியைச் செலுத்தி வருகின்றனர். இவ்வாறு கிடைக்கும் வட்டித் தொகை வரிகள் அல்லாத இனங்கள் வகையில் அடங்கும். இதேபோன்று, மத்திய அரசு, அரசுத் துறை நிறுவனங்கள்

(Public undertakings) பலவற்றிலும் முதலீடு செய்கின்றது. இம்முதலீடுகளிலிருந்து மத்திய அரசிற்கு இலாபம் கிடைக்கின்றது. இதுவும் வரிகள் அல்லாத இனங்கள் வகையில் அடங்கும். 1979-80ஆம் ஆண்டில் மத்திய அரசிற்கு வரிகள் அல்லாத இனங்கள் மூலமாகக் கிடைத்த மொத்த வருவாய் ரூ. 3,162 கோடியாகும்.

## மூலதன வரவுகள் (Capital Receipts)

மூலதனக் கணக்கின்கீழ் மூன்று முக்கிய இனங்கள் இருக்கின்றன. அவை: (1) உள் நாட்டுக் கடன்கள்—மத்திய அரசு உள் நாட்டில் கடன்களை எழுப்புகின்றது. கடன்களைப் பொதுமக்களிடமிருந்தோ அல்லது ரிசர்வு வங்கி போன்ற நிறுவனங்களிடமிருந்தோ பெறலாம். (2) அயல் நாட்டுக் கடன்கள்—மத்திய அரசு ஜப்பான், ஜெர்மனி, இங்கிலாந்து, ஐக்கிய அமெரிக்கா, ருஷ்யா போன்ற நட்பு நாடுகளிலிருந்தும் உலக வங்கி (World Bank), பன்னாட்டுப் பண அமைப்பு (International Monetary Fund) போன்ற பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்தும் கடன் தொகைகளைப் பெற்று வருகின்றது. (3) கடன் வசூலிப்பு—கடந்த ஆண்டு அரசு அளித்த கடன்கள் நடப்பு ஆண்டில் அரசுக்குத் திருப்பிக் கொடுக்கப்படுகின்றன.

## மத்திய அரசு விதிக்கும் வரிகள்

(1) வருமான வரி: வருமான வரி நாட்டில் முதன்முதலாக 1860ஆம் ஆண்டில் அமலுக்கு வந்தது. ஆனால், சில ஆண்டுகளுக்குப் பிறகு அது ரத்து செய்யப்பட்டது. மறுபடியும் 1886 ஆம் ஆண்டில் அது நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. தனி நபர்கள், ஹிந்து கூட்டுக் குடும்பங்கள், பதிவு செய்யப்படாத நிறுவனங்கள் இவற்றின் நிகர வருமானத்தின்மீது வருமான வரி விதிக்கப்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட அளவுக்குக்கீழ் இருக்கும் வருமானத்திற்கு வருமான வரியிலிருந்து முற்றிலும் விலக்கு அளிக்கப்படுகின்றது. இப்பொழுது நடைமுறையில் இருக்கும் சட்டத்தின்படி ஆண்டொன்றுக்கு ரூ 12,000/- வரை உள்ள வருமானத்திற்கு விலக்கு அளிக்கப்படுகின்றது. வரி செலுத்துவோருக்குச் சில சலுகைகளும் அளிக்கப்படுகின்றன. வருங்காலச் சேமநிதிக்கும் (Provident Fund), ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிக்கு செலுத்தப்படும் தொகையில் ஒரு குறிப்பிட்ட அளவிற்கும் வரி விலக்கு அளிக்கப்படுகின்றது. வருமான வரி மூலம் கிடைக்கும் மொத்த வருவாயில் மத்திய அரசு ஒரு பகுதியைத் தன்னிடம் வைத்துக்கொண்டு மற்றொரு பகுதியை மாநில அரசுகளுக்குப் பகிர்ந்துகொடுக்கின்றது.

(2) கூட்டாண்மை வரி (Corporate Tax) : கூட்டுப் பங்குக் கழகங்கள் (Joint Stock Companies) ஈட்டும் வருமானத்தின்மீது விதிக்கப்படும் வரி கூட்டாண்மை வரி என்றழைக்கப்படுகின்றது. தனிநபர்கள், கூட்டுக் குடும்பங்கள், பதிவு செய்யப்படாத நிறுவனங்கள் இவற்றின் வருமானங்கள் மீது விதிக்கப்படும் வரி தனி நபர் வருமான வரி (Personal Income Tax) என்றழைக்கப் படுகின்றது. இந்த வேறுபாடு 1959 ஆம் ஆண்டில் புகுத்தப் பட்டது.

கூட்டுப் பங்குக் கழகத்தின் வருமானம் அனைத்தின் மீதும் வருமான வரி விதிக்கப்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட அளவிற்குக் குறைந்த வருமானத்திற்குத் தனி நபர் வருமான வரியில் விலக்கு அளிக்கப்படுவதைப் போன்று கூட்டாண்மை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுவதில்லை. கூட்டாண்மை வரி 45 சதவிகிதத் திலிருந்து 70 சதவிகிதம் வரை விதிக்கப்படுகின்றது. அரசுக்கு வருவாய் தேடித் தருவதைப் பொறுத்த அளவில் தனி நபர் வருமான வரியைவிட கூட்டாண்மை வரி முக்கியத்துவம் வாய்ந்ததாக வருகின்றது.

(3) செல்வ வரி : செல்வ வரி 1957ஆம் ஆண்டில் நடை முறைக்கு வந்தது. தனி நபர்கள், ஹிந்து கூட்டுக் குடும்பங்கள், கூட்டுக் கம்பெனிகள் இவற்றிற்கு இருக்கும் நிகர செல்வ மதிப்பின் மீது இவ்வரி விதிக்கப்படுகின்றது. கூட்டுக் கம்பெனியின் மீது விதிக்கப்பட்டு வந்த வரி 1960-61 ஆம் ஆண்டில் ரத்து செய்யப் பட்டது. வரி விதிக்கப்படுபவரின் சொத்துகள் அனைத்தி னுடைய மதிப்பைக் கண்டறிந்து அம்மதிப்பிலிருந்து வரி விதிக்கப்படுபவருக்கு இருக்கும் கடன் தொகைகளைக் கழித்து விட்டு நிகரச் செல்வம் கணக்கிடப்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட அளவிற்குள்ளாக இருக்கும் செல்வத்திற்கு வரி விலக்கு அளிக்கப்படுகின்றது. 1964-65ஆம் ஆண்டு வரை தனி நபர்களுக்கு 2 இலட்சம் ரூபாய் வரையிலும், ஹிந்து கூட்டுக் கம்பெனிகளுக்கு 4 இலட்சம் ரூபாய் வரையிலும் வரி விலக்கு அளிக்கப்பட்டது. இவ்வரி விலக்கும் 1964-65-லிருந்து முறையே 1 இலட்சம், 2 இலட்சம் ரூபாயாகக் குறைக்கப்பட்டது 1980-81 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் தனிநபருக்கு அளிக்கப்பட்டுவந்த வரி விலக்கு 1½ இலட்சத்திற்கு உயர்த்தப் பட்டிருக்கிறது. செல்வ வரியின் மூலம் அரசுக்குக் கிடைக்கும் மொத்த வருவாய் மிகக் குறைவாகவே இருக்கின்றது.

(4) மரண வரி (Estate Tax) : மரண வரி முதன்முதலாக 1963 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது. ஒருவர் மரணம் அடைந்த பிறகு அவருடைய சொத்துகள் அவருடைய சந்ததி

யாருக்குப் போய்ச் சேரும்போது இவ்வரி விதிக்கப்படுகின்றது. இவ்வரியிலும் விலக்கு அளிக்கப்படுகின்றது.

(5) நன்கொடை வரி (Gift Tax): வரி ஏய்ப்பைத் தடுக்கும் நோக்கத்துடன் 1958 ஆம் ஆண்டில் நன்கொடை வரி அமலுக்குக் கொண்டுவரப்பட்டது. ஒருவர் பணத்தையோ அல்லது சொத்தையோ பிறிதொருவருக்கு நன்கொடையாக அளிக்கும்பொழுது, அக் கொடையின் பண மதிப்பு ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேலாக இருந்தால் அத்தகைய கொடைகளின்மீது வரி விதிக்கப்படுகின்றது.

(6) சுங்க வரி: சுங்க வரி நாட்டில் நெடுங்காலமாக வழக்கில் இருந்துவருகின்றது. மத்திய அரசுக்கு இது ஒரு முக்கியம் வாய்ந்த நிதி மூலமாக இருந்து வருகின்றது. நாட்டிலிருந்து ஏற்றுமதியாகும் பண்டங்களின் மீதும் இறக்குமதியாகும் பண்டங்களின் மீதும் சுங்க வரி விதிக்கப்படுகின்றது. ஆனால், நம் நாட்டைப் பொறுத்த அளவில் இறக்குமதிகளின் மீது விதிக்கப்படும் சுங்க வரிகள் மூலமாகத்தான் அரசுக்கு அதிக வருவாய் கிடைக்கின்றது. ஏற்றுமதிகளின் மீது விதிக்கப்படும் சுங்கவரியின் வாயிலாக அரசுக்கு மிகச் சொற்பமான தொகையே கிடைக்கின்றது.

(7) ஆயத் தீர்வை: உள் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டு உள் நாட்டிலேயே விற்பனையாகும் பண்டங்கள்மீது ஆயத் தீர்வை விதிக்கப்படுகின்றது. ஆயத் தீர்வையும் நாட்டில் நெடுங் காலமாக வழக்கில் இருந்துவருகின்றது. காலப்போக்கில் அரசு பல புதிய பண்டங்களை ஆயத் தீர்வையின்கீழ் கொண்டு வந்திருக்கின்றது. இன்றைய நிலையில் 72 வகைப் பண்டங்கள் மீது ஆயத் தீர்வை விதிக்கப்படுகின்றது. சாதாரணமாக, வாழ்க்கைக்கு இன்றியமையாதவைகளாகவும் சாதாரண மக்களால் அதிக அளவில் நுகரப்படுபவைகளாகவும் கருதப்படும் பண்டங் களுக்கு ஆயத் தீர்வையிலிருந்து விலக்கு அளிக்கப்படுகின்றது. அல்லது இத்தகைய பண்டங்கள்மீது மிகக் குறைந்த விகிதத்தில் ஆயத்தீர்வை விதிக்கப்படுகின்றது. போகப்பொருள்கள் (Luxuries) மீது உயர்ந்த விகிதத்தில் ஆயத்தீர்வை விதிக்கப்படுகின்றது. சிறு உற்பத்தியாளர்களுக்குச் சில சலுகைகள் அளிக்கப்படுகின்றன. ஆயத் தீர்வை மூலம் அரசுக்கு நல்ல வருவாய் கிடைக்கின்றது. மத்திய அரசின் வரிகள் அனைத்திலும் ஆயத்தீர்வைதான் மிக அதிகமான வருவாயைத் திரட்டித் தருகின்றது. ஒவ்வோர் ஆண்டும் மத்திய அரசு புதிய புதிய பண்டங்களை ஆயத் தீர்வையின்கீழ் கொண்டுவருகின்றது. பண்டங்களின் விலைகளும் அவ்வப்போது

ஏற்றமடைந்துவருகின்றன. பண்டங்களின் உற்பத்தி அளவும் நாட்டில் உயர்ந்துகொண்டே வருகின்றது. இக் காரணங்களால் ஆயத் தீர்வை மூலம் அரசுக்குக் கிடைக்கும் வருவாயில் நல்ல வளர்ச்சி இருந்துவருகின்றது. 1950-51 ஆம் ஆண்டில் மத்திய அரசுக்கு வரி மூலம் கிடைத்த மொத்த வருவாயில் ஆயத் தீர்வை வருவாய் 19 சதவிகிதம்தான் இருந்தது. 1978-79 ஆம் ஆண்டில் ஆயத் தீர்வையின் பங்கு 50 சதவிகிதத்திற்கு உயர்ந்துவிட்டது.

## நிதி ஆதாரங்களை மத்திய, மாநில அரசுகளுக்கிடையே பகிர்வுசெய்தல்

இந்திய அரசியலமைப்பு கூட்டாட்சி முறையைச் சேர்ந்த தாகும். நாட்டின் இருமட்டங்களில் அரசுகள்—மத்திய அரசு, மாநில அரசுகள் என இயங்கி வருகின்றன. மத்திய அரசின் கடமைகளும் உரிமைகளும் அரசியலமைப்புச் சட்டத்தில் வரை யறுத்துக் கூறப்பட்டுள்ளன. அதேபோன்று மாநில அரசுகளின் கடமைகளும் உரிமைகளும் விளக்கப்பட்டுள்ளன. நம் நாடு பரந்த நிலப் பரப்பையும், பெருத்த மக்கள் தொகையையும் கொண்டதாக இருப்பதால் கூட்டாட்சி முறையைக் கையாண்டு வருகின்றது. ஐக்கிய அமெரிக்கா, கானடா, ஆஸ்திரேலியா, ஸ்விட்சர்லாந்து போன்ற நாடுகளிலும் கூட்டாட்சி முறைதான் வழக்கில் இருக்கின்றது.

## அதிகாரப் பகிர்வு (Division of Powers)

மத்திய அரசு, மாநில அரசுகள் இவை ஒவ்வொன்றிற்கும் இருக்கும் அதிகாரங்களை இந்திய அரசியலமைப்புச் சட்டம் வரையறுத்துக் கூறியிருக்கிறது. அதிகாரங்கள் மூன்று தலைப்பு களில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவையாவன: (1) மத்திய அரசுப் பட்டியல், (2) மாநில அரசுப் பட்டியல், (3) ஒருங்கியல் பட்டியல். மத்திய அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகள் பின்வருமாறு: நாட்டின் தற்காப்பு, இரயில்வேக்கள், கப்பல் போக்கு வரத்து, தபால்-தந்தி, வங்கிகள், இன்ஷ்யூரன்ஸ், அயல் நாட்டு வாணிபம் முதலியன. பின்வரும் இனங்கள் மாநில அரசுகளின் பொறுப்பில் விடப்பட்டுள்ளன: சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டுதல், கல்வி வளர்ச்சி, பாசன வசதி, மின்சார உற்பத்தி, ஒருங்கியல் பட்டியலில் சமுதாய மற்றும் பொருளாதாரத் திட்டம் வரைதல், தொழிலாளர் நலன், விலைகளைக் கட்டுப்படுத்துதல் முதலிய இனங்கள் அடங்கி இருக்கின்றன.

## நிதிப் பகிர்வு (Division of Resources)

கடமைகளும் பொறுப்புகளும் மத்திய அரசிற்கும் மாநில அரசுகளுக்குமிடையே எவ்வாறு பகிர்வு செய்யப்பட்டிருக்கின்றது என்பதைக் கருத்திற் கொண்டு வரி விதிக்கும் உரிமைகளையும் இவ்விரு மட்ட அரசுகளுக்கிடையே பகிர்வு செய்யப்பட வேண்டும் என்று அரசியலமைப்புச் சட்டம் வகுத்திருக்கிறது. என்னென்ன வரிகளை மத்திய அரசு விதிக்கலாம், எவ் வரிகளை மாநில அரசுகள் விதிக்கலாம் என்று அரசியலமைப்புச் சட்டம் வரை யறுத்துக் கூறியுள்ளது.

இருந்தாலும், நல்ல வருவாய் ஈட்டித் தரும் முக்கிய வரிகள் மத்திய அரசின் வசம் கொடுக்கப்பட்டுள்ளன என்பதை இங்குக் குறிப்பிட வேண்டும். மாநில அரசுகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகள் அதிகமாக இருக்கின்றன. இக் கடமைகளைச் சிறப்பாக நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதியை மாநில அரசுகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள வரிகளால் திரட்டிக் கொடுக்க இயலாது. எனவே, மாநில அளவில் இருக்கும் நிதிப் பற்றாக்குறையை நிறைவு செய்வதற்காக மத்திய அரசு ஒவ்வோர் ஆண்டும் மாநில அரசுகளுக்கு நிதி உதவி அளிக்க வேண்டியதன் அவசியம் உணரப்பட்டது. இந்த அடிப்படையில் ஒவ்வோர் ஆண்டும் மத்திய அரசு மாநில அரசுகளுக்கு நிதி உதவி அளிக்கவேண்டும் என்று அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மாநில அரசுகளுக்கு நிதி உதவி

மத்திய அரசு மாநில அரசுகளுக்கு மூன்று வழிகளில் நிதி உதவி அளித்துவருகின்றது. அவையாவன: (1) வரி வசூலிப்பில் பங்கு, (2) உதவி மான்யம் (Grants-in-aid), (3) கடன் உதவி அளித்தல். நிதி உதவியை எந்த அடிப்படையில் மாநில அரசு களுக்குக் கொடுக்க வேண்டும்? எந்த அளவிற்குக் கொடுக்க வேண்டும்? இவை போன்ற பிரச்சினைகளை நடுநிலையில் நின்று ஆராய்ந்து தீர்ப்பு அளிப்பதற்காக ஐந்தாண்டுக்கு ஒரு முறை 'நிதி ஆணைக் குழு' (Finance Commission) ஒன்று நியமிக்கப் படுகின்றது. இந்நாள் வரை ஏழு நிதி ஆணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. ஏழாவது நிதி ஆணைக் குழு 1977ஆம் ஆண்டு ஜூன் மாதம் நீதிபதி ஜெ.எம். ஷிலட் அவர்கள் தலைமை யில் நியமிக்கப்பட்டது.

## தமிழ் நாட்டின் வரவு-செலவுத் திட்டம்

1980-81ஆம் ஆண்டிற்கான தமிழ் நாட்டு அரசின் வரவு-செலவுத் திட்டத்தைப் பட்டியல் 12—3-ல் காணலாம். வருவாய்க்

## பட்டியல் 12—3

தமிழ்நாடு அரசின் 1980 - 81 ஆண்டுக்கான வரவு-செலவு (கோடியில் ரூபாயில்)

| | | | |
|---|---|---|---|
| **I. வருவாய்க் கணக்கு** | | | |
| | வரவு | | செலவு |
| 1. வரிமூலம் கிடைத்த வருவாய் | 809.50 | 1. வரி வசூலிப்புச் செலவு | 18.80 |
| அ. மத்திய அரசு வரிகளில் பங்கு | 276.22 | 2. கடன் பணி (Debt Servicing) | 97.36 |
| ஆ. மாநில அரசின் வரிகள் | 533.28 | 3. பொதுப் பணிகள் | 155.84 |
| 2. வரி அல்லாத இனங்களின்மூலம் கிடைத்த வருவாய் | 104.84 | 4. சமுதாயப் பணிகள் | 402.94 |
| | | 5. பொருளாதாரப் பணிகள் | 265.04 |
| 3. மத்திய அரசிடமிருந்து கிடைத்த உதவி மான்யம் | 68.32 | 6. உதவி மானியம் | 27.79 |
| 4. மொத்த வருவாய் | 982.66 | 7. மொத்தச் செலவு | 967.27 |
| **II. மூலதனக் கணக்கு** | | | |
| 1. கடன்கள் | 278.45 | 1. வருவாய்க் கணக்கிற்குப் புறம்பான மூலதனச் செலவு | 94.21 |
| அ. மத்திய அரசிடமிருந்து | 142.99 | 2. கடன் அடைத்தல் | 167.61 |
| ஆ. பிற வகை | 135.46 | அ. மத்திய அரசுக் கடன் | 42.75 |
| 2. மொத்த மூலதன வரவு | 278.45 | ஆ. இதரக் கடன்கள் | 124.86 |
| 3. பொதுக் கணக்கிலிருந்து வரவு | 44.64 | 3. கடன்கள் (நிகரம்) | 76.33 |
| | | 4. மொத்த மூலதனச் செலவு | 338.15 |
| மொத்த வரவு [I (4)+II (2+3)] | 1305.75 | மொத்தச் செலவு [I (7) + II (4)] | 1305.42 |

ஆதாரம் : தமிழ்நாடு அரசின் வரவு-செலவுத் திட்டம் 1980 - 81

கணக்கு, மூலதனக் கணக்கு இவ்விரண்டையும் ஒன்றாகச் சேர்த்துப் பார்த்தால் அரசுக்கு 1305.75 கோடி ரூபாய் மொத்த வரவாகக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இவ்வாண்டின் மொத்தச் செலவு 1305.42 கோடியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. நிகரத்தில் எதிர்பார்த்த உபரித் தொகை 0.33 கோடியாகும்.

## வரிகள்மூலம் கிடைக்கும் நிதி

வரவு செலவுத் திட்டத்தின்படி 1980 - 81ஆம் ஆண்டில் வரிகள்மூலம் 809.50 கோடி ரூபாய் நிதி கிடைக்குமென்று எதிர் பார்க்கப்பட்டது. இத்தலைப்பின்கீழ் இரண்டு வழிகளில் நிதி கிடைக்கின்றது. அவையாவன : (அ) மத்திய அரசு விதிக்கும் வரிகளிலிருந்து கிடைக்கும் பங்கு, (ஆ) மாநில அரசு விதிக்கும் வரிகள் மூலம் கிடைக்கும் நிதி. இவ்வத்தியாயத்தின் முற்பகுதியில் விளக்கியதைப்போல மத்திய அரசு விதிக்கும் சில வரிகள்மூலம் கிடைக்கும் வருவாயில் ஒவ்வொரு மாநில அரசிற்கும் ஒரு குறிப் பிட்ட பங்கிற்கு உரிமை இருக்கிறது. இவ்வழியில் தமிழக அரசிற்கு 1980 - 81-ல் 276.22 கோடி கிடைக்குமென்று எதிர்பார்க்கப் பட்டது. தமிழ்நாடு அரசும் பல வரிகளை விதிக்கின்றது. விற்பனை வரி, விவசாய வருமான வரி, நில வரி, ஆயத் தீர்வை, மோட்டார் வாகனங்கள்மீது வரி, மின்சாரத்தின்மீது தீர்வை, கேளிக்கை வரி, பந்தய வரி ஆகியவை மாநில அரசு விதிக்கும் வரிகளாகும். ஒவ்வொரு வரியைப்பற்றிய ஒரு சிறு விளக்கத்தைக் கீழே காணலாம். மாநில அரசு விதிக்கும் வரிகள் அனைத்தின் மூலமாகவும் 1980 - 81-ல் மொத்தம் 533.28 கோடி ரூபாய் எதிர் பார்க்கப்பட்டது.

## வரிகள் அல்லாத இனங்கள்மூலம் கிடைக்கும் நிதி

வரிகள் அல்லாத வேறு சில இனங்கள்மூலம் மாநில அரசுக்கு நிதி கிடைக்கின்றது. மாநில அரசு பல்வேறு நிறுவனங்களில் முதலீடு செய்திருக்கின்றது. அம் முதலீட்டிலிருந்து அரசிற்கு இலாபம் கிடைக்கின்றது. தனி நபர்களுக்கும் நிறுவனங்களுக்கும் அரசு கடனுதவி அளித்துவருகின்றது. இக் கடன் தொகைக்கு வட்டித் தொகை கிடைக்கின்றது. அரசு பல தேர்வுகளை நடத்தி தேர்வுக் கட்டணங்களை வசூலிக்கின்றது. அரசு மருத்துவமனை களில் சிகிச்சை பெறுபவர்களில் சிலரிடமிருந்து கட்டணம் வசூலிக் கின்றது. அரசுத் துறைகளுள் சில தாங்கள் உற்பத்தி செய்யும் பண்டங்களை விற்பனை செய்கின்றன. இத்தகைய இனங்களி லிருந்து கிடைக்கும் வருவாயை வரிகள் அல்லாத இனங்கள் மூலம் கிடைக்கும் நிதியாகக் கருதலாம். 1980 - 81-ல் இவ்வழியில் மொத்தம் 104.84 கோடி ரூபாய் எதிர்பார்க்கப்பட்டது.

## உதவி மானியங்கள்

ஒவ்வொரு மாநில அரசும் மத்திய அரசிடமிருந்து ஆண்டு தோறும் உதவி மானியங்களைப் பெற்று வருகின்றது. தமிழ்நாடு அரசு 1980 - 81-ல் 68·32 கோடி ரூபாய் உதவி மானியங்களாக எதிர்பார்த்தது.

மேலே விவரிக்கப்பட்ட (1) வரிகள்மூலம் கிடைக்கும் நிதி, (2) வரிகள் அல்லாத இனங்கள் மூலம் கிடைக்கும் நிதி, (3) உதவி மானியங்கள் ஆகியவை வருவாய்க் கணக்கு வரவு களாகக் கருதப்படுகின்றன. இவைமூலம் 1980 - 81-ல் மொத்தம் 982.66 கோடி ரூபாய் நிதி கிடைக்குமென்று எதிர்பார்க்கப்பட்டது.

## மூலதன வரவுகள்

மூலதன வரவுகளைப்பற்றி இப்பொழுது பார்ப்போம்.

கடன்கள : மாநில அரசும் கடன்களை எழுப்புகின்றது. 1980 - 81-ல் மத்திய அரசிடமிருந்து தமிழ்நாடு அரசிற்கு 142.99 கோடி ரூபாய் கடன் தொகையாகக் கிடைக்குமென்று எதிர் பார்க்கப்பட்டது. ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் போன்ற நிறுவனங்களிடமிருந்தும் தமிழ்நாடு அரசு கடனைப் பெறுகின்றது. 1980 - 81-ல் இவ்வழியில் 135.46 கோடி ரூபாய் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்பட்டது.

பொதுக் கணக்கிலிருந்து வரவு : தமிழ்நாடு அரசு பல பொதுக் கணக்குகளை (Public Accounts) வைத்துப் பராமரித்துவருகின்றது. இவ்வகைக் கணக்குகளில் இருக்கும் பணத்தை அரசு தன்னுடைய உபயோகத்திற்காகப் பயன்படுத்திக்கொள்கின்றது. 1980 - 81ஆம் ஆண்டில் இக்கணக்குகளிலிருந்து 44.64 கோடி ரூபாயை செலவுக்காக அரசு எடுத்துக்கொள்ளும்.

## தமிழ்நாடு அரசின் செலவினங்கள்

தமிழ்நாடு அரசின் வரவினங்கள் யாவை, அவை ஒவ்வொன்றிலிருந்தும் 1980 - 81ஆம் ஆண்டில் எந்த அளவிற்கு நிதி எதிர்பார்க்கப்பட்டது என்று இதுவரை கண்டோம். கிடைக்கும் நிதியைத் தமிழ்நாடு எவ்வழியில் செலவு செய்கின்றது என்பதைப்பற்றி இனி காண்போம்.

பட்டியல் 12—3-ல் வலதுகைப் பக்கம் கொடுக்கப்பட்டிருக்கும் இனங்களைச் சற்றுக் கூர்ந்து கவனித்தால் 1980 - 81-ல் எதிர் பார்க்கப்பட்ட மொத்த வரவான 1305.75 கோடி ரூபாயைத் தமிழ்நாடு அரசு எங்ஙனம் செலவழிக்கப் போகின்றது என்பதற் கான விளக்கம் கிடைக்கும்.

## வருவாய்க் கணக்கு

வரி வசூலிப்புச் செலவு : வரிகளைச் சரிவர வசூலிப்பதற்காக அரசு செலவை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. இவ்வகைச் செலவு 1980 - 81-ல் 18.80 கோடியாக இருக்கும் என்று எதிர் பார்க்கப்பட்டது.

கடன் பணி : அரசு ஒவ்வோர் ஆண்டும் கடனை எழுப்பிக் கொண்டே இருக்கின்றது. கடன் கொடுப்பவர்களுக்கு அரசு வட்டி செலுத்த வேண்டியிருக்கிறது. 1980 - 81-ல் கடன் பணிச் செலவு 97.36 கோடியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

பொதுப் பணிகள்: அரசின்கீழ்ப் பல்வேறு நிர்வாகத் துறைகள் இருக்கின்றன. இத்துறைகளுக்கு ஆகும் மொத்தச் செலவு 1980 - 81-ல் 155.34 கோடி ரூபாய் என்று எதிர்பார்க்கப்பட்டது.

சமுதாயப் பணிகள் : மக்களுடைய நலனைப் பெருக்கும் நோக்கத்துடன் அரசு பெருமளவில் செலவை மேற்கொள்கின்றது. இவ்வகைச் செலவு சமுதாயப் பணிச் செலவாகக் கருதப் படுகின்றது. கல்வி, கலையும் கலாச்சாரமும், மருத்துவ வசதிகள், குடும்ப நல வாழ்வு, பொதுச் சுகாதாரம், குடிநீர் வினியோகம், வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி முதலிய இனங்கள் சமுதாயப் பணிகள் வகையைச் சேரும். இப்பணிகளுக்காக 1980 - 81-ல் தமிழ்நாடு அரசு மொத்தம் 402.94 கோடி ரூபாய் செலவை மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

பொருளாதாரப் பணிகள் : மாநில அளவில் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதில் மாநில அரசு முக்கியப் பங்கு பெறுகின்றது. இதற்காகும் செலவு பொருளாதாரப் பணிகளின் செலவாக வகைசெய்யப்படுகின்றது. விவசாயம், கால்நடை, மீன் வளம், ஆலைத் தொழில், கனிப் பொருள்கள், பாசனம், மின்சார உற்பத்திப் பெருக்கம், போக்குவரத்து ஆகியவை சம்மந்தமான பணிகள் பொருளாதாரப் பணிகளாகக் கருதப்படுகின்றன. 1980 - 81-ல் பொருளாதாரப் பணிகளை நிறைவேற்ற 265.04 கோடி ரூபாய் செலவாகும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

உதவி மானியங்கள் : மாநில அளவில் இயங்கிவரும் பல்வேறு நிறுவனங்களுக்குத் தமிழ்நாடு அரசு உதவி மானியங்களை அளித்து வருகின்றது. கல்வி நிறுவனங்கள், மக்கட் பணி மன்றங்கள், உள்ளாட்சி மன்றங்கள் இவை அரசிடமிருந்து மானியங்கள் பெறுகின்றன. 1980 - 81-ல் தமிழ்நாடு அரசு மொத்தம் 27.79 கோடி ரூபாய் உதவி மானியங்கள் வழங்கும் என்று எதிர்பார்க்கப் பட்டது.

## மூலதனக் கணக்கு

நீர்ப் பாசனத் திட்டங்கள், மின்சாரத் திட்டங்கள் முதலிய வற்றை நிறைவேற்றவும் சாலைகள் அமைக்கவும் அரசு பெரு மளவில் செலவை மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது என்று இவ்வத்தியாயத்தின் தொடக்கத்திலேயே குறிப்பிட்டோம். இத்தகைய செலவைச் செய்வதன்மூலம் நிலையான சொத்துகள் (Assets) உருவாகின்றன. இவ்வாறு சொத்தை உருவாக்கும் செலவு மூலதனச் செலவு என்றழைக்கப்படுகின்றது. 1980 - 81-ல் மொத்த மூலதனச் செலவு ரூ 94.21 கோடி அளவில் இருக்குமென்று எதிர்பார்க்கப்பட்டது.

கடன் அடைத்தல் : கடந்த காலத்தில் அரசு மேற்கொண்ட கடன்களில் சிலவற்றை நடப்பு ஆண்டில் திருப்பிச் செலுத்த வேண்டியிருக்கும். 1980 - 81-ல் தமிழ்நாடு அரசு ரூ. 167.61 கோடி கடன் தொகையைத் திருப்பிச் செலுத்த வேண்டியிருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

கடன்கள் : உள்ளாட்சி மன்றங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற நிறுவனங்களுக்கு மாநில அரசு ஒவ்வோர் ஆண்டும் கடன் உதவி அளித்துவருகின்றது. 1980 - 81-ல் தமிழ்நாடு அரசு மொத்தம் 76.33 கோடியைக் கடனாக அளிக்கும் என்று எதிர் பார்க்கப்பட்டது.

## தமிழ்நாடு அரசால் விதிக்கப்படும் வரிகள்

விவசாய வருமான வரி : விவசாய வருமான வரி, முதன்முறை யாக 1955ஆம் ஆண்டில் அமலுக்கு வந்தது. ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் நிலம் வைத்திருப்பவர்கள்மீது விவசாய வருமான வரி விதிக்கப்படுகின்றது. 10 ஸ்டாண்டார்டு ஏக்கர் அளவிற்குக் கீழ் நிலம் வைத்திருப்பவர்களுக்கும் விவசாயத்திலிருந்து ரூ. 5000-க்குக் குறைவாக நிகர வருமானம் பெறுபவர்களுக்கும் விலக்கு அளிக்கப்படுகின்றது. விவசாய வருமானம் உயர உயர வரி விகிதமும் உயர்ந்துகொண்டே போகின்றது. உதாரணமாக, ஒருவருடைய விவசாய வருமானம் ரூ. 5000-க்கும் ரூ. 10,000-க்கும் இடையில் இருந்தால் அவர் 15 சதவிகித வருமான வரி செலுத்த வேண்டும். வருமானம் ரூ. 10,000-க்கும், ரூ. 15,000-க்கும் இடையில் இருந்தால் வரிவிகிதம் 20 சதவிகிதமாகிவிடுகின்றது. உயர்ந்த கட்டணம் 55 சதவிகிதமாகும். விவசாயத்திலிருந்து ஆண்டொன்றுக்கு ரூ. 50,000-க்கு மேல் வருமானம் பெறுபவர்கள் இக்கட்டணத்தில் வரி செலுத்தவேண்டும். 1979 - 80-ல் இவ்வரி மூலம் அரசுக்கு 6.48 கோடி ரூபாய் வருவாய் கிடைத்தது.

**நிலவரி :** நிலவரி மிகப்பழமையான ஒரு வரியாகும். இன்று நடைமுறையில் இருக்கும் நிலவரி முறை பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவில் வழக்கத்திற்கு வந்தது. நில உடமையாளர் தன்னுடைய நிலத்திலிருந்து கிடைக்கும் நிகர வருமானத்தில் ஒரு பங்கை அரசுக்குச் செலுத்த வேண்டும் என்னும் தத்துவ அடிப்படையில் நில வரி விதிக்கப்படுகின்றது. நிலவரியின் அளவு மண் வளத்திற்கு ஏற்றாற்போலவும், அந் நிலத்திற்கு இருக்கும் நீர்ப்பாசன வசதிக்கு ஏற்றாற்போலவும் அமைகின்றது. மண் வளமும் பாசன வசதியும் இடத்திற்கு இடம் மாறுபட்டிருப்பதால் நிலவரியின் அளவும் மாவட்டத்திற்கு மாவட்டம் மாறுபடுகின்றது. ஒரே மாவட்டத்தினுள் பல இடங்களில் பல்வேறு கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. கட்டணம் ஏக்கர் ஒன்றுக்கு 19 பைசாவிலிருந்து ரூ. 16.62 வரை இருக்கிறது. இவ்வாறு அடிப்படை நிலவரி மிகக் குறைந்த அளவில் இருந்தாலும் அரசு பல புதிய தீர்வைகளை விதித்திருக்கிறது. உள்ளாட்சி செஸ், செஸ் மேல் வரி, தண்ணீர்த் தீர்வை, மேம்பாட்டு வரி என்று பல தீர்வைகளை அரசு விதித்திருக்கிறது.

சிறு விவசாயிகளுக்கு அரசு பல சலுகைகளை அளித்திருக்கிறது. புன்செய் நிலம் முழுவதும் அடிப்படை நிலவரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. நன்செய் நிலத்தில்கூட 5 ஏக்கருக்குக் குறைவாக நிலம் படைத்தவர்களுக்கு இத்தகைய விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. 1979 - 80ஆம் ஆண்டில் இவ்வரி மூலம் 4.74 கோடி ரூபாய் வருவாய் கிடைத்தது.

**நகர்ப்புற நில வரி :** நகர்ப்புற நில வரி முதன்முறையாக 1963ஆம் ஆண்டில் அமலுக்கு வந்தது. தொடக்கத்தில் இவ் வரி சென்னை மாநகரத்தில்மட்டுமே செயலுக்குவந்தது. சில ஆண்டுகளுக்குப் பிறகு சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை முதலிய நகரங்களுக்கும் இவ்வரி விஸ்தரிக்கப்பட்டது. நகர எல்லைக்குள் இருக்கும் நிலத்தின் மதிப்பின்மீது இவ்வரி விதிக்கப்படுகிறது. இரண்டு கிரௌண்டு நில அளவிற்குக் குறைவாக உள்ள நிலங்களுக்கு முற்றிலும் விலக்கு அளிக்கப்படுகின்றது. 2 கிரௌண்டுக்கும் 5 கிரௌண்டுக்கும் இடையில் நிலங்களின் மீது அவற்றின் மதிப்பில் 0.7 சதவிகிதம் வரியாக விதிக்கப்படுகின்றது. 5 கிரௌண்டுக்கும் 10 கிரௌண்டுக்கும் இடையில் உள்ள நிலங்கள் 1 சதவிகித வரி செலுத்தவேண்டும். மிக உயர்ந்த கட்டணமாகிய 2 சதவிகிதம் 20 கிரௌண்டுக்கு மேலாக உள்ள நிலங்கள் மீது விதிக்கப்படுகின்றது. 1979 - 80ஆம் ஆண்டில் இவ்வரியின் மூலம் மொத்தம் 3.2 கோடி ரூபாய் வருவாய் கிடைத்தது.

## பத்திரங்கள்மீது பதிவுக் கட்டணம்

பத்திரங்களைப் பதிவுத் துறையில் பதிவுசெய்துகொள்ளும் போது பதிவுக் கட்டணம் வசூலிக்கப்படுகின்றது. பத்திரங்களில் குறிக்கப்பட்டிருக்கும் தொகையின் அளவிற்கு ஏற்றாற்போலப் பதிவுக் கட்டணம் வசூலிக்கப்படுகின்றது. பதிவுக் கட்டணத்தின் மூலம் 1979 - 80-ல் மொத்தம் 32.20 கோடி ரூபாய் வசூலாயிற்று.

மாநில அரசின் ஆயத் தீர்வை : மதுபான வகைகள், மயக்கப் பொருள்கள் இவற்றின்மீது ஆயத் தீர்வை விதிப்பதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

விற்பனை வரி: மாநில அரசு விதிக்கும் வரிகளுள் விற்பனை வரி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். விற்பனை வரிமூலமாக அரசுக்கு அதிக அளவில் வருவாய் கிடைத்துவருகின்றது. வரிகள் மூலம் கிடைக்கும் மொத்த வருவாயில் 50 சதவிகிதம் விற்பனை வரி மூலமாகக் கிடைக்கின்றது. விற்பனை வரி முதன்முறையாக 1939-ல் நடைமுறைக்கு வந்தது. 1937ஆம் ஆண்டில் நம் மாநிலத்தின் சில மாவட்டங்களில் மதுவிலக்கு அமலுக்குக் கொண்டு வரப்பட்டது. மதுவிலக்கின் காரணமாக ஏற்பட்ட நிதி இழப்புக்கு ஈடு செய்வதற்காக விற்பனை வரி கொண்டுவரப்பட்டது.

இன்று நடைமுறையில் இருக்கும் விற்பனை வரித்திட்டம் ஒரு முனை வரி விதிப்பு, பல் முனை வரி விதிப்பு இரண்டையும் சேர்த்த ஒன்றாக இருக்கின்றது. ஒரு முனை வரி மாநிலத்தில் முதன்முறை யாக நடக்கும் விற்பனையின்மீது விதிக்கப்படுகின்றது. பல்முனை வரி ஒரு பண்டம் ஒவ்வொரு முறை விற்பனையாகும்போதும் விதிக்கபபடுகின்றது. நான்கு சதவிகிதப் பல்முனை வரி விதிப்பு இன்று நடைமுறையில் இருக்கின்றது. ஆனால், ஒரு முனை வரி விகிதம் பண்டத்திற்குப் பண்டம் மாறுபடுகின்றது. இது 1 சதவிகிதம் முதல் 30 சதவிகிதம் வரை விதிக்கப்படுகின்றது. ஆனால், பெரும்பான்மையான பண்டங்களின்மீது 8-லிருந்து 12 சதவிகித வரி விதிக்கப்படுகின்றது. உணவு தானியங்கள் போன்ற வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்களுக்கும், காய்கறிகள் பழங்கள் போன்ற அழுகிப்போகக்கூடிய பொருள்களுக்கும் விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது. இதேபோன்று சிறு வியாபாரிகளுக்கும் விலக்கு அளிக்கப்பட்டிருக் கிறது 1979 - 80-ல் விற்பனை வரி மூலம் அரசுக்கு 291.20 கோடி ரூபாய் நிதி கிடைத்தது.

**மோட்டார் வாகன வரி : மோட்டார் வாகன வரி 1931-லிருந்து நடைமுறையில் இருந்துவருகின்றது. நெடு நாள்களுக்கு முன்**

பாகவே மோட்டார் வாகனங்கள்மீது வரி விதிக்கும் முறையை அமலுக்குக் கொண்டுவந்த மாநிலங்களுள் தமிழ்நாடும் ஒன்றாகும். மதிப்பின்மீது விதிக்கப்படும் வரி (Advolerum Tax), எண்ணிக்கை மீது விதிக்கப்படும் வரி (Specific Tax) என்று இருவகை வரி விதிப்புகள் இருக்கின்றன. விற்பனை வரி முன்வகையைச் சேர்ந்தது. மோட்டார் வாகன வரி இரண்டாம் வகையைச் சேர்ந்ததாகும். மோட்டார் வாகனங்களின் தன்மைக்குத் தக்கவாறு வரி விகிதம் மாறுதலடைகின்றது. எடை தாங்கும் சக்தி (Laden weight), குதிரை வேகம் (Horse power), அமர்வதற்கு வசதி (Seating capacity) இவற்றின் அடிப்படையில் மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர், லாரிகள், கார்கள், பயணி வண்டிகள் இவற்றை வகைபடுத்தி ஒவ்வொரு வகையின்மீதும் ஒரு விகித வரி விதிக்கப்படுகின்றது. வருவாய் ஈட்டித் தருவதில் மோட்டார் வாகன வரியும் ஒரு முக்கிய இனமாக இருந்துவருகின்றது. 1979 - 80-ல் இவ்வரியின் மூலம் அரசுக்கு 57 கோடி ரூபாய் கிடைத்தது.

**மின்சாரத் தீர்வை:** வீடுகளுக்கும், விவசாயத்திற்கும், ஆலைத் தொழில்களுக்கும் மின்சாரத்தை அளிப்பதற்கு மின்சார வாரியம் மின்சாரக் கட்டணத்தை வசூலிக்கின்றது. இவ்வாறு அளிக்கப்படும் மின்சாரத்தின்மீது அரசு ஒரு தீர்வையை விதிக்கின்றது. 1979-80-ல் இத் தீர்வையின்மூலம் அரசுக்கு 4.31 கோடி ரூபாய் கிடைத்தது.

**கேளிக்கை வரி :** நம் மாநிலத்தில் கேளிக்கை வரி முதன் முதலாக 1926ஆம் ஆண்டில் விதிக்கப்பட்டது. உள்ளாட்சி மன்றங்களுக்கு இது ஒரு வருவாய் மூலமாக இருக்கும் என்னும் நோக்கத்துடன் இவ்வரி முதலில் அமலுக்குக் கொண்டுவரப்பட்டது. ஆனால், 1939ஆம் ஆண்டிலிருந்து கேளிக்கை வரி விதிக்கும் உரிமையை மாநில அரசு எடுத்துக்கொண்டது. சினிமாக் காட்சிகள், குதிரைப் பந்தயம் ஆகிய இரு கேளிக்கைகள் மீதும் வரி விதிக்கப்படுகின்றது. நாடகம், சர்க்கஸ், விளையாட்டுப் போட்டி போன்ற பிற கேளிக்கைகளுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது. வருவாயைப் பொறுத்த அளவில் கேளிக்கை வரியும் ஒரு முக்கிய வரியாக இருந்துவருகின்றது. 1979 - 80-ல் இவ்வரியின் மூலம் அரசுக்கும் 23.25 கோடி ரூபாய் கிடைத்தது.

**பந்தய வரி :** பந்தய வரி 1935ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது. சென்னை, உதக மண்டலம் இவ்விரு இடங்களில் நடக்கும் குதிரைப் பந்தயங்களில் மட்டும் இவ்வரி விதிக்கப்படுகின்றது. 1979 - 80ஆம் ஆண்டில் இவ்வரியின்மூலம் அரசுக்கு 3 கோடி ரூபாய் வருவாய் கிடைத்தது.

# 13. அரசுத் துறை நிறுவனங்கள்

## (Public Sector Undertakings)

நம்முடைய பொருளாதார அமைப்பில் இன்று அரசுத்துறை நிறுவனங்கள் பெரும் பங்கேற்று வருகின்றன. நாடு விடுதலை அடைவதற்கு முன்னர், அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்கும் நேரிடை நிருவாகத்திற்கும் உட்பட்டிருந்த நிறுவனங்கள் எண்ணிக்கையில் அதிக அளவில் இல்லை. இருப்புப் பாதை நிறுவனங்கள் (Railways), தபால் - தந்தி இலாக்கா, துறைமுகப் பொறுப்பாட்சிக் குழு (Port Trust), போர்த் தளவாடங்களை உற்பத்திசெய்யும் தொழிற்கூடங்கள் இவைமட்டுமே அரசின் நேரிடை நிருவாகத்தின்கீழிருந்தன. பண்ட உற்பத்தியிலும், வணிகத்திலும் ஈடுபட்டிருந்த நிறுவனங்கள் அனைத்தும் அக்காலத்தில் தனியார் வசம்தான் இருந்தன. ஆனால், இந்நிலை நாட்டு விடுதலையைத் தொடர்ந்து மாற்றமடைந்தது. பொருளாதாரத் திட்டங்கள் நாட்டில் செயல்படத் தொடங்கியதிலிருந்து அரசுத் துறை நிறுவனங்களின் முக்கியத்துவம் உணரப்பட்டது. நாட்டில் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் பணியில் அரசுத்துறை நிறுவனங்கள் முக்கியப் பங்கேற்க வேண்டும். அவை மேலும் விரிவாக்கப்பட வேண்டும் என்னும் கருத்து காலப்போக்கில் வலுப்படத் தொடங்கியது. இதன் விளைவாக அந்நாள் வரை தனியார் துறையின்கீழ் இயங்கிவந்த பல தொழில்கள் தேசியமயமாக்கப்பட்டன. மேலும் பல புதிய தொழிற்சாலைகளும் அரசின் நேரிடைப் பார்வையின்கீழ் தொடங்கப்பெற்றன. இவ்வாறு அரசுத்துறை நிறுவனங்கள் விரைவில் வளர்ச்சியடையத் தொடங்கின. முதல் ஐந்தாண்டுத் திட்டம் செயல்படத் தொடங்கிய ஆண்டில் மொத்தம் ஐந்து நிறுவனங்கள் மட்டுமே மத்திய அரசின்கீழ் இருந்தன. இவ்வைந்து நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த மொத்த மூலதனம் 29 கோடி ரூபாயாகும். ஆனால், நிறுவனங்களின் எண்ணிக்கையும், நிறுவனங்களின் மூலதன அளவும் பிந்தைய ஆண்டுகளில் தொடர்ந்து வளர்ச்சியுற்று வந்தன. 1977 - 78ஆம் ஆண்டில் மத்திய அரசின்கீழ் மொத்தம் 153 நிறுவனங்கள் செயல்பட்டு வந்தன. இவற்றில், முதலீடு செய்யப்பட்டிருந்த மொத்த மூலதன

அளவு 12,851 கோடி ரூபாயாகும். கீழ்க்காணும் பட்டியல் 13—1 அரசுத்துறை நிறுவனங்களின் வளர்ச்சியை விளக்கிக் காட்டுகின்றது.

## பட்டியல் 13—1

| காலம் | நிறுவனங்களின் எண்ணிக்கை | மொத்த முதலீட்டளவு (கோடி ரூபாயில்) |
|---|---|---|
| முதல் திட்டத்தின் தொடக்க காலத்தில் | 5 | 29 |
| இரண்டாம் திட்டத்தின் தொடக்க காலத்தில் | 21 | 81 |
| மூன்றாம் திட்டத்தின் தொடக்க காலத்தில் | 48 | 953 |
| நான்காம் திட்டத்தின் தொடக்க காலத்தில் | 85 | 3502 |
| 1973—74ஆம் ஆண்டில் | 122 | 6237 |
| 1974—75 ,, | 129 | 7261 |
| 1975—76 ,, | 129 | 8973 |
| 1976—77 ,, | 145 | 11097 |
| 1977—78 ,, | 153 | 12851 |

பட்டியல் 13—1-ல் கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் எவற்றைக் குறிக்கின்றன என்பதை இங்கு தெளிவுபடுத்த வேண்டும். இருப்புப் பாதை நிறுவனங்கள், தபால் தந்தி இலாக்கா இவற்றில் அரசு செய்திருக்கும் முதலீடுகள் இப்புள்ளி விவரங்களில் அடங்கவில்லை. இவைபோன்ற நடவடிக்கைகளை அரசின் நிருவாகத் துறைகள் நேரிடையாக மேற்கொள்கின்றன. இருப்புப் பாதை நிறுவனம் (இரயில்வே) சம்பந்தமான நடவடிக்கைகளைக் கவனிப்பதற்குத் தனியாக ஒரு துறை இயங்கி வருகின்றது. இதைப்போன்றே தபால் - தந்தி இலாக்காவும் பிற இலாக்காக்களும் மாநில அரசுகள் நடத்தி வரும் நிறுவனங்களும் இப்புள்ளிவிவரங்களில் அடங்கவில்லை. நாட்டுடைமையாக்கப்பட்டுள்ள வணிக வங்கிகளும் இப்புள்ளி விவரங்களில் அடங்கவில்லை. இவ்வினங்கள் அனைத்தையும் சேர்த்துப் பார்த்தால் நம் நாட்டில் அரசுத்துறை நிறுவனங்களின் எண்ணிக்கையும்,

அவற்றின் மீது முதலீடு செய்யப்பட்டுள்ள தொகையும் பட்டியல் 13—1-ல் கொடுக்கப்பட்டுள்ளதைவிட மிக அதிகமாக இருக்கும்.

அரசுத் துறை நிறுவனங்கள் இன்று சில குறிப்பிட்ட பிரிவுகளில் மட்டுமே இயங்கி வருகின்றன என்று கருதிவிடக் கூடாது. அரசுத் துறை தலையிடாத நடவடிக்கைகளே இல்லை என்று கூறும் அளவிற்கு இன்று அரசுத் துறை நிறுவனங்கள் பல்வேறு பிரிவுகளிலும் செயல்பட்டு வருகின்றன. இரும்பு, எஃகு, நிலக்கரி, செம்பு, துத்தநாகம், கனரக இயந்திரங்கள், போக்கு வரத்துச் சாதனங்கள், இரசாயனப் பொருள்கள், இரசாயன உரங்கள், துணி வகைகள், கைக் கடிகாரங்கள், ரொட்டி போன்ற பல்வகைப் பண்டங்களின் உற்பத்தியிலும் அரசுத் துறை நிறுவனங்கள் இன்று செயல்பட்டுவருகின்றன.

இந்தியாவில் இயங்கிவரும் பொருளாதார அமைப்பு முறை ஒரு கலப்புப் பொருளாதார முறை (Mixed Economy) ஆகும். கலப்புப் பொருளாதார முறையில் தனியார் துறையும் அரசுத் துறையும் ஒன்றோடொன்று இணைந்த முறையில் செயல் படுகின்றன. முதலாளித்துவ நாடுகளிலும், பொது உடைமை நாடுகளிலும் இதற்கு நேர்மாறான முறையைக் காண்கின்றோம். முதலாளித்துவ நாடுகளில் அனைத்துப் பொருளாதார நடவடிக்கை களையும் தனியார் துறைகளே மேற்கொண்டு வருகின்றன. பொது உடைமை நாடுகளை எடுத்துக்கொண்டால் அவற்றில் தனியார் துறைக்கு வாய்ப்பே அளிக்கப்படுவதில்லை. எல்லா நடவடிக்கைகளையும் அரசுத் துறையே நேரிடையாக மேற் கொண்டுவருகின்றது.

சில குறிப்பிட்ட பண்டங்களின் உற்பத்தி முழுமையும் அரசுத் துறை வசமே இருக்கின்றது. செம்பு, ஈயம், நிலக்கரி, பெட்ரோலியப் பண்டங்கள், தொலைபேசிகள், கப்பல் கட்டுதல், இரயில் என்ஜின்கள், இரயில் பெட்டிகள், நிழற்படச் சுருள்கள் இப்பண்டங்களின் உற்பத்தி முழுவதும் அரசுத் துறையின்கீழ் இருக்கின்றது. சில பண்டங்களின் உற்பத்தியில் அரசுத் துறையின் பங்கு சற்றுக் குறைவாக இருக்கின்றது. உதாரணமாக, இரசாயன உரங்களின் உற்பத்தியில் 45 சதவிகித அளவு அரசுத் துறைவசம் இருக்கின்றது. இரயில் சரக்குப் பெட்டிகள் உற்பத்தியில் 46 சதவிகிதம் அரசுத் துறையிடம் இருக்கின்றது. நுகர்வுப் பண்டங்களைப் பொறுத்த அளவில் அரசுத் துறையின் பங்கு அதிகமாக இல்லை. வேளாண்மை, சிறு தொழில்கள் இவற்றில் அரசுத் துறை நேரிடை நிருவாகத்தை இதுகாறும் மேற்கொள்ள வில்லை.

## அரசுத் துறையின் வளர்ச்சிக்கான காரணங்கள்

அண்மைக் காலத்தில் நாட்டில் அரசுத் துறை நன்றாக வளர்ச்சியடைந்திருக்கிறது என்று கண்டோம். இத்தகைய வளர்ச்சிக்கான காரணங்கள் யாவை?

(1) அடிப்படைத் தேவையான தொழில்களின் வளர்ச்சி: நாட்டில் தொழில் முன்னேற்றத்தை உண்டாக்குவதற்கு போக்குவரத்து, மின் உற்பத்திப் பெருக்கம் போன்ற துறைகளை வளர்க்க வேண்டியிருக்கின்றது. மேலும் அடிப்படைத் தொழில்கள் முக்கியத் தொழில்கள் சிலவற்றையும் வளர்க்க வேண்டியிருக்கின்றது. ஆனால், இத்தகைய தொழில்களை அரசுத் துறை தான் மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது. இத்தொழில்களைத் தொடங்க மூலதனம் மிக அதிக அளவில் தேவைப்படுகின்றது. இந்த அளவிற்கு முதலீடு செய்யத் தனியார் எவரும் சாதாரணமாக முன்வரமாட்டார்கள். மேலும் இத்தொழில்களில் கருக்காலம் (Gestation period) மிக அதிகமாக இருக்கின்றது. அதாவது முதலீடு செய்து நீண்டகால இடைவெளிக்குப் பிறகுதான் பண்டங்கள் உற்பத்தியாகி வெளிவருகின்றன. பெருத்த மூல தனத்தை முதலீடு செய்துவிட்டு இலாபத்தை எட்டுவதற்கு நீண்ட காலம் காத்திருக்கத் தனியார் விரும்பமாட்டார்கள். இத்தகைய தொழில்களில் முதலீடு செய்வதன் மூலம் அதிக அளவில் இலாபமும் ஈட்டமுடிவதில்லை. எனவே, நாட்டின் பொது நலனைக் கருத்திற்கொண்டு இத்தகைய தொழில்களை அரசே மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது.

(2) சோஷலிச சமுதாயம் அமைப்பதில் அரசுத் துறை நிறுவனங்கள் உதவுகின்றன: நாட்டில் சோஷலிச சமுதாயத்தை அமைக்கும் பணியில் நாம் முனைப்பாக ஈடுபட்டிருக்கின்றோம். இக்குறிக்கோள் கைகூட வேண்டுமெனில் அரசுத் துறையை விரிவாக்கவேண்டியது அவசியமாகின்றது. சோஷலிசக் கொள்கையின் அடிப்படைக் கருத்து என்ன? ஒருசிலர் மட்டும் செல்வத்தில் செழித்திருக்கப் பெரும்பான்மையான மக்கள் வறுமையில் வாடும் நிலையை மாற்றியமைத்து, பொருளாதார நிலையில் அதிக ஏற்றத்தாழ்வுகள் இல்லாத ஒரு சமூக அமைப்பை உருவாக்க வேண்டும் என்பதுதான் சோஷலிசக் கொள்கையின் முக்கிய நோக்கமாகும். மக்களிடையே காணக்கிடைக்கும் பொருளாதார வேறுபாடுகளை ஓரளவிற்கு வரி விதிப்பின்மூலம் குறைக்கலாம். செல்வந்தர்கள்மீது அதிக வரிகளை விதித்து அதன் மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டு ஏழ்மை நிலையில் உள்ளவர்

களின் நலனைப் பெருக்கும் பணியை மேற்கொள்வதன் வாயிலாகப் பொருளாதார வேறுபாடுகளை ஓரளவிற்குக் களையலாம். இதே போன்று பொருளாதார வேறுபாடுகளைக் குறைப்பதற்காக அரசுத் துறை நிறுவனங்களையும் பயன்படுத்தலாம். தனியார் நிறுவனங் கள் ஈட்டும் இலாபங்கள் தனி நபர்களைச் சென்றடைகின்றன. அரசுத் துறை நிறுவனங்கள் ஈட்டக்கூடிய இலாபம் அரசுக்குப் போய்ச் சேருகின்றது.

(3) பொருளாதாரத் திட்டங்களைச் செயல்படுத்த அரசுத் துறை நிறுவனங்கள் உதவுகின்றன : பொருளாதாரத் திட்டத்தை வகுக்கும்பொழுது பல இனங்களுக்கும் திட்டங்கள் வரைய வேண்டி யிருக்கின்றது. அவற்றுள் முக்கியம் வாய்ந்த ஒன்று உற்பத்தி சம்பந்தப்பட்டதாகும். நாட்டில் எத்தகைய பண்டங்களை உற்பத்தி செய்யவேண்டும்? அவற்றை எந்த அளவில் உற்பத்தி செய்ய வேண்டும்? எக்கால கட்டத்தில் உற்பத்தி செய்ய வேண்டும்? என்பன போன்ற வினாக்களுக்கு உற்பத்தித் திட்டம் வரையும் பொழுது சரியாக விடைகாண வேண்டியிருக்கின்றது. உற்பத்தி இனங்கள், உற்பத்தி அளவு, உற்பத்திக் காலம் இவற்றை அரசுத் துறை நிறுவனங்களைப் பொறுத்த அளவில் சற்று எளிதாகக் கட்டுப்படுத்தலாம். ஆனால், தனியார் நிறுவனங்களைப் பொறுத்த அளவில் இது அவ்வளவு எளிதான செயலன்று. தனியார் துறையில் ஆயிரக்கணக்கான உற்பத்தியாளர்கள் செயல்பட்டுவருகின்றனர். இவர்கள் அனைவருக்கும் இலாபம் ஈட்டுவதே முக்கியக் குறிக்கோளாகும். நாட்டு நலனைக் கருத்திற்கொண்டு இவர்கள் பண்ட உற்பத்தியை மேற்கொள்வார்கள் என்று எதிர்பார்ப்பது சரியன்று.

(4) நாட்டில் வெவ்வேறு பகுதிகளில் காணும் ஏற்றத்தாழ்வு களைக் குறைக்க அரசுத் துறை நிறுவனங்கள் உதவுகின்றன : பொருளாதார முன்னேற்றம் நாட்டில் எல்லாப் பகுதிகளும் பயன் பெறும் வகையில் இருத்தல் வேண்டும். அப்படி இல்லாவிடில் நாட்டின் ஒருசில பகுதிகள் நன்றாக செழிப்புற்றிருக்க பிற பகுதிகள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கநேரிடும். நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளை அகற்ற அரசுத் துறை நிறுவனங்கள் பயன்படுகின்றன. தென் ஆர்க்காடு மாவட்டத்தில் இயங்கிவரும் அரசுத் துறையைச் சார்ந்த நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தை இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகக் கூறலாம். இத்திட்டம் செயலுக்கு வந்ததன் காரணமாக அப்பகுதிக்கும் அப்பகுதியில் வாழும் மக்களுக்கும் பல நன்மைகள் கிடைத்திருக்கின்றன. மிகவும் பிற்பட்ட நிலையில்

இருந்த அப்பகுதி இன்று செழிப்புற்று இருக்கின்றது. நெய்வேலி நிலக்கரித் திட்டத்தைப் போன்ற ஒரு திட்டத்தில் பெருத்த முதலீட்டை மேற்கொள்வதற்குத் தனியார் எவரும் முன்வருவார் கள் என்று எதிர்பார்க்கமுடியாது.

## அரசுத் துறை நிறுவனங்களின் செயல்திறன்

அரசுத் துறை நிறுவனங்கள் தொழிலோ அல்லது நடவடிக்கையோ இன்றி நாட்டில் இல்லை என்று கூறும் அளவிற்கு அவை இன்று பரந்து வளர்ந்திருக்கின்றன. இரும்பு எஃகு உற்பத்தி முதற்கொண்டு ரொட்டி தயாரித்தல், உணவு விடுதிகளை (Hotels) நடத்துதல் வரை எல்லா நடவடிக்கைகளையும் இன்று அரசுத் துறை நிறுவனங்கள் மேற்கொண்டு வருகின்றன. கடந்த முப்பதாண்டு காலத்தில் நாடு விரைவான தொழில் முன்னேற் றத்தைக் கண்டிருக்கின்றது. இத்தொழில் முன்னேற்றத்தில் அரசுத் துறை நிறுவனங்களின் பங்கும் அதிகமாக இருந்திருக் கின்றது. நாட்டில் தொழில் வளர்ச்சிக்கான அடித்தளத்தை அமைப்பதிலும் அரசுத் துறை நிறுவனங்கள் பேருதவியாக இருந்திருக்கின்றன.

ஏற்றுமதியைப் பெருக்குவதிலும் அரசுத் துறை நிறுவனங்கள் நல்ல பணியாற்றி வருகின்றன. அரசின் வணிக நிறுவனம் (State Trading Corporation), கனிப் பொருள் மற்றும் உலோக வணிக நிறுவனம் (Minerals and Metals Trading Corporation) இவை இரண்டும் சிறப்பான வகையில் பணியாற்றி வருகின்றன. உலகின் பல்வேறு நாடுகளிலும், குறிப்பாகக் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் நம்முடைய ஏற்றுமதிப் பண்டங்களை அறிமுகப் படுத்துவதில் இவ்விரு நிறுவனங்களும் பெரும் பங்கேற்று வருகின்றன. கைவினைப் பண்டங்கள், பொறியியல் கருவிகள் போன்ற பண்டங்களின் ஏற்றுமதியில் அண்மை ஆண்டுகளில் நல்ல வளர்ச்சி இருந்திருக்கின்றது.

அரசுத் துறை நிறுவனங்கள் கணிசமான அளவில் அந்நியச் செலாவணியையும் ஈட்டித் தருகின்றன. 1965-66ஆம் ஆண்டில் அரசுத் துறை நிறுவனங்கள் மொத்தம் 35 கோடி ரூபாய் அந்நியச் செலாவணியைத்தான் ஈட்டின. ஆனால், அதற்குப் பிறகு அந்நியச் செலாவணி வரவு ஆண்டாண்டிற்குப் பெருகி 1976-77-ல் 2,246 கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்திருந்தது. இதிலிருந்து அரசுத் துறை நிறுவனங்கள் ஏற்றுமதியில் நல்ல வெற்றி கண்டிருக் கின்றன என்பது தெளிவாகின்றது.

இறக்குமதியாகிவந்த பண்டங்களை உள் நாட்டிலேயே உற்பத்தி செய்து அதன் மூலம் நாட்டின் இறக்குமதிகளைக் குறைக்கும் பணியிலும் அரசுத் துறை நிறுவனங்கள் நல்ல பணியாற்றி வருகின்றன. மருந்து வகைகளை உற்பத்தி செய்வதற்காக மத்திய அரசு இரண்டு நிறுவனங்களை அமைத்திருக்கின்றது. நாட்டில் இறக்குமதியாகி வந்த பலவகை மருந்துகளை இவ்விரு நிறுவனங்களும் உற்பத்தி செய்யத் தொடங்கியதன் வாயிலாகக் கணிசமான அளவிற்கு அந்நியச் செலாவணி சேமிக்கமுடிந்தது. இதே போன்று 'எண்ணெய் மற்றும் இயற்கை வாயுக் கமிஷன்' (Oil and Natural Gas Commission), 'இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன்' ஆகிய இரண்டு நிறுவனங்களும் அயல்நாடுகளிலிருந்து எரிபொருள்கள் இறக்குமதியாவதைப் பெருமளவிற்குக் குறைந்திருக்கின்றன.

இவ்வாறு அரசுத் துறை நிறுவனங்கள் பல துறைகளிலும் சிறப்பான முறையில் செயல்பட்டுவந்தாலும்கூட வருவாய் ஈட்டித் தருவதில் அவற்றின் செயல்திறன் பாராட்டக்கூடிய வகையில் இல்லை. நிகர இலாபத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு அரசுத் துறை நிறுவனங்களை எடைபோடுவது அவ்வளவு பொருத்தமான செயலன்று. ஏனெனில், இந்நிறுவனங்களின் முக்கிய நோக்கம் இலாபம் ஈட்டுவது மட்டுமன்று. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் தொழில் முன்னேற்றத்திற்கும் தேவையான சில பணிகளை மேற்கொள்ளவேண்டும் என்னும் பொது நோக்கத்துடன்தான் இவை நிறுவப்பட்டுள்ளன. இருந்தாலும், இலாபம் ஈட்டும் குறிக்கோளை முற்றிலும் புறக்கணிக்கவும் கூடாது. தனியார் துறையில் இருக்கும் நிறுவனங்கள் ஈட்டும் அளவிற்கு உயர்ந்த இலாபத்தை இந்நிறுவனங்களும் ஈட்டித் தரவேண்டுமென்பதில்லை. அரசுத் துறை நிறுவனங்களில் பலவும் ஆண்டுதோறும் நட்டத்திலேயே செயல்பட்டு வந்தால், அதனை ஒரு நல்ல அறிகுறியாகக் கருத இயலாது. எல்லா அரசுத் துறை நிறுவனங்களை ஒன்றாகச் சேர்த்துப் பார்த்தால் 1977-78ஆம் ஆண்டில் மொத்த முதலீட்டுத் தொகையில் 1 சதவிகித் இலாபம் தான் கிடைத்தது. இந்த இலாப அளவு மிகக் குறைவானது என்பது தெளிவாகின்றது. இன்னும் விரித்துக் கூறினால் இதற்கு முந்தைய ஆண்டுகளில் கிடைத்த இலாபம் இதைவிடக் குறைவாக இருந்தது. அரசுத் துறை நிறுவனங்களில் இந்நாள் வரை பல்லாயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டிருக்கின்றது. இந்நிறுவனங்களால் ஒரு கணிசமான அளவிற்கு இலாபம் ஈட்டித் தர முடிந்தால் மத்திய அரசிற்கு ஒவ்வோர் ஆண்டும் பெருமளவிற்கு நிதி வருவாய் கிடைக்கக்கூடும்.

## தமிழ் நாட்டில் அரசுத் துறை நிறுவனங்கள்

தமிழ் நாடு அரசும் மாநில அளவில் பல நிறுவனங்களை அமைந்திருக்கின்றது. இன்று 42 நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. பொதுப்படையான சில நோக்கங்கள் கைகூடு வதற்காக இந்நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. விவசாயம், விவசாயத்தைச் சார்ந்த நடவடிக்கைகள், தொழில் போக்கு வரத்து, வீட்டுவசதி போன்ற பல்வேறு வகையான நடவடிக்கை களில் இந்நிறுவனங்கள் ஈடுபட்டிருக்கின்றன. ஒவ்வொரு நிறுவனம் ஈடுபட்டிருக்கும் முக்கியப் பிரிவின் அடிப்படையில் இந்நிறுவனங் களைக் கீழ்க்காணும் தலைப்புகளில் பிரிக்கலாம்.

| முக்கியப் பிரிவுகள் | நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|
| விவசாயம், மற்றும் விவசாயத்தைச் சார்ந்த நடவடிக்கைகள் | 7 |
| தொழில் உற்பத்தி | 8 |
| வணிகம் மற்றும் வணிகத்தைச் சார்ந்த பிற பணிகள் | 4 |
| தொழில் முன்னேற்றத்திற்கு நிதி உதவி அளித்தல் | 7 |
| போக்குவரத்து | 9 |
| கட்டட வேலை மற்றும் பொறியியல் பணிகள் | 7 |
| | 42 |

1978ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இந்நிறுவனங்கள் அனைத்திலும் செய்யப்பட்டிருந்த மொத்த முதலீட்டின் அளவு 307 கோடி ரூபாயாகும். இந்நிறுவனங்கள் அனைத்தும் மொத்தம் 73,000 நபர்களுக்கு வேலை அளித்தன. அவ்வாண்டில் (1977-78-ல்) இந்நிறுவனங்கள் அனைத்தும் மொத்தம் 18.34 கோடி ரூபாய் இலாபத்தை ஈட்டித் தந்தன.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

கற்க கசடற